
# மார்க்ஸ் எங்கெல்ஸ்

# தேர்வு நூல்கள்


## பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

10



Karl Marx




F. Engels

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# மார்க்ஸ் எங்கெல்ஸ்

# தேர்வு நூல்கள்

## பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

**10**

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

К. Маркс, Ф. Энгельс
ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ
Том 10
*на тамильском языке*

**K. Marx, F. Engels**
SELECTED WORKS IN 12 VOLUMES
Volume 10
*in Tamil*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1989

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$МЭ \frac{0101010000—174}{014(01)—89} 301—89$

ISBN 5-01-001458-0

## பொருளடக்கம்

பி. எங்கெல்ஸ். கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும் . . . . . . . . 7
1892ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்பின் சிறப்பு முன்னுரை . . . . . . . . . . 7
கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும் . . . . . . . . . . . . . 51
I. . . . . . . . . . . . . . 51
II. . . . . . . . . . . . . . 74
III. . . . . . . . . . . . . . 89
கா. மார்க்ஸ். வே. இ. ஸசூலிச்சின் கடிதத்துக்கு எழுதிய பதிலின் முதல் நகல் . . . . . . 127
பி. எங்கெல்ஸ். கார்ல் மார்க்சின் உடலைப் புதைக்கின்ற பொழுது நிகழ்த்திய உரை. 145
பி. எங்கெல்ஸ். மார்க்சும் *Neue Rheinische Zeitung*உம் (1848—1849) . . . . . . . . . . . . 148
பி. எங்கெல்ஸ். கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் வரலாறு குறித்து . . . . . . . . . . . 166
பி. எங்கெல்ஸ். லூத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் . . . . . . . . . . . . . . 200
1888ஆம் ஆண்டுப் பதிப்புக்கு முன்னுரை . . . . 200
I . . . . . . . . . . . . 204
II . . . . . . . . . . . . 219
III . . . . . . . . . . . . 235
IV . . . . . . . . . . . . 249

பி. எங்கெல்ஸ். நியூயார்க்கிலிருந்து ஃபிலொரென்ஸ் கெல்லி-விஷ்னெவேட்ஸ்கயாவுக்கு எழுதிய கடிதம். டிசம்பர் 28, 1886 . . . . 280

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . 284

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . 313

பி. எங்கெல்ஸ்

# கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்[1]

## 1892ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்பின் சிறப்பு முன்னுரை

தற்போதைய இந்தச் சிறு புத்தகம் ஆதியில் பெரியதொரு முழுப் புத்தகத்தின் பகுதியாக அமைந்ததாகும். 1875ஆம் ஆண்டு வாக்கில் பெர்லின் பல்கலைக்கழக privat-dozent* டாக்டர் ஒ. டூரிங், தாம் சோஷலிசத்தைத் தழுவுவதாகத் திடுதிப்பென்றும் ஓரளவு ஆர்ப்பாட்டத்தோடும் அறிவித்து ஜெர்மன் பொது மக்களுக்கு விரிவுபட வரையப் பெற்ற சோஷலிசத் தத்துவம் ஒன்றை மட்டுமின்றி, சமுதாயத்தைத் திருத்தியமைப்பதற்கு முழு அளவிலான ஒரு நடைமுறைத் திட்டத்தையும் எடுத்துரைத்தார். இயல்பாக எதிர்பார்க்கக் கூடியது போலவே, அவர் தமக்கு முற்பட்டோரின் மீது முட்டி மோதினார்; மற்ற எல்லோரையும் விட மார்க்சின் மீது தமது முழு ஆத்திரத்தையும் கொட்டித் தீர்த்து அவரைச் சிறப்புறச் செய்தார்.

இது நடைபெற்றதற்குச் சிறிது காலத்துக்கு முன்புதான், ஜெர்மனியில் சோஷலிஸ்டுக் கட்சியின் இரு பிரிவுகளும்—எய்ஸெனாஹர்களும் லஸ்ஸாலைப் பின்பற்றியவர்களும்[2]—தம்மிடையே ஐக்கியத்தை உண்டாக்கி, இணைந்ததன் மூலம் தமது பலத்தை வெகுவாய்ப் பெருகச் செய்து கொண்டதோடு, இன்னும் முக்கியமாக இந்தப் பலம் அனைத்தையும் பொதுப் பகைவனுக்கு எதிராகப் பிரயோகிக்கும் ஆற்றலையும் பெற்றுக் கொண்டன. ஜெர்மனியில் சோஷலிஸ்டுக் கட்சி சக்திமிக்கதாக அதிவேகமாய் வளர்ந்து வந்தது. ஆனால் புதிதாகச் சாதிக்கப்பட்ட இந்த ஐக்கியத்தை அபாயத்துக்கு உள்ளாகாதபடி பாதுகாப்பது இக்கட்சியை சக்தி

---

* —பிரதம பகுதிநேர விரிவுரையாளர்.—மொ-ர்.

மிக்கதாக்குவதற்குரிய முதலாவது நிபந்தனையாக இருந்தது. இந்நிலைமையில்தான் டாக்டர் டூரிங் தம்மை மையமாகக் கொண்டு வருங்காலத் தனிக் கட்சி ஒன்றின் கருவாகிய ஒரு குழுவினைப் பகிரங்கமாகவே அமைத்திட முற்பட்டார். ஆகவே நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், எங்களுக்கு விடுக்கப்பட்ட இந்தச் சவாலை ஏற்றுக் களம் புகுந்து போராட வேண்டியது அவசியமாகி விட்டது.

இது மிகவும் கடினமல்ல என்றாலும் நீண்ட நெடிய காரியம் என்பது தெளிவு. ஜெர்மானியர்களாகிய எங்களது குணாதிசயம் மிகக் கனத்த Gründlichkeit—இதை நீங்கள் ஆழ்ந்த சிந்தனை ஆதாரம் என்றோ, ஆதாரமான ஆழ்ந்த சிந்தனை என்றோ எப்படி வேண்டுமானாலும் கொள்ளலாம்—ஆகுமென்பது தெரிந்ததே. எங்களில் யாரேனும் புதிய தத்துவ நெறியாகத் தாம் கருதும் ஒன்றை எடுத்துரைக்க விரும்பினால், முதலில் அதைச் சர்வவியாபகமாய் அனைத்தும் உள்ளடங்கிய ஒரு தத்துவ அமைப்பாக அவர் விரித்தமைத்தாக வேண்டும். தர்க்கவாதத்தின் மூலமுதற் கோட்பாடுகளும் பிரபஞ்சத்தின் அடிப்படை விதிகளும் அனாதிக் காலந்தொட்டு இருந்ததெல்லாம், யாவற்றுக்கும் மணி முடியாகத் திகழும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தத் தத்துவத்துக்கு வழி கோலுவதற்கே அன்றி வேறு எதற்காகவும் அல்ல என்பதை அவர் நிரூபித்தாக வேண்டும். டாக்டர் டூரிங் இந்த அம்சத்தில் தேசியத் தரத்துக்கு எவ்விதத்திலும் மாற்றுக் குறைந்தவராக இருக்கவில்லை. சிந்தனை, அறநெறி, இயற்கை, வரலாறு ஆகிய எல்லாத் துறைகளும் உள்ளடங்கிய முழுநிறையான தத்துவவியல் கருத்து அமைப்பு, முழுநிறையான அரசியல் பொருளாதார, சோஷலிசக் கருத்து அமைப்பு, இறுதியில் அரசியல் பொருளாதாரத்தின் விமர்சன வழியிலான வரலாறு—புற உருவிலும் உள் இயல்பிலும் மிகவும் கனமான, எண்மடிக் காகித அளவில் அமைந்த இந்த மூன்று பெரும் புத்தகங்களை, பொதுவாய்த் தமக்கு முற்பட்ட எல்லாத் தத்துவவியலாளர்களுக்கும் பொருளியலாளர்களுக்கும் மற்றும் குறிப்பாக மார்க்சுக்கும் எதிராக முப்பெரும் படை வரிசைகளாகத் திரட்டப் பெற்ற வாதங்

களை—மெய்யாகவே முழு அளவில் ''விஞ்ஞானத்தில் ஒரு புரட்சியை'' உண்டாக்குவதற்கான ஒரு முயற்சியை—நான் எதிர்த்து நின்று சமாளிக்க வேண்டியிருந்தது. ஒன்று விடாமல் சாத்தியமான எல்லா விவாதப் பொருள்கள் குறித்தும்—காலம், விசும்பு இவை பற்றிய கருத்துக்களிலிருந்து இரட்டை உலோக நாணய முறை[3] வரையில், பருப்பொருள், இயக்கம் இவற்றின் அழியா நிரந்தரத் தன்மையிலிருந்து அறநெறிக் கருத்துக்களின் அழியும் தன்மை வரையில், டார்வினுடைய இயற்கைத் தேர்வு முறையிலிருந்து வருங்காலச் சமுதாயத்தில் இளந்தலைமுறையினரின் கல்வி வரையில், யாவும் குறித்து—நான் பகுத்தாராய வேண்டியிருந்தது. என்றாலும், எனது எதிராளியின் முழுமுறையிலான இந்த விரிந்தமைந்த விசாலமானது, மிகப் பல்வேறுபட்ட இந்த விவாதப் பொருள்கள் குறித்து மார்க்சும் நானும் கொண்டிருந்த கருத்தோட்டங்களை இதற்கு முன் செய்யப்பட்டிருந்ததைக் காட்டிலும் அதிக அளவில் ஒருங்கிணைந்த வடிவில் வளர்த்து அவருக்கு எதிரான இந்த விவாதத்தில் எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பு அளித்தது. பிற வழிகளில் சிறிதும் பலன்தராத இந்தப் பணியை நான் மேற்கொண்டதற்கு இதுவேதான் பிரதான காரணம்.

என்னுடைய பதில் சோஷலிஸ்டுக் கட்சியின் தலைமை ஏடான லைப்சிக் *Vorwärts*[4] இதழில் முதலில் தொடர் கட்டுரைகளாக வெளிவந்தது; பிற்பாடு இது *Herrn Eugen Dühring's Umwälzung der Wissenschaft* (''திரு. ஒய்கேன் டூரிங் விஞ்ஞானத்தில் நிகழ்த்திய புரட்சி'') என்னும் புத்தகமாக வெளியாயிற்று; இப்புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு ஜூரிஹில் 1886ல் வெளிவந்தது.

தற்போது பிரெஞ்சுப் பிரதிநிதிகள் சபையில் லீல் நகரின் பிரதிநிதியாய் அங்கம் வகிக்கும் என் நண்பர் போல் லஃபார்க் கேட்டுக் கொண்டதன் பேரில் இப்புத்தகத்தின் மூன்று அத்தியாயங்களை ஒரு பிரசுரமாய் நான் வகுத்தமைத்துத் தந்தேன். இதை அவர் மொழிபெயர்த்து *Socialisme utopigue et socialisme scientifique* என்னும் தலைப்பில் 1880ல் வெளியிட்டார். இந்த பிரெஞ்சுப் பதிப்பிலிருந்து போலிஷ்,

ஸ்பானியப் பதிப்புகள் தயாரிக்கப்பட்டன. 1883ல் எமது ஜெர்மன் நண்பர்கள் இந்தப் பிரசுரத்தை அதன் மூல மொழியில் வெளிக்கொணர்ந்தனர். இதன் பின் ஜெர்மன் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு இத்தாலிய, ருஷ்ய, டேனிஷ், டச்சு, ருமேனிய மொழிபெயர்ப்புகள் வெளியாகியிருக்கின்றன. இவ்வாறு, இந்த ஆங்கிலப் பதிப்பையும் சேர்த்து பத்து மொழிகளில் இந்தச் சிறு புத்தகம் வினியோகமாகி வருகிறது. எனக்குத் தெரிந்த வரை வேறு எந்த சோஷலிச நூலும், 1848ஆம் ஆண்டின் எங்களது கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையோ அல்லது மார்க்சின் மூலதனமோ கூட இவ்வளவு அதிகமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கவில்லை. ஜெர்மனியில் மொத்தம் சுமார் 20,000 பிரதிகள் அடங்கிய நான்கு பதிப்புகளில் இது வரை இது வெளியாகியுள்ளது.

அனுபந்தமாகிய மார்க்[5] ஜெர்மனியில் நிலவுடைமையின் வரலாற்றையும் வளர்ச்சியையும் பற்றிய ஆரம்ப அறிவை ஓரளவுக்கு ஜெர்மன் சோஷலிஸ்டுக் கட்சியில் பரவச் செய்யும் நோக்கத்துடன் எழுதப் பெற்றதாகும். நகரங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை இக்கட்சி தனக்குள் திரட்டிக் கொள்வது பெருமளவுக்கு நிறைவெய்தி விவசாயத் தொழிலாளர்களையும் மற்றும் விவசாயிகளையும் திரட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் இருந்த ஒரு காலத்தில் இது மேலும் அவசியமாகத் தோன்றியது. இந்த அனுபந்தமும் இந்த மொழிபெயர்ப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது; ஏனெனில் எல்லா டியூட்டானிக் இனக் குழுக்களுக்கும் பொதுவான பூர்வீக நிலவுரிமை முறைகளையும் அவை அழிந்து போன வரலாற்றையும் பற்றி ஜெர்மனியை விட இங்கிலாந்தில் இன்னுங்கூட குறைவாகவே பலருக்கும் தெரிந்திருக்கிறது. அண்மையில் மக்சீம் கவலேவ்ஸ்கி வெளியிட்டிருக்கும் கருதுகோளைப் பற்றி குறிப்பிடாமலே வாசகத்தை மாற்றம் எதுவுமின்றி மூலத்திலிருந்தபடியே விட்டிருந்தேன். இந்தக் கருதுகோளின்படி பயிர் நிலங்களும் மேய்ச்சல் நிலங்களும் மார்க்கின் உறுப்பினர்களிடையே பிரிக்கப்படுவதற்கு முன்பு பல தலைமுறையினரும் அடங்கிய பெரிய

தந்தைவழிக் குடும்பச் சமுதாயத்தால் இவை கூட்டுக் கணக்கில் சாகுபடி செய்யப்பட்டு வந்தன (இன்றுங்கூட இருந்து வரும் தெற்கு ஸ்லாவிய ஸாட்ருகா இதற்கு ஓர் உதாரணமாகும்); பிற்பாடு கூட்டுக் கணக்கில் நிர்வகிப்பது கடினமாகிவிடும்படி அளவு மீறி இச்சமுதாயம் பெருகியதும்தான் இந்தப் பிரிவினை நடந்தேறியது. கவலேவ்ஸ்கி கூறுவது முற்றிலும் சரியாகவே இருக்கலாம், ஆனால் இன்னமும் இந்த விவகாரம் விவாதிக்கப்பட்டு வரும் நிலையிலேதான் இருக்கிறது.

இந்த நூலில் உபயோகிக்கப்படும் பொருளியல் கலைச் சொற்கள், அவற்றில் புதுமையானவற்றைப் பொறுத்தவரை, மார்க்சினுடைய மூலதனத்தின் ஆங்கிலப் பதிப்பில் உபயோகிக்கப்பட்டிருக்கும் சொற்களுக்கு இசைவானவை. பண்டங்கள் அவற்றின் உற்பத்தியாளர்களுடைய உபயோகத்துக்காக மட்டுமின்றி பரிவர்த்தனைக்காகவும் உற்பத்தி செய்யப்படும், அதாவது உபயோக மதிப்புகளாக மட்டுமன்றி பரிவர்த்தனைப் பண்டங்களாகவும் உற்பத்தி செய்யப்படும் பொருளாதாரக் கட்டத்தை நாங்கள் ''பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி'' என்பதாக அழைக்கிறோம். இந்தக் கட்டம் பரிவர்த்தனைக்கான பொருளுற்பத்தியின் ஆதித் தொடக்கம் முதலாக நாம் வாழும் தற்காலம் வரையில் நீடித்து நிலவி வருகின்றது. ஆயினும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில்தான் இது தனது முழுநிறை வளர்ச்சியை அடைகிறது; அதாவது, உற்பத்திச் சாதனங்களுடைய உடைமையாளராகிய முதலாளி தமது சொந்த உழைப்பு சக்தியைத் தவிர எல்லா உற்பத்திச் சாதனங்களும் பறிக்கப்பட்டவர்களாகிய தொழிலாளர்களைக் கூலி கொடுத்து வேலை வாங்கி உற்பத்திப் பொருள்களுடைய விற்றுமுதல் விலையில் தனது முதலீடு போக எஞ்சும் கூடுதல் தொகையைத் தன்னுடையதாக வசப்படுத்திக் கொள்ளும் நிலைமைகளில்தான். இக்கட்டம் தனது முழுநிறை வளர்ச்சியை அடைகிறது. மத்திய காலம் முதலாக அமைந்த தொழில்துறைப் பொருளுற்பத்தியின் வரலாற்றை நாங்கள் மூன்று காலக்கூறுகளாகப் பிரிக்கின்றோம்: 1) கைவினைத் தொழில்—சில உதவியாளர்களை

யும் (journeymen)வேலை பயிலுவோரையும் கொண்ட கைவினைஞர்களால் ஆனது, உழைப்பாளர் ஒவ்வொருவரும் முழுமையான பண்டத்தை உற்பத்தி செய்கிறார்; 2) பட்டறைத் தொழில்—அதிக எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் பெரிய தொழில் நிலையத்தில் ஒன்றுசேர்ந்து, உழைப்புப் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில், ஒவ்வொருவரும் வேலை முறையில் ஒரு பகுதியை மட்டும் செய்து, எல்லோருமாக முழுப் பண்டத்தையும் உற்பத்தி செய்கிறார்கள், ஆகவே வரிசையாக எல்லோருடைய கரங்களுக்கும் சென்ற பிறகே இப்பண்டம் பூர்த்தியாகின்றது; 3) நவீனத் தொழில் துறை—இயக்க ஆற்றலால் ஓட்டப்படும் இயந்திரச் சாதனங்களைக் கொண்டு பண்டம் உற்பத்தி செய்யப்படுகிறது, உழைப்பாளரின் வேலை இயந்திரங்களின் செயல்களை மேற்பார்வையிடுதல், சரிசெய்தல் ஆகியவற்றின் வரம்புக்குள் அடங்கி விடுகிறது.

இந்நூலின் உள்ளடக்கம் பிரிட்டிஷ் பொது மக்களில் கணிசமான பகுதியினருக்கு ஆட்சேபத்துக்குரியதாகவே இருக்கும் என்பதை நான் நன்கு உணருகின்றேன். ஆனால் கண்டத்தவர்களாகிய நாங்கள் பிரிட்டிஷ் ''கௌரவ மனப்பான்மையின்'' தப்பெண்ணங்களைக் கடுகளவாவது கருத்தில் கொண்டிருந்தாலும், தற்போது இருப்பதைக் காட்டிலும் மோசமான நிலையைத்தான் அடைந்திருப்போம். இந்தப் புத்தகம் ''வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம்'' என்பதாக நாங்கள் கூறுவதை விளக்கிக் கூறி நிலைநாட்டுகிறது; ''பொருள்முதல்வாதம்'' என்னும் சொல் பிரிட்டிஷ் வாசகர்களில் மிகப் பெருவாரியானோருக்குக் கர்ணகடூரமாக ஒலிக்கும் ஒன்று. ''அறியொணாவாதத்தை''[6] வேண்டுமானால் பொறுத்துக் கொள்ளலாம், ஆனால் பொருள்முதல்வாதம் இவர்களுக்குச் சிறிதும் ஏற்புடையதல்ல.

ஆயினும் இங்கிலாந்துதான் பதினேழாவது நூற்றாண்டு முதலாக இருந்து வரும் நவீன காலப் பொருள்முதல்வாதம் அனைத்துக்குமான பூர்வீகத் தாயகமாகும்.

''பொருள்முதல்வாதமானது கிரேட் பிரிட்டன் பெற்

றெடுத்த புதல்வனாகும். பிரிட்டிஷ் சமய சித்தாந்தி[7] டன்ஸ் ஸ்காட்டஸ் அக்காலத்திலேயே ‘பருப்பொருளால் சிந்தனை செய்ய முடியாதா?’ என்று வினவினார்.

‘‘இந்த அதிசயத்தை நிகழச் செய்யும் பொருட்டு அவர் இறைவனின் சர்வவல்லமையில் புகலிடம் தேடி அதைத் துணையாகக் கொண்டார், அதாவது அவர் பொருள்முதல் வாதம் இறையியலை[8] போதிக்கும்படிச் செய்தார். தவிரவும் அவர் பெயர்ப் போலிமைவாதி.[9] பொருள்முதல்வாதத்தின் முதலாவது வடிவமாகிய பெயர்ப் போலிமைவாதம் பிரதானமாய் ஆங்கிலப் பொருள்முதல்வாதிகளிடையே காணப் படுகிறது.

‘‘உண்மையில் பேக்கன்தான் ஆங்கிலப் பொருள்முதல் வாதத்தின் தந்தையாவார். இயற்கைத் தத்துவவியல் மட்டுமே மெய்யான தத்துவவியலாகும், புலன்களின் அனுப வத்தை அடிப்படையாகக் கொண்ட பௌதிகவியல்தான் இயற்கைத் தத்துவவியலின் மிகவும் பிரதான பகுதியாகும் என்றார் அவர். அனக்சகோரசையும் அவருடைய ஹோமி யோமெரியாக்களையும்[10] டெமாக்கிரீட்டசையும் அவருடைய அணுக்களையும் பேக்கன் அடிக்கடி தமக்கு ஆதாரமாகக் குறிப்பிடுகின்றார். பேக்கனுடைய கருத்துப்படி நமது புலன் கள் பிழைபடாதவை, அனைத்து அறிவுக்கும் மூலாதாரமாக அமைந்தவை. விஞ்ஞானம் அனைத்தும் அனுபவத்தை அடிப் படையாகக் கொண்டதாகும்; புலன்கள் அளிக்கும் விவரங் களைச் சிந்தனையின் ஆய்வு முறைக்கு உட்படுத்துவதில் தான் விஞ்ஞானம் அடங்கியிருக்கிறது. தொகுத்தாய்தல், பகுத்தாய்தல், ஒப்பிடுதல், கண்டறிந்து பதிவு செய்தல், சோதனை செய்தல்—இவைதாம் இந்தச் சிந்தனை ஆய்வு முறையின் பிரதான வடிவங்கள். பருப்பொருளின் உள் ளார்ந்த பண்புகளில் இயக்கம்தான் முதலாவதும் முதன்மை யானதும் ஆகும்,—இந்த இயக்கம் இயந்திரவியல், கணித வியல் இயக்கத்தின் வடிவிலானது மட்டுமல்ல, இன்னும் பிரதானமாகப் பருப்பொருளின் உந்து ஆற்றல், ஜீவ உயிர்த்திறன், இழுப்பலைவு அல்லது யாக்கப் பொமேயின்

சொற்களில் சொல்வதெனில் 'வதை' ('Qual')* வடிவிலானதுமாகும்.

''அதன் முதலாவது சிருஷ்டியாளரான பேக்கனிடத்தே, பொருள்முதல்வாதம் பன்முக வளர்ச்சிக்கான வித்துக்களை உள்ளார்ந்த நிலையில் தன்னகத்தே கொண்டதாகவே இன்னும் அமைந்துள்ளது. ஒரு புறத்தில், புலனின்ப உணர்வு கொண்ட கவிதை எழிலின் சுடர்வால் சூழப்பெற்ற பருப்பொருள் காண்போரின் உள்ளம் கவருமாறு புன்னகை புரிந்து மனிதனை ஆட்கொள்வதாக உள்ளது. மறு புறத்தில் மணிமொழியாக, இரத்தினச் சுருக்கமாக வகுக்கப்பட்டுள்ள இந்தப் போதனையில் இறையியலிலிருந்து தருவிக்கப் பெற்ற ஒவ்வாத வாதங்கள் மண்டியிருக்கின்றன.

''மேற்கொண்டு அது கண்ட பரிணாம வளர்ச்சியில் பொருள்முதல்வாதமானது ஒருபுறச் சாய்வுடையதாகியது. ஹாப்ஸ்தான் பேக்கன் பொருள்முதல்வாதத்தை முறைப்படுத்தியவர். புலன்களை அடிப்படையாய்க் கொண்ட அறிவு அதன் கவிதை மணம் கமழும் மலர்மொக்குகளை இழந்து கணிதவியலாளரின் கருத்தியலான அனுபவமாக மாறி விடுகிறது. வடிவகணிதம் விஞ்ஞானங்களின் அரசியாகப் பிரகடனம் செய்யப்படுகிறது. பொருள்முதல்வாதம் மனித குலத்துக்குப் பகைமையான பாதையிலே இறங்குகிறது. அதன் எதிராளியான மனித-விரோத, ஊனில்லா ஆன்மீகவாதத்தை வெற்றி கொள்வதற்காக, அதுவும் ஆன்மீகவாதத்திற்

---

* "Qual" என்பது சொற்களின் தத்துவஞானச் சிலேடையாகும். "Qual" என்பதற்கு சித்திரவதை, ஒரு நபர் துடிக்கும்படி செய்கின்ற வலி என்பது நேர்ப்பொருளாகும்; அதே சமயத்தில் மாயாவாதியான பொமே இந்த ஜெர்மன் சொல்லுடன் லத்தீன் மொழிச் சொல்லாகிய qualitasயின் (தன்மையின்) அர்த்தத்தில் சிறிதளவைச் சேர்க்கிறார்; அவர் "Qual" என்று குறிப்பிடுகின்ற பொழுது அது வெளியிலிருந்து ஏற்படுத்தப்படுகின்ற வலி அல்ல; "Qual" என்பதற்குக் கீழ்ப்பட்டிருக்கின்ற பொருள், உறவு அல்லது நபரின் வளர்ச்சியிலிருந்து தோன்றி தன்னளவில் அதன் தன்னியல்பான வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற செயல்படுத்தும் கோட்பாடு ஆகும். **(ஆங்கிலப் பதிப்புக்கு பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

குரிய களத்திலேயே அதை வெற்றி கொள்வதற்காகப் பொருள்முதல்வாதம் தனது உடலை வதைத்துக் கொண்டு துறவியாக மாற வேண்டியதாகிறது. புலனுணர்ச்சியின் பாற்பட்டதாக இருந்த அது இவ்வாறு அறிவாற்றலின் பாற்பட்டதாக மாறுகின்றது; ஆனால் அப்படியும் அது விளைவுகளைப் பொருட்படுத்தாமலே அறிவாற்றலுக்குத் தக்கதாகிய தர்க்கவாதப் பொருத்தமுடைமையை முழு அளவில் வளர்த்துச் செல்கிறது.

''பேக்கனின் தொடர்வாளராகிய ஹாப்ஸ் இவ்வாறு வாதாடுகின்றார்: மனிதனது அறிவு அனைத்தும் புலன்களால் தரப்படுவதென்றால், பிறகு நமது கருத்தினங்களும் சிந்தனைகளும் உண்மையான உலகின் புலனுணர்ச்சி வடிவங்கள் நீக்கப்பெற்ற வெறும் மாயங்களே அன்றி வேறல்ல. தத்துவவியலால் இந்த மாயங்களுக்குப் பெயர்கள் சூட்டலாமே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. ஒரே பெயரை ஒன்றுக்கு மேற்பட்ட மாயங்களுக்குச் சூட்டலாம். பெயர்களுக்குங் கூட பெயர்கள் இட்டுச் சொல்லலாம். ஒரு புறத்தில் எல்லாக் கருத்துக்களும் புலனுணர்ச்சி உலகிலிருந்து பிறப்பவை என்று கொண்டு, மறு புறத்தில் ஒரு சொல் சொல்லினும் கூடுதலானது என்று, நமது புலன்கள் நமக்குத் தெரியப்படுத்தும் ஜீவிகளையன்றி, ஒன்று விடாமல் யாவும் தனிப்பட்டவையாக இருக்கும் இந்த ஜீவிகளையன்றி தனிப்பட்டதல்லாத, பொதுத் தன்மையதான ஜீவிகளும் இருக்கின்றன என்று கொள்வதானது முரண்பாடே ஆகும். உடலில்லா உடல் எவ்வளவு அபத்தமானதோ, அதே அளவுக்கு அபத்தமானது தான் உடலில்லாப் பொருளும். உடல், இருத்தல், பொருள் இவை எல்லாம் ஒரே எதார்த்தத்தைச் சுட்டும் வெவ்வேறு பதங்களே அல்லாது வேறல்ல. **சிந்திக்கும் பருப்பொருளிலிருந்து சிந்தனையைத் தனியே பிரிப்பது முடியாத காரியம்.** உலகில் நடைபெறும் எல்லா மாற்றங்களுக்கும் இந்தப் பருப்பொருள் தான் அடிநிலை. வரம்பற்றது என்னும் சொல் அர்த்தமற்றது, நமது மனம் முடிவின்றி மேலும் மேலும் சேர்த்துக் கூட்டல் போட்டுச் செல்ல வல்லது என்பதைக் குறிப்பதாகக் கொண்டாலன்றி இது அர்த்தமற்றதே ஆகும். பொரு

படிக்காதோரிடையே—''கழுவப்படாத பெருந்திரள்'' என்பதாக அன்று இவர்கள் அழைக்கப்பட்டனர்—தொழிலாளி மக்களிடையே, முக்கியமாக ஒவனிய சோஷலிஸ்டுகளிடையே செல்ல வேண்டியிருந்தது.

ஆனால் இதன்பின் இங்கிலாந்து ''நாகரிகம்'' அடைந்திருக்கிறது. குறுகிய மனப்பாங்குடைத்த ஆங்கில ஒதுக்க நிலைக்கு 1851ஆம் ஆண்டுக் கண்காட்சி[14] சாவு மணி அடித்தது. படிப்படியாக உணவு முறைகளிலும் பழக்கவழக்கங்களிலும் கருத்துக்களிலும் இங்கிலாந்து சர்வதேசியமயமாயிற்று. கண்டத்தின் பழக்கங்கள் பலவும் இங்கே அதிகமாகப் பரவியிருப்பதைப் போல, சில ஆங்கில நடையுடை பாவனைகளும் பழக்கவழக்கங்களும் அங்கே கண்டத்தில் பரவியிருந்தால் நன்றாயிருக்குமே என்று எனக்கு ஓர் ஆசையும் கூட உண்டாகிறது. எப்படியும், சாலெடு எண்ணெய் இங்கு அறிமுகம் செய்யப்பட்டு வெகுவாய்ப் பரவியதைத் தொடர்ந்து (1851க்கு முன்பு இது பிரபுக் குலத்தோருக்கு மட்டுமே தெரிந்திருந்தது), இதனுடன் கூடவே சமய விவகாரங்களில் கண்டத்தவருக்கு உரித்தான ஐயுறவு மனப்பான்மையும் தவிர்க்க முடியாதபடி பரவி, தற்போது என்ன நேர்ந்திருக்கிறது என்றால், கண்யவான் மனப்பாங்கைப் பொறுத்தவரை, அறியொணாவாதமானது இன்னமும் இங்கிலாந்து சமயச் சபை[15] போல அந்த அளவுக்குப் ''பாங்கான தாய்'' கருதப்படக் கூடியதாகிவிடவில்லை என்றாலும், அந்தஸ்தில் பாப்டிசத்துக்கு[16] ஏறத்தாழ சமமானதாகவும் நிச்சயமாய் ''இரட்சணியச் சேனைக்கு''[17] மேம்பட்டதாகவும் கொள்ளத்தக்கதாகி விட்டது. முறையான சமய நெறியில் இப்படி நம்பிக்கை மேலும் மேலும் குறைந்து செல்வதைக் கண்டு மெய்யாகவே மனம் வருந்துவோரும் இந்தப் போக்கைக் கண்டனம் செய்வோரும் பலரும் உள்ளனர். ஆனால் இவர்கள் இந்தப் ''புதுப் பாணியிலான கருத்துக்கள்'' அன்றாட உபயோகத்தில் இருந்து வரும் ஏனைய பல பண்டங்களைப் போல் வெளிநாட்டுச் சரக்குகள் அல்ல, ''ஜெர்மன் தயாரிப்புகள்'' அல்ல, சந்தேகத்துக்கு இடமின்றி பண்டைய இங்கிலாந்துக்கு உரித்தானவையே என்பதையும் இருநூறு

ஆண்டுகளுக்கு முன்பு அவற்றைப் படைத்துருவாக்கிய பிரிட்டிஷ் மூலவர்கள் இன்று அவர்களது சந்ததியார் செல்லத் துணிவதைக் காட்டிலும் நெடுந்தொலைவு சென்றனர் என்பதையும் தெரிந்து கொள்வார்களாயின், மேற்கூறிய நிலைமைகளில் இவர்களுக்கு அது மனச் சாந்தி அளிக்கக் கூடியதாக இருக்குமென நினைக்கின்றேன்.

அறியொணாவாதம் என்பது என்னவாம்?—பொருட்செறிவுள்ள லங்காஷியர் வழக்கில் சொல்வதெனில், ''வெட்கப்பட்டுக் கொண்டு முகத்தை மூடிக் கொள்ளும்'' பொருள்முதல்வாதமே அன்றி வேறு என்னவாம்? இயற்கை குறித்து அறியொணாவாதிக்குள்ள கருத்தோட்டம் முழுக்க முழுக்கப் பொருள்முதல்வாதத் தன்மையதாக இருக்கிறது. இயல் உலகு அனைத்தும் விதியால் ஆளப்படுவது, புறத்தே இருந்தான தலையீட்டுச் செயலுக்குச் சிறிதும் இடம் தராதது. ஆனால் அவர் இதைத் தவிர மேலும் கூறிக் கொள்வது என்னவெனில், நாம் அறிந்த இப்பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டு ஆண்டவன் ஒருவர் இருக்கிறார் என்று நிச்சயமாக அறிந்து கொள்ளவோ, இல்லை என்று நிரூபிக்கவோ நம்மிடம் வழி ஏதுமில்லை. இப்படிப்பட்ட ஒரு கூற்று, முன்பு லாப்லாசிடம், இம்மாபெரும் வானியலாளரது *Mécanique céleste*இல்* யாவற்றுக்கும் ஆதியான படைப்பாளரைப் பற்றி ஏன் ஒன்றுமே கூறப்படவில்லை என்று நெப்போலியன் கேட்டதற்கு "Je n'avais pas besoin de cette hypothèse"** என்று லாப்லாஸ் பெருமிதத்தோடு பதிலளித்தாரே, அந்தக் காலத்துக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இந்தக் காலத்தில் பிரபஞ்சமானது பரிணாம வழியில் தோன்றி வளர்வது என்பதான இன்றைய நமது கருத்தோட்டத்தில் படைப்பாளனுக்கோ, ஆண்டானுக்கோ அறவே இடமில்லை. தற்போது நிலவும் உலகு அனைத்திலிருந்தும் அறவே விலக்கி ஒதுக்கப்பட்ட நிலையில்

* —விண்ணுலக இயந்திரவியலில்.—ப-ர்.

** —''இப்படி ஒரு கருதுகோள் எனக்குத் தேவைப்படவில்லை.''—ப-ர்.

ஆண்டவன் ஒருவர் இருப்பதாகப் பேசுவது முன்னுக்குப் பின் முரணாக அமைவதோடு, வேண்டுமென்றே வலிந்து முன்வந்து சமய நம்பிக்கையுடையோரது மனத்தைப் புண் படுத்தும் செயலாகவே எனக்குத் தோன்றுகிறது.

இதே போல, நமது அறியொணாவாதி நமது அறிவு அனைத்தும் நமது புலன்கள் நமக்குத் தெரிவிக்கும் தகவலை அடிப்படையாய்க் கொண்டதுதான் என்பதை ஒத்துக்கொள் கிறார். ஆனால் இதைத் தவிர அவர் மேலும் கூறிக் கொள் வது என்னவெனில், நமது புலன்கள் மூலம் நாம் கண்ட றிந்து கொள்ளும் பொருள்கள் குறித்து அவை நமக்குப் பிழையற்ற பதிவுகளைத் தருகின்றனவா என்று எப்படி நமக்குத் தெரியும்? ஆகவே அவர் நமக்கு அறிவிப்பது என்ன வெனில், பொருள்களையோ, அவற்றின் இயல்புகளையோ பற்றி அவர் பேசும் போதெல்லாம் உண்மையில் இந்தப் பொருள்களையும் இயல்புகளையும் குறிப்பிடவில்லை, ஏனெ னில் இவை குறித்து அவர் எதுவும் நிச்சயமாக அறிய முடி யாதவராக இருக்கிறார்; இவை தமது புலன்கள் மீது உண் டாக்கிய பதிவுகளையேதான் அவர் குறிப்பிடுகின்றார். இப் படிப்பட்ட ஒரு வாத முறையை வெறும் வாக்குவாதத்தை மட்டும் கொண்டு வீழ்த்துவது சந்தேகத்துக்கு இடமின்றி மெத்தக் கடினமாகவே தோன்றுகிறது. ஆனால் வாக்குவாதத் துக்கு முற்பட்டதாகச் செயல் இருந்தது. "In Anfang war die That."* மனிதனது கூர்மதி சிக்கலைக் கண்டுபிடிக்கும் முன்பே மனிதனது செயல் அதற்குத் தீர்வு கண்டு விட்டது. சாப்பிட்டால் தெரியும் சாப்பாட்டின் சிறப்பு. பொருள் களில் நாம் காணும் இயல்புகளுக்கு ஏற்ப இப்பொருள்களை நாம் நம்முடைய காரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முற்படும் தருணம் முதலாக நமது புலனுணர்ச்சிகள் சரியா, தப்பா என்பதை ஐயந்திரிபற்ற சோதனைக்கு உட்படுத்து கின்றோம். இந்தப் புலனுணர்ச்சிகள் தப்பாயிருந்தால், பொருளை எந்தக் காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது

* —''ஆதியில் இருந்தது செயல்'' (கேதே, ஃபாவுஸ்ட், பாகம் I, காட்சி 3, ''ஃபாவுஸ்டின் படிப்பறை'').—ப-ர்.

என்பது பற்றிய நமது மதிப்பீடும் தப்பாகவே இருக்க வேண்டும், ஆகவே நமது முயற்சி தோல்வியுறவே செய்யும். நமது நோக்கத்தை நிறைவேற்றுவதில் வெற்றி பெறுவோமாயின், அப்பொருள் அதைப் பற்றி நமக்குள்ள கருத்துக்கு இசைவாகவே இருக்கிறது, எக்காரியத்துக்காக அதைப் பயன்படுத்தத் திட்டமிட்டோமோ அதற்கு ஏற்றதாகவே இருக்கிறது என்பது தெரியுமாயின், பொருளையும் அதன் இயல்புகளையும் பற்றிய நமது புலனுணர்ச்சிகள் நமக்குப் புறத்தே நிலவும் எதார்த்தத்துடன் அந்த அளவுக்கு இசைவானவையே என்பதற்கு இது முடிவான நிரூபணமாகி விடுகிறது. இதற்குப் பதில் நாம் தோல்வியை எதிர்நோக்கும்படி நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் தோல்வியுற நேர்ந்ததன் காரணத்தை அறிந்து கொள்ளச் சாதாரணமாக அதிக காலம் ஆவதில்லை. நாம் எந்தப் புலனுணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டோமோ, அது நிறைவானதாக இல்லாமல் மேம்போக்கானதாக இருந்ததென்றோ, பிற புலனுணர்ச்சிகளின் பலன்களுடன் அவற்றால் உறுதி செய்யப்படாத ஒரு முறையில் இணைக்கப்பட்டு விட்டதென்றோ தெரிய வருகிறது,—தவறான சிந்தனை என்கிறோமே அது நடைபெற்று விட்டது என்று தெரிய வருகிறது. நாம் தக்க கவனம் செலுத்தி நமது புலன்களுக்குச் சரிவர பயிற்சி அளித்தும் அவற்றைச் சரிவரப் பயன்படுத்தியும் மற்றும் சரிவர பெறப்பட்டுச் சரிவர பயன்படுத்தப்படும் புலனுணர்ச்சிகளால் இடப்படும் வரம்புகளுக்கு உட்பட்டதாக நமது செயலை இருத்தியும் வரும் வரை நமது புலன்களைக் கொண்டு நாம் தெரிந்து கொள்ளும் பொருள்களின் எதார்த்தப் புறநிலைத் தன்மைக்கு நமது புலனுணர்ச்சிகள் இசைவாக இருத்தலை நமது செயலின் விளைவு நிரூபித்துக் காட்டுவதைக் காண்கிறோம். விஞ்ஞான வழியில் நெறிப்படுத்தப்படும் நமது புலனுணர்ச்சிகள் தமது தன்மையின் காரணமாகவே எதார்த்தத்துக்கு ஒவ்வாத கருத்துக்களைப் புற உலகு குறித்து நமது மனத்தில் தோற்றுவிக்கின்றன என்றோ, புற உலகுக்கும் அதைப் பற்றிய நமது புலனுணர்ச்சிகளுக்கும் உள்ளார்ந்த இசைவின்மை இருக்கிறது என்றோ இது

காறும் ஒரு சந்தர்ப்பத்திலுங்கூட நாம் முடிவுக்கு வரும்படி நேர்ந்ததில்லை.

ஆனால் புதிய கான்ட்டியவாத அறியொணாவாதிகள் உடனே நம் எதிரே தோன்றிக் கூறுகின்றனர்: ஒரு பொருளின் இயல்புகளை நாம் பிழையின்றிக் கண்டறிந்து கொண்டு விடலாம், புலன் வழிப்பட்ட அல்லது சிந்தனை வழிப்பட்ட எந்த நிகழ்ச்சிப் போக்கையும் கொண்டு தன்னிலைப் பொருளைப் (the thing-in-itself) புரிந்து கொண்டுவிட முடியாது; இந்தத் ''தன்னிலைப் பொருள்'' நமது அறிவெல்லைக்கு அப்பாற்பட்டது. ஆனால் நெடுங்காலத்துக்கு முன்பே ஹெகல் இதற்குப் பதிலளித்திருக்கிறார்: ஒரு பொருளின் எல்லா இயல்புகளையும் தெரிந்து கொண்டீர்களாயின், அப் பொருளையே நீங்கள் தெரிந்து கொண்டு விடுகிறீர்கள்; அப்பொருள் உங்களுக்குப் புறத்தே நிலவுகிறது என்னும் உண்மையைத் தவிர எதுவும் இருக்கவில்லை, உங்கள் புலன் கள் அவ்வுண்மையை உங்களுக்கு உணர்த்திவிடும் போது கான்ட்டின் பிரசித்தி பெற்ற அறியவொண்ணாத "Ding an sich" ஆகிய ''தன்னிலைப் பொருளை'' முற்றிலும் புரிந்து கொண்டு விடுகிறீர்கள். இதோடுகூட இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளலாம்: அதாவது, கான்ட்டின் காலத்தில் இயற்கைப் பொருள்களைப் பற்றிய நமது அறிவு மெய் யாகவே துண்டு துக்காணி அளவிலேதான் இருந்தது, இவை ஒவ் வொன்றையும் பற்றி நமக்கு இருந்த சொற்ப அறிவின் பின் னால் விந்தையான ''தன்னிலைப் பொருள்'' ஒன்று மறைந் திருக்கலாமென அவர் சந்தேகப்பட இடம் இருந்திருக்க லாம். ஆனால் புரிந்து கொள்ள முடியாத இப்பொருள்கள் ஒவ்வொன்றாக விஞ்ஞானத்தின் உன்னத முன்னேற்றத்தின் பலனாகப் புரிந்து கொள்ளப்பட்டு பகுத்தாராயப்பட்டு இருப்பதுடன், இன்னும் முக்கியமாக, மறு உற்பத்தி செய்யப் பட்டிருக்கின்றன. நாமே உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய ஒன்றை அறியவொண்ணாததாகக் கருதலாகாது என்பதில் ஐயமில்லை. இந்நூற்றாண்டின் முதற்பாதிக்குரியஇரசாயனத் துக்குக் கரிமப் பொருள்கள் இத்தகைய விந்தைப்பொருள் களாகவே இருந்தன. இன்று நாம் இவற்றை ஒவ்வொன்றாக

இவற்றின் இரசாயனத் தனிமங்களிலிருந்து கரிமச் செயல் முறைகளின் உதவியில்லாமலே சேர்த்தமைத்திடக் கற்றுக் கொள்கிறோம். எப்பொருளாயினும் அதன் இரசாயன இயைபு தெரிந்து கொள்ளப்பட்டதும் அதன் தனிமங்களி லிருந்தே அதைச் சேர்த்தமைத்துவிட முடியும் என்று நவீன கால இரசாயனவியலினர் கூறுகின்றனர். மிக உயர்ந்த கரிமப் பொருள்களாகிய அல்புமின் சேர்மங்களுடைய இயைபை இன்னும் நாம் அறியாதவர்களாகவே இருக்கிறோம். ஆனால் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கூட நாம் இந்த அறிவைப் பெற முடியாதென்றோ, இந்த அறிவை ஆயுதமாகக் கொண்டு செயற்கை அல்புமினை உற்பத்தி செய்ய இயலா தென்றோ கூற இது காரணமாகிவிட முடியாது. ஆனால் நாம் இதை உற்பத்தி செய்யும் நிலையை அடையும் போது அங்கக உயிரை உற்பத்தி செய்வோராகி விடுவோம்; ஏனெ னில் உயிரானது அதன் மிகவும் கீழ் மட்டத்து வடிவங்களி லிருந்து உச்சி மட்டத்து வடிவங்கள் வரையில் அல்புமின் சேர்மங்களின் நிலவுதலுக்கான இயல்பான முறையே அன்றி வேறல்ல.

ஆயினும் நமது அறியொணாவாதி சிந்தையளவிலான இந்தச் சம்பிரதாய வரம்புகளிட்டுக் கொண்ட பின் தமது அந்தரங்கத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி அப்பட்ட மான பொருள்முதல்வாதியாகவே பேசியும் செயல்பட்டும் வருகின்றார். பருப்பொருளும் மற்றும் இயக்கமும், அல்லது இப்பொழுது அது அழைக்கப்படும் பெயரில் கூறுவதெனில் ஆற்றலும், நாம் அறிந்த வரை படைக்கப்படவோ, அழிக்கப்படவோ முடியாதென்றாலும், ஏதோ ஒரு காலத்தில் அவை படைக்கப்படவில்லை என்பதற்கான நிருபணம் நம் மிடம் இல்லை என்று அவர் கூறிக் கொள்ளலாம். ஆனால் அவருடைய இந்த ஒப்புதல் வாக்கு மூலத்தைக் குறிப்பிட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு எதிராகப் பயன் படுத்த முற்படுவீர்களானால், உடனே அவர் ஆட்சேபிப் பார். ஆன்மீகவாதத்தின்[18] சாத்தியப்பாட்டைக் கருத்தள வில் ஏற்றுக் கொள்ளும் அவர் நடைமுறையில் நிராகரித்து விடுகிறார். நாம் அறிந்த வரையிலும் அறியக் கூடிய வரை

யிலும் பிரபஞ்சத்திற்குப் படைப்பாளனும் இல்லை, ஆண்டானும் இல்லை என்று கூறுவார்; நம்மைப் பொறுத்தவரை பருப்பொருளையும் ஆற்றலையும் படைக்கவோ அழிக்கவோ முடியாது, நம்மைப் பொறுத்தவரை சிந்தனை என்பது ஆற்றலின் ஒரு வடிவாகும், மூளையின் செயற்பாடாகும், நாம் அறிந்த வரை பருப்பொருள் உலகு மாற்ற முடியாத நிலையான விதிகளால் ஆளப்படுவதாகும் என்றெல்லாம் கூறுவார். இவ்வாறு அவர் விஞ்ஞானத் துறையாளராக இருக்கும் அளவுக்கு, ஏதும் அறிந்தவராக இருக்கும் அளவுக்கு அவர் பொருள்முதல்வாதி ஆவார்; அவருடைய விஞ்ஞானத்துக்கு வெளியே, அவர் ஏதும் அறியாதவராக இருக்கும் துறைகளில் அவர் தமது அறியாமையைக் கிரேக்கத்தில் மொழிபெயர்த்து அக்னாஸ்டிசிசம் (அறியொணாவாதம்) என்று அதற்குப் பெயர் சூட்டிக் கொள்கிறார்.

எப்படியும் ஒன்று மட்டும் மிகவும் தெளிவு: நான் ஓர் அறியொணாவாதியாக இருந்திருந்தால் கூட, வரலாறு குறித்து இந்தச் சிறு புத்தகத்தில் சுருக்கமாக எடுத்துரைக்கப்படும் கருத்தோட்டத்தை ''வரலாற்றுத் துறை அறியொணாவாதம்'' என்பதாக நான் குறிப்பிட்டிருக்க முடியாதென்பது வெளிப்படை. சமய நம்பிக்கை கொண்டவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்திருப்பார்கள்; அறியொணாவாதிகள் எங்களை நையாண்டியா செய்கிறீர் என்று ஆத்திரமாகக் கேட்டிருப்பார்கள். ஆகவே முக்கியமான எல்லா வரலாற்று நிகழ்ச்சிகளுக்குமான இறுதிக் காரணத்தை, அவற்றின் மகத்தானஇயக்கு சக்தியை சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் பொருளுற்பத்திக்கும் பரிவர்த்தனைக்குமான முறைகளில் ஏற்படும் மாறுதல்களிலும் இவற்றின் விளைவாகத் தெளிவான தனித்தனி வர்க்கங்களாகச் சமுதாயம் பிளவுபடுவதிலும் இவ்வர்க்கங்கள் ஒன்றையொன்று எதிர்த்து நடத்தும் போராட்டங்களிலும் கண்டறிய முனையும் இந்தக் கருத்தோட்டத்தை, வரலாற்று வளர்ச்சிப் போக்கு பற்றிய இந்தக் கருத்தோட்டத்தைக் குறிப்பிடுவதற்கு ஆங்கிலத்திலும் ஏனைய பல மொழிகளிலும் ''வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம்'' என்னும் தொடரை நான் உப

யோகிப்பதால் பிரிட்டிஷ் கௌரவ மனப்பான்மையும் கூட அப்படி ஒன்றும் அளவுமீறி அதிர்ச்சியடைந்து விடாதென்று நம்புகிறேன்.

வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம் பிரிட்டிஷ் கௌரவ மனப்பான்மைக்கும் கூட அனுகூலமாக இருக்கக் கூடியதே என்பதை நான் தெளிவுபடுத்தினால், ஒருவேளை எனக்கு இந்தப் பாவமன்னிப்பு இன்னுங்கூட விரைவிலேயே அளிக்கப்படலாம். சுமார் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் குடிபுகுந்த பண்பட்ட வெளிநாட்டவர் எவரும் ஆங்கில நடுத்தர வர்க்கக் கண்யவான்களது சமயத் துறைக் குருட்டுப் பிடிவாதமும் மடமையும் என்பதாகவே அன்று அவர் கருத வேண்டியிருந்த அந்தப் போக்கைக் கண்டு பிரமிக்க நேர்ந்ததென்பதை நான் மேலே குறிப்பிட்டேன். ஆனால் அக்காலத்திய ஆங்கில நடுத்தர வர்க்கக் கண்யவான்கள் கூர்மதி படைத்த வெளிநாட்டவர் கண்ணுக்குத் தெரிந்தது போல் அப்படியொன்றும் முட்டாள்தனமாக இருக்கவில்லை என்பதை இப்பொழுது நான் நிரூபித்துக் காட்டப் போகிறேன். அவர்களுடைய சமயத் துறை அபிமானம் புரிந்து கொள்ளக் கூடியதே.

மத்திய காலத்திலிருந்து ஐரோப்பா வெளியே வந்த போது நகரங்களில் உதித்தெழுந்து கொண்டிருந்த நடுத்தர வர்க்கம்தான் ஐரோப்பாவின் புரட்சிகரக் கூறாய் விளங்கிற்று. மத்திய காலப் பிரபுத்துவ ஒழுங்கமைப்பினுள் அது அங்கீகாரத்துக்குரிய ஒரு நிலையைப் பெற்றுக் கொண்டது; ஆயினும் இந்த நிலையும் அதனுடைய விரிவகற்சி ஆற்றலுக்குப் போதாதபடி மிகவும் குறுகலானதாகவே இருந்தது. முதலாளித்துவ வர்க்கமாகிய இந்த நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சிக்கு நிலப்பிரபுத்துவ அமைப்பு தொடர்ந்து நீடிப்பது ஒவ்வாததாகியது; ஆகவே நிலப்பிரபுத்துவ அமைப்பு தகர்ந்து விழ வேண்டியதாயிற்று.

ஆனால் நிலப்பிரபுத்துவத்தின் மாபெரும் சர்வதேச மையமாய் இருந்து வந்தது ரோமானிய-கத்தோலிக்க சமயச் சபையாகும். நிலப்பிரபுத்துவ மேற்கு ஐரோப்பாவை, அதனுள் நடைபெற்று வந்த எல்லா யுத்தங்களையும் மீறி ரோமா

னிய-கத்தோலிக்க சமயச் சபைதான் பிறிதொரு உட்குழுவாக அமைந்த கிரேக்கர்களுக்கும் அதே போல இஸ்லாமிய நாடுகளுக்கும் எதிரான மாபெரும் அரசியல் அமைப்பாக ஒன்றுபடுத்திற்று. நிலப்பிரபுத்துவ நிறுவனங்களை இச்சபை தெய்விகப் பண்புடையதாக்கிப் புனிதம் பெறச் செய்தது. நிலப்பிரபுத்துவத்தை மாதிரியாகக் கொண்டு இது தனது படிநிலை அமைப்பை வகுத்திருந்தது. முடிவில், இந்தச் சமயச் சபை கத்தோலிக்க உலகின் நிலங்களில் மூன்றில் ஒரு பகுதிக்குத் தானே உடைமையாளனாக இருந்து மிகமிக சக்தி வாய்ந்த பிரபுத்துவ நில வேந்தனாகச் செயல்பட்டது. லௌகிக நிலப்பிரபுத்துவத்தின் மீது ஒவ்வொரு நாட்டிலும் விவரமான அடிப்படையில் வெற்றிகரத் தாக்குதல் தொடுப்பதற்கு முன்பு அதன் புனித மத்திய நிறுவனமாகிய இந்தச் சமயச் சபையை ஒழித்தாக வேண்டியிருந்தது.

அதோடு, நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சிக்கு இணைவாக விஞ்ஞானம் புத்தெழுச்சி பெற்று ஓங்கலாயிற்று. வானியல், இயந்திரவியல், பௌதிகவியல், உடற் கூற்றியல், உடலியல் ஆகியவை யாவும் மறுமலர்ச்சி பெற்றன. இயற்கைப் பொருள்களின் பௌதிக இயல்புகளையும் இயற்கை சக்திகளுடைய செயல்முறைகளையும் நிர்ணயித்துக் கூறும் விஞ்ஞானம் முதலாளித்துவ வர்க்கத்துக்கு, தனது தொழில்துறைப் பொருளுற்பத்தியின் வளர்ச்சிக்காகத் தேவைப்பட்டது. இதுகாறும் விஞ்ஞானம் சமயச் சபையின் பணிப் பெண்ணாகவே இருந்து வந்தது; சமய நெறியால் விதிக்கப்பட்ட வரம்புகளைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை; இக்காரணத்தால் அது விஞ்ஞானமாகவே இருக்க முடியவில்லை. சமயச் சபையை எதிர்த்து விஞ்ஞானம் கலகம் புரிந்தது. முதலாளித்துவ வர்க்கத்தால் விஞ்ஞானம் இல்லாமல் இருக்க முடியவில்லை, ஆகவே அதுவும் இந்தக் கலகத்தில் சேர்ந்து கொள்ள வேண்டியதாயிற்று.

உதித்தெழுந்து வந்த நடுத்தர வர்க்கம் நிலைநாட்டப் பெற்ற சமயத்துடன் தவிர்க்க முடியாதவாறு மோத வேண்டியிருந்த களங்களில் இரண்டை மட்டுமே மேற்கூறியவை குறிப்பதாக இருப்பினும், அவை பின்வரும் உண்மைகளைத்

தெளிவுபடுத்தப் போதுமானவை: முதலாவதாக, முதலாளித்துவ வர்க்கம்தான் ரோமானியச் சமயச் சபையின் உரிமைத் தகுதிகளுக்கு எதிரான போராட்டத்தில் மிகவும் நேரடியாக அக்கறை கொண்டிருந்த வர்க்கம்; இரண்டாவதாக, அக்காலத்தில் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான ஒவ்வொரு போராட்டமும் சமய வேடம் பூண்டு யாவற்றுக்கும் முதலாகச் சமயச் சபையை எதிர்த்துக் கிளம்ப வேண்டியிருந்தது. நகரங்களைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களும் தொழில் துறையோரும் எழுப்பிய போர் முழக்கமானது கிராமப்புற மக்கள் திரளினரிடத்தே, தமது நிலப்பிரபுத்துவக் கோமான்களாகிய சமயப் பிரபுக்களையும் லௌகிக நிலப்பிரபுக்களையும் எதிர்த்து வாழ்வுக்காக எங்கும் போராட வேண்டியிருந்த விவசாயிகளிடத்தே நிச்சயமாக உடனே எதிரொலியை எழுப்ப வேண்டியிருந்தது, அவ்வாறே எழுப்பவும் செய்தது.

நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளித்துவ வர்க்கம் நடத்திய நீண்ட நெடும் போராட்டம் தீர்மானகரமான மூன்று பெரும் போர்களில் உச்ச நிலையை வந்தடைந்தது.

ஜெர்மனியில் நடைபெற்ற புரோட்டஸ்டென்டு மதச் சீர்திருத்தப் போக்கு[19] எனப்படுவது முதலாவதாகும். சமயச் சபையை எதிர்த்து லூதர் எழுப்பிய போர்க் குரலுக்குச் செவி சாய்த்து, அரசியல் தன்மை வாய்ந்த இரு எழுச்சிகள் கிளர்ந்தெழுந்தன: முதலாவது, பிரான்ஸ் வான் ஸிக்கின்கென் தலைமையில் கீழ்நிலைப் பிரபுக்களுடையது (1523), அடுத்து 1525இல் நடைபெற்ற விவசாயிகளது பெரும் போர். இரண்டும் தோற்கடிக்கப்பட்டு விட்டன. பிரதானமாக இத் தோல்வி மிகவும் அக்கறை கொண்ட தரப்பினராகிய நகரத்தாரின் உறுதியின்மையால் நேர்ந்ததாகும்—இந்த உறுதியின்மைக்குரிய காரணங்களை இங்கு நாம் பரிசீலிக்க வேண்டியதில்லை. அத்தருணம் முதல் இப்போராட்டம் பிரதேசச் சிற்றரசர்களுக்கும் மத்திய அதிகாரத்துக்கும் இடையிலான போராகச் சீரழிந்து அரசியல் செயல் முனைப்புடைய ஐரோப்பிய தேசங்களது அணியிலிருந்து இருநூறு ஆண்டுகளுக்கு ஜெர்மனியை விலக்கி ஒதுக்குவதில் முடிவுற்றது. லூதரனிச

மதச்சீர்திருத்தம் ஒரு புதிய சமயநெறியை, எதேச்சாதிகார முடியாட்சிக்குத் தகவமைந்த சமயத்தை உருவாக்கியது மெய்தான். வடகிழக்கு ஜெர்மனியின் விவசாயிகள் லூதரனிசத்துக்கு மாறியதுமே அவர்கள் சுதந்திர மனிதர்களது நிலையை இழந்து பண்ணையடிமைகளாகத் தாழ்த்தப்பட்டு விட்டனர்.

ஆனால் லூதர் தோல்வியுற்றார் என்றாலும், கால்வின் வெற்றி சூடினார். கால்வினுடைய சமயநெறி அவர் காலத்திய முதலாளித்துவ வர்க்கத்தாரில் உறுதியும் துணிவும் மிகுந்தவர்களுக்கு ஏற்றதாக இருந்தது. போட்டா போட்டிக்குரிய வாணிப உலகில் வெற்றியும் தோல்வியும் மனிதச் செயற்பாடு அல்லது சாமர்த்தியத்தை பொறுத்திராது, அவனால் அடக்கியாள முடியாத சூழ்நிலைமைகளையே பொறுத்தனவாகி விடுகின்றன என்னும் இவ்வுண்மையின் சமயநெறிப் பிரதிபலிப்பே ஆகும் கால்வினுடைய விதிவசக் கோட்பாடு. நாளை நடப்பது நினைப்பவனது சித்தத்தையோ, செய்கிறவனது செயலையோ சார்ந்ததல்ல; யாரும் அறியாத, யாவருக்கும் மேலான பொருளாதாரச் சக்திகளது கருணையையே சார்ந்ததாகும். மிகவும் முக்கியமாகப் பொருளாதாரப் புரட்சிக்குரிய அந்தக் காலத்துக்கு, பழைய வாணிப மார்க்கங்களும் மையங்களும் மறைந்து அவற்றுக்கு பதிலாகப் புதியவை தோன்றி, இந்தியாவும் அமெரிக்காவும் உலகுக்குத் திறந்துவிடப்பட்டு, மிகமிகப் புனிதமான பொருளாதார நம்பிக்கை ஆதாரமாயிருந்த தங்க, வெள்ளி மதிப்புங்கூட நிலைகுலைந்து ஆடியதிரத் தொடங்கிய ஒரு காலத்துக்கு இக்கருத்து மிகவும் பொருத்தமாக இருந்தது. கால்வினுடைய சமயச் சபையின் கட்டமைப்பு முற்றும் ஜனநாயகத் தன்மையதாகவும் குடியரசு வழிப்பட்டதாகவும் இருந்தது. இறைவனுடைய அருளுலக அரசு குடியரசுமயமாக்கப்பட்ட பிறகு இவ்வுலக அரசுகள் முடிமன்னர்களுக்கும் பிஷப்புகளுக்கும் பிரபுக்களுக்கும் உட்பட்டதாக இருக்க முடியுமா? ஜெர்மன் லூதரனிசம் மனமுவந்து சிற்றரசர்களது கைக் கருவியாகிவிட்ட ஒரு காலத்தில் கால்வினிசம் ஹாலந்தில் ஒரு குடியரசையும் இங்கிலாந்திலும்—இன்னும் முக்கியமாக—

ஸ்காட்லாந்திலும் செயல் வன்மை மிக்க குடியரசுக் கட்சிகளையும் நிறுவிற்று.

இரண்டாவது பெரிய முதலாளித்துவ எழுச்சி தனக்கு வேண்டிய போதனை கால்வினிசத்தில் முற்றும் தயாரான முழு வடிவில் இருக்கக் கண்டது. இந்த எழுச்சி இங்கிலாந்தில் நடந்தேறியது. நகரங்களைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தினர் இதை மூண்டெழச் செய்தனர்; கிராம வட்டாரங்களைச் சேர்ந்த விவசாய குத்தகைக்காரர்கள் போராடி இதைச் சித்தி பெறச் செய்தனர். இதில் விசித்திரம் என்னவெனில், மூன்று பெரிய முதலாளித்துவ எழுச்சிகள் யாவற்றிலும் போராடுவதற்கான சேனையாக அமைவோர் விவசாயிகள்தான்; வெற்றி கிட்டியதும் அந்த வெற்றியின் பொருளாதார விளைவுகளால் நிச்சயமாக நாசத்துக்கு இலக்காகும் வர்க்கத்தவரும் இதே விவசாயிகள்தான். குரோம்வெலுக்குப் பிறகு நூறு ஆண்டுகளுக்குள் இங்கிலாந்தில் நிலமுடைய விவசாய குத்தகைக்காரர்கள் அனேகமாக மறைந்தொழிந்து விட்டனர். ஆயினும் இந்த விவசாயிக் குடிகளும் நகரங்களைச் சேர்ந்த கீழ்க்குடிகளாகிய **பிளெபியன்** பகுதியினரும் போராடியிராவிடில், ஒருபோதும் முதலாளித்துவ வர்க்கத்தார் தனியே இந்தப் போராட்டத்தை அதன் இறுதி முடிவு வரை நடத்திச் சென்றிருக்க மாட்டார்கள், ஒருபோதும் முதலாவது சார்லசைச் சிரச்சேதம் செய்திருக்க மாட்டார்கள். முதலாளித்துவ வர்க்கம் அன்று தமக்குக் கிட்டக் கூடியவையாய் இருந்த வெற்றிகளையேனும் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, புரட்சியைக் கணிசமான அளவுக்கு மேலும் நடத்திச் செல்ல வேண்டியிருந்தது—பிற்பாடு 1793இல் பிரான்சிலும் 1848இல் ஜெர்மனியிலும் இதே போலத்தான் ஆயிற்று. உண்மையில் இது முதலாளித்துவ சமுதாயத்தின் பரிணாம விதிகளில் ஒன்றாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

புரட்சிகரச் செயற்பாடு இப்படி அளவு மீறிச் சென்றதை அடுத்து, அத்தியாவசிய முறையில் இதன் தவிர்க்க முடியாத எதிர்வினை நடந்தேறியது. இந்த எதிர்வினையும் தன்னை நிலைநாட்டிக் கொள்ளும்படியான நிலையையும்

கடந்து சென்று விட்டது. இப்படி வரிசையாகப் பல அலைவுகள் நிகழ்ந்த பின் முடிவில் புதிய ஈர்ப்பு மையம் கைவரப் பெற்று, இது புதிய துவக்க நிலை ஆயிற்று. ஆங்கில வரலாற்றின் இந்த மகத்தான காலக்கூறும்—கண்யவான்களால் ''மாபெரும் கலவரம்'' என்பதாகப் பெயரிட்டு அழைக்கப் படும் இந்தக் காலக்கூறும்—இதைத் தொடர்ந்து நடை பெற்ற போராட்டங்களும் மிதவாத வரலாற்றியலாளர் களால் ''புகழ் படைத்த புரட்சி''[20] என்பதாகக் குறிக்கப் படும் ஒப்பளவில் அற்பமானதொரு நிகழ்ச்சியால் (1689) முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தப் புதிய துவக்க நிலை உதித்தெழுந்து வந்த நடுத்தர வர்க்கத்துக்கும் முன்னாள் நிலப்பிரபுத்துவ நிலச்சுவான் தார்களுக்கும் இடைப்பட்ட ஒரு சமரசமாகும். இந்த நிலச் சுவான்தார்கள் இப்பொழுது அழைக்கப்படுகிறார்களே அதே போல பிரபுக்குலத்தோர் என்பதாக அழைக்கப்பட்ட போதிலும், இதற்கு மிகவும் பிற்பாடு ஒரு காலத்தில் பிரான்சில் லுயீ ஃபிலீப்பைப் போல ''அரசின் முதலாவது முதலாளி'' ஆவதற்குரிய பாதையில் நெடுநாட்களுக்கு முன்பே அடியெடுத்து வைத்து விட்டவர்கள். இங்கிலாந்தின் அதிர்ஷ்டம், அதன் பழைய நிலப்பிரபுத்துவக் கோமான்கள் ரோஜாப் போரின் போது[21] ஒருவரையொருவர் கொன்று கொண்டு விட்டனர். அவர்களுடைய சந்ததியார் பெரும்பாலும் பழைய நிலப்பிரபுத்துவக் கோமான் குடும்பங்களது வழித்தோன்றல்கள் என்றாலுங்கூட, நேரடி வாரிசு வழியிலிருந்து பெரிதும் விலகியவர்களாக இருந்ததால், பெருமளவுக்குப் புதிய தொகுதியினராக, பழக்கவழக்கங்களிலும் போக்குகளிலும் நிலப்பிரபுத்துவக் கோமான்களைக் காட்டிலும் மிகுதியாக முதலாளித்துவத் தன்மையினராக விளங்கினர். இவர்கள் பணத்தின் மதிப்பை நன்கு புரிந்து கொண்டு உடனே நூற்றுக் கணக்கான சிறு விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றி அவர்களுக்குப் பதிலாக ஆட்டுக் கிடைகளை அமைத்து நில வாடகையை உயர்த்த முற்பட்டனர். எட்டாவது ஹென்றி சமயச் சபையின் நிலங்களை வரைமுறையின்றி வழங்கிய போது புதிய முதலாளித்துவ நிலச்சுவான்தார்களை ஏராள

மாக உருவாக்கினார். பெரும் பண்ணைகள் கணக்கின்றி மீண்டும் மீண்டும் பறிமுதல் செய்யப்பட்டு முற்றிலுமோ அல்லது ஒப்பளவிலோ புதிதாகத் தலையெடுத்த நிலச்சுவான்களுக்கு மறுவழங்கீடு செய்யப்பட்டதன் மூலமும் பதினேழாம் நூற்றாண்டு பூராவும் தொடர்ந்து நடைபெற்ற இதன் மூலமும் இதே விளைவுதான் ஏற்பட்டது. இதன் பயனாக, ஏழாவது ஹென்ரியின் காலத்திலிருந்து ஆங்கில ''பிரபுக் குலத்தினர்'' தொழில்துறைப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியை எதிர்த்துச் செயல்படுவதற்குப் பதிலாக மறைமுகமாக அதிலிருந்து லாபம் பெறவே முயன்றனர்; நிதித்துறை, தொழில்துறை முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையான ஆட்களுடன் பொருளாதார அல்லது அரசியல் காரணங்களை முன்னிட்டு ஒத்துழைக்கத் தயாராயிருந்த ஒரு பிரிவு பெரிய நிலப்பிரபுக்களிடையே எப்பொழுதுமே இருந்து வந்தது. ஆகவே 1689ஆம் ஆண்டு சமரசம் சுலபமாகவே ஏற்பட முடிந்தது. நிதி, பட்டறைதொழில், வணிகத்துறைகளைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தின் பொருளாதார நலன்கள் தக்கவாறு கவனித்துக் கொள்ளப்பட்ட வரை அரசியல் சன்மானங்களாகிய ''பட்டமும் பதவியும்'' பெரிய நிலப்பிரபுக்களின் குடும்பங்களிடமே விட்டு வைக்கப்பட்டன. நடுத்தர வர்க்கத்தின் இந்தப் பொருளாதார நலன்கள் அக்காலத்தில் தேசத்தின் பொதுக் கொள்கை வழியை நிர்ணயிக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்திருந்தன. சிறு விவரங்களைப் பற்றிய விவகாரங்களில் சச்சரவுகள் ஏற்பட்டிருக்கலாம்; ஆனால் மொத்தத்தில் பிரபுக் குலத்து ஆட்சிக் கும்பல் தனது பொருளாதார சுபிட்சம் தொழில், வாணிபத் துறை நடுத்தர வர்க்கத்தின் சுபிட்சத்திலிருந்து பிரிக்க முடியாதபடி அதனுடன் கட்டுண்டிருந்தது என்பதை நன்கு அறிந்திருந்தது.

அக்காலம் முதலாக முதலாளித்துவ வர்க்கம் இங்கிலாந்தின் ஆளும் வர்க்கங்களைச் சேர்ந்த அடக்கமான, ஆயினும் அங்கீகரிக்கப்பட்டதான ஒரு பகுதியாக இருந்தது. தேசத்தின் மிகப் பெருவாரியான உழைப்பாளிப் பெருந்திரளினரைக் கீழ்ப்படுத்தி வைப்பதில் ஆளும் வர்க்கங்களின் ஏனைய

பகுதிகளைப் போலவே அதுவும் அக்கறை கொண்டிருந்தது. வணிகரோ, பட்டறைத்தொழில் அதிபரோ தமது கணக்கர்களையோ, தொழிலாளர்களையோ, வீட்டு வேலையாட்களையோ பொறுத்தவரை எஜமானனின் அல்லது அண்மைக் காலம் வரை குறிப்பிடப்பட்டது போல ''இயற்கையாகவே மேலானவரின்'' நிலை வகித்தார். அளவில் அதிகமாகவும் தரத்தில் உயர்வாகவும் இருக்கக் கூடிய வேலையை இவர்களிடமிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவும் பெற்றுக் கொள்வதில் அவர் நாட்டமுடையவராக இருந்தார். இதன் பொருட்டு இவர்கள் தக்கபடி கீழ்ப்படிந்து நடப்பதற்கு இவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியதாயிற்று. அவர் சமயத்தில் முழு நம்பிக்கையும் அபிமானமும் கொண்டிருந்தார். முன்பு அரசனையும் பிரபுக்களையும் எதிர்த்து அவர் போர் புரிந்து போது அவருக்குப் போர்க் கொடியாகத் திகழ்ந்தது அவருடைய சமயம்தான். இயற்கையாகவே தமக்குக் கீழானவர்களின் மனதை வயப்படுத்தவும் ஆண்டவனே விரும்பிஅவர்களுக்கு மேலான ஒரு நிலையில் அமர்த்தப் பட்டுள்ள எஜமானர்களின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படிச் செய்யவும் இதே சமய நம்பிக்கை தமக்குச் சிறந்த வாய்ப்புகளை அளித்ததை அவர் விரைவிலேயே கண்டு கொண்டார். சுருங்கக் கூறுமிடத்து, ''கீழ்த்திறத் தோரை'', தேச மக்களில் மிகப் பெரும் பகுதியான உற்பத்தியாளர் பெருந்திரளினரைக் கீழ் நிலையில் இருத்தி வைக்கும் பணியில் இப்பொழுது ஆங்கில முதலாளித்துவ வர்க்கத்தார் ஈடுபட வேண்டியதாயிற்று; சமயத்தின் செல்வாக்கு இப்பணிக்குரிய சாதனங்களில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டது.

முதலாளித்துவ வர்க்கத்தாரின் சமய அபிமானத்தை வலுப்பெறச் செய்வதற்கு இன்னொரு காரணமும் துணை புரிந்தது. அது இங்கிலாந்தில் உதித்தெழுந்த பொருள்முதல் வாதமாகும். இந்தப் புதிய போதனை பக்தி உணர்ச்சிமிக்க நடுத்தர வர்க்கத்தாருக்கு அதிர்ச்சி உண்டாக்குவதாக இருந்தது என்பது மட்டுமல்ல—முதலாளித்துவ வர்க்கத்தாரும் அடங்கலான படிக்காத வெகுஜனங்களுக்குப் போதுமானதாக இருந்த சமயத்தைப் போலல்லாது, கற்றறிந்தோருக்

கும் லௌகிக ஞானமுடையோராகப் பண்பட்டோருக்கும் மட்டுமே ஏற்ற தத்துவவியலாக அது தன்னை அறிவித்துக் கொண்டது. ஹாப்சுடன் கூடவே அது முடியரசரது சிறப்புரிமையின், வரம்பற்ற அதிகார உரிமையின் காவலனாக அரங்கில் ஏறியது; puer robustus sed malitiosus* என்பதை, அதாவது மக்களை அடக்கி வைக்குமாறு அது எதேச்சாதிகார முடியரசுக்கு அழைப்பு விடுத்தது. இதே போல, ஹாப்சுக்குப் பிற்பாடு வந்த பொலிங்பிராக், ஷாஃப்ட்ஸ்பரி முதலானோர் இந்தப் பொருள்முதல்வாதத்துக்கு அளித்த புதிய ஆதிமூல இறைமைக் கோட்பாட்டு வடிவமுங்கூட பிரபுக்குலத் தன்மையதாகவே, ஒருசில மேன்மக்கள் மட்டுமே கற்றறிந்து கொள்ளத்தக்கதாகவே இருந்தது; இதனாலும், மற்றும் சமயக் கோட்பாடுகளுக்கு அது முரணாக இருந்ததாலும், முதலாளித்துவ வர்க்கத்துக்கு விரோதமான அரசியல் தொடர்புகளை கொண்டிருந்ததாலும், அது நடுத்தர வர்க்கத்தின் வெறுப்புக்குரியதாகி விட்டது. ஆகவே பிரபுக்குலத்தோரின் பொருள்முதல்வாதத்துக்கும் ஆதிமூல இறைமைக் கோட்பாட்டுக்கும் எதிராக, முன்பு ஸ்டுவர்ட்டுகளுக்கு எதிரான போர்க் கொடியையும் போர்ப் படைகளையும் அளித்த அந்த புரோட்டஸ்டென்டு சமயப் பிரிவுகள்தான் இனியும் தொடர்ந்து முற்போக்கான நடுத்தர வர்க்கத்துக்குப் பிரதான பலமளித்து வந்தன, இன்றுங்கூட அவைதாம் ''மாபெரும் மிதவாதக் கட்சியின்'' முதுகெலும்பாக அமைந்துள்ளன.

இதற்கிடையில் பொருள்முதல்வாதம் இங்கிலாந்திலிருந்து பிரான்சுக்கு இடம் பெயர்ந்து சென்றது. அங்கே அது மற்றொரு பொருள்முதல்வாதத் தத்துவவியலாளர் மரபை, அதாவது கார்ட்டிசியனிசத்தின்[22] ஒரு கிளையைச் சந்தித்து அதனுடன் சங்கமித்து விட்டது. பிரான்சிலுங்கூட ஆரம்பத்தில் அது முழுக்க முழுக்கப் பிரபுக்குலத் தன்மையதான போதனையாகவே இருந்தது. ஆனால் விரைவில் அதன்

* —உடல் வலிவும் மூர்க்க குணமும் வாய்ந்தவர்களான மக்கள்.—ப-ர்.

புரட்சித் தன்மை வெளிப்படலாயிற்று. பிரெஞ்சுப் பொருள் முதல்வாதிகள் தமது விமர்சனத்தைச் சமயத் துறை சம்பந்த மான விவகாரங்களுடன் நிறுத்திக் கொண்டுவிடவில்லை; அவர்கள் அக்காலத்தின் எந்த விஞ்ஞான மரபையும் அரசியல் நிறுவனத்தையும் விமர்சித்தார்கள். தமது தத் துவநெறி எல்லாத் துறைகளிலும் கையாளப்படத்தக்கது என்று நிரூபித்துக் காட்டும் பொருட்டு அவர்கள் குறுக்கு வழியில் சென்றார்கள்; **கலைக்களஞ்சியம்** என்னும் ஒரு மாபெரும் நூலில்—அவர்கள் இந்த நூலின் பெயரால் கலைக்களஞ்சியத்தார் என்று அழைக்கப்பட்டனர்—அதைத் துணிச்சலுடன் அறிவியலின் எல்லாத் துறைகளுக்கும் கையாண்டார்கள். பகிரங்கப் பொருள்முதல்வாதம், ஆதி மூல இறைமைக் கோட்பாடு ஆகிய அதன் இரு வடிவங்களில் ஏதேனும் ஒன்றில் இவ்விதம் அது பிரெஞ்சு நாட்டின் கல்விப் பண்பாடுடைத்த இளைஞர்கள் அனைவரின் கொள்கைநெறி யாயிற்று. ஆங்கில முடியாட்சிவாதிகள் வகுத்தமைத்த இந்தப் போதனை இவ்வாறு, மாபெரும் புரட்சி வெடித்த போது பிரெஞ்சுக் குடியரசுவாதிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் தத்துவார்த்தப் போர்க் கொடியை உருவாக்கித் தந்தது; **மனித உரிமைப் பிரகடனத்தின்**[23] வாசகத்தை வகுத்தளித்தது.

மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி முதலாளித்துவ வர்க்கத் தின் மூன்றாவது எழுச்சியாகும்; ஆயினும் சமய முகமூடியை உதறித் தள்ளி விட்டு ஒளிவு மறைவின்றி அரசியல் வழி களில் போராடி முடிவு கட்டிய முதலாவது எழுச்சியாக அமைந்தது இது. போராடிய தரப்புகளில் ஒன்றான பிரபுக் குலம் அழிக்கப்பட்டு, மற்றொரு தரப்பாகிய முதலாளித்துவ வர்க்கம் முழுநிறை வெற்றி பெறும்படி மெய்யாகவே இறுதி வரை போராட்டம் நடத்திச் செல்லப்பட்ட முதலாவது எழுச்சியாகவும் திகழ்ந்தது. இங்கிலாந்தில் புரட்சிக்கு முந் திய நிலையங்களுக்கும் புரட்சிக்குப் பிந்திய நிலையங்களுக் கும் இடையிலான முறிவில்லா ஒட்டுறவும் நிலப்பிரபுக்களுக் கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட சமரசமும் நீதிமன்ற முன் மாதிரித் தீர்ப்புகளின் முறிவில்லா ஒட்டுறவிலும் சட்டங் களது நிலப்பிரபுத்துவக் காலத்திய வடிவங்கள் பற்றுறுதி

யுடன் பாதுகாக்கப்பட்டதிலும் வெளியாயின. பிரான்சில் புரட்சி பழங்காலத்தின் மரபுகளிலிருந்து முழுநிறைவான முறிவைக் குறிப்பதாக இருந்தது. அங்கு இப்புரட்சி நிலப் பிரபுத்துவத்தின் இறுதி எச்சங்களையும் ஒழித்துக் கட்டியது; பழைய ரோமானியச் சட்டத்தை—பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி என்று மார்க்ஸ் பெயரிட்டு அழைத்த அந்தப் பொருளாதாரக் கட்டத்துக்குரிய நீதிமுறை உறவுகளின் அனேகமாகக் குறைபாடற்ற சிறந்த பிரதிபலிப்பாகிய அச் சட்டத்தை—தேர்ந்த திறமையோடு நவீன முதலாளித்துவ நிலைமைகளுக்குத் தகவமைத்து உருவான Code Civil சட்டத் தொகுப்பைப்[24] படைத்தளித்தது. இந்தப் புரட்சிகர பிரெஞ்சு சட்டத் தொகுப்பு மிகவும் திறம்பட தகவமைக்கப் பட்டதாக இருப்பதால், இன்றுங்கூட அது ஏனைய எல்லா நாடுகளிலும்—இங்கிலாந்தும் இதற்கு விதிவிலக்கல்ல—சொத்துரிமைச் சட்டச் சீர்திருத்தங்களுக்கு முன்மாதிரி யாகப் பயன்பட்டு வருகிறது. ஆனால் ஒன்றை நாம் மறக் கலாகாது: ஆங்கிலச் சொற்களின் எழுத்துக்களுக்கும் உச் சரிப்புக்கும் எவ்வளவு இசைவு இருக்கிறதோ—vous écrivez Londres et vous prononcez Constantinople* என்றார் ஒரு பிரெஞ்சுக்காரர்—குறிக்கப்படும் பொருளுக்கு அந்த அளவே இசைவுடையதான அந்த அநாகரிக நிலப்பிரபுத்துவ மொழி யில்தான் இன்னமும் தொடர்ந்து ஆங்கிலச் சட்டம் முத லாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார உறவுகளைக் குறிப் பிட்டுவருகிறது என்றாலும், இந்த ஆங்கிலச் சட்டம் ஒன்று மட்டும்தான் பழைய ஜெர்மன் தனிநபர் சுதந்திரம், ஸ்தல சுய-ஆட்சி, நீதிமன்றங்கள் மூலமானதைத் தவிர்த்து ஏனைய எந்தத் தலையீடும் இல்லாத சுயேச்சை நிலை ஆகிய இவற்றை—கண்டத்தில் எதேச்சாதிகார முடியரசின் காலத் தில் இழக்கப்பட்டு எங்கும் இன்னமும் முழு அளவுக்கு மீட்கப் படாத இவற்றை—பழுதின்றி நெடுங்காலமாகப் பாதுகாத்து வந்தும் அமெரிக்காவுக்கும் காலனிகளுக்கும் வழங்கியும் இருக்கிறது என்பதை நாம் மறக்கலாகாது.

* —நீங்கள் லண்டன் என்று எழுதுகிறீர்கள், ஆனால் அதை கன்ஸ்டான்டிநோபிள் என்று வாசிக்கிறீர்கள்.—ப-ர்.

நமது பிரிட்டிஷ் முதலாளியிடம் திரும்புவோம். பிரெஞ்சுப் புரட்சி இவருக்கு அற்புதமான ஒரு வாய்ப்பை அளித்தது; கண்டத்து முடியரசுகளின் துணை கொண்டு பிரெஞ்சுக் கடல்வழி வாணிபத்தை அழிக்கவும் பிரெஞ்சுக் காலனிகளைக் கைப்பற்றவும் கடல் ஆதிக்கத்துக்காகப் போட்டியாளனாக பிரான்சிடம் எஞ்சியிருந்த கடைசி உரிமைத் தகுதிகளையும் நசுக்கவும் வாய்ப்பை அளித்தது. பிரிட்டிஷ் முதலாளி பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்துப் போராடியதற்கு இது ஒரு காரணமாகும். இன்னொரு காரணம் என்னவெனில், இந்தப் புரட்சியின் வழிமுறைகள் அவருடைய மனப்பாங்குக்குச் சிறிதும் ஒத்து வருவதாயில்லை. ''அருவருக்கத்தக்க'' அதன் பயங்கரவாதம் மட்டுமல்ல, முதலாளித்துவ ஆட்சியை மட்டுமீறி கடைக்கோடி வரம்புகளுக்கு எடுத்துச் செல்லும் அந்த முயற்சியே அவருக்கு ஏற்புடையதாயில்லை. பிரிட்டிஷ் முதலாளி தமது பிரபுக்குலத்தவர்கள் இல்லாமல் வாழ்வது எப்படி? இந்தப் பிரபுக்குலத்தவர்கள்தானே, எப்படிப்பட்டவையாயினும் அவர் தமக்குரித்தானவையாகக் கருதிய நடையுடை பாவனைகளை அவருக்குக் கற்றுத் தந்தவர்கள்; அவருக்குப் புதுப் பாணிகளையும் மோஸ்தர்களையும் உருவாக்கிக் கொடுத்தவர்கள்; மற்றும் உள்நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டிய சேனைக்கும் வெளியே காலனி உடைமைகளையும் புதிய சந்தைகளையும் வென்று தந்த கடற்படைக்கும் அதிகாரிகளை அளித்தவர்கள்—இவர்கள் இல்லாமல் முடியுமா? முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே முற்போக்கு எண்ணமுடைத்த ஒரு சிறுபான்மை, சமரச ஏற்பாட்டின் கீழ் தனது நலன்கள் மிகவும் நன்கு கவனிக்கப்படாமல் விடப்பட்ட ஒரு சிறுபான்மை இருந்ததும், அதிகச் செல்வந்தர்களாயிராத நடுத்தர வர்க்கத்தோரையே பிரதானமாகக் கொண்டிருந்த இந்தச் சிறுபான்மை பிரெஞ்சுப் புரட்சிக்கு அனுதாபம் தெரிவித்ததும் மெய்தான்; ஆனால் நாடாளுமன்றத்தில் இதற்கு அதிகாரம் இருக்கவில்லை.

இவ்வாறு பொருள்முதல்வாதம் பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைநெறியாகிய ஒரு காலத்தில் தெய்வபக்தி மிகுந்த ஆங்கில முதலாளி மேலும் உறுதியாகத் தமது சமயத்தைக்

கட்டித் தழுவிக் கொண்டார். மக்கள் திரள்களிடையிலே இருக்க வேண்டிய சமய உணர்ச்சிகள் மறையுமாயின் என்ன நேரும் என்பதை பாரிசில் நடைபெற்ற பயங்கர ஆட்சி நிரூபித்துக் காட்டவில்லையா? பிரான்சிலிருந்து பொருள்முதல்வாதம் அண்டை நாடுகளுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகப் பரவி, இதையொத்த கொள்கைநெறிப் போக்குகளால்—குறிப்பாக ஜெர்மன் தத்துவவியலால்—மேலும் உறுதியூட்டப் பெற்றதோ, எவ்வளவுக்கு எவ்வளவு பொருள்முதல்வாதமும் கட்டுப்படுத்தப்படாத சுதந்திரச் சிந்தனையும் பொதுவாகக் கண்டத்தில் பண்பட்டவர்களுக்கான அத்தியாவசியத் தகுதிகளாகி வந்தனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமான பிடிவாதத்துடன் ஆங்கில நடுத்தர வர்க்கத்தார் தமது பல்வேறுபட்ட சமய நெறிகளையும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டனர். இந்த நெறிகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்திருக்கலாம், ஆனால் இவையாவும் ஒன்று விடாமல் தெளிவான சமய முத்திரை பெற்ற கிறிஸ்துவ நெறிகளாகும்.

பிரான்சில் புரட்சி முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் வெற்றியை உறுதி செய்த அதே காலத்தில் இங்கிலாந்தில் வாட்டும் ஆர்க்ரைட்டும் கார்ட்ரைட்டும் ஏனையோரும் பொருளாதார சக்திகளின் ஈர்ப்பு மையத்தை அடியோடு இடம் பெயரச் செய்த ஒரு தொழில் புரட்சியைத் துவக்கி வைத்தனர். முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வம் நிலமுடைத்த பிரபுக்குலத்தோருடையதைக் காட்டிலும் அதிகமாகப் பெருகிச் சென்றது. முதலாளித்துவ வர்க்கத்துக்குள் நிதித்துறை பிரபுக்குலத்தோரான வங்கி அதிபர்கள் மேலும் மேலும் அதிகமாகத் தொழில் அதிபர்களால் பின்னிலைக்குத் தள்ளப்பட்டனர். 1689ஆம் ஆண்டு சமரசம், முதலாளித்துவ வர்க்கத்துக்குச் சாதகமாகப் படிப்படியாக அதில் ஏற்பட்ட மாறுதல்களுக்குப் பிற்பாடுங்கூட, அதில் பங்கு கொண்ட தரப்புகளுடைய பரஸ்பர பலத்தின் நிலைக்கு இப்பொழுது இசைவாக இல்லை. இந்தத் தரப்புகளது இயல்புங்கூட மாறிப் போய் விட்டது; 1830ஆம் ஆண்டின் முதலாளித்துவ வர்க்கம் முந்திய நூற்றாண்டினுடையதைப்

போலல்லாது மிகவும் மாற்றமடைந்திருந்தது. இன்னமும் பிரபுக்குலத்தோரின் கையில் விட்டுவைக்கப்பட்டு புதிய தொழில்துறை முதலாளித்துவ வர்க்கத்தின் உரிமைத் தகுதிகளுக்கு எதிராக அவர்களால் உபயோகிக்கப்பட்டு வந்த அரசியல் அதிகாரம் புதிய பொருளாதார நலன்களுக்கு ஒவ்வாததாகியது. பிரபுக்குலத்தோருடன் புதிய போராட்டம் மூளுவது அவசியமாகியது. இந்தப் போராட்டம் புதிய பொருளாதார சக்தியின் வெற்றியில்தான் முடிவுற்றாக வேண்டும். முதலில் 1830ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டம்[25] பிரெஞ்சுப் புரட்சியால் உந்திவிடப்பட்டு எல்லா எதிர்ப்பையும் மீறி நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அங்கீகாரத்துக்குரிய, சக்திவாய்ந்த ஓர் இடத்தைக் கிடைக்கச் செய்தது. இதன்பின் தானியச் சட்டங்கள்[26] ரத்து செய்யப்பட்டன; இதன் விளைவாக நிலமுடைத்த பிரபுக்குலத்தோரின் மீது முதலாளித்துவ வர்க்கம், முக்கியமாக அதன் செயல் வன்மைமிக்க பகுதியான ஆலை முதலாளிகள் முடிவாகவும் உறுதியாகவும் தலைமைநிலைபெற முடிந்தது. இது முதலாளித்துவ வர்க்கம் பெற்ற மிகப் பெரிய வெற்றியாகும். அதே போதில் முற்றிலும் தனது நலத்துக்கு மட்டுமாக இவ்வர்க்கம் பெற்ற கடைசி வெற்றியாகவும் அமைந்தது இது. இதற்குப் பிற்பாடு இவ்வர்க்கம் தான் பெற்ற வெற்றிகளை முதலில் தனது கூட்டாளியாக இருந்து, ஆனால் விரைவில் தனது எதிராளியாகிய ஒரு புதிய சமூக சக்தியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதாயிற்று.

தொழில் புரட்சி பெரிய ஆலை முதலாளி வர்க்கம் ஒன்றைத் தோன்றச் செய்திருந்தது; அதோடு இதனினும் எண்ணிக்கையில் பெரியதான ஆலைத் தொழிலாளி வர்க்கத்தையும் தோன்றச் செய்திருந்தது. தொழில் புரட்சி ஒவ்வொரு தொழிற் கிளையாகப் பற்றிச் சென்று பரவியதற்கு ஏற்ப, இந்த ஆலைத் தொழிலாளி வர்க்கம் படிப்படியாக எண்ணிக்கையில் அதிகரித்து அதற்கு ஏற்ப மேலும் மேலும் வலிமை பெற்று வளர்ந்து சென்றது. 1824ஆம் ஆண்டிலேயே இவ்வர்க்கம் தொழிலாளர் இணைவுகளுக்குத் தடை

விதித்த சட்டங்களை[27] நீக்கும்படி விருப்பமில்லாத நாடாளு மன்றத்தைப் பலவந்தம் செய்து தனது வலிமையை நிரு பித்துக் காட்டியிருந்தது. சீர்திருத்தக் கிளர்ச்சியின் போது தொழிலாளர்கள் சீர்திருத்தக் கட்சியினரின் தீவிரவாதப் பிரிவினராகச் செயல்பட்டனர். 1832ஆம் ஆண்டுச் சட்டம் அவர்களுக்கு வாக்குரிமை அளிக்காமல் ஒதுக்கியதும், அவர் கள் தமது கோரிக்கைகளை மக்கள் உரிமைச் சாசனத்தில்[28] வகுத்தமைத்துக் கொண்டு பெரிய முதலாளித்துவத் தானியச் சட்ட எதிர்ப்புக் கட்சிக்கு[29] எதிராக தம்மைச் சுயேச்சையான ஒரு கட்சியாக, நவீன காலத்தின் முதலாவது தொழிலாளர் கட்சியான சார்ட்டிஸ்டுகளாக அமைத்துக் கொண்டனர்.

இதன் பின் ஐரோப்பா கண்டத்தில் 1848 பிப்ரவரி, மார்ச் புரட்சிகள் நடைபெற்றன. உழைப்பாளி மக்கள் இவற்றில் மிகவும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர்; எப் படியும் பாரிசிலேனும் அவர்கள் முதலாளித்துவச் சமுதாயத் தின் கண்ணோட்டத்தின்படி நிச்சயமாக அனுமதிக்க முடி யாத கோரிக்கைகளை முன்வைத்தனர். பிறகு எங்கும் பொதுவாகப் பிற்போக்கின் தாண்டவம் ஆரம்பமாயிற்று. முதலில் 1848 ஏப்ரல் 10ல் சார்ட்டிஸ்டுகள் தோற்கடிக்கப் பட்டனர்[30]; அடுத்து அதே ஆண்டு ஜூனில் பாரிஸ் தொழி லாளர்களுடைய எழுச்சி நசுக்கப்பட்டது; பிறகு இத்தாலி யிலும் ஹங்கேரியாவிலும் தெற்கு ஜெர்மனியிலும் 1849ல் பெருவிபத்துகள் நேர்ந்தன; முடிவில் பாரிசின் மீது 1851 டிசம்பர் 2ல் லுயீ போனப்பார்ட்டுக்கு வெற்றி கிட்டிற்று[31]. தொழிலாளி வர்க்கம் உரிமைத் தகுதி கொண்டாடி கோரிக் கைகள் எழுப்பியதன் அபாயம் தற்காலிகமாகவேனும் ஒரு வாறு அடக்கப்பட்டது; ஆனால் இதைச் செய்வதற்குள் பெரும் பாடாக அல்லவா ஆகி விட்டது! சாதாரண மக் களைச் சமய மனப்பாங்கு கொண்டோராக வைத்திருப்பது அவசியமென்று முன்பே ஐயமற உணர்ந்திருந்த பிரிட்டிஷ் முதலாளி இந்த அனுபவங்கள் யாவற்றுக்கும் பிற்பாடு இந்த அவசியத்தை இன்னும் எவ்வளவு அதிகமாக உணர முற் பட்டிருப்பார்? கண்டத்தைச் சேர்ந்த தனது காக்கைகளின்

ஏளனப் பேச்சுக்களைப் பொருட்படுத்தாமலே அடிமட்டத்து மக்களைக் கிறிஸ்துவச் சமயநெறிக்கு வயப்படுத்தும் பணிக்காகத் தொடர்ந்து ஆண்டுதோறும் அவர் ஆயிரக்கணக்கிலும் பத்தாயிரக்கணக்கிலும் செலவிட்டு வந்தார். சமயப் பணிக்காகத் தமது சொந்த நாட்டில் இருந்த ஏற்பாடுகளுடன் திருப்தியடையாமல் தொழில் முறையாக சமயப் பணிக்கு ஏற்பாடு செய்வதில் உலகிலுள்ள மிகப் பெரிய ஒழுங்கமைப்பாளராகிய ''சோதரர் ஜானாத்தனுக்கு''[32] வேண்டுகோள் விடுத்து அமெரிக்காவிலிருந்து சமயப் புத்தெழுச்சியையும்[33] மூடியையும் சாங்கியையும் இன்ன பிறரையும் இறக்குமதி செய்து கொண்டார்; முடிவில் ''இரட்சணியச் சேனையின்'' அபாயகரமான உதவியையும் ஏற்றுக் கொண்டார். இந்த ''இரட்சணியச் சேனை'' ஆதிகாலக் கிறிஸ்துவத்தின் பிரசாரத்துக்குப் புத்துயிர் அளித்து ஏழைகளே தேவனுக்கு உரியோராவர் என்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது; சமய வழியில் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுகிறது; இவ்விதம் அது ஆதிகாலக் கிறிஸ்துவ வர்க்கப் பகைமையின் ஓர் அம்சத்தை வளர்த்திடுகிறது; இன்று விரும்பி இதற்குப் பணம் வழங்கும் செல்வந்தர்களுக்கு இவ்வம்சம் ஒரு நாள் வினையாய் முடிவுறலாம்.

மத்திய காலத்தில் நிலப்பிரபுத்துவக் கோமான்கள் அரசியல் அதிகாரத்தை முற்றிலும் தமக்கே உரியதாக வைத்திருந்த அந்த முழு அளவில் முதலாளித்துவ வர்க்கத்தால் எந்த ஐரோப்பிய நாட்டிலும் அதைக் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை, எப்படியும் அதிக காலத்துக்குக் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை; வரலாற்று வளர்ச்சியின் ஒரு விதியாகவே தோன்றுகிறது இது. நிலப்பிரபுத்துவம் அறவே ஒழிக்கப்பட்ட பிரான்சிலுங்கூட முதலாளித்துவ வர்க்கம் ஒட்டுமொத்தமாக மிகக் குறுகிய காலங்களுக்குத்தான் அரசாங்கத்தை முழு அளவுக்குக் கைப்பற்றி வைத்திருந்தது. லுயீ ஃபிலீப்பின் ஆட்சியில், 1830—1848ல் முதலாளித்துவ வர்க்கத்தில் மிகச் சிறிதான ஒரு பகுதிதான் அரசை ஆட்சி புரிந்தது; மிகப் பெரிய பகுதி உயர்ந்த தகுதி வரம்பால் வாக்குரிமையிலிருந்து விலக்கப்பட்டிருந்தது. இரண்டாவது குடியரசில், 1848—1851ல் முதலாளித்துவ வர்க்கம் அனைத்

தும் ஆட்சி நடத்திற்று, ஆனால் இது மூன்று ஆண்டுகளுக்கே நீடித்தது; அதன் பலவீனத்தால் இரண்டாவது பேரரசு வந்து சேர்ந்தது. இப்பொழுதுதான், மூன்றாவது குடியரசில், ஒட்டு மொத்தமாக முதலாளித்துவ வர்க்கம் இருபது ஆண்டு களுக்கு மேலாக ஆட்சி பீடத்தைத் தன் பிடியில் வைத்துக் கொண்டிருக்கிறது; அதற்குள் அது நசிவுக்குரிய துடிப்பான அறிகுறிகளை வெளிப்படுத்தி வருகிறது. நிலப்பிரபுத்து வத்தை அறியாமலே ஆதியிலிருந்தே சமுதாயம் முதலாளித் துவஅடித்தளத்திலிருந்து ஆரம்பமாகிய அமெரிக்கா போன்ற நாடுகளில் மட்டுமே முதலாளித்துவ வர்க்கத்தின் நிலை யான நீடித்த ஆட்சி சாத்தியமாக இருந்துள்ளது. அப்படி யும் பிரான்சிலும் அமெரிக்காவிலுங்கூட முதலாளித்துவ வர்க்கத்தாரின் வாரிசுகளாகிய தொழிலாளி மக்கள் ஏற் கெனவே கதவைத் தட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

இங்கிலாந்தில் முதலாளித்துவ வர்க்கத்தார் யாருடனும் பகிர்ந்துகொள்ளாத தனியதிக்க நிலையை என்றுமே வகித்த தில்லை. 1832ஆம் ஆண்டு வெற்றியுங்கூட அனேகமாக முழு அளவில் அரசாங்கத்தில் தலைமையான எல்லாப் பதவிகளை யும் நிலமுடைத்த பிரபுக்குலத்தோரிடமே விட்டு வைத் தது. செல்வந்தர்களாகிய நடுத்தர வர்க்கத்தார் பணிவுடன் ஏன் இதற்குக் கீழ்ப்படிந்தனர் என்பது எனக்கு விளங்காத ஒன்றாகவே இருந்தது; பெரிய மிதவாதத் தொழிலதிபரான வி. எ. ஃபோர்ஸ்டர் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் மூலம் முடிவில் எனக்கு இதன் விளக்கம் தெரிய வந்தது. பிரெஞ்சு மொழி கற்றுக் கொள்ளும்படி இச்சொற்பொழி வில் இவர் பிராட்ஃபோர்ட் நகரின் இளைஞர்களுக்கு அறி வுறுத்தினார்; உலகில் முன்னேறுவதற்கு இது ஒரு வழியாகும் என்றார்; தமது சொந்த அனுபவத்திலிருந்து ஓர் எடுத்துக் காட்டை அளித்து, ஆங்கில மொழியைப் போல் குறைந்தது அதே அளவுக்காவது பிரெஞ்சு மொழியும் அவசியமாயிருந்த மேல்மட்டச் சமூகத்தில் முன்பு அமைச்சரவை உறுப்பின ராகத் தாம் பழக வேண்டியிருந்த போது எப்படித் தாம் அசடாகத் தோற்றமளிக்க நேர்ந்ததென்று கூறினார்! உண்மை என்னவெனில், அந்தக் காலத்தில் ஆங்கில நடுத்தர வர்க்கத்

தார் பெரும்பாலும் கல்விஞானமில்லாப் புதுப் பணக்காரர்களாகவே இருந்தனர்; கிணற்றுத் தவளை வாழ்க்கைக்கு உரிய வெறும் குறுகிய மனப்பாங்கும் இறுமாப்பும் தாளித்துப் போடுவது போல இவற்றுடன் சேர்க்கப்படும் தொழில் சாமர்த்தியமும்* அல்லாத பிற தகுதிகள் தேவைப்படும்

* தொழில் விவகாரங்களிலுங்கூட தேசியவெறி மனப்பான்மை கொண்ட இறுமாப்பு ஏமாற்றம் தரும் ஆலோசகனே ஆகும். சராசரியான ஆங்கில ஆலை முதலாளி அண்மைக் காலம் வரையில் ஆங்கிலேயர் ஒருவர் ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழி பேசுவதும் மதிப்புக் குறைவு என்று கருதி வந்தார்; ''பாவப் பிறவிகளான'' அன்னியர்கள் இங்கிலாந்தில் குடியேறி தமது உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளில் விற்பனை செய்யும் தொல்லை பிடித்த வேலையிலிருந்து தம்மை விடுத்தது குறித்து ஓரளவு பெருமையே பட்டுக் கொண்டார். பெரும்பாலும் ஜெர்மானியர்களான இந்த அன்னியர்கள் ஏற்றுமதியும் இறக்குமதியுமான பிரிட்டிஷ் அயல்துறை வாணிபத்தில் ஒரு மிகப்பெரும் பங்கை இவ்விதம் தமது பிடிக்குள் கொண்டு வந்ததையும் ஆங்கிலேயரின் நேரடியான அயல்துறை வாணிபம் அனேகமாக முழு அளவுக்கு காலனிகள், சீனா, அமெரிக்க ஐக்கிய நாடு, தென் அமெரிக்கா ஆகிய வரம்புக்குள் அடங்கி விட்டதையும் இந்த ஆங்கில ஆலை முதலாளி கவனிக்கவில்லை. அதே போல, இந்த ஜெர்மானியர்கள் வெளிநாடுகளில் பிற ஜெர்மானியர்களுடன்தான் வாணிபம் புரிந்தனர் என்பதையும் படிப்படியாக இவர்கள் உலகெங்கும் வாணிபக் காலனிகளைக் கொண்ட முழுமையான வலைப்பின்னல் அமைப்பை நிறுவிக் கொண்டு விட்டனர் என்பதையும் இவர் கவனிக்காமலே இருந்து வந்தார். ஆனால் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மனி ஏற்றுமதிக்காகத் தொழில்துறைப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் முனைப்போடு இறங்கிய போது, இந்த வலைப்பின்னல் அமைப்பு அதற்குச் சிறந்த முறையில் சேவை புரிந்தது; தானியம் ஏற்றுமதி செய்த நாடாக இருந்த அது மிகக் குறுகிய காலத்துக்குள் முதல்தரத் தொழில்துறை நாடாக மாற்றம் அடைய உதவிற்று. பிறகு, சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டிஷ் ஆலை முதலாளி பீதியுற்று, தனது வாடிக்கைக்காரர்களை ஏன் தன்னால் இப்பொழுது சிதறி நழுவாது இணைத்து வைத்துக் கொள்ள முடியவில்லை என்று வெளிநாடுகளிலிருந்த தனது தூதர்களையும் கான்சல்களையும் வினாவினார். ஏகோபித்த முறையில் அவ

உயர்நிலை அரசாங்கப் பதவிகளை அவர்கள் வேறு வழி யின்றி பிரபுக்குலத்தோரிடமே விட்டுவிட வேண்டியிருந்தது. நடுத்தர வர்க்கத்தாருக்குரிய கல்வி குறித்து இன்றுங்கூட முடிவின்றி பத்திரிகைகளில் நடைபெறும் வாக்குவாதங்கள், இன்னமும் ஆங்கில நடுத்தர வர்க்கம் சிறந்த கல்வி பெறு வதற்குரிய சிறப்பு தனக்கு இல்லையெனக் கருதி சற்று எளிய தரமுள்ளதையே நாடுகிறது என்பதைத்தான் புலப்படுத்து கின்றன. தானியச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்ட பிறகுங் கூட அன்றைய வெற்றியாளர்களான காப்டேன்களும் பிரைட்டுகளும் ஃபோர்ஸ்டர்களும் பிறரும் நாட்டின் அர சாங்க அதிகாரத்தில் பங்கு கொள்ள முடியாதபடி ஒதுக்கப் பட்டது இவ்விதம் முற்றிலும் இயற்கையானதாகவே கருதப் பட்டு வந்தது. இருபது ஆண்டுகளுக்குப் பிற்பாடு ஒரு புதிய சீர்திருத்தச் சட்டம்[34] நிறைவேறிய பிறகே, அமைச்சரவை யின் கதவு இவர்களுக்குத் திறக்கப்பட்டது. ஆங்கில முத லாளித்துவ வர்க்கத்தார் இது நாள் வரையில் தமது சமூகக் கீழ்நிலை மனப்பான்மையால் மிகவும் கடுமையாகப் பீடிக் கப்பட்டிருப்பதால் இவர்கள், தேசத்தின் மதிப்பான பிரதி நிதிகளாய்க் கொலு வீற்றிருக்கும் பொருட்டு, தமது செல விலும் தேசத்தின் செலவிலும் அலங்கார வகுப்பாக ஒரு சோம்பேறித் திருக்கூட்டத்துக்குத் தீனி போட்டு வைத் திருக்கிறார்கள்; உயர் மதிப்புக்கும் தனிச்சலுகைக்குமுரிய இந்தத் திருக்கூட்டம் தம்மாலேயேதான் தயாரித்து வைக் கப்பட்டுள்ளது என்றாலுங்கூட, தம்மில் ஒருவர் இவனுள் சேர்ந்து கொள்ளத்தக்க தகுதியுடையவராக ஆக்கப்படும்

---

ருக்குக் கிடைத்த பதில் வருமாறு: 1) உமது வாடிக்கைக்கார ருடைய மொழியை நீர் கற்றுக் கொள்வதில்லை, அதற்குப் பதில் உம்முடைய மொழியில் அவர் பேச வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்; 2) உமது வாடிக்கைக்காரருடைய பாணி களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் விருப்புவெறுப்புகளுக்கும் பொருத்தமானவராவதற்கு நீர் முயலுவதுகூட இல்லை, அதற்குப் பதில் அவர் உமது ஆங்கிலப் பாணிகளுக்கும் பிற வற்றுக்கும் பொருத்தமானவராக வேண்டுமென எதிர்பார்க் கிறீர். **(பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

போதெல்லாம் தாம் பெரிதும் சிறப்பிக்கப்பட்டு விட்டதாகக் கருதுகிறார்கள்.

ஆகவே தொழில், வாணிபத் துறை நடுத்தர வர்க்கம் நிலமுடைத்த பிரபுக்குலத்தை அரசியல் அதிகாரத்திலிருந்து அறவே அப்புறப்படுத்தி விரட்டுவதில் இன்னமும் வெற்றி பெறாத இந்த நிலையில் மற்றொரு போட்டியாளனாகிய தொழிலாளி வர்க்கம் களத்திலே தோன்றி விட்டது. சார்ட்டிஸ்டு இயக்கத்துக்கும் கண்டத்தில் நடைபெற்ற புரட்சிகளுக்கும் பிற்பாடு எழுந்த பிற்போக்கும் மற்றும் ஆங்கில வாணிபம் 1848க்கும் 1866க்கும் இடையில் கண்ட தன்னிகரில்லா விஸ்தரிப்பும் (கொச்சையான முறையில் இது தடையில்லா வாணிபத்தால் மட்டும் விளைந்த ஒன்றாய்க் கூறப்படுகிறது, ஆனால் மிக அதிக அளவுக்கு இது ரயில் பாதைகள், மாகடற்கப்பல்கள் மற்றும் பொதுவாகப் போக்குவரத்துச் சாதனங்களின் பிரம்மாண்ட வளர்ச்சியால் விளைந்தது) தொழிலாளி வர்க்கத்தை மீண்டும் மிதவாதக் கட்சியைச் சார்ந்திருக்கும் ஒரு நிலைக்குத் தள்ளி விட்டன. சார்ட்டிஸ்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தது போல மீண்டும் தொழிலாளி வர்க்கம் இக்கட்சியின் தீவிரவாதப் பிரிவாக அமைந்தது. ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் வாக்குரிமைக் கோரிக்கைகள் தடுத்து நிறுத்த முடியாதபடி படிப்படியாக வலிமையுற்றன. மிதவாதிகளது விக் தலைவர்கள் ''கோழைகளாகப் பயந்தோடிய'' போது, டிஸ்ரேலி சாதகமான தருணத்தை டோரிகள்[35] பற்றிக் கொண்டுவிடும்படிச் செய்து தமது மேல் நிலையை நிரூபித்துக் காட்டினார். நகரத் தொகுதிகளில் வீட்டுக் குடியிருப்பாளர் வாக்குரிமையைக் கொண்டுவந்து அதனுடன்கூட தொகுதிகளையும் அவர் மாற்றி வினியோகம் செய்தார். பிறகு இரகசிய வாக்கெடுப்பு முறை கொண்டுவரப்பட்டது.[36] பிறகு 1884ல் வீட்டுக் குடியிருப்பாளருக்கான வாக்குரிமை கிராமத் தொகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது; இதோடு புதிதாக மீண்டும் தொகுதிகள் மாற்றி வினியோகிக்கப்பட்டன, இதன் மூலம் தேர்தல் தொகுதிகள் ஓரளவுக்கு சமனப்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கைகள் யாவும் தொழிலாளி வர்க்கத்தின்

தேர்தல் வலிமையைக் கணிசமாக அதிகரிக்கச் செய்தன; இவற்றின் விளைவாகக் குறைந்தபட்சம் 150லிருந்து 200 வரையிலான தொகுதிகளில் இப்பொழுது வாக்காளர்களில் பெரும்பான்மையோர் தொழிலாளி வர்க்கத்தவராக இருக்கின்றனர். ஆனால் நாடாளுமன்ற ஆட்சி முறை, மரபை மதித்து நடக்கும்படிப் போதிப்பதற்குத் தலைசிறந்த பயிற்சிப் பள்ளியாகும்! ஜான் மானர்ஸ் பிரபு வேடிக்கையாக ''நமது பழம் பெரும் கோமான்கள்'' என்று குறிப்பிட்டோரை நடுத்தர வர்க்கம் பயபக்தியோடு உற்று நோக்கி அவர்களுக்குத் தலைவணங்கி எழுகிறது; பெருந்திரளான தொழிலாளி மக்கள் முன்பு ''அவர்களது மேலோர்'' என்பதாக வழக்கமாகக் குறிக்கப்பட்ட நடுத்தர வர்க்கத்தவருக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்தினர். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் தொழிலாளி மெய்யாகவே முன் மாதிரியான தொழிலாளியாகக் கருதப்பட்டார்; தனது எஜமானரின் அந்தஸ்துக்கு அவர் காட்டிய பணிவன்பும் தனக்கு உரிமைகள் கோருவதில் அவருக்கிருந்த தன்னடக்கமும் கத்தேடெர்-சோஷலிஸ்டுகள்[37] மரபைச் சேர்ந்த எங்களது ஜெர்மன் பொருளியலாளர்களுக்கு, தமது தாயகத்தைச் சேர்ந்த தமது தொழிலாளர்களின் தீராத கம்யூனிஸ்டு வயப்பட்ட புரட்சிப் போக்குகளைக் கண்டு மனக் கசப்புற்ற இவர்களுக்கு மனச்சாந்தி அளித்தன.

ஆனால் ஆங்கில நடுத்தர வர்க்கத்தினர்—தொழிலில் தேர்ந்தவர்களான இவர்கள்—ஜெர்மன் பேராசிரியர்களைக் காட்டிலும் நெடுந்தொலைவுக்குப் பார்வையைச் செலுத்தினர். தொழிலாளி வர்க்கத்துடன் அவர்கள் வேண்டாவிருப்போடுதான் தமது அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டனர். சார்ட்டிஸ்டு இயக்கம் நடைபெற்ற ஆண்டுகளின் போது, உடல் வலிவும் மூர்க்க குணமும் வாய்ந்தவர்களான அந்த மக்கள் என்னவெல்லாம் செய்ய வல்லவர்கள் என்பதை இவர்கள் தெரிந்து கொண்டு விட்டனர். அக்காலத்திலிருந்து ஏற்பட்ட நிர்ப்பந்தத்தின் விளைவாக, வேறு வழியின்றி இவர்கள் மக்கள் உரிமைச் சாசனத்தின் பெரும் பகுதியை பிரிட்டிஷ் ஐக்கிய முடியரசின் சட்டங்களில் சேர்த்துக் கொள்ள

வேண்டியதாயிற்று. இனி எந்நாளும் மக்களை ஒழுங்கு முறைக்குக் கீழ்ப்படியச் செய்ய முடியுமாயின், அது தார்மிக வழிகளால் மட்டுமே சாத்தியம். வெகுஜனங்கள் மீது செயல் படக் கூடிய எல்லாத் தார்மிக வழிகளிலும் முதலாவதும் முக்கியமானதும் இன்றும் என்றும் சமயம்தான். எனவேதான் பள்ளி நிர்வாகக் குழுக்களில் பாதிரிமார்களுக்குப் பெரும் பான்மை அந்தஸ்து; எனவேதான் சமயச் சடங்குமுறை[38] முதல் ''இரட்சணியச் சேனை'' வரையிலான எல்லா வகைப் பட்ட சமயப் புத்தெழுச்சி முயற்சிகளுக்கும் ஆதரவளிப் பதற்காக முதலாளி வர்க்கம் தனக்குத் தானே விதித்துக் கொள்ளும் மேலும் மேலும் கூடுதலான வரிகள்.

இப்பொழுது முடிவில் பிரிட்டிஷ் கண்யவான் மனப் பான்மை ஐரோப்பாக் கண்டத்து முதலாளிகளது கட்டற்ற சிந்தனை மீதும் சமயத் துறையிலான அலட்சியத்தின் மீதும் வெற்றி கொண்டது. பிரான்சிலும் ஜெர்மனியிலும் தொழி லாளர்கள் கலக மனப்பாங்கு கொண்டு விட்டனர். சோஷ லிசத்தால் முழுக்க முழுக்கப் பீடிக்கப்பட்டு விட்டனர். தாம் மேல்நிலை பெறுவதற்காகக் கையாளும் வழிமுறைகள் சட்டத்துக்கு உட்பட்டவைதானா என்பது குறித்து அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை என்றால் இதற்குத் தக்க கார ணங்கள் இருக்கவே செய்கின்றன. இந்த உடல் வலிவுடை யவர் இங்கே நாளுக்கு நாள் மேலும் மேலும் மூர்க்க குண முடையவராகி விட்டார். ஆடம்பரமாகச் சுருட்டைப் புகைத்துக் கொண்டு கப்பலுக்கு வரும் இளைஞன் குமட்டல் வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்ததும் யாருக்கும் தெரி யாமல் சுருட்டை விட்டெறிவது போல, பிரெஞ்சு, ஜெர்மன் முதலாளி வர்க்கத்தார் வேறு வழி ஏதுமின்றி கடைசித் தந் திரமாகத் தமது கட்டற்ற சிந்தனையைச் சந்தடியின்றி விட்டொழிக்க வேண்டியதாயிற்று. இதுகாறும் ஏளனம் செய்து வந்தோர் இப்பொழுது தமது வெளிப்புற நடத்தை யில் சமயப் பற்றுடையோராக மாறினர்; சமயச் சபையை யும் அதன் ஐதீகங்களையும் சடங்குகளையும் குறித்து பய பக்தியுடன் பேசினர்; தவிர்க்க முடியாத போது இவற்றைத் தவறாமல் கடைப்பிடிக்கவுங்கூடச் செய்தனர். பிரெஞ்சு

முதலாளிகள் வெள்ளிக்கிழமைகளில் maigre* அருந்தினர்; ஜெர்மன் முதலாளிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் நீண்ட புரோட்டஸ்டென்டு பிரார்த்தனை உரைகளை இறுதி வரை கேட்டுக் கொண்டு கோயிலில் தமது இருக்கைகளில் அமர்ந் திருந்தனர். பொருள்முதல்வாதத்தை நம்பி இவர்கள் பேரா பத்திலே சிக்கித் தவிக்க நேர்ந்து விட்டது. “Die Religion muss dem Volk erhalten werden”— சமயம் மக்களுக்காக உயிர்த் துடிப்போடு இருக்கும்படிப் பேணிக்காக்கப்பட வேண் டும்—சமுதாயம் அறவே அழிந்துவிடாதபடி பாதுகாப்ப தற்கு அது ஒன்றுதான் இறுதியாக எஞ்சியுள்ள வழி. ஆனால் இவர்களுடைய துரதிர்ஷ்டம், நிரந்தரமாக சமயத்தை வீழ்த்துவதற்காகத் தம்மால் இயன்றது அனைத்தையும் செய்த பிறகே இவர்கள் இதைக் கண்டு கொண்டனர். இது காறும் ஏளனம் செய்து வந்தோரைப் பார்த்து இப்பொழுது பிரிட்டிஷ் முதலாளி ஏளனம் செய்தார்: ‘‘அட முட்டாள் களே! இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே உங்களுக்கு இதை நான் கூறியிருப்பேனே!’’

எனினும் பிரிட்டிஷ் முதலாளியின் அசங்காத சமயத் துறை மடமையும் சரி, கண்டத்து முதலாளியின் காலங்கடந்த இந்த மாற்றமும் சரி, பொங்கியெழும் பாட்டாளி வர்க்கக் கொந்தளிப்பை அடங்கச் செய்யுமெனத் தோன்றவில்லை என்று நான் கருதுகிறேன். மரபு பெரிய தடைச் சக்தி, வர லாற்றின் சடத்துவச் சக்தியாகும் என்றாலும், இது சுயச் செயல் திறனின்றி எதிர்ப்பு மட்டுமே காட்டக் கூடியது, நிச்சயமாய்த் தகர்க்கப்படவே போகிறது. ஆகவே முத லாளித்துவ சமுதாயத்துக்குச் சமயம் நீடித்து நிலைத்து நிற்கும் காப்பு அரணாகிவிட முடியாது. நமது சட்டத்துறை, தத்துவ, சமயத்துறைக் கருத்துக்கள் எல்லாம் அந்தந்த சமுதாயத்தில் நிலவும் பொருளாதார உறவுகளின் அதிக மாகவோ குறைவாகவோ தொலைதூரக் கிளை விளைவு களே என்றால், இந்த உறவுகள் அடியோடு மாறுவதால் உண்டாகும் பலாபலன்களை இக்கருத்துக்கள், இறுதியாகப்

* —இறைச்சியில்லா உண்டி.—ப-ர்.

பார்க்குமிடத்து, எதிர்த்து நிற்க முடியப் போவதில்லை. ஆகவே இயல் கடந்த தெய்விக வெளிப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தாலொழிய, ஆடிக் கொண்டிருக்கின்ற ஒரு சமுதாயத்தை சமய சித்தாந்தங்கள் எவையும் முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்தி வைத்துவிட முடியாதென்பதை நாம் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும்.

உண்மை என்னவெனில், இங்கிலாந்திலுங்கூட தொழிலாளி மக்கள் மீண்டும் எழுந்து இயங்கத் தொடங்கி விட்டனர். பல்வேறு வகைப்பட்ட மரபுகளாலும் அவர்கள் கட்டுண்டிருப்பது மெய்தான். கன்சர்வேட்டிவ்கள், மிதவாதிகள் ஆகிய இந்த இரு கட்சிகளைத் தவிர்த்து வேறு எதுவும் இருக்க முடியாது, தொழிலாளி வர்க்கம் பெரிய மிதவாதக் கட்சியைக் கொண்டும் அதன் மூலமாகவும்தான் தனது விமோசனத்துக்கு வழி செய்து கொள்ள வேண்டும் என்பதாகப் பரவலாக நிலவும் நம்பிக்கையை ஒத்த முதலாளித்துவ மரபுகள் இருந்து வருகின்றன. சுயேச்சையான செயற்பாட்டை நோக்கித் தொழிலாளர்கள் ஆதியில் எடுத்த பூர்வாங்க முயற்சிகளிலிருந்து பாரம்பரிய முறையில் வந்த தொழிலாளர் மரபுகளும்—முறையான பயிற்சிக் கட்டத்தைக் கடந்து வராமல் உறுப்பினர்களாகச் சேர முன்வருபவரை எத்தனையோ பல பழம் தொழிற் சங்கங்கள் சேர்க்காமல் ஒதுக்கி வைத்து, இவ்வழியில் இந்தத் தொழிற் சங்கம் ஒவ்வொன்றும் தானே சொந்தத்தில் தனது கருங்காலிகளை உற்பத்தி செய்து கொள்வதாக அமைந்துவிடும் இம்மரபையொத்த பலவும்—இருந்து வருகின்றன. ஆனால் இவை யாவும் இருந்த போதிலும், பேராசிரியர் பிரென்டானோ தமது சோதரக் கத்தேடெர்-சோஷலிஸ்டுகளுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருந்தது போல, ஆங்கிலத் தொழிலாளி வர்க்கம் நகர்ந்து முன் சென்று கொண்டுதான் இருக்கிறது. இங்கிலாந்தில் நடைபெறும் யாவற்றையும் போல், இது அளந்து அடிமேல் அடி வைத்து மந்த கதியில்தான், இங்கே தயக்கத்தோடும் அங்கே பெருமளவுக்குப் பயனற்றவையான, சோதனை முறையிலான முயற்சிகளோடும் நகர்ந்து செல்கிறது. இடை

யிடையே அளவு மீறிய முன்னெச்சரிக்கை மனப்பான்மை காரணமாக ''சோஷலிசம்'' என்னும் பெயரில் ஐயுறவு கொண்டு அதேபோதில் சோஷலிசத்தின் உள்ளடக்கப் பொருளைப் படிப்படியாக கிரகித்துக் கொண்டு நகர்ந்து செல்கிறது. இந்த இயக்கம் பிறவித் தொழிலாளர்களில் ஒவ்வொரு பகுதியினராகப் பற்றிக் கொண்டு செல்கிறது. இப்பொழுது இது லண்டனின் ஈஸ்ட் என்ட்[39] பகுதியைச் சேர்ந்த தேர்ச்சியற்ற தொழிலாளர்களைத் தட்டிக் குலுக்கித் துயிலெழச் செய்திருக்கிறது; இந்தப் புதிய தொழிலாளர் படை சக்திகள் நன்றிக் கடன் செலுத்தும் முறையில் எவ்வளவு மகத்தான உந்து விசையை இவ்வியக்கத்துக்கு அளித்திருக்கின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இயக்கத்தின் வேகம் சில பேரின் பொறுமையில்லாத் துடிப்புக்கு ஏற்றவாறு போதிய அளவில் இல்லை என்றால், ஆங்கில குணச் சித்திரத்தின் மிகச் சிறந்த இயல்புகளை உயிர்ப்புடன் நிலைத்திருக்கச் செய்வது தொழிலாளி வர்க்கமேதான் என்பதையும் இங்கிலாந்தில் ஒரு தரம் ஓரடி முன்னோக்கி எடுத்து வைக்கப்படுமாயின் அதன் பின் பொதுவாக அது ஒருபோதும் இழக்கப்படுவதே இல்லை என்பதையும் இவர்கள் மறக்கலாகாது. பழைய சார்ட்டிஸ்டுகளின் புதல்வர்கள் மேற்கூறிய காரணங்களால் சிறப்பு நிலையை எட்டிப் பிடிக்கவில்லை என்றால், பேரப்பிள்ளைகள் தமது மூதாதையருக்கு முழுதொத்தச் சிறப்புடையோராகத் திகழலாம் என்பது தெரிகிறது.

ஆனால் ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி இங்கிலாந்தை மட்டுமே பொருத்த ஒன்றல்ல. குறைந்தது இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளுடைய ஒத்துழைப்பால்தான் இந்த வெற்றியைப் பெற முடியும்.[40] பின் குறிப்பிட்ட இரண்டு நாடுகளிலும் தொழிலாளி வர்க்க இயக்கம் இங்கிலாந்தில் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக முன்னேறிய நிலையில் இருக்கிறது. ஜெர்மனியில் அது வெற்றியிடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். அங்கு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம்

*தன்னிகரற்றதாகும். மேலும் மேலும் கூடுதலான வேகத்தில் அது முன்னேறிச் செல்கிறது. ஜெர்மன் நடுத்தர வர்க்கம் அரசியல் ஆற்றலிலும் கட்டுப்பாட்டிலும் வீரத்திலும் வலுவிலும் விடாமுயற்சியிலும் வருந்தத்தக்கத் தனது குறைபாட்டைத் தெளிவாகக் காட்டியதெனில், ஜெர்மன் தொழிலாளி வர்க்கம் இந்த எல்லாப் பண்புகளும் தன்னிடம் நிறைய உண்டு என்பதைப் போதிய அளவுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. நானூறு ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மனி ஐரோப்பிய நடுத்தர வர்க்கத்தின் முதலாவது எழுச்சியின் துவக்கக் களமாய் இருந்தது; தற்போதுள்ள நிலைமைகளில் ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் முதலாவது வெற்றியின் களமாகவும் ஜெர்மனி அமையலாம் என்பது சாத்தியப்பாட்டின் வரம்புகளுக்கு அப்பாற்பட்டதா, என்ன?*

**பி. எங்கெல்ஸ்**

*ஏப்ரல் 20, 1892*

F. Engels, *Socialism: Utopian and Scientific*, London, *1892*
*என்ற புத்தகத்திலும்*
*சுருங்கிய வடிவத்தில்*
*அங்கீகாரம் பெற்ற*
*ஜெர்மன் மொழிபெயர்ப்பில்*
*Die Neue Zeit*, Bd. 1,
*எண்கள் 1 மற்றும் 2, 1892—1893*
*என்ற சஞ்சிகையிலும்*
*வெளியிடப்பட்டது*

*புத்தகத்தின் வாசகப்படி, சஞ்சிகை வாசகத்துடன் சரிபார்த்து அச்சிடப் பட்டது*

*மூலம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டது*

# கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்

## I

தன் சாரப்பொருளில் நவீன சோஷலிசம் ஒரு புறத்தில் இன்றைய சமுதாயத்தில் உடைமையாளர்களுக்கும் உடைமையற்றவர்களுக்கும், முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் இடையே நிலவும் வர்க்கப் பகைமைகளையும், மறு புறத்தில் பொருளுற்பத்தியில் நிலவும் அராஜகத்தையும் கண்டறிவதன் நேரடியான விளைவாகும். ஆனால் தன் தத்துவார்த்த வடிவில் நவீன சோஷலிசம், பதினெட்டாம் நூற்றாண்டின் மாபெரும் பிரெஞ்சுத் தத்துவவியலாளர்கள் வகுத்தளித்த கோட்பாடுகளை மேலும் தர்க்கவாதப் பொருத்தமுடையதாய்ச் செய்யும் ஒரு விரிவாக்கமாக ஆதியில் வெளித்தோற்றத்துக்குத் தெரிகிறது. எவ்வளவுதான் அதன் வேர்கள் பொருளாயதப் பொருளாதார உண்மைகளில் ஆழப்பதிந்திருந்த போதிலும், எந்தவொரு புதிய தத்துவத்தையும் போலவே நவீன சோஷலிசமும் தயாராகத் தனக்குக் கிடைத்த அறிவுத்துறை விவரங்களுடன் முதலில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

வரவிருந்த புரட்சிக்காக பிரெஞ்சு நாட்டில் மனிதர்களுடைய மனத்தைத் தயார் செய்த அந்த மாமேதைகள் தாமே தீவிரப் புரட்சிவாதிகளாக இருந்தவர்கள். புறத்தே அமைந்த உயர் அந்தஸ்து அல்லது மதிப்புக்குரிய எவ்வகையான அதிகாரத்தையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. சமயம், இயற்கை, சமுதாயம், அரசியல் நிறுவனங்கள்—யாவுமே சிறிதும் தயவு தாட்சண்யமின்றி விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டன; யாவும் தாம் இருப்பதற்குரிய நியாயத்தை அறிவின் தீர்ப்பு மேடையின் முன்னால் நிரூபித்தாக வேண்டும், இல்லையேல் இல்லாதொழிந்தாக வேண்டும்

என்றாகியது. யாவற்றுக்கும் அறிவு ஒன்றே அளவுகோல் ஆயிற்று. ஹெகல் கூறுவது போல, உலகம் தலையின் மீது நின்ற காலம் அது*; முதலாவதாக, மனிதனது தலையும் அதன் சிந்தனையால் வந்தடையப் பெற்ற கோட்பாடுகளும் எல்லா மனிதச் செயலுக்கும் உறவுகளுக்கும் தாம்தான் அடிப்படையென உரிமை கொண்டாடின என்னும் அர்த்தத்திலும், நாளடைவில் இதோடன்றி இந்தக் கோட்பாடுகளுக்கு முரணாயிருந்த எதார்த்தம் மெய்யாகவே தலைகீழாக மாற்றப்பட வேண்டியதாயிற்று என்னும் விரிவான அர்த்தத்திலும் உலகமானது தலையின் மீது நின்றது. அன்று

* பிரெஞ்சுப் புரட்சி பற்றிய அந்த வாசகம் வருமாறு: "உரிமை எனும் சிந்தனை, உரிமை எனும் கருத்து திடுமென எதிரில் தோன்றியது; உரிமையின்மை எனும் பழைய கட்டமைப்பால் இதை எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆகவே உரிமை எனும் இந்தக் கருத்தோட்டத்தின்படி இப்பொழுது ஓர் அரசியலமைப்புச்சட்டம் நிறுவப்பட்டிருக்கிறது; இனி யாவும் இதையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும். வானமண்டலத்தில் சூரியன் அமைந்து கிரகங்கள் அதைச் சுற்றி வரும் காலம் முதலாக மனிதன் தன் தலையின் மீது, அதாவது சிந்தனையின் மீது நின்று இதற்கு ஏற்ப எதார்த்தத்தைக் கட்டியமைக்கும் ஒரு காட்சியினை இதன் முன் கண்டதே இல்லை. Nûs, அதாவது அறிவே உலகை ஆளுகிறது என்று முதன்முதல் அனக்சகோரஸ் கூறினார்; ஆனால் இப்பொழுது முதன் முறையாக மனிதன் மனத்தின் எதார்த்தத்தைச் சிந்தனையே ஆள வேண்டும் என்பதைக் கண்டறிந்து ஏற்றுக் கொண்டு விட்டான். இது மகோன்னத அருணோதயமாகத் திகழ்ந்தது. சிந்தனை ஆற்றல் கொண்டோர் எல்லோருமே இந்தப் புனிதத் திருநாளைக் கொண்டாடுவதில் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். மாண்புமிக்கதோர் உணர்ச்சி அக்காலத்தில் மனிதர்களை ஆட்கொண்டது. தற்போது உலகுடன் தெய்விகக் கோட்பாட்டுக்கு இணக்கம் ஏற்பட்டுவிட்டாற் போன்று அறிவு ஆர்வம் உலகில் வியாபித்து நிலவிற்று" (ஹெகல், வரலாற்றின் தத்துவவியல், 1840, பக்கம் 535).—சீர்குலைவு உண்டாக்கும், பொது அபாயம் விளைவிக்கும் காலஞ்சென்ற பேராசிரியர் ஹெகலின் இத்தகைய போதனைகளுக்கு எதிராக சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டத்தை[41] உடனே செயல்படச் செய்வது அவசியம் இல்லையா? (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

இருந்த சமுதாய, அரசு வடிவமைப்பு ஒவ்வொன்றும், மாமூலான கருத்தமைப்பு ஒவ்வொன்றும் அறிவுக்கு ஒவ்வாததாகக் குப்பைக் குழியிலே எறியப்பட்டது. உலகம் இதுகாறும் முற்றிலும் தப்பெண்ணங்களாலேயே தான் வழி காட்டப்பட அனுமதித்து வந்து விட்டது. கடந்த காலத்தவை யாவும் பரிதாபத்துக்கும் இளக்காரத்துக்குமே தகுதியுடைத்தவை. இப்பொழுதுதான் முதன்முதலாக இருளகன்று பகலின் ஒளி, சிந்தனையின் ஆட்சி தோன்றியது. இனி மூட நம்பிக்கையும் அநீதியும் தனிச்சலுகையும் ஒடுக்குமுறையும் அகற்றப்பட்டு அவற்றினிடத்தில் சாசுவத உண்மையும் சாசுவத நீதியும் இயற்கையின் அடிப்படையிலான சமத்துவமும் இழக்கவோ துறக்கவோ முடியாத மனித உரிமைகளும் அமர்த்தப்பட்டாக வேண்டும்.

இன்று நாம் அறிவோம்: இந்தச் சிந்தனையின் ஆட்சி முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் கருத்துருவாக்கமே அன்றி வேறொன்றுமல்ல; இந்த சாசுவத நீதி முதலாளித்துவ நீதி மன்றமாக வந்து நிறைவேற்றம் கண்டது; இந்தச் சமத்துவம் சட்டத்தின் முன்பான முதலாளித்துவச் சமத்துவமாகக் குறுகிச் சிறுத்து விட்டது; முதலாளித்துவச் சொத்துடைமை அத்தியாவசிய மனித உரிமைகளில் ஒன்றாகப் பிரகடனம் செய்யப்படலாயிற்று; சிந்தனையின் ஆட்சிக்குரிய அரசாங்கம், ரூஸோவின் சமுதாய ஒப்பந்தம்,[42] முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசாகத்தான் உருவாக முடிந்தது, அது அப்படித்தான் உருவாக முடியும். பதினெட்டாம் நூற்றாண்டின் இம்மாபெரும் சிந்தனையாளர்களால்—அவர்களது முன்னோர்களால் எப்படி முடியவில்லையோ, அதே போல—அவர்களுடைய சகாப்தம் அவர்களுக்கு விதித்த வரம்புகளுக்கு அப்பால் செல்ல முடியவில்லை.

ஆனால் நிலப்பிரபுத்துவக் கோமான்களுக்கும் சமுதாயத்தின் ஏனைய எல்லாப் பகுதிகளையும் பிரதிநிதித்துவம் செய்ததாகக் கூறிக் கொண்ட நகரத்தாருக்கும் இடையிலான பகைமையுடன் கூடவே சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும், செல்வந்தர்களாகிய சோம்பேறிகளுக்கும் ஏழைகளாகிய உழைப்பாளர்களுக்கும் இடையே பொது

வான பகைமையும் நிலவி வந்தது. இப்படிப்பட்ட ஒரு நிலைமையால்தான் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகள் தம்மைத் தனியொரு வர்க்கத்துக்கு அல்லாது துயருறும் மனிதகுலம் அனைத்துக்குமே பிரதிநிதிகளாகக் கூறிக் கொண்டு முன்வர முடிந்தது. அது மட்டுமல்ல. தோன்றியது முதலாகவே முதலாளித்துவ வர்க்கம் அதன் எதிரிடையால் இழுத்தடிக்கப்படலாயிற்று: கூலித் தொழிலாளர்கள் இல்லாமல் முதலாளிகளால் இருக்க முடியாது; மத்திய கால கைவினைச் சங்க நகரத்தார் நவீன கால முதலாளிகளாக வளர்ச்சியுற்ற அதே அளவில் கைவினைச் சங்கத் துணை வினைஞர்களும் கைவினைச் சங்கங்களுக்குப் புறம்பான நாட்கூலியாட்களும் பாட்டாளி வர்க்கத்தினராக வளர்ச்சியுற்றனர். மொத்தத்தில், முதலாளித்துவ வர்க்கத்தினர் பிரபுத்துவக் கோமான்களுடனான தமது போராட்டத்தில் அக்காலத்தியப் பல்வேறு உழைப்பாளி வர்க்கங்களின் நலன்களையும் தாம் பிரதிநிதித்துவப்படுத்தியதாகக் கூறிக் கொள்ள முடிந்த போதிலும், நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சி பெற்ற முன்னோடியாக இருந்த வர்க்கத்தினது சுயேச்சையான கொந்தளிப்புகளும் ஒவ்வொரு பெரிய முதலாளித்துவ இயக்கத்தின் போதும் ஏற்படவே செய்தன. உதாரணமாக, ஜெர்மனியில் மதச்சீர்திருத்தத்தின் போதும் விவசாயிகளது போரின் போதும் அனாபாப்டிஸ்டுகளும்[43] தாமஸ் முன்சேரும்; மாபெரும் ஆங்கிலப் புரட்சியில் சமனவாதிகள்[44]; மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியில் பாபெஃப்.

இன்னும் வளர்ச்சி பெறாத ஒரு வர்க்கத்தின் இந்தப் புரட்சிகர எழுச்சிகளுக்கு இசைவான தத்துவார்த்த விளக்கங்களும் முன்வைக்கப்பட்டன: பதினாறாவது, பதினேழாவது நூற்றாண்டுகளில் இலட்சிய சமுதாய நிலைமைகள் பற்றிய கற்பனாவாதச் சித்திரங்கள்[45]; பதினெட்டாவது நூற்றாண்டில் மெய்யான கம்யூனிசத் தன்மை வாய்ந்த தத்துவங்கள் (மொரெல்லியும் மாப்லீயும்). சமத்துவத்துக்கான கோரிக்கை இனி அரசியல் உரிமைகளுக்கு மட்டுமானதாக வரம்பிடப்படவில்லை, தனியாட்களது சமுதாய நிலை

மைகளுக்கும் உரியதாக விரிவாக்கப்பட்டது; ஒழிக்கப்பட வேண்டியவை வர்க்கத் தனிச்சலுகைகள் மட்டுமல்ல, வர்க்கப் பாகுபாடுகளே ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று கோரப்பட்டது. துறவு மனப்பான்மை பூண்டு வாழ்வின் இன்பங்களை எல்லாம் நிராகரிப்பதும் ஸ்பார்ட்டானியக் கடுமையும் வாய்ந்ததுமாகிய ஒரு கம்யூனிசமே இந்தப் புதிய போதனையின் முதலாவது வடிவம். பிறகு மாபெரும் மூன்று கற்பனாவாதிகள் தோன்றினர்: பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் கூடவே நடுத்தர வர்க்க இயக்கத்தையும் இன்னமும் ஓரளவு முக்கியத்துவமுடையதாய்க் கொண்ட சான்-சிமோன், ஃபூரியே மற்றும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி மிகவும் வளர்ச்சியுற்றிருந்த ஒரு நாட்டில் இவ்வளர்ச்சியின் விளைவாகப் பிறந்த பகைமைகளால் உந்தப்பட்டு முறையாகவும் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதத்துடன் நேரடித் தொடர்பு கொண்டும் வர்க்கப் பாகுபாட்டின் நீக்கத்துக்கான தமது திட்டங்களை வகுத்திட்ட ஓவன்.

இம்மூவருக்கும் பொதுவானது ஒன்று உண்டு. இவர்களில் எவரும் இதற்குள் வரலாற்று வளர்ச்சியால் தோற்றுவிக்கப் பட்டுவிட்ட பாட்டாளி வர்க்கத்தின் நலன்களது பிரதிநிதியாய் முன்வரவில்லை. பிரெஞ்சுத் தத்துவவியலாளர்களைப்[46] போலவே இவர்களும் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தை முதலில் விடுவிக்கப் போவதாகச் சொல்லாமல் உடனடியாகவே மனிதகுலம் அனைத்தையுமே விடுவிக்கப் போவதாகக் கூறிக் கொள்கின்றனர். அவர்களைப் போலவே இவர்களும் அறிவின், நிரந்தர நீதியின் ஆட்சியை மலரச் செய்ய விரும்புகிறார்கள்; ஆனால் இவர்களுடைய கருத்துப்படி இந்த ஆட்சிக்கும் பிரெஞ்சுத் தத்துவவியலாளர்கள் கூறிய ஆட்சிக்குமிடையே விண்ணுக்கும் மண்ணுக்குமுள்ள வேறுபாடு உள்ளது.

நமது இம்மூன்று சமுதாயச் சீர்திருத்தவாதிகளுக்கும் இந்தத் தத்துவவியலாளர்களுடைய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த முதலாளித்துவ உலகம் நிலப்பிரபுத்துவத்தையும் சமுதாயத்தின் முந்தைய எல்லாக் கட்டங்களையும் போல் அதே அளவுக்கு அறிவுக்கு ஒவ்வாததாகவும்

அநீதியாகவும் இருக்கின்றது, ஆகவே அவற்றைப் போலவே சீக்கிரத்தில் குப்பைக் குழிக்குப் போய்ச் சேர வேண்டியதாகிறது. தூய அறிவும் நீதியும் இதுகாறும் உலகில் ஆட்சி புரியவில்லை என்றால், மனிதர்கள் அவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாததுதான் அதற்குரிய காரணம். மேதாவிலாசம் படைத்த தனிமனிதர் இல்லாமற்போய் விட்டார்; இப்படிப் பட்டவர் இப்பொழுது தோன்றியிருக்கிறார், உண்மையை இவர் புரிந்து கொள்கிறார். இவர் இப்பொழுது தோன்றி விட்டார், உண்மை இப்பொழுது தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள்ளப்படுகிறது என்பது வரலாற்று வளர்ச்சி எனும் தொடர் இணைப்பில் அவசியத்தின் காரணமாக நிகழ்ந்த தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சியல்ல; இனியதொரு சந்தர்ப்ப வச நிகழ்ச்சியே ஆகும். 500 ஆண்டுகள் முன்னதாகவுங்கூட இவர் பிறந்திருக்கலாம்; அப்பொழுது மனித குலத்துக்கு இந்த 500 ஆண்டுக் காலப் பிழையும் பூசலும் துன்பதுயரமும் இல்லாதபடி தவிர்க்கப்பட்டிருக்கும்.

புரட்சியின் முன்னோடிகளான பதினெட்டாம் நூற்றாண்டுப் பிரெஞ்சுத் தத்துவவியலாளர்கள் இருப்பவை அனைத்தும் குறித்துத் தீர்ப்பளிக்க வேண்டிய ஒரே நீதிபதியாக அறிவை அறைகூவி அழைத்ததைக் கண்டோம். அறிவுக்கு உகந்த அரசு, அறிவுக்கு உகந்த சமுதாயம் நிறுவப்பட வேண்டும்; என்றென்றைக்கும் நிரந்தரமான இந்த அறிவுக்கு முரணானது அனைத்தும் ஈவிரக்கமின்றி ஒழிக்கப்பட வேண்டும். உண்மையில் இந்த நிரந்தர அறிவு, அப்பொழுது தான் முதலாளியாகப் பரிணமித்துக் கொண்டிருந்த பதினெட்டாம் நூற்றாண்டுக் குடிமகனது உணர்வின் கருத்துருவாக்கமே அன்றி வேறல்ல என்பதையும் கண்டோம். இந்த அறிவுக்கு உகந்த சமுதாயத்தையும் அரசையும் பிரெஞ்சுப் புரட்சி சித்தி பெறச் செய்தது.

ஆனால் நிலவரங்களின் புதிய நடப்பு முந்தைய நிலைமைகளுடன் ஒப்புநோக்கில் அறிவுக்கு உகந்ததாக இருந்த போதிலும், எவ்வகையிலும் பூரணமாக அறிவுக்கு உகந்த தல்ல என்பது தெரிய வந்தது. அறிவின் அடிப்படையில் அமைந்த அரசு அறவே தகர்ந்து விழுந்து விட்டது. ரூஸோ

வின் சமுதாய ஒப்பந்தம் பயங்கர ஆட்சியாக[47] நிறைவேற்றம் கண்டது; தமது அரசியல் ஆற்றலில் நம்பிக்கை இழந்துவிட்ட முதலாளித்துவ வர்க்கம் இந்தப் பயங்கர ஆட்சியிலிருந்து தப்புவதற்காக முதலில் நெறியாளர் குழுவின்[48] லஞ்ச ஊழலிலும் முடிவில் நெப்போலியனது கொடுங்கோன்மையின் பாதுகாப்பிலும் அடைக்கலம் புகுந்தது. வாக்களிக்கப்பட்ட நிரந்தர சமாதானம் நாடுபிடிக்கும் முடிவில்லா யுத்தமாக மாறியது. அறிவின் அடிப்படையிலான சமுதாயத்துக்கும் இதே கதிதான் நேர்ந்தது. செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமான பகைமை பொது சுபிட்சத்தில் கரைந்து விடவில்லை; அதற்கு மாறாக, இப்பகைமைக்கு இதுகாறும் ஓரளவுக்குப் பாலமிட்டிருந்த கைவினைச் சங்கத் தனிச்சலுகைகளும் பிற தனிச்சலுகைகளும் நீக்கப்பட்டதனாலும், சமயச் சபையின் தரும நிலையங்கள் அகற்றப்பட்டதனாலும் மேலும் கடுமையாகியது. நிலப்பிரபுத்துவத் தளைகளிலிருந்து விடுபட்ட ''சொத்துடைமைச் சுதந்திரம்''—இப்பொழுது நிஜமாகவே இது கைவரப் பெற்றது—சிறு முதலாளிகளுக்கும் சிறு உடைமையாளர்களுக்கும், பெரிய முதலாளிகள், நிலப்பிரபுக்களது பகாசுரப் போட்டியால் நசுக்குண்டு தமது சொற்பச் சொத்துக்களை இந்தப் பெரும்பிரபுக்களுக்கு விற்பதற்குரிய சுதந்திரமாக மாறி விட்டது; இவ்விதம் சிறு முதலாளிகளையும் நிலமுடைய சிறு விவசாயிகளையும் பொறுத்தவரை, இந்தச் ''சுதந்திரம்'' சொத்துடைமையிலிருந்தான சுதந்திரமாக மாறியது. முதலாளித்துவ அடிப்படையில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி உழைப்பாளி வெகுஜனங்களது வறுமையையும் துயரையும் சமுதாயத்தின் வாழ் நிலைமைகள் ஆக்கிற்று. மேலும் மேலும் பணப் பட்டுவாடாதான், கார்லைலின் சொற்படி, மனிதனுக்கும் மனிதனுக்குமான ஒரே பந்தம் என்றாகியது. குற்றங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துச் சென்றது. முன்பெல்லாம் நிலப்பிரபுத்துவ ஒழுக்கக் கேடுகள் பகிரங்கமாகப் பட்டப்பகலில் தாண்டவமாடின; இன்னமும் அழித்தொழிக்கப்படா விட்டாலும் இப்பொழுது இவை எப்படியும் பின்னிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன. இவற்றுக்குப்

பதிலாக, இதுகாறும் இரகசியமாகச் செயல்பட்டு வந்த முதலாளித்துவ ஒழுக்கக் கேடுகள் அவ்வளவுக்கு அவ்வளவு அட்டகாசமாகத் தழைத்தோங்க முற்பட்டன. வாணிபம் மேலும் மேலும் பெரிய மோசடியாகி வந்தது. புரட்சிகர இலட்சிய முழக்கமான ''சகோதரத்துவம்''[49] போட்டாபோட்டியின் சூழ்ச்சியிலும் சூதிலும் சண்டை சச்சரவுகளிலும் மெய்மையாக்கம் கண்டது. வன்முறையின் மூலமான ஒடுக்குமுறைக்குப் பதிலாக லஞ்ச ஊழலின் மூலமான ஒடுக்குமுறை எழுந்தது; முதற் பெரும் சமுதாய நெம்புகோலாக வாளுக்குப் பதில் தங்கப் பணம் பிரயோகத்துக்கு வந்தது. முதல் இரவுக்கான உரிமை நிலப்பிரபுத்துவக் கோமான்களிடமிருந்து முதலாளித்துவத் தொழிலதிபர்களுக்கு மாற்றப்பட்டது. விபசாரம் என்றும் கேட்டிராத அளவுக்கு மலிந்து பெருகிற்று. மணமுறை முன்பு போலவே சட்ட அங்கீகாரம் பெற்ற விபசார வடிவமாக, விபசாரத்துக்கு இடப்பட்ட அதிகாரபூர்வமான மூடுதிரையாக நிலைத்திருக்க, அதனுடன் கூடவே புறத்தொழுக்கமும் அமோகமாய்ச் செழித்தோங்கிற்று.

சுருங்கக் கூறின், ''அறிவின் வெற்றியால்'' உருவாகிய சமுதாய, அரசியல் நிறுவன அமைப்புகள், தத்துவவியலாளர்களது மகோன்னத வாக்குறுதிகளுடன் ஒப்பிடுகையில், கொடிய ஏமாற்றத்துக்குரிய கேலிக்கூத்துகளாகி விட்டன. இந்த ஏமாற்றத்தை எடுத்துரைப்போர் தோன்ற வேண்டியதுதான் பாக்கியாக இருந்தது. நூற்றாண்டின் முடிவில் இவர்களும் தோன்றினர். 1802ல் சான்-சிமோனின் ஜெனீவாக் கடிதங்கள் வெளியாயின; 1808ல் ஃபூரியேயின் முதலாவது நூல் வெளிவந்தது, இவருடைய தத்துவத்துக்குரிய அடிநிலை 1799 முதலாகவே உருவாகி வந்தது; 1800 ஜனவரி 1ல் ராபர்ட் ஓவன் நியூலானார்க்கின்[50] நிர்வாகத்தை ஏற்றார்.

ஆனால் அந்தக் காலத்தில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் அதனுடன் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான பகைமையும் இன்னமும் அரைகுறை வளர்ச்சியே கண்டிருந்தன. நவீனத் தொழில்துறை அப்பொழுதுதான் இங்கிலாந்தில் தோன்றியிருந்தது, பிரான்சில் இன்னும் அறியப்படாததாகவே

இருந்தது. ஆனால் நவீனத் தொழில்துறை ஒரு புறத்தில் மோதல்களை வளர்த்திடுகிறது—பொருளுற்பத்தி முறையில் ஒரு புரட்சியையும் இப்பொருளுற்பத்தி முறையின் முதலாளித்துவத் தன்மையின் ஒழிப்பையும் அத்தியாவசியமாக்கும் மோதல்களை, தனது வயிற்றிலே பிறந்த வர்க்கங்களிடையிலான மோதல்களை மட்டுமின்றி தான் தோற்றுவித்த உற்பத்தி சக்திகளுக்கும் பரிவர்த்தனை வடிவங்களுக்கும் இடையிலான மோதல்களையும் வளர்க்கிறது; அதே போது மறு புறத்தில் அது இம்மோதல்களுக்கு முடிவு கட்டுவதற்கான சாதனங்களையும் இந்தப் பிரம்மாண்ட உற்பத்தி சக்திகளிடமே வளர்த்துச் செல்கிறது. ஆகவே, புதிய சமுதாய அமைப்பிலிருந்து உதிக்கும் இந்த மோதல்கள் 1800ஆம் ஆண்டு வாக்கில்தான் உருவாகத் தொடங்கியிருந்தன என்றால், இம்மோதல்களுக்கு முடிவு கட்டுவதற்கான சாதனங்கள் இன்னமும் குறைவாகவே அந்தத் தருணத்தில் வளர்ச்சி அடைந்திருந்தன. பயங்கர ஆட்சியின் போது பாரிஸ் நகரத்தின் ஏதும் இல்லாத மக்கள் திரள்கள் கணப் பொழுதுக்கு மேலாண்மை பெற முடிந்தது, இவ்விதம் அவை முதலாளித்துவ வர்க்கத்தாரையும் மீறி முதலாளித்துவப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடிந்தது. ஆனால் இப்படிச் செய்ததன் மூலம் அவை அப்போது இருந்த நிலைமைகளில் தமது ஆதிக்கத்தை நீடிக்கச் செய்வது எவ்வளவு அசாத்தியமான காரியம் என்பதைத் தான் நிரூபித்துக் காட்டின. ஏதும் இல்லாத இந்த மக்கள் திரள்களிலிருந்து அப்பொழுது தான் முதன்முதலாக ஒரு புதிய வர்க்கத்தின் உட்கருவாகப் பரிணமித்து இன்னமும் சுயேச்சையான அரசியல் செயல் திறன் சிறிதும் இல்லாதிருந்த பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்பட்டுத் துயருறும் பகுதியாகவே, தனக்குத் தானே உதவிக் கொள்ளும் திறனற்றிருந்த அந்நிலையில் அதிகம் போனால் வெளியிலிருந்தோ, மேலிடத்திலிருந்தோதான் உதவி பெற வேண்டிய பிரிவாகவே தோற்றமளித்தது.

இந்த வரலாற்று நிலைமை சோஷலிசத்தின் மூலவர்கள் மீதும் செல்வாக்குச் செலுத்திற்று. முதிர்ச்சியற்ற முதலாளித்

துவப் பொருளுற்பத்தி நிலைமைகளுக்கும் முதிர்ச்சியற்ற வர்க்க நிலைமைகளுக்கும் இணைவாய் முதிர்ச்சியற்ற தத்துவங்கள் முன்வைக்கப்பட்டன. சமுதாயப் பிரச்சினைகளுக்குரிய தீர்வு வளர்ச்சியுறாத பொருளாதார நிலைமைகளில் புதையுண்டு இன்னமும் மறைந்தே கிடந்தது; இந்தத் தீர்வினைக் கற்பனாவாதிகள் மனித மூளையிலிருந்து உருவாக்க முயன்றார்கள். சமுதாயத்தில் எங்கும் கேடுகள் மலிந்திருந்தன; இவற்றை நீக்குவது அறிவுக்குரிய பணியாகும். ஆகவே குறைபாடுகளின்றிச் சிறப்பான ஒரு புதிய சமுதாய ஒழுங்குமுறைக்கான அமைப்பைக் கண்டுபிடித்து பிரசாரத்தின் மூலமாகவும் சாத்தியமான இடங்களில் எல்லாம் முன்மாதிரியான சோதனை முயற்சிகளின் மூலமாகவும் அதை வெளியிலிருந்து சமுதாயத்தின் மீது இருத்துவது அவசியமாகும். இந்தப் புதிய சமுதாய அமைப்புகள் கற்பனாவாத அமைப்புகளாக இருக்கும்படி முன்கூட்டியே விதிக்கப்பட்டவை. எவ்வளவு விவரமாக முழு வடிவில் வகுக்கப்பட்டனவோ, அவ்வளவு தவிர்க்க முடியாதவாறு அவை பரிசுத்தக் கற்பனைப் புனைவுகளாய்த் தடம் புரண்டு சென்றன.

இந்த உண்மை விவரங்களை நிலைநாட்டியதும் நாம் கணப்பொழுதும் தாமதிக்காது பிரச்சினையின் இத்தரப்பை விட்டு மேலே செல்லலாம், தற்போது இது முற்றிலும் கடந்த காலத்துக்கு உரியதாகி விட்டது. இன்று நமக்குச் சிரிப்பு உண்டாக்கும் இந்தக் கற்பனைப் புனைவுகள் குறித்து எழுத்துலகச் சிறு மதியினர் ஆடம்பரமாகச் சொற்சிலம்பாடுமாறு விட்டுவிட்டு நாம் மேலே செல்லலாம். இவர்கள் தமது மலட்டு வாதங்கள் இந்தப் ''பைத்தியக்காரக் கற்பனைகளுடன்'' ஒப்பிடுகையில் மிகமிக உயர்ந்தவையெனக் கொக்கரித்துக் கொள்ளட்டும். நம்மைப் பொறுத்த வரை, கற்பனைப் புனைவுகளாகிய மேலோட்டை உடைத்துக் கொண்டு நாற்புறமிருந்தும் வெளித்தோன்றும் மகோன்னதச் சிந்தனைகளையும் சிந்தனைக் குறுத்துக்களையும் கண்டு நாம் பரவசமடைகிறோம், ஆனால் இவை இந்த அற்பவாதச் சிறு மதியினரின் குருட்டுக் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

சான்-சிமோன் மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் புதல்

வர். இப்புரட்சி வெடித்த போது அவருக்கு வயது முப்பது ஆகவில்லை. பிரெஞ்சுப் புரட்சி தனிச்சலுகை படைத்த சோம்பேறி வர்க்கங்களாகிய கோமான்கள் மீதும் பாதிரி யார்கள் மீதும் மூன்றாம் வகையினர், அதாவது உற்பத்தித் துறையிலும் வாணிபத் துறையிலும் வேலை செய்த தேச மக்களாகிய பெருந்திரளினர் பெற்ற வெற்றியைக் குறித்தது. ஆனால் மூன்றாம் வகையினரின் இந்த வெற்றி இவ்வகை யினரின் மிகச் சிறு பகுதிக்கு மட்டுமே உரித்தான வெற்றி யாக, இவ்வகையினரில் சமூகத் தனிச்சலுகை படைத்த பிரிவாகிய சொத்துடைத்த முதலாளித்துவ வர்க்கத்தினர் அரசியல் அதிகாரம் பெற்றுக் கொண்ட வெற்றியாக விரை வில் தனது உண்மை உருவை வெளிப்படுத்திக் கொண்டது. தவிரவும் முதலாளித்துவ வர்க்கம் இப்புரட்சியின் போது அதிவேக வளர்ச்சி பெற்றது; பறிமுதல் செய்யப்பட்டுப் பிற்பாடு விலைக்கு விற்கப்பட்ட பிரபுத்துவக் கோமான் களது நிலங்களிலும் சமயச் சபை நிலங்களிலும் ஊக வாணி பம் செய்ததன் மூலம் ஓரளவும் இராணுவக் காண்டிராக்டு களின் வாயிலாக நாட்டை ஏமாற்றி மோசடிகள் புரிந்த தன் மூலம் ஓரளவும் வளர்ச்சி பெற்றது. இந்த மோசடிக் காரர்களுடைய ஆதிக்கம்தான் நெறியாளர் குழுவின் ஆட்சி யில் பிரெஞ்சு நாட்டையும் புரட்சியையும் அழிவு நிலைக்குக் கொண்டு வந்து இவ்விதம் நெப்போலியன் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்துவதற்கு வழிவகுத்தது.

எனவே சான்-சிமோனுக்கு மூன்றாம் வகையினருக்கும் தனிச்சலுகை பெற்ற வர்க்கங்களுக்கும் இடையிலான பகைமை ''தொழிலாளர்களுக்கும்'' ''சோம்பேறிகளுக்கும்'' இடையிலான பகைமையின் வடிவைப் பெற்றது. சோம் பேறிகள் என்போர் தனிச்சலுகை பெற்ற பழைய வர்க்கங் களைச் சேர்ந்தோர் மட்டுமல்ல, உற்பத்தியிலோ வினியோகத் திலோ எந்தப் பங்கும் ஆற்றாமல் வருமானங்கள் பெற்று வாழ்ந்தோர் எல்லோருமே சோம்பேறிகள்தான். ''தொழி லாளர்கள்'' என்போர் கூலித் தொழிலாளர்கள் மட்டுமல்ல, தொழிலதிபர்களும் வணிகர்களும் வங்கி உடைமையாளர் களும் தொழிலாளர்கள்தான். சோம்பேறிகள் அறிவுத் துறை

யில் தலைமை தாங்குவதற்கும் அரசியல் மேலாண்மை செலுத்துவதற்கும் ஆற்றல் இழந்து விட்டனர் என்பது ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டிருந்தது, புரட்சியால் முடிவாக நிலைநாட்டப்பட்டு விட்டது. உடைமையற்ற வர்க்கங்களுக்கும் இந்த ஆற்றல் இல்லை என்பது பயங்கர ஆட்சியின் அனுபவங்களால் நிரூபிக்கப்பட்டு விட்டதாக சான்-சிமோனுக்குத் தோன்றிற்று. அப்படியானால் தலைமை தாங்க வேண்டியதும் ஆண்மை புரிய வேண்டியதும் யார்? சான்-சிமோனின் கருத்துப்படி விஞ்ஞானமும் தொழில்துறையும் இதைச் செய்ய வேண்டும்; இவை இரண்டும் ஒரு புதிய சமயப் பிணைப்பால் ஒருசேர இணைக்கப்பட வேண்டும்; மதச்சீர்திருத்தக் காலம் முதலாக இழக்க நேர்ந்துவிட்ட சமயக் கருத்துக்களது ஒற்றுமையை இது மீட்டளிப்பதாக இருக்கும்—ஆன்மஞான வழிப்பட்டதும் கட்டுறுதி வாய்ந்த படிநிலை அமைப்புடையதுமான ஒரு ''புதிய கிறிஸ்துவமாகவே'' இது இருந்தாக வேண்டும். ஆனால் விஞ்ஞானம் அறிஞர்களால் ஆனது; தொழில்துறை எல்லாவற்றுக்கும் மேலாக உழைக்கும் முதலாளிகளால், தொழிலதிபர்களாலும் வணிகர்களாலும் வங்கிகளின் உடைமையாளர்களாலும் ஆனது. இந்த முதலாளிகள் தம்மை ஒரு வகைப் பொது அதிகாரிகளாக, சமூகத் தர்மகர்த்தாக்களாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று சான்-சிமோன் திட்டமிட்டார். தொழிலாளர்களைப் பொறுத்த வரை இனியும் இந்த முதலாளிகள் பொருளாதார வழியில் தனிச்சலுகைகளுக்குரிய ஆணை செலுத்தும் நிலையே வகிப்பார்கள். முக்கியமாக வங்கிகளின் உடைமையாளர்கள் வங்கிக் கடன் செலாவணியை ஒழுங்கியக்குவதன் மூலம் சமுதாயப் பொருளுற்பத்தி அனைத்தையும் வழிநடத்த வேண்டியவர்கள் ஆவர். பிரான்சில் நவீனத் தொழிலும் அதனுடன் கூட முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான பெரும் பிளவும் அப்பொழுதுதான் உதித்துக் கொண்டிருந்த ஒரு காலத்துக்கு இந்தக் கருத்தமைப்பு முழுக்க முழுக்கப் பொருத்தமானதாகவே இருந்தது. ஆனால் சான்-சிமோன் மிகவும் முக்கியமாக வலியுறுத்துவது இதுதான்: முதலாவதாகவும் யாவற்

றுக்கும் முதன்மையாகவும் அவர் கவனம் செலுத்துவது ''எண்ணிக்கையில் மிகுதியானதும் மிகவும் ஏழ்மையானது மான வர்க்கத்திற்கு'' ("la classe la plus nombreuse et la plus pauvre") ஏற்படும் கதி மீதுதான்.

சான்-சிமோன் தமது ஜெனீவாக் கடிதங்களிலேயே ''எல்லோரும் வேலை செய்ய வேண்டும்'' என்று விதி வகுக்கின்றார்.

இதே கடிதங்களில் அவர் பயங்கர ஆட்சி உடைமையற்ற மக்கள் திரள்களின் ஆட்சியே என்பதைக் கண்டறிந்து கூறுகிறார். ''பிரெஞ்சு நாட்டில் உங்களுடைய தோழர்கள் ஆட்சி புரிந்த போது என்ன ஆயிற்று பாருங்கள்'' என்று இம்மக்கள் திரளினரிடம் கூறுகிறார். ''அவர்கள் பஞ்சத்தை உண்டாக்கி விட்டார்களே'' என்கிறார்.

ஆனால் பிரெஞ்சுப் புரட்சி வர்க்கப் போராகும் என்பதை, அதுவும் பிரபுத்துவக் கோமான்களுக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் மட்டுமானதல்ல, பிரபுத்துவக் கோமான்களுக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் உடைமையற்றோருக்கும் இடையே நடைபெற்றதாகும் என்பதைக் கண்டறிந்து கூறுவது 1802ஆம் ஆண்டில் மிகவும் பொருட்செறிவுள்ள ஒரு கண்டுபிடிப்பாகும். 1816ஆம் ஆண்டில் அவர் அரசியல் பொருளுற்பத்தியைப் பற்றிய விஞ்ஞானமாகும் என்று பறைசாற்றுகிறார், அரசியல் முழு அளவுக்குப் பொருளாதாரத்தால் உட்கவரப்பட்டுவிடும் என்று முன்னறிந்து கூறுகிறார். பொருளாதார நிலைமைகள் அரசியல் நிறுவனங்களுக்கான அடிப்படையாகும் என்ற அறிவு இங்கு கரு வடிவில்தான் காணப்படுகிறது. ஆயினும் ஆட்கள் மீதான அரசியல் ஆட்சி வருங்காலத்தில் பொருள்கள் மீதான நிர்வாகமாக, பொருளுற்பத்தி வேலைகளது வழிநடப்பாக மாறிவிடும் என்னும் கருத்து அன்றே தெட்டத்தெளிவாக இங்கு வெளியிடப்படுகிறது; அதாவது அண்மையில் பெருங்கூச்சல் எழுப்பப்பட்டுள்ள ஒன்றாகிய ''அரசின் ஒழிப்பு'' பற்றிய கருத்து இங்கு வெளியிடப்படுகிறது.

அவருடைய காலத்தவர்களுடன் ஒப்பிடுகையில் அவருக்குள்ள இந்த மேல்நிலையை சான்-சிமோன், நேசநாடுகளது

படைகள் பாரிஸ் நகரினுள் நுழைந்ததை உடனடியாக அடுத்த 1814லும் பிறகு நூறு நாள் போரின் போது[51] 1815லும் வெளிப்படுத்தி பிரெஞ்சு நாடு இங்கிலாந்துடனும் பிறகு இவ்விரு நாடுகளும் ஜெர்மனியுடனும் கூட்டணி கொள்ள வேண்டுமென்றும் ஐரோப்பாவில் சுபிட்சம் ஓங்குவதற்கும் சமாதானம் நிலவுவதற்கும் இது ஒன்றுதான் உத்திரவாதம் செய்யுமென்றும் பிரகடனம் செய்கிறார். வாட்டர்லோ[52] வெற்றியாளர்களுடன் கூட்டணி கொள்ளுமாறு 1815ல் பிரெஞ்சுக்காரர்களுக்கு உபதேசிக்க எந்த அளவுக்கு வரலாற்றுத் தீர்க்கதரிசனம் வேண்டுமோ, அதே அளவுக்கு அஞ்சாநெஞ்சமும் வேண்டும்.

சான்-சிமோனிடம் கருத்தோட்ட விரிவும் வீச்சும் இருக்கக் காணுகிறோமெனில், இதன் விளைவாக இவரிடம் பிற்காலத்து சோஷலிஸ்டுகளுடைய கருத்துக்களில் முற்றிலும் பொருளாதாரத் தன்மை கொண்டதாக இல்லாதவற்றில் அனேகமாக யாவும் கரு வடிவில் இருக்கக் காணுகிறோமெனில், ஃபூரியேயிடம் நடப்பிலுள்ள சமுதாய நிலைமைகளைப் பற்றிய விமர்சனத்தைக் காணுகிறோம். இந்த விமர்சனம் மெய்யான பிரெஞ்சுப் பாணியிலானது, நகைச்சுவை வாய்ந்தது; ஆனால் இதன் காரணமாக எவ்விதத்திலும் ஆழம் குறைந்து விடாதது. முதலாளித்துவ வர்க்கத்தாரும் புரட்சிக்கு முந்தைய காலத்திய உத்வேகமிக்க அவர்களது தீர்க்கதரிசிகளும் புரட்சிக்குப் பிற்பாடு தன்னலங்கருதி அவர்களது புகழைப் பாடுவோரும் கூறியவற்றைக் கொண்டே ஃபூரியே எடைபோட்டுக் காட்டுகிறார். முதலாளித்துவ உலகின் பொருளாயத, அறநிலை இழிவினைச் சிறிதும் தயவின்றி அம்பலப்படுத்துகின்றார். முற்றிலும் அறிவே ஆட்சி செலுத்தும் சமுதாயமென்றும் இன்ப வாழ்வை அனைவருக்கும் உரியதாக்கும் நாகரிகமென்றும் மனிதன் வரம்பின்றி மேன்மையுறுவானென்றும் முன்பு தத்துவவியலாளர்கள் அளித்த பளிச்சிட்டுப் பிரகாசிக்கும் வாக்குறுதிகளையும் மற்றும் அவர் காலத்திய முதலாளித்துவச் சித்தாந்திகளது உற்சாகமான சொல்லடுக்குகளையும் இந்த முதலாளித்துவ இழிநிலையின் எதிரே நிறுத்தி ஒப்பிடுகிறார். எங்கு பார்க்கி

னும் மிகவும் பரிதாபகரமான எதார்த்தமும் மிகவும் ஆடம்பரமான வாய்ச்சொற்களும் கைகோர்த்துச் செல்வதைச் சுட்டிக்காட்டுகிறார்; சொற்களது இந்தப் படுமோசமான பித்தலாட்டத்தை அவர் சாட்டையடி கொடுக்கும் தமது கிண்டலால் திணறித் திக்கு முக்காட வைக்கிறார்.

ஃபூரியே ஒரு விமர்சகர் மட்டுமல்ல, அமைதி குலையாத அவரது இயல்பு அவரை ஒரு கிண்டல் எழுத்தாளராக்கி விடுகிறது. எக்காலத்துக்குமான தலைசிறந்த கிண்டல் எழுத்தாளர்களில் ஒருவர் அவர், இதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. புரட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மண்டித் தழைத்த ஊக வாணிப மோசடிகளையும் அக்காலத்திய பிரெஞ்சு வாணிபத்தில் அதற்கே உரிய தனித்தன்மையாக நிலவிய கடைக்கார மனோபாவத்தையும் அவர் ஒருங்கே வலிவும் வனப்பும் வாய்ந்த முறையில் சித்திரிக்கின்றார். இதனிலும் தேர்ந்த திறமையுடன் பால் உறவுக்கான முதலாளித்துவ வடிவத்தையும் முதலாளித்துவ சமுதாயத்தில் பெண்களின் நிலையையும் விமர்சிக்கின்றார். எந்தவொரு சமுதாயத்திலும் பெண்களுக்குக் கிட்டியுள்ள விடுதலையின் தரம் பொது விடுதலையின் தரத்துக்கு இயற்கையான அளவுகோலாகும் என்று முதன்முதலில் கூறியவர் அவர்.

ஆனால் ஃபூரியே தலையாய சிறப்புக்குரியவராக விளங்குவது சமுதாய வரலாறு பற்றிய அவரது கருத்தோட்டத்தில் தான். இது நாள் வரையிலுமான இந்த வரலாறு அனைத்தையும் அவர் காட்டுமிராண்டி நிலை, அநாகரிகம், தந்தை வழிச் சமுதாயம், நாகரிகம் என்பதாக நான்கு பரிணாமக் கட்டங்களாகப் பிரிக்கின்றார். இந்தக் கடைசிக் கட்டம் குடிமை நிலை எனப்படுவதான அல்லது முதலாளித்துவச் சமுதாயமாகிய இன்றைய சமுதாயத்தைக் குறிப்பதாகும், அதாவது பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய சமுதாய அமைப்பைக் குறிப்பதாகும். ''அநாகரிகக் கட்டத்தில் எளிய முறையில் பழக்கத்திலிருந்த ஒவ்வொரு தீமையையும் நாகரிகக் கட்டம் வாழ்நிலை வடிவமாக—சிக்கல் வாய்ந்த, குழப்படி செய்யும், மழுப்பலான, வஞ்சக வாழ்நிலை வடிவமாக —வளர்ந்துயரச் செய்கிறது'' என்றும் நாகரிகம் ''நச்சுச்

சுழலில்''—தீர்வு காணும் திறனின்றி ஓயாமல் அது திரும்பத் திரும்ப உண்டாக்கி வரும் முரண்பாடுகளில்—இயங்குகிற தென்றும் ஆகவே அது சாதிக்க விரும்புவதற்கு அல்லது சாதிக்க விரும்புவதாகப் பாசாங்கு செய்வதற்கு நேர் முரணான ஒன்றையே எப்பொழுதும் வந்தடைகிறதென்றும் உதாரணமாக ''நாகரிக வாழ்வில் **அதீத அபரிமிதத்திலிருந்தே வறுமை உதித்தெழுகிறது**'' என்றும் அவர் நிரூபிக்கின்றார்.

இவ்விதம் ஃபூரியே அவர் காலத்தவராகிய ஹெகலைப் போல் அதே தேர்ந்த திறமையோடு இயக்கவியல் முறையைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். இதே இயக்கவியலைப் பிரயோகித்து அவர் மனிதன் வரம்பின்றி மேன்மையுறுவான் என்ற பேச்சை எதிர்த்து வாதிடுகிறார்; ஒவ்வொரு வரலாற்றுக் கட்டமும் அதன் ஏறு முகத்தையும் மற்றும் அதன் இறங்கு முகத்தையும் பெற்றுள்ளது என்கிறார்; மனிதகுலம் அனைத்தின் எதிர்காலத்துக்கும் இந்தக் கருத்துரையைக் கையாளுகிறார். இயற்கை விஞ்ஞானத்தில் எப்படி கான்ட் பூமியின் இறுதி அழிவெனும் கருத்தைப் புகுத்தினாரோ, அதே போல வரலாற்று விஞ்ஞானத்தில் ஃபூரியே மனித குலத்தின் இறுதி அழிவெனும் கருத்தைப் புகுத்தினார்.

பிரான்சில் புரட்சிப் புயல் வீசிச் சென்ற போது, இங்கிலாந்தில் இதை விட அமைதியான, ஆனால் அக்காரணத்தால் மகத்துவத்தில் எவ்வகையிலும் குறைவில்லாத ஒரு புரட்சி நடைபெற்று வந்தது. நீராவியும் புதிய கருவித்-தயாரிப்பு இயந்திர சாதனங்களும் பட்டறைத் தொழிலை நவீனத் தொழில்துறையாக மாற்றியமைத்து இதன் மூலம் முதலாளித்துவ சமுதாயத்தின் அடித்தளத்தையே அடியோடு மாறச் செய்து வந்தன. பட்டறைத் தொழிலின் காலத்தில் மந்த கதியில் நடைபோட்டு வந்த வளர்ச்சி பொருளுற்பத்தியில் பிரளயக் காலப் புயலின் வேகமுள்ள வளர்ச்சியாக மாறியது. சமுதாயம் பெரு முதலாளிகளாகவும் உடைமையற்ற பாட்டாளிகளாகவும் பிளவுண்டு வந்த வேகம் இடையறாது மேலும் மேலும் அதிகரித்துச் சென்றது. இவை இரண்டுக்கும் இடையில் முன்பிருந்த நிலையான நடுத்தர வர்க்கத்துக்குப் பதிலாகக் கைத்தொழிலாளர்களும் சிறு

கடைக்காரர்களுமான நிலையற்ற திரளினர் இப்பொழுது இடம் பெற்று மக்களில் மிகவும் அலைவுறும் பகுதியாக நம்பிக்கைக்கு வழியில்லாத வாழ்க்கை நடத்தினர்.

புதிய பொருளுற்பத்தி முறை அதன் ஏறுமுகவாழ்வின் துவக்க நிலையிலேதான் இன்னமும் இருந்தது. இப்பொழுது அதுதான் முறையான, ஒழுங்கான பொருளுற்பத்தி முறையாக இருந்தது—தற்போதைய நிலைமைகளில் சாத்தியமான ஒரே முறையாக இருந்தது. ஆயினும் அப்பொழுதுங் கூட அது மிகக் கொடிய சமூகக் கேடுகளை உண்டாக்கி வந்தது: வசிக்க வீடில்லாத மக்கள் திரள் பெரிய நகரங்களின் படுமோசமான குடியிருப்பு இடங்களில் மந்தைகளாக அடைபட்டு வதைந்தனர்; மரபு வழியிலான எல்லா ஒழுக்கமுறைப் பந்தங்களும் தந்தைக்கு தனயர் கீழ்ப்படிதலும் குடும்ப உறவுகளும் கடகடத்துத் தளர்ந்து விட்டன; பயங்கர அளவிலான வேலைப் பளு முக்கியமாகப் பெண்களையும் குழந்தைகளையும் வருத்திற்று; உழைப்பாளி வர்க்கத்தினர் முற்றிலும் புதிய நிலைமைகளில் திடுமெனத் தள்ளப்பட்டு—கிராமத்திலிருந்து நகரத்திற்கும், விவசாயத்திலிருந்து நவீனத் தொழில்துறைக்கும், நிலையான வாழ்க்கை நிலைமைகளிலிருந்து தினசரி மாறிக் கொண்டிருந்த பாதுகாப்பற்ற நிலைமைகளுக்கும் தள்ளப்பட்டு—அதிகமாக மனச்சோர்வுற்று விட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சீர்திருத்தவாதி முன்வந்தார்—29 வயதான பட்டறைத் தொழிலதிபரான அவர் குழந்தையை ஒத்த எளிய, புனிதப் பண்புகள் கொண்டவர், அதே போது மாந்தரின் தலைவராகப் பணி புரிவதற்கென்றே பிறந்த மிகச் சிலரில் ஒருவர். ராபர்ட் ஓவன் பொருள் முதல்வாதத் தத்துவவியலாளர்களின் போதனையை ஏற்றுக் கொண்டவர்: ஒரு புறத்தில் மரபினாலும் மறு புறத்தில் தனி மனிதனது ஆயுட்காலத்திலும் இன்னும் முக்கியமாக அம்மனிதனது வளர்ச்சிக் கட்டத்திலும் நிலவுகின்ற சுற்றுச் சார்பினாலும்தான் மனிதனது பண்புகள் உருவாக்கப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொண்டவர். தொழில் புரட்சியின் போது அவருடைய வர்க்கத்தினரில் மிகப் பெரும்பாலோர்

பெருங்குழப்பத்தையும் குளறுபடியையும் தமது சுயநலத்துக்காக இவற்றைப் பயன்படுத்தி வேகமாகச் செல்வம் திரட்டுவதற்கான வாய்ப்பையும்தான் கண்ணுற்றனர். ஆனால் ஓவன் தாம் பற்றுறுதியுடன் நேசித்த தமது திட்டத்தைச் செயல்படுத்தி இதன் வாயிலாகக் குழப்பத்திலிருந்து ஒழுங்கை உண்டாக்குவதற்கு இந்தத் தொழில் புரட்சியில் நல்வாய்ப்பு இருப்பதைக் கண்ணுற்றார். ஏற்கெனவே அவர் மாஞ்செஸ்டர் ஆலை ஒன்றில் ஐந்நூறுக்கு மேற்பட்டோருக்கு மேலாளராய் இருந்த போது இத்திட்டத்தை வெற்றிகரமாகக் கையாண்டிருந்தார். ஸ்காட்லாந்தில் நியூலானார்க் என்னுமிடத்தில் அமைந்த பெரிய பஞ்சாலைக்கு நிர்வாகக் கூட்டாளியாக 1800லிருந்து 1829 வரையில் இதே வழிகளில், ஆனால் மேலும் அதிக அளவு சுதந்திரமாகச் செயல்பட்டு ஐரோப்பியப் புகழும் பெயரும் கிடைக்கும்படியான வெற்றி கண்டார். ஆதியில் மிகப் பல தரப்பட்டோரான, மிகப் பெரும்பாலும் மனச்சோர்வுற்றுத் தளர்ந்துவிட்ட பகுதியினரான மக்கள் தொகுதியை, படிப்படியாக 2,500 பேராக அதிகரித்துச் சென்ற இம்மக்கள் தொகுதியை அவர் ஒரு முன்மாதிரியான குடியேற்றமாக மாறச் செய்தார்; குடிவெறி, போலீஸ், மாஜிஸ்திரேட்டுகள், வழக்குகள், பஞ்சையர் சட்டங்கள், தர்ம கைங்கரியங்கள் இவையெல்லாம் அறியாத ஒன்றாக்கினார். மனிதப் பிறவிகளுக்கு உகந்த நிலைமைகளில் மக்களை வாழ விடுவதன் மூலமும் இன்னும் முக்கியமாக வளரும் தலைமுறையினரைக் கவனமாக வளர்த்து ஆளாக்குவதன் மூலமும் இவ்வளவையும் செய்தார். குழந்தைப் பள்ளிகளின் ஆதிமுதல்வர் அவர். நியூலானார்க்கில் முதலாவது குழந்தைப் பள்ளியை நிறுவினார். இரண்டு வயதானதும் குழந்தைகள் பள்ளிக்கு வர ஆரம்பித்தனர். வீட்டுக்குத் திரும்புவதற்கு எளிதில் மனம் வராதபடி இங்கு அவர்களுக்கு அவ்வளவு ஆனந்தமாயிருந்தது. ஓவனின் போட்டியாளர்கள் தம் ஆட்களை தினமும் பதின்மூன்று, பதினான்கு மணி நேரம் வேலை வாங்கிய ஒரு காலத்தில் நியூலானார்க்கில் வேலை நாள் பத்தரை மணி நேரமே இருந்தது. பருத்தி கிடைப்பதில் ஏற்பட்ட நெருக்கடியால் 4

மாதங்களுக்குப் பஞ்சாலை வேலை செய்யாது நின்ற போது, ஓவனின் தொழிலாளர்கள் முழுக் காலத்துக்கும் முழு ச்சம் பளம் பெற்றுக் கொண்டனர். இவ்வளவும் நடைபெற்றும் இந்த ஆலையின் மதிப்பு இரு மடங்குக்கும் கூடுதலாகப் பெருகிற்று, இறுதி வரை இந்த ஆலை அதன் உடைமை யாளர்களுக்குப் பெருத்த லாபங்கள் அளித்து வந்தது.

ஆனால் இவையெல்லாம் ஓவனுக்கு மன நிறைவு அளிக்க வில்லை. அவர் தமது தொழிலாளர்களுக்குக் கிடைக்கச் செய்த இந்த வாழ்வு மனிதர்களாய்ப் பிறந்தோருக்குரிய வாழ்விலிருந்து இன்னும் நெடுந்தொலைவில் இருந்ததாகக் கருதினார். ''இம்மக்கள் என் தயவுக்கு உட்பட்ட அடிமை களாகவே இருந்தனர்.'' இவர்களுக்கு அவர் அளித்திருந்த வாழ்க்கை நிலைமைகள் ஒப்பளவில் சாதகமானவையே என்றாலும், குணநலமும் சிந்தனையாற்றலும் எல்லாத் திசை களிலும் அறிவார்ந்த வளர்ச்சி பெறுவதற்கு உகந்தவற்றி லிருந்து இன்னும் இவை நெடுந்தொலைவிலேதான் இருந் தன; இவர்களுடைய ஆற்றல்கள் யாவும் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு இதனிலும் சொற்பமாகவே இடந்தருவன வாக இருந்தன. ''ஆயினும் இந்த 2,500 பேரைக் கொண்ட மக்கள் தொகுதியில் வேலை செய்யும் பகுதி சமுதாயத்துக்கு உற்பத்தி செய்யும் மெய்யான செல்வத்தை அரை நூற்றாண் டுக்குச் சற்று குறைவான காலத்துக்கு முன்பு உற்பத்தி செய் வதற்கு 6,00,000 பேரான மக்கள் தொகுதியைச் சேர்ந்த வேலை செய்யும் பகுதி தேவையாக இருந்திருக்கும். 2,500 பேர் உண்ட செல்வத்துக்கும் 6,00,000 பேர் உண்டிருக்கக் கூடிய செல்வத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன ஆயிற்று என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.''

விடை தெட்டத்தெளிவானது. ஆலையின் உடைமை யாளர்களுக்கு அவர்கள் போட்ட மூலதனத்துக்கான 5 சத வீதமும் இது தவிர 3,00,000 பவுண்டுகளுக்கு மேற்பட்ட நிகர லாபமும் தருவதற்காக இச்செல்வம் உபயோகிக்கப் பட்டு விட்டது. நியூலானார்க்' ஆலையிலிருந்து பெறப்பட்ட இந்த உண்மை இங்கிலாந்தின் எல்லா ஆலைகளுக்கும் மேலும் அதிக அளவுக்குப் பொருந்துவதாக இருந்தது.

''இயந்திரச் சாதனங்கள்—இன்னும் சரிவர உபயோகிக் கப்படாத இவை—இந்தப் புதிய செல்வத்தைப் படைத்திரா விடில், நெப்போலியனை எதிர்த்தும் சமுதாயத்தின் பிரபுக் குலக் கோட்பாடுகளை ஆதரித்தும் ஐரோப்பாவில் நடத்தப் பட்ட யுத்தங்களை நடத்த முடிந்திருக்காது. ஆயினும் இந்தப் புதிய சக்தி உழைப்பாளி வர்க்கத்தாரால் படைக்கப்பட்ட தாகும்.''* ஆகவே இந்தப் புதிய சக்தியின் பலன்கள் அவர் களுக்கே உரியனவாகும். புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் பிரம்மாண்ட உற்பத்தி சக்திகள் இதுகாறும் தனி யாட்களைச் செல்வச் சீமான்களாக்குவதற்காகவும் வெகு ஜனங்களை அடிமை செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்தன; ஓவனுக்கு இவை சமுதாயத்தைத் திருத்தியமைப் பதற்குரிய அடித்தளங்களாக விளங்கின; அனைவருக்கும் சொந்தமான பொதுச் சொத்தாகி அனைவரின் பொது நன் மைக்காக இயங்கப் போகிற சக்திகளாக அமைந்தன.

ஓவனுடைய கம்யூனிசம் முற்றிலும் இந்தத் தொழில் முறை அடித்தளத்தில் அமைந்ததாகும், வாணிபக் கணக் கீட்டின் விளைவாகும் எனலாம். இறுதி வரை அவருக்கு இது இந்த நடைமுறைச் செயல் தன்மை வாய்ந்ததாகவே இருந்தது. இவ்விதம் 1823ல் ஓவன் கம்யூனிசக் குடியேற்றங் கள் அமைத்து அயர்லாந்தில் இன்னல் குறைப்பதற்கான திட்டத்தை முன்வைத்தார். இந்தக் குடியேற்றங்களை அமைப்பதற்கு வேண்டிய முதலீடு, வருடாந்தரச் செலவு, உத்தேச வருமானம் ஆகியவற்றின் முழு நிறைவான மதிப்பீடு களை வகுத்தமைத்தார். சமுதாயச் சீர்திருத்தத்துக்கான ஓவனின் முறைகள் ஏற்கப்படுமாயின், வருங்காலத்துக்குரிய அவருடைய கறாரான திட்டத்தில் விவரங்களை அவர் வகுத்

---

* **மனத்திலும் நடைமுறையிலுமான புரட்சி** என்பதிலிருந்து, பக்கங்கள் 21—22; ''ஐரோப்பாவின் சிவப்புக் குடியரசுவாதி கள், கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள்'' ஆகியோர் எல் லோருக்கும் விடுக்கப்பட்ட இந்த அறிக்கை 1848ல் பிரான் சின் தற்காலிக அரசாங்கத்துக்கும் மற்றும் ''விக்டோரியா அரசிக்கும் பொறுப்புள்ள அவர்தம் ஆலோசகர்களுக்கும்'' அனுப்பி வைக்கப்பட்டது. (**பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.**)

தளிக்கும் ஒழுங்குமுறைக்கு எதிராக நடைமுறைக் கண்ணோட்டத்திலிருந்து சொல்வதற்கு அதிகமாக ஒன்றுமில்லாதபடி அப்படிப்பட்ட நடைமுறை அறிவு தீட்சண்யத்துடன்—அடிநிலைத் திட்டம் மற்றும் முன்புற, பக்கவாட்டு, வானிலிருந்தான நோட்டங்கள் ஆகிய யாவும் உட்பட—விவரங்களது நுணுக்க விளக்கம் செம்மையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஓவன் கம்யூனிசத் திசையில் முன்சென்றது அவருடைய வாழ்க்கையில் பெருந்திருப்பத்தை உண்டாக்கியது. பரோபகாரியாக மட்டும் இருந்த வரை அவருக்குச் செல்வமும் சிறப்பும் புகழும் பாராட்டும் குறைவின்றி கிடைத்தன. ஐரோப்பாவிலேயே செல்வாக்குமிக்கவராகத் திகழ்ந்தார். அவருடைய வர்க்கத்தினர் மட்டுமல்லாது, கோமான்களும் அரசுத்துறைச் சீமான்களும் அவருக்குச் செவிமடுத்து ஆமோதித்தனர். ஆனால் அவர் தமது கம்யூனிசத் தத்துவங்களை வெளியிட முற்பட்டதும் நிலைமை அடியோடு மாறி விட்டது. சமுதாயச் சீர்திருத்தப் பாதையில் முக்கியமாக மூன்று பெரும் தடைமதில்கள் தடுத்து நிற்கக் கண்டார்: தனியார் சொத்துடைமை, சமயம், தற்காலத் திருமண வடிவம். இவற்றின் மீது தாக்குதல் தொடுத்தால் தமக்கு என்ன நேரும் என்று—சட்டத்துக்குப் புறம்பானவராக விலக்கப்படுதல், தீண்டத் தகாதவராக அங்கீகாரச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுதல், தமது சமூக அந்தஸ்தையே இழக்கும்படியாதல் ஆகிய இவற்றையே தாம் எதிர்நோக்க வேண்டும் என்று—அவருக்குத் தெரியும். ஆனால் இவையெல்லாம் அவரைத் தடுத்து நிறுத்தி விடவில்லை. விளைவுகள் குறித்து அச்சமின்றி இவற்றின் மீது தாக்குதல் தொடுத்தார். அவர் எதிர்பார்த்தபடியே நேர்ந்தது. அங்கீகாரச் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டு பத்திரிகைகளின் சதிகார மௌனத்தால் முடக்கப்பட்டு தம் செல்வம் அனைத்தையும் பலியிட்டு அமெரிக்காவில் அவர் நடத்திய கம்யூனிசச் சோதனை முயற்சிகள் தோல்வியுற்றுச் சொத்திழந்து அவர் நேரடியாகத் தொழிலாளி வர்க்கத்தினரிடம் வந்து தொடர்ந்து முப்பது ஆண்டுகளுக்கு அவர்களிடையே பணி

புரிந்தார். இங்கிலாந்தில் தொழிலாளர்கள் சார்பிலான ஒவ்வொரு சமுதாய இயக்கமும், மெய்யான ஒவ்வொரு முன்னேற்றமும் ராபர்ட் ஓவனின் பெயருடன் இணைந்துள்ளன. ஐந்து ஆண்டுகளாகப் போராடி அவர் செய்த நிர்ப்பந்தத்தால் 1819ல் ஆலைகளில் பெண்கள், குழந்தைகளின் வேலை நேரத்துக்கு வரம்பிட்ட முதலாவது சட்டம் ஏற்கப்பட்டது. இங்கிலாந்தின் எல்லாத் தொழிற் சங்கங்களும் ஒருமித்த மாபெரும் தொழிற் சங்க இணைப்பு நிறுவனமாக ஐக்கியமடைந்த முதலாவது காங்கிரசுக்கு அவர் தலைமை தாங்கினார்.[53] சமுதாயத்தின் பரிபூரணக் கம்யூனிச ஒருங்கமைப்புக்குரிய இடைக்கால நடவடிக்கைகளாக, ஒரு புறத்தில், அவர் சில்லறை வாணிபத்துக்கும் பொருளுற்பத்திக்குமாகிய கூட்டுறவுக் கழகங்களைத் தொடங்கிச் செயல்பட வைத்தார்; அக்காலம் முதலாக இவை வியாபாரிகளும் தொழிலதிபர்களும் சமுதாயத்துக்குச் சிறிதும் தேவையற்றவர்கள் என்பதையேனும் நடைமுறை வாயிலாக நிரூபித்து வந்திருக்கின்றன. மறு புறத்தில், அவர் உழைப்பின் உற்பத்திப் பொருள்கள் உழைப்பு-நோட்டுகள் மூலம் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதற்காக உழைப்புச் சந்தைகளுக்கு ஏற்பாடு செய்தார்; இந்த உழைப்பு-நோட்டுகள் ஒரு மணி நேர வேலை அளவை அலகாகக் கொண்டவை.[54] இந்நிறுவன ஏற்பாடுகள் நிச்சயமாகத் தோல்வியடைந்தன என்றாலும், மிகவும் பிற்பாடு ஒரு காலத்தில் நிறுவப்பட்ட புருதோனின் பரிவர்த்தனை வங்கியை[55] இவை முழு அளவில் எதிர்பார்ப்பனவாக இருந்தன; ஆனால் இவை சமூகக் கேடுகள் யாவற்றுக்குமான கைகண்ட மருந்தாக உரிமை கொண்டாடாமல் சமுதாயத்தை மேலும் தீவிரமாகப் புனரமைப்பதற்கான முதலாவது முயற்சியாகவே மேற்கொள்ளப்பட்டவை என்பதால் புருதோனின் வங்கியிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகவே இருந்தன.

கற்பனாவாதிகளுடைய சிந்தனை முறை பத்தொன்பதாம் நூற்றாண்டு சோஷலிசக் கருத்துக்களின்மீது நீண்ட காலத்துக்கு ஆட்சி செலுத்தி வந்தது; இவை சிலவற்றின் மீது தொடர்ந்து ஆட்சி செலுத்தியும் வருகிறது. மிக அண்

மைக் காலம் வரையில் பிரெஞ்சு, ஆங்கில சோஷலிஸ்டு கள் யாவரும் இதை வணங்கி வழிபட்டு வந்தனர். வைட் லிங்கின் கம்யூனிசம் உட்பட முந்திய நாட்களது ஜெர்மன் கம்யூனிசமும் இதே மரபைச் சேர்ந்ததுதான். இவர்கள் அனைவருக்கும் சோஷலிசம் தனிமுதலான உண்மை, அறிவு, நீதி ஆகியவற்றின் வெளிப்பாடாகும்; கண்டுபிடித்துச் சொன் னாலே போதும், இந்த சோஷலிசம் தன் சொந்த சக்தியா லேயே அனைத்து உலகையும் வெற்றி கொண்டுவிடும். தனி முதலான உண்மை காலம், இடம் மற்றும் மனிதனது வர லாற்றின் வளர்ச்சி ஆகியவற்றை சார்ந்திருக்கவில்லை ஆத லால், இது எங்கே, யாரால் கண்டுபிடிக்கப்படுகிறது என்பது அகஸ்மாத்தாய் நடைபெறும் தற்செயல் நிகழ்ச்சியே ஆகும். இப்படியெல்லாம் இருந்தும் கூட தனிமுதலான இந்த உண்மை யும் அறிவும் நீதியும் வெவ்வேறு தனி மரபின் மூலவருக்கும் வெவ்வேறு வகையினதாகவே இருக்கின்றன. ஒவ்வொருவரு டைய இந்தத் தனி வகைப்பட்ட தனிமுதலான உண்மையும் அறிவும் நீதியும் அவரவரது அகநிலை உணர்வாற்றலாலும் வாழ் நிலைமைகளாலும் அறிவின் ஆழத்தாலும் மதிநுட்பப் பயிற்சியாலும் நெறியாக்கப்படுவதால், இந்தத் தனிமுத லான உண்மைகளிடையே எழும் மோதல் பரஸ்பரம் ஒவ் வாதனவாக ஒன்றையொன்று விலக்கித் தள்ளுவதைத் தவிர வேறு எந்த முடிவையும் வந்தடைவது சாத்தியமன்று. எனவே இதிலிருந்து ஒரு வகைத் தேர்வுவாதக் கதம்பமான, சராசரியான சோஷலிசத்தைத் தவிர்த்து வேறு எதுவும் தோன்ற வழியில்லை; உண்மையில் இத்தகைய ஒரு சோஷ லிசம்தான் பிரான்சிலும் இங்கிலாந்திலும் மிகப் பெருவாரி யான சோஷலிஸ்டுத் தொழிலாளர்களின் உள்ளங்களில் இது நாள் வரை ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. மிகப் பல்வேறுபட்ட கருத்துச் சாயல்களுக்கும் இடந்தரும் ஒரு கதம்பத் திரட்டு; பல்வேறு குழுக்களின் மூலவர்களது விமர் சனக் கருத்துரைகள், பொருளாதார தத்துவங்கள், வருங் கால சமுதாயம் குறித்து இவர்கள் தீட்டிய சித்திரங்கள் ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்ச எதிர்ப்புக்குரியனவாக இருக்கும்படிப் பார்த்துச் சேகரிக்கப்பட்ட ஒரு கதம்பத்

திரட்டு; அருவியிலே உருண்டு மழுங்கிய கூழாங்கற்களைப் போல வாதப் பிரதிவாதங்களில் அடிபட்டு உள்ளடக்கத் தனிக் கூறுகளின் துல்லியமான கூர்முனைகள் எவ்வளவு மழுக் கடிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவு எளிதில் தயாரிக்கப் படக் கூடிய ஒரு கதம்பத் திரட்டு.

சோஷலிசத்தை ஒரு விஞ்ஞானமாக்கும் பொருட்டு, முதலில் அதை மெய்யான ஓர் அடித்தளத்தின் மீது அமர்த்த வேண்டியிருந்தது.

## II

இதற்கிடையில் பதினெட்டாம் நூற்றாண்டுப் பிரெஞ்சுத் தத்துவவியலுடன் கூடவும் அதற்குப் பிற்பாடும் புதிய ஜெர்மன் தத்துவவியல் உதித்தெழுந்து ஹெகலினிடம் உச்ச நிலையை வந்தடைந்திருந்தது. அறிவாய்வின் மிக உயர்ந்த வடிவமாக இயக்கவியலை மீண்டும் ஏற்றுக் கொண்டதுதான் இந்தப் புதிய ஜெர்மன் தத்துவவியலுக்குரிய தனிப்பெருஞ் சிறப்பு. பண்டைக் கிரேக்கத் தத்துவவியலாளர்கள் எல்லோரும் பிறவியிலேயே இயற்கையாகவே இயக்கவியலாளர்களாக இருந்தவர்கள். இவர்கள் யாவரினும் சகலகலா வல்லவராக விளங்கிய அரிஸ்டாட்டில் இயக்கவியல் சிந்தனையின் முக்கிய வடிவங்களைப் பகுத்தாராய்ந்திருந்தார். ஆனால் இதற்கு மாறாகப் பிற்காலத்தியப் புதிய தத்துவவியல்—இயக்கவியலைத் தேர்ந்த திறமையோடு விளக்கிக் கூறி வற்புறுத்திய சிறப்பாளர்கள் (உதாரணம்: டெக்கார்ட், ஸ்பினோஸா) இதிலும் இருந்தார்கள் என்றாலுங்கூட—குறிப்பாக ஆங்கிலச் செல்வாக்கின் விளைவாக மேலும் மேலும் இறுகி இயக்க மறுப்பியல் சிந்தனை முறை எனப்படுவதாகி விட்டது. இதே சிந்தனை முறைதான் பதினெட்டாம் நூற்றாண்டு பிரெஞ்சுக்காரர்களிடத்தும், எப்படியும் அவர்களுடைய தத்துவவியல் குறித்த விசேஷ நூல்களில், அநேகமாக முழு அளவுக்கு ஆதிக்கம் செலுத்திற்று. இருப்பினும் குறுகிய பொருளில் தத்துவவியல் எனும் துறைக்கு வெளியில் பிரெஞ்சுக்காரர்கள் இயக்கவியலில் தலைசிறந்த படைப்பு

களைப் படைத்தனர். டிட்ரோவின் *Le Neveu de Rameau*,* ரூஸோவின் *Discours sur l'origine et les fondements de l'inégalité parmi les hommes*** இவை இரண்டை மட்டும் நினைவு கூர்ந்தாலே போதும். இந்த இரு சிந்தனை முறைகளின் சாராம்சத்தைச் சுருக்கமாக இங்கு தருகின்றோம்.

பொதுப்பட இயற்கையையோ, மனிதகுலத்தின் வரலாற்றையோ, நமது அறிவுத் துறைச் செயற்பாட்டையோ ஆலோசித்துப் பார்க்கையில் முடிவின்றிப் பின்னிப் பிணைந்து சிக்கலாகிச் செல்லும் தொடர்புகளும் எதிர்வினைகளும், கோவைகளும் தொகுதிகளுமான ஒரு சித்திரத்தையே முதலில் காண்கிறோம்; இதில் எதுவும் அப்படியே, அங்கேயே, முன்பிருந்த விதமாகவே தொடர்ந்து இல்லாமல் யாவும் இயங்கிக் கொண்டும் மாறிக் கொண்டும் உருவாகி எழுந்து கொண்டும் மறைந்து சென்று கொண்டும் இருக்கக் காண்கிறோம். ஆகவே முதலில் நாம் ஒட்டுமொத்தமாக இச்சித்திரத்தைப் பார்க்கிறோம்; இதன் தனித்தனிப் பகுதிகள் பெருமளவுக்கு இன்னமும் பின்னணியிலேதான் இருக்கின்றன. இயக்கங்களையும் இடைக்கட்டங்களையும் இணைப்புகளையும் உற்றுநோக்குகிறோமே; தவிர இயங்கியும் சேர்ந்தும் இணைக்கப் பெற்றும் வரும் பொருள்களை அவ்வளவாக கவனிப்பதில்லை. உலகைப் பற்றிய இந்த ஆதிநிலையிலான, அறியாப் பருவத்துக்குரிய, ஆயினும் உள்ளியல்பில் பிழையற்ற கருத்தோட்டம்தான் பண்டைக் கிரேக்கத் தத்துவவியலின் கருத்தோட்டம். முதன்முதல் ஹெரக்லீடஸ் இதைத் தெளிவாக வரையறுத்துக் கூறினார்: ஒவ்வொன்றும் இருந்து கொண்டும், அதேபோதில் இல்லாமலும் இருக்கிறது; ஏனெனில் ஒவ்வொன்றும் நிலையற்றதாக இருக்கிறது, இடையறாது மாறிக் கொண்டு இடையறாது உருவாகி எழுவதாகவும் மறைந்து செல்வதாகவும் இருக்கிறது.

ஆனால் இந்தக் கருத்தோட்டம் தோற்றங்களின் ஒட்டு

---

* —ரமோவின் மருகன்.—மொ-ர்.

** —மனிதர்களிடத்தே சமத்துவமின்மை தோன்றியது பற்றிய ஆய்வுரை.—மொ-ர்.

மொத்தமான சித்திரத்தின் பொதுவான தன்மையைப் பிழையற்ற முறையில் தெரிவிப்பினும், இந்தச் சித்திரத்தில் அடங்கிய விவரங்களை விளக்குவதற்கு இது போதாது. இந்த விவரங்களைப் புரிந்து கொள்ளாத வரை முழுச் சித்திரத்தையும் பற்றிய தெளிவான கருத்து நமக்குக் கிடைப்பதில்லை. இந்த விவரங்களைப் புரிந்து கொள்ளும் பொருட்டு இவற்றின் இயற்கை அல்லது வரலாற்றுத் தொடர்புகளிலிருந்து இவற்றை நாம் பிரித்தெடுத்து தனித்தனியே ஒவ்வொன்றையும் அதன் தன்மை, விசேஷக் காரணங்கள், பலன்கள், முதலானவை குறித்துப் பரிசீலித்தாக வேண்டும். பிரதானமாக இது இயற்கை விஞ்ஞானத்துக்கும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் உரிய பணியாகும். பண்டைக் காலத்திய கிரேக்கர்கள் விஞ்ஞானத்தின் இந்தக் கிளைகளைக் கீழ்நிலைக்கு உரியனவாக ஒதுக்கியிருந்தனர்; தக்க காரணங்களுடன்தான் இப்படிச் செய்திருந்தனர். ஏனெனில் இந்த விஞ்ஞானங்கள் செயல்படுவதற்கு வேண்டிய விவரப் பொருள்களை முதலில் அவர்கள் சேகரிக்க வேண்டியிருந்தது. இயற்கையிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் விவரப்பொருள்கள் ஓரளவுக்குச் சேகரிக்கப்பட்ட பிறகுதான் எவ்விதமான விமர்சனப் பகுத்தாய்வும், ஒப்பீடும், வகைகளிலும் படிகளிலும் இனங்களிலுமான ஒழுங்கமைப்பும் நடைபெற முடியும். எனவே துல்லிய இயற்கை விஞ்ஞானங்களின் அடிப்படைகள் முதன்முதலாக அலெக்சாந்திரிய காலத்தின்[56] கிரேக்கர்களாலும் பிற்பாடு மத்திய காலத்தில் அராபியர்களாலும் உருவாக்கப்பட்டன. மெய்யான இயற்கை விஞ்ஞானம் பதினைந்தாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் ஆரம்பமாயிற்று; அது முதலாக மேலும் மேலும் கூடுதலான வேகத்தில் முன்னேறி வந்துள்ளது. இயற்கையை அதன் தனித்தனிப் பிரிவுகளில் பகுத்தாய்தல், வெவ்வேறு இயற்கை நிகழ்ச்சிப்போக்குகளையும் பொருள்களையும் திட்டவட்டமான வகுப்புகளில் வகைபிரித்தல், அங்ககப் பொருள்களின் பல்வேறு வடிவங்களிலும் அவற்றின் உள் அமைப்பியலை ஆராய்தல்—இவைதாம் இயற்கையைப் பற்றிய நமது அறிவு கடந்த நானூறு ஆண்டுகளில் பீடுநடை

போட்டுப் பிரமாதமான முன்னேற்றம் கண்டதன் அடிப் படை நிபந்தனைகள். ஆனால் இவ்விதமான ஆய்வு முறை, இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிப்போக்குகளையும் பிரம்மாண்டமான முழு அமைப்புடனும் அவற்றுக்குள்ள தொடர்புகளிலிருந்து பிரித்துத் தனிமைப்படுத்தி வைத்து அவற்றைக் கண்ணுறும் பழக்கத்தை, அவற்றின் இயக்கத் தில் அல்லாது உறக்கத்தில், சாராம்சத்தில் மாறிக் கொண் டிருக்கும் மதிப்புருக்களாக அல்லாது நிலையாக இருக்கும் மாறிலிகளாக, அவற்றின் உயிருள்ள வாழ்வில் அல்லாத மரண நிலையில் வைத்துக் கண்ணுறும் பழக்கத்தை நமக்கு மரபுரிமையாக விட்டுச் சென்றுள்ளது. பொருள்களைக் கண்டறிவதற்கான இந்த வழிமுறையை பேக்கனும் லோக் கும் இயற்கை விஞ்ஞானத்திலிருந்து தத்துவவியலுக்கு மாற் றிய போது, அது கடந்த நூற்றாண்டிற்கு உரிய தனி இயல் பாகிய குறுகிய, இயக்க மறுப்பியல் சிந்தனை முறையைத் தோற்றுவித்தது.

இயக்க மறுப்பியலுக்குப் பொருள்களும் அவற்றின் மனப் பிரதிமைகளும், கருத்தினங்களும் தனிமைப்பட்டன வாக இருக்கின்றன; ஒன்றின் பின் ஒன்றாகவும் ஒன்றிலிருந்து ஒன்று தனியாகவும் பரிசீலிக்கப்பட வேண்டியனவாகி விடு கின்றன; நிலையான, கெட்டிப் பிடித்து இறுகிய, என்றென் றைக்கும் உறுதியாக அப்படியே இருக்கத்தக்க பரிசீலனைப் பொருள்களாகி விடுகின்றன. ஒன்றுக்கொன்று சிறிதும் இணங்காத எதிரிடைகளில்தான் அவர் சிந்திக்கிறார். அவ ருடைய பேச்செல்லாம் ''ஆம் அல்லது இல்லை'' என்பது தான்; ''அதற்கு அதிகமானது எதுவும் பாவத்திலே பிறந் தது.''* அவருக்கு எதுவும் இருப்பதாகவோ அல்லது இல் லாததாகவோதான் இருக்க முடியும்; எதுவும் அதுவாகவும் அதேபோதில் வேறொன்றாகவும் இருக்க முடியாது. நேர் நிலையும் எதிர்நிலையும் அறவே ஒன்றையொன்று விலக் கியே தீர வேண்டும்; காரணமும் காரியமும் ஒன்றுக்கொன்று

* விவிலிய நூல், மத்தேயு, அத்தியாயம் 5, பாடல் 37. —பா-ர்.

கெட்டியாக இறுகிய எதிரிடையாகவே இருந்தாக வேண்டும்.

முதற்பார்வைக்கு இந்தச் சிந்தனை முறை அறிவார்ந்ததாகவே நமக்குத் தோன்றுகிறது, ஏனெனில் இது சர்வசாதாரணப் பொது அறிவு எனப்படுவதின் சிந்தனை முறையாகும். ஆனால் இந்தச் சர்வசாதாரணப் பொது அறிவு அதற்குரிய நான்கு சுவர்களுக்குள் அடைபட்ட அதன் அன்றாட இருப்பிடத்தின் வரம்புகளுக்குள் கீர்த்திமிக்கதாகத் திகழ்ந்தாலும், ஆராய்ச்சி எனும் பரவலான உலகினுள் அடியெடுத்து வைத்ததும் உடனே விந்தைமிகு வினோதங்களை அனுபவிக்க நேர்கிறது. இந்த இயக்க மறுப்பியல் சிந்தனை முறை பரிசீலிக்கப்படும் குறிப்பிட்ட ஆய்வுப் பொருளுக்குத் தக்கவாறு மாறுபடும் பரப்பளவு கொண்ட பல செயற்களங்களில் நியாயமாகவும் அவசியமாகவும் இருந்தாலுங்கூட, முன்னோ பின்னோ கட்டாயம் ஒரு வரம்பை வந்தடைகிறது; இந்த வரம்புக்கு அப்பால் ஒருதலைபட்சமானதாக, குறுகிய வரையறைகளுக்கு உட்பட்டதாக, சூக்குமக் கருத்தியல்பானதாக, தீராத முரண்பாடுகளில் சிக்குண்டு விடுவதாக மாறுகிறது. தனிப்பட்டவற்றில் சிந்தனை செலுத்துகையில் அவற்றுக்கிடையிலான தொடர்புகளை அது மறந்து விடுகிறது; அவற்றின் இருத்தலில் சிந்தனை செலுத்துகையில் அந்த இருத்தலின் ஆதியையும் அந்தத்தையும் மறந்து விடுகிறது; அவற்றின் உறக்கத்தில் சிந்தனை செலுத்துகையில் அவற்றின் இயக்கத்தை மறந்து விடுகிறது; நுண்விவரங்களில் கருத்து செலுத்தி முழுமையைக் காணத் தவறி விடுகிறது.

அன்றாட அலுவல்களைப் பொறுத்த அளவுக்கு, உதாரணமாக, ஒரு பிராணி உயிரோடு இருக்கிறதா இல்லையா என்பது நமக்குத் தெரியும், சந்தேகத்துக்கு இடமின்றி இதை நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் நெருங்கிச் சென்று ஆராய்கையில் பல சந்தர்ப்பங்களில் இது மிகச் சிக்கலான பிரச்சினையாவதைக் காண்கிறோம். சட்டத் துறையினர் இதை நன்கு அறிவர். கர்ப்பமடைந்த தாயின் வயிற்றிலிருக்கும் சிசுவைக் கொல்லுதல் எந்த வரம்புக்கு அப்பால்

கொலைக் குற்றமாகிறது என்று அறிவுக்குகந்த ஒரு வரம்பை வகுத்திட இவர்கள் எவ்வளவோ மண்டையை உடைத்துக் கொண்டும் பயனில்லை. மரணம் உண்டாகும் தருணத்தை முழு உறுதியுடன் நிர்ணயிப்பதும் இதே போல முடியாத காரியமே; ஏனெனில் மரணம் திடுமென உடனடியாக நடைபெறும் நொடிநேர நிகழ்ச்சியல்ல, நீடித்ததொரு நிகழ்ச்சிப் போக்கு என்பதை உடலியல் நிரூபித்திருக்கிறது.

அதே போல் உயிருள்ளது எதுவும் இதே முறையில் ஒவ்வொரு கணமும் அதுவாகவும் அதே போதில் அதுவல்லாததாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு கணமும் அது புறத்தே இருந்து தரப்படும் பொருளைக் கிரகித்துக் கொள்கிறது; பிற பொருளைத் தன்னுள்ளிருந்து வெளியேற்றுகிறது. ஒவ்வொரு கணமும் அதன் உடலில் சில உயிரணுக்கள் மடிகின்றன, வேறு சில உயிரணுக்கள் புதிதாக உருவாகித் தோன்றுகின்றன. அதிக நேரத்திலோ, குறைந்த நேரத்திலோ அதன் உடலின் பொருள் அறவே புதுப்பிக்கப்படுகிறது, பொருளின் புதிய மூலக்கூறுகளால் மாற்றப்படுகிறது. உயிருள்ளது எதுவும் இவ்விதம் எந்நேரமும் தானேயாகவும் மற்றும் தானல்லாத பிறிதொன்றாகவும் இருக்கின்றது.

தவிரவும், நெருங்கிச் சென்று ஆராய்கையில் ஒவ்வொரு முரண்நிலையின் இரு துருவங்களும்—உதாரணமாக, நேர்நிலையும் எதிர்நிலையும்—எந்த அளவுக்கு ஒன்றுக்கொன்று எதிராக இருக்கின்றனவோ, அதே அளவுக்குப் பிரிக்க முடியாதனவாகவும் இருக்கக் காண்கிறோம்; எவ்வளவுதான் ஒன்றையொன்று எதிர்த்துக் கொண்ட போதிலும் பரஸ்பரம் அவை ஒன்றுள் ஒன்று ஊடுருவக் காண்கிறோம். இதே போலக் காரணமும் காரியமும் தனிப்பட்ட உதாரணங்களில் கையாளப்படுகையில் மட்டுமே ஏற்புடைத்த கருத்தோட்டங்களாக அமையக் காண்கிறோம்; இந்தத் தனிப்பட்ட உதாரணங்களைப் பிரபஞ்சம் முழுமையுடனுமான அவற்றின் பொதுத் தொடர்பினில் பரிசீலிக்க முற்பட்டதும் இக்கருத்தோட்டங்கள் ஒன்றோடொன்று இணைந்து கலக்கக் காண்கிறோம்; காரணங்களும் காரியங்களும் ஓயாமல் இடம் மாறி இங்கே இப்போது காரியமாக இருப்பது

அங்கே அப்போது காரணமாகவும் இதற்கு எதிர்மாறாகவும் அமையும் பிரபஞ்ச அளவிலாகிய செயலையும் எதிர் செயலையும் பற்றி சிந்திக்கையில் இக்கருத்தோட்டங்கள் பெருங்குழப்படியாவதைக் காண்கிறோம்.

இந்த நிகழ்ச்சிப்போக்குகள், சிந்தனை முறைகள் எவையும் இயக்க மறுப்பியலான அறிவாய்வின் கட்டுக்கோப்பில் இடம் பெறுவதில்லை. ஆனால் இயக்கவியல்,இதற்கு மாறாக, பொருள்களையும் அவற்றின் பிரதிமைகளாகிய கருத்துக் களையும் அவற்றுக்குரிய அத்தியாவசியத் தொடர்பிலும் சங்கிலித்தொடர் கோவையிலும் இயக்கத்திலும் ஆதியிலும் அந்தத்திலும் உய்த்துணர்ந்து புரிந்து கொள்கிறது; ஆகவே மேற்கூறிய நிகழ்ச்சிப்போக்குகள் யாவும் அதற்குத் தனது செயல்முறையைச் சரியென உறுதிப்படுத்தும் சான்றுகளாகி விடுகின்றன.

இயற்கைதான் இயக்கவியலுக்கான நிரூபணம். நவீன இயற்கை விஞ்ஞானத்தைப் பொறுத்த வரை, அது இந்த நிரூபணத்துக்கு அன்றாடம் மேலும் மேலும் கூடுதலான விவரப்பொருள்களை வழங்கியுள்ளது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்; முடிவாகப் பார்க்குமிடத்து, இயற்கை இயக்க வியல் வழியில் செயல்படுகிறதே அன்றி இயக்க மறுப்பிய லான வழியில் அல்ல என்பதை இவ்விதம் அது தெளிவுபடுத்தி யுள்ளது; தொடங்கிய நிலைக்கே நிரந்தரமாகத் திரும்பித் திரும்பி வந்து சேரும் அலைவட்டங்களில் சாசுவதமான ஒரே தன்மையதாக இயற்கை இயங்கவில்லை, மாறாக வரலாற்று வழியிலான மெய்யான பரிணாமம் அடைகிறது என்பதை அது தெளிவுபடுத்தியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத் தில் ஏனையோர் எல்லோருக்கும் முன்பு டார்வினைக் குறிப் பிட்டாக வேண்டும். உயிருள்ளவை யாவும், தாவரங்களும் பிராணிகளும் மனிதனும்கூட, கோடிக்கணக்கான ஆண்டு களாக நடைபெற்று வரும் பரிணாம நிகழ்ச்சிப்போக்கின் விளைவாகுமென்று நிரூபித்ததன் மூலம் அவர் இயற்கையைப் பற்றிய இயக்க மறுப்பியலான கருத்தோட்டத்துக்கு இதன் முன் என்றையும் விட மிகக் கடுமையான அடி கிடைக்கச் செய்தார். ஆயினும் இயக்கவியல் முறையில் சிந்திக்கக்

கற்றுக் கொண்ட இயற்கை விஞ்ஞானிகள் மிகச் சொற்பமே ஆவர். விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் விளைவுகள் முன் கூட்டியே புனைந்தமைக்கப்பட்ட சிந்தனை முறைகளுக்கு ஒவ்வாதனவாக இருத்தலால் எழும் இந்த மோதல்தான் தற்போது தத்துவார்த்த இயற்கை விஞ்ஞானத்தில் ஆட்சி செலுத்தி கற்பிப்போரையும் கற்போரையும், நூலாசிரியர் களையும் வாசகர்களையும் ஒருங்கே திண்டாடச் செய்யும் முடிவில்லாக் குழப்பத்துக்குக் காரணமாகும்.

ஆகவே பிரபஞ்சத்தையும் அதன் பரிணாமத்தையும் மனிதகுலத்தின் வளர்ச்சியையும் இந்தப் பரிணாமம் மனிதர் களது மனத்தில் பிரதிபலிப்பதையும் துல்லியமாகப் பிரதி மையாக்கிக் காட்டுதல், உருவாதலும் மறைதலுமாகிய, முற்போக்கான அல்லது பிற்போக்கான மாறுதல்களாகிய எண்ணிலடங்காச் செயல்களையும் எதிர்செயல்களையும் இடையறாது கணக்கில் எடுத்துக் கொள்ளும் இயக்கவியல் முறைகளால் மட்டும்தான் சாத்தியம். புதிய ஜெர்மன் தத் துவவியல் இந்த வழியில்தான் நடைபோட்டு வந்துள்ளது நியூட்டனுடைய நிலையான சூரியமண்டலத்தையும் பெயர் பெற்ற அந்தத் துவக்கத் தூண்டுவிசை ஒரு தரம் அளிக்கப் பட்ட பின் என்றென்றும் நிரந்தரமாக இருக்கக் கூடியதான அதன் நிலைபேறுடைமையையும் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் விளைவாக்கி சூரியனும் அதன் எல்லாக் கிரகங் களும் சுழலும் வாயு முகிற்படலத்திலிருந்து உருவாயின என்று விளக்கிக் கூறித் தத்துவவியலில் கான்ட் தமது பணியை ஆரம்பித்தார். சூரியமண்டலம் இவ்வாறுதான் தோன்றிய தென்றால் வருங்காலத்தில் அது இறக்கப் போவதும் நிச்சயமே என்ற முடிவிற்கும் இதிலிருந்து அவர் வந்தடைந் தார். அரை நூற்றாண்டுக்குப் பிறகு அவருடைய தத்து வத்தை லாப்லாஸ் கணித வழியில் நிலைநாட்டினார். அதற் கும் அரை நூற்றாண்டுக்குப் பிற்பாடு இத்தகைய வெண்சுடர் வாயுத் திரட்சிகள் இறுகு நிலையின் பல்வேறு கட்டங்களில் அண்டவெளியில் இருப்பதை நிறமாலைக் கருவி நிரூபித்தது.

இந்தப் புதிய ஜெர்மன் தத்துவவியல் ஹெகலின் அமைப் பில் உச்சிமுடியை வந்தடைந்தது. இந்த அமைப்பில்—

இதன் பெருஞ்சிறப்பு இதில்தான் காணக் கிட்க்கிறது—இயற்கை உலகு, வரலாற்று உலகு, அறிவுலகு ஆகிய அனைத்தும் முதன்முதலாக ஒரு வளர்ச்சிப்போக்காய் காட்டப்பட்டது; அதாவது, இடையறாது ஓயாமல் இயங்கியும் திரிந்தும் உருமாறியும் வளர்ச்சியுற்றும் வரும் ஒன்றாகக் காட்டப்பட்டது; இந்த இயக்கம், வளர்ச்சி அனைத்தையும் தொடர்ச்சியான ஒரு முழுமையாக்கும் உட்தொடர்பைப் புலப்படுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டது. இந்த நோக்கு நிலையிலிருந்து பார்க்கையில் மனிதகுல வரலாறு, இதுகாறும் தோன்றியது போல, முதிர்ச்சியுற்ற தத்துவவியலின் அறிவாய்வுத் தீர்ப்பு மேடையின் முன்னால் ஒருங்கே கண்டனம் செய்யப்பட வேண்டியவையும் நம் நினைவில் இல்லாதபடி கூடுமான விரைவில் மறந்து விடுவதே சிறப்பென்று கருத வேண்டியவையுமான அர்த்தமற்ற வன்முறைச் செயல்களின் கண்மூடித்தனமான கூத்தாகத் தோன்றவில்லை; இதற்கு மாறாய், மனிதனது பரிணாம வளர்ச்சிப்போக்காகத் தோன்றியது. இந்த வளர்ச்சிப்போக்கு படிப்படியாக முன்செல்வதைக் கோணல்மாணலான அதன் எல்லா வழிகளிலும் கவனித்துச் சென்று வெளிப்பார்வைக்கு அகஸ்மாத்தானவையாகத் தெரியும் எல்லா நிகழ்வுகளினூடாகவும் இழையோடும் உள்ளார்ந்த விதியைப் புலப்படுத்திக் காட்டுவதுதான் இப்பொழுது அறிவாற்றலின் பணி என்றாகியது.

தான் எடுத்துரைத்த பிரச்சினைக்கு ஹெகலின் அமைப்பு தீர்வு காணவில்லை என்பது இங்கு முக்கியமல்ல; இந்தப் பிரச்சினையை எடுத்துரைத்தது என்பதுதான் அதன் சகாப்தகரமான முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பாகும். தனி ஒருவர் எவராலும் எக்காலத்திலும் தீர்வு காண இயலாத ஒரு பிரச்சினை இது. அவர் காலத்தில் ஹெகல்—சான்-சிமோனுடன் கூட—தலையாய கலைக்களஞ்சியப் புலமை வாய்ந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தார் என்ற போதிலும், முதலாவதாக அவருடைய அறிவின் வீச்சு தவிர்க்க முடியாதபடி எல்லைக்கு உட்பட்டிருந்ததாலும், இரண்டாவதாக அவர் காலத்திய அறிவும் கருத்தோட்டங்களும் வீச்சிலும் ஆழத்திலும் எல்லைக்கு உட்பட்டிருந்ததாலும், அவர் வரம்பிடப்

பட்டிருந்தார். இந்த வரம்புகளுடன் கூட மூன்றாவது ஒன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஹெகல் ஒரு கருத்து முதல்வாதி. அவர் தமது மனத்தின் எண்ணங்களை மெய்யான பொருள்களையும் நிகழ்ச்சிப்போக்குகளையும் மிகுதியாகவோ குறைவாகவோ கருத்தியல்பாக அமைந்த சித்திரங்களாகக் கொள்ளவில்லை; இதற்கு மாறாக, பொருள்களும் அவற்றின் பரிணாமமும் உலகம் தோன்றுவதற்கு முன்பிருந்தே வரம்பில்லா அனாதிக் காலமாக எங்கோ இருந்து வரும் ''கருத்தின்'' மெய்மையாக்கமாக அமைந்த சித்திரங்களே அன்றி வேறல்ல என்பதாகக் கொண்டார். இந்த விதமான சிந்தனை யாவற்றையும் தலை கீழாக மாற்றியது; உலகில் பொருள்களிடையே உண்மையில் இருந்து வரும் தொடர்பினை நேர்மாறாகத் திருப்பியது. உண்மைகளின் தனிப்பட்ட தொகுதிகள் பலவற்றையும் ஹெகல் பிழையின்றியும் மிகுந்த விவேகத்துடனும் புரிந்து கொண்டார் என்றாலும், மேற்கூறிய காரணங்களினால் குறைபாடானவையும் செயற்கையானவையும் இட்டுக்கட்டப்பட்டவையும்—சுருங்கச் சொன்னால், விவரங்களின் நோக்கில் தவறானவை—நிறைய இருந்தன. ஹெகலின் அமைப்பே மகத்தானதோர் அகாலப் பிறவியாக அமைந்தது, இத்தகையவற்றுள் கடைசியானதாகவும் விளங்கிற்று. ஏனெனில் அது தீர்வு காண முடியாத உள்முரண்பாட்டால் பீடிக்கப்பட்டிருந்தது. ஒரு புறத்தில், அது மனிதகுல வரலாறு பரிணாம வளர்ச்சிப் போக்காகும் என்ற கருத்தோட்டத்தைத் தனது ஆதார முதற்கோளாகக் கொண்டிருந்தது; இந்தப் பரிணாம வளர்ச்சிப் போக்கு தனிமுதல் உண்மை என்பதான எதையும் கண்டு பிடிப்பதில் தனது அறிவாற்றலின் இறுதி நிலையை வந்தடைவது இந்த வளர்ச்சிப்போக்கின் தன்மைக்கே முரணானதாகும். ஆனால், மறு புறத்தில், ஹெகலின் அமைப்பு தானே தான் இந்தத் தனிமுதல் உண்மையின் சாரப்பொருள் என்பதாக உரிமை கொண்டாடிற்று. இயற்கையையும் வரலாற்றையும் பற்றிய அறிவு அனைத்தையும் தன்னகத்தே கொண்டு என்றென்றைக்குமாக இறுதி முடிவான அமைப்பாகுதல் இயக்கவியல் சிந்தனையின் அடிப்படை விதிக்கே

முரணாகும். புறப் பிரபஞ்சத்தைப் பற்றிய முறையான அறிவு பெருநடை போட்டு காலத்துக்குக் காலம் முன்னேறிச் செல்ல வல்லது என்னும் கருத்தை இந்த அடிப்படை விதி தன்னுள் கொண்டுள்ளதே அன்றி, எவ்வகையிலும் அதை ஒதுக்கி விலக்கவில்லை.

ஜெர்மன் கருத்துமுதல்வாதத்தின் இந்த அடிப்படை முரண்பாடு உணரப்பட்டதும் தவிர்க்க முடியாதபடி அது பொருள்முதல்வாதத்துக்குத் திருப்பி அழைத்துச் சென்றது. ஆனால் இந்தப் பொருள்முதல்வாதம் பதினெட்டாம் நூற்றாண்டின் பச்சையான இயக்க மறுப்பியலான, முழுக்க முழுக்க யாந்திரிகப் பொருள்முதல்வாதமல்ல என்பது குறிப்பிடத்தக்கது. பழைய பொருள்முதல்வாதம் முந்திய வரலாறு அனைத்தையும் அறிவுக்கு ஒவ்வாததும் வன்முறையுமாகிய வெறுங்குப்பையாகக் கருதிற்று; ஆனால் நவீனப் பொருள்முதல்வாதம் இந்த வரலாற்றில் மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சிப்போக்கைக் காண்கிறது, இவ்வளர்ச்சிப் போக்கின் விதிகளைக் கண்டறிவதே தனது நோக்கமெனக் கொள்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டு பிரெஞ்சுக்காரர்களிடமும், ஏன் ஹெகலிடமும்கூட, இயற்கை ஒட்டுமொத்தமாகக் குறுகிய வட்டங்களில் இயங்கியதாகவும் நியூட்டன் போதித்ததைப் போல் நிரந்தரமான விண்கோள்களையும் லின்னேயஸ் போதித்தது போல் மாற முடியாத உயிர் வகைகளையும் கொண்டு என்றென்றும் மாற்றமின்றி நிலையாக இருந்ததாகவும் கூறிய கருத்தோட்டமே நிலவி வந்தது. ஆனால் நவீனப் பொருள்முதல்வாதம் இயற்கை விஞ்ஞானத்தின் அண்மைக் காலத்தியக் கண்டுபிடிப்புகளையும் தன்னுள் கொண்டுள்ளது. இவற்றின்படி இயற்கையும் கால அளவிலான அதன் வரலாற்றைப் பெற்றிருக்கிறது; விண்கோள்களும், சாதக நிலைமைகளில் அவற்றில் வாழும் உயிர் வகைகளைப் போலவே, பிறந்தெழுந்து கொண்டும் இறந்து மறைந்து கொண்டுமுள்ளன; மொத்தத்தில் இயற்கை அலை வட்டச் சுழல்களில் இயங்குவதாகவே சொல்ல வேண்டியிருப்பினும், இந்தச் சுழல்கள் வரம்பின்றி மிகப் பெரும் பரிமாணங்களை கொண்டவையாகி விடுகின்றன. இரு அம்சங்

களிலும் நவீனப் பொருள்முதல்வாதம் சாராம்சத்தில் இயக்க வியல் தன்மையதாகும்; இனி இதற்கு அரசியின் கோலம் பூண்டு ஏனைய விஞ்ஞானங்களது கும்பல் மீது ஆட்சி செலுத்துவதாகப் பாசாங்கு செய்யும் வகைப்பட்டதான ஒரு தத்துவவியலின் உதவி தேவையில்லை. அந்தந்த விஞ்ஞான மும் பொருள்களின் முழு மொத்தத்திலும் பொருள்களைப் பற்றிய நமது அறிவிலும் தனக்குள்ள நிலையினைத் தெளிவு படுத்த வேண்டியதாகியதும், இந்த முழு மொத்தம் குறித்துக் பரிசீலிக்கும் ஒரு தனி விஞ்ஞானம் தேவையற்றது அல்லது அவசியமற்றது ஆகி விடுகிறது. முந்தியத் தத்துவவியல் அனைத்திலும் மறையாமல் இனியும் எஞ்சியிருப்பது சிந் தனையையும் அதன் விதிகளையும் பற்றிய விஞ்ஞானம் மட்டும்தான்—அதாவது, சம்பிரதாயத் தர்க்கவாதமும் இயக்கவியலும் மட்டும்தான். ஏனைய அனைத்தும் இயற் கையையும் வரலாற்றையும் பற்றிய நேர்முக விஞ்ஞானத்தில் உள்ளடங்கி விடுகிறது.

இயற்கை பற்றிய கருத்தோட்டத்தில் புரட்சி ஏற்படு வது அதற்குரிய நேர்முக விவரப்பொருள்கள் ஆராய்ச்சித் துறையால் எந்த அளவுக்கு வழங்கப்படுகின்றன என்பதைப் பொறுத்திருந்த போது, அதற்கு மிகவும் முன்னதாகவே குறிப்பிட்ட சில வரலாற்று உண்மைகள் புலனாகி, வரலாறு பற்றிய கருத்தோட்டத்தில் தீர்மானகரமான ஒரு மாறுத லுக்கு வழிவகுத்திருந்தன. 1831ல் முதலாவது தொழிலாளி வர்க்க எழுச்சி லியோனில் நடைபெற்றது; 1838க்கும் 1842க்கும் இடையில் தேச அளவிலான முதலாவது தொழி லாளி வர்க்க இயக்கமாகிய ஆங்கில சார்ட்டிஸ்டுகளின் இயக்கம் அதன் உச்சநிலையை அடைந்தது. மிகவும் முன் னேறிய ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றில், ஒரு புறத்தில் நவீனத் தொழில்துறையின் வளர்ச்சிக்கும் மறு புறத்தில் முதலாளித்துவ வர்க்கம் புதிதாகப் பெற்றுக் கொண்ட அரசியல் மேலாண்மைக்கும் ஏற்ப, தொழிலாளி வர்க்கத்துக் கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் முன்னணிக்கு வந்தது. மூலதனமும் உழைப்பும் ஒருமித்த நலன்கள் கொண்டவை என்றும் தடையில்லாப்

போட்டியின் விளைவாக சர்வவியாபகமான இசைவும் சுபிட்சமும் உண்டாகும் என்றும் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் கூறியவற்றை உண்மைகள் மேலும் மேலும் மூர்க்கமாகப் பொய்ப்பித்து வந்தன. இவற்றை எல்லாம் இனி கவனியாது ஒதுக்க முடியவில்லை; அதே போல, குறைபாடானதுதான் எனினும் இவற்றின் தத்துவார்த்த வெளிப்பாடாக அமைந்த பிரெஞ்சு, ஆங்கில சோஷலிசத்தையும் கவனியாது ஒதுக்க முடியவில்லை. ஆனால் வரலாறு பற்றிய பழைய கருத்துமுதல்வாதக் கருத்தோட்டம் இன்னமும் கழித்துக் கட்டப்படாமலே இருந்து வந்தது; இந்தக் கருத்தோட்டம் பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்ட வர்க்கப் போராட்டங்கள் குறித்து, பொருளாதார நலன்கள் குறித்து ஏதும் அறியாதது; பொருளுற்பத்தியும் மற்றும் பொருளாதார உறவுகள் யாவுமே இதில் இடைக் குறிப்பாகவே, ''நாகரிகத்தினுடைய வரலாற்றின்'' கீழ் நிலைக் கூறுகளாகவே இடம் பெற்று வந்தன.

கடந்த வரலாறு அனைத்தும் புதிதாகப் பரிசீலனை செய்யப்படுவதை இந்தப் புதிய உண்மைகள் அவசியமாக்கின. இதன் பின், கடந்த வரலாறு அனைத்துமே—அதன் முதிர்ச்சியற்ற புராதன கட்டங்களைத் தவிர்த்து—வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என்பது புலனாயிற்று; போரிடும் இந்தச் சமூக வர்க்கங்கள் எப்பொழுதுமே பொருளுற்பத்தி, பரிவர்த்தனை முறைகளின் விளைவாக உருவாகின்றவை—சுருங்கக் கூறுமிடத்து அவற்றின் காலத்தியப் பொருளாதார நிலைமைகளின் விளைவாக உருவாகின்றவை—என்பது புலனாயிற்று; சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்புதான் மெய்யான அடித்தளமாக எப்பொழுதும் அமைகிறது, இதிலிருந்து தொடங்கினால்தான் வரலாற்றின் அந்தந்தக் காலக்கூறுக்கு உரிய நீதிநெறி, அரசியல் நிறுவனங்களும் மற்றும் சமயக் கருத்துக்களும் தத்துவக் கருத்துக்களும் பிற கருத்துக்களுமாகிய மேற்கட்டுமானம் அனைத்துக்கும் நாம் முடிவான விளக்கம் காண முடியும். ஹெகல் வரலாற்றை இயக்க மறுப்பியலிலிருந்து விடுவித்து, அதற்கு இயக்கவியல் தன்மையை அளித்திருந்தார்.

ஆனால் வரலாறு பற்றிய அவரது கருத்தோட்டம் சாராம் சத்தில் கருத்துமுதல்வாத வகைப்பட்டதாகவே இருந்தது. முடிவில் இப்பொழுது கருத்துமுதல்வாதம் அதன் கடைசிக் புகலிடமாக அமைந்திருந்த வரலாற்றின் தத்துவத்திலிருந் தும் விரட்டப்பட்டது. இப்பொழுது வரலாற்றுக்குப் பொருள் முதல்வாத விளக்கம் முன்வைக்கப்பட்டது; இதுகாறும் செய்யப்பட்டது போல, மனிதனது உணர்வைக் கொண்டு அவனுடைய வாழ்நிலைக்கு விளக்கம் கூறுவதற்குப் பதில், மனிதனது வாழ்நிலையைக் கொண்டு அவனுடைய உணர் வுக்கு விளக்கம் கூறுவதற்கு ஒரு வழி கண்டறியப்பட்டது.

அக்காலத்திலிருந்து சோஷலிசம் இந்த அல்லது அந்த மேதாவிலாச மூளையின் அகஸ்மாத்தான கண்டுபிடிப்பாக இல்லாமல், வரலாற்று வழியில் வளர்ச்சியுற்ற இரு வர்க்கங் களிடையே—பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க் கத்துக்கும் இடையே—நடைபெறும் போராட்டத்திலிருந்து தோன்றிய அவசிய விளைவு ஆயிற்று. இனி சோஷலிசத்தின் பணி சாத்தியமான முழு அளவுக்குக் குற்றங்குறையில்லாத, நிறைவான ஒரு சமுதாய அமைப்பை உற்பத்தி செய்வ தல்ல; தவிர்க்க முடியாத அவசியத்தின் காரணமாக இந்த வர்க்கங்களும் இவற்றுக்கிடையிலான பகைமையும் உதித் தெழும் நிகழ்ச்சிகளது வரலாற்று-பொருளாதார வரிசை யமைப்பைப் பரிசீலிப்பதும் இவ்வாறு தோற்றுவிக்கப்படும் பொருளாதார நிலைமைகளில் இந்த மோதலுக்கு முடிவு கட்டுவதற்கான சாதனங்களைக் கண்டுபிடிப்பதும்தான் அதற்குரிய பணியாகும். ஆனால் இயற்கை பற்றி பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளுக்கு இருந்த கருத்தோட்டம் எப்படி இயக்கவியலுக்கும் நவீன இயற்கை விஞ்ஞானத்துக்கும் ஒவ் வாததாய் இருந்ததோ, அதே அளவுக்கு முந்திய நாட்களது சோஷலிசம் இந்தப் பொருள்முதல்வாதக் கருத்தோட்டத் துக்கு ஒவ்வாததாக இருந்தது. முந்திய நாட்களது சோஷ லிசம் நடப்பிலுள்ள முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையையும் அதன் விளைவுகளையும் கண்டன விமர்சனம் செய்தது மெய்தான்; ஆனால் அதனால் அவற்றுக்கு விளக்கம் கூற முடியவில்லை; ஆகவே அவற்றின் மீது ஆட்சி செய்ய

இயலவில்லை; அவற்றைத் தீயவை என்று நிராகரிக்க மட்டுமே அதனால் முடிந்தது. தொழிலாளி வர்க்கம் சுரண்டப் படுவதை, முதலாளித்துவத்தில் தவிர்க்க முடியாததாக இருக்கும் இதனை, இந்த முந்திய சோஷலிசம் எவ்வளவு கடுமையாய்க் கண்டித்துச் சாடியதோ, அவ்வளவு குறைவாகவே அதனால் இந்தச் சுரண்டல் எதில் அடங்கியிருந்தது, இது எப்படி ஆரம்பமாயிற்று என்பதைத் தெளிவுபடக் காட்ட முடிந்தது. ஆனால் இதைச் செய்வதற்குத் தேவையாக இருந்தது என்னவென்றால்: 1) முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை அதன் வரலாற்றுத் தொடர்பிலும் குறிப்பிட்ட வரலாற்றுக் காலக்கூறில் அது தவிர்க்க முடியாததாவதிலும் தெளிவுபடக் காட்டி இவ்விதம் அதன் வீழ்ச்சியும் தவிர்க்க முடியாததாகி விடுவதைத் தெளிவுபடுத்தல்; 2) இன்னமும் தெளிவுபடுத்தப்படாத, இரகசியமாக இருந்து வந்த அதன் சாராம்சத் தன்மையை அம்பலப்படுத்திக் காட்டுதல். உபரி மதிப்பு கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் இவை செய்யப்பட்டன. ஊதியம் தரப்படாத உழைப்பை அபகரித்துக் கொள்வதுதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கும் இதில் தொழிலாளர் சுரண்டப்படுதலுக்கும் அடிப்படையாக அமைகிறதென்று தெளிவுபடுத்தப்பட்டது; முதலாளி தமது தொழிலாளியின் உழைப்புச் சக்தியைச் சந்தையில் விற்பனைக்கு வரும் பரிவர்த்தனைப் பண்டம் என்ற முறையில் அதற்குரிய முழு மதிப்பையும் தந்து வாங்கிக் கொண்டாலும்கூட, தாம் கொடுத்ததற்கும் கூடுதலாக அதிலிருந்து மதிப்பை வடித்தெடுத்துக் கொள்கிறார் என்பது விளக்கிக் காட்டப்பட்டது; உடைமையாளர் வர்க்கங்களது கைகளில் தொடர்ந்து மேன்மேலும் குவிந்து வரும் பெருந் தொகையான மூலதனத்துக்கு ஆதாரமாயுள்ள அந்த மதிப்புத் தொகைகள் இறுதியாக ஆராய்கையில் இந்த உபரி மதிப்பிலிருந்துதான் பெறப்படுகின்றன என்பதும் தெளிவாகக் காட்டப்பட்டது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி உருவான முறையும் மற்றும் மூலதனத்தின் உற்பத்தியும் விளக்கப்பட்டன.

வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டம்,

உபரி மதிப்பு மூலம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இரகசியம் புலப்படுத்தப்படல் ஆகிய இந்த மாபெரும் இரு கண்டுபிடிப்புகளுக்காக நாம் மார்க்சுக்குக் கடமைப்பட்டிருக் கிறோம். இந்தக் கண்டுபிடிப்புகளின் விளைவாக சோஷ லிசம் ஒரு விஞ்ஞானமாயிற்று; இனி அடுத்தபடிச் செய்ய வேண்டியிருந்த பணி அதன் எல்லா விவரங்களையும் உறவு களையும் வகுத்தமைத்திடுவதுதான்.

## III

வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டம் மனித வாழ்வுக்கு ஆதாரமான சாதனங்களின் உற்பத்தியும் அதற்கு அடுத்தபடி இந்த உற்பத்திப் பொருள்களின் பரிவர்த் தனையும்தான் சமுதாயக் கட்டமைப்பு அனைத்துக்குமான அடித்தளமாகுமென்ற வரையறுப்பிலிருந்து தொடங்குகிறது; வரலாற்றில் தோன்றியிருக்கும் ஒவ்வொரு சமுதாயத்திலும் எவ்விதம் செல்வம் வினியோகிக்கப்படுகிறது, எப்படிச் சமு தாயம் வர்க்கங்கள் அல்லது படிநிலைகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது என்பது என்ன உற்பத்தி செய்யப்படுகிறது, எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது, உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் எவ்விதம் பரிவர்த்தனை செய்து கொள்ளப் படுகின்றன என்பதைச் சார்ந்தே உள்ளது. இந்தக் கண் ணோட்டத்தின்படி எல்லாச் சமுதாய மாறுதல்களுக்கும் அரசியல் புரட்சிகளுக்குமான இறுதிக் காரணங்களைப் பொருளுற்பத்தி, வினியோக முறைகளின் மாறுதல்களில் கண்டறிய வேண்டுமே தவிர மனிதனது மூளையில் அல்ல; நிலையான நிரந்திர உண்மை குறித்தும் நிரந்தர நீதி குறித் தும் மனிதனுக்குக் கிடைக்கப் பெறும் முன்னிலும் சிறப்பான உள்ளுணர்வில் அல்ல. இவற்றை அந்தந்தச் சகாப்தத்தின் பொருளாதாரத்தில் கண்டறிய வேண்டுமே தவிர, தத்துவத் தில் அல்ல. தற்போதுள்ள சமுதாய நிறுவனங்கள் பகுத்தறி வுக்கு ஒவ்வாமலும் நீதிக்கு முரணாகவும் இருக்கின்றன, ''நியாயம் அநியாயமாகவும் தர்மம் அதர்மமாகவும் மாறி

விட்டன''* என்ற உணர்வு வளர்ந்து வருகிறதென்றால், பொருளுற்பத்தி, விநியோக முறைகளில் ஓசைப்படாமல் மாறுதல்கள் ஏற்பட்டு முந்திய பொருளாதார நிலைமை களுக்கு இசைவாயிருந்த சமுதாய அமைப்பு இனி இசைவற்ற தாகி விட்டது என்பதற்கான நிரூபணமாகவே இதைக் கொள்ள வேண்டும். பகிரங்கமாகிவிட்ட இந்த இசைவின் மையை அகற்றுவதற்கு வேண்டிய சாதனங்களும் மாறி விட்ட இந்தப் பொருளுற்பத்தி முறைகளிலேதான் அதிக மாகவோ, குறைவாகவோ வளர்ச்சியுற்ற நிலையில் இருந் தாக வேண்டுமென்பதும் இதிலிருந்து பெறப்படுகிறது. இந்தச் சாதனங்கள் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து வருவித்துணர்ந்து புனையப்பட வேண்டியவை அல்ல; தற் போதுள்ள பொருளுற்பத்தி அமைப்பின் மறுக்க முடியாத உண்மைகளிலிருந்தே இவற்றைக் கண்டறிந்து கொள்ள வேண் டும்.

அப்படியானால், இது சம்பந்தமாக நவீன சோஷலிசத் தின் நிலை என்ன?

தற்போதுள்ள சமூக அமைப்பு இன்றைய ஆளும் வர்க்க மாகிய முதலாளித்துவ வர்க்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட தாகும்—தற்போது இது ஏறத்தாழப் பொதுவாக ஒத்துக் கொள்ளப்படுகிறது. முதலாளித்துவ வர்க்கத்துக்கே உரித் தான தனிவகைப்பட்ட இந்தப் பொருளுற்பத்தி முறை, மார்க் சைத் தொடர்ந்து முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை என்றழைக்கப்படும் இது, நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு ஒவ்வாததாக இருந்தது; தனிநபர்களுக்கும் சமுதாய வகுப்பு களுக்கும் ஸ்தலக் கூட்டுரிமைக் குழுக்களுக்கும் நிலப்பிரபுத் துவ அமைப்பு வழங்கியிருந்த தனியுரிமைகளுக்கும் மற்றும் பிறவியிலேயே மரபு வழியில் கீழ்ப்படியச் செய்த நிலப் பிரபுத்துவச் சமுதாயக் கட்டமைவின் பந்தங்களுக்கும் இது ஒவ்வாததாக இருந்தது. முதலாளித்துவ வர்க்கம் நிலப் பிரபுத்துவ அமைப்பபைத் தகர்த்து அதன் இடிபாடுகள் மீது

* கேதே, ஃபாவுஸ்ட், பாகம் I, காட்சி 4 (''ஃபாவுஸ் டின் படிப்பறை'').—ப-ர்.

முதலாளித்துவச் சமூக அமைப்பை எழுப்பிற்று; கட்டற்ற போட்டிக்கும் ஆளுரிமைச் சுதந்திரத்துக்கும் பரிவர்த்தனைப் பண்ட உடைமையாளர்கள் எல்லோருக்கும் சட்டமுன்னிலைச் சமத்துவத்துக்கும் இன்ன பிற முதலாளித்துவ வரப்பிரசாதங்களுக்குமான அரசாட்சி அமைக்கப்பட்டது. இதற்குப் பிறகு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை தடையின்றிச் சுதந்திரமாக வளர முடிந்தது. நீராவியும் இயந்திர சாதனங்களும் இயந்திரங்களைக் கொண்டே இயந்திரங்களைக் கட்டுமானம் செய்யும் சாதனங்களும் பழைய பட்டறைத் தொழிலை நவீனத் தொழில்துறையாக மாற்றியது முதலாக முதலாளித்துவ நெறியாண்மையில் உருவாகிய உற்பத்தி சக்திகள் இதன் முன் கண்டும் கேட்டுமிராத வேகத்திலும் அளவிலும் ஓங்கி வளர்ந்தன. ஆனால் முன்பிருந்த பழைய பட்டறைத் தொழிலும் அதன் செல்வாக்கில் புது வளர்ச்சி கண்டிருந்த கைத்தொழிலும் எப்படி அக்காலத்தில் கைவினைச் சங்கங்களது நிலப்பிரபுத்துவத் தடைமதில்கள் மீது முட்டி மோதினவோ, அதே போல இப்பொழுது நவீனத் தொழில்துறை மேலும் முழு அளவுக்கு வளர்ச்சியுற்றுள்ள அதன் இன்றைய நிலையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை அதற்குத் தடை விதித்து இருத்தி வைத்திருக்கும் வரம்புகள் மீது முட்டி மோதுகிறது. புதிய உற்பத்தி சக்திகள் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கான முதலாளித்துவ முறைக்குப் பொருந்தா வண்ணம் ஏற்கெனவே விஞ்சி வளர்ந்து விட்டன. உற்பத்தி சக்திகளுக்கும் பொருளுற்பத்தி முறைக்கும் இடையிலான இந்த மோதல் ஆதித் தீவினைக்கும் தெய்வ நீதிக்கும் இடையிலான மோதலைப் போல் மனிதனது மனத்திலே உதித்தெழுந்தது அல்ல; இம்மோதல் நமக்குப் புறத்தே, புறநிலை உண்மையாக, எதார்த்த நிலவரமாக, இதை மூண்டெழச் செய்தோரது சித்தத்தையும் செயல்களையும்கூடச் சாராமல் தன்னியலாக நிலவுவதாகும். நவீன சோஷலிசம் எதார்த்த உண்மையான இந்த மோதலினால் சிந்தனையில் மறிவினையாக ஏற்படும் பிரதிமையே அன்றி வேறல்ல; முதற்கண் இந்த மோதலால் நேரடியாக வருத்தப்படும் வர்க்கமாகிய

தொழிலாளி வர்க்கத்தின் மனத்தில் கருத்துருவாக உண்டாகும் பிரதிபலிப்பே அன்றி வேறல்ல.

இந்த மோதல் எதில் அடங்கியிருக்கிறது?

முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு முற்பட்ட காலத்தில், அதாவது மத்திய காலத்தில், சிறு தொழில்முறையே பொதுவாக நிலவி வந்தது; உற்பத்திச் சாதனங்கள் அவற்றை உபயோகித்த உழைப்பாளர்களுடைய தனிச்சொத்தாக இருந்ததே இதன் அடிப்படை; கிராமங்களில் சுதந்திரக் குடியானவர்களாகவோ பண்ணையடிமைகளாகவோ இருந்த சிறு விவசாயிகளின் வேளாண்மையும் நகரங்களில் கைவினைச் சங்கங்களாக ஒழுங்கமைந்திருந்த கைத்தொழில்களும் நடைபெற்று வந்தன. நிலம், உழுபடைக் கருவிகள், பட்டறை, வேலைக் கருவிகள் முதலான உழைப்புச் சாதனங்கள் தனி ஆட்களின் உழைப்புச் சாதனங்களாக அமைந்து தனியொரு உழைப்பாளி உபயோகிப்பதற்கு ஏற்றனவாக இருந்தன; ஆகவே தவிர்க்க முடியாதபடி அவை சின்னஞ் சிறியனவாக, சிறுதிறத்தவையாக, குறுகிய எல்லைகளுக்கு உட்பட்டவையாக இருந்தன. இக்காரணத்தால் மிகப் பெரும்பாலும் அவை உற்பத்தியாளருக்கே சொந்தமாக இருந்தன. சிதறிக் கிடந்த, குறுகிய வரம்புகளுக்கு உட்பட்ட இந்த உற்பத்திச் சாதனங்களை ஒருசேரத் திரட்டிக் குவித்தல், இவற்றைப் பெரிதாக்குதல், பொருளுற்பத்திக்கான சக்திமிக்க இன்றைய மாபெரும் உந்துகோல்களாக இவற்றை மாற்றிடுதல்—இதுவேதான் முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கும் அதன் அதிபதியாகிய முதலாளித்துவ வர்க்கத்துக்கும் உரித்தான வரலாற்றுப் பணி ஆயிற்று. பதினைந்தாம் நூற்றாண்டு முதலாக எப்படி இந்தப் பணி எளிய ஒத்துழைப்பு, பட்டறைத் தொழில், நவீனத் தொழில்துறை ஆகிய மூன்று கட்டங்களின் மூலம் வரலாற்று வழியில் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை **மூலதனத்தின்** நான்காம் பிரிவில் மார்க்ஸ் விவரமாக விளக்கியுள்ளார். ஆனால், இதே பிரிவில் காட்டப்பட்டிருப்பது போல, முதலாளித்துவ வர்க்கம் சிறு திறத்தவையான இந்தச் சின்னஞ் சிறு உற்பத்திச் சாதனங்களை ஆற்றல்மிக்க உற்பத்தி சக்தி

களாக மாற்றியமைத்த அதே போதில், தனி ஆட்களது உற்பத்திச் சாதனங்களாக இருந்த இவற்றை மனிதர்கள் கூட்டாக ஒன்றுசேர்ந்தால் மட்டுமே வேலை செய்யும்படியான சமூக உற்பத்திச் சாதனங்களாக அதனால் மாற்றியமைக்காமல் இருக்க முடியவில்லை. கைராட்டையும் கைத்தறியும் கொல்லுப் பட்டறைச் சம்மட்டியும் நூற்பு இயந்திரமாகவும் விசைத்தறியாகவும் நீராவிச் சம்மட்டியாகவும் மாற்றப்பட்டன; தனி ஆளின் பட்டறை நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் வேலையாட்கள் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பது அவசியமாகிவிடும்படியான ஆலையாக மாற்றப்பட்டது. இதே போல பொருளுற்பத்தி தனிப்பட்டவரின் செயல்களது கோவையிலிருந்து சமுதாயத்தின் செயல்களது கோவையாகவும் தனிப்பட்டவரது உற்பத்திப் பொருள்கள் சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்களாகவும் மாறின. இப்பொழுது ஆலையிலிருந்து வெளிவந்த நூலும் துணியும் உலோகச் சாமான்களும் பல தொழிலாளர்கள் சேர்ந்து கூட்டாகத் தயாரித்த பொருள்களாகி விட்டன. வரிசையாக இந்தத் தொழிலாளர்களின் கரங்களையெல்லாம் கடந்த பிறகே இவை தயார் நிலை எய்த முடிந்தது. ''இது நான் செய்தது, இது என்னுடைய உற்பத்திப் பொருள்'' என்று யாராலும் இவை குறித்துச் சொல்ல முடியாது.

ஆனால் எந்தச் சமுதாயத்திலும் முன்கூட்டி வகுக்கப்பட்ட திட்டப்படி அல்லாமல் பையப் படர்ந்து வரும் அந்தத் தன்முனைப்பான உழைப்புப் பிரிவினை பொருளுற்பத்தியின் அடிப்படை வடிவமாகிவிடும் போது, அங்கே உற்பத்திப் பொருள்கள் பரிவர்த்தனைப் பண்டங்களின் வடிவை ஏற்கின்றன. இவற்றின் பரஸ்பரப் பரிமாற்றத்தின் மூலம்தான், கொள்வினை மூலமும் விற்பனை மூலமும்தான், தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் பலதரப்பட்ட தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியதாகிறது. மத்திய காலத்தில் இப்படித்தான் ஆயிற்று. உதாரணமாக, விவசாயி தனது விவசாய விளைபொருள்களைக் கைவினைஞனிடம் விற்று அவனிடமிருந்து கைவினைப் பண்டங்களை வாங்கிக் கொண்டான். பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளர்களாகிய

இந்தத் தனிப்பட்ட உற்பத்தியாளர்களது சமுதாயத்தினுள் புதிய பொருளுற்பத்தி முறை தன்னைப் புகுத்திக் கொண்டது. குறிப்பிட்ட திட்டம் ஏதுமின்றி தன்முனைப்பால் வளர்ந்து சமுதாயம் முழுமையிலும் ஆட்சி புரிந்து வந்த இந்தப் பழைய உழைப்புப் பிரிவினையினூடே இப்பொழுது ஆலையில் ஒழுங்கமையப் பெற்ற குறிப்பிட்ட திட்டத்தின் படியான உழைப்புப் பிரிவினை உதித்தெழுந்தது. இவ்விதம் தனி ஆள் பொருளுற்பத்தியுடன் கூடவே சமூகப் பொருளுற்பத்தியும் தோன்றலாயிற்று. இரு துறைகளின் உற்பத்திப் பொருள்களும் ஒரே சந்தையில் விற்கப்பட்டன; ஆகவே குறைந்தபட்சம் உத்தேசமாகச் சமமான விலைகளில்தான் இவை விற்பனையாயின. ஆனால் குறிப்பிட்ட திட்டத்தின் அடிப்படையில் அமைந்த ஒழுங்கமைப்பு தன்முனைப்பான உழைப்புப் பிரிவினையை விட வலிமை வாய்ந்தது. தனி ஆட்களது கூட்டமைவின் ஒன்றுபட்ட சமூக சக்திகளைக் கொண்டு இயங்கும் ஆலைகள் தனிப்பட்ட சிறு உற்பத்தியாளர்களைக் காட்டிலும் மிகவும் மலிவாகப் பொருள்களை உற்பத்தி செய்தன. தனி ஆள் பொருளுற்பத்தி ஒவ்வொன்றாக எல்லாத் துறைகளிலும் சரணடைந்து சென்றது; சமூகமயமான பொருளுற்பத்தி பழைய பொருளுற்பத்தி முறைகள் யாவற்றிலும் புரட்சிகர மாற்றத்தை உண்டாக்கிற்று. ஆனால் அதன் புரட்சித் தன்மை அப்பொழுது அங்கீகரிக்கப் படவில்லை; அதற்கு மாறாக, பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியை அதிகமாக்குவதற்கும் வளர்த்துச் செல்வதற்குமான மார்க்கமாகவே அது புகுத்தப்பட்டு வந்தது. அன்று அது உதித்தெழுந்த போது பொருளுற்பத்திக்கும் பரிவர்த்தனைப் பண்டங்களது பரிமாற்றத்துக்கும் வேண்டிய குறிப்பிட்ட சில உபகரணங்கள்—வணிகர் மூலதனம், கைத்தொழில், கூலி உழைப்பு ஆகியவை—தயார் நிலையில் இருக்கக் கண்டது; இவற்றை அது தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டது. சமுதாயமயமாகிய பொருளுற்பத்தி இவ்வாறு பரிவர்த்தனை பண்ட உற்பத்திக்கான ஒரு புதிய வடிவமாகத் தன்னைப் புகுத்திக் கொண்ட போது, இயல்பாகவே அதன் கீழும் பழைய சுவீகரிப்பு முறைகள் மாற்றமின்றி அப்படியே

முழு வீச்சுடன் செயல்பட்டு வந்தன. அதன் உற்பத்திப் பொருள்களுக்கும் இதே முறைகள் அப்படியே கையாளப் பட்டன.

பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் மத்திய காலப் பரிணாமக் கட்டத்தில் உழைப்பின் உற்பத்திப் பொருளுடைய உடைமையாளர் பற்றிய பிரச்சினை எழ இடமில்லை. தனிப்பட்ட உற்பத்தியாளர் தமக்குச் சொந்தமான, பொது வாய்த் தாமே தயாரித்த மூலப் பொருளைக் கொண்டு தமது சொந்தக் கருவிகளை உபயோகித்து தமது கரங்களது உழைப்பாலோ, தமது குடும்பத்தாரின் உழைப்பாலோ அதை உற்பத்தி செய்வதுதான் வழக்கமாயிருந்தது. இந்த உற்பத்தியாளர் இந்தப் புதிய உற்பத்திப் பொருளைச் சுவீகரிக்கத் தேவையில்லை; இயற்கையாகவே அது முற்றிலும் அவருக்கே உரியதாகி விட்டது. ஆகவே இந்த உற்பத்திப் பொருளில் அவருக்கிருந்த உடைமை அவருடைய சொந்த உழைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வெளியார் உதவி உபயோகிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களிலுங்கூட, வழக்கமாக அது அதிக முக்கியத்துவம் பெறவில்லை; கூலி அல்லாத பிறவகையில் அதற்கு ஈடு செய்வதே சகஜமாய் இருந்தது. வேலை பழகிக் கொண்டோரும் துணையாளரும் வேலை செய்தது, தாமும் உரிமை பெற்ற சங்கக் கைவினைஞர்கள் ஆகும் பொருட்டு பயிற்சி பெறுவதற்கே அன்றி, அவ்வளவாக இருப்புக்கோ சாப்பாட்டுக்கோ கூலிக்கோ அல்ல.

பிறகு உற்பத்திச் சாதனங்களும் உற்பத்தியாளர்களும் பெரிய தொழிலகங்களிலும் பட்டறைகளிலும் ஒன்றுகுவிக்கப்பட்டு மெய்யாகவே சமூகமயமான உற்பத்திச் சாதனங்களாகவும் சமூகமயமான உற்பத்தியாளர்களாகவும் மாற்றப் படலாயினர். ஆயினும் சமூகமயமான இந்த உற்பத்தியாளர்களும் உற்பத்திச் சாதனங்களும் மற்றும் உற்பத்திப் பொருள்களும் இந்த மாற்றத்துக்குப் பிற்பாடும் முன்பு போலவே இருப்பதாக, அதாவது தனி ஆட்களது உற்பத்திச் சாதனங்களாகவும் உற்பத்திப் பொருள்களாகவும் இருப்பதாகக் கொள்ளப்பட்டு காரியங்கள் நடைபெற்றன. இதுகாறும் உழைப்புச் சாதனங்களின் உடைமையாளர் உற்பத்திப்

பொருள்களையும் தாமே சுவீகரித்துக் கொண்டார்; ஏனெனில் பொது வழக்காக அது அவருடைய உற்பத்திப் பொருளாக இருந்தது, ஏனையோருடைய உதவி விதிவிலக்காகவே இருந்தது. உழைப்புச் சாதனங்களின் உடைமையாளர், இப்பொழுது உற்பத்திப் பொருள் தம்முடைய உற்பத்திப் பொருளாக இல்லாமல், முற்றிலும் ஏனையோரது உழைப்பின் உற்பத்திப் பொருளாக இருப்பினும், தொடர்ந்து அதைத் தாமே சுவீகரித்துக் கொண்டார். இப்பொழுது சமூக முறையில் உற்பத்தி செய்யப்பட்ட இந்தப் பொருள்கள் உண்மையில் உற்பத்திச் சாதனங்களை இயக்கிப் பரிவர்த்தனைப் பொருள்களை உற்பத்தி செய்தோரால் சுவீகரிக்கப்படாமல் இவ்விதம் முதலாளிகளால் சுவீகரிக்கப்பட்டன. உற்பத்திச் சாதனங்களும் மற்றும் பொருளுற்பத்தியும் சாராம்சத்தில் சமூகமயமாகி விட்டன. ஆயினும் தனி ஆட்களது தனியார் பொருளுற்பத்தி இருப்பது போலவும் ஆகவே இதன்படி ஒவ்வொருவரும் தமது உற்பத்திப் பொருளுக்குத் தாமே உடைமையாளராக இருந்து அதைச் சந்தையில் விற்பனை செய்வது போலவும் அமைந்து சுவீகரிப்பு முறைக்கு இந்த உற்பத்திச் சாதனங்களும் பொருளுற்பத்தியும் உட்படுத்தப்பட்டன. பொருளுற்பத்தி முறை இந்தச் சுவீகரிப்பு முறைக்கு ஆதாரமாக அமைந்த நிபந்தனைகளை ஒழித்திட்ட போதிலும், அது இம்முறைக்கு உட்படுத்தப்படுகிறது.*

---

* சுவீகரிப்பு முறை மாறாமல் அப்படியே இருப்பினும் கூட, மேலே விவரிக்கப்பட்ட மாறுதல்களால் பொருளுற்பத்தியில் ஏற்படும் அதே அளவுக்கு சுவீகரிப்பின் தன்மையிலும் புரட்சிகர மாற்றம் ஏற்படுகிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறத் தேவையில்லை. ஆனால் என்னுடைய உற்பத்திப் பொருளைச் சுவீகரித்துக் கொள்கிறேனா அல்லது பிறர் ஒருவரது உற்பத்திப் பொருளை என்னுடையதாய்ச் சுவீகரித்துக் கொள்கிறேனா என்பது முற்றிலும் வேறொரு விவகாரம். இடையில் இதையும் கவனிக்கவும்: முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை அனைத்தையும் கருவடிவில் கொண்டுள்ள கூலி உழைப்பு மிகவும் புராதனமானது; அடிமை உழைப்புடன் கூடவே பல நூற்றாண்டுகளாக விட்டு விட்டும் சிதறிய வடிவிலும் இது இருந்து வந்தது. ஆனால்

புதிய பொருளுற்பத்தி முறைக்கு அதன் முதலாளித்துவத் தன்மையை அளித்திடும் இந்த முரண்பாட்டில் இன்றையச் சமூகப் பகைமைகள் அனைத்தின் வித்து அடங்கியிருக்கிறது. புதிய பொருளுற்பத்தி முறை எல்லா முக்கிய உற்பத்தித் துறைகளிலும் எல்லாத் தொழில்துறை நாடுகளிலும் எவ்வளவு ஆக்கம் பெற்றதோ, தனி ஆள் பொருளுற்பத்தியை எவ்வளவு சுருங்கச் செய்து அற்ப சொற்பமாக்கியதோ, சமூகமயமான பொருளுற்பத்திக்கு முதலாளித்துவச் சுவீகரிப்பு ஒவ்வாததென்பது அவ்வளவு தெளிவாகப் புலப்படுத்திக் காட்டப் பட்டது.

முதன்முதல் தோன்றிய முதலாளிகள், ஏற்கெனவே நாம் கூறியது போல, பிற உழைப்பு வகைகளுடன் கூடவே கூலியுழைப்பும் சந்தையில் தமக்குத் தயார் நிலையிலே இருக்கக் கண்டனர். ஆனால் இந்தக் கூலியுழைப்பு விதிவிலக்காகவும் துணைக் கூறாகவும் இரண்டாந்தரமாகவும் தற்காலிகமானதாகவுமே இருந்தது. விவசாயி சில சமயம் நாட்கூலியாளாக வேலைக்கு வந்த போதிலும் அவனிடம் இரண்டொரு ஏக்கர் சொந்த நிலம் இருந்தது; இதைக் கொண்டு அவன் எப்படியோ கஷ்டப்பட்டுப் பிழைக்க முடிந்தது. கைவினைச் சங்க ஒழுங்கமைப்பில் இன்று சங்கத் துணை வினைஞனாய் இருந்தவர் நாளைக்குச் சங்கக் கைவினைஞராக முடிந்தது. ஆனால் உற்பத்திச் சாதனங்கள் சமூகமயமாகி முதலாளிகளின் கைகளில் திரண்டு குவிந்ததும் இவை யாவும் மாறலாயின. தனிப்பட்ட உற்பத்தியாளருடைய உற்பத்திச் சாதனங்களும் மற்றும் உற்பத்திப் பொருளும் மேலும் மேலும் மதிப்பிழந்து போயின; முதலாளியிடம் வேலை செய்யும் கூலித் தொழிலாளராக மாறுவதைத் தவிர இப்பொழுது அவருக்கு வேறு வழி ஏதும் இல்லை. இதற்கு முன் விதிவிலக்காகவும் இரண்டாந்தரமாகவும் இருந்த கூலியுழைப்பு இப்பொழுது பொருளுற்பத்தி அனைத்தின் விதிமுறையாகவும் அடித்தளமாகவும் ஆயிற்று; இதற்கு முன்

---

தேவையான வரலாற்று முன்நிபந்தனைகள் உருவான பிறகே இந்தக் கருவால் தக்கபடி முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையாக வளர முடிந்தது. (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

துணைக் கூறாக இருந்தது, இப்பொழுது தொழிலாளருக்கு எஞ்சியிருந்த ஒரே பணியாகி விட்டது. இடையிடையே சில சமயம் கூலித் தொழிலாளராக வேலை செய்து வந்தவர் வாழ்நாள் முழுதுமே கூலித் தொழிலாளராக வேலை செய்ப வரானார். இதே காலத்தில் நிகழ்ந்த நிலப்பிரபுத்துவ அமைப்பின் சிதைவாலும் நிலப்பிரபுத்துவக் கோமான் களுடைய பணியாட்களின் குழுக்கள் கலைக்கப்பட்டதா லும் விவசாயிகள் உடைமை நீக்கம் செய்யப்பட்டு அவர் களுடைய குடும்ப நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டதா லும் இன்ன பிறவற்றாலும் இந்த நிரந்தரக் கூலித் தொழி லாளர்களுடைய எண்ணிக்கை மேலும் பிரம்மாண்டமாக அதிகரித்தது. ஒரு புறம் முதலாளிகளுடைய கைகளில் ஒன்று குவிந்து விட்ட உற்பத்திச் சாதனங்களுக்கும் மறு புறம் தமது உழைப்பு சக்தியை அன்றி வேறு எந்த உடைமையும் இல் லாத உற்பத்தியாளர்களுக்கும் இடையிலான பிரிவினை முழு நிறைவாக்கப்பட்டது. **சமூகமயமாகிவிட்ட பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவச் சுவீகரிப்புக்கும் இடையிலான முரண்பாடு பாட் டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான பகைமையாய்த் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.**

பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளர்களது, தனிப் பட்ட உற்பத்தியாளர்களது, தமது உற்பத்திப் பொருள் களின் பரிவர்த்தனையைத் தம்மிடையிலான சமூகப் பந்த மாய்க் கொண்ட இவர்களது சமுதாயத்தினுள் முதலாளித் துவப் பொருளுற்பத்தி முறை புகுந்ததைக் கண்டோம். ஆனால் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியை அடிப்படை யாகக் கொண்ட ஒவ்வொரு சமுதாயத்துக்குமுரிய விசேஷ இயல்பு என்னவெனில், உற்பத்தியாளர்கள் தம்மிடையே நில வும் பரஸ்பரச் சமூக உறவுகள் மீது கட்டுப்பாடு இழந்தவர் கள் ஆகி விடுகின்றனர். ஒவ்வொருவரும் தம்மிடம் இருக்கக் கூடிய உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு தமக்காக வும் தமது எஞ்சிய தேவைகளின் பூர்த்திக்கு வகை செய்யக் கூடிய பரிவர்த்தனைக்காகவும் உற்பத்தி செய்கிறார். யாருக் கும் தமது பண்ட வகை எந்த அளவில் சந்தை விற்பனைக்கு வரும், எந்த அளவில் அதற்குத் தேவை இருக்கும் என்று

தெரியாது. தாம் உற்பத்தி செய்யும் பண்டம் உள்ளபடியான தேவைக்கு உகந்திருக்குமா என்றோ, தமது உற்பத்திச் செலவை ஈடு செய்து கொள்ள முடியுமா என்றோ, தமது பண்டத்தை விற்க முடியப் போகிறதா என்றோகூட யாருக்கும் தெரியாது. சமூகமயமாகிவிட்ட பொருளுற்பத்தியில் அராஜகம் தலைவிரித்து ஆடுகிறது.

ஆயினும் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி, வேறு எந்த வகையான உற்பத்தியையும் போலவே, அதற்கே உரியவையான, உள்ளியல்பான விதிகளை, அதனின்று தனியே பிரிக்க முடியாத விதிகளைப் பெற்றிருக்கிறது. அராஜகத்தையும் மீறி இந்த விதிகள் அராஜகத்தினுள்ளும் அதன் வாயிலாகவும் செயல்படுகின்றன. சமூகப் பரஸ்பர உறவுகளின் விடாப்பிடியான ஒரே வடிவத்தில், அதாவது பரிவர்த்தனையில் இவ்விதிகள் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன; இங்கு இவை போட்டியின் கட்டாய விதிகளாகத் தனிப்பட்ட உற்பத்தியாளர்களைப் பாதிக்கின்றன. ஆரம்பத்தில் இவை இந்த உற்பத்தியாளர்களுக்கே தெரியாத விதிகளாக இருக்கின்றன; இவர்கள் இவற்றைச் சிறிது சிறிதாகவும் அனுபவத்தின் வாயிலாகவும் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இவை உற்பத்தியாளர்களைச் சாராது எதேச்சையாகவும் அவர்களுக்கு எதிராகவும், அவர்களது தனிவகைப் பொருளுற்பத்தி முறையின் இரக்கமற்ற இயற்கை விதிகளாகச் செயல்படுகின்றன. உற்பத்திப் பொருள் உற்பத்தியாளர்களை ஆட்சி புரிகிறது.

மத்திய காலச் சமுதாயத்தில், முக்கியமாக ஆரம்ப நூற்றாண்டுகளில், பொருளுற்பத்தி சாராம்சத்தில் தனி மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடையதாக இருந்தது. அது பிரதானமாக உற்பத்தியாளரின் தேவைகளையும் அவருடைய குடும்பத்தின் தேவைகளையும் மட்டுமே பூர்த்தி செய்து வந்தது. கிராமப் புறங்களில் இருந்தவற்றைப் போல் நேரடி ஆளுடைமைச் சார்பு உறவுகள் நிலவிய போது, நிலப்பிரபுத்துவக் கோமானுடைய தேவைகளையும் அது பூர்த்தி செய்து வந்தது. இவற்றில் எல்லாம் பரிவர்த்தனைக்கு இடம் இல்லை. ஆகவே உற்பத்திப்

பொருள்கள் பரிவர்த்தனைப் பண்டங்களின் தன்மையைப் பெறவில்லை. விவசாயியின் குடும்பத்தினர் தமக்கு வேண்டியவற்றை அனேகமாகத் தாமே உற்பத்தி செய்து கொண்டார்கள்: துணிமணி, தட்டுமுட்டுச் சாமான்கள் மற்றும் பிழைப்புக்குத் தேவையான சாதனங்கள் ஆகிய யாவற்றையும் தாமே உற்பத்தி செய்து கொண்டார்கள். தமது சொந்தத் தேவைகளுக்கும் நிலப்பிரபுத்துவக் கோமானுக்குப் பண்ட வகையில் செலுத்த வேண்டியிருந்ததற்கும் தேவைப்பட்டதை விட அதிக அளவில் அவர்கள் உற்பத்தி செய்ய ஆரம்பித்த போதுதான், அவர்கள் பரிவர்த்தனைக்கான பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர். இந்த உபரிப் பொருள்கள் சமூகமயமான பரிவர்த்தனையில் தள்ளப்பட்டு விற்பனைக்கு வந்து பரிவர்த்தனைப் பண்டங்கள் ஆயின.

நகரங்களில் இருந்த கைவினைஞர்கள் ஆரம்பத்திலிருந்தே பரிவர்த்தனைக்காக உற்பத்தி செய்தனர் என்பது மெய்தான். ஆனால் அவர்களுங்கூட தமது சொந்தத் தேவைகளில் மிகப் பெரும்பகுதியைத் தமது நேரடியான உழைப்பு மூலம் நிறைவேற்றிக் கொண்டனர். அவர்களிடம் கொல்லைகளும் துண்டு துக்காணி நிலங்களும் இருந்தன. தமது ஆடுமாடுகளைச் சமுதாயப் பொது மேய்ச்சற்காடுகளில் மேய விட்டனர். இதன்றி இந்தக் காடுகளிலிருந்து மரமும் விறகும் அவர்களுக்குக் கிடைத்தன. பெண்கள் சணல், கம்பளி நூற்பிலும் பிற வேலைகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். பரிவர்த்தனைக்கான உற்பத்தி, அதாவது பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி இன்னமும் அதன் பிள்ளைப்பருவத்தில் தான் இருந்து வந்தது. எனவே பரிவர்த்தனை ஒடுங்கிய வரம்புகளுக்கு உட்பட்டதாகவும் சந்தை மிகவும் குறுகியதாகவும் உற்பத்தி முறைகள் நிலையாகவும் இருந்தன. வெளி உலகைப் பொறுத்த வரை ஒதுக்கமும் உள்ளே ஐக்கியமும், கிராமப் புறத்தில் மார்க்கும்* நகரத்தில் கைவினைச் சங்கமும் இருந்து வந்தன.

* மார்க் என்னும் தமது அனுபந்தக் கட்டுரையை பி. எங்கெல்ஸ் இங்கு குறிப்பிடுகிறார். இந்நூலின் இறுதியில் உள்ள குறிப்புகளைப் பார்க்க.—ப-ர்.

ஆனால் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி விரிவடைந்ததைத் தொடர்ந்து, முக்கியமாக முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை தலைதூக்கியதைத் தொடர்ந்து, இதுகாறும் உள்ளடங்கி இருந்த பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி விதிகள் மேலும் பகிரங்கமாகவும் அதிக வலிவோடும் செயல்படமுற்பட்டன. பழைய பந்தங்கள் தளர்ந்து பழைய ஒதுக்கு நிலையின் வரம்புகள் தகர்ந்து உற்பத்தியாளர்கள் மேலும் மேலும் சுயேச்சையான, தொடர்பில்லாத பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளர்களாக மாற்றப்பட்டனர். மொத்தத்தில் சமுதாயத்தின் பொருளுற்பத்தி திட்டமின்மையால், நெறிமுறையில்லா அகஸ்மாத்தினால், அராஜகத்தால் ஆட்சி புரியப்பட்டது தெரியலாயிற்று. இந்த அராஜகம் மேலும் மேலும் உச்ச நிலைக்கு உயர்ந்து சென்றது. ஆனால் சமூகப் பொருளுற்பத்தியின் இந்த அராஜகத்தைத் தீவிரமாக்குவதற்கு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு உதவிய பிரதான சாதனம் அராஜகத்துக்கு நேர் விரோதமான ஒன்றாகும்; தனிப்பட்ட தொழில் நிலையம் ஒவ்வொன்றிலும் சமூக அடிப்படையில் பொருளுற்பத்தியின் மேலும் மேலும் கூடுதலான ஒழுங்கமைப்புதான் இந்தப் பிரதான சாதனம். அமைதியான, அசையாத பழைய நிலைமைக்கு இதன் மூலம் முடிவு கட்டப்பட்டது. பொருளுற்பத்தியின் இந்த ஒழுங்கமைப்பு எங்காவது ஒரு தொழிற் கிளையில் நிறுவப்பட்டதும், அது தன்னருகே வேறு எந்தப் பொருளுற்பத்தி முறையும் நீடிக்க முடியாதபடிச் செய்தது. உழைப்பின் களம் போர்க் களமாகிவிட்டது. மாபெரும் பூகோளக் கண்டுபிடிப்புகளும்[57], அவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற குடியேற்றமும் சந்தைகளை விரிந்து பெருகச் செய்தன; கைவினைத் தொழில் பட்டறைத் தொழிலாக மாறி வந்ததைத் துரிதப்படுத்தின. போர் தொடங்கியது, குறிப்பிட்ட பிரதேசங்களின் தனிப்பட்ட உற்பத்தியாளர்களுக்கிடையே மட்டுமல்ல. பிரதேசங்களில் நடைபெற்ற போராட்டங்கள் தேசங்களுக்கிடையிலான மோதல்களாகி பதினேழாவது, பதினெட்டாவது நூற்றாண்டுகளின் வாணிப யுத்தங்களாயின[58].

இறுதியில் நவீனத் தொழில்துறையின் உதயமும் உலகச்

சந்தையின் திறப்பும் இந்தப் போராட்டத்தை உலக அள விலான வீச்சுடையதாக்கின; அதே போதில் கண்டும் கேட்டு மிராத உக்கிரம் பெறும்படியும் செய்தன. பொருளுற்பத்திக் குரிய இயற்கை அல்லது செயற்கை நிலைமைகளில் இருக்கக் கூடிய அனுகூலங்கள் இப்பொழுது தனிப்பட்ட முதலாளி களின் வாழ்வையும் மறைவையும் மட்டுமின்றி முழுத் தொழில்கள், நாடுகளின் கதியையே தீர்மானிக்கின்றன. கீழே விழுகிறவர் ஈவிரக்கமின்றி கழித்துக் கட்டப்பட்டார். டார்வின் கூறிய தனி ஒன்றின் பிழைப்புப் போராட்டம் இயற்கையிலிருந்து சமுதாயத்துக்கு மாற்றப்பட்டு மேலும் கடுமையான மூர்க்கம் பெறுவது போலாகிறது. விலங்கினத் துக்கான இயற்கை வாழ்வு நிலைமைகள் மனித வளர்ச்சி யின் இறுதி நிலையாகத் தோன்றுகின்றன. சமுதாயமயமாகி விட்ட பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவ சுவீகரிப்புக்கும் இடையிலான முரண்பாடு இப்பொழுது தனிப்பட்ட தொழில் நிலையத்தில் பொருளுற்பத்தியின் ஒழுங்கமைப்புக்கும் பொதுவில் சமுதாயத்தில் பொருளுற்பத்தியின் அராஜகத்துக்கும் இடையிலான பகை நிலையாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை தன் பிறவி யிலிருந்தே இருக்கின்ற இவ்விரு வடிவங்களிலான பகைமை யுடன்தான் இயங்கி வருகிறது. ஃபூரியே ஏற்கெனவே கண்டுபிடித்துக் கூறிய அந்த ''நச்சுச் சுழலிலிருந்து'' அத னால் வெளிவர முடியவே இல்லை. அந்தக் காலத்தில் ஃபூரி யேயால் கண்டறிய முடியாமற் போனது என்னவென்றால், இந்தச் சுழல் சிறிது சிறிதாகக் குறுகிக் கொண்டிருக்கிறது; இந்த இயக்கம் மேலும் மேலும் திருகுச் சுருளாகி வருகிறது; கிரகங்களின் இயக்கத்தைப்போல மையத்துடன் மோதி முடி வுற்றாக வேண்டும். என்பதாகும். பொதுவில் சமூக அளவி லான பொருளுற்பத்தியில் நிலவும் அராஜகத்தின் பலவந்த சக்திதான் மிகப் பெருவாரியானோரை மேலும்மேலும் முழு மையாகப் பாட்டாளிகளாக மாற்றி வருகிறது; பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினர்தான் பொருளுற்பத்தியிலுள்ள அராஜகத்துக்கு இறுதியாக முடிவு கட்டப் போகிறார்கள். சமுதாயப் பொருளுற்பத்தியிலுள்ள அராஜகத்தின் பலவந்த

சக்திதான் நவீனத் தொழில்துறையில் இயந்திரச் சாதனங்கள் வரம்பின்றிச் செம்மைபெறத்தக்கனவாக இருப்பதைக் கட்டாய விதியாக்கித் தனிப்பட்ட ஒவ்வொரு தொழில்துறை முதலாளியும் தனது இயந்திரச் சாதனங்களை மேலும் மேலும் செம்மையாக்கிச் செல்ல வேண்டும், இல்லையேல் அழிந்து போக வேண்டும் என்று ஆக்குகிறது.

ஆனால் இயந்திரச் சாதனங்கள் செம்மையாவதால் மனித உழைப்பு மிகையானதாகிச் செல்கிறது. இயந்திரச் சாதனங்கள் புகுத்தப்பட்டு மேலும் மேலும் அதிகமாக்கப் பட்டதன் விளைவாக லட்சக்கணக்கான உடல் உழைப்பாளர்களுக்குப் பதிலாகச் சொற்ப இயந்திரத் தொழிலாளர்கள் அவர்களிடத்தில் அமர்த்தப்படுகிறார்கள் என்றால், இயந்திரச் சாதனங்கள் மேம்படுத்தப்படுவதைத் தொடர்ந்து மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் இந்த இயந்திரத் தொழிலாளர்களும் அகற்றப்பட வேண்டியதாகிறது. முடிவில் இதனால் ஏற்படுவது என்னவெனில், மூலதனத்தின் சராசரித் தேவைகளுக்கும் மிகுதியான எண்ணிக்கையில் உபரியாகக் கிடைக்கும்படியான கூலித் தொழிலாளர்கள் தோற்றுவிக்கப்பட்டு, 1845ல் நான் அதற்குப் பெயரிட்டிருந்தேனே முழுநிறைவான அந்தத் தொழில்துறை ரிசர்வ் பட்டாளம் உருவாக்கப்படுவதுதான்.* தொழில்துறை விறுவிறுப்புற்று மிக மும்முரமாக வேலை செய்யும் காலங்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தவிர்க்க முடியாத தகர்வு வந்ததும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு நடுத்தெருவில் விடப்படும் இந்தப் பட்டாளம் வாழ்வுக்காக மூலதனத்துடன் போராடிக் கொண்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் கால்களிலே மாட்டப்பட்ட தண்டச் சுமையாகவும் மூலதனத்தின் நலன்களுக்குப் பொருத்தமாகக் கூலி விகிதங்களைக் கீழ் மட்டத்தில் கட்டுப்படுத்தி வைக்கும் ஒழுங்காக்கியாகவும் செயல்படுகிறது. மார்க்சின் சொற்களில் கூறுமிடத்து, இவ்வாறாக, தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்து மூலதனம்

---

* இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை, பக்கம் 109. (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

நடத்தும் போரில் அதற்கு இயந்திரச் சாதனங்கள் சக்தி வாய்ந்த ஆயுதமாகி விடுகின்றன; உழைப்புக் கருவிகள் ஓயாமல் உழைப்பாளியின் கரங்களிலிருந்து பிழைப்புச் சாதனங்களைப் பறித்துக் கொண்டு விடுகின்றன; தொழிலாளி உற்பத்தி செய்யும் பொருளே தொழிலாளியை அடக்கி ஒடுக்குவதற்கான கருவியாகி விடுகிறது.* இவ்வாறாக, உழைப்புக் கருவிகள் மூலம் கைவரப்பெறும் சிக்கனம் அதே போதில் தொடக்கத்திலிருந்தே உழைப்பு சக்தி கண் மூடித்தனமாக விரயமாக்கப்படும் கொடுமையும் உழைப்பு செயல்படும் சகஜ நிலைமைகளையே அடிப்படையாய்க் கொண்டு நடைபெறும் கொள்ளையும் ஆகி விடுகிறது**; இயந்திரச் சாதனம், உழைப்பு நேரத்தைக் குறைப்பதற்கு மிகவும் வல்லமை வாய்ந்த இந்தக் கருவி, உழைப்பாளியின் நேரத்திலும் உழைப்பாளியினுடைய குடும்பத்தின் நேரத்திலும் ஒவ்வொரு நிமிடத்தையும் முதலாளி தமது மூலதனத்தின் மதிப்பை விரிவாக்கிச் செல்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தமது பிடிக்குள் இருத்துவதற்குத் தவறாத சாதனமாகி விடுகிறது. இவ்வாறாக, ஒரு பகுதியினரின் அளவு மீறிய வேலை வேறு பகுதியினரின் சோம்பேறித்தனத்துக்கு வகை செய்யும் பூர்வாங்க நிபந்தனையாகி விடுகிறது; புதிய நுகர்வாளர்களைத் தேடி அனைத்து உலகிலும் வேட்டையாடிச் செல்லும் நவீனத் தொழில்துறை உள்நாட்டில் பெருந்திரளானோரின் நுகர்வை அரைப்பட்டினி வாழ்க்கைக்குரிய குறைந்தபட்ச நிலைக்குப் பலவந்தமாகத் தாழ்த்தி அதன் மூலம் தன் உள்நாட்டுச் சந்தையை அழித்துக் கொண்டு விடுகிறது. ''ஒப்பளவில் உபரியான மக்கள் தொகையை அல்லது தொழில்துறை ரிசர்வ் பட்டாளத்தை மூலதனச் சேமிப்பின் அளவுக்கும் ஆற்றலுக்கும் எப்பொழுதும் சமனப்படுத்தும் இந்த விதி, வல்கனின் ஆப்புக்கள் எவ்வளவு உறுதியாகப் புரோமித்தியசைப் பாறையோடு பிணைத்திறுக்கினவோ, அதைக் காட்டிலும் உறுதியாக உழைப்பாளியை மூலதனத்

* கா. மார்க்ஸ், மூலதனம், தொகுதி 1 பார்க்க.—ப-ர்.

** அதே நூலைப் பார்க்க.—ப-ர்.

தோடு பிணைத்திருக்குகிறது. மூலதனம் திரண்டு பெருகுவதற்கு இணைவாகத் துன்பதுயரமும் திரண்டு பெருகும்படி இந்த விதி உறுதி செய்கிறது. ஆகவே ஒரு முனையில் செல்வம் திரளுவது அதே போது எதிர் முனையில், அதாவது மூலதனத்தின் வடிவில் தனது உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்யும் வர்க்கத்தின் முனையில் துன்பதுயரமும் உழைப்பின் வேதனையும் அடிமை நிலையும் அறியாமையும் கொடுமையும் மனோரீதியான சீரழிவும் திரளுவதைக் குறிப்பதாகி விடுகிறது'' (கா. மார்க்ஸ், மூலதனம், பக்கம் 671). முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையிலிருந்து வேறு எந்த ரகமான பண்டப் பிரிவினையையும் எதிர்பார்ப்பது, மின் கலத்துடன் இணைக்கப்பட்ட மின்வாய்கள் அமிலம் கலந்த நீரைச் சிதைத்துப் பிரித்து நேர்மின்வாயில் பிராணவாயுவையும் எதிர்மின்வாயில் நீர்வாயுவையும் வெளியிடாதென்று எதிர்பார்ப்பதைப் போன்றதே ஆகும்.

நவீன இயந்திரச் சாதனங்கள் மேலும் மேலும் கூடுதலாக செம்மை செய்யப்படக் கூடிய ஆற்றலோடிருப்பது சமுதாயப் பொருளுற்பத்தியின் அராஜகத்தால் எப்படித் தனிப்பட்ட தொழில்துறை முதலாளியை ஓயாமல் தனது இயந்திரச் சாதனங்களை மேம்படுத்திச் செல்லும்படி, ஓயாமல் அவற்றின் உற்பத்தித் திறனை அதிகமாக்கிச் செல்லும்படி நிர்ப்பந்தம்செய்யும் கட்டாய விதியாக மாற்றப்படுகிறது என்பதை நாம் கண்டோம். பொருளுற்பத்தியின் அளவை விரிவாக்குவதற்கு இருக்கக் கூடிய வெறும் சாத்தியப்பாடும்கூட இந்த தனிப்பட்ட முதலாளிக்கு இதே போன்ற ஒரு கட்டாய விதியாக மாற்றப்பட்டு விடுகிறது. நவீனத் தொழில்துறைக்கு இருக்கும் அபார விரிவகற்சி சக்தி—இதனுடன் ஒப்பிடுகையில் வாயுக்களுக்கு இருக்கும் இச்சக்தி சிறுபிள்ளையின் விளையாட்டைப் போன்றதாகும்—இயல்பு, அளவு ஆகிய இரு வழிகளிலும் விரிந்து விசாலமாக வேண்டிய இன்றியமையாத அவசியமாகச் செயல்படுகிறது என்பது இப்பொழுது நமக்குத் தெரிகிறது; இந்த அவசியம் எந்த விதமான எதிர்ப்பையும் சற்றும் பொருட்படுத்தாது எள்ளி நகையாடுகிறது. நுகர்வாலும் விற்பனையாலும் நவீனத்

தொழில்துறையின் உற்பத்திப் பொருள்களுக்குள்ள சந்தைகளாலும் அதற்குக் காட்டப்படும் எதிர்ப்பு இப்படிப்பட்டது தான். ஆனால் விஸ்தாரத்திலும் செறிவிலும் விரிவடைவதற்குச் சந்தைகளுக்கு இருக்கும் ஆற்றலைப் பிரதானமாக ஆட்சி புரியும் விதிகள் அறவே வேறுவிதமானவை, இவை மிகவும் குறைந்த வலுவுடன் செயல்படுகிறவை. சந்தைகளின் விரிவகற்சியால் பொருளுற்பத்தியின் விரிவகற்சியுடன் சேர்ந்து நடைபோட முடியாது. மோதல் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைச் சுக்கு நூறாகத் தகர்த்திடாத வரை இதனால் மெய்யான தீர்வை உண்டாக்க முடியாததால், மோதல்கள் கால அலைவட்ட முறையில் காலாகாலம் நிகழ்கின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்தி மற்றொரு ''நச்சுச் சுழலை'' உண்டாக்கி விட்டது.

உண்மை நடப்பைக் கூறுமிடத்து, முதவாவது பொது நெருக்கடி வெடித்த 1825ஆம் ஆண்டு முதலாக பத்து ஆண்டுகளுக்கு ஒரு தரம் எல்லா நாகரிகத் தேசங்களிலும் அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சி குன்றிய நிலையில் இவற்றைச் சார்ந்து வாழுவனவற்றிலும் அனைத்துத் தொழில், வாணிப உலகும் பொருளுற்பத்தியும் பரிவர்த்தனையும் நிலைகுலைந்து விடுகின்றன. வாணிபம் தடைப்பட்டு நின்று விடுகிறது, சந்தைகள் திணறித் திக்குமுக்காடுகின்றன; எந்த அளவுக்கு விலை போகவில்லையோ, அந்த அளவுக்கு எண்ணிறந்தவையாகப் பண்டங்கள் குவிந்து கிடக்கின்றன; ரொக்கப் பணம் மறைந்து விடுகிறது; கடன் செலாவணி ஒழிந்து விடுகிறது; ஆலைகள் மூடிக் கிடக்கின்றன; பெருந்திரள்களான தொழிலாளர்கள் பிழைப்புக்கு வேண்டிய சாதனங்கள் இல்லாமல் நிற்கிறார்கள், காரணம் என்னவென்றால் இச்சாதனங்களை அவர்கள் மிதமிஞ்சி உற்பத்தி செய்து விட்டனர்; திவால்களுக்கும் ஐப்திகளுக்கும் முடிவில்லாமற் போகிறது. பிறகு பல ஆண்டுகளுக்கு மந்தம் நீடிக்கிறது; உற்பத்தி சக்திகளும் பொருள்களும் பெருவீத அளவில் விரயமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் செல்கின்றன; திரண்டு மலையாகக் குவிந்துவிட்ட பண்டங்கள் அதிக

மாகவோ குறைவாகவோ மதிப்பு தேய்ந்து கரைந்து இறுதியாக மறையும் வரை, பொருளுற்பத்தியும் பரிவர்த்தனையும் மீண்டும் எழுந்து சிறிது சிறிதாக நடக்கத் தொடங்கும் வரை இந்த நிலைமைதான். கொஞ்சம் கொஞ்சமாக நடையின் வேகம் அதிகரிக்கிறது; பிறகு பெருநடையாகிறது; தொழில் துறையின் பெருநடை ஓட்டமாக மாறுகிறது; ஓட்டம் வளர்ந்து தொழில்துறை, வாணிபக் கடன் செலாவணி, ஊக வாணிபம் ஆகிய எல்லாமாகச் சேர்ந்து தாவிக் குதித்துத் தலைதெறிக்க ஓடி முடிவில் குப்புற விழும்படித் துள்ளிப் பாய்ந்தோடிய பின் தொடங்கிய நிலைக்கே வந்து முடிவடைகின்றன—நெருக்கடியின் குழிக்குள்ளே. தொடர்ந்து திரும்பத் திரும்ப இதே கதைதான். 1825ஆம் ஆண்டு முதலாக ஐந்து தடவை இதை அனுபவித்திருக்கிறோம், தற்போது (1877) ஆறாவது தடவையாக இதை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நெருக்கடிகளின் தன்மை மிகவும் தெளிவாகத் தெரிகின்றது; முதலாவது நெருக்கடியை crise pléthorique, அதாவது அபரிமிதத்தால் ஏற்படும் நெருக்கடி என்று சொல்லி ஃபூரியே இந்த நெருக்கடிகள் யாவற்றின் தன்மையையும் தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளார்.

இந்த நெருக்கடிகளில் சமுதாயமயமான பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவச் சுவீகரிப்புக்கும் இடையிலுள்ள முரண்பாடு மூர்க்கமாக வெடித்தெழுகிறது. பரிவர்த்தனைப் பண்டப் புழக்கம் தற்காலிகமாக நின்று விடுகிறது; புழக்கத்துக்குரிய சாதனமாகிய பணம் புழக்கத்துக்கு இடையூறாகி விடுகிறது; பொருளுற்பத்தி, பரிவர்த்தனைப் பண்டப் புழக்கம் இவை சம்பந்தமான விதிகள் எல்லாம் தலைகீழாகி விடுகின்றன. பொருளாதார மோதல் அதன் உச்ச நிலையை அடைந்து விட்டது: **பொருளுற்பத்தி முறை பரிவர்த்தனை முறையை எதிர்த்துக் கலகம் புரிகின்றது.**

ஆலையினுள் பொருளுற்பத்தியின் சமூக ஒழுங்கமைப்பு அதிகமாக வளர்ச்சியடைந்து விட்டது, ஆகவே அதனுடன் கூட நிலவி அதன் மீது ஆதிக்கம் செலுத்தும் சமுதாய அளவிலான பொருளுற்பத்தியின் அராஜகத்துக்கு ஒவ்வாததாகி

விட்டது என்கிற இந்த உண்மை நெருக்கடிகளின் போது பல பெரிய, இன்னும் அதிக அளவிலான சிறிய முதலாளி கள் நொடித்து அழிவதனால் ஏற்படும் பலாத்காரமான மூல தனக் குவிதலின் மூலம் நேரடியாக முதலாளிகளுக்கே தெளி வாக உணர்த்தப்படுகிறது. முதலாளித்துவப் பொருளுற் பத்தி முறையின் பொறியமைவு அனைத்துமே அதனாலேயே தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தி சக்திகளால் நெரிக்கப்பட்டு நொறுங்கி விடுகிறது. பிரம்மாண்டமான இந்தப் பொருளுற் பத்திச் சாதனங்களை மூலதனமாக மாற்ற முடியவில்லை; இவை செயலற்று முடங்கிக் கிடக்கின்றன; இதே காரணத் தால் தொழில்துறை ரிசர்வ் பட்டாளம் வேலையின்றி நிர்க் கதியாய் நின்றாக வேண்டும். பொருளுற்பத்திச் சாதனங் கள், பிழைப்புக்கு வேண்டிய சாதனங்கள், வேலை செய்யத் தயாராயுள்ள தொழிலாளர்கள் இவ்வாறு பொருளுற்பத்தி யின் எல்லாக் கூறுகளும் பொதுச் செல்வத்தின் எல்லாக் கூறுகளும் அபரிமிதமாக இருக்கின்றன. ஆனால் ''அபரி மிதமே கடுந்துன்பத்துக்கும் இல்லாமைக்குமான ஆதாரமாகி விடுகிறது'' (ஃபூரியே); ஏனெனில் பொருளுற்பத்தி, பிழைப்பு இவற்றுக்கான சாதனங்கள் மூலதனமாக மாற்றப்படு வதற்குத் தடைமதிலாகத் தடுத்து நிற்பது இந்த அபரிமிதம் தான். முதலாளித்துவச் சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங் கள் முதலில் மூலதனமாக, மனித உழைப்பு ஆற்றலைச் சுரண் டும் சாதனமாக மாற்றப்பட்ட பிறகே செயல்பட முடியும். உற்பத்திச் சாதனங்களும் பிழைப்புக்கு வேண்டிய சாதனங் களும் இப்படி மூலதனமாக மாற்றப்பட வேண்டியிருக்கும் இந்த அத்தியாவசியம் பேய் உருவெடுத்து இச்சாதனங்களுக் கும் தொழிலாளர்களுக்கும் இடையே வழிமறித்து நிற்கிறது. உற்பத்தியின் பொருளாயத வழியிலான நெம்புகோலும் ஆள் வழியிலான நெம்புகோலும் ஒன்றுபட முடியாதவாறு இதுதான் தடுக்கின்றது; உற்பத்திச் சாதனங்களைச் செயல் பட முடியாமலும் தொழிலாளர்களை வேலை செய்யவும் வாழவும் முடியாமலும் இதுதான் தடைசெய்கின்றது. ஆகவே, ஒரு புறத்தில், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை தொடர்ந்து இந்த உற்பத்தி சக்திகளை நெறியாண்மை

புரியத் திறனற்றதென்பது நிரூபிக்கப்பட்டுத் தீர்ப்பு கூறப் பட்டிருக்கிறது; மறு புறத்தில், இந்த உற்பத்தி சக்திகள் தற்போதுள்ள முரண்பாட்டை நீக்குவதற்காக, மூலதன மாகத் தமக்குள்ள இயல்பை ஒழிப்பதற்காக, சமுதாயப் பொருளுற்பத்தி சக்திகளாகத் தமக்குள்ள தன்மை நடைமுறை யில் அங்கீகரிக்கப்படுவதற்காக மேலும் மேலும் கூடுதலான ஆற்றலுடன் போராடி முன்னேறிச் செல்கின்றன.

வலிமை மிக்கனவாக வளர்ந்து வரும் உற்பத்தி சக்திகள் மூலதனமாகத் தமக்குள்ள இயல்பை எதிர்த்துப் புரியும் இந்தக் கலகம், தமது சமுதாயத் தன்மை அங்கீகரிக்கப்பட வேண்டுமென மேலும் மேலும் வன்மையுடன் அவை வெளி யிடும் இந்த உத்தரவு, முதலாளித்துவ நிலைமைகளில் இது சாத்தியமாயிருக்கக் கூடிய அளவுக்கு, இச்சக்திகளை சமு தாயப் பொருளுற்பத்தி சக்திகளாக நடத்தும்படியான நிர்ப் பந்தத்தை முதலாளித்துவ வர்க்கத்துக்கு உண்டாக்கு கின்றன. தொழில்துறை விறுவிறுப்புற்று மிக மும்முரமாகும் காலமும் இக்காலத்தில் செலவாணியில் ஏற்படும் எல்லை யற்ற பெருக்கமும் இவை மட்டுமின்றி இவற்றை அடுத்துப் பெரும்பெரும் முதலாளித்துவத் தொழில் நிலையங்கள் நொடித்து விழுவதால் ஏற்படும் தகர்வும் பெருந்திரளான உற்பத்திச் சாதனங்களை வெவ்வேறு வகையான கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் காணக் கூடிய வடிவில் சமுதாயமய மாக்கப்படும்படித் தூண்டுகின்றன. இந்த உற்பத்திச் சாத னங்களிலும் வினியோகச் சாதனங்களிலும் பலவும் ஆரம்பத் திலிருந்தே மிகவும் பிரம்மாண்டமானவையாக இருத் தலால், ரயில்வேக்களைப் போல, அவை முதலாளித்துவப் பயன்பாட்டுக்கான ஏனைய வடிவங்களுக்கு இடமளிப் பதில்லை. பரிணாமத்தில் அடுத்து வரும் ஒரு கட்டத்தில் இந்த வடிவமும் போதுமானதாக இல்லை. குறிப்பிட்ட ஒரு நாட்டில் தொழில்துறையின் குறிப்பிட்ட ஒரு கிளையில் பெரிய உற்பத்தியாளர்கள் பொருளுற்பத்தியை ஒழுங் கியக்குவதற்காக அமைந்த கூட்டமைவாகிய ''டிரஸ்டு'' என்பதில் ஒன்றுபடுகிறார்கள். உற்பத்தி செய்ய வேண்டிய மொத்த அளவை அவர்கள் நிர்ணயித்து அதைத் தம்

மிடையே பாகப் பிரிவினை செய்து கொள்கிறார்கள்; இவ்விதம் அவர்கள் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலைகளை நிலைநாட்டுகின்றனர். ஆனால் இவ்வகையான டிரஸ்டுகள் தொழிலும் வாணிபமும் மோசமாகியதும் சாதாரணமாகக் குலைந்துவிடக் கூடியவை; இக்காரணத்தால் மேலும் கூடுதலான அளவில் ஒன்றுகுவிதலைக் குறிக்கும் கூட்டமைவு அவசியமாகி விடுகிறது; குறிப்பிட்ட அந்தத் தொழிற்கிளை முழுதுமே ஒரு பிரம்மாண்டக் கூட்டுப் பங்குக் கம்பெனியாய் மாற்றப்படுகிறது; உள்நாட்டுப் போட்டி இந்த ஒரு கம்பெனியின் உள்நாட்டு ஏகபோகமாகி விடுகிறது. 1890ல் ஆங்கில ஆல்கலி உற்பத்தியில் இப்படிதான் ஆயிற்று; 48 பெரிய தொழில் நிலையங்கள் ஒன்றாக இணைந்த பின் இந்தத் தொழிற்கிளை ஒரே கம்பெனியின் கைக்குள் அடங்கி 60,00,000 பவுண்டுகள் மூலதனத்துடன் அனைத்துக்குமான ஒரே திட்டத்தின் பிரகாரம் நடத்தப்படுகிறது.

டிரஸ்டுகளில் சுதந்திரமான போட்டி அதற்கு நேர் முரணானதாகிறது—ஏகபோகமாகிறது. முதலாளித்துவச் சமுதாயத்தின் உறுதியான திட்டம் ஏதும் இல்லாத பொருளுற்பத்தி படையெடுத்து வரும் சோஷலிசச் சமுதாயத்தின் உறுதி வாய்ந்த திட்ட வழியிலான பொருளுற்பத்தியிடம் சரணடைகிறது. இது வரை இன்னமும் இது முதலாளிகளுடைய ஆதாயத்துக்காகவும் அனுகூலத்துக்காகவும் ஆனதே என்பது மெய்தான். ஆனால் இந்தச் சுரண்டல் இப்படி அப்பட்டமாக இருப்பதால் இது தகர்க்கப்பட்டே ஆக வேண்டும். லாப வெறியர்களது ஒரு சிறு கும்பல் இப்படிப்பட்ட வர்த்தனமாக சமூகத்தைச் சுரண்டுவதற்கு ஏற்பாடு செய்து டிரஸ்டுகள் நடத்தும் பொருளுற்பத்தியை எந்தத் தேசமும் சகித்துக் கொண்டிருக்காது.

எப்படியும், டிரஸ்டுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், முதலாளித்துவச் சமுதாயத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாகிய அரசு முடிவில் பொருளுற்பத்தியின் நெறியாண்மையை ஏற்க வேண்டி வரும்.* அரசின் உடைமையாக

* ''வேண்டி வரும்'' என்று கூறுகிறேன்; ஏனெனில் பொருளுற்பத்திக்கும் வினியோகத்துக்குமான சாதனங்கள்

மாற்றப்பட வேண்டிய இந்த அவசியம் தகவல் தொடர்புக்கும் போக்குவரத்துக்குமாகிய மாபெரும் ஏற்பாடுகளான அஞ்சல் நிலையம், தந்தி, ரயில்வே ஆகியவற்றில் எல்லாவற்றிற்கும் மேலாக உணரப்படுகிறது.

நவீன உற்பத்தி சக்திகளைத் தொடர்ந்து நிர்வகிப்பதற்கு முதலாளித்துவம் ஆற்றலற்றதாகி விட்டது என்பதை நெருக்கடிகள் கண்கூடாக்குகின்றன என்றால், பொருளுற்

---

கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் மூலமான நிர்வாக வடிவை மெய்நடப்பில் விஞ்சி வளர்ந்துவிடும் போதுதான், ஆகவே அரசு இச்சாதனங்களைத் தானே எடுத்துக் கொள்ளுதல் பொருளாதார வழியில் தவிர்க்க முடியாமலாகும் போது தான், அப்பொழுது மட்டுமேதான்—இதைச் செய்வது இன்றுள்ள அரசாகவே இருப்பினும்கூட—இது பொருளாதார முன்னேற்றமாக இருக்கும், உற்பத்தி சக்திகள் யாவற்றையும் நேரே சமுதாயமே எடுத்துக் கொள்வதற்குப் பூர்வாங்கமாக அமையும் மற்றொரு நடவடிக்கையாக இருக்கும். ஆனால் சிறிது காலமாக, பிஸ்மார்க் தொழில் நிலையங்களை அரசு உடைமையாக்கும் முயற்சியில் இறங்கியது முதலாக, ஒருவகைப் போலி சோஷலிசம் அவதரித்திருக்கிறது; அடிக்கடி இது அடிவருடியின் நிலைக்கு ஒத்த கேவல நிலைக்கு இழிவுற்று எல்லா அரசு உடைமையுமே, பிஸ்மார்க் வகைப் பட்டதும்கூட, சோஷலிசமே என்பதாகக் கூறுமளவுக்குச் செல்கிறது. புகையிலைத் தொழிலை அரசு எடுத்துக் கொள்வது சோஷலிசமாகி விடுமாயின், நெப்போலியனையும் மெட்டர்னிகையும் நிச்சயம் சோஷலிசத்தின் மூலமுதல்வர்களது வரிசையிலேதான் அமர்த்த வேண்டும். பெல்ஜிய அரசு மிகச் சாதாரண அரசியல், நிதிவிவகாரக் காரணங்களை உத்தேசித்து தனது பிரதான ரயில் பாதைகளைத் தானே கட்டியமைத்துக் கொண்டதெனில், பிஸ்மார்க் எந்தப் பொருளாதார அவசியத்தையும் முன்னிட்டு அல்லாமல், பிரஷ்ய ரயில் பாதைகள் அரசின் கையில் இருந்தால் யுத்தம் ஏற்படும் பட்சத்தில் நல்லதுதானே என்றும் ரயில்வே சிப்பந்திகளை அரசாங்கத்துக்கு ஓட்டுப் போடும் ஆட்டு மந்தையாக வளர்த்திடலாம் என்றும் இன்னும் முக்கியமாக நாடாளுமன்ற ஓட்டுகளுக்கு உட்படாத சுயேச்சையான புதிய வருமான ஆதாரத்தைத் தனக்கு சிருஷ்டித்துக் கொள்ளலாம் என்றும் பிரதான பிரஷ்ய ரயில் பாதைகளை அரசின் உடைமையாய் எடுத்துக் கொண்டாரெனில்—எவ்விதத்திலும் அது நேரடியாகவோ

பத்திக்கும் வினியோகத்துக்குமான மாபெரும் ஏற்பாடுகள் கூட்டுப் பங்குக் கம்பெனிகளாகவும் டிரஸ்டுகளாகவும் அரசு உடைமைகளாகவும் மாற்றப்பட்டிருப்பது முதலாளித்துவ வர்க்கத்தினர் இந்தக் காரியத்துக்கு எவ்வளவு தேவையற்ற வர்களாகி விட்டனர் என்பதைத் தெளிவுபடுகிறது. முதலாளி செய்து வந்த எல்லாச் சமூக வேலைகளையும் இன்று சம்பளச் சிப்பந்திகள் செய்து விடுகின்றனர். லாபப் பங்கீடுகளை மூட்டை கட்டிக் கொள்வதையும் வட்டி லாபம் பெறுவதையும் முதலாளிகள் ஒருவர் முதலை ஒருவர் சூறையாடிக் கொள்ளும் பங்குச் சந்தையில் சூதாடுவதையும் தவிர முதலாளிக்கு இனி சமூக வேலை எதுவும் இல்லாமற் போய்விட்டது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முதலில் தொழிலாளர்களை வெளியே தள்ளுகிறது; இப்பொழுது அது முதலாளிகளையும் வெளியே தள்ளி, தொழிலாளர்களைச் செய்தது போலவே, இவர்களையும் சிறுமைப்படுத்துகிறது; உடனடியாகவே தொழில்துறை ரிசர்வ் பட்டாளத்தின் அணிகளுக்கு இல்லாவிட்டாலும்,வேண்டாத உபரி மக்கள் தொகையோரின் அணிகளுக்குத் தாழ்வுறச் செய்கிறது.

ஆனால் கூட்டுப் பங்குக் கம்பெனிகள், டிரஸ்டுகளின் உடைமைகளாகவோ அல்லது அரசு உடைமைகளாகவோ மாற்றப்படுவதால் உற்பத்தி சக்திகளுடைய முதலாளித்துவத் தன்மை நீக்கப்பட்டுவிடவில்லை. கூட்டுப் பங்குக் கம்பெனிகள், டிரஸ்டுகளின் விவகாரத்தில் இது வெளிப்படையாகவே தெரிகிறது. நவீன அரசுங்கூட தொழிலாளர்களுடைய அத்துமீறல்களையும் மற்றும் தனிப்பட்ட முதலாளி

---

மறைமுகமாகவோ, உணர்வுபூர்வமாகவோ மனம் அறியாமலோ ஒரு சோஷலிச நடவடிக்கை ஆகிவிடவில்லை. இல்லையேல் மன்னரது கடற்கப்பல் கம்பெனியும்[59] மன்னரின் பீங்கான் பண்டத் தயாரிப்பும் சேனையின் பட்டாளத்துத் தையல் துறையுங்கூட சோஷலிச நிறுவனங்களாகிவிடும், ஏன் மூன்றாவது பிரெடெரிக்-வில்ஹெல்முடைய ஆட்சியின் போது கபட வேடதாரி ஒருவர் கூறிய ஆலோசனைக்கேற்ப விபசார விடுதிகளை அரசு எடுத்துக் கொண்டு விடுவதுங்கூடத் தான். **(பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

களுடைய அத்துமீறல்களையும் எதிர்த்து முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் புறநிலைமைகளை நிலைநாட்டும் பொருட்டு முதலாளித்துவச் சமுதாயம் ஏற்கும் நிறுவன ஒழுங்கமைப்பே அன்றி வேறல்ல. அதன் வடிவம் எப்படி இருப்பினும் நவீன அரசு சாராம்சத்தில் முதலாளித்துவப் பொறியமைவு ஆகும், முதலாளிகளுடைய அரசு ஆகும், மொத்த தேசிய மூலதனத்தின் இலட்சிய ஆளுருவாக்கம் ஆகும். அது எவ்வளவு உற்பத்தி சக்திகளை உடைமையாக்குகிறதோ, அவ்வளவு அது மெய்நடப்பில் தேசிய முதலாளியாகிறது, அவ்வளவு அதிகமான குடிமக்களைச் சுரண்டுகிறது. தொழிலாளர்கள் இனியும் கூலித் தொழிலாளர்களாகவே, அதாவது பாட்டாளி வர்க்கத்தவராகவே இருக்கின்றனர். முதலாளித்துவ உறவு அகற்றப்பட்டு விடவில்லை; அதற்கு மாறாக, உச்ச நிலைக்கு மும்முரமாக்கப்படுகிறது. இவ்விதம் உச்ச நிலைக்கு மும்முரமாக்கப்படுகையில் அது குப்புற விழுகிறது. உற்பத்தி சக்திகள் அரசின் உடைமையில் இருப்பது மோதலுக்குத் தீர்வு ஆகிவிடவில்லை; ஆனால் இந்தத் தீர்வின் கூறுகளாக அமையும் வினைநுட்ப நிலைமைகள் வெளியே தெரியாமல் அதனுள் மறைந்திருக்கின்றன.

நவீன உற்பத்தி சக்திகளுடைய சமூகத் தன்மையை நடைமுறையில் அங்கீகரித்தலும் ஆகவே பொருளுற்பத்தி, சுவீகரிப்பு, பரிவர்த்தனை முறைகளை உற்பத்திச் சாதனங்களுடைய சமூகத் தன்மைக்கு இசைவாக்குதலும்தான் இம்மோதலுக்குத் தீர்வாக முடியும். சமுதாயம் அனைத்தாலும் ஆகிய கட்டுப்பாட்டை அன்றி வேறு எந்தக் கட்டுப்பாட்டுக்கும் ஒவ்வாதனவாய் விஞ்சி வளர்ந்துவிட்ட உற்பத்தி சக்திகளைப் பகிரங்கமாகவும் நேரடியாகவும் சமுதாயமே உடைமையாக்கிக் கொள்வதன் மூலமே இந்த இசைவு ஏற்பட முடியும். இன்று உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திப் பொருள்கள் இவற்றின் சமூகத் தன்மை உற்பத்தியாளர்களுக்கு எதிராகச் செயல்படுகிறது; பொருளுற்பத்தி, பரிவர்த்தனை அனைத்தையும் கால அலை வட்ட முறையில் குலைத்திடுகிறது; கண்மூடித்தனமாக, பலாத்காரமாக, நாச

கரமாக இயங்கும் இயற்கை விதியைப் போல் செயல்படுகிறது. ஆனால் சமுதாயம் இந்த உற்பத்தி சக்திகளைத் தானே எடுத்துக் கொண்டதும் உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திப் பொருள்கள் இவற்றின் சமூகத் தன்மையை உற்பத்தியாளர்கள் சரிவர உணர்ந்து பயன்படுத்திக் கொள்வார்கள்; குழப்படியும் காலவாரியான சீர்குலைவும் உண்டாக்கும் மூலகாரணமாக இருப்பதற்குப் பதில் பொருளுற்பத்திக்கு மிகவும் சக்தி வாய்ந்த நெம்புகோலாகிவிடும்.

செயல் வன்மை வாய்ந்த சமூக சக்திகள் நாம் அவற்றைப் புரிந்து கொள்ளாமலும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் இருக்கும் வரை இயற்கை சக்திகளைப் போலவே கண்மூடித்தனமாகவும் பலாத்காரமாகவும் நாசகரமாகவும் செயல்படுகின்றன. ஆனால் நாம் அவற்றைப் புரிந்து கொண்டதும், அவற்றின் செயலையும் திசைவழியையும் பலன்களையும் மனத்தால் பற்றிக் கொண்டதும், பிறகு அவற்றை மேலும் மேலும் நமது சித்தத்துக்குக் கீழ்ப்படியச் செய்து அவற்றைக் கொண்டு நமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வது முற்றிலும் நம்மையே பொறுத்ததாகும். முக்கியமாக இது பேராற்றல் கொண்ட இன்றைய உற்பத்தி சக்திகளுக்கு மிகவும் பொருந்துவதாகும். செயலுக்கான இந்தச் சமூகச் சாதனங்களின் தன்மையையும் இயல்பையும் புரிந்து கொள்ள நாம் பிடிவாதமாக மறுக்கும் வரையில்—இவற்றைப் புரிந்து கொள்வது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பண்புக்கும் அதன் காவலர்களது மனப்பாங்குக்கும் முரணானது—இந்தச் சக்திகள் நம்மை மீறி நமக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கும்; மேலே நாம் விவரமாகக் காட்டியுள்ளது போல, நம் மீது ஆதிக்கம் புரிந்து நம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டுதான் இருக்கும்.

ஆனால் அவற்றின் தன்மை புரிந்து கொள்ளப்பட்டதும், ஒன்றுபட்டு வேலை செய்யும் உற்பத்தியாளர்களுடைய கரங்களில் ஆட்டிப் படைக்கும் பூதங்களாக ஆதிக்கம் புரியாமல் மனமுவந்து பணி புரியும் பணியாட்களாக அவற்றை மாற்றிவிடலாம். இந்த வேறுபாடு புயலின் போது இடியிலுள்ள மின்விசையின் அழிவு சக்திக்கும் தந்தியிலும் வோல்ட்டா

மின்வில்லிலும் பணிந்து செயல்படும் மின்விசைக்குமுள்ளது போன்றதாகும்; நாசம் விளைவிக்கும் பெருந்தீயிற்கும் மனிதனுக்குச் சேவை புரியும் நெருப்புக்குமுள்ளது போன்றதாகும். இன்றைய உற்பத்தி சக்திகளுடைய மெய்யான தன்மை முடிவாக இவ்விதம் புரிந்து கொள்ளப்பட்டதும், பொருளுற்பத்தியின் சமூக அளவிலான அராஜகம் ஒழிந்து அதனிடத்தில் சமுதாயத்தின் தேவைகளுக்கும் ஒவ்வொரு தனி மனிதனின் தேவைகளுக்கும் ஏற்ப வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பொருளுற்பத்தியின் சமூக அளவிலான ஒழுங்கியக்கம் ஆட்சி புரியும். உற்பத்திப் பொருள் முதலில் உற்பத்தியாளரையும் பிறகு சுவீகரிப்பாளரையும் அடிமை செய்யும்படியான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மறைந்து அதனிடத்தில் நவீன உற்பத்திச் சாதனங்களது தன்மையின் அடிப்படையில் உற்பத்திப் பொருள்கள் சுவீகரித்துக் கொள்ளப்படும் முறை அப்பொழுது உதித்தெழும்; அதாவது, ஒரு புறத்தில், பொருளுற்பத்தியின் பராமரிப்புக்கும் விரிவாக்கத்துக்குமான சாதனங்களாக நேரடியான சமூக சுவீகரிப்பையும், மறு புறத்தில், பிழைப்புக்கும் சுகானுபோகத்துக்குமான சாதனங்களாக நேரடியாகத் தனி மனித சுவீகரிப்பையும் அடிப்படையாகக் கொண்ட சுவீகரிப்பு முறை உதித்தெழும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மக்கள் தொகையில் மிகப் பெரும்பாலோரை மேலும் மேலும் முழுமையாகப் பாட்டாளி வர்க்கத்தோராய் மாற்றும் அதே போதில், தானே அழியாதிருக்க வேண்டுமாயின் இந்த மாற்றத்தைச் செய்து முடிக்கும்படியான கட்டாயத்துக்கு உள்ளாகும் ஒரு சக்தியையும் அது தோற்றுவிக்கிறது. ஏற்கெனவே சமூகமயமாகிவிட்ட பிரம்மாண்டப் பொருளுற்பத்திச் சாதனங்கள் மேலும் மேலும் அரசின் சொத்தாக மாற்றப்படும்படி அது நிர்ப்பந்தம் செய்யும் அதே போதில் இந்த மாற்றத்தைச் செய்து முடிப்பதற்குரிய வழியையும் அது சுட்டிக் காட்டுகிறது. **பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு உற்பத்திச் சாதனங்களை அரசுச் சொத்தாக மாற்றுகிறது.**

ஆனால் இதன் மூலம் அது பாட்டாளி வர்க்கம் என்ற தனது நிலைக்கே முடிவு கட்டிக் கொள்கிறது, எல்லா வர்க்க வேறுபாடுகளுக்கும் வர்க்கப் பகைமைகளுக்கும் முடிவு கட்டுகிறது, அரசு அரசாக இருப்பதற்கும் முடிவு கட்டுகிறது. இது வரை சமுதாயம் வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில் அமைந்திருந்ததால் அதற்கு அரசு தேவைப்பட்டது; அதாவது அந்தந்தக் காலத்திலும் சுரண்டும் வர்க்கமாக இருக்கும் குறிப்பிட்ட வர்க்கத்துக்கான ஒழுங்கமைப்பு ஒன்று தேவைப்பட்டது; பொருளுற்பத்திக்காக நடப்பிலுள்ள நிலைமைகளில் வெளியிலிருந்து தலையீடு எதுவும் இல்லாமல் தடுப்பதற்காகவும்—இன்னும் முக்கியமாக—சுரண்டப்படும் வர்க்கங்களை அந்தந்தப் பொருளுற்பத்தி அமைப்புக்கும் (அடிமை முறை, பண்ணையடிமை முறை, கூலி உழைப்பு முறை) பொருத்தமான ஒடுக்குமுறை நிலையில் பலவந்தமாக இருத்தி வைப்பதற்காகவும் ஒரு ஒழுங்கமைப்பு தேவைப்பட்டது. இந்த அரசு சமுதாயம் அனைத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக, கண்கூடான அதன் உருவகத் திரட்சியாக விளங்கிற்று. ஆனால் எந்த வர்க்கம் தன்னுடைய காலத்தில் சமுதாயம் முழுவதுக்கும் தானே பிரதிநிதியாக இருந்ததோ, அந்த வர்க்கத்தின் அரசாக இருந்த அளவுக்குத் தான்—அதாவது, புராதன காலத்தில் அடிமையுடைமைக் குடிகளின் அரசாகவும் மத்திய காலத்தில் நிலப்பிரபுக்களின் அரசாகவும் நாம் வாழும் இக்காலத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாகவும் இருந்த அளவுக்குத்தான்—அரசால் இவ்வாறு விளங்க முடிந்தது. இறுதியில் அரசு சமுதாயம் முழுமைக்கும் மெய்யான பிரதிநிதியாகும் போது, அது தன்னைத் தேவையற்றதாக்கிக் கொள்கிறது. இனி கீழ்ப்படுத்தி வைக்க வேண்டிய சமூக வர்க்கம் எதுவும் இல்லாமற்போனதும், வர்க்க ஆதிக்கமும் பொருளுற்பத்தியில் தற்போதுள்ள அராஜகத்தின் அடிப்படையில் நடைபெறும் தனியார் பிழைப்புப் போராட்டமும் இந்தப் போராட்டம் காரணமாக எழும் மோதல்களும் மட்டுமீறிய செயல்களும் நீக்கப்பட்டதும், அடக்கி வைப்பதற்கு எதுவும் இல்லாமற் போகிறது, ஆதலால் தனிவகை அடக்குமுறை சக்தியான

அரசுக்கு இனி அவசியம் இல்லாமற்போகிறது. அரசு மெய்யாகவே சமுதாயம் முழுதுக்கும் பிரதிநிதியாக முன்வந்து புரிந்திடும் முதலாவது செயல்—அதாவது, உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயத்தின் உடைமையாக்கிக் கொள்ளும் இச்செயல்—அரசு என்ற முறையில் சுயேச்சையாக அது புரிந்திடும் இறுதிச் செயலாகவும் அமைந்து விடுகிறது. சமூக உறவுகளில் அரசின் தலையீடு ஒவ்வொரு துறையாகத் தேவையற்றதாகி பிறகு தானாகவே தணிந்து அணைந்து விடுகிறது. ஆட்களை ஆளும் அரசாங்கம் பொருள்களது நிர்வாகமாக, பொருளுற்பத்தி வேலைகளது நடப்பாக மாறி விடுகிறது. அரசு ''ஒழிக்கப்படுவதில்லை'', அது உலர்ந்து உதிர்ந்து விடுகிறது. ''சுதந்திர மக்கள் அரசு''* என்னும் தொடர் எந்த அளவுக்கு மதிக்கத்தக்கது என்பதையும்—சில நேரங்களில் கிளர்ச்சிக்காரர்கள் அதைப் பிரயோகித்தல் எந்த அளவுக்கு நியாயமென்பதையும் முடிவில் விஞ்ஞான வழியில் அது எவ்வளவு குறைபாடானதென்பதையும்—மற்றும் அராஜகவாதிகளுடைய கோரிக்கையாகச் சொல்லப்படும் ஒரே நொடியில் அரசு ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எந்த அளவுக்கு மதிக்கத்தக்கது என்பதையும் மேற்கூறியது புலப்படுத்துகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வரலாற்றில் உதித்தெழுந்தது முதலாகவே உற்பத்திச் சாதனங்கள் யாவும் சமுதாயத்தால் சுவீகரிக்கப்பட வேண்டுமென்பது தனி மனிதர்களும் மற்றும் தனிக் குழுவினரும் அவ்வளவாகத் தெளிவின்றி அடிக்கடி கண்டு வந்த கனவாகவும் வருங்காலத்துக்குரிய இலட்சியமாகவும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இது சித்தி பெறுவதற்கு வேண்டிய எதார்த்த நிலைமைகள் தோன்றிய பிறகே இது சாத்தியமாக முடியும், வரலாற்று வழியில் அவசியமாக முடியும். ஏனைய எந்தச் சமூக முன்னேற்றத்தையும் போல, இதுவும் குறிப்பிட்ட புதிய பொருளாதார நிலைமைகள் ஏற்படுவதன் காரண

* இப்பதிப்பு, தொகுதி 9, பக்கங்கள் 52—55ஐப் பார்க்க.—ப-ர்.

மாக நடைமுறை சாத்தியமாக முடியுமே தவிர, வர்க்கங்கள் இருப்பது நீதிக்கும் சமத்துவத்துக்கும் இன்ன பிறவற்றுக்கும் முரணாகுமென்று மனிதர்கள் உணர்வதனால், இந்த வர்க்கங்களை ஒழிக்க விரும்புகிறார்கள் என்பதால் மட்டும் அல்ல. சுரண்டும் வர்க்கமாகவும் சுரண்டப்படும் வர்க்கமாகவும், ஆளும் வர்க்கமாகவும் ஒடுக்கப்பட்ட வர்க்கமாகவும் சமுதாயம் பிளவுண்டது, முற்காலத்தில் பொருளுற்பத்தியின் வளர்ச்சி போதாததாகவும் குறுகிய வரம்புக்குட்பட்டதாகவும் இருந்ததால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விளைவாகும். மொத்த சமூக உழைப்பால் கிடைக்கும் உற்பத்திப் பொருள்கள் எல்லோருடைய உயிர் வாழ்வுக்கும் வேண்டிய அத்தியாவசிய அளவைக் காட்டிலும் சொற்ப அளவே அதிகமாயிருக்கும் வரை, இதன் காரணமாகச் சமுதாயத்தின் உறுப்பினர்களில் மிகப் பெருவாரியானோரின் முழு நேரமும் அல்லது அனேகமாக முழு நேரமும் உழைப்புக்காக வேண்டியிருக்கும் வரையில் இந்தச் சமுதாயம் தவிர்க்க முடியாதவாறு வர்க்கங்களாகப் பிளவுற்றிருக்க வேண்டியதாகிறது. முற்றிலும் உழைப்பிலே மட்டும் ஈடுபட வேண்டிய கொத்தடிமைகளான மிகப் பெருவாரியுடன் கூடவே நேரடியான பொருளுற்பத்திக்குரிய உழைப்பிலிருந்து விடுபட்ட ஒரு வர்க்கம் தோன்றி உழைப்பை நெறிப்படுத்தல், அரசு, சட்டம், விஞ்ஞானம், கலை விவகாரங்கள் போன்ற சமுதாயத்தின் பொது அலுவல்களைக் கவனித்து வருகிறது. ஆகவே உழைப்புப் பிரிவினை விதிதான் வர்க்கப் பிரிவினைக்கு அடிப்படையாக அமைகிறது. ஆனால் இந்த வர்க்கப் பிரிவினை பலாத்காரத்தாலும் கொள்ளையாலும் சூதுமுறையாலும் மோசடியாலும் நிலைநாட்டப்படவில்லை என்பது இதற்கு அர்த்தமல்ல. ஆதிக்க நிலை பெற்றதும் ஆளும் வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தின் செலவில் தனது ஆதிக்கத்தை உறுதியாக்கிக் கொள்ளவில்லை என்றோ, சமுதாயத்தில் தனக்கிருந்த தலைமைப் பதவியைப் பெருந்திரள் மக்கள் மீதான கொடும் சுரண்டலாக மாற்றிக் கொள்ளவில்லை என்றோ, இதற்கு அர்த்தமல்ல.

ஆனால் வர்க்கப் பிரிவினைக்கு இந்த விதத்தில் வர

லாற்று வழியில் ஓரளவு நியாயம் உண்டெனில், குறிப்பிட்ட காலக்கூறில் மட்டும்தான், குறிப்பிட்ட சமூக நிலைமைகளில் மட்டும்தான் இப்படி அது நியாயமாகும். இதற்குப் பொருளுற்பத்தியின் போதாமையே அடிப்படையாக இருந்தது. இது நவீன உற்பத்தி சக்திகளுடைய முழு வளர்ச்சியால் துடைத்தெறியப்பட்டுவிடும். உண்மையில் சமுதாயத்தில் வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு வரலாற்று வழியிலான பரிணாம வளர்ச்சி குறிப்பிட்ட ஓர் அளவுக்கு இருப்பது முன்நிபந்தனை ஆகும். இந்தப் பரிணாம வளர்ச்சி ஏற்பட்டதும், குறிப்பிட்ட இந்த அல்லது அந்த ஆளும் வர்க்கம் மட்டுமின்றி, ஆளும் வர்க்கம் என்பதாக எதுவும் இருப்பதும், ஆகவே வர்க்கப் பாகுபாடு இருப்பதும் காலங்கடந்து போய் சிறிதும் ஒவ்வாதனவாகிவிடும். சமுதாயத்தின் எந்த வர்க்கமும் உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்திப் பொருள்களையும் சுவீகரித்துக் கொள்வதும்—அதோடுகூட அரசியல் ஆதிக்கம் செலுத்துவதும் கலாசார ஏகபோகமும் அறிவுத்துறைத் தலைமைப் பதவியும் வகிப்பதும்—தேவையற்றதாவதுடன் வளர்ச்சிக்குப் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் அறிவுத்துறை வழியிலும் இடையூறாகிவிடும்படியான அளவுக்குப் பொருளுற்பத்தி வளர்ச்சியுறுவது வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்குரிய முன்நிபந்தனை ஆகும்.

இந்த வளர்ச்சி நிலை தற்போது எய்தப் பெற்றுவிட்டது. அரசியல் துறையிலும் அறிவுத்துறையிலும் முதலாளித்துவ வர்க்கம் கையாலாகாததாகி விட்டது என்பது முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு இனி ஓர் இரகசியமாக இருப்பதாகக் கூற முடியாது; இவ்வர்க்கத்தாரின் பொருளாதாரக் கையாலாகாமை பத்தாண்டுக்கு ஒரு தரம் முறையாக வெளிப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தரமும் நெருக்கடியின் போது சமுதாயம் அதனுடைய உற்பத்தி சக்திகள், உற்பத்திப் பொருள்களது சுமையின் கீழ் திணறித் திக்குமுக்காடுகிறது; இந்த உற்பத்தி சக்திகளையும் உற்பத்திப் பொருள்களையும் சமுதாயம் உபயோகித்துக் கொள்ள முடியவில்லை; உற்பத்தியாளர்களுக்கு நுகர ஏதுமில்லை, ஏனென்றால் நுகர்வோர் போதுமான பேர் இல்லை என்னும் இந்த

அபத்த முரண்பாட்டின் முன்னால் ஒன்றும் செய்ய இயலாததாக நிற்கிறது. உற்பத்திச் சாதனங்களுடைய விரிவகற்சியின் வலிமை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை இவற்றுக்குப் போட்டுள்ள கட்டுகளை உடைத்தெறிகிறது. இந்தக் கட்டுகளிலிருந்து உற்பத்திச் சாதனங்கள் விடுதலை பெறுவது உற்பத்தி சக்திகள் இடையறாமலும் மேலும் மேலும் கூடுதலான வேகத்திலும் வளர்ச்சி பெறுவதற்கும் இவ்விதம் பொருளுற்பத்தி அனேகமாக வரம்பின்றி பெருகிச் செல்வதற்குமான ஒரேயொரு முன்னிபந்தனையாகும். இது மட்டுமல்ல. உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயம் சுவீகரித்துக் கொள்வது தற்போது பொருளுற்பத்திக்கு இருந்து வரும் செயற்கையான தடைகளை ஒழித்துக் கட்டுவதோடுகூட, இன்று பொருளுற்பத்தியின் தவிர்க்க முடியாத உடனிணைவுகளாகி நெருக்கடிகளின் போது உச்ச நிலைக்கு உக்கிரமாகிவிடும் உற்பத்தி சக்திகள், உற்பத்திப் பொருள்களது அப்பட்டமான விரயத்துக்கும் அழிவுக்கும் முடிவு கட்டிவிடும். தவிரவும் இன்றைய ஆளும் வர்க்கங்களும் அவற்றின் அரசியல் பிரதிநிதிகளும் புரிந்து வரும் முட்டாள்தனமான ஊதாரித்தனத்துக்கு முடிவு கட்டுவதன் மூலம் அது பொதுவில் சமுதாயத்துக்குப் பெரிய அளவில் உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்திப் பொருள்களையும் விடுவித்துக் கொடுக்கும். சமூகமயமான பொருளுற்பத்தி மூலம் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொருளாயத நிலையில் முற்றிலும் போதுமானதும் நாளுக்கு நாள் மேலும் பூரணமாகி வருவதுமான வாழ்வை மட்டுமின்றி, எல்லோருக்கும் தமது உடல் ஆற்றல்களும் உள்ளத்து ஆற்றல்களும் தங்குதடையின்றி வளர்ச்சியடைவதற்கும் செயல்படுவதற்கும் உத்தரவாதம் செய்யும் வாழ்வையும் கிடைக்கச் செய்வதற்கான சாத்தியப்பாடு முதன்முதலாக இப்பொழுது இருப்பதோடு கைவரப் பெறவும் செய்கிறது.*

* முதலாளித்துவ ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்துங்கூட நவீன உற்பத்திச் சாதனங்களது பிரம்மாண்ட விரிவகற்சி வலிமையைக் குத்துமதிப்பாக உணர்த்துவதற்கு ஒரு சில புள்ளிவிவரங்களைக் குறிப்பிடலாம். திரு. ஜிஃபென் தரும்

உற்பத்திச் சாதனங்களைச் சமுதாயம் கைப்பற்றிக் கொண்டதும், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கு முடிவு கட்டப்பட்டுவிடுகிறது, இதனுடன் கூடவே உற்பத்தியாளரை உற்பத்திப் பொருள் அடக்கி ஆண்மை செலுத்துவதும் ஒழிந்து விடுகிறது. சமூகப் பொருளுற்பத்தியில் அராஜகம் அகற்றப்பட்டு முறைப்படியான, திட்டவட்டமான ஒழுங்கமைப்பு உண்டாக்கப்படுகிறது. தனிமனிதனின் பிழைப்புப் போராட்டம் மறைகிறது. இதன் பின் முதன்முதலாக மனிதன் ஒரு வகை அர்த்தத்தில் விலங்கின உலகிலிருந்து முடிவாகத் துண்டித்துக் கொண்டு விலங்கின வாழ்நிலைமைகளிலிருந்து வெளிப்பட்டு மெய்யான மனித வாழ்நிலைமைகளினுள் பிரவேசிக்கிறான். மனிதனது சுற்றுச்சார்பாக அமைந்து இதுகாறும் மனிதனை ஆட்சி புரிந்து வந்த வாழ்நிலைமைகளது முழு அரங்கும் இப்பொழுது மனிதனுடைய ஆதிக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு விடுகிறது; முதன்முதலாக மனிதன் இயற்கையின் மெய்யான, உணர்வு பூர்வமான அதிபதி ஆகின்றான்; ஏனெனில் இப்பொழுது அவன் தனது சமூக ஒழுங்கமைப்பை ஆட்சி புரியும் எஜமானன் ஆகி விடுகின்றான். அவனுடைய சமூகச் செயற்பாடுகளின் விதிகள், இதுகாறும் இயற்கை விதிகளாக அவனுக்கு

---

மதிப்பீடுகளின்படி, கிரேட் பிரிட்டன், அயர்லாந்து இவற்றின் மொத்தச் செல்வம் முழுத் தொகைகளில்

*1814ல்—2,20,00,00,000* பவுண்டுகளாகவும்
*1865ல்—6,10,00,00,000* பவுண்டுகளாகவும்
*1875ல்—8,50,00,00,000* பவுண்டுகளாகவும்

இருந்தது.

நெருக்கடியின் போது உற்பத்திச் சாதனங்களும் உற்பத்திப் பொருள்களும் விரயமாக்கப்படுவதற்கு ஓர் உதாரணம்: 1873-78ஆம் ஆண்டுகளின் நெருக்கடியின் போது ஜெர்மன் இரும்புத் தொழிலில் மட்டும்—இரண்டாவது ஜெர்மன் தொழில்துறை காங்கிரசில் (பெர்லின், 1878, பிப்ரவரி 21) தரப்பட்ட விவரங்களின்படி—2,27,50,000 பவுண்டுகள் மொத்த நஷ்டம் உண்டாயிற்று. **(பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

அன்னியமாக இருந்து ஆதிக்கம் செலுத்தி அவனை ஆட்டிப் படைத்த இந்த விதிகள் இனி அவனால் பூரணமாக உணரப் பட்டுப் பயன்படுத்திக் கொள்ளப்படும்; ஆகவே மனிதன் இவற்றின் மீது ஆட்சி செலுத்துகிறவன் ஆகி விடுவான். இயற்கையாலும் வரலாற்றாலும் அவனுக்கு விதிக்கப்பட்ட இன்றியமையா அவசியமாக இதுகாறும் அவனை எதிர்நோக்கிய மனித சமூக ஒழுங்கமைப்பு இப்பொழுது அவனுடைய சுதந்திரமான சொந்த செயலின் விளைவாகி விடுகிறது. இது வரை வரலாற்றை ஆட்சி புரிந்த வெளிபுறத்தே அமைந்த புறநிலை சக்திகள் நேரடியாக மனிதனது கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. அது முதல்தான் மனிதன் மேலும் மேலும் உணர்வுபூர்வமாகத் தனது வரலாற்றைத் தானே படைப்பவனாவான்; அது முதல்தான் அவனால் இயக்கிவிடப்படும் சமூகக் காரணங்கள் பிரதானமாகவும் மேலும் மேலும் கூடுதலான அளவிலும் அவன் விரும்பிய பலன்களை அளித்திடமுற்படும். அவசியத்தின் ஆட்சியிலிருந்து சுதந்திரத்தின் ஆட்சிக்கு மனிதன் வளர்ந்து உயருவதை இது குறிப்பதாகும்.

வரலாற்றுப் பரிணாம வளர்ச்சி குறித்து நாம் கூறியதைச் சுருக்கமாகத் தொகுத்தளிப்போம்:

I. **மத்திய காலச் சமுதாயம்**—தனிப்பட்டோரது சிறு வீதப் பொருளுற்பத்தி. உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்டோரது உபயோகத்துக்கு ஏற்றனவாக இருக்கின்றன; ஆகவே புராதனமானவையாக, செப்பமற்றனவாக, சின்னஞ்சிறியனவாக, செயலில் சிறுதிறத்தனவாக இருக்கின்றன. நேரே உற்பத்தியாளர் அல்லது அவருடைய நிலப்பிரபுத்துவக் கோமானது உடனடி நுகர்வுக்காகப் பொருளுற்பத்தி நடைபெறுகிறது. இந்த நுகர்வுக்கும் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் போது தான் இந்த உபரிப்பொருள் விற்கப்படுகிறது, பரிவர்த்தனைக்கு வருகிறது. ஆகவே பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி பிள்ளைப்பருவத்திலேதான் இருக்கிறது. ஆனால் **பொதுவில் சமுதாயத்தின் பொருளுற்பத்தியிலான அராஜகத்தை** அது ஏற்கெனவே தன்னுள் கருவடிவில் கொண்டுள்ளது.

II. **முதலாளித்துவப் புரட்சி**—தொழில்துறை மாற்றியமைக்கப்படுதல்; முதலில் எளிய கூட்டுறவு அமைப்பு, பட்ட

றைத் தொழில் இவற்றின் மூலம் இது நடைபெறுகிறது. இதுகாறும் சிதறிக் கிடந்த உற்பத்திச் சாதனங்கள் பெரிய தொழிலகங்களாக ஒன்றுகுவிகின்றன. தனி ஆட்களது உற்பத்திச் சாதனங்களாக இருந்தவை இதன் விளைவாகச் சமூக உற்பத்திச் சாதனங்களாக மாற்றப்படுகின்றன. ஆனால் இந்த மாற்றத்தால் மொத்தத்தில் பரிவர்த்தனையின் வடிவம் பாதிக்கப்பட்டுவிடவில்லை. பழைய சுவீகரிப்பு முறைகள் மாற்றமின்றி அப்படியே செயல்பட்டு வருகின்றன. முதலாளி உதித்தெழுகிறார். உற்பத்திச் சாதனங்களுடைய உடைமையாளர் என்ற முறையில் உற்பத்திப் பொருள்களை இம்முதலாளி தாமே அபகரித்துக் கொண்டு அவற்றைப் பரிவர்த்தனைப் பண்டங்களாக மாற்றி விடுகிறார். பொருளுற்பத்தி சமூகச் செயலாகி விட்டது.பரிவர்த்தனையும் சுவீகரிப்பும் தொடர்ந்து தனி ஆள் செயல்களாக, தனிப்பட்டோரது செயல்களாக இருந்து வருகின்றன. **சமூக உழைப்பினாலான உற்பத்திப் பொருள் தனிப்பட்ட முதலாளியால் சுவீகரித்துக் கொள்ளப்படுகிறது.** இந்த அடிப்படை முரண்பாட்டிலிருந்துதான் நமது இன்றையச் சமுதாயத்துக்கு உரியவையான எல்லா முரண்பாடுகளும் நவீனத் தொழில்துறையால் பகிரங்கமாக்கப்படும் இந்த எல்லா முரண்பாடுகளும் எழுகின்றன.

அ. உற்பத்தியாளர் உற்பத்திச் சாதனங்களிலிருந்து துண்டித்து விலக்கப்படுதல். தொழிலாளி ஆயுள் முழுதும் கூலியுழைப்பில் உளையும்படிச் சபிக்கப்படுதல். **பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான பகைமை.**

ஆ. பரிவர்த்தனைப் பண்டங்களின் உற்பத்தியை ஆட்சி புரியும் விதிகள் மேன்மேலும் தலைமையாதிக்கம் பெறுதலும் மேன்மேலும் பயனுறுதி மிக்கனவாதலும். கட்டுக்கு அடங்காப் போட்டாபோட்டி. **தனிப்பட்ட ஆலையில் பொருளுற்பத்தியின் சமூகமயமான ஒழுங்கமைப்புக்கும் பொதுவில் பொருளுற்பத்தியிலான சமூக அராஜகத்துக்கும் இடையிலாகிய முரண்பாடு.**

இ. ஒரு புறத்தில், தனிப்பட்ட தொழில் அதிபர் ஒவ்வொருவருக்கும் போட்டாபோட்டியினால் இயந்திரச் சாத

னங்கள் மேலும் மேலும் செம்மை செய்யப்படுதல் கட்டாய மாகுதலும் இதைத் தொடர்ந்து மேலும் மேலும் அதிக மான தொழிலாளர்கள் வேலையில்லாதோராக ஆக்கப்படு தலும். தொழில்துறை ரிசர்வ் பட்டாளம். மறு புறத்தில், பொருளுற்பத்தி வரம்பின்றி பெருகிச் செல்தல்; இதுவும் போட்டாபோட்டியினால் ஒவ்வொரு தொழில் அதிபருக்கும் கட்டாயமாகி விடுகிறது. இப்படி இரு வழிகளிலும் உற்பத்தி சக்திகள் என்றுமில்லாதபடி வளர்ச்சியடைந்து ஓங்குதல், அளிப்பானது சந்தைத் தேவைக்கு விஞ்சியதாகி உபரியாதல், மிகை உற்பத்தி, பண்டங்கள் குவிந்து சந்தைகள் திணறித் திக்குமுக்காடுதல், பத்தாண்டுக்கு ஒரு தரம் நெருக்கடி, நச்சுச் சுழல்: இங்கே உற்பத்திச் சாதனங்களும் உற்பத்திப் பொருள் களும் மிகையாகி விட்டன—அங்கே தொழிலாளர்கள் மிகையாகி வேலையின்றி, பிழைப்புச் சாதனங்களின்றி நிற்கின்றனர். பொருளுற்பத்திக்கும் சமுதாயத்தின் நல்வாழ்வுக்குமான இந்த இரு நெம்புகோல்களும் ஒன்றுகூடிச் செயல்பட முடிய வில்லை; ஏனென்றால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை உற்பத்தி சக்திகளைச் செயல்படாமலும் உற்பத்திப் பொருள்களைப் புழங்கவிடாமலும் தடுக்கின்றது; முதலில் அவை மூலதனமாக மாற்றப்பட வேண்டுமென்று கோரு கிறது. ஆனால் அவற்றின் அதீத அபரிமிதமே அவற்றை மூலதனமாக மாற முடியாதபடி தடுக்கின்றது. இந்த முரண் பாடு ஓர் அபத்தமாக வளர்ந்து விட்டது. பொருளுற்பத்தி முறை பரிவர்த்தனை முறையை எதிர்த்துக் கலகம் புரிகின்றது. முதலாளித்துவ வர்க்கம் தொடர்ந்து தமது சமூகப் பொரு ளுற்பத்தி சக்திகளை நிர்வகிக்கத் திறனற்றதாகி விட்டது என்பது நிரூபிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

ஈ. உற்பத்தி சக்திகளுடைய சமூக இயல்பைப் பகுதி அளவுக்கு அங்கீகரிக்கும்படியான நிர்ப்பந்தம் முதலாளி களுக்கே ஏற்படுகிறது. பொருளுற்பத்திக்கும் போக்குவரத் துக்குமான மாபெரும் நிலையங்கள் முதலில் கூட்டுப் பங்குக் கம்பெனிகளும் பிறகு டிரஸ்டுகளும் அதன் பின் அரசும் ஆகியவற்றின் சொந்தமாக மாற்றப்படுதல். முதலாளித் துவ வர்க்கம் தேவையற்ற வர்க்கம் என்பது கண்கூடாக்கப்

படுகிறது. அதனுடைய சமூக வேலைகளும் இப்பொழுது சம்பளச் சிப்பந்திகளால் செய்யப்படுகின்றன.

III. பாட்டாளி வர்க்கப் புரட்சி—முரண்பாடுகளுக்குத் தீர்வு ஏற்படுகின்றது. பாட்டாளி வர்க்கம் பொது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் கைகளிலிருந்து நழுவிக் கொண்டிருக்கும் சமூகமயமான உற்பத்திச் சாதனங்களை இவ்விதம் அது பொதுச் சொத்தாக மாற்றுகின்றது. இந்தச் செயலின் மூலம் பாட்டாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களை அவை இதுகாறும் தாங்கியிருந்த மூலதன இயல்பிலிருந்து விடுவித்து அவற்றின் சமூக இயல்பு செயல்படுவதற்கு முழுச் சுதந்திரம் அளிக்கின்றது. சமூகமயமான பொருளுற்பத்தி இனி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவது சாத்தியமாகின்றது. பொருளுற்பத்தியின் வளர்ச்சி சமுதாயத்தில் வெவ்வேறு வர்க்கங்கள் இருத்தலை இனி காலத்துக்கு ஒவ்வாததாக்குகின்றது. சமூகப் பொருளுற்பத்தியில் அராஜகம் எவ்வளவு மறைகிறதோ, அவ்வளவு அரசின் அரசியல் அதிகாரம் மடிந்து செல்கிறது. முடிவில் தனக்கு உரித்தான சமூக ஒழுங்கமைப்பை ஆட்சி புரியும் எஜமானனாகிவிடும் மனிதன் அதே போதில் இயற்கையின் அதிபதியும் ஆகி தானே தனக்கு எஜமானன் ஆகின்றான்—அதாவது, சுதந்திரமடைகின்றான்.

உலகளாவிய இந்த விடுதலைப் பணியைச் செய்து முடிப்பது நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையாகும். இந்தச் செயலுக்கான வரலாற்று நிலைமைகளையும் அதோடு கூடவே இதன் தன்மையையும் தீர்க்கமாகப் புரிந்து கொண்டு தற்போது ஒடுக்கப்பட்டதாக இருக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு இந்த நிலைமைகளையும் அது செய்து முடிக்க வேண்டிய சகாப்தகரச் சிறப்புடைத்த இந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் முழு அளவில் தெரியப்படுத்துவதுதான் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தத்துவார்த்த வெளியீடாகிய விஞ்ஞான சோஷலிசத்தின் கடமை.

*1880 ஜனவரி—மார்ச் முதல் பகுதியில்*
*பி. எங்கெல்சினால் எழுதப்பட்டது*

*La Revue socialiste சஞ்சிகை,*
*எண்கள் 3, 4 மற்றும் 5,*
*மார்ச் 20, ஏப்ரல் 20*
*மற்றும் மே 5, 1880*
*என்ற இதழிலும்*
*பிரெஞ்சு மொழியில்*
F. Engels, *Socialisme utopique*
*et socialisme scientifique,*
Paris, *1880*
*என்ற தனிப் பிரசுரத்திலும்*
*வெளியிடப்பட்டது*

*அங்கீகாரம் பெற்ற*
*1892ஆம் ஆண்டு*
*ஆங்கிலப் பதிப்பின்படி*
*அச்சிடப்பட்டது*

*மூலம் ஆங்கில*
*மொழியில்*
*எழுதப்பட்டது*

கா. மார்க்ஸ்

# வே. இ. ஸசூலிச்சின் கடிதத்துக்கு எழுதிய பதிலின் முதல் நகல்[60]

1) முதலாளித்துவ உற்பத்தி முறையின் தோற்றத்தைப் பற்றிய எனது பகுப்பாய்வில் ''உற்பத்தியாளனை உற்பத்திச் சாதனங்களிடமிருந்து'' உறவுபிரித்தலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்னும் உண்மையில் அதன் ரகசியம் அடங்கியிருக்கிறது (மூலதனம், பிரெஞ்சுப் பதிப்பு, பக்கம் 315, பத்தி 1) மற்றும் ''விவசாய உற்பத்தியாளனிடமிருந்து, உழவனிடமிருந்து'' நிலத்தைப் ''பறிமுதல் செய்வது இச் செய்முறை முழுவதன் அடிப்படையாகும்'' என்று நான் கூறினேன். ''இந்தப் பறிமுதலின் வரலாறு வெவ்வேறு நாடு களில் வெவ்வேறு அம்சங்களை'' மேற்கொள்கிறது.... ''நாம் நமது உதாரணமாக எடுத்துக் கொண்டுள்ள இங் கிலாந்தில் மட்டுமே அது ஆதர்ச வடிவம் பெற்றுத் திகழ் கிறது'' (அதே பக்கம், பத்தி 2).*

இப்படி இந்த நிகழ்வுப்போக்கின் ''வரலாற்றுரீதியில் தவிர்க்க முடியாத தன்மையை'' மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த நாடுகளுக்கு மட்டும் வெளிப்படையாகவே குறுக்கிக் கொண்டேன். அது ஏன்? நீங்கள் அத்தியாயம் 32ஐப் படிப் பீர்களானால் பின்வரும் பகுதியைக் காண முடியும்: ''அதன் ஒழிப்பு—தனிநபர் ரீதியாக்கப்பட்ட, சிதறலாக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களைச் சமுதாய ரீதியில் குவிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களாக மாற்றியமைப்பது, பலரது சிறு சொத்தைச் சிலரது பெருஞ்சொத்தாக மாற்றியமைப்பது...,

* இப்பதிப்பு, தொகுதி 6, பக்கங்கள் 37—40 பார்க்க. —ப-ர்.

இவ்விதத்தில் மக்கள் திரளைப் பயங்கரமாகவும் வேதனைக் குரிய விதத்திலும் ஓட்டாண்டிகளாக்குவது—மூலதனத்தின் வரலாற்றுக்கு முன்னுரையாக அமைகிறது.... சுயமாகச் சம்பாதித்த தனிச்சொத்தின் இடத்துக்கு, பெயரளவில் சுதந் திரமாயுள்ள மாற்றார் உழைப்பைச் சுரண்டுவதைச் சார்ந் துள்ள, அதாவது கூலியுழைப்பைச் சார்ந்துள்ள முதலாளித் துவத் தனிச்சொத்து வருகிறது'' (பக்கம் 341, பத்தி 2).*

ஆகவே கடைசியில் நாம் இங்கே தனியுடைமையின் ஒரு வடிவம் மற்றொரு வடிவமாக மாற்றமடைவதை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ருஷ்ய விவசாயிகள் விவசாயம் செய்த நிலங்கள் அவர்களுடைய தனியுடைமையாக ஒருபோதும் இல்லாத பொழுது இத்தத்துவத்தை அவர்களுக்கு எப்படிக் கையாள முடியும்?

2) வரலாற்று நோக்கிலிருந்து ருஷ்யாவின் விவசாய கம் யூன் தவிர்க்க முடியாதபடி அழியும் என்பதற்குச் சாதகமான ஒரே அறிவார்ந்த வாதம் பின்வருவதே:

கடந்த நூற்றாண்டுகளைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது அநேகமாகத் தொன்மையான கிராம கம்யூன் உடைமையை மேற்கு ஐரோப்பா முழுவதிலும் பார்க் கிறோம்; இன்று அது எல்லா இடங்களிலும் சமூக முன் னேற்றத்தின் விளைவாக மறைந்து விட்டது. ருஷ்யாவில் மட்டும் அது இந்த கதியிலிருந்து எப்படித் தப்ப முடியும்?

இதற்கு நான் பின்வரும் பதிலைக் கூறுவேன்: ஏனென் றால் ருஷ்யாவில் அபூர்வமான சந்தர்ப்பங்களின் கூட்டின் காரணமாக இன்னும் நாடு முழுவதிலும் இருக்கின்ற கிராம கம்யூன் அதன் பூர்விகமான அம்சங்களைப் படிப்படியாகக் கைவிட்டு தேசிய அளவில் கூட்டு உற்பத்தியின் பகுதியாக நேரடியாக வளர்ச்சியடையக் கூடிய தகுதியைக் கொண் டிருக்கிறது. முதலாளித்துவ உற்பத்தி நிலவுகின்ற அதே சம யத்தில் அது இருக்கிறது என்னும் துல்லியமான உண்மையே முதலாளித்துவ உற்பத்தியின் நடுக்கமூட்டுகின்ற நிலைமாற்

* இப்பதிப்பு, தொகுதி 6, பக்கங்கள் 126—127 பார்க்க.—ப-ர்.

றங்கள் அனைத்தையும் கடந்து வர வேண்டிய அவசியமின்றி அதன் ஆக்கரீதியான சாதனைகள் அனைத்தையும் பயன் படுத்திக் கொள்வதற்கு உதவுகிறது. ருஷ்யா நவீன உலகத் திலிருந்து தனித்து நிற்கவில்லை; அது இந்தியாவைப் போல அந்நிய ஆக்கிரமிப்புக்கு பலியாகவுமில்லை.

முதலாளித்துவ அமைப்பை ஆதரிக்கின்ற ருஷ்யர்கள் அத்தகைய பரிணாமம் தத்துவார்த்தரீதியில் சாத்தியம் என் பதை மறுப்பார்களேயானால், நான் அவர்களிடம் பின்வரும் கேள்வியைக் கேட்கக் கூடும்: ருஷ்யா இயந்திரங்கள், நீராவிக் கப்பல்கள், ரயில்வேக்கள், இதரவற்றைப் பெறுவதற்கு மேற்கு நாடுகளில் நடைபெற்றதைப் போல இயந்திர உற் பத்தியை வளர்க்கின்ற நீண்ட, பிரசவ காலத்தைக் கடந்து வருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறதா? மேற்கு நாடுகளில் பரிவர்த்தனையின் மொத்த அமைப்பும் (வங்கிகள், கடனு தவிச் சங்கங்கள், இதரவை) வளர்ச்சியடைவதற்குப் பல நூற்றாண்டுகள் ஆயிற்று என்றால் ருஷ்யாவில் அது எப்படி ஒரு நொடிப் பொழுதில் தோன்ற முடிந்தது என்பதையும் அவர்கள் எனக்கு விளக்கட்டும்.

பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்ட சமயத்தில்[61] கிராம கம்யூன்கள் சகஜமான வளர்ச்சி நிலைமைகளில் உட னடியாக வைக்கப்பட்டிருந்தால், பெரும்பாலும் விவசாயி களே கட்ட வேண்டியிருந்த மாபெரும் அரசாங்கக் கடனும் முதலாளிகள் என்று உருமாற்றமடைந்திருந்த ''சமூகத்தின் புதிய தூண்களுக்கு'' அரசின் மூலமாக அளிக்கப்பட்ட பெருந்தொகைகளும் (இவற்றையும் விவசாயிகளே தாங்கிக் கொண்டார்கள்)—இத்தொகைகள் அனைத்தும் கிராம கம் யூனின் எதிர்கால வளர்ச்சிக்குச் செலவு செய்யப்பட்டிருந் தால், கம்யூனினுடைய அழிவின் ''வரலாற்றுரீதியில் தவிர்க்க முடியாத தன்மையைப்'' பற்றி இன்று யாரும் பேசிக் கொண் டிருக்க மாட்டார்கள்: அது ருஷ்ய சமூகத்தில் ஒரு மறு மலர்ச்சிச் சக்தி, முதலாளித்துவ அமைப்பின் மூலம் இன் னும் அடிமைப்பட்டிருக்கின்ற நாடுகளைக் காட்டிலும் மேன்மையான ஒன்று என்பதை எல்லோரும் கண்டுபிடித் திருப்பார்கள்.

முதலாளித்துவ உற்பத்தி முறை நிலவுகின்ற அதே சமயத்தில் ருஷ்ய கம்யூன் இருக்கிறது என்பது மட்டுமன்றி, இந்த சமூக அமைப்பு இன்னும் கட்டுக்கோப்புடன் இருந்த காலகட்டத்துக்குப் பிறகும் நீடித்திருப்பதுடன் அது மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் விஞ்ஞானத்துடன், பெருந்திரளான மக்களுடன், அது பிரசவித்த அதே உற்பத்திச் சக்திகளுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் ருஷ்ய கம்யூன் இருக்கிறது என்பது (அதன் வளர்ச்சியின் மூலமாக) அதைப் பாதுகாப்பதற்குச் சாதகமான மற்றொரு காரணியாகும். சுருக்கமாகக் கூறுவதென்றால், ருஷ்ய கம்யூன் முதலாளித்துவ அமைப்பு நெருக்கடியில் சிக்கியிருப்பதைக் காண்கிறது; அதன் விளைவாக அந்த அமைப்பு அழிக்கப்படும்; பொது உடைமை என்னும் ''தொன்மையான'' ரகத்துக்கு நவீன சமூகங்கள் திரும்பி வர வேண்டியிருக்கும் அல்லது, புரட்சிகரமான போக்குகள் இருப்பதாக சந்தேகிக்க முடியாதவரும், வாஷிங்டன் அரசாங்கத்தினால் ஆதரிக்கப்படுகின்ற நூல்களை எழுதியிருப்பவருமான ஒரு அமெரிக்க எழுத்தாளர்* கூறியிருப்பதைப் போல, நவீன சமூகம் முன்னேற முற்படுகின்ற ''புதிய அமைப்பு'' ''சமூகத்தின் தொன்மையான ரகத்தை உயர்வான வடிவத்தில் மறுபடி ஏற்படுத்துவதாக இருக்கும்.'' ஆகவே ''தொன்மையான'' என்ற சொல்லைப் பற்றி நாம் அதிகமாக அஞ்சக் கூடாது.

ஆனால் அப்பொழுது குறைந்தபட்சம் இந்த மாற்றங்கள் என்ன என்பதையாவது ஒருவர் அறிந்திருக்க வேண்டும். ஆனால் அவற்றைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது.

பூர்விக சமூகங்கள் நசிவடைந்த வரலாறு இனிமேல் தான் எழுதப்பட வேண்டும் (அவை எல்லாவற்றையும் ஒரே நிலையில் வைத்துப் பார்த்தல் தவறாகும்; பூகர்ப்பவியல் உருவாக்கங்களைப் போல, வரலாற்று அமைப்புகளும் ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாவது வரிசை ரகங்களின் வரிசைத் தொடராக இருக்கின்றன). இது வரை தெளி

* —லூ. மார்கன்.—ப-ர்.

வில்லாத உருவரைகள் மட்டுமே தரப்பட்டிருக்கின்றன. எனினும் ஆராய்ச்சிகள் போதுமான அளவுக்கு முன்னேறியிருப்பதால், பின்வருவனவற்றை எடுத்துக் கூற முடியும்: 1) பூர்விக சமூகங்கள் செமித்திய, கிரேக்க மற்றும் ரோமானிய சமூகங்களைக் காட்டிலும் (குறிப்பாக, நவீன முதலாளித்துவ சமூகங்களைக் காட்டிலும்) மிகவும் அதிகமான அளவுக்கு ஜீவ சக்தியைக் கொண்டிருக்கின்றன; 2) பூர்விக சமூகங்கள் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் வளர்ச்சியடைவதைத் தடுத்த பொருளாதாரக் காரணிகளாலும் இன்றைய ருஷ்ய கம்யூனை எவ்விதத்திலும் ஒத்திராத அவற்றின் வரலாற்றுப் பின்னணியிலிருந்தும் அவை தகர்வதற்கான காரணங்கள் தோன்றின.

பூர்விக சமூகங்களைப் பற்றி முதலாளி வர்க்க வரலாற்றாசிரியர்கள் எழுதிய வரலாறுகளைப் படிக்கின்ற பொழுது ஒருவர் எச்சரிக்கையோடிருக்க வேண்டும். அவர்கள் எதற்கும் தயங்குவதில்லை; ஒரேயடியாகத் திரித்துக் கூறுவதற்கும் கூடத் துணிந்தவர்கள். உதாரணமாக, இந்தியாவின் கம்யூன்களை பலாத்காரமாக அழிக்கின்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையை ஆர்வத்துடன் தீவிரமாக ஆதரிக்கின்ற ஸர் ஹென்ரி மெயின் இக்கம்யூன்களுக்கு உதவி செய்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த எல்லா மேன்மையான முயற்சிகளும் பொருளாதார விதிகளின் பேராற்றல்மிக்க சக்தியினால் குலைக்கப்பட்டன என்று போலித்தனமாக எழுதுகிறார்.

இந்தப் பூர்விக சமூகம் உள்ளேயிருந்தும் வெளியிலிருந்தும் நடைபெற்ற இடைவிடாத யுத்தம் என்னும் வரலாற்றுப் பின்னணியில் ஏதாவதொரு வழியில் அழிந்தது; அது அநேகமாக வன்முறையினால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். ஜெர்மன் இனக்குழுக்கள் இத்தாலி, ஸ்பெயின், கால், இதரவற்றைப் பிடிப்பதற்குத் திரண்டு வந்த பொழுது தொன்மையான ரகத்தைச் சேர்ந்த சமூகம் முன்பே அழிந்திருந்தது. ஆனால் அதன் இயற்கையான ஜீவசக்தியை இரண்டு மெய் விவரங்கள் நிரூபிக்கின்றன. அத்தகைய சமூகங்களில் சில மத்திய கால நிலைமாற்றங்கள் எல்லாவற்றிலிருந்தும் தப்பிப்

பிழைத்து நான் பிறந்து வளர்ந்த பிரதேசங்களில், உதாரணமாக டிரியர் மாவட்டத்தில் இன்றளவும் நீடிக்கின்ற உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் தன்னை ஒழித்த கம்யூன் மீது—அக்கம்யூனில் விவசாய நிலம் தனியுடைமையாகவும் காடுகள், மேய்ச்சல் நிலம், தரிசு நிலம், இதரவை சமூக உடைமையாகவும் இருந்தன—தன்னுடைய முத்திரையை வன்மையாகப் பதித்தது என்னும் உண்மை மிகவும் முக்கியமானதாகும். மௌரர் இரண்டாம் நிலை உருவாக்கமான இந்த கம்யூனை ஆராய்வதன் மூலம் அதன் தொன்மையான முன்மாதிரியை அமைக்க முடிந்தது. ஜெர்மானியர்கள் வெற்றியடைந்த எல்லா நாடுகளிலும் இப்புதிய கம்யூனைப் புகுத்தினார்கள். அதன் மீது பதிந்திருந்த குறியடையாளமான முத்திரையின் விளைவாக அது மத்திய காலம் முழுவதிலும் சுதந்திரம் மற்றும் பொது வாழ்க்கையின் ஒரே அரணாயிற்று.

டாசிட்டசின் காலத்துக்குப் பிறகு கம்யூனுடைய வாழ்க்கை அல்லது அது தகர்ந்த முறை மற்றும் காலகட்டத்தைப் பற்றி நமக்கு எதுவுமே தெரியவில்லை என்றாலும் குறைந்தபட்சம் அந்த நிகழ்வுப்போக்கின் தொடக்கத்தைப் பற்றி நாம் யூலியஸ் சீஸரிடமிருந்து தெரிந்து கொள்கிறோம். அவர் வாழ்ந்த காலத்தில் நிலம் ஆண்டுதோறும் மறுவினியோகம் செய்யப்பட்டு வந்தது; அது ஜெர்மானியர்களின் கோத்திரங்கள் மற்றும் மரபுக் குழுக்களுக்கு (tribus des confédérations) இடையில் நடைபெற்றது; ஒரு கம்யூனின் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு இடையில் இன்னும் அது நடைபெறவில்லை. இப்படி ஜெர்மனியில் கிராம கம்யூன் மிகவும் தொன்மையான ரகத்திலிருந்து தோன்றியது; அது தன்னியல்பான வளர்ச்சியின் விளைவாக இருந்ததே தவிர ஆசியாவிலிருந்து நன்கு உருப்பெற்ற வடிவத்தில் இறக்குமதி செய்யப்படவில்லை. அங்கே—இந்தியாவில்—தொன்மையான சமூக அமைப்பின் கடைசிக் கட்டமாக அல்லது கடைசிக் காலப் பகுதியாக அது இருப்பதை எப்பொழுதும் காண இயலும்.

கிராம கம்யூனுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய கதிகளை

முற்றிலும் தத்துவார்த்த நிலையிலிருந்து—அதாவது, வழக்கமான நிலைமைகள் தொடர்ச்சியாக நீடிப்பதை முன் னனுமானித்துக் கொண்டு—முடிவு செய்வதற்கு ''நிலக் கம்யூனை'' மேலும் பழமையான ரகங்களிலிருந்து பிரித்துக் காட்டுகின்ற சில குறியடையாளமான அம்சங்களை நான் இப்பொழுது உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

முதலாவதாக, ஆரம்பகால பூர்விக சமூகங்கள் அனைத் தும் ஒரு மூதாதையரிடமிருந்து உறவுமுறையில் தோன்றிய உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன; நிலக் கம்யூன் இந்த வலிமையான, ஆனால் குறுகிய பிணைப்பை நொறுக்கியதன் மூலம் புதியவர்களுடன் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கும் தக்க வைத்துக் கொள்வதற்கும் அதிக மான தகுதியைப் பெற்றது.

இரண்டாவதாக, நிலக் கம்யூனில் வீடும் அதனுடன் சேர்ந்திருக்கின்ற சுற்றுவட்டகையும் நிலத்தில் பயிர் செய்ப வருடைய தனியுடைமையாக ஏற்கெனவே ஆகி விட்டன; ஆனால் விவசாயம் ஆரம்பமாவதற்கு நெடுங்காலத்துக்கு முன்னர் பொது இருப்பிடம் முந்திய சமூகங்களின் பொருளா யத அடிப்படைகளில் ஒன்றாக இருந்தது.

இறுதியாக, விவசாய நிலம் சமூக உடைமையாக நீடித்த போதிலும், ஒவ்வொரு நபரும் தனக்கு ஒதுக்கப்பட்ட நிலத் தைத் தானே உழுது பயிரிட்டு தன்னுடைய உழைப்பின் பலன் களைத் தானே சுவீகரித்துக் கொள்கின்ற முறையில் நிலக் கம்யூன் உறுப்பினர்கள் மத்தியில் விவசாய நிலம் ஒவ்வொரு காலப் பகுதியின் போதும் பிரித்துக் கொடுக்கப்பட்டது; ஆனால் இன்னும் தொன்மையான சமூகங்களில் உற்பத்தி கூட்டாக நடைபெற்று அதன் பலன்கள் மட்டுமே பிரித்துக் கொள்ளப்பட்டன. கூட்டு உற்பத்தி அல்லது கூட்டுறவு உற் பத்தியின் இந்த பூர்விகமான ரகம் தனிமையாக்கப்பட்ட நபரின் பலவீனத்திலிருந்து தோன்றியது, உற்பத்திச் சாதனங்களின் சமூகமயமாக்கலிலிருந்து தோன்றவில்லை என்பது உண்மையே.

''நிலக் கம்யூனில்'' உள்ளுறையாக இருக்கின்ற இருமை

வாதம் எப்படி அதற்கு ஜீவசக்தியை அளிக்கிறது என்பதைப் பார்ப்பது சுலபம்; ஏனென்றால், ஒரு பக்கத்தில், சமூக உடைமையும் அதிலிருந்து பிறக்கின்ற சமூக உறவுகள் அனைத்தும் அதற்கு உறுதியான அடிப்படையைக் கொடுக்கின்றன; ஆனால் தனிநபருக்குச் சொந்தமான வீடு, விவசாய நிலத்தை தனித்தனியாகப் பிரித்துப் பயிர் செய்தல் மற்றும் உழைப்பின் பலன்களைத் தனிநபர் சுவீகரித்துக் கொள்ளுதல் தனிநபருடைய வளர்ச்சியை—மிகவும் பூர்விக மான சமூகங்களில் நிலவிய நிலைமைகள் அதற்கு உதவியாக இருக்கவில்லை—அனுமதித்தன.

ஆனால் இந்த இருமைவாதமே காலப் போக்கில் சீர் குலைவின் தோற்றுவாயாக மாற முடியும் என்பது அதே அளவுக்கு உண்மையே. பகைமையான வாழ்க்கைச் சூழலின் விளைவைத் தவிர இயங்குடைமை படிப்படியாகத் திரட்டப் படுதலும்—அது கால்நடையிலிருந்து தொடங்கிக் (பண்ணை யடிமைகளைக் கூடக்) கொண்டிருந்தது—இயங்குடைமை விவசாயத்திலே மேன்மேலும் அதிகமான பாத்திரத்தை வகித்தலும் இத்திரட்சியின் விளைவாக ஏற்பட்ட இன்னும் பல காரணிகளும் (அவற்றை இங்கே விரித்துக் கூறுவதென் றால், நான் எடுத்துக்கொண்ட பொருளை விட்டு வெகு தூரம் விலகிப் போக நேரும்) பொருளாதார மற்றும் சமூக சமத்துவத்தை நொறுக்கி அந்த கம்யூனுக்குள்ளாகவே நலன் களின் மோதலை ஏற்படுத்த உதவின; அதன் விளைவு முத லில் விவசாய நிலம் தனியுடைமையாக மாற்றப்படுவதில் தொடங்கி ஏற்கெனவே தனியுடைமையின் கூட்டுவாழ்க்கை ஒட்டுப் பகுதிகளாக மாறியிருந்த காடுகள், மேய்ச்சல் நிலம் மற்றும் தரிசு நிலம் தனியார் உடைமையாக மாற்றப்படு வதில் முடிவடைந்தது; அதனால்தான் ''நிலக் கம்யூன்'' எல்லா நாடுகளிலும் தொன்மையான சமூக அமைப்பின் மிகவும் சமீப காலத்திய ரகமாக இருக்கிறது; அதனால்தான் மேற்கு ஐரோப்பாவின் வரலாற்றில்—தொன்மை வரலாறு, சமீப வரலாறு ஆகிய இரண்டிலுமே—நிலக் கம்யூன் நிலவிய காலகட்டம் சமூக உடைமையிலிருந்து தனியுடைமைக்கு, ஆரம்ப நிலையிலிருந்து இரண்டாம் நிலை அமைப்புக்கு

மாறுகின்ற காலகட்டமாக இருக்கிறது. அப்படியானால் ''நிலக் கம்யூனுடைய'' வளர்ச்சி எல்லா சந்தர்ப்பங்களிலும் கட்டாயமாக ஒரே முறையில் நடைபெற வேண்டும் என்பது இதன் பொருளா? உறுதியாக அப்படியல்ல. அதன் உட்பகுதி வடிவம் பின்வரும் இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கிறது: அதில் உள்ளுறையாக இருக்கின்ற தனியுடைமை அம்சம் சமூக உடைமை அம்சத்தைக் காட்டிலும் மேலோங்குகிறது அல்லது அதன் மறுதலை. அது நிலவுகின்ற வரலாற்றுப் பின்னணியைப் பொறுத்து எல்லாமே இருக்கிறது.... *A priori** இரண்டு தீர்வுகளுமே சாத்தியம்; ஆனால் இரண்டும் வெவ்வேறு வரலாற்றுச் சூழல்களைக் கோருகின்றன என்பது வெளிப்படை.

3) ''நிலக் கம்யூன்'' நாடுதழுவிய அளவில் இன்று வரை பாதுகாக்கப்பட்டிருக்கின்ற ஒரே ஐரோப்பிய நாடு ருஷ்யாவே. அது இந்தியாவைப் போல அந்நிய ஆக்கிரமிப்புக்கு பலியாகவில்லை. அதே சமயத்தில் அது நவீன உலகத்திலிருந்து துண்டிக்கப்படவில்லை. ஒரு பக்கத்தில், நிலத்தின் கூட்டுடைமை துண்டு துக்காணியான, தனிப்பட்ட விவசாயம் நேரடியாகவும் படிப்படியாகவும் கூட்டு விவசாயமாக மாறுவதை அனுமதிக்கிறது; ருஷ்ய விவசாயிகள் இன்னும் பிரிக்கப்படாத பசும்புல் நிலங்களில் இதை ஏற்கெனவே செய்து கொண்டிருக்கிறார்கள். ருஷ்ய நிலம் அமைந்திருக்கின்ற முறை மாபெரும் அளவில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதை இன்றியமையாததாக்குகிறது. விவசாயி ஆர்ட்டெல் உழைப்பு நிலைமைகளுக்குப் பக்குவமடைந்திருப்பது துண்டு நிலப் பொருளாதாரத்திலிருந்து கூட்டுறவுப் பொருளாதாரத்துக்கு மாறுதலை அவன் நிறைவேற்றுவதை சுலபமாக்குகிறது. முடிவில், நெடுங்காலமாக விவசாயியின் உழைப்பில் உயிர்வாழ்ந்து வருகின்ற ருஷ்ய சமூகம் அத்தகைய மாற்றத்துக்கு அவசியமான முன்பணத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும். மறு பக்கத்தில், உலகச் சந்தையில் ஆதிக்கம் செலுத்துகின்ற மேற்கத்திய உற்பத்தி முறை

* —அனுபவத்தைச் சாராமல்.—ப-ர்.

அதே சமயத்தில் நிலவுதல் முதலாளித்துவ அமைப்பு அடைந்திருக்கின்ற எல்லா ஆக்கரீதியான சாதனைகளையும் அதன் காடைன் பிளவைக் கடந்துவராமலேயே[62] கம்யூனுக்குள் சேர்த்துக் கொள்வதற்கு ருஷ்யாவுக்கு உதவுகிறது.

''சமூகத்தின் புதிய தூண்களின்'' பிரதிநிதிகள் நவீன கிராம கம்யூன் பரிணமிக்கின்ற தத்துவார்த்தரீதியான சாத்தியத்தை மறுப்பார்களேயானால், ருஷ்யா இயந்திரங்கள், நீராவிப் கப்பல்கள், ரயில்வேக்கள், இதரவற்றைப் பெறுவதற்கு மேற்கு நாடுகளில் நடைபெற்றதைப் போல இயந்திர உற்பத்தியை வளர்க்கின்ற நீண்ட பிரசவ காலத்தைக் கடந்து வருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறதா என்று அவர்களிடம் கேட்பேன். மேற்கு நாடுகளில் பரிவர்த்தனையின் மொத்த அமைப்பும் (வங்கிகள், கடனுதவிச் சங்கங்கள், இதரவை) வளர்ச்சியடைவதற்குப் பல நூற்றாண்டுகள் ஆயிற்று என்றால் ருஷ்யாவில் அது எப்படி ஒரு நொடிப் பொழுதில் தோன்ற முடிந்தது என்றும் அவர்களிடம் கேட்க வேண்டும்.

ருஷ்ய ''நிலக் கம்யூனில்'' ஒரு அம்சம் அதை பலவீனப் படுத்துவதாகவும் மற்ற எல்லா அம்சங்களிலும் அதற்கு ஆபத்தாகவும் இருக்கிறது. அதுதான் அதன் தனித்தொதுங்கிய நிலை, ஒரு கம்யூனுடைய வாழ்க்கைக்கும் மற்ற கம்யூன்களின் வாழ்க்கைக்கும் இடையில் தொடர்பு இல்லாமை, இந்த ஸ்தல நுண் மாதிரிப் படிவம்; அது இந்த ரகத்தின் உள்ளுறையான அம்சமாக எல்லா இடங்களிலும் காணப் படுவதில்லை; ஆனால் அது இருக்கின்ற எல்லா இடங்களிலும் கம்யூன்கள் மீது அநேகமாக மத்தியப்படுத்தப்பட்ட எதேச் சாதிகாரத்தைத் தோற்றுவித்திருக்கிறது. ருஷ்யாவின் வடக்குக் குடியரசுகள் ஒன்றுசேர்ந்திருத்தல் அந்த நாட்டின் அதிக விரிவான நிலப்பரப்பின் விளைவாக முதலில் தோன்றியிருக்கும் எனத் தோன்றுகின்ற இத்தனித்தொதுங்கிய நிலை மங்கோலியர்களின் படையெடுப்புக்குப் பிறகு ருஷ்யாவில் நடைபெற்ற அரசியல் சம்பவங்களினால் அதிகமான அளவுக்கு வலுப்படுத்தப்பட்டு விட்டது என்று நிரூபிக்கிறது. இன்று இது ஒரு தடையாக இருந்தாலும் அதை மிகவும் சுலபமாக

ஒழிக்க முடியும். அரசாங்க நிர்வாக அமைப்பாகிய வோலஸ்துக்குப்* பதிலாக கம்யூன்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற விவசாயிகள் சபையை அமைப்பது போதுமானதாகும்; அது விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கின்ற பொருளாதார மற்றும் நிர்வாக உறுப்பாக இருக்கும்.

மேற்கு நாடுகளின் முதலாளித்துவ உற்பத்தி முறை நிலவுகின்ற அதே சமயத்தில் ''நிலக் கம்யூன்'' இருக்கிறது—ஆகவே இக்கம்யூன் அதன் modus operandi** தன்னை உட்படுத்திக் கொள்ளாமல் அதன் சாதனைகளைப் பயன்படுத்த முடியும்—என்பது மட்டுமன்றி, முதலாளித்துவ அமைப்பு இன்னும் கட்டுக்கோப்புடன் இருந்த காலகட்டத்துக்குப் பிறகும் நீடித்திருப்பதுடன் அது மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பெருந்திரளான தொழிலாளர்களுடன், விஞ்ஞானத்துடன், அது பிரசவித்த அதே உற்பத்திச் சக்திகளுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், சுருக்கமாகக் கூறுவதென்றால், அதன் அழிவில் முடிவடையப் போகின்ற நெருக்கடி நிலையில், கூட்டு உடைமை மற்றும் கூட்டு உற்பத்தி என்னும் ''தொன்மையான'' ரகத்தின் உயர்ந்த வடிவத்துக்கு நவீன சமூகங்கள் திரும்புகின்ற கட்டத்தில் நிலக் கம்யூன் இருக்கிறது என்பது எதிர்கால வளர்ச்சியின் மூலமாக அதைப் பாதுகாப்பதற்கு வரலாற்று நோக்கில் மிகவும் சாதகமான காரணியாகும்.

கம்யூன் படிப்படியாகவே வளர்ச்சியடையும் என்பதை எடுத்துரைப்பது அவசியமல்ல; அதன் இன்றைய அடிப்படையில் வழக்கமான நிலைமைகளை உருவாக்குவது முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

ஆனால் அதற்கு எதிராக நிலத்தில் தனியுடைமை இருக்கிறது; அது மொத்த நிலத்தில் அநேகமாகப் பாதியாகும், அதிலும் வளமான நிலங்கள் அதனிடம் இருக்கின்றன; அரசு நிலவுடைமைகளைப் பற்றிச் சொல்வது அவசியமல்ல. அத

* இச்சொல்லை கா. மார்க்ஸ் ருஷ்ய மொழியில் எழுதினார்.—ப-ர்.

** —செயல்முறைக்கு—ப-ர்.

னால்தான் ''கிராம கம்யூனுடைய'' எதிர்கால வளர்ச்சியின் மூலம் அதைப் பாதுகாப்பதும் ருஷ்ய சமூகத்தின் பொது வான முன்னேற்றமும் ஒரே சமயத்தில் நடைபெறுகிறது; இந்த விலையைக் கொடுப்பதன் மூலமாக மட்டுமே ருஷ்ய சமூகத்துக்கு மறு பிறவி ஏற்பட முடியும். பொருளாதாரக் கோணத்தில் மட்டும் பார்த்தால் கூட, கிராம கம்யூனை வளர்ப்பதன் மூலமாக மட்டுமே ருஷ்யாவில் விவசாயம் சிக்கிக் கொண்டிருக்கின்ற முட்டுச் சந்திலிருந்து வெளியே வர முடியும். ஆங்கில முறையைப் பின்பற்றி முதலாளித் துவ வாடகையை அமுலாக்குவதன் மூலம் அதிலிருந்து வெளி வருவதற்கு முயற்சிப்பது பயனற்றதாகும்: அது ருஷ்யாவின் விவசாய நிலைமைகளுக்கு முற்றிலும் அந்நியமானதாகும்.

ருஷ்யாவின் ''கிராம கம்யூனுக்கு'' தற்பொழுது ஏற் பட்டிருக்கின்ற எல்லாத் துன்பங்களையும் ஒதுக்கி வைத்து விட்டு அதன் அமைப்பு வடிவம் மற்றும் வரலாற்றுப் பின்ன ணியில் கவனத்தைக் குவித்தால் அதன் அடிப்படையான அம்சங்களில் ஒன்றான நிலத்தின் பொது உடைமை கூட்டு உற்பத்திக்கும் சுவீகரிப்புக்கும் இயற்கையான அடிப்படை யாக இருக்கிறது என்பது சட்டென்று தெளிவாகும். மேலும் ருஷ்ய விவசாயி ஆர்ட்டெல் வேலை நிலைமைகளுக்கு பழக் கப்பட்டிருக்கிறார் என்னும் உண்மை அவர் துண்டு நிலப் பொருளாதார முறையிலிருந்து கூட்டுப் பொருளாதாரத் துக்கு மாறுவதை சுலபமாக்குகிறது; அவர் கூட்டுப் பொரு ளாதாரத்தை பிரிக்கப்படாத பசும்புல் நிலத்திலும் வாய்க் கால் வேலையிலும் பொது நலனை முன்னிட்டுச் செய்யப் படுகின்ற இதர நடவடிக்கைகளிலும் ஏற்கெனவே ஓரளவுக்கு செய்து வருகிறார்.

எனினும் விவசாயத்தில் தனியார் சுவீகரிப்பின் தோற்று வாயாகிய துண்டு நில உழைப்புக்கு பதிலாகக் கூட்டு உழைப்பு ஏற்படுவதற்கு அத்தகைய மாற்றத்துக்கான பொருளாதாரத் தேவையும் அதை நிறைவேற்றத் தேவையான பொருளாயத நிலைமைகளும் என்னும் இரண்டு காரணிகளும் அவசிய மாக இருக்கின்றன.

பொருளாதாரத் தேவையைப் பொறுத்தமட்டில் ''கிராம

கம்யூன்'' வழக்கமான நிலைமைகளில் வைக்கப்பட்டவுடன், அதாவது அதை அழுத்துகின்ற சுமை நீக்கப்பட்டவுடன் மற்றும் முறையான விவசாயத்துக்குப் போதுமான நிலம் கிடைத்தவுடனே அதன் தாக்கத்தை அந்த கம்யூன் உணரும். ருஷ்யாவில் விவசாயம் செய்வதற்கு நிலம் மட்டும் போதும், அதன் சிறு விவசாயிக்கு அநேகமாகப் பூர்விகமான கருவிகள் போதும் என்ற காலம் மாறி விட்டது. விவசாயியை ஒடுக்கு தல் அவருடைய நிலத்தை முழுமையாகப் பயன்படுத்தி வறண்ட பூமியாக்குகின்ற அளவுக்கு மிகவும் வேகமாகக் காலம் மாறி விட்டது. இப்பொழுது பெரிய அளவுக்கு ஒழுங் கமைக்கப்பட்ட கூட்டு உழைப்பு அவருக்கு தேவை. தன் னுடைய 2 அல்லது 3 டெஸ்ஸியாட்டினா நிலத்தில் விவசாயம் செய்வதற்கு அவசியமான சாதனங்கள் இல்லாத விவசாயி அதைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான டெஸ்ஸி யாட்டினா நிலத்தை வைத்துக் கொண்டு இன்னும் சிறப்பான நிலைமையை அடைய முடியுமா?

ஆனால் கருவிகள், உரம், வேளாண்மை முறைகள், இதரவை, அதாவது கூட்டு உழைப்புக்கு இன்றியமையாத எல்லா சாதனங்களையும் எங்கே பெற முடியும்? அதே ரகத் தைச் சேர்ந்த பழமையான கம்யூன்களைக் காட்டிலும் ருஷ் யாவின் ''கிராம கம்யூனுடைய'' மிகப் பெரிய மேம்பாடு இதில் அடங்கியிருக்கிறது. அது ஒன்று மட்டுமே ஐரோப்பா வில் பரந்த முறையில் நாடு தழுவிய அளவில் காப்பாற்றப் பட்டிருக்கிறது. முதலாளித்துவ உற்பத்தி முறை ஒரே சம யத்தில் நிலவுகின்ற வரலாற்றுச் சூழலில் அது இருக்கிறது; அந்த உற்பத்தி முறை கூட்டு உழைப்புக்கான எல்லா நிலை மைகளையும் அதற்கு அளிக்கிறது. காடைன் பிளவைக் கடந்து வராமலேயே முதலாளித்துவ அமைப்பின் ஆக்க ரீதியான சாதனைகள் அனைத்தையும் சேர்த்துக் கொள்ள அதனால் இயலுகிறது. ருஷ்ய நிலத்தின் பரந்த அமைப்பு இயந்திரங்களைப் பேரளவில் பயன்படுத்தும்படி, கூட்டுறவு உழைப்பை உபயோகிக்கும்படி கூறுகிறது. அறிவுத் துறை, பொருளாயதத் துறை ஆகிய இரண்டு துறைகளின் தொடக்க அமைப்புச் செலவுகளைப் பொறுத்தமட்டில் ருஷ்ய சமூகம்

நெடுங்காலமாக யாருடைய தயவில் வாழ்ந்து வருகிறதோ, எதில் தன்னுடைய ''மறு பிறவியின் தோற்றுவாயைத்'' தேட வேண்டுமோ, அந்த ''கிராம கம்யூனுக்குக்'' கடன் பட்டிருக்கிறது.

''கிராம கம்யூனுடைய'' இந்த வளர்ச்சி நம் காலத்தின் வரலாற்றுப் போக்குடன் பொருந்தியிருக்கிறது என்பதற்கு மிகச் சிறந்த சான்று ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த நாடுகளில் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு (அங்குதான் அந்த உற்பத்தி முறை மிகவும் அதிகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது) ஏற்பட்டிருக்கின்ற பயங்கர நெருக்கடியே. அந்த நெருக்கடி அதன் அழிவிலும் நவீன சமூகம் தொன்மையான ரகத்தைச் சேர்ந்த உயர்ந்த வடிவத்துக்கு—கூட்டு உற்பத்தி மற்றும் கூட்டுச் சுவீகரிப்புக்குத்—திரும்புவதிலும் முடிய வேண்டும்.

4) வளர்ச்சியடைய வேண்டுமென்றால் மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் உயிர் வாழ்வது அவசியம்; இந்த நேரத்தில் ''கிராம கம்யூனுடைய'' வாழ்க்கைக்கு ஆபத்தேற்பட்டிருக்கிறது என்னும் உண்மையை எவரும் பார்க்காமலிருக்க முடியாது.

நிலத்தில் உழுது பயிரிடுபவர்களை வெளியேற்ற வேண்டுமென்றால் இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் நடைபெற்றதைப் போல அவர்களை அவர்களுடைய நிலத்தை விட்டு வெளியேற்றுவது அவசியமல்ல, அல்லது கிராம சமூக உடைமையை ஓர் உத்தரவின் மூலம் ஒழிக்க வேண்டிய அவசியமும் இல்லை. விவசாயிகளுடைய உழைப்பின் பலன்களை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் கைப்பற்றுங்கள்; அதற்குப் பிறகு உங்களுடைய போலீஸ் மற்றும் இராணுவத்தின் உதவியால் கூட அவர்களுடைய வயல்களுடன் அவர்களைப் பிணைப்பதற்கு உங்களால் முடியாது. ரோமானியப் பேரரசின் கடைசி நாட்களின் போது மாநில டெக்குரியான்கள்—அவர்கள் விவசாயிகளல்ல, தனிப்பட்ட நிலவுடைமையாளர்களே—தங்களுடைய வீடுகளைத் துறந்தார்கள், தங்களுடைய நிலத்தைக் கைவிட்டார்கள், தங்களை அடிமைகளாகக் கூட விலை கூறினார்கள், கடுமையான,

ஈவிரக்கமற்ற கொள்ளைக்கு அதிகாரபூர்வமான சாக்கு என்பதற்கு மேல் எத்தகைய பயனும் இல்லாத உடைமையைக் கைவிடுவதற்கு இவை அனைத்தையும் செய்தார்கள்.

பண்ணையடிமைகளின் விடுதலை என்று சொல்லப்படுகின்ற ஒன்று நடைபெற்றதிலிருந்து ருஷ்ய கம்யூன் மீது அத்துமீறிய பொருளாதார நிலைமைகளை அரசு சுமத்தியிருக்கிறது; தன்னிடம் குவித்து வைக்கப்பட்டிருக்கின்ற சமூக சக்திகளைக் கொண்டு கம்யூனை ஒடுக்குவதை அது நிறுத்தவில்லை. அரசின் நிதிக் கொள்ளையினால் பலவீனமடைந்த கம்யூன் வர்த்தகர்கள், நிலவுடைமையாளர்கள் மற்றும் லேவாதேவிக்காரர்களின் சுரண்டலுக்குச் சுலபமான இலக்காயிற்று. வெளியிலிருந்து வந்த இந்த ஒடுக்குமுறை கம்யூன் இதயத்தில் ஏற்கெனவே இருந்த நலன்களின் மோதலை தீவிரப்படுத்தியது; அதன் தகர்வைத் துரிதப்படுத்தியது. ஆனால் அத்துடன் நின்றுவிடவில்லை. அரசு விவசாயிகளைச் சுரண்டி மேற்கத்திய முதலாளித்துவ அமைப்பின் சில துறைகளை வளர்த்தது; அவை விவசாயத்தின் உற்பத்தி வளத்தைச் சிறிதும் வளர்க்காமல் எந்தப் பயனுமில்லாத இடைத்தரகர்களின் மூலம் விவசாய உற்பத்தியைக் கொள்ளையடிப்பதற்கு உதவுதல் மற்றும் விரைவுபடுத்துவதில் முக்கியமான கருவிகளாக செயல்பட்டன. ஏற்கெனவே சோகை பிடித்த ''கிராம கம்யூனுடைய'' இரத்தத்தை உறிஞ்சுகின்ற புதிய முதலாளித்துவக் கயவர்கள் கொழுப்பதற்கு அரசு உதவி செய்தது.

...சுருக்கமாகக் கூறுவதென்றால், விவசாயியை, அதாவது ருஷ்யாவின் மாபெரும் உற்பத்திச் சக்தியைச் சுரண்டுவதற்கு உதவுவதிலும் விரைவுபடுத்துவதிலும் ''சமூகத்தின் புதிய தூண்களை'' வீங்க வைப்பதிலும் மிகவும் முக்கியமான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாதனங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு அரசு உதவி செய்திருக்கிறது.

5) அழிவுண்டாக்குகின்ற தாக்கங்கள் இப்படி ஒன்று சேருதல்—அது வலிமையான எதிர்நடவடிக்கையினால் நசுக்கப்படாவிட்டால்—கிராம கம்யூனின் அழிவுக்குத் தவிர்க்க முடியாதபடி இட்டுச் செல்லும்.

ஆனால் ஒரு கேள்வி எழுகிறது: இந்த நலன்கள் அனைத்துக்கும் (அரசாங்கப் பாதுகாப்பின் கீழ் இருக்கின்ற பெரிய தொழில்துறை நிறுவனங்கள் உள்பட) கிராம கம்யூன்களின் இன்றைய நிலைமை மிகவும் லாபகரமாக இருக்கின்ற பொழுது தங்க முட்டைகளை இடுகின்ற வாத்தைக் கொலை செய்வதற்கு அவை ஏன் சதி செய்ய வேண்டும்? ''இன்றைய நிலைமை'' இனியும் நிலைக்காது, அதைச் சுரண்டுகின்ற இன்றைய சாதனங்கள் காலாவதியாகி விட்டன என்பதை அவை உணர்வதுதான் துல்லியமான காரணம். விவசாயியின் துன்பச்சுமை நிலத்தை ஏற்கெனவே முழுமையும் பயன்படுத்தி விட்டது. அது வறண்ட பூமியாகிக் கொண்டிருக்கிறது. சாதகமான சூழ்நிலையில் சில ஆண்டுகளில் ஏற்பட்ட நல்ல விளைச்சல் மற்ற ஆண்டுகளில் பஞ்சத்தினால் அடிபட்டுப் போகிறது. விவசாய உற்பத்தி தேக்கமடைந்திருப்பது மட்டுமன்றி, அது குறைந்து விட்டது என்பதைக் கடந்த பத்து ஆண்டுகளுக்குரிய சராசரிப் புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. முடிவாக, ருஷ்யா முதல் முறையாக தானிய வகைகளை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆகவே இனிமேல் இழப்பதற்கு நேரமில்லை. இந்த நிலைமைக்கு முடிவு கட்ட வேண்டும். சிறுபான்மையினராக இருக்கின்ற அநேகமாகப் பணக்கார விவசாயிகளிடமிருந்து கிராமப்புற நடுத்தர வர்க்கத்தை அமைக்க வேண்டும், விவசாயிகளில் பெரும்பான்மையினரைப் பாட்டாளிகளாக மாற்ற வேண்டும். ''சமூகத்தின் புதிய தூண்களின்'' பிரதிநிதிகள் இந்த நோக்கத்துடன்தான் கம்யூன் மீது ஏற்படுத்தப்பட்ட காயங்களை அதன் முதுமைத்தளர்ச்சியின் இயற்கையான அறிகுறிகள் என்று கண்டனம் செய்கிறார்கள்.

மிகவும் அதிகமான பல்வேறு நலன்கள், குறிப்பாக இரண்டாவது அலெக்சாந்தரின் சாதகமான ஆட்சியில் தோன்றிய ''சமூகத்தின் புதிய தூண்கள்'' ''கிராம கம்யூனின்'' இன்றைய நிலைமை தமக்கு சாதகமாக இருப்பதைக் கண்டிருக்கின்ற பொழுது அதை அழிப்பதற்கு அவர்கள் ஏன் உணர்வுபூர்வமாகச் சதி செய்ய வேண்டும்? கம்யூன் மீது

ஏற்படுத்தப்பட்ட காயங்களை அதன் தன்னியல்பான முது மைத்தளர்ச்சிக்கு மறுக்க முடியாத சான்று என்று அவர் களுடைய பிரதிநிதிகள் ஏன் கண்டனம் செய்ய வேண்டும்? தங்க முட்டைகளை இடுகின்ற வாத்தைக் கொல்வதற்கு அவர்கள் ஏன் விரும்ப வேண்டும்?

கம்யூனுடைய இன்றைய நிலைமை இனியும் நிலைக்காது, பெருந்திரளான மக்களைச் சுரண்டுகின்ற இன்றைய சாத னங்கள் வெறும் சம்பவங்களின் போக்கில் சீக்கிரத்தில் காலா வதியாகிவிடும் என்னும் ரகசியத்தைப் பொருளாதாரக் காரணிகள் வெளிப்படுத்தியிருக்கின்றன; அக்காரணிகளை இங்கே ஆராயப் புகுந்தால் நான் எடுத்துக் கொண்ட பொரு ளை விட்டு விலக நேரிடும். ஆகவே புதிதாக ஏதோ ஒன்று தேவைப்படுகிறது. பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்ற இந்தப் புதிய அம்சத்தை ஒரே விஷயமாக எப்பொழுதும் வகைப்படுத்த முடியும்: கூட்டுடைமையை ஒழித்தல், சிறு பான்மையினராக இருக்கின்ற அநேகமாகப் பணக்கார விவ சாயிகளிடமிருந்து கிராமப்புற நடுத்தர வர்க்கத்தை அமைக்க வேண்டும், மாபெரும் பெரும்பான்மையினரை பாட்டாளி களாக மாற்ற வேண்டும்.

ஒரு பக்கத்தில், ''கிராம கம்யூன்'' அநேகமாகத் தகர் வின் விளிம்பில் இருக்கிறது; மறு பக்கத்தில், அதற்கு மரண அடி கொடுப்பதற்கு வலிமையான சதி அதை பயமுறுத்து கிறது. ருஷ்யக் கம்யூனைக் காப்பாற்ற வேண்டுமென்றால் ருஷ்யப் புரட்சி நடைபெற வேண்டும். அரசியல் மற்றும் சமூக அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் பெருந்திரளான மக்களை அத்தகைய பேராபத்துக்குத் தயாரிப்பதற்குத் தம்மாலியன்ற எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறார் கள் என்பதை இடைக்குறிப்பாக இங்கே கூறுவோம்.

கம்யூன் இரத்தம் கொட்டும்படி சித்திரவதை செய்யப் படுகின்ற பொழுது, அதன் நிலம் வறண்டு தரிசாக மாறிக் கொண்டிருக்கின்ற அதே சமயத்தில் ''சமூகத்தின் புதிய தூண்களின்'' இலக்கியப் பணியாட்கள் கம்யூன் மீது ஏற் படுத்தப்பட்டிருக்கின்ற காயங்களை அதன் தன்னியல்பான முதுமைத்தளர்ச்சியின் அறிகுறிகள் என்று கிண்டலாகக்

குறிப்பிடுகிறார்கள்; அது இயற்கைக் காரணங்களால் மரணமடைந்து கொண்டிருக்கிறது, அதன் மரண வேதனையை சீக்கிரமாக முடிவுக்குக் கொண்டுவருவதே அதற்குச் செய்யக் கூடிய மாபெரும் உதவி என்று கூறுகிறார்கள். இங்கே நாம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையைப் பற்றி எழுதவில்லை, கண்டிப்பாக முறியடிக்கப்பட வேண்டிய எதிரியைப் பற்றி மட்டுமே எழுதுகிறோம். ருஷ்யக் கம்யூனைக் காப்பாற்ற வேண்டுமென்றால் ருஷ்யப் புரட்சி நடைபெற வேண்டும். ருஷ்ய அரசாங்கமும் ''சமூகத்தின் புதிய தூண்களும்'' பெருந்திரளான மக்களை அத்தகைய பேராபத்துக்குத் தயாரிப்பதற்குத் தம்மாலியன்ற எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறார்கள். புரட்சி சரியான நேரத்தில் நடைபெறுமானால், கிராம கம்யூன் சுதந்திரமாக வளர்ச்சியடைவதை உறுதிப்படுத்துவதற்குத் தன்னுடைய எல்லாச் சக்திகளையும் அது திரட்டிக் குவிக்குமானால் கம்யூன் ருஷ்ய சமூகத்தின் புனரமைப்புச் சக்தியாக, முதலாளித்துவ ஆட்சிமுறையில் இன்னும் அடிமைப்பட்டிருக்கின்ற நாடுகளைக் காட்டிலும் உயர்வுடைய ஒன்றாக விரைவில் தோன்றும்.

*1881 பிப்ரவரி கடைசி—*
*மார்ச் தொடக்கத்தில்*
*கா. மார்க்சினால் எழுதப்பட்டது*

**மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆவணங்கள்,**
*நூல் 1, 1924ல்*
*முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின்*
*படி அச்சிடப்பட்டது*

*மூலம் பிரெஞ்சு*
*மொழியில்*
*எழுதப்பட்டது*

## பி. எங்கெல்ஸ்

# கார்ல் மார்க்சின் உடலைப் புதைக்கின்ற பொழுது நிகழ்த்திய உரை

மார்ச் 14ந் தேதியன்று பிற்பகல் இரண்டே முக்கால் மணிக்கு நம்மிடையே வாழ்ந்த மாபெரும் சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். நாங்கள் அவரை விட்டுப் பிரிந்து இரண்டு நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. நாங்கள் திரும்பி வந்த பொழுது அவர் தன்னுடைய சாய்வு நாற்காலியில் அமைதியாக ஆனால் நிரந்தரமாக உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டோம்.

இந்த மேதையின் மரணம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் போர்க்குணமிக்க பாட்டாளி வர்க்கத்துக்கும் வரலாற்று விஞ்ஞானத்துக்கும் அளவிட முடியாத இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இம்மகத்தான மனிதருடைய பிரிவினால் ஏற்பட்டிருக்கின்ற இடைவெளியை நாம் சீக்கிரமாகவே உணருவோம்.

அங்கக இயற்கையின் வளர்ச்சி விதியை டார்வின் கண்டு பிடித்ததைப் போல, மனித சமூக வரலாற்றின் வளர்ச்சி விதியை மார்க்ஸ் கண்டுபிடித்தார்: மனிதன் அரசியல், விஞ்ஞானம், கலை, சமயம், இதரவற்றில் ஈடுபடும் முன்னர் முதலில் உண்ண உணவையும் இருக்க இருப்பிடத்தையும் உடுக்க உடையையும் பெற்றிருக்க வேண்டும் என்னும் சாதாரணமான உண்மை இதுவரை சித்தாந்த மிகை வளர்ச்சியினால் மூடி மறைக்கப்பட்டிருந்தது; ஆகவே உடனடியான பொருளாயத வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்தல், அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட மக்களினம் அல்லது குறிப்பிட்ட சகாப்தத்தின் போது அடைந்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியின் அளவு என்னும் அடிப்படையின் மீது சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்கள், சட்டவியல் கருது

கோள்கள், கலை மற்றும் மதக் கருத்துக்கள் கூட வளர்ச்சியடைகின்றன; ஆகவே அதன் ஒளியில்தான் அவற்றை விளக்க வேண்டுமே அல்லாது இது வரை செய்யப்பட்டதைப் போல மறுதலையாக விளக்கக் கூடாது.

ஆனால் அது மட்டுமல்ல. மார்க்ஸ் இன்றைய முதலாளித்துவ உற்பத்திமுறை மற்றும் அந்த உற்பத்திமுறை தோற்றுவித்துள்ள பூர்ஷ்வா சமூகத்தின் இயக்கத்தின் விசேஷ விதியையும் கண்டுபிடித்தார். அவர் உபரி மதிப்பைக் கண்டுபிடித்தது திடீரென்று அந்தப் பிரச்சினையின் மீது ஒளியைப் பாய்ச்சியது; அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலாளி வர்க்கப் பொருளியலாளர்கள், சோஷலிஸ்டு விமர்சகர்கள் ஆகிய இரு தரப்பினரும் இதற்கு முன்பு செய்த எல்லா ஆராய்ச்சிகளும் இருட்டிலே திண்டாடிக் கொண்டிருந்தன.

ஒரு முழு வாழ்க்கைக் காலத்துக்கு அத்தகைய இரண்டு கண்டுபிடிப்புகளே போதும். அத்தகைய ஒரு கண்டு பிடிப்பைச் செய்ய முடிந்தால் கூட அந்த மனிதர் அதிர்ஷ்ட முடையவரே. ஆனால் மார்க்ஸ் தன்னுடைய ஆராய்ச்சியின் ஒவ்வொரு துறையிலும்—அவர் பல துறைகளை ஆராய்ந்தார், ஒரு துறையில்கூட மேம்போக்கான ஆராய்ச்சிசெய்ய வில்லை—கணிதத்தில் கூட சுயேச்சையான கண்டுபிடிப்புகளைச் செய்தார்.

அத்தகைய விஞ்ஞான மனிதர் அவர். ஆனால் இது அவருடைய சாதனையில் அரைப் பங்கு கூட அல்ல. மார்க்ஸ் விஞ்ஞானத்தை இயக்காற்றலுடைய, புரட்சிகரமான சக்தியாகக் கண்டார். ஏதாவதொரு தத்துவார்த்த விஞ்ஞானத் துறையில் ஒரு புதிய கண்டுபிடிப்பை—அதன் செய்முறைப் பிரயோகம் எப்படியிருக்கும் என்பது இன்னும் முழுமையாகக் கற்பனை செய்ய முடியாத நிலையில்—அவர் எத்துணை அதிகமான மகிழ்ச்சியுடன் வரவேற்ற போதிலும், அக்கண்டு பிடிப்பு தொழில்துறையில் மற்றும் பொதுவாக வரலாற்று வளர்ச்சியில் உடனடியான புரட்சிகர மாற்றங்களைத் தூண்டுமானால் முற்றிலும் வேறுவிதமாக மகிழ்ச்சி அடைந்தார். உதாரணமாக, மின்சாரத் துறையில் கண்டுபிடிப்புகளின்

வளர்ச்சியை அவர் நுணுக்கமாகக் கவனித்தார். சமீப காலத்தில் மார்செல் டெப்ரேயின் ஆராய்ச்சிகளைப் பற்றியும் அப்படியே செய்தார்.

ஏனென்றால் மார்க்ஸ் முதலில் ஒரு புரட்சிக்காரர். ஏதாவதொரு வழியில் முதலாளித்துவ சமூகத்தை மற்றும் அது உருவாக்கியிருக்கின்ற அரசு நிறுவனங்களை ஒழிப்பதற்கு, நவீனப் பாட்டாளி வர்க்கத்தின்—அதன் சொந்த நிலைகளையும் அதன் தேவையையும் உணரும்படி, அதன் விடுதலையின் நிலைமைகளை உணரும்படிச் செய்த முதல் நபர் அவரே—விடுதலைக்குப் பங்களிப்பது அவருடைய மெய்யான வாழ்க்கைப் பணியாகும். போராட்டமே அவருக்கு உயிர். அவரைப் போல உணர்ச்சிகரமாக, உறுதியாக, வெற்றிகரமாகப் போராடுவதற்கு எவராலும் முடியாது. முதல் *Rheinische Zeitung* (1842),[63] பாரிஸ் *Vorwärts* (1844),[64] *Deutsche-Brüsseler-Zeitung*[65] (1847), *Neue Rheinische Zeitung* (1848—1849)*, *New-York Daily Tribune*[66] (1852—1861) இதழ்களிலும் போர்க்குணமிக்க பிரசுரங்களிலும், பாரிஸ், பிரஸ்ஸல்ஸ் மற்றும் லண்டன் ஸ்தாபனங்களிலும் அவருடைய பணி; இறுதியாக, எல்லாவற்றுக்கும் சிகரமாக சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை நிறுவினார். அவர் வேறு ஒன்றையும் செய்யாதிருந்தால் கூட இந்தச் சாதனையைப் பற்றி மட்டுமே நிச்சயமாகப் பெருமை அடைய முடியும்.

ஆகவே மார்க்ஸ் தம் காலத்தில் அதிகமாக வெறுக்கப்பட்ட, மிகவும் அவதூறு செய்யப்பட்ட மனிதராக இருந்தார். எதேச்சாதிகார அரசாங்கங்கள், குடியாட்சி அரசாங்கங்கள் ஆகிய இரண்டுமே அவரைத் தம்முடைய நாடுகளிலிருந்து வெளியேற்றின. முதலாளி வர்க்கத்தினர்—அவர்கள் பழமைவாதிகளோ அல்லது அதி தீவிர ஜனநாயகவாதிகளோ—மார்க்ஸ் மீது அவதூறுகளைக் குவிப்பதில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டனர். இவை அனைத்தையும் அவர் ஒட்டடையைப் போல ஒதுக்கித் தள்ளினார், அவற்றைப் புறக்கணித்தார்; இன்றியமையாத அவசியம்

* இத்தொகுதி, பக்கங்கள் 149—165 பார்க்க.—ப-ர்.

நிர்ப்பந்தித்தால் மட்டுமே அவற்றுக்குப் பதிலளித்தார். சைபீரியாவின் சுரங்கங்களிலிருந்து கலிபோர்னியா வரை, ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்களின் எல்லாப் பகுதிகளிலும் லட்சக்கணக்கான புரட்சிகர சகதொழிலாளர்களின் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராக அவர் மரணமடைந்த பொழுது அவர்கள் கண்ணீரைச் சொரிந்தார்கள். அவருக்குப் பல எதிரிகள் இருந்திருக்கலாம், ஆனால் அநேகமாக ஒரு தனிப்பட்ட விரோதிகூட இல்லை என்று நான் துணிந்து கூறுவேன்.

அவர் பெயர் யுகங்களுக்கும் நிலைத்திருக்கும்; அவருடைய பணியும் நிலைத்திருக்கும்!

*மார்ச் 17, 1883ல்*
*லண்டன், ஹைகேட் இடுகாட்டில்*
*பி. எங்கெல்ஸ் ஆங்கில மொழியில்*
*நிகழ்த்திய உரை*

*Der Sozialdemokrat பத்திரிகை,*
*எண் 13, மார்ச் 22, 1883*
*என்ற இதழில்*
*ஜெர்மன் மொழியில்*
*வெளியிடப்பட்டது*

*பத்திரிகை வாசகப்படி,*
*கையெழுத்துப் பிரதியின்*
*ஆங்கில வாசகத்துடன்*
*சரிபார்த்து*
*அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன்*
*மொழியில்*
*எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# மார்க்சும்

## *Neue Rheinische Zeitung* உம்

## (1848—1849)[67]

பிப்ரவரி புரட்சி[68] வெடித்த பொழுது ஜெர்மன் ''கம்யூனிஸ்டுக் கட்சி'' என்று எங்களால் சொல்லப்பட்ட கட்சி கம்யூனிஸ்டுகள் சங்கம் என்னும் சிறு மூலப் பகுதியை மட்டுமே கொண்டிருந்தது; அச்சங்கம் இரகசியமான பிரசாரக் கழகமாக அமைக்கப்பட்டிருந்தது. அச்சமயத்தில் ஜெர்மனியில் சங்கம் அமைப்பதற்கு அல்லது கூட்டம் நடத்துவதற்கு உரிமை இல்லாத காரணத்தால் மட்டுமே அச்சங்கம் இரகசியமாக இயங்கியது. வெளிநாடுகளைச் சேர்ந்த தொழிலாளர் சங்கங்களிலிருந்து அதற்குக் கிடைத்த உறுப்பினர்களைத் தவிர நாட்டிற்குள் அதற்குச் சுமார் முப்பது குழுக்கள் அல்லது பிரிவுகளும் பல இடங்களில் தனியான உறுப்பினர்களும் இருந்தார்கள். ஆனால் இந்தக் குறைவான போராடும் சக்தி ஒரு தலைவரை, மார்க்சைப் பெற்றிருந்தது; அவர் முதல்வரிசைத் தலைவர்; எல்லோரும் ஆவலுடன் அவருக்குக் கீழ்ப்படிந்தார்கள். இன்றும் முழு அளவில் செல்தகைமையைக் கொண்டிருக்கின்ற கொள்கை மற்றும் செயல்தந்திரச் செயல்திட்டமாகிய கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை அவர் அளித்தார்.

இங்கே முதலில் அச்செயல்திட்டத்தின் செயல்தந்திரப் பகுதியை நாம் எடுத்துக் கொள்வோம். அப்பகுதி பின்வருமாறு:

''கம்யூனிஸ்டுகள் ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான ஒரு தனிக் கட்சியாய் இருக்கவில்லை.

''அவர்கள் பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்களை அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள்.

''பாட்டாளி வர்க்க இயக்கத்தை வடிவமைக்க அவர்கள் தமக்கெனக் குறுங்குழுக் கோட்பாடுகள் எவற்றையும் வகுத்துக் கொள்ளவில்லை.

''ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளிடமிருந்து கம்யூனிஸ்டுகளை வேறுபடுத்திக் காட்டுகிறவை பின்வருவன மட்டுமேதான்: 1. வெவ்வேறு நாடுகளிலும் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலன்களைச் சுட்டிக்காட்டி முன்னிலைக்குக் கொண்டு வருகிறார்கள்; 2. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கப் போராட்டம் கடந்து செல்ல வேண்டியிருக்கும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அவர்கள் எப்போதும் எங்கும் இயக்கம் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

''ஆகவே நடைமுறையில் கம்யூனிஸ்டுகள் எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளது மிகவும் முன்னேறிய, மிகவும் வைராக்கியமான பகுதியாய், ஏனைய எல்லோரையும் முன்னோக்கி உந்தித் தள்ளும் பகுதியாய் இருக்கிறார்கள்; தத்துவத்தில் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதி விளைவுகளையும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தை, பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளினருக்கு இல்லாத அனுகூலத்தைப் பெற்றிருக்கிறார்கள்.''*

ஜெர்மன் கட்சியைப் பற்றி அது சிறப்பான முறையில் பின்வருமாறு குறிப்பிட்டது:

''ஜெர்மனியில் முதலாளித்துவ வர்க்கம் எதேச்சாதிகார முடியாட்சியையும் பிரபுத்துவ நிலவேந்தர் அமைப்பையும் பிற்போக்குவாதக் குட்டிமுதலாளித்துவப் பகுதிகளையும் எதிர்த்துப் புரட்சிகரமாய்ச் செயல்படும் போதெல்லாம், கம்யூனிஸ்டுகள் அதனுடன் சேர்ந்து நின்று போராடுகிறார்கள்.

---

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கம் 213 பார்க்க.—ப-ர்.

''ஆனால் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள தீராப் பகைமை குறித்து கணப்பொழுதும் ஓயாமல் அவர்கள் சாத்தியமான முழு அளவுக்குத் தொழிலாளர்களுக்கு உணர்வூட்டுகிறார்கள்; முதலாளித்துவ வர்க்கம் தனது மேலாண்மையுடன் கூடவே தவிர்க்க முடியாதபடி கொண்டு வந்தாக வேண்டியிருக்கும் சமூக, அரசியல் நிலைமைகளை ஜெர்மன் தொழிலாளர்கள் அப்படியே நேரே முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான ஆயுதங்களாய்ப் பயன்படுத்தும் பொருட்டும், ஜெர்மனியில் பிற்போக்கு வர்க்கங்கள் வீழ்ச்சியுற்றதும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டம் உடனடியாகவே ஆரம்பமாகிவிடும் பொருட்டும் அவர்கள் இப்படித் தொழிலாளர்களுக்கு உணர்வூட்டுகிறார்கள்.

''கம்யூனிஸ்டுகள் பிரதானமாய் ஜெர்மனியிடம் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். ஏனெனில் ஜெர்மனியானது முதலாளித்துவப் புரட்சி நடைபெறும் தறுவாயில் இருக்கிறது,'' இதரவை (கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை, அத்தியாயம் IV).*

இந்த செயல்திட்டம் தன்னை சிறப்பாக மெய்ப்பித்துக் கொண்டதைப் போல எந்த செயல்தந்திர செயல்திட்டமும் ஒருபோதும் மெய்ப்பிக்கவில்லை. புரட்சியின் முற்பொழுதில் முன்வைக்கப்பட்ட இந்த செயல்திட்டமும் இப்புரட்சி வைத்த சோதனையில் வெற்றி பெற்றது; அக்காலகட்டத்துக்குப் பிறகு ஒரு தொழிலாளர் கட்சி அந்த செயல்திட்டத்திலிருந்து விலகிச் சென்ற பொழுது அந்த விலகலுக்குரிய தண்டனையைப் பெற்றிருக்கிறது. இன்று, சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு மாட்ரிட் முதல் பீட்டர்ஸ்பர்க் வரை உறுதியும் வர்க்க உணர்வும் கொண்ட ஐரோப்பிய தொழிலாளர் கட்சிகள் எல்லாவற்றுக்கும் இது வழிகாட்டியாக இருக்கிறது.

பிப்ரவரி மாதத்தில் பாரிசில் நடைபெற்ற சம்பவங்கள் உருவாகிக் கொண்டிருந்த ஜெர்மன் புரட்சியைக் கடுவேக

---

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கம் 248 பார்க்க.—ப-ர்.

மாக விரைவுபடுத்தின; அதன் மூலம் அதன் தன்மையை மாற்றியமைத்தன. ஜெர்மன் முதலாளி வர்க்கம் தன்னுடைய சொந்த சக்தியைக் கொண்டு வெற்றியடைவதற்குப் பதிலாக பிரெஞ்சுத் தொழிலாளர்களுடைய புரட்சியில் ஒட்டிக் கொண்டு வெற்றியடைந்தது. எதேச்சாதிகார முடியாட்சி, நிலப்பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள், அதிகார வர்க்கம், கோழைத்தனமான குட்டி முதலாளி வர்க்கம் ஆகிய பழைய எதிரிகளை அது முடிவாக ஒழிப்பதற்கு முன் புதிய எதிரியிடம் பாட்டாளி வர்க்கத்துடன் மோத வேண்டியிருந்தது. எனினும் பொருளாதார நிலைமைகளின்—அவை பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துக்கு நெடுந்தொலைவுக்குப் பின்னால் இருந்தன—விளைவுகள் மற்றும் அவற்றிலிருந்து ஏற்படுகின்ற ஜெர்மனியின் பின்தங்கிய வர்க்க நிலைமை உடனடியாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டன.

பெரிய அளவுத் தொழில்துறையை அப்பொழுதுதான் நிறுவத் தொடங்கியிருந்த ஜெர்மன் முதலாளி வர்க்கம் அரசில் நிபந்தனையற்ற ஆதிக்கத்தை வென்றெடுப்பதற்கு வலிமையோ, துணிவோ இல்லாதிருந்தது; அதைச் செய்ய வேண்டும் என்று அதை நிர்ப்பந்திக்கின்ற எவ்விதமான அவசியமும் இல்லாமலிருந்தது. முதலாளி வர்க்கத்தைப் போல அதே அளவுக்கு வளர்ச்சியில்லாத பாட்டாளி வர்க்கம் முழுமையான அறிவு சார்ந்த அடிமைத்தனத்தில் வளர்ந்து, ஒழுங்கமைப்பு இல்லாமல், சுதந்திரமான ஸ்தாபனம் கூட இன்னும் இல்லாமல் தன்னுடைய நலன்களுக்கும் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் இடையிலுள்ள ஆழமான பகைமையைப் பற்றித் தெளிவற்ற உணர்ச்சியை மட்டுமே கொண்டிருந்தது. ஆகவே உண்மையில் அது முதலாளி வர்க்கத்தைப் பயமுறுத்துகின்ற எதிரியாக இருந்தாலும், மறு பக்கத்தில் அரசியல் ரீதியில் அதன் ஒட்டுப் பகுதியாக இருந்தது. முதலாளி வர்க்கம்—ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் சக்தியைக் கண்டல்ல—அது எதிர்காலத்தில் எப்படி வளர்ச்சியடையப் போகிறது என்று பயமுறுத்தியதைக் கண்டு, பிரெஞ்சு பாட்டாளி வர்க்கம் ஏற்கெனவே வளர்ச்சியடைந்திருந்த நிலையைக் கண்டு பீதியடைந்தது;

முடியாட்சி மற்றும் பிரபுக்களுடன் ஏதாவதொரு—மிகவும் கோழைத்தனமானதாக இருப்பினும் கூட—சமரசத்தைச் செய்வதில் தனக்கு முக்தியைக் கண்டது. பாட்டாளி வர்க்கம் தன்னுடைய வரலாற்றுப் பாத்திரத்தை இன்னும் அறியாதிருந்தபடியால் அதன் பெரும்பான்மையினர் ஆரம்பத்தில் முதலாளி வர்க்கத்தின் முன்னே செல்லத் துடிக்கின்ற, தீவிர இடதுசாரியின் பாத்திரத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஜெர்மன் தொழிலாளர்கள் வர்க்கக் கட்சி என்ற முறையில் தம்முடைய சுயேச்சையான அமைப்புக்கு இன்றியமையாத உரிமைகளை—பத்திரிகைச் சுதந்திரம், சங்கம் அமைப்பதற்கும் கூட்டம் நடத்துவதற்கும் உரிமை—எல்லாவற்றிற்கும் முன்னால் வென்றெடுக்க வேண்டியிருந்தது. முதலாளி வர்க்கம் தன்னுடைய ஆட்சியின் நலனுக்காக இந்த உரிமைகளுக்குப் போராடியிருக்க வேண்டும்; ஆனால் அது அச்சமடைந்து தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் இந்த உரிமைகளைப் பற்றிக் கேள்வி எழுப்பத் தொடங்கியது. சங்கத்தின் உதிரி உறுப்பினர்களாக இருந்த சில நூறு நபர்கள் திடீரென்று இயக்கத்தில் தூக்கியெறியப்பட்ட மாபெருந்திரளில் மறைந்தார்கள். இப்படி ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் முதலில் தீவிர ஜனநாயகவாதக் கட்சியாக அரசியல் அரங்கத்தில் தோன்றியது.

ஜெர்மனியில் ஒரு பெரிய பத்திரிகையை நாங்கள் நிறுவிய பொழுது எங்களுடைய கொள்கை இப்படி இயற்கையாகவே நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அது ஜனநாயகமாக மட்டுமே, ஆனால் இயக்கம் தன்னுடைய பதாகையில் முடிவான முறையில் இன்னும் பொறித்துக் கொள்ள இயலாத பிரத்யேகமான பாட்டாளி வர்க்கத் தன்மையை எங்கும் எல்லா அம்சங்களிலும் வலியுறுத்திய ஜனநாயகமாகவே இருக்க முடியும். நாம் அதைச் செய்வதற்கு விரும்பவில்லை என்றால், இயக்கத்தை நடத்துவதற்கு, ஏற்கெனவே இருக்கின்ற, அதிகமாக வளர்ச்சியடைந்த, மெய்யாகவே பாட்டாளி வர்க்கத்தின் தரப்பில் சேர்ந்து அதை முன்னோக்கிச் செலுத்துவதற்கு விரும்பவில்லை என்றால் ஒரு மாகாண அளவிலான சிறிய பத்திரிகையில் கம்யூனிசத்தைப்

போதிப்பதைத் தவிர, மாபெரும் கட்சிக்குப் பதிலாக சிறு குழுவை நிறுவுவதைத் தவிர நாம் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. ஆனால் பாலைவனத்தில் போதகர்கள் பாத்திரத்தை வகிக்க இயலாத அளவுக்கு நாம் ஏற்கெனவே கெட்டுப் போய்விட்டோம்; அதைச் செய்ய முடியாத அளவுக்கு நாம் ஏற்கெனவே கற்பனாவாதிகளை மிகவும் நன்றாக ஆராய்ந்திருக்கிறோம்; நாம் செயல்திட்டத்தைத் தயாரித்ததும் இதற்காக அல்ல.

நாங்கள் கொலோனுக்கு வந்த பொழுது அங்கே ஒரு பெரிய பத்திரிகையை நடத்துவதற்குப் பகுதியளவுக்கு ஜனநாயகவாதிகளும் பகுதியளவுக்கு கம்யூனிஸ்டுகளும் ஏற்கெனவே தயாரிப்புகளைச் செய்திருந்தார்கள். அதை முற்றிலும் ஸ்தல அளவிலான கொலோன் பத்திரிகையாகச் செய்வதற்கும் எங்களை பெர்லினுக்கு அனுப்புவதற்கும் உத்தேசிக்கப்பட்டது. ஆனால் இருபத்து நான்கு மணி நேரத்தில் நாங்கள் களத்தைக் கைப்பற்றி விட்டோம்—அதற்கு மார்க்சுக்கு விசேஷமாக நன்றி சொல்ல வேண்டும்; **ஹென்ரிஹ் பியூர்கெர்சை** ஆசிரியர் குழுவில் சேர்த்து கொள்வதென்று விட்டுக்கொடுத்ததன் பேரில் பத்திரிகை நமக்குக் கிடைத்தது. அவர் (இரண்டாம் இதழில்) ஒரு கட்டுரை எழுதினார்; அதன் பிறகு ஒருபோதும் எழுதவில்லை.

நாங்கள் போக வேண்டிய இடம் துல்லியமாகக் கொலோனே தவிர, பெர்லின் அல்ல. முதலாவதாக, கொலோன் ரைன் மாநிலத்தின் மையமாகும்; அந்த மாநிலம் பிரெஞ்சுப் புரட்சியை அனுபவித்திருக்கிறது, நெப்போலியன் சட்டத் தொகுப்பின் மூலம் **நவீன** சட்டவியல் கருதுகோள்களைப் பெற்றிருக்கிறது, அங்கே அது வரையில் மிகவும் முக்கியமான பெரிய அளவுத் தொழில்துறை வளர்ச்சியடைந்திருக்கிறது, அந்தச் சமயத்தில் ஜெர்மனியில் ஒவ்வொரு அம்சத்திலும் மிகவும் வளர்ச்சியடைந்த பகுதியாக இருந்தது. அக்காலத்திய பெர்லினையும் அதன் முட்டையிலிருந்து முழுமையாக வெளிப்படாத முதலாளி வர்க்கம்,கெஞ்சுதலான குட்டி முதலாளி வர்க்கம்—பேச்சில் துணிகரமானது, ஆனால் செயலில் கோழைத்தனமுள்ளது—இன்னும் முழுமையான

வளர்ச்சியில்லாத தொழிலாளர்கள், பெருந்திரளான அதிகாரிகள், பிரபுக்குலம் மற்றும் அரசவையைச் சேர்ந்த பணியாளர்கள், வெறும் "Residenz"* என்னும் அதன் மொத்த குணாம்சத்தையும் நாங்கள் கவனிப்பின் மூலமாகவே நன்றாக அறிந்திருந்தோம். எனினும் பெர்லினில் பின்சொல்லப் படுபவை தீர்மானமாக இருந்தன: பெர்லினில் கேவலமான பிரஷ்ய Landrecht** நிலவியது, அரசியல் சம்பந்தப்பட்ட வழக்குகளை முழுநேர நீதிபதிகள் விசாரணை செய்தார்கள்; ரைன் மாநிலத்தில் நெப்போலியன் சட்டத் தொகுப்பு அமுலாக்கப்பட்டது, தணிக்கை முறையை முன்னனுமானிக்கின்ற பத்திரிகை வழக்குகளுக்கு அதில் இடமில்லை; ஒருவர் அரசியல் முறைகேடுகளன்றி குற்றங்கள் செய்திருந்தால் ஜூரிகளால் விசாரணை செய்யப்படுவார். பெர்லினில் புரட்சிக்குப் பிறகு இளைஞர் ஷ்லோஃபெல் அற்பமான குற்றத்துக்கு ஓர் ஆண்டுத் தண்டனை பெற்றார்; ஆனால் ரைன் மாநிலத்தில் பத்திரிகைகளுக்கு வரம்பில்லாத சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது—நாங்கள் அதைக் கடைசித் துளி வரை பயன்படுத்திக் கொண்டோம்.

இப்படி நாங்கள் 1848 ஜூன் 1ந் தேதியன்று மிகவும் குறைவான பங்கு மூலதனத்துடன் தொடங்கினோம்; அதில் சிறிதளவுதான் ரொக்கமாகக் கிடைத்திருந்தது; பங்குதாரர்களைப் பொறுத்தமட்டில் மிகவும் அதிகமான அளவுக்கு நம்ப முடியாதவர்களாக இருந்தார்கள். முதல் இதழ் வெளியான பிறகு அவர்களில் பாதிப் பேர்கள் எங்களை விட்டுப் போய் விட்டார்கள்; மாதக் கடைசியில் ஒருவர் கூட நிலைக்கவில்லை.

பத்திரிகை வெளியீட்டு முறை மார்க்சின் சர்வாதிகாரமே. ஒரு பெரிய நாளிதழைக் குறிப்பிட்ட நேரத்தில் வெளியிடுவதென்றால் வேறு எப்படிப்பட்ட முறையிலும் முரணில்லாத கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாது. மேலும் இங்கே மார்க்சினுடைய சர்வாதிகாரம் இயல்பான ஒன்றாக

*—ஆட்சி செய்யும் அரசரின் தலைமையகம்.—ப-ர்.

**—நாட்டில் அமுலாக்கப்படுகின்ற சட்டம்.—ப-ர்.

இருந்தது; அதை யாரும் ஆட்சேபிக்கவில்லை, நாங்கள் எல்லோரும் அதை விரும்பி வரவேற்றோம். புரட்சி நடை பெற்ற ஆண்டுகளில் அது மிகவும் பிரபலமான ஜெர்மன் பத்திரிகையாக இருந்ததற்குப் பிரதானமாக மார்க்சின் தெளிவான தொலை நோக்கும் உறுதியான அணுகுமுறையுமே காரணம்.

*Neue Rheinische Zeitung*இன் அரசியல் செயல்திட்டம் இரண்டு பிரதான அம்சங்களைக் கொண்டிருந்தது:

ஒரே, பிரிக்கப்பட முடியாத, ஜனநாயக ஜெர்மன் குடியரசு மற்றும் ருஷ்யா மீது போர் தொடுத்தல் (போலந்தை ஒன்றுபடுத்திச் சுதந்திரம் அளித்தல் அதில் அடங்கியிருந்தது).

குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகம் அந்தச் சமயத்தில் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்திருந்தது: வடக்கு ஜெர்மனி—ஜனநாயகரீதியான பிரஷ்ய சக்கரவர்த்தியை அது ஆட்சேபிக்காது; மற்றும் தெற்கு ஜெர்மனி (அப்பொழுது அநேகமாக முற்றிலும் பிரத்யேகமான பாடேன் கோஷ்டியாக இருந்தது)—ஸ்விட்சர்லாந்தின் மாதிரியைப் பின்பற்றி ஜெர்மனியைக் கூட்டாட்சிக் குடியரசாக மாற்றுவதற்கு விரும்பியது. மேற்கூறிய இரண்டையும் எதிர்த்து நாங்கள் போராட வேண்டியிருந்தது. ஜெர்மனியைப் பிரஷ்யமயமாக்குதல் மற்றும் அது குட்டி அரசுகளாகப் பிரிந்திருப்பதை நிரந்தரமாக்குதல் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்குச் சம அளவுக்கு எதிராக இருந்தன. ஜெர்மனியை ஒரு தேசம் என்ற முறையில் திட்டவட்டமாக ஒற்றுமைப் படுத்துவதை இந்த நலன்கள் கண்டிப்பான கடமை ஆக்கின. அது மட்டுமே பாட்டாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும் தம்முடைய பலத்தைப் பரிசோதித்துக் கொள்ளப் போகின்ற போர்க் களத்தை—அதிலிருந்து மரபு வழிப்பட்ட அற்பமான தடைகள் எல்லாவற்றையும் நீக்கி—தயாரிக்க முடியும். ஆனால் பிரஷ்யாவிடம் மீண்டும் தலைமையைக் கொடுப்பது அதே அளவுக்கு அந்த நலன்களுக்கு விரோதமாக இருந்தது. பிரஷ்யாவின் மொத்த அமைப்பு, அதன் மரபு மற்றும் பரம்பரை ஜெர்மனியில் புரட்சி ஒழிக்க வேண்டிய துல்லிய

மான, ஒரே உள்ளுறையான, முக்கியமான எதிரியாக இருந் தன; மேலும் பிரஷ்யா ஜெர்மனியைப் பிய்த்தெடுப்பதன் மூலமே, அதாவது ஜெர்மன் ஆஸ்திரியாவை ஒதுக்கி விடு வதன் மூலமே அதை ஒன்றுபடுத்த முடியும். பிரஷ்ய அரசைக் கலைத்தல் மற்றும் ஆஸ்திரிய அரசைத் தனிக் கூறு களாகப் பிரித்தல், குடியரசு என்ற முறையில் ஜெர்மனியை மெய்யாக ஒன்றுபடுத்துதல்—வேறு எவ்விதமான புரட்சிகர உடனடிச் செயல்திட்டமும் நமக்கு இருக்க முடியாது. ருஷ் யாவுடன் போரின் மூலமாக, அத்தகைய போரின் மூலமாக மட்டுமே, ஈடேற முடியும். இந்தக் கடைசி அம்சத்தைப் பற்றிப் பிறகு எழுதுகிறேன்.

மற்றவற்றைப் பொறுத்தமட்டில் பத்திரிகையின் தொனி எவ்விதத்திலும் வீறார்ந்ததாகவோ, கருத்தார்ந்ததாகவோ அல்லது உற்சாகமானதாகவோ இல்லை. எங்கள் எதிரிகள் முற்றிலும் கடையர்கள்; நாங்கள் அவர்கள் எல்லோரை யும் பற்றி மிகவும் அதிகமான இகழ்ச்சியுடன் பேசினோம். சதி செய்கின்ற அரசர்கள், அரசவைக் கும்பல், பிரபுக்கள், *Kreuz-Zeitung*,[69] மொத்தப் ''பிற்போக்குவாதம்''—அதைப் பற்றி அற்பவாதிகள் தார்மிக ரீதியில் கடுஞ்சினமடைந்தார் கள்—ஆகியவற்றை நாங்கள் ஏளனத்துடன், இகழ்ச்சியுடன் எழுதினோம். புரட்சியின் மூலம் களத்தில் தோன்றிய புதிய தெய்வங்களான தலைவர்களை, மார்ச் மாத அமைச்சர் கள்,[70] பிராங்க்பர்ட் மற்றும் பெர்லின் அசெம்பிளிகள்,[71] அவற்றிலிருந்த வலதுசாரி, இடதுசாரி ஆகிய இருவரையுமே பற்றி அதே முறையில் எழுதினோம். பத்திரிகையின் முதல் இதழ் பிராங்க்பர்ட் நாடாளுமன்றத்தின் அறிவுச் சூன்யத்தை, அங்கே நிகழ்த்தப்பட்ட நீண்ட சொற்பொழிவுகளின் பயனற்ற தன்மையை, அதன் கோழைத்தனமான தீர்மானங் களின் அவசியமின்மையைப் பற்றிய கட்டுரையுடன் ஆரம்ப மாயிற்று. பங்குதாரர்களில் பாதி விலகி விட்டார்கள். பிராங்க்பர்ட் நாடாளுமன்றம் ஒரு விவாத மன்றமாகக் கூட இருக்கவில்லை; அங்கே விவாதங்கள் அநேகமாக நடைபெற வில்லை; பெரும்பாலும் முன்னரே தயாரிக்கப்பட்ட கல்வி அளவேயான உரைகள் அலுப்புத் தருகின்ற முறையில் நிகழ்த்

தப்பட்டன; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; ஜெர்மன் அற்பவாதிகளுக்கு உத்வேகமூட்டுவது அவற்றின் நோக்கமாக இருந்தாலும், அவற்றைப் பற்றி எவரும் சிறிதளவு கூட அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

பெர்லின் அசெம்பிளி இன்னும் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது: அது மெய்யான ஆட்சியதிகாரத்துக்கு எதிரே நின்றது; அது காற்றில், மேகங்களுக்கு அப்பால் எங்கோ இருக்கின்ற பிராங்க்பர்ட் கற்பனை நாட்டில் விவாதம் நடத்தித் தீர்மானங்களை நிறைவேற்றவில்லை. ஆகவே அதை இன்னும் அதிக விவரமாக எடுத்துக் கொண்டோம். ஆனால் அங்கும் கூட, பிராங்க்பர்ட்டைப் போலவே, இடதுசாரியினருடைய தெய்வங்களான ஷூல்ட்ஸெ-டெலிட்ச், பெரென்டஸ், ஏல்ஸெனர், ஷ்டைன் ஆகியோர் அதே அளவுக்குக் கூர்மையாகத் தாக்கப்பட்டார்கள். அவர்களுடைய உறுதியின்மை, தயக்கம் மற்றும் சிறுதரமான அறிவு ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தப்பட்டன; அவர்கள் புரட்சிக்குத் துரோகம் செய்கின்ற அளவுக்கு படிப்படியாக எப்படி சமரசம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டது. தன்னுடைய சொந்த உபயோகத்துக்கென்று இந்தத் தெய்வங்களை அப்பொழுதுதான் தயாரித்து முடித்திருந்த ஜனநாயகக் குட்டி முதலாளியை இது நடுங்கவைத்தது என்பது உண்மையே. இந்த நடுக்கம் நாங்கள் குறியைத் தாக்கி விட்டோம் என்பதற்கு சமிக்கையாக எங்களுக்கு இருந்தது.

புரட்சி மார்ச் நாட்களுடன் முடிவடைந்து விட்டது, இனி நாம் செய்ய வேண்டியது அதன் பலன்களை அனுபவிப்பதே ஆகும் என்று குட்டி முதலாளி வர்க்கம் வேகமாகப் பரப்பிய பிரமையை நாங்கள் எதிர்த்தோம். பிப்ரவரி மற்றும் மார்ச் ஒரு புரட்சியின் முடிவு நிலையாக இல்லாமல் அதற்கு மாறாக ஒரு நீண்ட புரட்சிகர இயக்கத்தின் தொடக்க நிலையாக—மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியில் நடைபெற்றதைப் போன்று அதில் மக்கள் தம்முடைய போராட்டங்களின் மூலமாக மேலும் வளர்ச்சியடைந்து, கட்சிகள் முதலாளி வர்க்கம், குட்டி முதலாளி வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கம் என்னும் மாபெரும் வர்க்கங்

களுடன் முழுமையாகப் பொருந்துகின்ற வரை மேன்மேலும் கூர்மையான முறையில் வகைப்படுத்தலடைந்து, அதில் பாட்டாளி வர்க்கம் தொடர் வரிசையான சமர்களில் ஒவ்வொன்றாகத் தன்னுடைய தனி நிலைகளை வென்று—தக்க வைத்துக் கொண்டிருக்கும் பொழுது மட்டுமே அவை எமக்கு உண்மையான புரட்சியின் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும். ஜனநாயகக் குட்டி முதலாளி வர்க்கம் ''நாம் எல்லோரும் விரும்புவது ஒன்றே, எல்லா வேறுபாடுகளும் வெறும் தப்பு அபிப்பிராயங்களைத்தான் ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன'' என்னும் பிரியமான சொற்றொடரைப் பயன்படுத்திப் பாட்டாளி வர்க்கத்துடன் தன்னுடைய வர்க்கரீதியான பகைமையை மழுப்புவதற்கு முயற்சி செய்த பொழுது அதை எல்லா இடங்களிலும் நாம் எதிர்த்தோம். நம்முடைய பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தைக் குட்டி முதலாளி வர்க்கம் தவறாகப் புரிந்து கொள்வதை நாம் எவ்வளவு குறைத்தோமோ, அந்த அளவுக்கு அது நம்மிடம் சாதுவாகவும் இணக்கத்துடனும் நடந்து கொண்டது. அதை எவ்வளவு கூர்மையாகவும் உறுதியாகவும் எதிர்க்கிறோமோ, அவ்வளவு துரிதமாக அது பணிகிறது, தொழிலாளர் கட்சிக்கு அதிகமான சலுகைகளைச் செய்கிறது. அதை நாம் நன்றாக அறிவோம்.

கடைசியாக, பல்வேறு தேசிய அசெம்பிளிகள் என்று சொல்லப்பட்டவற்றின் நாடாளுமன்ற அறிவு மந்தத்தை (மார்க்ஸ் இப்பெயரைக் கொடுத்தார்)* அம்பலப்படுத்தினோம். இந்த கனவான்கள் அதிகாரத்தின் எல்லா சாதனங்களையும் தங்களிடமிருந்து நழுவும்படி விட்டுவிட்டார்கள், பகுதியளவில் தாங்களே விருப்பபூர்வமாக அவற்றை அரசாங்கங்களிடம் மறுபடியும் ஒப்படைத்தார்கள். பிராங்க்பர்ட்டைப் போலவே பெர்லினிலும் புதிதாக வலுப்படுத்தப்பட்ட பிற்போக்கான அரசாங்கங்களின் அருகில் அதிகாரமில்லாத அசெம்பிளிகள் இருந்தன; ஆனால் தாங்கள் நிறைவேற்றிய வலுவில்லாத தீர்மானங்கள் உலகத்தின்

* இப்பதிப்பு, தொகுதி 4, பக்கங்கள் 129—130 பார்க்க.—ப-ர்.

அடிப்படையைக் குலுக்கும் என்று கற்பனை செய்தன. இந்த மூடத்தனமான சுயமோசடி அதிதீவிர இடதுசாரியினர் மத்தியில் கூட நிலவியது. அவர்கள் நாடாளுமன்றத்தில் வெற்றியடைகின்ற பொழுது மெய்யான தோல்வியைத் தழுவுவார்கள் என்று நாங்கள் அவர்களிடம் வெளிப்படையாகக் கூறினோம்.

பெர்லின், பிராங்க்பர்ட் ஆகிய இரண்டு நகரங்களிலும் இப்படி நடைபெற்றது. ''இடதுசாரியினர்'' பெரும்பான்மையைப் பெற்ற பொழுது, அரசாங்கம் அசெம்பிளி முழுவதையும் கலைத்தது. மக்கள் அசெம்பிளி மீது வைத்திருந்த எல்லா நம்பிக்கைகளும் போய்விட்டபடியால் அரசாங்கம் அவ்வாறு செய்ய முடிந்தது.

பின்னர் மராத்தைப் பற்றி புஷாரால் எழுதிய புத்தகத்தை நான் படித்த பொழுது மெய்யான (அரச மரபின் ஆதரவாளர்கள் தயாரித்தது அல்ல) *Ami du Peuple*[72] மாபெரும் மாதிரியை நாங்கள் உணர்வில்லாமலே பின்பற்றியிருக்கிறோம், கடுஞ்சீற்றம் பீறிட்டதற்கும் வரலாறு முழுமையாகத் திரித்துக் கூறப்பட்டதற்கும்—அதன் விளைவாக சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் வரை முற்றிலும் சிதைக்கப்பட்ட மராத்தையே நாம் அறிந்திருந்தோம்—மராத் அத்தருணத்தின் மாபெரும் தெய்வங்கள் போலத் தலைவர்களான லஃபாயெட், பாயீ மற்றும் இதரர்களின் முகத்திரைகளை ஈவிரக்கமில்லாமல் கிழித்து அவர்கள் ஏற்கெனவே புரட்சிக்கு முழுமையான துரோகிகளாக மாறி விட்டார்கள் என்று அம்பலப்படுத்திய உண்மை ஒன்று மட்டுமே காரணம், நம்மைப் போலவே அவரும் புரட்சி முடிந்து விட்டதாக அறிவிக்கப்படுவதையல்ல, அது நிரந்தரமாகத் தொடரும் என்று அறிவிக்கப்படுவதையே விரும்பினார் என்பவற்றைப் புரிந்து கொண்டேன்.

ஜெர்மனியில் அப்பொழுது இயங்கிக் கொண்டிருந்த அதிகாரபூர்வமான கட்சிகளில் மிகவும் முனைக்கோடியான கட்சி ஆட்சிக்கு வருகின்ற பொழுது மட்டுமே—அப்பொழுது நாம் அதன் எதிர்க்கட்சியாக இருப்போம்—நாம் பிரதிநிதித்துவம் செய்கின்ற போக்கை ஆதரிப்பவர்கள் மெய்

யான கட்சி நோக்கங்களை ஈடேற்றுவதற்கு நடைபெறுகின்ற போராட்டத்தில் சேர முடியும் என்று நாம் பகிரங்கமாக அறிவித்தோம்.

எனினும் சம்பவங்கள் நம்முடைய ஜெர்மன் எதிரிகளைப் பற்றி ஏளனத்தை மட்டுமன்றி தீவிரமான உணர்ச்சிகளையும் தோற்றுவித்தன. 1848 ஜூன் மாதத்தில் பாரிஸ் தொழிலாளர்களுடைய புரட்சிகர எழுச்சியின் போது நாம் தயாராக இருந்தோம். முதல் குண்டு வெடித்ததிலிருந்து நாம் புரட்சிக்காரர்களின் தரப்பில் இருந்தோம். அவர்களுடைய தோல்விக்குப் பிறகு மார்க்ஸ் வீழ்ச்சியடைந்தவர்களைப் போற்றித் தன்னுடைய மிகவும் வன்மையான கட்டுரைகளில் ஒன்றை எழுதினார்.*

அதன் பிறகு கடைசியாக எஞ்சியிருந்த பங்குதாரர்களும் நம்மிடமிருந்து விலகிக் கொண்டார்கள். எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளிகளும் குட்டி முதலாளிகளும் வீழ்ச்சியுற்றவர்களை அவதூறு என்னும் நீர்வீழ்ச்சியில் மூழ்கடித்துக் கொண்டிருந்த தருணத்தில் நசுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் கொடியை உயர்த்திப் பிடித்தது ஜெர்மனியிலும் அநேகமாக ஐரோப்பா முழுவதிலும் இந்த ஒரு பத்திரிகைதான் என்று நாம் திருப்தி அடைந்தோம்.

நம்முடைய வெளிநாட்டுக் கொள்கை எளிமையானதே: புரட்சிகர மக்களினம் ஒவ்வொன்றையும் ஆதரித்தல் மற்றும் ஐரோப்பியப் பிற்போக்குவாதத்தின் வலிமைமிக்க அரணாகிய ருஷ்யாவுக்கு எதிராகப் புரட்சிகர ஐரோப்பா பொது யுத்தத்தை நடத்த வேண்டும் என்று அறைகூவுதல். புரட்சி உண்மையாகவே எதிர்த்து நிற்க முடியாத ஒரே எதிரி ருஷ்யா மற்றும் புரட்சி ஐரோப்பியப் பரிமாணங்களை எவ்வளவு அதிகமாக அடைகிறதோ, அந்த அளவுக்கு அந்த எதிரி போராட்டத்தில் ஈடுபடுமாறு அதிகமாக நிர்ப்பந்திக்கப்படும் என்பது பிப்ரவரி 24ந் தேதியிலிருந்து[73] எங்களுக்குத் தெளிவாயிற்று. வியென்னா, மிலான் மற்றும் பெர்லின் சம்பவங்கள் ருஷ்யாவின் தாக்குதலைத் தாமதப்படுத்துவது

* கா. மார்க்ஸ், ஜூன் புரட்சி.—ப-ர்.

நிச்சயம். ஆனால் புரட்சி ருஷ்யாவை எவ்வளவு அதிகமாக நெருங்குகிறதோ, அந்த அளவுக்கு ருஷ்யா கடைசியில் ஈடுபடுவது நிச்சயம். ஜெர்மனியை ருஷ்யா மீது போர் தொடுக்கச் செய்வதில் வெற்றியடைந்தால் ஹாப்ஸ்பர்குகளும் ஹோஹென்ஸோலர்ன்களும் அழிந்து விடுவார்கள், புரட்சி அந்தப் பாதை நெடுகிலும் வெற்றி அடையும்.

ருஷ்யர்கள் ஹங்கேரியா மீது உண்மையாகப் படையெடுக்கின்ற தருணம் வரை இக்கொள்கை பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும் நிறைந்திருந்தது; அப்படையெடுப்பு நம்முடைய முன்னறிவை முற்றிலும் நிரூபித்து புரட்சியின் தோல்வியை முடிவு செய்தது.

1849ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் தீர்மானமான சமர் நெருங்கி வந்த பொழுது ஒவ்வொரு இதழிலும் பத்திரிகையின் நடை சூடேறி உணர்ச்சிகரமாயிற்று. சைலீஷிய விவசாயிகள் நிலப்பிரபுத்துவ சேவைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட பொழுது நிலப்பிரபுக்கள் அரசாங்கத்தின் உதவியுடன் அவர்களிடமிருந்து பணத்தையும் நிலத்தையும் எப்படி அபகரித்தார்கள் என்பதை வில்ஹெல்ம் வோல்ஃப் "சைலீஷிய மில்லியார்டு" (எட்டு கட்டுரைகள்) என்னும் கட்டுரைத் தொடரில் நினைவுபடுத்தினார்; அவர்களுக்கு ஆயிரம் மில்லியார்டு தாலர்கள் நட்ட ஈடு தர வேண்டுமென்று கோரினார்.

அதே சமயத்தில் ஏப்ரல் மாதத்தில் மார்க்ஸ் எழுதிய கூலியுழைப்பும் மூலதனமும் என்னும் நூல் பத்திரிகையில் தொடர் கட்டுரைகளாக வெளியாயிற்று.* இது நம்முடைய கொள்கையின் சமூக இலட்சியத்தைத் தெளிவான முறையில் எடுத்துக் காட்டியது. ஒவ்வொரு இதழும், ஒவ்வொரு சிறப்பிதழும் மாபெரும் சமருக்குத் தயாரிப்புகள் நடைபெறுவதை, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி மற்றும் ஹங்கேரியாவில் முரணியல்புகள் தீவிரமடைந்து வருவதைச் சுட்டிக்காட்டின. குறிப்பாக, ஏப்ரல் மற்றும் மே மாதங்

---

* இப்பதிப்பு, தொகுதி 2, பக்கங்கள் 23—71 பார்க்க. —ப-ர்.

களில் வெளியிடப்பட்ட சிறப்பு இதழ்கள் நேரடி நடவடிக்கைக்குத் தயாராகுங்கள் என்று மக்களை அறைகூவுகின்ற பிரகடனங்களாக இருந்தன.

நாம் முதல் தரமான பிரஷ்யக் கோட்டைக்குள், 8,000 போர்வீரர்களைக் கொண்ட காவற்படையும் இராணுவச் சிறையும் உள்ள இடத்தில் சிறிது கூட அச்சமின்றி நம்முடைய நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருப்பதைப் பற்றி ஜெர்மனி முழுவதிலும் வியப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆசிரியர் அறையில் குத்தீட்டிகளைக் கொண்ட எட்டு ரைபிள்களும் 250 தோட்டாக்களும், சிகப்பு ஜாக்கொபின்வாதிகளின்[74] தொப்பிகளணிந்த அச்சுக் கோர்ப்பவர்களும் இருந்தபடியால் இராணுவ அதிகாரிகள் நம்முடைய வீட்டையும் ஒரு கோட்டையாகக் கருதினார்கள்; திடீர்த் தாக்குதலில் அதைக் கைப்பற்ற முடியாது என்று நினைத்தார்கள்.

கடைசியில் 1849 மே 18ந் தேதியன்று தாக்குதல் ஆரம்பமாயிற்று.

புரட்சிகர எழுச்சியை டிரெஸ்டன் மற்றும் எல்பெர்பெல்டில் நசுக்கி விட்டார்கள்; இஸெர்லோனில் அது சுற்றி வளைத்துக் கொள்ளப்பட்டது; ரைன் மாநிலத்திலும் வெஸ்ட்ஃபாலியாவிலும் படைவீரர்கள் குவிந்தனர்; பிரஷ்ய ரைன்லாந்தை நசுக்கிய பிறகு ப்ஃபால்ட்ஸ் மற்றும் பாடேனை நோக்கி முன்னேறிச் செல்வதற்குத் திட்டம் வகுத்தனர். அதன் பிறகு கடைசியில் நம்மை நெருங்கி வருவதற்கு அரசாங்கம் துணிந்தது. ஆசிரியர் குழுவில் பாதி நபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது; அடுத்த பாதி நபர்களை பிரஷ்யர் அல்லாதவர்கள் என்ற முறையில் நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்துக்குப் பின்னால் மொத்த ராணுவப் படையும் இருக்கின்ற வரை அதை எதிர்த்து ஒன்றும் செய்ய இயலாது. நம்முடைய கோட்டையை ஒப்படைக்க வேண்டியிருந்தது. ஆனால் நம்முடைய ஆயுதங்களையும் சாமான்களையும் எடுத்துக் கொண்டோம்; வாத்தியம் முழங்க, கொடி அசைந்தாட, கடைசி இதழின், சிகப்பு இதழின் கொடி பறக்க, பலனில்லாத சதி நடவடிக்கைகளில் ஈடுபட

வேண்டாம் என்று கொலோன் தொழிலாளர்களை எச்சரித்தோம்:

''*Neue Rheinische Zeitung*இன் ஆசிரியர்கள் உங்களிடமிருந்து விடை பெறுகின்ற இந்த நேரத்தில் நீங்கள் அவர்களிடம் காட்டிய அனுதாபத்துக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். தொழிலாளி வர்க்கத்தின் விடுதலையே எப்பொழுதும் எங்கும் அவர்களுடைய கடைசிச் சொற்களாக இருக்கும்!''

*Neue Rheinische Zeitung* முதல் வருடத்தை முடிப்பதற்குச் சிறிது முன்பாகவே இப்படி முடிவுற்றது. அநேகமாக எத்தகைய நிதியும் இல்லாமல்—வாக்களிக்கப்பட்ட சிறிதளவு தொகைகள் ஒருபோதும் கொடுக்கப்படவில்லை என்பதை முன்பே எழுதினோம்—ஆரம்பிக்கப்பட்டு செப்டெம்பர் மாதத்துக்குள் சுமார் 5,000 பிரதிகள் விற்பனையை எட்டியது; கொலோனில் நிலவிய முற்றுகை நிலை அதை நிறுத்தியது; அக்டோபர் மாதத்தின் நடுவில் அதை மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருந்தது. ஆனால் 1849 மே மாதத்தில் அது ஒடுக்கப்பட்ட பொழுது மறுபடியும் 6,000 சந்தாதாரர்கள் அதற்கு ஏற்பட்டிருந்தார்கள். அந்த சமயத்தில் *Kölnische Zeitung* பத்திரிகைக்கு[75] 9,000க்கும் குறைவான சந்தாதாரர்களே இருந்தார்கள் என்று அதன் ஒப்புதலின் மூலம் அறிகிறோம். அதற்கு முன்னரோ, பின்னரோ எந்த ஜெர்மன் பத்திரிகையும் எக்காலத்திலும் அதே போன்ற சக்தியையும் செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை; *Neue Rheinische Zeitung* பத்திரிகையைப் போல வன்மையாக பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினருக்கு உத்வேகமூட்ட வேறு எதனாலும் இயலவில்லை.

இதற்கான பெருமையனைத்தும் மார்க்சையே சாரும்.

தாக்குதல் தொடங்கியதும் ஆசிரியர் குழுவினர் பிரிந்து சென்றார்கள். மார்க்ஸ் பாரிசுக்குச் சென்றார். அங்கே அப்பொழுது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த முடிவு 1849 ஜூன் 13ந் தேதியன்று நடைபெற்றது.[76] வில்ஹெல்ம் வோல்ஃப் பிராங்க்பர்ட் நாடாளுமன்றத்தில்—மேலேயிருந்து கலைக்கப்படுதல் அல்லது புரட்சியில் பங்கெடுத்தல் என்னும் இரண்டில் ஒன்றை நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்க வேண்

டிய அந்தச் சமயத்தில்—உறுப்பினரானார். நான் ப்ஃபால்ட்சுக்குச் சென்று வில்லிஹின் தொண்டர் படையில் அட்ஜூடன்டானேன்.[77]

*1884 பிப்ரவரி நடுப் பகுதி—*
*மார்ச் தொடக்கத்தில்*
*பி. எங்கெல்சினால் எழுதப்பட்டது*

*Der Sozialdemokrat* *பத்திரிகை,*
*எண் 11, மார்ச் 13, 1884*
*என்ற இதழில்*
*வெளியிடப்பட்டது*

*பத்திரிகை வாசகப்படி*
*அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன்*
*மொழியில்*
*எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் வரலாறு குறித்து[78]

1852இல் கொலோன் கம்யூனிஸ்டுகள் தண்டிக்கப்பட்டதுடன்[79] சுதந்திரமான ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் முதல் கட்டம் முடிவடைந்தது. இன்று அக்கட்டம் அநேகமாக மறக்கப்பட்டு விட்டது. எனினும் அக்கட்டம் 1836 முதல் 1852 வரை நீடித்தது; ஜெர்மன் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் குடியேறிய பொழுது அநேகமாக எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் இந்த இயக்கம் வளர்ச்சியடைந்தது. அது மட்டுமல்ல. இன்றுள்ள சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் சாராம்சத்தில் அக்காலத்திய ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின், அதுவே எல்லாக் காலத்துக்கும் முதல் சர்வதேசத் தொழிலாளர் இயக்கம், நேரடியான தொடர்ச்சியாகும்; சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் தலைமையான பாத்திரத்தை வகித்த பலரையும் அது உருவாக்கியது. கம்யூனிஸ்டுகள் சங்கம் 1847இல் தன்னுடைய பதாகையில் பொறித்துள்ள கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் தத்துவார்த்தக் கோட்பாடுகள்* ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மொத்த பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மிகவும் வலிமையான சர்வதேசப் பிணைப்பாக இன்று இருக்கின்றன.

அந்த இயக்கத்தின் முறையான வரலாற்றுக்கு பிரதானமாக ஒரே ஆதாரம்தான் இது வரை இருந்தது: கறுப்புப் புத்தகம் என்று சொல்லப்படுகின்ற வெர்மத் மற்றும் ஷ்டீபெர் எழுதிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்யூனிஸ்டுச் சதிகள், பெர்லின், இரண்டு தொகுதிகள், 1853 மற்றும்

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 189—249 பார்க்க.—ப-ர்.

1854. நம் காலத்தின் மிகவும் கேவலமான இரண்டு போலீஸ் போக்கிரிகளால் ஜோடிக்கப்பட்ட இந்தக் கொச்சையான தொகுப்பில் வலிந்து சொல்லப்படுகின்ற பொய்கள் நிறைந் திருக்கின்றன. அக்கால கட்டத்தைப் பற்றி கம்யூனிஸ்டு அல்லாத எல்லாப் படைப்புகளுக்கும் இந்தப் புத்தகம் இன்னும் முடிவான மூலமாக இருக்கிறது.

இங்கே நான் ஒரு உருவரையை மட்டுமே எழுத முடியும்; அதுவும் கூட சங்கத்தைப் பொறுத்தமட்டில்தான்; ...உண்மை உருவத்தைப் புரிந்து கொள்வதற்கு இன்றியமையாததை மட்டுமே. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் இளமைப் பருவத்தின் அந்தப் பொற்காலத்தின் வரலாற்றைப் பற்றி மார்க்சும் நானும் ஏராளமான விவரங்களைச் சேகரித் தோம்; அதை ஒழுங்குபடுத்துகின்ற வாய்ப்பு என்றாவது ஒரு சமயத்தில் எனக்குக் கிடைக்குமென்று நம்புகிறேன்.

* * *

1834இல் பாரிசில் ஜெர்மன் அகதிகள் நிறுவிய இரகசிய மான, ஜனநாயக-குடியரசுவாத ''நாடுகடத்தப்பட்டவர் கள்'' சங்கத்தின் மிகவும் முனைக்கோடியான, பிரதானமாக பாட்டாளி வர்க்கச் சக்திகள் 1836இல் அதிலிருந்து பிரிந்து சென்று புதிய, இரகசியமான ஸ்தாபனமாகிய நியாயவாதி கள் கழகத்தை அமைத்தார்கள். தாய்ச் சங்கத்தில் யாக்கப் வெனிடேயைப் போன்ற தூங்கு மூஞ்சி சக்திகள் மட்டுமே எஞ்சியபடியால் அச்சங்கம் வெகு சீக்கிரத்தில் முற்றிலும் தூங்கி விட்டது. 1840இல் போலீஸ்காரர்கள் ஜெர்மனியில் சில கிளைகளை மோப்பம்பிடித்த பொழுது அது தன்னுடைய முந்திய வடிவத்தின் நிழலாகக் கூட இருக்கவில்லை. ஆனால் புதிய கழகம் ஒப்புநோக்கில் வேகமாக வளர்ச்சியடைந்தது. தொடக்கத்தில் பாபுயிசத்தை[80] நினைவூட்டிய, அநேகமாக இந்தச் சமயத்தில் பாரிசில் உருவாகிக் கொண்டிருந்த பிரெஞ்சுத் தொழிலாளர் கம்யூனிசத்தின் ஜெர்மன் வெளிப் பகுதியாக இருந்தது; ''சமத்துவத்தின்'' அவசியமான விளைவு என்ற முறையில் பொருள்களின் பொதுவுடைமை

யைக் கோரியது. அக்காலத்திய பாரிஸ் இரகசியச் சங்கங்களின் நோக்கங்களே அதன் நோக்கங்களாக இருந்தன. இது பாதி பிரசாரக் கழகமாகவும் பாதி சதிகளைத் தயாரித்த கழகமாகவும் இருந்தது. எனினும் பாரிஸ் புரட்சிகர நடவடிக்கையின் மையமாக எப்பொழுதும் கருதப்பட்டது; ஜெர்மனியில் ஏதாவதொரு சமயத்தில் திடீர்த் தாக்குதலை நடத்துவதற்குத் தயாரிப்புகள் ஒருபோதும் கைவிடப்படவில்லை. ஆனால் பாரிஸ் தீர்மானகரமான போர்க்களமாக இருந்த பொழுது கழகம் உண்மையில் பிரெஞ்சு இரகசிய சங்கங்களின்—குறிப்பாக, பிளான்கியும் பார்பேசும் தலைமை தாங்கிய பருவக்காலங்களது சங்கத்துடன் (Société des saisons) நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ளப்பட்டது—ஜெர்மன் கிளை என்பதற்கு மேல் அதிகமாக இல்லை. பிரெஞ்சுக்காரர்கள் 1839 மே 12இல் நடவடிக்கையைத் தொடங்கினார்கள்; கழகத்தின் கிளைகள் அவர்களுடன் அணிவகுத்துச் சென்றன; ஆகவே பொதுவான தோல்விக்கு உட்பட்டன.[81]

கைது செய்யப்பட்ட ஜெர்மானியர்களில் கார்ல் ஷாப்பரும் ஹென்ரிஹ் பௌவரும் இருந்தார்கள். அவர்களை நெடுங்காலம் சிறையிலடைத்த பிறகு நாடு கடத்துவதுடன் லுயீ ஃபிலீப்பின் அரசாங்கம் திருப்தியடைந்தது. இருவரும் லண்டனுக்குச் சென்றார்கள். ஷாப்பர் நாஸ்ஸொவிலுள்ள வெயில்பர்கில் பிறந்தவர்; கிஸெனில் வன இயல் மாணவராக இருந்த பொழுது கியோர்கு பியூஹ்னர் அமைத்த சதிச் சங்கத்தில் 1832இல் சேர்ந்தார்; 1833 ஏப்ரல் 3ந் தேதியன்று பிராங்க்பர்ட் காவல் நிலையத்தைத் தாக்குவதில் பங்கெடுத்தார்;[82] அதன் பிறகு வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று 1834 பிப்ரவரியில் சவோய்யா மீது மாஜினியின் படையெடுப்பில் கலந்து கொண்டார்.[83] உறுதியான உடலும் துணிவும் சுறுசுறுப்பும் உடையவர், சுக வாழ்க்கைக்கும் உயிருக்கு ஆபத்தான காரியங்களில் ஈடுபடுவதற்கும் எப்பொழுதும் தயாராக இருப்பவர்; முப்பதுக்களில் குறிப்பிட்ட பாத்திரத்தை வகித்த முழுநேரப் புரட்சிக்காரர்களின் மாதிரியாக இருந்தார். வேகமாக சிந்திக்க முடியாதவர் என்ற போதி

லும் அவர் தத்துவத்தில் ஆழமான விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியாதவரல்ல என்பதை ''உணர்ச்சிப் பேச்சாளி''[84] என்பதிலிருந்து கம்யூனிஸ்டாக அவர் வளர்ச்சியடைந்தது நிரூபிக்கும். ஒரு முறை ஏற்றுக் கொண்டவற்றை அவர் மிகவும் உறுதியாகப் பற்றிக் கொள்வார். சில சமயங்களில் அவருடைய புரட்சிகர உணர்ச்சி அவருடைய புரிவை விஞ்சி நின்றதற்கு அதுவே துல்லியமான காரணம்; ஆனால் அதன் பிறகு அவர் தன்னுடைய தவறை எப்பொழுதும் உணர்வார், அதைப் பகிரங்கமாக ஒத்துக் கொள்வார். அவர் ஒரு முழுமையான மனிதர்; ஜெர்மனியில் தொழிலாளர் இயக்கத்தை நிறுவுவதில் அவருடைய பங்கு மறக்க முடியாதது.

பிராங்கோனியாவைச் சேர்ந்த ஹென்ரிஹ் பௌவர் காலணிகள் தயாரிப்பவர்; கிளர்ச்சியும் சுறுசுறுப்பும் நகைச்சுவையும் உள்ளவர்; மெலிவான உடல்வாகுள்ளவர், அதிகமான மதிநுட்பமும் உறுதியும் கொண்டிருந்தார்.

அவர் லண்டனுக்கு வந்தார். முன்னர் பாரிசில் அச்சுக் கோர்ப்பவராக இருந்த ஷாப்பர் இப்பொழுது லண்டனில் மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர் வேலை செய்து பிழைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் சேர்ந்து அறுந்து போன இழைகளைத் திரட்டி ஒன்றுசேர்க்கத் தொடங்கினார்கள்; அவர்கள் லண்டனில் நியாயவாதிகள் கழகத்தின் தலைமையகத்தை அமைத்தார்கள். கொலோனைச் சேர்ந்த இயோசிஃப் மோள் என்னும் கடிகாரம் பழுது பார்ப்பவர் லண்டனுக்கு வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டார் அல்லது அதற்கு முன்பே பாரிசில் அவர்களுடன் சேர்ந்திருக்க வேண்டும். அவர் நடுத்தர அளவான ஹெர்குலிஸ் என்று சொல்ல வேண்டும்—அரங்குக்குள் நுழைய முண்டி மோதுகின்ற நூற்றுக்கணக்கான எதிரிகளை ஷாப்பரும் அவரும் வாயிலில் நின்று கொண்டு வெற்றிகரமாகத் தடுத்த சம்பவங்கள்தான் எத்தனை! அவர் உறுதியிலும் சுறுசுறுப்பிலும் குறைந்தபட்சம் இரண்டு தோழர்களுக்கும் சமமானவர், அறிவில் அவர்களிருவரையும் காட்டிலும் உயர்வானவர். அவர் பிறவிராஜியவாதி என்பதைப் பல்வேறு கடமைகளை

மேற்கொண்டு அவர் செய்த எண்ணற்ற பிரயாணங்களின் வெற்றி நிரூபித்தது; அது மட்டுமன்றி, அவர் தத்துவார்த்த நுண்ணறிவும் உடையவர். நான் 1843இல் லண்டனில் அவர்கள் மூவருடனும் பழகினேன்; நான் சந்தித்த முதல் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தினர் அவர்களே. விவரங்களைப் பொறுத்தமட்டில் எங்களுடைய கருத்துக்கள் அந்தச் சமயத்தில் எவ்வளவு அதிகமாக விலகியிருந்தாலும்—ஏனென்றால் அவர்கள் குறுகிய நோக்குடைய சமத்துவவாத கம்யூனிஸ்டுகள்* என்றால் என்னிடம் அதே அளவு குறுகிய தத்துவ ஞான அகம்பாவம் இருந்தது—அப்பொழுது மனிதனாக வேண்டுமென்று இன்னும் துடித்துக் கொண்டிருந்த என் மீது இந்த மூன்று மெய்யான மனிதர்களும் ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

லண்டனில் அவர்கள் சங்கம் அமைக்கின்ற மற்றும் கூட்டங்கள் நடத்துகின்ற உரிமையைப் பெற்றிருந்தார்கள் (ஸ்விட்சர்லாந்தில் சற்றுக் குறைவான அளவில் இந்த உரிமை அவர்களுக்கு இருந்தது); அது பலனுள்ளதாக இருந்தது. மிக முந்திய காலமான 1840 பிப்ரவரி 7இல் ஜெர்மன் தொழிலாளர் கல்விச் சங்கம் சட்ட முறைப்படி நிறுவப்பட்டது (அது இன்னும் இருக்கிறது).[85] கழகத்துக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு இந்த சங்கம் பயன்பட்டது. எப்பொழுதும் போல சங்கத்தின் மிகவும் சுறுசுறுப்பான, மதிநுட்பமுள்ள உறுப்பினர்களாகக் கம்யூனிஸ்டுகள் இருந்தபடியால் சங்கத்தின் தலைமை முற்றிலும் கழகத்திடம் இருந்தது இயற்கையே. வெகு சீக்கிரத்தில் லண்டனில் கழகத்துக்குச் சில கிளைகள்—இன்னும் ''பிரிவுகள்'' என்று சொல்லப்படுபவை—ஏற்பட்டன. அதே செயல்முறை ஸ்விட்சர்லாந்திலும் மற்ற இடங்களிலும் பின்பற்றப்பட்டது. தொழிலாளர் சங்கங்களை அமைக்கக் கூடிய எல்லா இடங்

* சமத்துவவாதக் கம்யூனிசம் என்று கூறுகின்ற பொழுது முற்றிலும் அல்லது மிகவும் அதிகமான அளவுக்கு சமத்துவத்தைக் கோருதலை ஆதாரமாகக் கொண்ட கம்யூனிசத்தை மட்டுமே நான் குறிப்பிடுகிறேன். (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

களிலும் இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டது. சட்டம் அனுமதிக்காத இடங்களில் கூட்டிசைக் குழுக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் அவை போன்றவை அமைக்கப்பட்டன. தொடர்ச்சியான பயணங்களில் ஈடுபட்டிருந்த உறுப்பினர்கள் பெரும்பாலும் தொடர்புகளைத் தக்க வைத்தார்கள்; அவசியமேற்பட்டால் அவர்களே தூதர்களாகவும் செயல்பட்டார்கள். அரசாங்கம் ஆட்சேபத்துக்குரிய தொழிலாளியை—பத்தில் ஒன்பது உதாரணங்களில் அவர் கழகத்தின் உறுப்பினராக இருந்தார்—வெளியேற்றுவதன் மூலம், அவரை தூதராக மாற்றிய மதிநுட்பத்தின் மூலம் கழகம் இரண்டு அம்சங்களிலும் நல்ல உதவிகளைப் பெற்றது.

புத்தாக்கம் பெற்ற கழகம் கணிசமான அளவுக்கு வளர்ச்சியடைந்தது. குறிப்பாக, ஸ்விட்சர்லாந்தில் வைட்லிங், ஔகுஸ்ட் பெக்கெர் (மிகவும் உயர்ந்த திறமை உடையவர், ஆனால் ஜெர்மானியர்கள் பலரைப் போல உள்ளுறையான குணாம்சக் குறைகளினால் உருப்படாமற் போனவர்) மற்றும் இதரர்கள் அநேகமாக வைட்லிங்கின் கம்யூனிஸ்டு அமைப்பை ஏற்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ள வலிமையான ஸ்தாபனத்தை உருவாக்கினார்கள். இங்கு வைட்லிங்கின் கம்யூனிசத்தைக் குறை சொல்வது பொருத்தமல்ல. ஆனால் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் முதல் சுதந்திரமான, தத்துவார்த்த அசைவு என்ற முறையில் அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்தமட்டில் மார்க்ஸ்' 1844இல் பாரிஸ் *Vorwärts*இல் எழுதியவற்றை நான் இன்றும் ஒத்துக் கொள்கிறேன்: ''(ஜெர்மன்) முதலாளி வர்க்கம்—அதன் தத்துவஞானிகள் மற்றும் அறிவு மிக்க எழுத்தாளர்கள் உள்பட—முதலாளி வர்க்கத்தின் விடுதலையை, அரசியல் விடுதலை பற்றி வைட்லிங் எழுதிய ஒத்திசைவு மற்றும் சுதந்திரத்தின் உத்தரவாதங்கள் என்னும் நூலைப் போன்ற ஒன்றைச் சுட்டிக்காட்ட முடியுமா? ஜெர்மன் தொழிலாளர்களின் அளவிட முடியாத மற்றும் மேதாவிலாசம் நிறைந்த இம்முதல் முயற்சியை ஜெர்மன் அரசியல் இலக்கியத்தின் சுவாரசியமற்ற, பசப்புகின்ற, சாதாரண நிலையுடன் ஒப்பிட்டால், பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் பிரம்மாண்டமான குழந்தைக் காலணிகளை

முதலாளி வர்க்கத்தின் தேய்ந்து போன அரசியல் காலணிகளின் குள்ளமான அளவுகளுடன் ஒப்பிட்டால் இந்த சிண்டரெல்லா வலிமை மிக்க உடலைப் பெறும் என்று ஆருடம் கூற வேண்டும்.'' அந்த உருவம் இன்னும் முழு வளர்ச்சி அடையவில்லை என்றபோதிலும் இன்று இந்த வலிமைமிக்க உடலை நாம் பார்க்கிறோம். ஜெர்மனியிலும் ஏராளமான கிளைகள் இருந்தன. பல்வேறு காரணங்களினால் அவை நிரந்தரமான்வையாக இருக்கவில்லை. ஆனால் புதிதாகத் தோன்றிய கிளைகள் அழிந்து போன கிளைகளுக்குக் கூடுதலாகவே ஈடு செய்தன. போலீஸ்காரர்கள் இதற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான், 1846இன் கடைசியில் கழகத்தின் தடயங்களை பெர்லின் (மென்தெல்) மற்றும் மாக்டெபர்கில் (பேக்) கண்டுபிடித்தார்கள்; எனினும் அதை மேலும் தொடர்வதற்கு அவர்களால் இயலவில்லை.

1840இல் பாரிசில் இன்னும் வசித்துக் கொண்டிருந்த வைட்லிங் ஸ்விட்சர்லாந்துக்குப் புறப்படுவதற்கு முன்னர் சிதறியிருந்த சக்திகளை மறுபடியும் ஒன்றுசேர்த்தார்.

கழகத்தின் முக்கியமான சக்தியாகத் தையற்காரர்கள் இருந்தார்கள். ஜெர்மன் தையற்காரர்கள் எங்கும்: ஸ்விட்சர்லாந்தில், லண்டனில், பாரிசில் இருந்தார்கள். பாரிஸ் நகரத்தின் தையல் தொழிலில் ஜெர்மன் மொழி மிகவும் அதிகமாக உபயோகிக்கப்பட்டது; நார்வேயைச் சேர்ந்த ஒரு தையற்காரர், டுரோன்ஹைமிலிருந்து பாரிசுக்கு நேரடியாகக் கடல் வழியில் வந்தவர் ஒருவரை நான் 1846இல் சந்தித்தேன்; அங்கே வசித்த 18 மாதங்களில் அவர் அநேகமாக ஒரு பிரெஞ்சு மொழிச் சொல்லைக் கூடக் கற்றுக் கொள்ளவில்லை; ஆனால் ஜெர்மன் மொழியை மிகவும் நன்றாகக் கற்றிருந்தார். 1847இல் பாரிசின் இரண்டு குழுக்களில் ஒன்று பெரும்பான்மையும் தையற்காரர்களைக் கொண்டதாக இருந்தது, அடுத்தது மரப்பெட்டிகள் செய்பவர்களைக் கொண்டிருந்தது.

ஈர்ப்பு மையம் பாரிசிலிருந்து லண்டனுக்கு மாறிய பிறகு ஒரு புதிய அம்சம் முனைப்பாகத் தெரிந்தது: கழகம் ஒரு ஜெர்மன் அமைப்பாக இருந்தது மாறி சர்வதேசத் தன்மை

யைப் பெற்றது. தொழிலாளர்கள் சங்கத்தில் ஜெர்மானியர் களையும் ஸ்விட்சர்லாந்துக்காரர்களையும் தவிர வெளி நாட்டுக்காரர்களுடன் தொடர்புக்கு ஜெர்மன் மொழியை முக்கியமான சாதனமாகப் பயன்படுத்திய எல்லா தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களும்—குறிப்பாக, ஸ்காண்டிநே வியர்கள், டச்சுக்காரர்கள், ஹங்கேரியர்கள், செக் இனத்தவர்கள்; தெற்குப் பிரதேச ஸ்லாவிய இனத்தவர் கள் மற்றும் ருஷ்யர்களும் அல்சாஸ் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களும்—இருந்தார்கள். 1847இல் வாடிக்கை யாக வந்தவர்களில் இராணுவ உடையணிந்த பிரிட்டிஷ் எறிகுண்டு வீரரும் இருந்தார். இச்சங்கம் சீக்கிரத்தில் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கல்விச் சங்கம் என்னும் பெய ரைப் பெற்றது; அதன் உறுப்பினர் அட்டைகளில்''மனிதர் கள் எல்லோரும் சகோதரர்கள்'' என்னும் வாசகம் அநேக மாக இருபது மொழிகளில் சிற்சில தவறுகளுடன் அச்சிடப் பட்டிருந்தது. பகிரங்கமான சங்கத்தைப் போல இரகசிய மான கழகமும் விரைவில் அதிகமான சர்வதேசியத் தன் மையைப் பெற்றது; முதலில் குறுகிய அர்த்தத்தில்: செய் முறையில் பல தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் அதன் உறுப்பினர்களாக இருந்ததன் மூலம், தத்துவார்த்த முறை யில், எந்தப் புரட்சியும் வெற்றி பெற வேண்டுமென்றால் அது ஐரோப்பியப் புரட்சியாக இருந்தாக வேண்டும் என்னும் உணர்வைப் பெற்றதன் மூலம். இதற்கு மேல் இன்னும் வளர்ச்சி இல்லை என்றாலும் அதற்கு அடிப்படைகள் இருந்தன.

லண்டனிலிருந்த பிரெஞ்சு அகதிகள், 1839 மே 12இல் ஆயுதமேந்திய தோழர்களின் மூலம் பிரெஞ்சுப் புரட்சிக் காரர்களுடன் நெருக்கமான உறவுகள் வைத்துக் கொண்ட னர். அதிகத் தீவிரவாதப் போலிஷ்காரர்களுடன் அப்படியே உறவுகள் வைத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் அதிகார பூர்வமான போலிஷ் அகதிகள்—மாஜினியும்—கூட்டாளிகள் என்பதைக் காட்டிலும் எதிரிகளாக இருந்தனர் என்பது உண் மையே. சார்ட்டிஸ்டு இயக்கத்தின் பிரத்யேகமான ஆங் கிலத் தன்மையின் காரணமாக இங்கிலாந்தின் சார்ட்டிஸ்டு

கள் புரட்சிகரமானவர்கள் அல்ல என்று கருதப்பட்டார்கள். லண்டனைச் சேர்ந்த கழகத் தலைவர்கள் பிற்காலத்தில் தான் என் மூலம் அவர்களுடன் தொடர்பு கொண்டார்கள்.

வேறு வழிகளிலும் கூட சம்பவங்கள் கழகத்தின் தன்மையை மாற்றியிருந்தன. பாரிஸ் புரட்சியின் தாய் நகரம் என்று இன்னும்—அந்தச் சமயத்தில் முற்றிலும் சரியாகவே—கருதப்பட்ட போதிலும் பாரிஸ் சதிகாரர்களைச் சார்ந்திருக்கின்ற நிலை முடிந்து விட்டது. கழகத்தின் வளர்ச்சி அதன் சுய உணர்வை உயர்த்தியது. ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்திடம் இயக்கம் மேன்மேலும் அதிகமாக வேரூன்றி வடக்கு ஐரோப்பா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் புரட்சியின் பதாகை வீரர்களாக இருப்பது வரலாற்றுரீதியில் இந்த ஜெர்மன் தொழிலாளர்களுடைய கடமை என்பது உணரப்பட்டது. அக்காலத்திய பிரெஞ்சுத் தத்துவாசிரியர்களுக்குப் பக்கத்தில் துணிவுடன் அமர்த்தக் கூடிய கம்யூனிசத்தின் தத்துவாசிரியராக வைட்லிங் இருந்தார். முடிவில், மே 12இன் அனுபவம் அந்தச் சமயத்தில் திடீர்த்தாக்குதல்களுக்கான முயற்சிகளைச் செய்வதால் ஒரு பலனும் ஏற்படாது என்பதை எங்களுக்குக் கற்பித்திருந்தது. ஒருவர் ஒவ்வொரு சம்பவத்தையும் நெருங்கிக் கொண்டிருக்கின்ற புயலின் அறிகுறி என்று விளக்குவதை இன்னும் தொடர்ந்தார் என்றால், பழைய, பாதி சதிக்கூட்ட விதிகளை இன்னும் கட்டுக்குலையாமல் பாதுகாத்தார் என்றால், அது பிரதானமாகப் பழைய புரட்சிக்காரர்களின் பிடிவாதம் ஆகும்; முளைவிட்டுக் கொண்டிருந்த சரியான கருத்துக்களுடன் அதன் மோதல் ஏற்கெனவே தொடங்கி விட்டது.

எனினும் கழகத்தின் சமூகக் கொள்கை—அது தெளிவில்லாததாக இருந்தது—அன்றைய சமூக உறவுகளில் வேரூன்றிய ஒரு மாபெரும் குறையைக் கொண்டிருந்தது. கழகத்தின் உறுப்பினர்கள்—அவர்களைத் தொழிலாளர்கள் என்று கருதக் கூடுமானால்—அநேகமாக முற்றிலும் கைவினைஞர்களாகவே இருந்தார்கள். பெரிய நகரங்களில்கூட அவர்களைச் சுரண்டிய நபர் அநேகமாக சிறு எஜமானனாகத்தான் இருந்தார். பெரிய அளவில் தையல் தொழிலாளர்

களைச் சுரண்டுதல், அதாவது கைத்தொழிலான தையல் தொழிலை ஒரு பெரிய முதலாளியிடம் வேலை செய்கின்ற குடும்பத் தொழில்துறையாக மாற்றுதல், ஆயத்த உடைகள் என்று இப்பொழுது சொல்லப்படுகின்ற தொழில், அந்தச் சமயத்தில் லண்டனில்கூட அப்பொழுதுதான் தோன்றிக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில், இக்கைவினைஞர்களைச் சுரண்டியவர் ஒரு சிறு எஜமானனே; மறு பக்கத்தில், அவர்கள் எல்லோருமே முடிவில் தாங்களும் சிறு எஜமானன்களாக மாறக் கூடுமென்று தான் நம்பிக் கொண்டிருந்தார்கள். அதைத் தவிர அக்காலத்திய ஜெர்மன் கைவினைஞனிடம் பரம்பரையான ஏராளமான கைவினைச் சங்க எண்ணங்கள் இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தன. அவர்கள் இன்னும் முழுமையான பாட்டாளி வர்க்கத்தினர் அல்ல; குட்டி முதலாளி வர்க்கத்தின் ஒட்டுப்பகுதி மட்டுமே; அந்த ஒட்டுப்பகுதி நவீன பாட்டாளி வர்க்கமாக மாறிக் கொண்டிருந்தது; அது முதலாளி வர்க்கத்தை, அதாவது பெரிய மூலதனத்தை நேரடியாக எதிர்க்கின்ற நிலை இன்னும் ஏற்படவில்லை. எனவே இக்கைவினைஞர்கள் தம்முடைய எதிர்கால வளர்ச்சியை இயல்புணர்ச்சியுடன் முன்னறியக் கூடிய திறமையைக் கொண்டிருந்தார்கள் மற்றும் இன்னும் முழு உணர்வுடன் இல்லாவிட்டாலும் கூட பாட்டாளி வர்க்கத்தின் கட்சியாகத் தம்மை அமைத்துக் கொண்டார்கள் என்ற அளவில் அவர்கள் மாபெரும் கௌரவத்துக்கு உரியவர்களே. ஆனால் அன்றைய சமூகத்தை நுணுக்கமாக விமர்சனம் செய்கின்ற பொழுது, அதாவது பொருளாதார உண்மைகளை ஆராய்கின்ற பொழுது ஒவ்வொரு தருணத்திலும் அவர்களுடைய பழைய கைத்தொழிற் தப்பெண்ணங்கள் தடை மதில்களாக நின்றன என்பது தவிர்க்க முடியாததே. அரசியல் பொருளாதாரத்தை என்றாவது படித்த ஒரு நபர் கழகம் முழுவதிலும் அந்தச் சமயத்தில் இருந்திருப்பார் என்று நான் கருதவில்லை; ஆனால் அது முக்கியமல்ல: ''சமத்துவம்'', ''சகோதரத்துவம்'' மற்றும் ''நீதி'' எல்லா தத்துவார்த்தத் தடைகளையும் வெற்றி கொள்வதற்கு அச்சமயத்தில் உதவின.

இதற்கிடையில் இரண்டாவது, சாராம்சத்தில் வேறு

வகையான கம்யூனிசம் கழகத்துக்கும் வைட்லிங்குக்கும் பக்கத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. வரலாற்றை எழுதுவதில் இது வரை எவ்விதமான பாத்திரத்தையும் வகிக்காத அல்லது மிகவும் சொற்பமான பாத்திரத்தை மட்டுமே வகித்த பொருளாதார விவரங்கள்—குறைந்தபட்சம், நவீன உலகத்தில்—தீர்மானமான வரலாற்றுச் சக்தியாக இருக்கின்றன; அவை இன்றைய வர்க்க முரணியல்புகளின் தோற்றத்துக்கு அடிப்படையாக இருக்கின்றன; பெரிய அளவு தொழில்துறையின் காரணமாக இந்த வர்க்க முரணியல்புகள் முழு வளர்ச்சியடைந்திருக்கின்ற எல்லா நாடுகளிலும்—ஆகவே, குறிப்பாக, இங்கிலாந்தில்—அரசியல் கட்சிகளுக்கும் கட்சிப் போராட்டங்களுக்கும், ஆகவே எல்லா அரசியல் வரலாற்றுக்கும் அடிப்படையாக இருக்கின்றன என்பதை நான் மாஞ்செஸ்டரில் இருந்த பொழுது தெட்டத்தெளிவாகக் கண்டேன். மார்க்ஸ் இதே கருத்துக்கு வந்து விட்டது மட்டுமல்ல; அவர் ஏற்கெனவே *Deutsch-Französische Jahrbücher*யில் (1844)[86] அதைப் பொதுமைப்படுத்தி எழுதியிருந்தார். பொதுவாகக் கூறுகின்ற பொழுது, சிவில் சமூகத்தை அரசு தகவமைத்து ஒழுங்குபடுத்தவில்லை, ஆனால் சிவில் சமூகம் அரசைத் தகவமைத்து ஒழுங்குபடுத்துகிறது, ஆகவே கொள்கை மற்றும் அதன் வரலாற்றைப் பொருளாதார உறவுகள் மற்றும் அவற்றின் வளர்ச்சியின் மூலம் விளக்க வேண்டும், அதன் மறுதலை அல்ல என்று அவர் எழுதியிருந்தார். 1844ஆம் ஆண்டின் கோடைகாலத்தில் நான் பாரிசில் மார்க்சைச் சந்தித்த பொழுது, எல்லா தத்துவத் துறைகளிலும் நாங்கள் முழுமையாக உடன்படுதலைக் கண்டோம்; அன்றிலிருந்து நாங்கள் கூட்டாக வேலை செய்யத் தொடங்கினோம். 1845ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் நாங்கள் பிரஸ்ஸல்சில் மறுபடியும் சந்தித்த பொழுது, மார்க்ஸ் மேற்கூறிய அடிப்படைகளிலிருந்து வரலாற்றுப் பொருள்முதல்வாதத் தத்துவத்தை அதன் பிரதான கூறுகளில் ஏற்கெனவே முழுமையாக வளர்த்திருந்தார். நாங்கள் இந்தப் புதிய கருத்தோட்டங்களை மிகவும் பல்வேறான

திசைகளில் நுணுக்கமாக விரித்துரைக்கின்ற பணியில் ஈடுபட்டோம்.

வரலாற்று விஞ்ஞானத்தைப் புரட்சிகரமாக்கிய இந்தக் கண்டுபிடிப்பு சாராம்சத்தில் மார்க்சின் பணியே என்பதை நீங்கள் அறிவீர்கள். இக்கண்டுபிடிப்பு—அதில் என்னுடைய பங்கு மிகவும் அற்பமானது என்றுதான் நான் கூற முடியும்—அக்காலத்திய தொழிலாளர் இயக்கத்துக்கு உடனடியான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் ஜெர்மானியர்கள் மத்தியில் கம்யூனிசம், ஆங்கிலேயர்கள் மத்தியில் சார்ட்டிசம் ஆகியவை தற்செயலானவையாகத் தோன்றின; ஆனால் இனிமேல் அப்படித் தோன்றவில்லை. இந்த இயக்கங்கள் நவீன ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின், பாட்டாளி வர்க்கத்தின் இயக்கங்களாக, ஆளும் வர்க்கமாகிய முதலாளி வர்க்கத்துக்கு எதிராக வரலாற்றுரீதியில் அவசியமான போராட்டத்தின் ஏறக்குறைய வளர்ச்சியடைந்த வடிவங்களாக இப்பொழுது வெளித்தோன்றின. அவை வர்க்கப் போராட்டத்தின் வடிவங்கள், ஆனால் அதற்கு முந்திய எல்லா வர்க்கப் போராட்டங்களிலிருந்தும் ஒரு விஷயத்தில், அதாவது இன்றைய ஒடுக்கப்பட்ட வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கம் மொத்த சமூகத்தையும் வர்க்கங்கள் என்ற பிரிவினையிலிருந்து, ஆகவே வர்க்கப் போராட்டங்களிலிருந்து ஒரே சமயத்தில் விடுவிக்காமல் தன்னுடைய விடுதலையை நிறைவேற்றிக் கொள்ள இயலாது என்பதில் வேறுபட்டிருந்தன. கம்யூனிசம் என்பது இயன்ற அளவுக்கு முழுமையான இலட்சிய சமூகத்தைக் கற்பனையின் மூலம் புனைந்தியற்றுதலை இனியும் குறிக்கவில்லை; அதற்கு மாறாக, பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தின் தன்மை, நிலைமைகள் மற்றும் அதன் விளைவாகிய பொது நோக்கங்களை ஊடுருவி அறிதலைக் குறித்தது.

விஞ்ஞான ஆராய்ச்சியின் புதிய முடிவுகளை ''அறிஞர்கள்'' உலகத்துக்கு மட்டுமே பயன்படுகின்ற மாபெரும் புத்தகங்களாக எழுதுகின்ற எண்ணம் எங்களுக்குச் சிறிதுமில்லை. அதற்கு முற்றிலும் எதிராக. நாங்கள் இருவரும்

ஏற்கெனவே அரசியல் இயக்கத்தில் ஆழமாக ஈடுபட்டிருந்தோம்; ஆராய்ச்சி உலகத்தில், குறிப்பாக மேற்கு ஜெர்மனியில் எங்களுக்கு ஆதரவாளர்கள் ஓரளவுக்கு இருந்தார்கள்; பாட்டாளி வர்க்க அமைப்புகளுடன் எங்களுக்கு அதிகமான தொடர்பு இருந்தது. நம்முடைய கண்ணோட்டத்துக்கு விஞ்ஞான அடிப்படையைக் கொடுப்பது எங்களுடைய கடமை; ஆனால் ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம், முதலில் ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் நம்முடைய கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்வது எங்களுக்கு அதே அளவுக்கு முக்கியமாக இருந்தது. எங்களுடைய அறிவில் தெளிவு ஏற்பட்டவுடன் நாங்கள் இக்கடமையை நிறைவேற்றத் தொடங்கினோம். நாங்கள் பிரஸ்ஸல்சில் ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தை[87] நிறுவினோம், *Deutsche-Brüsseler-Zeitung*ஐ வெளியிடுகின்ற பொறுப்பை எடுத்துக் கொண்டோம்; அது பிப்ரவரிப் புரட்சி வரை எங்களுடைய இதழாக இருந்தது. சார்ட்டிஸ்டு இயக்கத்தின் மத்தியப் பத்திரிகையான *The Northern Star*[88] (அதில் நான் கட்டுரைகள் எழுதினேன்) ஆசிரியரான ஜூலியன் ஹார்னி மூலம் ஆங்கில சார்ட்டிஸ்டுகளின் புரட்சிகரப் பகுதியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டோம். நாங்கள் பிரஸ்ஸல்சின் ஜனநாயகவாதிகளுடன் (மார்க்ஸ் ஜனநாயகக் கழகத்தின்[89] துணைத் தலைவரானார்) மற்றும் *Réforme*[90] பத்திரிகையைச் சேர்ந்த பிரெஞ்சு சமூக-ஜனநாயகவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்தோம். அந்தப் பத்திரிகையில் இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் நடைபெறும் இயக்கங்களைப் பற்றிய செய்திகளை நான் எழுதினேன். சுருக்கமாகக் கூறுவதென்றால், தீவிரவாத, பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்கள் மற்றும் பத்திரிகைகளுடன் நம்முடைய தொடர்புகள் திருப்திகரமாக இருந்தன.

நியாயவாதிகள் கழகத்துடன் நம்முடைய உறவுகள் பின்வருமாறு: அக்கழகம் இருப்பதைப் பற்றி எங்களுக்கு ஏற்கெனவே தெரியும்; நான் அதில் சேர வேண்டுமென்று ஷாப்பர் 1843இல் என்னிடம் கூறினார்; அப்பொழுது நான் இயற்கையாகவே சேர மறுத்தேன். ஆனால் நாங்கள் லண்டன்காரர்களுடன் தொடர்ச்சியான கடிதத் தொடர்பு வைத்

திருந்தது மட்டுமன்றி அக்கால பாரிஸ் பிரிவுகளின் தலைவராக இருந்த டாக்டர் எவெர்பெக்குடன் இன்னும் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தோம். கழகத்தின் உள்விவகாரங்களுக்குள் நுழையாமலேயே அங்கே நடைபெற்ற முக்கியமான ஒவ்வொரு சம்பவத்தையும் நாங்கள் அறிந்தோம். மறு பக்கத்தில், கழகத்தின் மிகவும் முக்கியமான உறுப்பினர்களுடைய தத்துவார்த்தக் கருத்துக்களின் மீது நாங்கள் உரையாடல், கடிதங்கள் மற்றும் பத்திரிகைகள் மூலமாகத் தாக்கம் செலுத்தினோம். இதற்கென்று நாங்கள் பல்விதமான சுற்றறிக்கைகளின் நகலச்சுப் படிகளையும் பயன்படுத்தினோம்; உருவாக்கக் கட்டத்திலிருந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் உள்விவகாரங்களைப் பற்றிய பிரச்சினை எழுகின்ற குறிப்பிட்ட தருணங்களில் இப்படிகளை உலகம் முழுவதிலும் இருக்கின்ற நண்பர்களுக்கும் நிருபர்களுக்கும் அனுப்பினோம். சில சமயங்களில் இச்சுற்றறிக்கைகளில் கழகத்தைப் பற்றியும் எழுத வேண்டியிருந்தது. உதாரணமாக, வெஸ்ட்ஃபாலியாவைச் சேர்ந்த ஹெர்மன் கிரிகெ என்னும் இளம் மாணவர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கே தன்னைக் கழகத்தின் தூதர் என்று சொல்லிக் கொண்டார்; தென் அமெரிக்காவைத் தலைகீழாக மாற்றுவதற்குக் கழகத்தைப் பயன்படுத்துகின்ற நோக்கத்துடன் கிறுக்கனான ஹாரோ ஹாரிங்குடன் கூட்டுச் சேர்ந்தார்; அவர் ஒரு பத்திரிகையை* ஆரம்பித்து கழகத்தின் பெயரில் ‘‘காதலை’’ அடிப்படையாகக் கொண்ட, காதல் நிரம்பி வழிகின்ற, காதலைக் கனவு காண்கின்ற மிகையான கம்யூனிசத்தைப் போதித்தார். இதற்கு எதிராக நாங்கள் அனுப்பிய சுற்றறிக்கைக்குப்** பலன் இருந்தது: கிரிகெ கழகத்தின் அரங்கத்திலிருந்து மறைந்தார்.

பின்னர் வைட்லிங் பிரஸ்ஸல்சுக்கு வந்தார். ஆனால் அவர் பழைய, வெகுளித்தனமான, தன்னுடைய சொந்தத் திறமைகளைக் கண்டு தானே வியந்து கம்யூனிஸ்டு சமூகம்

* — *Der Volks-Tribun.*[91]—ப-ர்.

** கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், கிரிகெக்கு எதிரான சுற்றறிக்கையைப் பார்க்க.—ப-ர்.

என்பது எப்படியிருக்கும் என்பதைத் தன் அறிவில் தெளிவு ஏற்படுத்த முயற்சி செய்த இளைஞர், ஊர் ஊராகச் செல் லும் தையற்காரர் அல்ல. அவர் இப்பொழுது பிரபலமான வர், அவருடைய உயர்வின் காரணமாகப் பொறாமைக் காரர்களால் ஒடுக்கப்பட்டவர்; அவர் எல்லா இடங்களிலும் போட்டியாளர்களை, ரகசிய எதிரிகளை, பொறிகளை மோப் பம் பிடித்தார், ஒவ்வொரு நாடாக வெளியேற்றப்பட்ட தீர்க்கதரிசி; பூமியில் சொர்க்கத்தை ஏற்படுத்துவதற்குரிய மருந்துக் குறிப்பை முன்பே தயாரித்துப் பையிலே வைத் திருப்பவர், ஒவ்வொருவரும் அதைத் தன்னிடமிருந்து திருடு வதற்கு முயற்சி செய்கிறார்கள் என்னும் உறுதியான கருத்தைக் கொண்டிருப்பவர். அவர் ஏற்கெனவே லண்டனில் கழகத்தின் உறுப்பினர்களுடன் முறித்துக் கொண்டார்; பிரஸ்ஸல்சில் மார்க்சும் அவருடைய மனைவியும் அநேகமாக மனித சக்திக்கு மீறிய பொறுமையுடன் அவரை வரவேற்றார் கள்; அங்கும் அவரால் எவருடனும் ஒத்துப்போக முடிய வில்லை. ஆகவே அவர் தன்னுடைய தீர்க்கதரிசிப் பாத்தி ரத்தை சோதிப்பதற்கு சீக்கிரமாக அமெரிக்காவுக்குச் சென்றார்.

கழகத்தில், குறிப்பாக லண்டனிலிருந்த அதன் தலை வர்கள் மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருந்த அமைதி யான புரட்சிக்கு இந்த சந்தர்ப்பங்கள் அனைத்தும் பங் களித்தன. கம்யூனிசத்தைப் பற்றிய முந்திய கருத்தமைப்பு களின்—பிரான்சின் எளிமையான, சமத்துவவாதக் கம்யூ னிசம், வைட்லிங்கின் கம்யூனிசம் ஆகிய இரண்டின்—குறை அவர்களுக்கு மேன்மேலும் தெளிவாகப் புரிந்தது. வைட் லிங் கற்பித்தபடி பின்னோக்கிச் சென்று பூர்விகமான கிறிஸ் துவ சமயத்தில் கம்யூனிசத்தைக் காண்பது—ஏழைப் பாவி களின் சுவிசேஷம் என்னும் அவருடைய நூலில் சில பகுதி கள் மேதாவிலாசம் நிறைந்தவை என்றாலும்—ஸ்விட்சர் லாந்தில் இயக்கத்தைப் பெருமளவில் முதலில் அல்பிரெஹ்ட் போன்ற முட்டாள்களிடம், பிறகு கூல்மனைப் போன்று பண ஆசை பிடித்த போலித் தீர்க்கதரிசிகளிடம் ஒப்படைத் திருந்தது. சில இலக்கிய எழுத்தாளர்கள் வர்ணித்த, கிரி

கெயும் அக்காலகட்ட இலக்கியப் படிப்பும் அறிமுகம் செய்த ''மெய்யான சோஷலிசம்''—அது பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கருத்துக்களைக் கொச்சையான ஹெகலியவாத-ஜெர்மன் நடையில் மாற்றித் தருவதாகவும் உணர்ச்சிப் பசப்பான காதல் மயக்கமாகவும் இருந்தது (கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் ஜெர்மன் அல்லது ''மெய்யான'' சோஷலிசத்தைப் பற்றிய பகுதியைப் பார்க்க*)—கழகத்தின் முதிய புரட்சிக்காரர்களுக்கு சீக்கிரத்தில் அருவருப்பைக் கொடுத்தது; அவர்களுடைய கொஞ்சலான பேச்சின் மதிமயக்கம் அதற்குக் காரணமாக இருக்கலாம். ஒவ்வாதவையாகி விட்ட முந்திய தத்துவக் கருத்துக்கள் மற்றும் அவற்றிலிருந்து செய்முறையில் தோன்றிய மனமாறாட்டங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது மார்க்சும் நானும் கூறிய புதிய தத்துவம் சரியானது என்னும் கருத்து லண்டனில் மேன்மேலும் அதிகமாக உணரப்பட்டது. நாம் முன்பு குறிப்பிட்டவர்களைக் காட்டிலும் தத்துவார்த்த அறிவில் கணிசமான உயர்வுடைய இரண்டு நபர்கள்—ஹெயல்பிரானைச் சேர்ந்த சிற்றுருவ ஓவியர் கார்ல் ப்ஃபென்டரும் துரிஞ்சியாவைச் சேர்ந்த தையற்காரர் கியோர்கு எக்காரியுசும்**—இப்பொழுது லண்டன் தலைவர்கள் மத்தியில் இருந்தது இத்தெளிவை நிச்சயமாக ஊக்குவித்திருக்கும்.

---

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 234—239 பார்க்க.—ப-ர்.

** ப்ஃபென்டர் சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் லண்டனில் மரணமடைந்தார். அவர் அருமையான நுண்ணறிவுடையவர்; அவர் பேச்சில் நகைச்சுவை, கிண்டல், இயக்கவியல் கலந்திருக்கும். எக்காரியுஸ் அதன் பிறகு பல ஆண்டுகள் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுவின் பொதுச் செயலாளராக இருந்தார் என்பது நாம் அறிந்ததே. அப்பொதுக் குழுவில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தைச் சேர்ந்த பின்வரும் முந்திய உறுப்பினர்களும் இருந்தார்கள்: எக்காரியுஸ், ப்ஃபென்டர், லெஸ்னர், லோஹ்னர், மார்க்ஸ் மற்றும் நான். பிற்காலத்தில் எக்காரியுஸ் இங்கிலாந்தின் தொழிற்சங்க இயக்கத்துக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டார். (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

மோள் 1847ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் மார்க்சை பிரஸ்ஸல்சில் சந்தித்த பிறகு உடனடியாக என்னை பாரிசில் சந்தித்து எங்களைக் கழகத்தில் சேருமாறு தம்முடைய தோழர்களின் சார்பில் மறுபடியும் கேட்டுக்கொண்டார். எங்களுடைய அணுகுமுறை பொதுவில் சரியானது என்று அவர்கள் நம்புகின்ற அதே மாதிரி கழகத்தைப் பழைய சதிக்கூட்ட மரபுகள் மற்றும் முறைகளிலிருந்து விடுவிப்பது அவசியம் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். நாங்கள் சேருவதாக இருந்தால் கழகத்தின் காங்கிரசில் ஓர் அறிக்கையின் மூலம் எங்களுடைய விமர்சன கம்யூனிசத்தை விளக்குகின்ற வாய்ப்பு அளிக்கப்படும், அந்த அறிக்கை பின்னர் கழகத்தின் அறிக்கையாக வெளியிடப்படும்; கழகத்தின் காலாவதியான அமைப்புக்குப் பதிலாக புதிய காலத்துக்கும் நோக்கங்களுக்கும் பொருத்தமானவற்றை அமுலாக்குவதில் எங்களுடைய பங்களிப்பைச் செய்ய முடியும்.

ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் குறைந்த பட்சம் பிரசாரம் செய்வதற்கு மட்டுமாவது ஒரு ஸ்தாபனம் அவசியமே, இந்த ஸ்தாபனம் ஸ்தல அளவில் மட்டுமே இருக்காது என்ற அளவில் அது ஜெர்மனிக்கு வெளியே கூட இரகசியமான ஸ்தாபனமாக மட்டுமே இருக்க முடியும் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை; இப்பொழுது கழகத்தின் வடிவத்தில் துல்லியமாக அப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனம் ஏற்கெனவே இருக்கிறது. நாங்கள் இக்கழகத்தில் முன்னர் ஆட்சேபித்தவற்றைக் கழகத்தின் பிரதிநிதிகளே இப்பொழுது தவறு என்று கைவிடுவதற்கு முன்வருகிறார்கள். அந்த ஸ்தாபனத்தைத் திருத்தியமைக்கின்ற வேலையில் பங்கெடுப்பதற்கு எங்களை இப்பொழுது அழைக்கவும் செய்கிறார்கள். இதை நிராகரிப்பதா? நிச்சயமாகக் கூடாது. ஆகவே நாங்கள் கழகத்தில் சேர்ந்தோம். மார்க்ஸ் பிரஸ்ஸல்சில் எங்களுடைய நெருங்கிய நண்பர்கள் மத்தியில் கழகத்தின் கிளையை நிறுவினார்; நான் மூன்று பாரிஸ் கிளைகளின் கூட்டங்களில் கலந்து கொண்டேன்.

கழகத்தின் முதல் காங்கிரஸ் 1847ஆம் ஆண்டின் கோடைகாலத்தில் லண்டனில் நடைபெற்றது; இக்காங்கிர

சில் வி. வோல்ஃப் பிரஸ்ஸல்ஸ் கிளையையும் நான் பாரிஸ் கிளைகளையும் பிரதிநிதித்துவம் செய்தோம். இக்காங்கிரசில் முதலாவதாக கழகம் திருத்தியமைக்கப்பட்டது. பழைய சதிக்கூட்ட காலத்தைச் சேர்ந்த பழைய, சமயவழிப் பெயர்களில் எஞ்சியிருந்தவை இப்பொழுது ஒழிக்கப்பட்டன; கழகம் இப்பொழுது கிளைகள், வட்டங்கள், தலைமை வட்டங்கள், மத்திய கமிட்டி மற்றும் காங்கிரசைக் கொண்டிருந்தது; அதற்குக் ''கம்யூனிஸ்டுகள் சங்கம்'' என்று பெயரிடப்பட்டது. ''முதலாளி வர்க்கத்தை ஒழித்தல், பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுதல், வர்க்கப் பகைமையை அடிப்படையாகக் கொண்ட பழைய, முதலாளித்துவ சமூகத்தை ஒழித்து வர்க்கங்கள் இல்லாத, தனியுடைமை இல்லாத புதிய சமூகத்தை அமைத்தல் கழகத்தின் நோக்கம்''— என்று முதல் ஷரத்து வலியுறுத்தியது. ஸ்தாபனம் முற்றிலும் ஜனநாயகத் தன்மையைக் கொண்டிருந்தது; கமிட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் எக்காலத்திலும் ரத்துச் செய்யப்படக் கூடியவையாக இருந்தன; சதிவேலைகள் மீது மிகுவிருப்பம் கொண்ட—அதற்கு சர்வாதிகாரம் அவசியம்—நடவடிக்கைகளை இது மட்டுமே தடுத்தது; கழகம்—குறைந்தபட்சம் சமாதான காலத்துக்காவது—முற்றிலும் பிரசார ஸ்தாபனமாக மாற்றப்பட்டது. இப்புதிய விதிகள் கிளைகளில் விவாதிக்கப்படுகின்ற ஜனநாயக நடைமுறை இப்பொழுது பின்பற்றப்பட்டது; பிறகு அவை இரண்டாவது காங்கிரசில் மறுபடியும் விவாதிக்கப்பட்டு முடிவாக 1847இல் டிசம்பர் 8ந் தேதியன்று நிறைவேற்றப்பட்டன. வெர்மத் மற்றும் ஷ்டீபெர் எழுதிய நூலில் அவை பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன (பாகம் I, பக்கம் 239, பிற்சேர்க்கை X).

அதே ஆண்டில் நவம்பர் மாதத்தின் இறுதிக்கும் டிசம்பர் மாதத்தின் ஆரம்பத்துக்கும் இடையில் இரண்டாவது காங்கிரஸ் நடைபெற்றது. குறைந்தபட்சம் பத்து நாட்கள் நடைபெற்ற காங்கிரசில் மார்க்சும் கலந்து கொண்டார்; அவர் புதிய தத்துவத்தை சற்று நீண்ட விவாதத்தின் போது உறுதிப்படுத்தினார். எல்லா முரண்பாடுகளும் சந்தேகங்

களும் முடிவாகத் தீர்க்கப்பட்டன; புதிய அடிப்படைக் கோட்பாடுகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன. அறிக்கையைத் தயாரிக்கின்ற பொறுப்பு மார்க்சுக்கும் எனக்கும் அளிக்கப்பட்டது. அதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு அப்பணி முடிவடைந்தது. பிப்ரவரிப் புரட்சிக்குச் சில வாரங்களுக்கு முன்பாக அறிக்கை * பிரசுரிப்பதற்காக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பிறகு அறிக்கை உலகம் முழுவதிலும் பரவி விட்டது, அநேகமாக எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது; அது இன்று கூட எண்ணற்ற நாடுகளில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிகாட்டியாக இருக்கிறது. ''மனிதர்கள் எல்லோரும் சகோதரர்கள்'' என்னும் கழகத்தின் பழைய இலட்சிய வாசகத்துக்குப் பதிலாக ''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!'' என்னும் புதிய போர்முழக்கம் இடம் பெற்றது. இது போராட்டத்தின் சர்வதேசத் தன்மையை பகிரங்கமாகப் பிரகடனம் செய்தது. இது 17 ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் போர்முழக்கமாக உலகம் முழுவதிலும் ஒலித்து எதிரொலித்தது. இன்று எல்லா நாடுகளையும் சேர்ந்த போர்க்குண மிக்க பாட்டாளி வர்க்கம் அதைத் தன் பதாகையில் பொறித்திருக்கிறது.

பிப்ரவரிப் புரட்சி வெடித்தது. இது வரை செயல்பட்டு வந்த லண்டன் மத்திய கமிட்டி உடனே தன்னுடைய அதிகாரத்தை பிரஸ்ஸல்சின் தலைமை வட்டத்துக்கு மாற்றியது. ஆனால் இந்த முடிவைப் பற்றிய செய்தி பிரஸ்ஸல்சுக்கு வந்த பொழுது அங்கே ஏற்கெனவே உண்மையாக முற்றுகை நிலை நிலவியது, குறிப்பாக ஜெர்மானியர்கள் எங்குமே கூட முடியாத நிலைமை இருந்தது. நாங்கள் எல்லோரும் பாரிசுக்குப் புறப்படுகின்ற கட்டத்திலே இருந்தோம். ஆகவே புதிய மத்திய கமிட்டி தன்னைக் கலைப்பதென முடிவு செய்தது. இது எல்லா அதிகாரத்தையும் மார்க்சிடம் ஒப்படைத்தது, பாரிசில் புதிய மத்திய கமிட்டியை

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 189—249 பார்க்க.—ப-ர்.

உடனடியாக அமைப்பதற்கு அவருக்கு அதிகாரமளித்தது. இந்த முடிவெடுத்த ஐந்து நபர்கள் அநேகமாகப் பிரிவதற்குள் (மார்ச் 3, 1848ல்) போலீஸ்காரர்கள் மார்க்சின் வீட்டிற்குள் பலாத்காரமாக நுழைந்து அவரைக் கைது செய்தார்கள். மறு நாள் அவரைக் கட்டாயப்படுத்தி பிரான்சுக்கு அனுப்பினார்கள் (அங்கே போக வேண்டுமென்றுதான் அவர் விரும்பினார்).

விரைவில் நாங்கள் எல்லோரும் பாரிசில் மீண்டும் ஒன்று கூடினோம். அங்கே பின்வரும் ஆவணம் தயாரிக்கப்பட்டது. புதிய மத்திய கமிட்டியின் உறுப்பினர்கள் அதில் கையொப்பமிட்டார்கள். ஆவணம் ஜெர்மனி முழுவதிலும் வெளியிடப்பட்டது. இன்றும் கூட பலர் அதிலிருந்து ஏதாவதொன்றைக் கற்றுக் கொள்வது இன்னும் சாத்தியமே:

## ஜெர்மனியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் கோரிக்கைகள்[92]

1. ஜெர்மனி முழுவதும் ஐக்கிய, பிரிக்கப்பட இயலாத குடியரசென்று அறிவிக்கப்பட வேண்டும்.

3. ஜெர்மன் மக்களுடைய நாடாளுமன்றத்தில் தொழிலாளர்களும் இடம் பெற முடியும் என்ற முறையில் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஊதியம் அளிக்க வேண்டும்.

4. மக்கள் எல்லோருக்கும் ஆயுதம் வழங்க வேண்டும்.

7. அரசர்களின் நிலங்கள், பண்ணைகள் மற்றும் இதர நிலப்பிரபுத்துவப் பண்ணைகள், எல்லா சுரங்கங்களும், கனிகளும், இதரவை அரசு உடைமையாக மாற்றப்பட வேண்டும். இந்தப் பண்ணைகளில் சமூகத்தில் அனைவருடைய நன்மைக்காக மிகவும் நவீன விஞ்ஞான முறைகளை உபயோகித்து பெரிய அளவில் விவசாயம் செய்யப்பட வேண்டும்.

8. கடன்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்ற விவசாய நிலங்கள் அரசு உடைமை என்று அறிவிக்கப்பட வேண்டும்; அத்தகைய ஒத்திகளின் வட்டியை விவசாயிகள் அரசுக்குக் கட்ட வேண்டும்.

*9. குத்தகை விவசாயம் நிலவுகின்ற மாவட்டங்களில் நிலக் குத்தகை அல்லது வாடகை அரசுக்கு வரியாகக் கட்டப் பட வேண்டும்.*

*11. ரயில்பாதைகள், நீர்வழிப் போக்குவரத்து, நீராவிக் கப்பல்கள், சாலைகள், தபால் துறை, இதர எல்லா போக்கு வரத்து சாதனங்களையும் அரசு மேற்கொள்ள வேண்டும். அவை அரசுடைமை ஆக்கப்பட வேண்டும்; உடைமை இல்லாத வர்க்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.*

*14. பரம்பரைச் சொத்துரிமை வரையறுக்கப்பட வேண் டும்.*

*15. செங்குத்தான படிவரிசையைக் கொண்ட ஏறுமுக வரிவிதிப்பை அமுலாக்குதல் மற்றும் நுகர்வுப் பொருள்கள் மீது வரிவிதிப்பை ஒழித்தல்.*

*16. தேசியப் பட்டறைகள் நிறுவப்பட வேண்டும். அரசு தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்க்கைக்கு உத்தர வாதமும் வேலை செய்ய இயலாதவர்களுக்கு உதவியும் அளிக்க வேண்டும்.*

*17. இலவச ஆரம்பப் பொதுக் கல்வி.*

*மேற்கூறிய நடவடிக்கைகளை நிறைவேற்ற இயன்ற அளவுக்கு எல்லாச் சுறுசுறுப்புடனும் வேலை செய்வது ஜெர் மன் பாட்டாளி வர்க்கம், குட்டிமுதலாளி வர்க்கம் மற்றும் சிறு விவசாய வர்க்கத்துக்கு நன்மையளிக்கும். ஏனென்றால் இவை நிறைவேறுகின்ற பொழுது மட்டுமே ஜெர்மனி யிலுள்ள லட்சக்கணக்கான மக்கள்—அவர்கள் இது வரை யிலும் சிறுபான்மையினரால் சுரண்டப்பட்டிருக்கிறார்கள், அவர்களை இன்னும் சுரண்டுவதற்கு முயற்சிகள் செய்யப் படும்—எல்லா செல்வத்தின் உற்பத்தியாளர்கள் என்ற முறையில் தங்களுடைய உரிமைகளையும் அதிகாரத்தையும் பெறுவார்கள்.*

கமிட்டி:
**கார்ல் மார்க்ஸ், கார்ல் ஷாப்பர், ஹெ. பௌவர், பி. எங்கெல்ஸ், இ. மோள், வி. வோல்ஃப்**

அந்த சமயத்தில் புரட்சிகர இராணுவத்தை அமைக்கின்ற மயக்கம் பாரிசில் நிலவியது. ஸ்பானிஷ்காரர்கள், இத்தாலியர்கள், பெல்ஜியர்கள், டச்சுக்காரர்கள், போலிஷ்காரர்கள் மற்றும் ஜெர்மானியர்கள் தங்கள் தாய்நாடுகளை விடுதலை செய்வதற்குப் படைகளாகத் திரட்டப்பட்டார்கள். ஹெர்வெக், போர்ன்ஸ்டெட், பியோர்ன்ஷ்டைன் ஜெர்மன் படைக்குத் தலைமை தாங்கினார்கள். புரட்சிக்குப் பிறகு வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் உடனடியாக வேலைகளை இழந்தது மட்டுமன்றி பொது மக்களால் துன்புறுத்தப்பட்டபடியால் இப்படைகளில் மிகவும் அதிகமானவர்கள் சேர்ந்தார்கள். புதிய அரசாங்கம் வெளிநாட்டுத் தொழிலாளர்களை ஒழிப்பதற்கு இது தக்க வழி என்று கருதியபடியால் அவர்களுக்கு l'étape du soldat, அதாவது போகும் வழியில் தங்குமிடமும் எல்லையை அடைகின்ற வரை நாளொன்றுக்கு ஐம்பது சென்டிம்கள் பயணப்படியும் அளித்தது; அவர்கள் எல்லையை அடைந்த பிறகு சுலபமாகக் கண்ணீர் வடிக்கக் கூடியவரும் நாவன்மைமிக்க பேச்சாளருமான வெளிநாட்டு அமைச்சர் லமர்ட்டீன் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களிடம் அவர்களை வஞ்சகமாகக் காட்டிக் கொடுப்பதற்குரிய வழியை வேகமாகக் கண்டு பிடித்தார்.

புரட்சியுடன் இப்படி விளையாடுவதை நாங்கள் மிகவும் தீர்மானகரமான முறையில் எதிர்த்தோம். ஜெர்மனியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கொந்தளிப்புக்கு நடுவில் வெளியேயிருந்து பலாத்காரமாகப் புரட்சியை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டிலிருந்து படையெடுப்பது ஜெர்மனியில் புரட்சியை அரித்தழிப்பதை, அரசாங்கங்களை வலுப்படுத்தி புரட்சிகரப் படைகளை ஆயுதமின்றி—லமர்ட்டீன் அதற்கு உத்தரவாதமளித்திருந்தார்—ஜெர்மன் துருப்புகளிடம் ஒப்படைத்தலைக் குறிக்கும். பின்னர் புரட்சி வியென்னாவிலும் பெர்லினிலும் வெற்றிபெற்ற பொழுது புரட்சிப் படைக்கு எவ்விதமான அவசியமும் இல்லை. ஆனால் இந்த விளையாட்டு ஆரம்பமாகிவிட்டபடியால் நீடித்தது.

நாங்கள் ஜெர்மன் கம்யூனிஸ்டு மன்றத்தை[93] நிறுவி

னோம். தொழிலாளர்கள் இப்படையில் சேரக் கூடாது, தனியாகத் தம்முடைய தாய்நாடுகளுக்குச் சென்று அங்கே இயக்கத்துக்குப் பாடுபட வேண்டும் என்று வலியுறுத்தி னோம். நம்முடைய பழைய நண்பரான ஃபிலொக்கோன் தற்காலிக அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்தார்; அவர் புரட்சிப் படையைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட அதே பிரயாண உதவிகளை நம்மால் அனுப்பப்பட்ட தொழி லாளர்களுக்கும் பெற்றுக் கொடுத்தார். நாம் இம்முறையில் சங்கத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் உள்பட முந்நூறு அல்லது நானூறு தொழிலாளர்களை ஜெர்மனிக்கு அனுப்பினோம்.

நாம் சுலபமாக முன்னறிந்தபடி, இப்பொழுது வெடித் தெழுந்த வெகுஜன இயக்கத்துக்கு முன்னால் சங்கம் மிகவும் பலவீனமான நெம்புகோலாகத்தான் இருந்தது. முன்னர் வெளி நாடுகளில் வசித்த சங்கத்தின் உறுப்பினர்களில் முக்கால் பங்கினர் தாய்நாட்டுக்குத் திரும்பியதுடன் தங்களுடைய இருப்பிடத்தையும் மாற்றிக் கொண்டனர். இக்காரணத் தால் அவர்களுடைய முந்திய கிளைகள் பெரும்பாலும் கலைக்கப்பட்டன; அவர்கள் சங்கத்துடன் எல்லாத் தொடர்பு களையும் இழந்தார்கள். ஒரு பகுதியினர்—அவர்களில் அதிகமான பேராவலுடையவர்கள்—இந்தத் தொடர்பை மறுபடியும் ஏற்படுத்திக் கொள்வதற்குக் கூட முயற்சிக்க வில்லை; ஆனால் ஒவ்வொருவரும் தன்னுடைய ஸ்தலத்தில் தன்னுடைய முயற்சியில் சிறு அளவில் தனியான இயக்கத் தைத் தொடங்கினார்கள். கடைசியில் ஒவ்வொரு அற்ப மான தனி அரசிலும், ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ் வொரு நகரத்திலும் நிலைமைகள் அதிகமான அளவுக்கு வேறுபட்டிருந்தபடியால், சங்கம் மிகவும் பொதுப்படை யான ஆணைகளுக்கு மேல் அதிகமாக எதுவும் செய்ய இய லாத நிலை ஏற்பட்டது; மேலும் அத்தகைய ஆணைகளைப் பத்திரிகைகளின் மூலம் வெளியிட்ட பொழுது, அவை இன் னும் சிறப்பான முறையில் பரவின. சுருக்கமாகக் கூறுவ தென்றால், சங்கம் இரகசியமான முறையில் இயங்குவதை அவசியமாக்கிய காரணங்கள் முடிந்துவிட்ட தருணத்தி

லிருந்து இரகசியமான சங்கம் என்பதற்கே எந்த அர்த்தமும் இல்லாமற்போய் விட்டது. ஆனால் இரகசியமான சங்கத்தின் சதிக்கூட்டத் தன்மையின் கடைசிச் சுவட்டை அப்பொழுதுதான் ஒழித்திருந்த நபர்களுக்கு குறைந்தபட்சம் இது எவ்விதமான வியப்பையும் தரவில்லை.

ஆனால் சங்கம் புரட்சிகர நடவடிக்கைக்கு மிகவும் சிறந்த பயிற்சிக் கூடமாக இருந்தது என்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டது. ரைன் பிரதேசத்தில் (அங்கே *Neue Rheinische Zeitung** உறுதியான தலைமையகமாக இருந்தது), நாஸ்ஸொவில், ரைன் கிஸெனில், இதர இடங்களில் எங்குமே சங்கத்தின் உறுப்பினர்கள் தீவிர ஜனநாயக இயக்கத்துக்குத் தலைமை தாங்கினார்கள். ஹாம்பர்க்கிலும் இதே மாதிரியே. தெற்கு ஜெர்மனியில் குட்டிமுதலாளி வர்க்க ஜனநாயகம் மேலோங்கியிருந்தது இதற்குத் தடையாக இருந்தது. பிரெஸ்லாவில் வில்ஹெல்ம் வோல்ஃபின் சுறுசுறுப்பான நடவடிக்கைகள் 1848ஆம் ஆண்டின் கோடைகாலம் வரை அதிகமான அளவில் வெற்றியடைந்தன; மேலும் அவர் பிராங்க்பர்ட் நாடாளுமன்றத்தில் சைலீஷியாவின் துணைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முடிவில் பிரஸ்ஸல்சிலும் பாரிசிலும் சங்கத்தின் சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்த அச்சுக்கோர்ப்பவர் ஸ்டீபன் போர்ன் பெர்லினில் ''தொழிலாளர் சகோதரத்துவச் சங்கத்தை'' அமைத்தார்; அது பெருமளவுக்குப் பரவியதுடன் 1850 வரை நீடித்தது. போர்ன் அதிகமான திறமையுள்ள இளைஞர்; ஆனால் அவர் அரசியல் பிரமுகராவதற்கு அவசரப்பட்டு எப்படியாவது தனக்கொரு கூட்டத்தைத் திரட்ட வேண்டுமென்று மிகவும் பல்விதமான கும்பலுடன் ''உறவாடினார்''; முரண்பட்டுள்ள போக்குகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு, குழப்பத்திற்குள் ஒளியைக் காட்டுவதற்கு அவர் சிறிதும் தகுதியுடையவர் அல்ல. ஆகவே அவருடைய சங்கத்தின் அதிகாரபூர்வமான வெளியீடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்கள் கைவினைச்

---

* இத்தொகுதி, பக்கங்கள் 149—165 பார்க்க.—ப-ர்.

சங்க நினைவுகள் மற்றும் கைவினைச் சங்க விருப்பார்வங்களுடன், லுயீ பிளான் மற்றும் புரூதோன் கருத்துக்களின் துணுக்குகளுடன், காப்புவாதம், இதரவற்றுடன் அவியலாகச் சேர்க்கப்பட்டிருந்தன; சுருக்கமாகக் கூறுவதென்றால், அவர் எல்லோருக்கும் திருப்தியளிப்பதற்கு விரும்பினார். ''சகோதரத்துவச் சங்கம்'' குறிப்பாக வேலைநிறுத்தங்கள், தொழிற்சங்கங்கள், உற்பத்தியாளர்கள் கூட்டுறவுகள், இதரவற்றை நடத்தியது; எல்லாவற்றுக்கும் மேலாக, முதலில் அரசியல் வெற்றிகளின் மூலம் களத்தை வென்றெடுப்பதைப் பற்றிய பிரச்சினை இது—அப்பொழுது மட்டுமே மேற்கூறியவற்றை நிரந்திரமான அடிப்படையில் நிறைவேற்ற முடியும்—என்பது மறக்கப்பட்டது. பின்னர் பிற்போக்குவாதத்தின் வெற்றிகளின் விளைவாகப் புரட்சிகரப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கெடுக்க வேண்டியதன் அவசியத்தை ''சகோதரத்துவச் சங்கத்தின்'' தலைவர்கள் உணர்ந்த பொழுது அவர்கள் தம்மைச் சுற்றிலும் திரட்டியிருந்த குழப்பமான பெருந்திரளினர் அவர்களைக் கைவிட்டுப் போனது இயற்கையானதே. போர்ன் 1849 மே மாதத்தில் டிரெஸ்டனில் நடைபெற்ற புரட்சிகர எழுச்சியில்[94] பங்கெடுத்த பொழுது அதிர்ஷ்டவசமாகத் தப்பினார். ஆனால் ''தொழிலாளர் சகோதரத்துவச் சங்கம்'' பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் அரசியல் இயக்கத்துக்கு வேறான முறையில் முற்றிலும் தனிக் கழகமாக, பெரும்பாலும் காகிதத்தில் மட்டுமே இருந்தது; அது மிகவும் அற்பமான பாத்திரத்தை வகித்தபடியால் பிற்போக்குவாதம் 1850 வரை அதை நசுக்குவது அவசியமென்று கருதவில்லை; அதன் எஞ்சிய கிளைகள் இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு நசுக்கப்பட்டன. போர்ன் (அவருடைய உண்மையான பெயர் பட்டர்மில்ஹ்) பெரிய அரசியல் பிரமுகராக வளரவில்லை, ஸ்விட்சர்லாந்தில் சாதாரணப் பேராசிரியராகவே இருக்கிறார். அவர் இனியும் மார்க்சை கைவினைச் சங்க நடையில் மொழிபெயர்ப்பதில்லை, அடக்கமான ரெனானைத் தன்னுடைய தெவிட்டுகின்ற ஜெர்மன் மொழிக்கு மாற்றுகிறார்.

பாரிசில் 1849 ஜூன் 13, ஜெர்மனியில் மே மாதத்திய

புரட்சிகர எழுச்சிகளின் தோல்வி மற்றும் ருஷ்யர்கள் ஹங்கேரியப் புரட்சியை நசுக்கியதுடன் 1848 புரட்சியில் ஒரு மாபெரும் காலகட்டம் முடிவடைந்தது. ஆனால் பிற்போக்குவாதம் இன்னும் முற்றாக வெற்றியடையவில்லை. சிதறடிக்கப்பட்ட புரட்சிகர சக்திகளை, ஆகவே சங்கத்தைத் திருத்தியமைத்தல் அவசியமாயிற்று. பாட்டாளி வர்க்கத்தை எவ்விதத்திலும் பகிரங்கமாகத் திரட்டியமைப்பதற்கு 1848ஐப் போலவே நிலைமை மறுபடியும் தடைசெய்தது. ஆகவே அந்த வேலையை இரகசியமாகச் செய்ய வேண்டியிருந்தது.

1849ஆம் ஆண்டின் இலையுதிர்பருவத்தில் முந்திய மத்திய கமிட்டிகள் மற்றும் காங்கிரசுகளின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் மறுபடியும் லண்டனில் கூடினார்கள். அதில் ஷாப்பரும் மோளும் பங்கெடுக்கவில்லை. விஸ்பாடேனில் சிறையிலடைக்கப்பட்டிருந்த ஷாப்பர் விடுதலை அடைந்த பிறகு 1850இன் வசந்தகாலத்தில் வந்தார். மோள் மிகவும் ஆபத்தான சில பணிகளையும் கிளர்ச்சிப் பயணங்களையும் தொடர்ந்து நிறைவேற்றினார்; சமீப காலத்தில் அவர் ரைன் மாநிலத்தில் பிரஷ்ய ராணுவத்துக்குள்ளேயே போய் ப்ஃபால்ட்ஸ் குதிரை பீரங்கிப் படைக்குப் போர்வீரர்களைச் சேர்ந்தார்; அவர் வில்லிஹின் படையில் பெஸான்சோன் தொழிலாளர் கம்பெனியில் சேர்ந்தார்; ரோட்டென்பெல்ஸ் பாலத்துக்கு எதிரில் முர்கில் நடைபெற்ற சண்டையில் தலையில் குண்டு பாய்ந்து மரணமடைந்தார். அதன் பிறகு வில்லிஹ் இப்பொழுது களத்தில் தோன்றினார். 1845 முதல் மேற்கு ஜெர்மனியில் மிகவும் அதிகமாகவுள்ள உணர்ச்சிக்கனிவுள்ள கம்யூனிஸ்டுகளில் வில்லிஹூம் ஒருவர்; அக்காரணத்தால் மட்டுமே அவர் நம்முடைய விமர்சனப் போக்கை இயல்புணர்ச்சியாக, இரகசியமாக எதிர்த்தார். அதைக் காட்டிலும் கூடுதலாக என்னவென்றால் அவர் முற்றிலும் தீர்க்கதரிசியாக இருந்தார். ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் முன்விதிக்கப்பட்ட விடுவிப்பாளர்தான் என்று அவர் உறுதியாக நம்பினார். ஆகவே அரசியல் சர்வாதிகாரத்தைப் போல ராணுவ சர்வாதிகாரத்

துக்கும் நேரடியாக உரிமையைக் கோரினார். முன்னர் வைட்லிங் போதித்த பூர்விக கிறிஸ்துவ கம்யூனிசத்துடன் ஒருவகையான இஸ்லாமிய கம்யூனிசமும் சேர்த்துக்கொள்ளப் பட்டது. எனினும் இப்புதிய மதத்தைப் பிரசாரம் செய்தல் வில்லிஹின் தலைமையிலிருந்த அகதிகள் முகாமுடன் தற்காலிகமாக நிறுத்திக் கொள்ளப்பட்டது.

ஆகவே சங்கம் மறுபடியும் அமைக்கப்பட்டது; 1850 மார்ச் மாத வேண்டுகோள்* (பிற்சேர்க்கை, IX, எண் 1) வெளியிடப்பட்டது; ஹென்ரிஹ் பௌவர் ஜெர்மனிக்குச் சங்கத்தின் பிரதிநிதியாக அனுப்பி வைக்கப்பட்டார். மார்க்சும் நானும் தயாரித்த இந்த வேண்டுகோள் இன்னும் அக்கறையைக் கொண்டிருக்கிறது; ஏனென்றால் வெகு சீக்கிரத்தில் எதிர்பார்க்கக் கூடிய அடுத்த ஐரோப்பியக் கொந்தளிப்பின் போது (நம்முடைய நூற்றாண்டில் ஐரோப்பியப் புரட்சிகள் பதினைந்து முதல் பதினெட்டு ஆண்டுகள் இடைவெளியில் நடைபெற்றிருக்கின்றன—1815, 1830, 1848—1852, 1870) கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களிடமிருந்து சமூகத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு ஜெர்மனியில் முதலில் ஆட்சிக்கு வரக் கூடிய கட்சி குட்டிமுதலாளி வர்க்க ஜனநாயகம் என்பது இப்பொழுது கூட நிச்சயமானதாகும். ஆகவே அந்த வேண்டுகோளில் எழுதப்பட்டிருப்பதில் அதிகமானவை இன்றும் பொருத்தம் உடையவையே. ஹென்ரிஹ் பௌவரின் இலட்சியப் பயணம் பரிபூரண வெற்றியடைந்தது. அந்தக் குட்டையான, குதூகலமான காலணிகள் தயாரிக்கும் தொழிலாளி ஒரு பிறவி ராஜியவாதியே. அவர் சங்கத்தின் பழைய உறுப்பினர்களையும் (அவர்கள் பகுதியளவுக்குப் புரட்சிகர வேலையிலிருந்து விலகியவர்களாகவும் பகுதியளவுக்கு வெளியிலிருந்து எந்த உதவியும் பெறாமல் செயலாற்றுபவர்களாகவும் இருந்தார்கள்), குறிப்பாக ''தொழிலாளர் சகோதரத்துவ சங்கத்தின்'' முந்திய தலைவர்களையும் ஸ்தாபனத்தில் சுறுசுறுப்பாக இயங்கும்படிச்

* இப்பதிப்பு, தொகுதி 2, பக்கங்கள் 72—92 பார்க்க. —ப-ர்.

செய்தார். சங்கம் தொழிலாளர், விவசாயிகள் மற்றும் விளையாட்டுக் கழகங்களில் 1848க்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் மிகவும் அதிகமான அளவுக்கு ஆதிக்கமான பாத்திரத்தை வகிக்க ஆரம்பித்தது. ஆகவே போனிலிருந்து வந்த மாணவரான ஷுர்ட்ஸ் (பிற்காலத்தில் அமெரிக்காவில் முன்னாள் அமைச்சர்) குட்டிமுதலாளி வர்க்க ஜனநாயக நலன்களுக்காக ஜெர்மனியில் சுற்றுப்பயணம் செய்த பொழுது ''தகுதியுள்ள எல்லா சக்திகளும் ஏற்கெனவே சங்கத்தில் சேர்ந்து விட்டதைக் கண்டதாகக்'' கூறியது 1850 ஜூனில் கிளைகளுக்கு அடுத்த காலாண்டு வேண்டுகோள் சுட்டிக்காட்டியது (பிற்சேர்க்கை, IX, எண் 2 பார்க்க). ஜெர்மனியில் ஏதாவது முக்கியத்துவத்தைக் கொண்டிருந்த ஒரே புரட்சிகர ஸ்தாபனம் சங்கமே என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இந்த ஸ்தாபனம் எந்த நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது புரட்சிகர எழுச்சி மறுபடியும் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் நிறைவேறினவா என்பதை மிகவும் கணிசமான அளவில் பொறுத்திருந்தது. 1850ஆம் ஆண்டின் போக்கில் இது மேன்மேலும் இயல்பாக நடைபெறக் கூடாததாக, மெய்யாகவே நடைபெற முடியாததாக ஆயிற்று. 1848இல் நடைபெற்ற புரட்சிக்கு வழிவகுத்த 1847இன் தொழில்துறை நெருக்கடி சமாளிக்கப்பட்டு விட்டது; முன்னெப்போதும் நடைபெற்றிராத, புதிய வளப் பெருக்கக் காலகட்டம் ஆரம்பமாயிற்று. பார்ப்பதற்குக் கண்களைப் பெற்றிருந்தவர்கள், அவற்றை உபயோகப்படுத்தியவர்கள் 1848இன் புரட்சிகரப் புயல் படிப்படியாக மறைந்து வருகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும்.

''முதலாளித்துவ சமூகத்தின் உற்பத்திச் சக்திகள் முதலாளித்துவ உறவுகளுக்குள் சாத்தியமான அளவுக்கு செழிப்புடன் வளர்கின்ற இந்தப் பொது வளப்பெருக்கத்தில் உண்மையான புரட்சியைப் பற்றிச் சிறிதும் பேச முடியாது. நவீன உற்பத்திச் சக்திகள் மற்றும் முதலாளித்துவ உற்பத்தி வடிவங்கள் என்னும் இந்த இரண்டு காரணிகளும் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்கின்ற காலகட்டங்களில் மட்டுமே

அத்தகைய புரட்சி சாத்தியம். (ஐரோப்பாக்) கண்டத்தின் ஒழுங்குமுறைக் கட்சியின் வெவ்வேறு கோஷ்டிகளின் பிரதிநிதிகள் தற்பொழுது ஈடுபட்டுப் பரஸ்பரம் தம்மை அம்பலப்படுத்திக் கொள்கின்ற பல்வேறு சச்சரவுகள் புதிய புரட்சிகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பத்தைச் சிறிதும் அளிக்க வில்லை; அதற்கு மாறாக, சமூக உறவுகளின் அடிப்படை அந்த நேரத்தில் மிகவும் உறுதியாகவும் மிகவும் முதலாளித் துவத் தன்மையைக் கொண்டிருப்பதாகவும் (இதைப் பற்றி பிற்போக்குவாதம் அறியவில்லை) இருப்பதனால் இந்தச் சச்சரவுகள் சாத்தியமாகவே இருக்கின்றன. முதலாளித்துவ வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்குப் பிற்போக்குவாதம் செய்கின்ற எல்லா முயற்சிகளும் ஜனநாயகவாதிகளின் தார்மிக சீற்றம் அனைத்தையும் மற்றும் உற்சாகமிக்க பிரகடனங்கள் அனைத்தையும் போல நொறுங்கும் என்பது நிச்சயம்.'' மார்க்சும் நானும் 1850 மே முதல் அக்டோபரின் பரிசீலனை என்னும் தலைப்பில் *Neue Rheinische Zeitung. Politisch-ökonomische Revue*இல்[95] வெளியான கட்டுரையில் இப்படி எழுதினோம் (இதழ்கள் 5 மற்றும் 6, ஹாம்பர்க், 1850, பக்கம் 153).

லெத்ரூ-ரோலென், லுயீ பிளான், மாஜினி, கோஷூட் மற்றும் ஜெர்மனியில் சற்றுக் குறைவாக பிரபலமடைந் திருந்த ரூகே, கிங்கெல், கோக் மற்றும் இதரர்களும் லண்டனில் கூடி தங்களுடைய தாய்நாடுகளுக்கு மட்டுமன்றி ஐரோப்பா முழுமைக்கும் டஜன்கணக்கில் எதிர்காலத் தற் காலிக அரசாங்கங்களை அமைத்துக் கொண்டிருந்த பொழுது, ஐரோப்பியப் புரட்சியை நிறைவேற்றுவதற்கும் அதனுடன் சேர்ந்து பல்வேறு குடியரசுகளை ஒரு நொடியில் உருவாக்குவதற்கும் அவசியமான பணத்தை அமெரிக்கா விடமிருந்து புரட்சிக்குரிய கடனாகப் பெறுவது மட்டுமே இன்னும் செய்ய வேண்டிய ஒரே காரியமாக இருந்த சமயத் தில் நிலைமையைப் பற்றிய இந்த நிதானமான மதிப்பீடு முரணான கருத்தாகப் பலரால் கருதப்பட்டது. வில்லிஹைப் போன்ற ஒரு நபர் இதை நம்பியதை, தன்னுடைய பழைய புரட்சிகர உத்வேகத்தினால் தூண்டப்பட்டு ஷாப்பர் தன்னை ஏமாற்றுவதை அனுமதித்ததைப் பற்றி மற்றும் பெரும்

பாலும் அகதிகளாக இருந்த லண்டன் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் அவர்களைப் பின்பற்றி புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயகச் சூழ்ச்சிக்காரர்களின் முகாமுக்குள் நுழைந்ததைப் பற்றி எந்த நபராவது வியப்படைய முடியுமா? நாங்கள் கடைப்பிடித்த நிதானம் இந்த நபர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை மட்டும் எழுதுவது போதுமானது; புரட்சிகளைத் தயாரிக்கின்ற விளையாட்டில் ஒருவர் சேர்ந்து கொள்ள வேண்டும்; நாங்கள் அதைச் செய்வதற்கு மிகவும் உறுதியாக மறுத்தோம். பிளவு ஏற்பட்டது. அதைப் பற்றி *Revelations* என்னும் நூலைப் படித்தால் அதிகம் தெரிந்து கொள்ள முடியும். அடுத்த படியாக நோட்யுங் கைதுசெய்யப்பட்டார்; அவரைத் தொடர்ந்து ஹாம்பர்க்கில் ஹவுப்ட் கைதுசெய்யப்பட்டார்; அவர் துரோகியாக மாறி கொலோன் மத்திய கமிட்டியின் உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட்டார்; வழக்கில் முக்கியமான சாட்சியாக அவர் எடுத்துக் கொள்ளப்பட்டார். ஆனால் அவருடைய உறவினர்கள் இப்படி கெட்ட பெயரெடுக்க விரும்பாத காரணத்தால் அவரை ரியோ டெ ஜனீரோவுக்கு அனுப்பினார்கள்; பிறகு அங்கே அவர் வணிகரானார்; அவருடைய சேவைகள் அங்கீகரிக்கப்பட்டு முதலில் பிரஷ்யா சார்பிலும் பின்னர் ஜெர்மனியின் சார்பிலும் கான்சல் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்; அவர் தற்பொழுது ஐரோப்பாவுக்கு மறுபடியும் வந்திருக்கிறார்.*

*Revelations* என்னும் நூலை இன்னும் நன்றாகப்

---

* ஷாப்பர் அறுபதுகளின் முடிவில் லண்டனில் மரணமடைந்தார். வில்லிஹ் அமெரிக்க உள்நாட்டுப் போரில்[96] பங்கெடுத்துப் புகழ் பெற்றார்; அவர் பிரிகேடியர் ஜெனரலானார்; முர்பிரீஸ்பரோ (டென்னசி) சமரின் போது அவர் மார்பில் காயமடைந்தார்; பின்னர் குணமடைந்து சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் மரணமடைந்தார். மேலே குறிப்பிடப்பட்ட மற்ற நபர்களைப் பொறுத்த மட்டில், ஹென்ரிஹ் பௌவர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற பிறகு எவ்விதமான தகவலும் இல்லை, வைட்லிங்கும் எவெர்பெக்கும் அமெரிக்காவில் மரணமடைந்தார்கள் என்பதை மட்டும் கூறுவேன். (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

புரிந்து கொள்வதற்கென்று நான் கொலோனில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலைக் கீழே தருகிறேன்: 1) பீ. கெ. ரோஸெர், சுருட்டுத் தயாரிக்கும் தொழிலாளி; 2)ஹென்ரிஹ் பியூர்கெர்ஸ், நாடாளுமன்றத்தில் முற்போக்குப் பிரதிநிதி,பின்னர் மரணமடைந்து விட்டார்; 3)பீட்டர் நோட்யுங், தையற்காரர், பிரெஸ்லாவில் புகைப்படம் எடுப்பவர், அங்கே சில ஆண்டுகளுக்கு முன்னர் மரணமடைந்து விட்டார்; 4) வி. ஜோ. ரேய்ஃப்; 5) டாக்டர் ஹெர்மன் பெக்கெர், இப்பொழுது கொலோன் நகரத் தலைவர் மற்றும் மேல்சபையில் உறுப்பினராக இருப்பவர்; 6) டாக்டர் ரோலன்ட் டேனியல்ஸ், மருத்துவர், சிறையிலிருந்த காலத்தில் எலும்புருக்கி நோய் ஏற்பட்டதனால் விசாரணைக்கு சில ஆண்டுகளுக்குப் பிறகு மரணம் அடைந்து விட்டார்; 7) கார்ல் ஓட்டோ, இரசாயன நிபுணர்; 8) டாக்டர் ஆப்ரஹாம் யாக்கோபி, இப்பொழுது நியூயார்க்கில் மருத்துவர்; 9) டாக்டர் யோ. யா. கிளின், இப்பொழுது கொலோனில் மருத்துவராகவும் நகர் மன்றக் கவுன்சிலராகவும் இருக்கிறார்; 10) ஃபெர்டினாண்டு பிரிலிகிராத், ஆனால் அவர் அந்தச் சமயத்தில் ஏற்கெனவே லண்டனில் இருந்தார்; 11) யோ.லூ. எர்ஹார்ட், எழுத்தர்; 12) பிரெடெரிக் லெஸ்னர், தையற்காரர், இப்பொழுது லண்டனில் இருக்கிறார். 1852 அக்டோபர் 4 முதல் நவம்பர் 12 வரை ஜூரிகளுக்கு முன்னால் பகிரங்கமாக நடைபெற்ற விசாரணைக்குப் பிறகு நாட்டுக்குத் துரோகம் செய்ய முயற்சித்ததாகப் பின்வரும் தோழர்கள் தண்டிக்கப்பட்டார்கள்: ரோஸெர், பியூர்கெர்ஸ் மற்றும் நோட்யுங் ஆறு ஆண்டுகளும் ரேய்ஃப், ஓட்டோ மற்றும் பெக்கெர் ஐந்து ஆண்டுகளும் லெஸ்னர் மூன்று ஆண்டுகளும் கோட்டைச் சிறையில் வைக்கப்பட வேண்டுமென்று தண்டிக்கப்பட்டார்கள்; டேனியல்ஸ், கிளின், யாக்கோபி மற்றும் எர்ஹார்ட் விடுதலை செய்யப்பட்டார்கள்.

கொலோன் விசாரணையுடன் ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் இயக்கத்தின் முதல் கட்டம் முடிவடைந்தது. தண்டனைக்குப் பிறகு நாங்கள் உடனடியாக எங்களுடைய சங்கத்தைக் கலைத்தோம்; சில மாதங்களுக்குப் பிறகு

வில்லிஹ்-ஷாப்பரின் தனிக்கழகமும்[97] நிரந்தரமாக ஓய் வெடுத்துக் கொண்டது.

* * *

அக்காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையில் முழுத் தலைமுறைக் காலம் கழிந்து விட்டது. அக்காலத்தில் ஜெர் மனி கைத்தொழிலையும் கைவேலையை அடிப்படையாகக் கொண்ட வீட்டுத் தொழில்துறையையும் கொண்ட நாடாக இருந்தது; இப்பொழுது அது பெரிய தொழில்துறை நாடு என்பதுடன் மேலும் தொடர்ச்சியாகத் தொழில்துறையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. அக்காலத்தில் தொழி லாளி வர்க்கம் என்ற முறையில் தங்களுடைய நிலையையும் மூலதனத்தின் பால் தங்களுடைய வரலாற்று-பொருளா தாரப் பகைமையையும் புரிந்து கொண்ட தொழிலாளர்களை ஒவ்வொருவராகத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது; ஏனென்றால் இந்தப் பகைமை அப்பொழுதுதான் வளர்ச்சி யடையத் தொடங்கிக் கொண்டிருந்தது. தொழிலாளி வர்க்கம் ஓர் ஒடுக்கப்பட்ட வர்க்கம் என்ற முறையில் முழு உணர்வும் வளர்ச்சியடைகின்ற நிகழ்வுப்போக்கை சிறிதள வேனும் தாமதப்படுத்துவதற்கு இன்று முழு ஜெர்மன் பாட் டாளி வர்க்கத்தின் மீது கடுமையான சட்டங்களைப் பிர யோகிக்க வேண்டியிருக்கிறது. அச்சமயத்தில் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை உணர்கின்ற கட்டம் வரை ஊடுருவிச் செல்கின்ற அறிவைக் கொண்டிருந்த ஒரு சில நபர்கள் இரகசியமான முறையில் 3 முதல் 20 நபர் களைக் கொண்ட சிறு குழுக்களாகக் கூட வேண்டியிருந்தது. இன்று ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்துக்கு—பகிரங்கமோ, இரகசியமானதோ—அதிகாரபூர்வமான ஸ்தாபனம் கூட இனிமேல் அவசியமில்லை. மொத்த ஜெர்மன் பேரரசின் அடிப்படைகளையும் குலுக்குவதற்கு ஒத்த கருத்துடைய வர்க்கத் தோழர்களின் எளிமையான, இயற்கையான இடைத் தொடர்பு எவ்விதமான விதிகள், கமிட்டிகள், தீர்மானங்கள் அல்லது புலப்படத்தக்க இதர வடிவங்கள் இன்றியே போது

மானதாக இருக்கிறது. பிஸ்மார்க் ஜெர்மனியின் எல்லைகளுக்கு அப்பால் ஐரோப்பாவின் விதியை முடிவு செய்பவராக இருக்கிறார்; ஆனால் ஜெர்மனிக்குள் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் பேருருவம் அச்சுறுத்துகின்ற முறையில் நாள்தோறும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது; இதை மார்க்ஸ் 1844இலேயே முன்னறிந்து கூறினார். அற்பவாதியின் உருவத்துக்குப் பொருத்தமாகத் தயாரிக்கப்பட்ட அந்தக் குறுகிய சாம்ராஜ்ய அமைப்பு இப்பொழுது கூட அப்பேருருவத்துக்குப் பொருத்தமாக இல்லை. அப்பேருருவத்தின் வீறார்ந்த உடலும் திரண்ட தோள்களும் நாற்காலியிலிருந்து எழுந்த மாத்திரத்தில் சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தின் மொத்த அமைப்பையும் சுக்குச் சுக்காக நொறுக்குகின்ற தருணத்தை அடைகின்ற வரை வளர்ந்து கொண்டிருக்கும். அது மட்டும் அல்ல. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச இயக்கம் அதிகமான அளவுக்கு வளர்ச்சியடைந்து விட்டபடியால், அதன் குறுகிய வடிவமான இரகசியமான கழகம் மட்டுமன்றி, அதன் இரண்டாவது, எல்லையற்ற அளவுக்கு விரிவான வடிவமாகிய பகிரங்கமான சர்வதேசத் தொழிலாளர் சங்கமும் கூட அதற்கு விலங்குகளாக மாறி விட்டன. தம்முடைய வர்க்க நிலைமை ஒன்றே என்னும் தெளிவை அடிப்படையாகக் கொண்ட எளிமையான ஒருமைப்பாட்டு உணர்ச்சி வெவ்வேறு நாடுகளையும் மொழிகளையும் சேர்ந்த தொழிலாளர்களிடம் ஒரே பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் கட்சியைத் தோற்றுவிப்பதற்கும் அதன் ஒற்றுமையைக் காப்பதற்கும் போதுமானதாக இருக்கிறது. 1847 முதல் 1852 வரை சங்கம் பிரதிநிதித்துவம் செய்த போதனையை அச்சமயத்தில் அறிவுடைய அற்பவாதிகள் தமது தோள்களைக் குலுக்கிக் கொண்டு முழுப் பைத்தியங்களின் மயக்கங்கள், ஒரு சில சிதறிக் கிடக்கின்ற குறுங்குழுவாதிகளின் இரகசியக் கோட்பாடு என்று கூறினார்கள்; அப்போதனை இப்பொழுது நாகரிகமடைந்த உலக நாடுகளில் எல்லாம்—சைபீரியாவின் சுரங்கங்களில் உழைக்கும்படி தண்டிக்கப்பட்டவர்களைப் போலவே கலிபோர்

னியாவில் தங்கம் வெட்டியெடுப்பவர்கள் மத்தியில்—எண்ணற்ற ஆதரவாளர்களைப் பெற்றிருக்கிறது; இப்போ தனையை உருவாக்கியவரும் தம் காலத்தின் மிகவும் வெறுக்கப்பட்ட, மிகவும் அவதூறு செய்யப்பட்ட மனிதரு மான கார்ல் மார்க்ஸ் மரணமடைந்த நேரத்தில் பழைய உலகத்திலும் புதிய உலகத்திலும் இருந்த பாட்டாளி வர்க்கத்துக்கு மிகவும் விரும்பி ஏற்கப்பட்ட, எப்பொழுதும் முன்வந்து ஆலோசனை அளிப்பவராக இருந்தார்.

பிரெடெரிக் எங்கெல்ஸ்

*லண்டன், அக்டோபர் 8, 1885*

Karl Marx, *Enthüllungen über den Kommunisten-Prozess zu Köln*, *Hottingen-Zürich*, 1885
என்ற புத்தகத்திலும்
*Der Sozialdemokrat* பத்திரிகை,
எண்கள் 46—48,
நவம்பர் 12, 19 மற்றும் 26,
1885 என்ற இதழிலும்
வெளியிடப்பட்டது

பத்திரிகை வாசகப்படி
அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன்
மொழியில்
எழுதப்பட்டது

பி. எங்கெல்ஸ்

# லூத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்[98]

## 1888ஆம் ஆண்டுப் பதிப்புக்கு முன்னுரை

*1859இல் பெர்லின் நகரத்தில் வெளியிடப்பட்ட* அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை *என்னும் நூலுக்குக் கார்ல் மார்க்ஸ் எழுதிய முன்னுரையில் ''நாங்களிருவரும்'' 1845ஆம் ஆண்டில் பிரஸ்ஸல்ஸ் நகரில் ''ஜெர்மன் தத்துவஞானத்தின் சித்தாந்தத்துக்கு எதிராக எங்களுடைய கருதுகோளை''—முக்கியமாக மார்க்சினால் வகுத்தளிக்கப்பட்ட வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தை—''விளக்கி எழுதுவதென்று, அதாவது எங்களுடைய கடந்த காலத் தத்துவஞான மனச்சாட்சியோடு கணக்குத் தீர்த்துக் கொள்வதென்று முடிவு செய்தோம்'' என்று அவர் எழுதினார். ''ஹெகலுக்குப் பிந்திய தத்துவஞானத்தின் விமர்சனம் என்ற வடிவத்தில் இந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டோம். அச்சுக் காகிதத்தில் எட்டில் ஒரு பங்கின் அளவில் இரண்டு புத்தகங்களாக இருந்த இந்தக் கையெழுத்துப் பிரதியை வெஸ்ட்ஃபாலியாவிலிருந்த பிரசுரகர்த்தர்களுக்கு அனுப்பி வெகு காலமான பிறகு, சூழ்நிலை மாறிவிட்டபடியால் அதை அச்சிட அவர்களால் முடியாது என்று எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. அந்தக் கையெழுத்துப் பிரதியை எலிகளின் கொறிக்கும் விமர்சனத்துக்கு நாங்கள் மகிழ்ச்சியோடு கொடுத்துவிட்டோம். ஏனென்*

றால் சுயவிளக்கம் என்ற எங்களுடைய முக்கியமான நோக்கம் நிறைவேறி விட்டது.''*

அதன் பிறகு நாற்பது ஆண்டுகளுக்கு மேல் உருண்டோடி விட்டன; இந்த ஆய்வுப் பொருளை அவரோ நானோ மீண்டும் எடுத்துக் கவனிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காமலே மார்க்ஸ் காலமாகி விட்டார். பல்வேறு சந்தர்ப்பங்களில் நாங்கள் ஹெகலைப் பற்றிய எங்களது கருத்தைத் தெரிவித்திருக்கிறோம் என்றாலும் ஒருபோதும் முற்றமுழுக்காகச் சொல்லவில்லை. ஃபாயர்பாகைப் பொறுத்தவரை, ஹெகலின் தத்துவஞானத்திற்கும் எங்கள் கோட்பாட்டிற்கும் இடையே பல அம்சங்களில் இடைநிலைக் கண்ணியாக இருக்கும் அவரை நாங்கள் கவனிக்கவேயில்லை.

இதற்கிடையே ஜெர்மனிக்கும் ஐரோப்பாவிற்கும் வெகு தொலைவிலுள்ள நாடுகளிலும் உலகத்தின் அனைத்து இலக்கிய மொழிகளிலும் மார்க்சின் உலகக் கண்ணோட்டத்தைப் பின்பற்றுவோர் தோன்றியுள்ளனர். மறு புறத்தில், வெளி நாடுகளில்—குறிப்பாக, இங்கிலாந்திலும் ஸ்காண்டிநேவியாவிலும்—மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானம் ஒரு விதமான மறுபிறப்பு எய்தி வருகிறது. ஜெர்மனியிலேகூட தத்துவஞானம் என்ற பெயரில் பல்கலைக்கழகங்களில் வார்க்கப்பட்டு வரும் கதம்பவாதம் என்னும் பிச்சைக்காரக் கஞ்சியின் மீது மக்களுக்கு அலுப்புத் தட்டி விட்டது போல் தெரிகிறது.

இந்நிலைமைகளில் ஹெகலின் தத்துவஞானத்தைப் பற்றிய எங்களது கருத்தை—அதிலிருந்து நாங்கள் எப்படிப் புறப்பட்டோம், எப்படிப் பிரிந்தோம் என்பது பற்றி—சுருக்கமாக, முறையாக விளக்க வேண்டும் என்று மேன்மேலும் எனக்குத் தோன்றலாயிற்று. அதே போல், புயலும் தாக்குதலும்[99] நிலவும் எங்கள் காலப் பகுதியில் ஹெகலுக்குப் பிந்திய மற்றெந்தத் தத்துவஞானியையும் விட ஃபாயர்பாக் எங்கள் மீது செலுத்திய செல்வாக்கை முற்றாக

* இப்பதிப்பு, தொகுதி 4, பக்கங்கள் 209—210 பார்க்க.—ப-ர்.

அங்கீகரிப்பது என்பது நிறைவேற்றப்படாமலே இருந்து வரும் ஒரு நன்றிக்கடனாக எனக்குப் பட்டது. எனவே ஃபாயர்பாக் பற்றி ஷ்டார்க்கே எழுதியுள்ள நூலைக் குறித்து ஒரு விமர்சன உரை கொடுக்கும்படி *Die Neue Zeit*[100] என்னும் சஞ்சிகையின் ஆசிரியர்கள் என்னைக் கேட்ட போது நான் அவ்வாய்ப்பை விருப்பத்துடன் பயன்படுத்திக் கொண்டேன். 1886இல் அந்தச் சஞ்சிகையின் நான்காவது, ஐந்தாவது இதழ்களில் என்னுடைய நூல் வெளியிடப்பட்டது; அது இங்கே ஒரு தனி வெளியீடாகத் திருத்தப்பட்ட வடிவத்தில் வெளியாகிறது.

இதை அச்சகத்திற்கு அனுப்புமுன் மீண்டும் நான் 1845—1846ஆம் ஆண்டுகளின் பழைய கையெழுத்துப் பிரதியைத்* தேடிப்பிடித்துப் புரட்டிப் பார்த்தேன். அதில் ஃபாயர்பாகைப் பற்றிய பகுதி** முற்றுப் பெறாமலே இருக்கிறது. வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின் விளக்கமே முற்றுப் பெற்ற பகுதியாக உள்ளது; அக்காலத்தில் பொருளாதார வரலாறு பற்றி எங்களுக்கு இருந்த அறிவு எவ்வளவு முழுமையற்று இருந்தது என்பதையே இது நிரூபிக்கிறது. அதில் ஃபாயர்பாகின் போதனை பற்றிய விமர்சனம் ஏதுமில்லை; எனவே நான் எடுத்துக் கொண்ட நோக்கத்திற்கு அதைப் பயன்படுத்த முடியவில்லை. ஆனால் மார்க்சின் ஒரு பழைய குறிப்புப் புத்தகத்தில் ஃபாயர்பாக் பற்றிய பதினொன்று ஆய்வுரைகள்*** இருக்கக் கண்டேன்; அவை இந்நூலில் பிற்சேர்க்கையாக வெளியிடப்படுகின்றன. அந்த ஆய்வுரைகள் பின்னால் விரிவாக விளக்குவதற்காக அவசரத்தில் எழுது வைக்கப்பட்ட குறிப்புகளாகும்; பதிப்பிக்கும் நோக்கம் கடுகளவும் இன்றி எழுதப்பட்ட

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், ஜெர்மன் சித்தாந்தம்.—ப-ர்.

** இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 12—138 பார்க்க.—ப-ர்.

*** இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 7—11 பார்க்க.—ப-ர்.

வையாகும். ஆயினும் புதிய உலகப் பார்வையின் ஒளிமய மான கருவிதையைத் தாங்கி நிற்கும் முதல் ஆவணம் என்ற வகையில் அவை அளப்பரிய மதிப்பு உள்ளவை ஆகும்.

பிரெடெரிக் எங்கெல்ஸ்

*லண்டன், பிப்ரவரி 21, 1888*

F. Engels, *Ludwig Feuerbach und der Ausgang der klassischen deutschen Philosophie*, Stuttgart, *1888*
*என்ற புத்தகத்தில் வெளியிடப்பட்டது*

*புத்தகத்தின் வாசகப்படி அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

# லூத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்

## I

*நமக்கு முன்னாலிருக்கும் இந்த நூல்* காலப் பரிமாணத்தில் ஒரு தலைமுறைக்குக் கூடுதலாக இல்லாததே என்றாலும் ஜெர்மனியின் இன்றைய தலைமுறைக்கு அது ஏற்கெனவே நூறு வருடங்களானதைப் போல அதே அளவுக்கு அந்நியமாகிவிட்ட ஒரு காலகட்டத்துக்கு நம்மைக் கொண்டு செல்கிறது. ஆனால் ஜெர்மனி 1848ஆம் வருடப் புரட்சிக்குத் தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்த காலகட்டமே அது; அன்று முதல் நம் நாட்டில் நடைபெற்றிருப்பவை அனைத்துமே 1848இன் தொடர்ச்சியாக மட்டுமே, புரட்சியின் கடைசி உயில் மற்றும் விருப்ப ஆவணத்தின் நிறைவேற்றமாக மட்டுமே இருந்து வந்திருக்கின்றன.*

*பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சைப் போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மனியிலும் அரசியல் வீழ்ச்சிக்கு முன்பாக ஒரு தத்துவஞானப் புரட்சி ஏற்பட்டது. ஆனால் இந்த இரண்டு தத்துவஞானப் புரட்சிகளுக்குமிடையே எவ்வளவு வேறுபாடு! பிரெஞ்சுக்காரர்கள் அதிகாரபூர்வமான அனைத்து விஞ்ஞானத்துக்கும் எதிராக, திருச்சபைக்கு எதிராக, பெருமளவில் அரசுக்கும் எதிராக பகிரங்கமாகப் போராடினார்கள்; அவர்களுடைய நூல்கள் நாட்டின் எல்லைகளுக்கு வெளியே ஹாலந்தில் அல்லது இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டன; பாஸ்டிலில் சிறை வைக்கப்படுகின்ற ஆபத்து அவர்களுக்கு அதிகமாகவே இருந்தது. மறு பக்கத்தில், ஜெர்மானியர்கள் பேராசிரியர்களாக,*

---

* *Ludwig Feuerbach*, von C. N. Starcke, Dr. phil., Stuttgart, Ferd. Encke, 1885. (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

இளைஞர்களுக்குப் போதிப்பதற்காக அரசினால் நியமிக்கப் பட்டவர்களாக இருந்தார்கள்; அவர்களுடைய நூல்கள் அங்கீகரிக்கப்பட்ட பாட புத்தகங்களாக இருந்தன; தத்துவ ஞானத்தின் மொத்த வளர்ச்சியின் உச்சநிலை அமைப்பாக இருந்த ஹெகலின் அமைப்பு பிரஷ்ய-இராஜாங்க அரசுத் தத்துவஞானம் என்ற நிலைக்குக்கூட ஓரளவுக்கு உயர்த்தி வைக்கப்பட்டிருந்தது! இந்தப் பேராசிரியர்களுக்குப் பின் னால், அவர்கள் உபயோகித்த விளங்காத, பகட்டுப் புல மையான சொற்றொடர்கள், எழுச்சியற்ற, சோர்வூட்டும் வாக்கியங்களுக்குப் பின்னால் ஒரு புரட்சி மறைந்திருப்பது சாத்தியமா? புரட்சியின் பிரதிநிதிகள் என்று அன்று கருதப் பட்டவர்கள்—மிதவாதிகள் தானே—மூளையைக் குழப்பு கின்ற இந்தத் தத்துவஞானத்தின் கடுமையான எதிரிகளாக இருந்தார்கள், அல்லவா? ஆனால் அரசாங்கங்களோ, மித வாதிகளோ காணத் தவறிய ஒன்றைக் குறைந்தபட்சம் ஒரு நபர் மிக முந்திய காலமான 1833ஆம் வருடத்திலேயே கண்டார்; அவர் ஹென்ரிஹ் ஹேய்னெ[101] தவிர வேறு எவரு மல்ல.

ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். ''மெய் யானவை அனைத்தும் விவேகமானவை, விவேகமானவை அனைத்தும் மெய்யானவை'' என்ற ஹெகலின் பிரபலமான கருத்தைப் போல வேறு எந்தத் தத்துவஞானக் கருதுகோ ளும் குறுகிய புத்தியுள்ள அரசாங்கங்களிலிருந்து கூடுதலான நன்றியையும் அதே அளவுக்குக் குறுகிய புத்தியுள்ள மித வாதிகளிடமிருந்து ஆத்திரத்தையும் அடைந்ததில்லை.

இது அன்றைக்கிருந்த நிலைமைகளைப் புனிதப்படுத்து வது, எதேச்சாதிகாரம், போலீஸ் அரசாங்கம், இராஜாங்க விசாரணை முறைகள் மற்றும் தணிக்கை முறை ஆகிய வற்றுக்குத் தத்துவரீதியில் ஆசி வழங்குவது என்பதில் ஐய மில்லை. மூன்றாவது பிரெடெரிக்-வில்ஹெல்மும் அவருடைய குடிமக்களும் அதை அப்படித்தான் புரிந்து கொண்டார்கள். ஆனால் ஹெகலைப் பொறுத்தமட்டில், இருப்பவை ஒவ் வொன்றும்—கூடுதலான தகுதி இல்லாமல்—மெய்யானவை அல்ல என்பது திண்ணம். எது அதே சமயத்தில் அவசியமான

தாகவும் இருக்கிறதோ, அது மட்டுமே யதார்த்தம் என்ற இயற்பண்பைக் கொண்டிருக்கிறது என்பார் ஹெகல்.

''அதன் வளர்ச்சிப்போக்கில் யதார்த்தம் அவசியமான தாக நிரூபிக்கிறது.'' எனவே ஹெகலுக்கு ஒரு குறிப்பிட்ட அரசாங்க நடவடிக்கை—''ஒரு குறிப்பிட்ட வரிவிதிப்பை'' ஹெகலே உதாரணமாகக் காட்டினார்—தகுதி இல்லாமல் எவ்விதத்திலும் மெய்யானதல்ல. எனினும் எது அவசிய மானதோ, அது கடைசி நிலையில் விவேகமானதாகவும் தன்னை நிரூபித்துக் கொள்கிறது; மற்றும் ஹெகலின் கருது கோள் அந்தச் சமயத்திலிருந்த பிரஷ்ய அரசுக்குப் பயன் படுத்தும் பொழுது கீழ்க்கண்ட பொருளை மட்டுமே கொண் டிருக்கிறது: இந்த அரசு அவசியமாக இருக்கின்ற அளவுக்கு அறிவுக்குப் பொருந்தி வருவதால், அது விவேகமானது. அது நமக்குத் தீமையாகத் தோன்றினாலும், தன் தீய தன்மை களையும் மீறி அது இன்னும் இருந்து வருவதால், அரசாங் கத்தின் தீய தன்மை அதனோடு பொருந்தி வருகின்ற அதன் மக்களின் தீய தன்மையினால் நியாயப்படுத்தப்படுகிறது, விளக்கப்படுகிறது. அந்தக் காலத்திலிருந்த பிரஷ்யர்கள் தங்களுக்கு ஏற்ற அரசாங்கத்தையே பெற்றிருந்தார்கள்.

எனினும் யதார்த்தம் என்பது கொடுக்கப்பட்ட எந்தச் சமூக அல்லது அரசியல் நிலைமைக்கும் எல்லாச் சந்தர்ப்பங் களிலும் எல்லாக்காலங்களிலும் எவ்விதத்திலும் உள்ளுரை யானதல்ல என்பார் ஹெகல். விஷயம் அதற்கு நேரெதிரானது. ரோமானியக் குடியரசு மெய்யானது, ஆனால் அதை அகற் றிய ரோமானியப் பேரரசும் மெய்யானதே. 1789இல் பிரெஞ்சு முடியாட்சி மிகவும் போலித்தோற்றமாகிவிட்ட படியால், அதாவது எல்லா அவசியத்தையும் இழந்துவிட்ட படியால், அதிகமாக அறிவுக்குப் பொருத்தமற்றதாகிவிட்ட படியால் அது மாபெரும் புரட்சியினால் ஒழிக்கப்பட வேண் டியதாகி விட்டது; ஹெகல் எப்பொழுதும் அந்தப் புரட்சி யைப் பற்றி மிக அதிகமான உற்சாகத்தோடு பேசுகிறார். ஆகவே இந்த உதாரணத்தில் முடியாட்சி போலித்தோற்ற மாகவும் புரட்சி மெய்யாகவும் இருந்தது. ஆகவே வளர்ச்சிப் போக்கின் பொழுது முன்னர் மெய்யாக இருந்த அனைத்

துமே போலித்தோற்றமாக மாறி தம் அவசியத்தை, இருப்பதற்கான உரிமையை, விவேகமான தன்மையை இழந்துவிடுகின்றன. அழியும் நிலையிலுள்ள யதார்த்தத்துக்குப் பதிலாக ஒரு புதிய, வாழக் கூடிய யதார்த்தம்—போராட்டமில்லாமல் மடிந்துவிடக் கூடிய அளவுக்குப் பழமை போதிய அறிவைக் கொண்டிருந்தால் அமைதியாகவும் இந்த அவசியத்தை அது எதிர்க்குமானால் பலவந்தமாகவும்—ஏற்படுகிறது. ஆகவே இந்த ஹெகலின் கருதுகோள் ஹெகலின் இயக்கவியலின் மூலமாகவே அதன் எதிரிடையாக மாறுகிறது: மனித வரலாற்றுத் துறையில் மெய்யாக இருக்கின்ற அனைத்தும் கால வளர்ச்சிப்போக்கில் அறிவுக்குப் புறம்பானவையாக மாறி விடுகின்றன; ஆகவே இயல்பினாலேயே அவை அறிவுக்குப் புறம்பானவை, அறிவுக்குப் புறம்பான தன்மையினால் முன்னரே கறைபட்டிருக்கின்றன; மனிதர்களுடைய மனங்களில் விவேகமானவை ஒவ்வொன்றுமே—இருக்கின்ற வெளித்தோற்ற யதார்த்தத்துக்கு அது எவ்வளவு அதிகமாக முரண்பட்டிருந்தாலும்—மெய்யாக மாறும்படி விதிக்கப்படுகிறது. ஹெகலின் சிந்தனை முறையின் அனைத்து விதிகளுக்கும் ஏற்ப மெய்யான ஒவ்வொன்றுமே விவேகமானது என்ற கருதுகோள், இருப்பவை அனைத்தும் அழியக் கூடியவை என்ற மற்றொரு கருதுகோளில் முடிகிறது.*

ஹெகலின் தத்துவஞானம் (காண்ட்டுக்குப் பிறகு மொத்த தத்துவஞான இயக்கத்தின் முடிவு என்ற முறையில் நாம் இங்கே அதோடு மட்டும் நிறுத்திக் கொள்ள வேண்டும்) மனிதச் சிந்தனை மற்றும் நடவடிக்கையின் அனைத்து விளைவுகளின் இறுதித்தன்மைக்கு நிரந்தரமான மரண அடி கொடுத்ததில்தான் அதன் உண்மையான முக்கியத்துவமும் புரட்சிகரமான தன்மையும் அடங்கியிருக்கின்றன. உண்மையை அறிவது தத்துவஞானத்தின் பணியாகும். ஒரு முறை

* மெபிஸ்டோஃபிலின் வார்த்தைகள் இங்கே பொழித்துரைக்கப்படுகின்றன (கேதே, ஃபாவுஸ்ட், பாகம் I, காட்சி 3, ''ஃபாவுஸ்டின் படிப்பறை'').—ப-ர்.

கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் வெறுமே உருப்போட்டுவிட வேண்டிய முற்றான, வறட்டுக் கோட்பாட்டுக் கருத்துக் களாக அது ஹெகலிடம் இனிமேலும் இருக்கவில்லை; இப்பொழுது உண்மை அறிதல் போக்கிலேயே, விஞ்ஞானத்தின் நீண்ட வரலாற்றுரீதியான வளர்ச்சியிலேயே இருந்தது; அந்த விஞ்ஞானம் தனிமுதலான உண்மை என்று சொல்லப்படுவதைக் கண்டுபிடித்து அது மேலும் முன்னேறிப் போக முடியாத, அங்கே கைகளைக் கட்டிக் கொண்டு தான் எட்டியுள்ள தனிமுதலான உண்மையை வியப்போடு பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அதற்கு வேறு அதிகமான வேலையில்லாத நிலையை ஒருபோதும் அடையாமல் அறிவின் கீழ் நிலையிலிருந்து மேன்மேலும் உயர்ந்து கொண்டே போகிறது. தத்துவஞான அறிவுத் துறைக்கு எது சரியோ, அது இதர ஒவ்வொரு அறிவுத் துறைக்கும்—செய்முறை நடவடிக்கைக்கும் கூட—சரியானதே. அறிவைப் போல, வரலாறும் மனிதகுலத்தின் முழுநிறைவான, இலட்சிய நிலைமையில் பரிபூரணமான முடிவை அடைய முடியாது. முழுநிறைவான சமூகம், முழுநிறைவான ''அரசு'' என்பவை கற்பனையில் மட்டுமே இருக்கக் கூடியவை. இதற்கு மாறாக, அடுத்தடுத்து வருகின்ற வரலாற்று அமைப்புகள் அனைத்தும் கீழ் நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு மனித சமூகத்தின் முடிவில்லாத வளர்ச்சிப் பாதையில் மாறும் கட்டங்களாக மட்டுமே இருக்கின்றன. ஒவ்வொரு கட்டமும் அவசியமானதே; ஆகவே அது தோன்றியிருக்கின்ற காலத்தையும் நிலைமைகளையும் பொறுத்தவரை நியாயமானதே. ஆனால் அதன் கருப்பையில் படிப்படியாக வளர்ச்சியடைகின்ற புதிய, உயர்ந்த நிலைமைகளுக்கு முன்னால் அது உறுதிப்பாட்டையும் நியாயத்தையும் இழந்து விடுகிறது. அது இன்னும் உயர்ந்த கட்டத்துக்கு இடமளிக்க வேண்டும்; அதுவும் பின்னர் நலிவுற்று மறையும். முதலாளி வர்க்கம் பெரிய அளவுத் தொழில்துறை, போட்டி மற்றும் உலகச் சந்தையின் மூலம் நடைமுறையில் நிலையான, தொன்மைச் சிறப்புடைய அனைத்து அமைப்புகளையும் அழித்து விடுவதைப் போல, இந்த இயக்கவியல் தத்துவஞானமும் முற்றான, தனிமுதலான

உண்மையைப் பற்றிய எல்லாக் கருதுகோள்களையும், அதற்குப் பொருத்தமான மனிதகுலத்தின் தனிமுதலான நிலைமைகளையும் அழித்து விடுகிறது. இயக்கவியல் தத்துவஞானத்துக்கு முற்றானது, தனிமுதலானது, புனிதமானது ஒன்றுமில்லை. அது ஒவ்வொன்றினுடைய மற்றும் ஒவ்வொன்றிலுமுள்ள மாறும் தன்மையை வெளிப்படுத்துகிறது; இருத்தல் மற்றும் அழிதல் என்ற இடைவிடாத நிகழ்வுப்போக்கு, கீழ் நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு முடிவில்லாத முன்னேற்றம் ஆகியவற்றைத் தவிர வேறு ஒன்றுமே அதற்கு முன்னால் நிலைப்பதில்லை. சிந்தனை செய்கின்ற மூளையில் இந்த நிகழ்வுப்போக்கின் வெறும் பிரதிபலிப்பு என்பதைக் காட்டிலும் இயக்கவியல் தத்துவஞானம் அதிகமானதல்ல. அதற்கு ஒரு பழமைவாத அம்சம் இருப்பதும் மெய்யே: அறிவு மற்றும் சமூகத்தின் திட்டவட்டமான கட்டங்கள் அவற்றின் காலத்துக்கும் சந்தர்ப்பங்களுக்கும் நியாயமானவையே என்பதை அது அங்கீகரிக்கிறது; ஆனால் அந்த அளவுக்கு மட்டுமே. இந்தக் கண்ணோட்ட முறையின் பழமைவாதம் சார்புநிலையானது; அதன் புரட்சிகரமான தன்மை தனிமுதலானது—இயக்கவியல் தத்துவஞானம் இது ஒன்றை மட்டுமே தனிமுதலானதென்று அங்கீகரிக்கிறது.

இயற்கை விஞ்ஞானம் இன்றைய நிலையில் பூமிக்குக் கூட அநேகமாக முடிவு உண்டு, அதன் வசிக்கத்தக்க தன்மைக்கு நிச்சயமாக முடிவு உண்டு என்று ஆரூடம் கூறுகிறது; ஆகவே மனிதகுலத்தின் வரலாற்றுக்கும் கூட உயர்ந்து செல்வது மட்டுமல்லாமல் கீழே இறங்குகின்ற பிரிவும் உண்டு என்று அது கருதுவதோடு இந்தக் கண்ணோட்ட முறை முற்றிலும் பொருந்துமா என்ற பிரச்சினையை எடுத்துக் கொள்வது இங்கே அவசியமல்ல. எப்படி இருந்தபோதிலும், சமூகத்தின் வரலாற்று நிகழ்வுப்போக்கு கீழே இறங்கும் திருப்பு முனைக்குக் கணிசமான தூரத்துக்கு அப்பால்தான் நாம் இன்னும் இருக்கிறோம்; எனவே இயற்கை விஞ்ஞானம் தன் காலத்தில் இன்னும் கவனத்துக்கே எடுத்துக் கொள்ளாத ஒரு பொருளைப் பற்றி ஹெகலின் தத்துவஞானம் அக்கறை கொள்ள வேண்டுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது.

ஆனால் உண்மையாகவே இங்கே சொல்லப்பட வேண்டிய விஷயம் ஒன்றுதான்: மேலே வளர்த்துச் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கள் ஹெகலினால் அவ்வளவு துல்லியமாகக் கூறப்படவில்லை. அவருடைய முறையிலிருந்து கிடைக்கும் அவசியமான முடிவு இதுதான்; ஆனால் அந்த முடிவை அவர் இவ்வளவு தெளிவாக ஒருபோதும் வருவிக்கவில்லை; அவர் ஓர் அமைப்பைப் படைக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார், மரபுரீதியான அவசியங்களுக்காக ஒரு தத்துவஞான அமைப்பு ஏதாவதொருவகையான தனிமுதலான உண்மையோடு முடிவடைய வேண்டும் என்பதே இதற்குச் சாதாரணக் காரணம் என்பது மெய்யே. ஆகவே இந்த அழிவற்ற உண்மை என்பது தர்க்கரீதியான அல்லது வரலாற்று நிகழ்வுப் போக்கே ஆகும் என்று ஹெகல்—சிறப்பாக அவர் எழுதிய தர்க்கவியல் நூலில்—எவ்வளவு வலியுறுத்திய போதிலும், அவர் தம்முடைய அமைப்பை ஏதாவதொரு இடத்தில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதால் இந்த நிகழ்வுப் போக்குக்கு ஒரு முடிவைக் கொடுக்கும்படியான நிர்ப்பந்தத்தை உணர்ந்தார். அவருடைய தர்க்கவியல் நூலில் இந்த முடிவை மறுபடியும் ஒரு தொடக்கமாக மாற்ற முடியும்; ஏனென்றால் இங்கே முடிவு நிலை, தனிமுதலான கருத்து—அதைப் பற்றி அவர் ஒன்றுமே சொல்ல முடியாது என்ற அளவில் மட்டுமே அது தனிமுதலானது—''அந்நியமாகிறது'', அதாவது தன்னை இயற்கையாக மாற்றிக் கொண்டு பிறகு மனதில், அதாவது சிந்தனையிலும் வரலாற்றிலும் மறுபடியும் தானாகி விடுகிறது. ஆனால் மொத்த தத்துவஞானத்தின் முடிவிலும் தொடக்கத்துக்கு இப்படித் திரும்புவது ஒரே ஒரு வழியில் மட்டுமே இயலும்; அதாவது, வரலாற்றின் முடிவைப் பின்வரும் விதத்தில் கற்பனை செய்வதன் மூலமாக: இதே தனிமுதலான கருத்தை அறியும் நிலைக்கு மனித குலம் வருகிறது; தனிமுதலான கருத்தை அறிதலை ஹெகலின் தத்துவஞானம் அடைந்திருக்கிறது என்று அறிவிக்கிறது. ஆனால் இந்த வழியில் எல்லா வறட்டுக் கோட்பாட்டுவாதத்தையும் அழிக்கின்ற அவருடைய இயக்கவியல் முறைக்கு மாறான வகையில் அவருடைய அமைப்பின் மொத்த

வறட்டுக் கோட்பாட்டுவாத உள்ளடக்கமும் தனிமுதலான உண்மை என்று அறிவிக்கப்படுகிறது. இப்படி பழமைவாதப் பகுதியின் மிகு வளர்ச்சியில் புரட்சிகரப் பகுதி திணறடிக்கப்படுகிறது. இது தத்துவஞான அறிதலுக்குப் பொருந்துவது மட்டுமல்லாமல், வரலாற்று நடைமுறைக்கும் உரியதே. ஹெகல் என்ற நபரின் மூலம் தனிமுதலான கருத்தைச் செயற்படுத்துகின்ற கட்டத்துக்கு வந்திருக்கும் மனிதகுலம் இந்தத் தனிமுதலான கருத்தை யதார்த்தத்தில் நிறைவேற்றக் கூடிய அளவுக்கு நடைமுறையிலும் அதிக தூரம் வந்திருக்க வேண்டும். ஆகவே தனிமுதலான கருத்து சமகாலத்தவர்கள் மீது ஏற்படுத்திய செய்முறை அரசியல் கோரிக்கைகள் மிகப் பெரிய அளவில் இருப்பதும் சரியல்ல. ஆகவே தனிமுதலான கருத்து என்பது மூன்றாவது பிரெடெரிக்-வில்ஹெல்ம் தன்னுடைய குடிமக்களிடம் திரும்பத்திரும்ப ஆனால் வீணான முறையில் வாக்குறுதி கொடுத்த, சமூகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட முடியாட்சியில், அதாவது அன்றைய ஜெர்மன் குட்டிமுதலாளித்துவ நிலைமைகளுக்குப் பொருத்தமாக உடைமை வர்க்கத்தினரின் வரையறுக்கப்பட்ட, நிதானமான, மறைமுக ஆட்சியில் ஈடேற்றமடையும் என்று **சட்டவியலின் தத்துவவியல்** என்ற நூலின் முடிவில் நாம் காண்கிறோம். மேலும் பிரபுக்களின் அவசியமும் ஊகமான முறையில் நமக்கு விளக்கப்படுகிறது.

ஆகவே முற்றிலும் புரட்சிகரமான ஒரு சிந்தனை முறை மிகவும் துடிப்பில்லாத அரசியல் முடிவை எப்படித் தயாரித்தது என்பதை விளக்குவதற்கு அந்த அமைப்பின் உள் அவசியங்களே போதுமானவை. ஹெகல் ஒரு ஜெர்மானியர், அவருடைய சமகாலத்தவரான கேதேயைப் போல இவரும் சிறிதளவு அற்பவாதியாக இருந்தார் என்பதிலிருந்துதான் இந்த முடிவின் பிரத்யேகமான வடிவம் தோன்றியது என்பதே உண்மையாகும். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்தத் துறையில் ஒலிம்பியக் கடவுள் ஜேயசாக இருந்தபோதிலும், ஒருவராவது ஜெர்மன் அற்பவாதத்திலிருந்து ஒருபோதும் தன்னை முற்றிலும் விடுவித்துக் கொள்ளவில்லை.

ஆனால் ஹெகலின் அமைப்பு இதற்கு முந்திய எந்த அமைப்பைக் காட்டிலும் ஒப்பிட முடியாத விரிவான பரப்பை உள்ளடக்குவதையோ அல்லது இந்தத் துறையில் சிந்தனைச் செல்வத்தை—அது இன்றுகூட வியப்புத் தருவதாகவே இருக்கிறது—குவிப்பதையோ இவை அனைத்துமே தடுக்கவில்லை. மனதின் புலப்பாட்டியல் (மனிதனின் உணர்வு வரலாற்றின் நிகழ்ச்சிப்போக்கில் கடந்து வந்த கட்டங்களைக் குறுகிய வடிவத்தில் அமைத்துத் தனிப்பட்ட உணர்வு அதன் பல்வேறு கட்டங்களையும் கடந்து வரும் வளர்ச்சி, மனதின் கருவியல் மற்றும் தொல்லுயிரியலின் இணைகரம் என்று இதைக் குறிப்பிடலாம்), தர்க்கவியல், இயற்கையின் தத்துவஞானம், மனதின் தத்துவஞானம்—அது அதன் தனித்தனியான வரலாற்று உட்பிரிவுகளாகப் பகுத்து ஆராயப்பட்டது: வரலாற்றின், சட்டத்தின், மதத்தின் தத்துவஞானம், தத்துவஞானத்தின் வரலாறு, அழகியல், இதரவை—இந்த வெவ்வேறு வரலாற்றுத் துறைகள் அனைத்திலும் காணப்படுகின்ற வளர்ச்சியின் இழையைக் கண்டுபிடிக்கவும் விளக்கிக்காட்டவும் ஹெகல் பாடுபட்டார். அவர் படைப்பு மேதை மட்டுமல்லாமல் கலைக்களஞ்சியத்தைப் போன்ற பேரறிவும் உடையவராதலால் ஒவ்வொரு துறையிலும் சகாப்தத்தைப் படைக்கும் பாத்திரத்தை வகித்தார். அவருடைய செயற்கையான உருவாக்கங்களைப் பற்றி அவருடைய சிற்றறிவுள்ள எதிரிகள் இன்றும் கூட அதிகமாகக் கூச்சலிடுகிறார்கள்; அவருடைய ''அமைப்பின்'' தேவைகளின் காரணமாகவே அவர் அவ்வுருவாக்கங்களை அதிகமாகக் கையாள வேண்டியிருந்ததென்பது தானாகவே விளங்கும். ஆனால் இந்த உருவாக்கங்கள் அவருடைய மாபெரும் கட்டிடத்தின் சட்டமும் சாரக் கட்டுமானமுமே. ஒருவர் இங்கே வீணாக உலாவிக் கொண்டிருக்காமல் அந்த மாபெரும் கட்டிடத்திற்குள் நுழைவாரானால், இன்று கூடக் குறையாத மதிப்பைப் பெற்றிருக்கும் எண்ணற்ற செல்வங்களைக் காண முடியும். எல்லாத் தத்துவஞானிகளிடமும் துல்லியமாக ''அமைப்புதான்'' அழியக் கூடியது. எல்லா முரண்பாடுகளையும் மீறிவிட வேண்டும் என்ற விருப்பத்

திலிருந்து, மனித மனதின் அழிவற்ற ஆசையிலிருந்து அது தோன்றுவதுதான் இதற்கு ஒரே காரணம். ஆனால் எல்லா முரண்பாடுகளும் ஒரேயடியாக அழிக்கப்பட்டால், நாம் தனி முதலான உண்மை என்று சொல்லப்படுவதை அடைந்து விடுவோம். உலக வரலாறு முடிவுக்கு வந்து விடும்; அது செய்வதற்கு ஒன்றும் மிஞ்சவில்லை என்றாலும், அது தொடரத்தான் வேண்டும். ஆகவே ஒரு புதிய, தீர்க்கப்பட முடியாத முரண்பாடு தோன்றுகிறது. எல்லா முரண்பாடுகளையும் தீர்க்க வேண்டும் என்று தத்துவஞானத்தின் கடமையை வகுத்துக் கூறும் பொழுது மொத்த மனிதகுலமும் அதன் முன்னேற்ற வளர்ச்சியின் போது மட்டுமே சாதிக்கக் கூடிய கடமையைத் தனியாக ஒரு தத்துவஞானி சாதிக்க வேண்டும் என்றாகிறது. இதை நாம் ஒரு தடவை உணர்ந்தவுடனே —நாம் இதை உணர்வதற்கு நெடுநோக்கில் ஹெகலைக் காட்டிலும் வேறு எவருமே நமக்கு அதிகமாக உதவி செய்யவில்லை—எல்லாத் தத்துவஞானமும்—அந்தச் சொல்லுக்கு இது வரை தரப்பட்டிருக்கும் பொருளில்—முடிவடைந்து விடுகிறது. இந்தப் பாதையின் வழியாகவோ அல்லது எந்தத் தனிநபராலோ அடைய முடியாத ''தனிமுதலான உண்மையை'' விட்டு விடுவோம். அதற்குப் பதிலாக, சோதனைகளை ஆதாரமாகக் கொண்ட விஞ்ஞானங்களின் வழியில், அவற்றின் முடிவுகளை இயக்கவியல் முறையின் மூலம் பொதுமைப்படுத்துகின்ற பாதையின் மூலம் சார்புநிலை உண்மைகளை அடைவதற்கு முயற்சிப்போம். எப்படியும் ஹெகலுடன் தத்துவஞானம் முடிவடைந்து விடுகிறது; ஏனென்றால், ஒரு பக்கத்தில், அதன் மொத்த வளர்ச்சியையும் தன்னுடைய அமைப்பில் அவர் மிகவும் சிறப்பான முறையில் தொகுத்துரைத்தார்; ஏனென்றால், மறு பக்கத்தில், அமைப்புகள் என்ற திருக்குமறுக்கான பாதையிலிருந்து வெளியேறி உலகத்தைப் பற்றிய உண்மையான பரிசோதனையின் மூலம் அறிவைப் பெறுவதற்கு—சுய உணர்வு இல்லாமல் என்றாலும் கூட—அவர் வழி காட்டினார்.

ஜெர்மனியின் தத்துவஞானம் தோய்ந்த சூழலில் இந்த ஹெகலின் அமைப்பு எத்தகைய பிரம்மாண்டமான தாக்

கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை ஒருவர் கற்பனை செய்ய முடியும். அது ஒரு வெற்றி ஊர்வலமாகப் பல பத்தாண்டுகளுக்கு நீடித்தது; ஹெகலின் மரணத்தோடு அது முடிவுக்கு வந்து விட்டதாக எவ்விதத்திலும் கூற முடியாது. அதற்கு மாறாக, 1830 முதல் 1840 முடிய உள்ள காலகட்டத்தில்தான்''ஹெகலியவாதம்''மற்ற எல்லாவற்றையும் பின்னால் தள்ளி ஆட்சி செலுத்தியது; அதிகமாகவோ, குறைவாகவோ எதிரிகளிடம் கூட ஒட்டிக் கொண்டது. துல்லியமாக இந்தக் காலகட்டத்தில்தான் ஹெகலின் கருத்துக்கள்—உணர்வுபூர்வமாகவோ அல்லது உணர்வில்லாமலோ—மிகவும் பல்வகைப்பட்ட விஞ்ஞானங்களில் மிகவும் விரிவாக ஊடுருவிக் கலந்தன; சராசரிக் ''கல்வியறிவு உணர்வு'' தன்னுடைய சிந்தனையுணவாகக் கொண்டிருக்கின்ற ஜனரஞ்சக இலக்கியம் மற்றும் அன்றாடப் பத்திரிகைகளுக்குச் சுவையூட்டின. ஆனால் மொத்தப் போர்முனை முழுவதிலும் கிடைத்த இந்த வெற்றி உள்போராட்டத்துக்குப் பீடிகையாக மட்டுமே இருந்தது.

ஹெகலின் தத்துவத்தை மொத்தமாகப் பார்க்கும் பொழுது, அது மிகவும் வேறுபாடான செய்முறைக் கட்சிக் கருத்துக்களுக்கு அதிகமான இடம் கொடுத்திருந்தது என்பது நமக்குத் தெரியும். அன்றைய ஜெர்மனியின் தத்துவஞான வாழ்க்கையில் மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் இரண்டுதான் செய்முறையானவை: மதமும் அரசியலும். யாராவது ஹெகலின் அமைப்பின் மேல் தலைமையான அழுத்தத்தைக் கொடுத்தால், இந்த இரண்டு துறைகளிலும் அவர் பழமைவாதியாக இருக்க முடியும். எவர் இயக்கவியல் முறையை முக்கியமாகக் கருதுகிறாரோ, அவர் அரசியலிலும் மதத்திலும் மிகவும் தீவிரவாத எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருக்க முடியும். ஹெகலின் நூல்களில் புரட்சிகர ஆவேசம் அடிக்கடி பொங்கிய போதிலும், அவர் மொத்தத்தில் பழமைவாதத் தரப்புக்கே அதிகமாகச் சாய்வதாகத் தோன்றியது: அவருடைய முறையைக் காட்டிலும் அவருடைய அமைப்புக்கே அவர் மிக அதிகமாகக் ''கடும் வேலை'' செய்ய வேண்டியிருந்தது என்பது மெய்யே. 1830க்களின்

இறுதியில் அவருடைய மரபில் ஏற்பட்டிருந்த பிளவு மேன் மேலும் வெளிப்படையாயிற்று. இடதுசாரி அணி, இளம் ஹெகலியவாதிகள்[102] என்று சொல்லப்பட்டவர்கள் வைதீக மதவாதிகளுக்கும்[103] நிலப்பிரபுத்துவப் பிற்போக்காளர்களுக்கும் எதிராக நடத்திய போராட்டத்தில் அவருடைய போதனைகளுக்கு அரசின் சகிப்புத் தன்மையை—பாதுகாப்பையும் கூட—அது வரை வாங்கித் தந்த தத்துவஞான நாவடக்கத்தை அன்று சூடேறியிருந்த பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில் சிறிது சிறிதாகக் கைவிட்டார்கள். 1840இல் நான்காவது பிரெடெரிக்-வில்ஹெல்முடன் வைதீக மதவாதமும் எதேச்சாதிகார-நிலப்பிரபுத்துவப் பிற்போக்கும் அரியணையில் அமர்ந்த பொழுது ஏதாவதொரு தரப்பில் பகிரங்கமாகச் சேர வேண்டியதாயிற்று. போராட்டம் இன்னும் தத்துவஞான ஆயுதங்களோடு நடைபெற்றது—ஆனால் இனியும் சூக்குமமான-தத்துவஞான நோக்கங்களுக்காக அல்ல. அது பழமையான மதத்தையும் அன்றைக்கிருந்த அரசையும் ஒழிப்பதை நேரடியாக எடுத்துக் கொண்டது. *Deutsche Jahrbücher*[104] இதழில் செய்முறை நோக்கங்கள் இன்னமும் அதிகமான அளவுக்கு தத்துவஞானப் போர்வையில் முன்வைக்கப்பட்ட போதிலும், 1842ஆம் வருடத்திய *Rheinische Zeitung* இதழில் இளம் ஹெகலியவாதம் ஆட்சியைக் கைப்பற்ற விரும்பும் தீவிரவாத முதலாளி வர்க்கத்தின் தத்துவஞானம் என்று தன்னை நேரடியாகவே காட்டிக் கொண்டது; தணிக்கை முறையை ஏமாற்றுவதற்கு மட்டுமே தத்துவஞானம் என்ற சிறிய முகமூடியைப் பயன்படுத்தியது.

அந்தக் காலத்தில் அரசியல் மிகவும் முட்கள் நிறைந்த களமாக இருந்தது; ஆகவே முக்கியமான போராட்டம் மதத்துக்கு எதிராகத் திருப்பப்பட்டிருந்தது. இந்தப் போராட்டம்—குறிப்பாக, 1840க்குப் பிறகு—மறைமுகமாக அரசியல் சண்டையாகவும் இருந்தது. ஷ்டிராவுஸ் எழுதி 1835இல் வெளியான ஏசுவின் வாழ்க்கை முதல் உந்துதலைக் கொடுத்தது. சுவிசேஷத் தொல்கதைகளின் உருவாக்கத்தைப் பற்றி அதில் கூறப்பட்டிருந்த தத்துவம் பின்னர் புரூனோ பெளவரால் மறுக்கப்பட்டது; இக்கதைகளில் பெரும்பான்

மையானவை அந்த ஆசிரியர்களால் இட்டுக் கட்டப் பட்டவை என்று அவர் ஆதாரம் காட்டினார். இருவருக்கு மிடையே நடைபெற்ற விவாதம் ''சுய உணர்வுக்கும்'' ''பருப் பொருளுக்கும்'' இடையே போராட்டம் என்ற தத்துவ ஞானப் போர்வையில் நடைபெற்றது. சுவிசேஷத்திலுள்ள அதிசயக் கதைகள் சமூக வட்டத்துக்குள் சுய உணர்வில்லாத, மரபுரீதியான முறையில் தொல்கதைப் படைப்புகளின் மூலம் ஏற்பட்டனவா அல்லது அந்த நற்செய்தித் தூதர் களாலேயே இட்டுக் கட்டுப்பட்டவையா என்ற பிரச்சினை உலக வரலாற்றில் தீர்மானமான இயக்குச் சக்தி''பருப் பொருளா'' அல்லது''சுய உணர்வா'' என்ற பிரச்சினையாகப் பெரிதுபடுத்தப்பட்டது. முடிவில் சமகாலத்திய அராஜக வாதத்தின் தீர்க்கதரிசியான ஷ்டிர்னர் வந்தார்; சுயேச்சை யான ''சுய உணர்வைத்'' தன்னுடைய சுயேச்சையான ''சுய அகந்தையைக்''[105] கொண்டு முந்தி விட்டார்; இவரிடமிருந்து பக்கூனின் நிறையவே எடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஹெகலியவாத மரபு சீர்குலைந்த முறையைப் பற்றிய இந்தப் பகுதிக்குள் நாம் அதிகமாகச் செல்லப் போவ தில்லை. அதைக் காட்டிலும் நமக்கு முக்கியமானது பின்வரு வதாகும்: இளம் ஹெகலியவாதிகளில் மிகத் தீர்மான மானவர்களின் முக்கிய பகுதியினர் உறுதி செய்யப்பட்ட மதத்துக்கு எதிரான போராட்டத்தின் செய்முறைத் தேவை களினால் ஆங்கில-பிரெஞ்சுப் பொருள்முதல்வாதத்துக்குத் துரத்தப்பட்டனர். இது அவர்களுடைய மரபின் அமைப் போடு அவர்களுக்கு மோதலை ஏற்படுத்தியது. பொருள் முதல்வாதம் இயற்கையை ஒரே யதார்த்தமாகக் கருது கின்ற பொழுது, ஹெகலியவாத அமைப்பில் இயற்கை தனி முதலான கருத்தின் ''அந்நியமாதலை'' மட்டுமே, அதாவது அந்தக் கருத்து சிறுதரமாக்கப்படுவதைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இங்கே சிந்தனையும் அதன் சிந்தனை உற் பத்திப் பொருளான கருத்தும் முதனிலையாக இருக் கின்றன; கருத்தின் அருளால் மட்டுமே இருக்கின்ற இயற்கை வழிநிலையாக இருக்கிறது. இந்த முரண்பாட்டுக்கும் இளம்

ஹெகலியவாதிகள் தங்களாலியன்ற அளவுக்கு நன்றாகவோ அல்லது மோசமாகவோ உழன்றார்கள்.

அப்பொழுது ஃபாயர்பாகின் கிறிஸ்துவ சமயத்தின் சாராம்சம் வெளியானது. அது ஒரே அடியில் இந்த முரண்பாட்டை நொறுக்கியது; சுற்றிவளைத்தல்கள் எதுவுமின்றி பொருள் முதல்வாதத்தை மறுபடியும் அரியணையின் மேல் வைத்தது. இயற்கை எல்லாத் தத்துவஞானத்திலிருந்தும் சுதந்திரமான முறையில் இருக்கிறது. இந்த அடிப்படையின் மேல்தான் மனிதப் பிறவிகளான நாம்—நாமும் இயற்கையின் உற்பத்திதானே—வளர்ச்சியடைந்திருந்தோம். இயற்கைக்கும் மனிதனுக்கும் அப்பால் எதுவுமே இல்லை; நம்முடைய மதக் கற்பனைகள் படைத்திருக்கும் உயர் பிறவிகள் நம்முடைய சொந்த சாராம்சத்தின் விசித்திரமான பிரதிபலிப்பு மட்டுமே. மயக்கம் கலைந்தது. ''அமைப்பு'' தகர்க்கப்பட்டுத் தூக்கி எறியப்பட்டது. நம்முடைய கற்பனையில் மட்டுமே இருப்பதாக எடுத்துக்காட்டப்பட்ட முரண்பாடு கரைந்தது. ஒருவர் இதைச் சிறிதளவு தெரிந்து கொள்வதற்கு இந்தப் புத்தகம் ஏற்படுத்திய விடுவிக்கும் உணர்ச்சியைத் தானே அனுபவித்திருக்க வேண்டும். எங்கும் உற்சாகம் பொங்கியது. நாங்கள் அனைவருமே உடனடியாக ஃபாயர்பாக்வாதிகளானோம். மார்க்ஸ் இந்தப் புதிய கருதுகோளை எவ்வளவு உற்சாகத்தோடு வரவேற்றார், விமர்சனத் தயக்கங்கள் அனைத்தையும் மீறி எந்த அளவுக்கு அதன் தாக்கத்துக்கு உட்பட்டார் என்பதை ஒருவர் அறிய புனிதக் குடும்பம் என்ற நூலைப் படிக்க வேண்டும்.

ஃபாயர்பாகின் புத்தகத்தின் குறைகளும் கூட அதன் உட்னடியான தாக்கத்துக்கு உதவி செய்தன. அதன் இலக்கிய நடை—சில சமயங்களில் மிகை அலங்காரமாகவும் இருந்தது—அதற்குப் பரந்த வாசகர்களை ஏற்படுத்தியது; எப்படி இருப்பினும், நெடுங்காலமாக இருந்த சூக்குமமான மற்றும் புரிந்து கொள்ள இயலாத ஹெகலியவாதத்துக்குப் பிறகு அது புத்துணர்வூட்டுவதாகவும் இருந்தது. அன்பைக் கடவுளைப் போல மிகைப்படுத்தி வழிபாடு செய்வதற்கும் இது பொருந்துவதே; இது ''கலப்பற்ற பகுத்தறிவின்''

சகித்துக் கொள்ள முடியாத ஆதிக்கத்துக்குப் பிறகு இப் பொழுது வந்தபடியால்—அதை நியாயப்படுத்த முடியா விட்டாலும்—ஒரு சமாதானமிருந்தது. ஆனால் ''கல்வி சிறந்த'' ஜெர்மனியில் 1844ஆம் வருடத்திலிருந்து பிளேக் நோயைப் போலப் பரவிக் கொண்டிருக்கின்ற ''மெய்யான சோஷலிசம்'' துல்லியமாக ஃபாயர்பாகின் இந்த இரண்டு பலவீனங்களையே தன்னுடைய தொடக்க நிலையாக எடுத்துக் கொண்டது என்பதை நாம் மறக்கக் கூடாது. அது விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பதிலாக இலக்கியச் சொற்றொ டர்களை உபயோகித்தது; உற்பத்தியைப் பொருளாதார ரீதி யில் மாற்றியமைப்பதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தின் விடு தலைக்குப் பதிலாக ''அன்பின்'' மூலம் மனிதகுலத்தின் விடு தலையைப் பற்றிப் பேசியது; சுருக்கமாகச் சொல்வதென் றால், குமட்டலைத் தருகின்ற நளின நடை மற்றும் அன்புப் பரவசங்களில்—அந்த நடைக்குச் சிறந்த பிரதிநிதியாக ஹெர் கார்ல் குருன் இருந்தார்—தன்மையே பறிகொடுத்தது.

மற்றொரு விஷயத்தையும் நாம் மறக்கக் கூடாது: ஹெக லியவாத மரபு சிதறிப் போனாலும், ஹெகலியவாதத் தத்துவ ஞானம் விமர்சனத்தின் மூலமாக முறியடிக்கப்படவில்லை. ஷ்டிராவுசும் பௌவரும் அதன் பக்கங்களில் ஒவ்வொன்றை எடுத்துக் கொண்டார்கள், விவாதத்தில் எதிரும் புதிருமாக நிறுத்தினார்கள். ஃபாயர்பாக் அமைப்பைச் சிதறடித்து விட்டு அதை உதறி விட்டார். ஆனால் ஒரு தத்துவஞானம் போலியானது என்று சொல்வது மட்டுமே அதைத் தீர்த்துக் கட்டுவதாகாது. ஹெகலியவாதத் தத்துவஞானத்தைப் போன்ற வன்மையான படைப்பை—அது நாட்டின் அறிவு ரீதியான வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறது—சாதாரணமாகப் புறக்கணிப்பதன் மூலம் தீர்த்துக் கட்டிவிட முடியாது. அதன் அர்த்தத்திலேயே அதைக் ''கரைக்க'' வேண்டும், அதாவது விமர்சனத்தின் மூலம் அதன் வடிவத்தை அழிக்க வேண்டும், அதனால் சாதிக்கப்பட்டிருக்கும் புதிய உள்ளடக்கத்தைக் காப்பாற்ற வேண்டும். அது எவ்விதம் நிறைவேற்றப்பட்டது என்பதைக் கீழ்வரும் பகுதியில் காண்போம்.

ஆனால் இதற்கிடையில் 1848ஆம் வருடப் புரட்சி, ஃபாயர்பாக் ஹெகலை ஒதுக்கியதைப் போலவே, மொத்த தத்துவஞானத்தையுமே எந்தச் சடங்குமில்லாமல் ஒதுக்கியது. இந்த நிகழ்வுப்போக்கின் போது ஃபாயர்பாகும் பின்னணிக்குத் தள்ளப்பட்டார்.

## II

அனைத்துத் தத்துவஞானத்தின்—குறிப்பாக, மிகவும் நவீன காலத் தத்துவஞானத்தின்—மாபெரும் அடிப்படையான பிரச்சினை சிந்தனைக்கும் இருத்தலுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றியதே. மிகவும் முந்திய தொடக்க காலங்களில், தங்களுடைய உடல்களின் கட்டமைப்புகளைப் பற்றி இன்னும் மனிதர்களுக்கு எதுவுமே தெரியாதிருந்த காலத்தில் கனவுத் தோற்றங்களை விளக்க இயலாதபடியால்* தங்களுடைய சிந்தனையும் உணர்வுகளும் தங்கள் உடல்களின் செயல்களல்ல, ஆனால் உடலில் வசிக்கின்ற, மரணத்தின் போது அதிலிருந்து வெளியேறுகின்ற விசேஷமான ஆன்மாவின் செயல்கள் என்று நம்பியதிலிருந்து, அந்தக் காலத்திலிருந்து இந்த ஆன்மாவுக்கும் வெளி உலகத்துக்குமிடையே உள்ள உறவுகளைப் பற்றிச் சிந்திக்கும்படி மனிதர்கள் தூண்டப்பட்டிருக்கிறார்கள். மரணத்தின் போது அது உடலை விட்டுப் பிரிந்து தனியே வாழ்ந்தது என்றால் அதற்கு மேலும் மற்றொரு தனித்த மரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய காரணமில்லை. ஆகவே அதன் அழிவற்ற தன்மை பற்றிய கருத்து தோன்றியது. அது வளர்ச்சியின் அந்தக்

---

* கனவுகளில் வருகின்ற மனித வடிவங்கள் தங்களுடைய உடல்களை விட்டுத் தற்காலிகமாக வெளியே வந்திருக்கும் ஆன்மாக்கள் என்ற கருத்து காட்டுமிராண்டிகள் மற்றும் நாகரிகத்தில் கீழ்நிலையானவர்களிடம் இன்னும் எங்குமிருக்கிறது; ஆகவே கனவுத் தோற்றம் கனவு காண்பவனிடம் செய்யும் செயல்களுக்கு உண்மையான மனிதன் பொறுப்பாகக் கருதப்பட்டான். உதாரணமாக, இம் துர்ன் 1884இல் கயானாவிலுள்ள இந்தியர்கள் மத்தியில் இந்த நம்பிக்கை இருப்பதைக் கண்டார். (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

கட்டத்தில் ஒரு ஆறுதலாகத் தோன்றவில்லை, சிறிதும் தவிர்க்க முடியாத விதியாகத் தோன்றியது; பெரும்பாலும் —கிரேக்கர்கள் மத்தியில் இருந்ததைப் போல—உறுதியான துன்பமாக இருந்தது. ஆன்மா இருக்கிறது என்பது ஒரு முறை ஒப்புக்கொள்ளப்பட்ட பின் உடலின் மரணத்துக்குப் பிறகு இந்த ஆன்மாவை என்ன செய்வதென்ற சாதாரண சர்வப்பொதுவான அறியாமையிலிருந்து தோன்றிய குழப்பம் தனிப்பட்ட அமர நிலை என்ற சோர்வளிக்கின்ற கருத்துக்கு இட்டுச் சென்றதே அன்றி ஆறுதலை வேண்டிய மத உணர்ச்சி அதற்கு இட்டுச்செல்லவில்லை. துல்லியமாக இதே போன்ற முறையினால் இயற்கைச் சக்திகளை மனிதப் பண்புகளின் உருவகமாக்கியதன் மூலம் முதற்கடவுள்கள் தோன்றின. மதங்கள் மேலும் வளர்ச்சியடைந்த பொழுது இந்தச் கடவுள்கள் மேன்மேலும் இம்மைக்குப் புறம்பான வடிவத்தைப் பெற்றன; கடைசியில் மனிதனுடைய அறிவின் வளர்ச்சிப்போக்கில் இயற்கையாக ஏற்படுகின்ற சூக்குமப் படுத்துகின்ற—வடிகட்டுதல் என்று கூட நான் அநேகமாக எழுதியிருப்பேன்—முறையினால் ஏறக்குறைய வரையறுக்கப்பட்ட, பரஸ்பரம் கட்டுப்படுகின்ற பல கடவுளர்களிலிருந்து ஒருமைவாத மதங்களின்[106] ஒரே கடவுள் என்ற கருத்து மனிதர்களின் மூளைகளில் தோன்றியது.

ஆகவே சிந்தனைக்கும் இருத்தலுக்கும் உள்ள உறவு, இயற்கைக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவு—தத்துவ ஞானம் முழுமையிலும் தலைமையான பிரச்சினை—மதத்துக்குச் சிறிது கூடக் குறையாத அளவில் காட்டுமிராண்டித் தனத்தின் குறுகிய, மூடத்தனமான கருத்துக்களில் வேரூன்றியிருக்கிறது. ஆனால் ஐரோப்பாவிலுள்ள மனிதகுலம் கிறிஸ்துவ மத்திய காலங்களின் போது தனக்கேற்பட்ட நெடுந்துயில் கலைந்து விழித்துக் கொண்ட பிறகே இந்தப் பிரச்சினை அதன் மொத்தக் கூர்மையுடன் முதன்முதலாக முன்வைக்கப்பட முடிந்தது, அதன் முழு முக்கியத்துவத்தையும் அடைய முடிந்தது. இருத்தலைப் பொறுத்தவரை சிந்தனையின் நிலையைப் பற்றிய பிரச்சினை, எது முதன்மையானது, ஆன்மாவா அல்லது இயற்கையா என்ற பிரச்சினை

—மத்திய கால சமய சித்தாந்தங்களில் மாபெரும் பங்கு வகித்த அதே பிரச்சினை—திருச்சபையை மீறிப் பின்வருமாறு கூர்மையாக எடுத்துரைக்கப்பட்டது: கடவுள் உலகத்தைப் படைத்தாரா அல்லது உலகம் ஊழிக்கால முதல் இருந்து வந்திருக்கிறதா?

இந்தப் பிரச்சினைக்குத் தத்துவஞானிகள் கண்ட தீர்வுகள் அவர்களை இரண்டு மாபெரும் முகாம்களாகப் பிரித்தன. இயற்கையைக் காட்டிலும் ஆன்மாவின் முதன்மையை வலியுறுத்தியவர்கள், அதனால் கடைசி நோக்கில் ஏதாவதொரு வடிவத்தில் உலகம் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதியவர்கள்—கிறிஸ்துவ சமயத்தைக் காட்டிலும் தத்துவஞானிகளிடத்தில் (உதாரணம், ஹெகல்) இந்த உலகப் படைப்பு இன்னும் அதிகச் சிக்கலானதாகவும் நடக்க முடியாததாகவும் இருக்கிறது—கருத்துமுதல்வாத முகாமில் இருந்தார்கள். இயற்கையை முதன்மையாகக் கருதிய மற்றவர்கள் பொருள்முதல்வாதத்தின் பல்வேறு மரபுகளையும் சேர்ந்தவர்கள்.

கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என்ற இரண்டு சொற்களும் தொடக்கத்தில் இவற்றைத் தவிர வேறு எதையும் குறிக்கவில்லை; இங்கும் வேறு எந்தப் பொருளிலும் அவை பயன்படுத்தப்படவில்லை. அவற்றுக்கு வேறு பொருள் எதையாவது தருகின்ற பொழுது, என்ன குழப்பம் ஏற்படுகிறதென்று கீழே காண்போம்.

ஆனால் சிந்தனைக்கும் இருத்தலுக்கும் உள்ள உறவைப் பற்றிய பிரச்சினைக்கு இன்னும் மற்றொரு பக்கமும் இருக்கிறது: நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தைப் பற்றிய நமது சிந்தனைகள் இந்த உலகத்தோடு என்ன உறவைக் கொண்டிருக்கின்றன? நம்முடைய சிந்தனைக்கு மெய்யான உலகத்தை அறியும் தகுதி உண்டா? மெய்யான உலகத்தைப் பற்றிய நமது கருத்துக்களிலும் எண்ணங்களிலும் யதார்த்தத்தைச் சரியாகப் பிரதிபலிக்க நம்மால் முடிகிறதா? தத்துவஞான மொழியில் இந்தப் பிரச்சினை சிந்தனை மற்றும் இருத்தலின் முற்றொருமை பற்றிய பிரச்சினை எனப்படும். தத்துவ ஞானிகளில் மிகவும் அதிகப் பெரும்பான்மையினர் இந்தப்

பிரச்சினைக்கு உடன்பாடான பதிலளிக்கிறார்கள். உதாரணமாக, ஹெகலிடம் உடன்பாடு தானாகவே புலப்படும்; ஏனென்றால் மெய்யான உலகத்தில் துல்லியமாக அதன் சிந்தனை உள்ளடக்கத்தை—ஊழிக்கால முதல் எங்கோ இருந்து வந்திருக்கின்ற, உலகத்திலிருந்து தனித்திருக்கின்ற மற்றும் அதற்கு முந்திய தனிமுதலான கருத்தின் ஈடேற்றமாக உலகத்தைப் படிப்படியாக உருவாக்குவதை—நாம் அறிகிறோம். ஆனால் ஆரம்பத்திலேயே சிந்தனை உள்ளடக்கமாக இருக்கின்ற ஓர் உள்ளடக்கத்தைச் சிந்தனை அறிய முடியும் என்பது அதிக நிரூபணமின்றி வெளிப்படையாகும். இங்கே நிரூபிக்கப்பட வேண்டியது ஏற்கெனவே முற்கூற்றிலேயே மறைந்திருக்கிறது என்பதும் அதே அளவுக்கு வெளிப்படையாகும். ஆனால் ஹெகல் சிந்தனை மற்றும் இருத்தலின் முற்றொருமை பற்றிய தன்னுடைய நிரூபணத்திலிருந்து, தன்னுடைய சிந்தனைக்குத் தன்னுடைய தத்துவஞானம் சரியாக இருப்பதால், ஆகவே அது ஒன்று மட்டுமே சரியானது, மனிதகுலம் உடனடியாக இந்தத் தத்துவஞானத்தைத் தத்துவத்திலிருந்து நடைமுறைக்கு மாற்றி உலக முழுவதையும் ஹெகலின் கோட்பாடுகளின்படி மாற்றுவதன் மூலம் சிந்தனை மற்றும் இருத்தலின் முற்றொருமை தன்னுடைய தகுதியை நிரூபிக்க வேண்டும் என்ற அதிகப்படியான முடிவைப் பெறுவதை அது எவ்விதத்திலும் தடுக்கவில்லை. அவர் அநேகமாக எல்லாத் தத்துவஞானிகளோடும் இந்தப் பிரமையைப் பகிர்ந்து கொள்கிறார்.

இவை தவிர, தத்துவஞானிகளில் மற்றொரு ரகமும் இருக்கிறது; இவர்கள் உலகத்தை அறிவதற்குள்ள அல்லது குறைந்தபட்சம் விரிவாக அறிவதற்குள்ள சாத்தியத்தை மறுக்கிறார்கள். அவர்களில்—மிக நவீன காலத்தைச் சேர்ந்தவர்களில்—ஹியூமும் காண்ட்டும் இருக்கிறார்கள்; அவர்கள் தத்துவஞான வளர்ச்சியில் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை மறுப்பதற்கு—கருத்துமுதல்வாத நிலையிலிருந்து இது சாத்தியம் என்ற அளவுக்கு—தீர்மானமானவற்றை ஹெகல் ஏற்கெனவே கூறியிருக்கிறார். ஃபாயர்பாக் செய்த பொருள்முதல்வாதச் சேர்த்தல்

களில் ஆழத்தைக் காட்டிலும் சாமர்த்தியமே அதிகம். மற்ற தத்துவஞான முட்டுக்கட்டைகள் அனைத்தையும் போல, இதையும் மறுப்பதற்கு மிகச் சிறந்த வழி செய்முறையே, அதாவது பரிசோதனை மற்றும் தொழில்துறையே. இயற்கை நிகழ்வுப்போக்கு பற்றி நம்முடைய கருதுகோள் சரியானது என்று நிரூபிப்பதற்கு நாமே அதைச் செய்ய, அதன் நிலைமைகளிலிருந்து அதைப் படைத்து நம்முடைய நோக்கங்களுக்கு அது பயன்படுமாறு செய்ய முடியுமானால் அப்பொழுது காண்ட்டின் கைப்பற்ற முடியாத ''தன்னிலைப் பொருளுக்கு'' ஒரு முடிவு ஏற்படும். தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உடல்களில் உருவாக்கப்படும் இரசாயனப் பொருள்கள் அங்கக இரசாயனம் இவற்றை ஒவ்வொன்றாக உற்பத்தி செய்யத் தொடங்குகின்ற வரை அப்படித் ''தன்னிலைப் பொருள்களாக'' இருந்தன; அதற்குப் பிறகு ''தன்னிலைப் பொருள்'' நமக்குரிய பொருளாயிற்று. உதாரணமாக, மாஞ்சிட்டியிலுள்ள வர்ணச் சாயமான அலிஸரீன்; நாம் இனியும் வயல்களில் மாஞ்சிட்டி வேர்களை வளர்ப்பதற்குச் சிரமப்படுவதில்லை; அதைக் காட்டிலும் மிகவும் மலிவான, எளிமையான முறையில் நிலக்கரியின் கீலிலிருந்து சாயத்தை உற்பத்தி செய்கிறோம். முந்நூறு வருடங்களாகக் காப்பேர்னிக்கசின் சூரிய மண்டல அமைப்பு ஒரு வெறும் கருதுகோளாக—ஆயிரம் அல்லது பத்தாயிரத்துக்கு ஒன்று மட்டுமே அதற்குச் சாதகமாக இருக்கும்—ஆனால் இன்னும் கருதுகோளாகவே இருந்தது. ஆனால் லெவெரியே இந்த மண்டல அமைப்பு கொடுத்த விவரங்களின் மூலம் யாருக்குமே தெரியாத கிரகம் ஒன்று இருப்பதன் அவசியத்தை வருவித்தது மட்டுமல்லாமல் வானத்தில் இந்தக் கிரகம் இருக்க வேண்டிய இடத்தையும் கணக்கிட்டுக் கூறி, கால்லே உண்மையாகவே இந்தக் கிரகத்தைக்[107] கண்டுபிடித்த பொழுது, காப்பேர்னிக்கசின் அமைப்பு நிரூபிக்கப்பட்டது. ஆனால் புதிய காண்ட்டியவாதிகள் ஜெர்மனியில் காண்ட்டின் கருத்துக்களுக்கும் இங்கிலாந்தில் அறியொணாவாதிகள்[108] ஹியூமின் கருத்துக்களுக்கும் (அங்கே உண்மையில் அவை ஒருபோதும் மறையவில்லை) புத்துயிரூட்ட முயற்சி செய்

*கிறார்கள் என்றால், இது—தத்துவரீதியிலும் செய்முறையிலும் அவர்களிருவருடைய கருத்துக்களும் நெடுங்காலத்துக்கு முன்னரே மறுக்கப்பட்டு முடிவானதைக் கருத்தில் கொண்டு—விஞ்ஞானரீதியில் ஒரு பின்னடைவாகும், செய்முறையில் பொருள்முதல்வாதத்தை உலகத்துக்கு முன்னால் மறுத்துவிட்டு திருட்டுத் தனமாக ஏற்றுக் கொள்கின்ற வெட்கக்கேடான செயலாக மட்டுமே இருக்கும்.*

*ஆனால் டெக்கார்ட் முதல் ஹெகல் முடிய மற்றும் ஹாப்ஸ் முதல் ஃபாயர்பாக் முடிய இந்த நெடுங்காலத்தில் தத்துவஞானிகள்—அவர்கள் நினைத்ததைப் போல—கலப்பற்ற பகுத்தறிவின் சக்தியினால் மட்டுமே ஒருபோதும் உந்தப்படவில்லை. அதற்கு மாறாக, உண்மையிலேயே அவர்களை மிகவும் அதிகமாக முன்னால் விரட்டியது என்னவென்றால் இயற்கை விஞ்ஞானம் மற்றும் தொழில்துறையின் மேன்மேலும் வேகமான முன்னேற்றமே. பொருள்முதல்வாதிகளிடம் இது மேற்பரப்பிலேயே தெளிவாகத் தெரிந்தது. ஆனால் கருத்துமுதல்வாத அமைப்புகளும் மேன்மேலும் பொருள்முதல்வாத உள்ளடக்கத்தைத் தமக்குள் நிரப்பிக் கொண்டன; மனத்துக்கும் பருப்பொருளுக்குமிடையே உள்ள எதிர்நிலையைப் பல கடவுள் வழிபாட்டு முறையின்படி[109] சமரசப்படுத்த முயற்சி செய்தன. ஆகவே கடைசியில் ஹெகலின் அமைப்பு முறையிலும் உள்ளடக்கத்திலும் கருத்துமுதல்வாதரீதியில் தலைகீழாக மாற்றப்பட்ட பொருள்முதல்வாதத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது.*

*ஆகவே ஷ்டார்க்கே ஃபாயர்பாகைப் பற்றித் தன்னுடைய வர்ணனையில் முதலாவதாக சிந்தனைக்கும் இருத்தலுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றிய இந்த அடிப்படையான பிரச்சினையைப் பொறுத்தவரை அவருடைய நிலையை ஆராய்வது புரிந்துகொள்ளப்படக் கூடியதே. முந்திய தத்துவஞானிகளின்—குறிப்பாக, கான்ட்டுக்குப் பிந்தியவர்களின்—கருத்துக்களை அனாவசியமான அளவுக்குப் பகட்டான தத்துவ மொழியில் வர்ணிக்கின்ற குறுகிய அறிமுகத்துக்குப் பிறகு—ஆசிரியர் இதில் ஹெகலினுடைய எழுத்துக்களின் சில பகுதிகளை மிகவும் சம்பிரதாயமான முறையில் எடுத்*

தாளுவதன் மூலம் அவர் தனக்குரியதைக் காட்டிலும் குறைவான சிறப்பையே அடைகிறார்—ஃபாயர்பாகின் ''இயக்க மறுப்பியலின்'' வளர்ச்சிப்போக்கு இங்கே சம்பந்தமுடைய இந்தத் தத்துவஞானியின் எழுத்துக்களில் அடுக்கடுக்காகப் பிரதிபலிக்கப்பட்டிருப்பதைப் பற்றிய வர்ணனை தொடர்கிறது. இந்த வர்ணனை கடுமுயற்சியோடும் தெளிவான முறையிலும் விரித்துரைக்கப்படுகிறது; ஆனால் புத்தகம் முழுவதிலும் போலவே, இந்த வர்ணனையிலும் தத்துவ ஞானச் சொற்றொடர்கள், அடிப்பாரத்தைப் போல, மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன; எல்லா இடங்களிலுமே அவை தவிர்க்க முடியாதவை என்று ஒருக்காலும் சொல்ல முடியாது. ஆசிரியர் ஒரே மரபின் சொற்பிரயோக முறையை அல்லது ஃபாயர்பாகினுடைய சொற்பிரயோக முறையைக் கூட எவ்வளவு குறைவாகவும், மிகவும் மாறுபாடான போக்குகளின், குறிப்பாக இன்று மிகவும் அதிகமாக உள்ள, தம்மைத் தத்துவஞானம் என்று சொல்லிக் கொள்கின்ற போக்குகளின் சொற்பிரயோகங்களை எவ்வளவு அதிகமாகவும் செலுத்துகிறாரோ, அந்த அளவுக்கு இந்த அடிப்பாரம் மிகக் கலவரமான விளைவை ஏற்படுத்துகிறது.

ஃபாயர்பாகின் பரிணாம வளர்ச்சி ஒரு ஹெகலியவாதி—முற்றிலும் மரபுரீதியான ஹெகலியவாதியாக அவர் ஒரு போதும் இருக்கவில்லை என்பது உண்மையே—பொருள் முதல்வாதியாக மாறுவதே. இந்தப் பரிணாமத்தில் ஒரு திட்டவட்டமான கட்டத்தில் தனக்கு முந்தியவருடைய கருத்துமுதல்வாத அமைப்புடன் முழுமையாக முறித்துக் கொள்வது அவசியமாகி விட்டது. இம்மைக்கு முன்பே ''தனி முதலான கருத்து'' இருந்தது, உலகத் தோற்றத்துக்கு முன்பே ''தர்க்கவியல் இனங்கள் இருந்தன'' என்ற ஹெகலியவாதம் இம்மைக்குப் புறம்பான படைப்புக் கடவுள் இருந்தார் என்ற நம்பிக்கையின் விசித்திரமான எச்சத்தைத் தவிர வேறொன்றுமல்ல, பொருண்மையான, புலன்களால் உணரத்தக்க, நாம் வாழ்கின்ற உலகம்தான் ஒரே யதார்த்தம், நம்முடைய உணர்வும் சிந்தனையும்—அவை எவ்வளவு

தான் புலனுணர்ச்சிக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றிய போதிலும்—மூளை என்ற பொருண்மையான உடல் உறுப்பின் உற்பத்தியே என்ற முடிவை நோக்கி ஃபாயர்பாக் கடைசியில் தடுக்க முடியாத சக்தியோடு துரத்தப்படுகின்றார். பருப்பொருள் மனதின் உற்பத்திப் பொருள் அல்ல, ஆனால் மனம் பருப்பொருளின் மிக உயர்ந்த உற்பத்திப் பொருள். இது கலப்பற்ற பொருள்முதல்வாதம் என்பது உண்மையே. ஆனால் இவ்வளவு தூரம் வந்த பிறகு ஃபாயர்பாக் நின்று விடுகிறார். தத்துவஞானத்துக்கு வழக்கமான தப்பெண்ணத்தை—சாராம்சத்துக்கு எதிரானதல்ல, ''பொருள் முதல்வாதம்'' என்ற பெயருக்கு எதிரான தப்பெண்ணத்தை—அவரால் போக்க முடியவில்லை. அவர் எழுதினார்: ''எனக்கு மனித சாராம்சம் மற்றும் அறிவு என்ற கட்டிடத்தின் அடிப்படையே பொருள்முதல்வாதம்; ஆனால் உடலியல் நிபுணருக்கு, இயற்கை விஞ்ஞானிக்கு—அதன் குறுகிய அர்த்தத்தில்—உதாரணமாக, மொலிஷோட்டுக்கு அது குறிப்பிடுகின்ற பொருளான கட்டிடம்—இது அவர்களுடைய கண்ணோட்டத்திலும் தொழில்முறைப்படியும் அவசியமாகவே இருக்கிறது; அது என்னவாக இருக்குமோ அப்படி எனக்கிருப்பதில்லை. பின்னோக்கில் நான் பொருள் முதல்வாதிகளோடு முழுமையாக உடன்படுகிறேன், ஆனால் முன்னோக்கியல்ல.''

பருப்பொருளுக்கும் மனதுக்குமிடையே உள்ள உறவைப் பற்றிய திட்டவட்டமான கருத்தோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுவான உலகக் கண்ணோட்டமான பொருள்முதல்வாதத்தையும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில்—அதாவது, பதினெட்டாம் நூற்றாண்டில்—இந்த உலகக் கண்ணோட்டம் எடுத்துரைக்கப்பட்ட விசேஷமான வடிவத்தையும் ஃபாயர்பாக் இங்கே ஒன்றாகச் சேர்க்கிறார். இதைக் காட்டிலும் அதிகமானது என்னவென்றால், இன்று இயற்கை விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவர்களின் மூளைகளில் பதினெட்டாம் நூற்றாண்டுப் பொருள்முதல் வாதம் இன்றும் தொடர்கின்ற ஆழமில்லாத, கொச்சையான வடிவத்தோடு—1850க்களில் பியூஹ்னர், ஃபோக்ட்

மற்றும் மொலிஷோட் தமது சுற்றுப் பயணங்களில் போதித்த வடிவத்தோடு —அதை ஒன்றாகச் சேர்க்கிறார். ஆனால் கருத்துமுதல்வாதம் வளர்ச்சியின் பல கட்டங்களைக் கடந்து வந்ததைப் போலவே, பொருள்முதல்வாதமும் கடந்து வந் திருக்கிறது. ஒவ்வொரு சகாப்தகரமான கண்டுபிடிப்புக்குப் பிறகும்—இயற்கை விஞ்ஞானத் துறையில் கூட—அது தன் னுடைய வடிவத்தை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. இந்தப் பொருள்முதல்வாத அணுகுமுறைக்கு வரலாறும் உட்படுத்தப்பட்ட பிறகு இங்கும் பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சியின் புதிய வாயில் திறந்துவிடப்பட்டது.

சென்ற நூற்றாண்டுப் பொருள்முதல்வாதம் மிக அதிக மான அளவுக்கு யாந்திரிகமாக இருந்தது; ஏனென்றால் அந்தக் காலத்தில் எல்லா இயற்கை விஞ்ஞானங்களிலும் இயந்திரவியல் மட்டுமே—சடப்பொருள்களின் (வானமண் டல மற்றும் பூமண்டல) இயந்திரவியல் மட்டுமே, சுருக்க மாகக் கூறுவதென்றால், ஈர்ப்புச் சக்தியின் இயந்திரவியல் மட்டுமே—ஏதாவதொரு திட்டவட்டமான முடிவுக்கு வந் திருந்தது. அந்தக் காலத்தில் இரசாயனம் அதன் குழந்தைப் பருவ புளோஜிஸ்டன் தத்துவ வடிவத்தில்[110] மட்டுமே இருந் தது. உயிரியல் இன்னும் குழந்தைகளின் அணையாடையில் இருந்தது; தாவர மற்றும் விலங்கியல் உயிரினங்கள் மேலெ ழுந்த வாரியாக மட்டுமே ஆராயப்பட்டிருந்தன; அவை முற்றிலும் யாந்திரிகமான காரணங்களின் விளைவு என்று விளக்கப்பட்டன. டெக்கார்ட் விலங்கை ஓர் இயந்திரம் என்று கூறியதைப் போல, பதினெட்டாம் நூற்றாண்டுப் பொருள் முதல்வாதிகள் மனிதனை ஓர் இயந்திரம் என்றார்கள். இர சாயன மற்றும் அங்கக இயற்கையின் வளர்ச்சிப்போக்குகளில் இயந்திரவியலின் அளவுகோல்களைத் தனி முறையில் கை யாள்வது—அந்த வளர்ச்சிப்போக்குகளில் இயந்திரவியலின் விதிகளும் பொருந்துவனவே என்றாலும், அவை இதர உயர் நிலையான விதிகளால் பின்னணிக்குத் தள்ளப்படுகின்றன— மூலச்சிறப்புள்ள பிரெஞ்சுப் பொருள்முதல்வாதத்தின் முதல் பிரத்யேகமான, அந்தக் காலத்தில் தவிர்க்க முடியாத குறைபாடாக இருந்தது.

இந்தப் பொருள்முதல்வாதத்தின் இரண்டாவது பிரத்யேகமான குறைபாடு பிரபஞ்சத்தை ஒரு நிகழ்வுப்போக்காக, இடைவிடாத வரலாற்று வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கும் பருப்பொருள் என்ற முறையில் புரிந்து கொள்ளத் தவறியது. இது அந்தக் காலத்தின் இயற்கை விஞ்ஞானத்தின் அறிவு நிலை மற்றும் அதனுடன் தொடர்புடைய இயக்க மறுப்பியல், அதாவது இயக்கவியலுக்கு மாறான தத்துவஞான ஆய்வு முறையோடு பொருந்தியதே. ஏற்கெனவே தெரிந்த வரையில், இயற்கை முடிவில்லாத இயக்கத்தில் இருந்தது. ஆனால் அந்தக் காலத்திய கருத்துக்களின்படி இந்த இயக்கம்—அதுவும் முடிவில்லாதபடி—வட்டத்தில் சுழன்றது, ஆகவே அந்தப் புள்ளியிலிருந்து ஒரு போதும் நகரவில்லை; அது ஒரே விளைவுகளை மீண்டும் மீண்டும் ஏற்படுத்தியது. அந்தக் காலத்தில் இந்தக் கருத்து தவிர்க்க முடியாதது. சூரிய மண்டலத்தின் தோற்றத்தைப் பற்றிய கான்ட்டின் தத்துவம்[111] சமீப காலத்தில்தான் முன் வைக்கப்பட்டிருந்தது; அது இன்னும் ஒரு விநோதமாகவே கருதப்பட்டது. பூமியின் வளர்ச்சியின் வரலாறான பூகர்ப்பவியலைப் பற்றி இன்னும் ஒன்றுமே தெரியவில்லை. இன்றுள்ள உயிரினங்கள் எளிமையானவற்றிலிருந்து பல்தொகுதியானவற்றிற்கு நடைபெற்ற வளர்ச்சியின் நீண்ட தொடர் வரிசையின் விளைவு என்ற கருத்தோட்டம் அந்தக் காலத்தில் விஞ்ஞானரீதியில் அறவே முன்வைக்கப்பட முடியாது. ஆகவே இயற்கையைப் பற்றி வரலாற்றுக்குப் புறம்பான கருத்து தவிர்க்க முடியாததாகும். இதைச் சுட்டிக்காட்டி நாம் பதினெட்டாம் நூற்றாண்டுத் தத்துவஞானிகளைக் குறை கூற அதிகமான காரணமில்லை; ஏனென்றால் இதே குறை ஹெகலிடமும் காணப்படுகிறது. ஹெகல் கருத்தின்படி, கருத்தின் ''அந்நியமாதல்'' என்ற முறையில் இயற்கை காலப் பரப்பில் வளர்ச்சி அடைய முடியாதது; அது விசும்பில் மட்டுமே அகல்விரிவான வளர்ச்சி அடையக் கூடியது; ஆகவே அது தன்னுள் அடங்கியிருக்கும் எல்லா வளர்ச்சிக் கட்டங்களையும் ஒரே சமயத்திலும் ஒன்றுக்குப் பக்கத்தில் மற்றொன்றாகவும் எடுத்துக் காட்டுகின்றது; ஒரேவிதமான

நிகழ்வுப்போக்குகளை முடிவில்லாதபடி திரும்பத் திரும்பச் செய்யும்படி விதிக்கப்படுகிறது. அனைத்து வளர்ச்சிக்குமே அடிப்படை நிபந்தனையான காலப் பரப்புக்கு வெளியே ஆனால் விசும்பில் வளர்ச்சி என்ற அபத்தத்தை ஹெகல் இயற்கையின் மேல்—பூகர்ப்பவியல், கருவியல், தாவரங் களின் அமைப்பியல் மற்றும் விலங்குகளின் உடலியல், அங்கக இரசாயனம் ஆகியவை வளர்ச்சியடைந்து கொண்டிருந்த அதே சமயத்தில், இந்தப் புதிய விஞ்ஞானங்களின் அடிப் படையில் பிற்காலத்திய பரிணாமத் தத்துவத்தின் மேதா விலாசம் நிறைந்த முன்னறிவிப்புகள் எங்குமே தோன்றிக் கொண்டிருந்த பொழுது (உதாரணமாக, கேதே மற்றும் லாமார்க்)—சுமத்துகிறார். ஆனால் அமைப்பு அதைக் கோரி யது; ஆகவே அமைப்பை முன்னிட்டு முறை தனக்கே பொய் யாக மாற வேண்டியிருந்தது.

இதே மாதிரியான வரலாற்றுக்கு மாறான கருத்தோட் டம் வரலாற்றுத் துறையிலும் நிலவியது. இங்கே மத்திய காலங்களின் எச்சங்களுக்கு எதிரான போராட்டம் கருத் தைக் கவர்ந்தது. மத்திய காலங்கள் ஆயிரம் ஆண்டுகளின் உலகளாவிய காட்டுமிராண்டித்தன வரலாற்றில் இடைமறித் ததாக மட்டுமே கருதப்பட்டன. மத்திய காலங்களில் நடை பெற்ற மாபெரும் முன்னேற்றம்—ஐரோப்பியக் கலாசாரப் பரப்பின் விஸ்தரிப்பு, அங்கே வாழக் கூடிய மாபெரும் நாடு கள் ஒன்றுக்குப் பக்கத்தில் மற்றொன்றாக உருவாக்க மடைந்து கொண்டிருந்தது மற்றும், கடைசியாக, பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பெரிய தொழில் நுட்ப முன்னேற்றம்—அனைத்துமே பார்க்கப்படவில்லை. ஆகவே மாபெரும் வரலாற்று இடைத்தொடர்புகளைப் பற்றி அறிவுபூர்வமான நுண்ணறிவு இயலாததாயிற்று; வர லாறு—உயர்ந்த நிலையில்—தத்துவஞானிகளின் உபயோ கத்துக்காகத் தொகுக்கப்பட்ட உதாரணங்களும் சித்திரங் களுமாகவே இருந்தது.

ஜெர்மனியில் 1850க்களில் பொருள்முதல்வாதத்தைக் கையாண்ட கொச்சைப்படுத்தும் நபர்கள் தங்களுடைய ஆசிரியர்களின் போதனைகளின் இந்த எல்லைகளைச் சிறி

தும் மீறவில்லை. இதற்கிடையில் இயற்கை விஞ்ஞானங்களில் ஏற்பட்ட அனைத்து முன்னேற்றங்களும் உலகத்தைப் படைத்தவர் என்று ஒருவர் இருப்பதற்கு எதிரான புதிய நிரூபணங்களாக மட்டுமே அவர்களுக்கு உதவின. தத்துவத்தை மேலும் வளர்த்துச் செல்கின்ற வேலையில் அவர்கள் சிறிது கூட ஈடுபடவில்லை என்பது உண்மையே. கருத்துமுதல்வாதம் கடைசி மூச்சிலிருந்தாலும்—1848ஆம் வருடப் புரட்சி அதற்கு மரண அடிகொடுத்தது—அந்தத் தருணத்தில் பொருள்முதல்வாதம் இன்னும் கீழே விழுந்து விட்டதைப் பார்க்கின்ற திருப்தி அதற்குக் கிடைத்தது. இந்தப் பொருள் முதல்வாதத்துக்குத்தான் பொறுப்பல்ல என்று ஃபாயர்பாக் மிகச் சரியாகவே கூறினார். ஆனால் இந்த ஊர் சுற்றிப் போதகர்களின் கோட்பாடுகளோடு பொதுவான பொருள் முதல்வாதத்தை அவர் குழப்பிக் கொண்டிருக்கக் கூடாது.

எனினும் இங்கே நாம் இரண்டு விஷயங்களைச் சுட்டிக் காட்ட வேண்டும். முதலாவதாக, ஃபாயர்பாகின் வாழ்க்கையின் போது கூட இயற்கை விஞ்ஞானம் இன்னும் தீவிரமான கிளர்ச்சி நிலையில்தான் இருந்தது; கடந்த பதினைந்து வருடங்களில் மட்டுமே அது தெளிவுபடுத்துகின்ற, சார்பு நிலை முடிவுக்கு வந்திருக்கிறது. இதுகாறும் கேள்விப்பட்டிராத அளவுக்குப் புதிய விஞ்ஞான விவரங்கள் சேகரிக்கப் பட்டன; ஆனால் இடைத்தொடர்புகளை நிறுவுவதும் ஆகவே அடுத்தடுத்து மிக நெருக்கமான முறையில் ஏற்பட்டுக் கொண்டிருந்த கண்டுபிடிப்புகளின் குழப்பத்துக்கு நடுவே ஒழுங்கை ஏற்படுத்துவதும் மிகவும் சமீப காலத்தில் தான் சாத்தியமாகி இருக்கின்றன. உயிரணு, ஆற்றலின் உருமாற்ற நிலை மற்றும் டார்வினுடைய பெயரைக் கொண்டிருக்கும் பரிணாமத் தத்துவம் ஆகிய தீர்மானமான மூன்று கண்டுபிடிப்புகளையும் காண்கின்ற வரை ஃபாயர்பாக் உயிரோடிருந்தார் என்பது உண்மையே. ஆனால் கிராமப்புறத் தனிமையில் தன்னந்தனியாக வாழ்ந்து கொண்டிருந்த அந்தத் தத்துவஞானி அந்தச் சமயத்தில் இயற்கை விஞ்ஞானிகளால் இன்னும் விவாதிக்கப்பட்ட அல்லது போதிய அளவுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்று அவர்கள் இன்னும்

அறிந்திராத கண்டுபிடிப்புகளை முழு அளவில் பாராட்டக் கூடிய முறையில் விஞ்ஞான முன்னேற்றங்களைப் பேதிய அளவுக்கு எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? ஜெர்மனியிலிருந்த கேவலமான நிலைமைகளே இதற்கு ஒரே பொறுப்பாகும். அவற்றின் விளைவாக வாயாடித்தனமான, கதம்பவாதக் கொசுவேட்டைக்காரர்கள் தத்துவஞானப் பேராசிரியப் பதவிகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் காட்டிலும் சிறப்புமிக்கவரான ஃபாயர்பாக் ஒரு சிறு கிராமத்தில் துருப்பிடித்து மனம் புழுங்கிக் கொண்டிருந்தார். எனவே இப்பொழுது சாத்தியமாகியிருந்தும் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதத்தின் ஒருதலைச்சார்பான தன்மையை அகற்றியதுமான இயற்கையைப் பற்றிய வரலாற்றுரீதியான கருத்தோட்டம் அவருக்குக் கிடைக்காதது அவருடைய குறையல்ல.

இரண்டாவதாக, இயற்கை-விஞ்ஞானப் பொருள்முதல்வாதம் மட்டுமே ''மனித அறிவு என்ற கட்டிடத்தின் அடிப்படையே—ஆனால் அதுவே கட்டிடம் அல்ல'' என்று ஃபாயர்பாக் முற்றிலும் சரியாகவே வலியுறுத்தினார். ஏனென்றால் நாம் இயற்கையில் மட்டுமல்ல, மனித சமூகத்திலும் வாழ்கிறோம். இது இயற்கைக்குச் சிறிதும் குறையாத அளவில் தன்னுடைய வளர்ச்சியின் வரலாற்றையும் விஞ்ஞானத்தையும் கொண்டிருக்கிறது. ஆகவே சமூக விஞ்ஞானத்தை, அதாவது வரலாறு மற்றும் தத்துவஞான விஞ்ஞானங்கள் என்று சொல்லப்படுவனவற்றின் மொத்தத்தைப் பொருள்முதல்வாத அடிப்படையுடன் இசைவுபடுத்துவதையும் இந்த அடிப்படையில் அதைத் திருத்திக் கட்டுவதையும் பற்றிய பிரச்சினையாக அது இருந்தது. ஆனால் இதை நிறைவேற்றும் வாய்ப்பு ஃபாயர்பாகுக்குக் கிட்டவில்லை. ''அடிப்படை'' இருந்தாலும் கூட அவர் மரபுவழிப்பட்ட கருத்துமுதல்வாதத் தளைகளால் கட்டுப்பட்டிருந்தார். ''பின்னோக்கில் நான் பொருள்முதல்வாதிகளோடு முழுமையாக உடன்படுகிறேன், ஆனால் முன்னோக்கியல்ல'' என்று அவர் கூறிய பொழுது இந்த உண்மையை அங்கீகரிக்கிறார். ஆனால் இங்கேயே, சமூகத் துறையில் ''முன்னோக்கிப்'' போகாதது,

1840 அல்லது 1844ஆம் வருடங்களில் தன்னுடைய கருத்து நிலைக்கு அப்பால் போகாதது ஃபாயர்பாக்தான். இதற்கும் அவருடைய தனித்தொதுங்கிய வாழ்க்கையே தலையாய காரணம். எல்லாத் தத்துவஞானிகளிலுமே அவர்தான் சமூக உறவுகளை அதிகமாக விரும்பியவர். தன்னையொத்த தகுதியுடைய பிறருடன் சுமுகமான மற்றும் காரசாரமான வாதப் பிரதிவாதங்களின் மூலமாக இல்லாமல் தன் ஒற்றைத் தலையிலிருந்தே சிந்தனைகளை உற்பத்தி செய்யும்படி ஒதுங்கிய வாழ்க்கை அவரை நிர்ப்பந்தித்தது. இந்தத் துறையில் அவர் எந்த அளவுக்குக் கருத்துமுதல்வாதியாக இருந்தார் என்பதை நாம் பின்னர் நுணுக்கமாகக் காண்போம்.

ஃபாயர்பாகின் கருத்துமுதல்வாதத்தை ஷ்டார்க்கே தவறான இடத்தில் தேடுகிறார் என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவது போதுமானது. ''லூத்விக் ஃபாயர்பாக் ஒரு கருத்துமுதல்வாதி; அவர் மனிதகுலத்தின் முன்னேற்றத்தில் நம்பிக்கை உள்ளவர்'' (பக்கம் 19). ''ஆயினும் கருத்துமுதல்வாதம் அடிப்படையாக, மொத்தத்தின் துணைக்கட்டிடமாக இருக்கிறது. நமது கருத்தியலான போக்குகளை நாம் பின்தொடர்கின்ற பொழுது தவறுகளுக்கு எதிரான பாதுகாப்பு என்பதற்கு மேல் யதார்த்தவாதம் நமக்கு வேறு ஒன்றுமில்லை. இரக்கம், காதல், உண்மைக்கும் நீதிக்கும் ஆர்வம் ஆகியவை கருத்தியலான சக்திகள் இல்லையா?''(பக்கம் VIII).

முதலாவதாக, இங்கே கருத்துமுதல்வாதம் என்பது இலட்சிய நோக்கங்களைப் பின்தொடர்வதைத் தவிர வேறு எதையும் குறிக்கவில்லை. ஆனால் இவை அவசியமாகவே உச்ச அளவில் காண்ட்டின் கருத்துமுதல்வாதத்தோடும் அதன் ''ஆணித்தரமான கட்டளையோடும்'' சம்பந்தப்பட்டிருக்கின்றன. காண்ட் தன்னுடைய தத்துவஞானத்தை ''அறிவெல்லை கடந்த கருத்துமுதல்வாதம்'' என்று கூறியது அதில் அறவியல் நோக்கங்களைப் பற்றி எழுதியிருப்பதனால் அல்ல, முற்றிலும் வேறு காரணங்களுக்காகவே என்பது ஷ்டார்க்கேக்கு நினைவிருக்கும். தத்துவஞானக் கருத்துமுதல்வாதம் அறவியல், அதாவது சமூக இலட்சியங்களில் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்ற மூட

நம்பிக்கை தத்துவஞானத்துக்கு வெளியே, தங்களுக்குத் தேவையான தத்துவஞானக் கலாசாரத் துணுக்குகளை ஷீல்லரின் கவிதைகளிலிருந்து உருப்போட்ட ஜெர்மன் அற்பவாதிகள் மத்தியில் தோன்றியது. காண்ட்டின் சக்தியற்ற ''ஆணித்தரமான கட்டளையை''—அது நடக்க முடியாததைக் கோருவதனால் சக்தியற்றது, ஆகவே எந்த யதார்த்தத்தையும் ஒருபோதும் எட்டுவதில்லை—முழுக் கருத்துமுதல்வாதியான ஹெகலைத் தவிர வேறுயாருமே மிகக் கடுமையாகக் குறை கூறவில்லை; ஷீல்லர் வழங்குகின்ற நிறைவேற முடியாத இலட்சியங்களுக்கு அற்பவாத உணர்ச்சிப் பசப்பான உற்சாகத்தை ஹெகலைத் தவிர வேறுயாருமே மிகவும் ஈவிரக்கமில்லாமல் இகழவில்லை (உதாரணமாக, அவருடைய *Phenomenology* என்ற நூலைப் பார்க்க).

இரண்டாவதாக, மனிதர்களைச் செயற்படுத்துகின்ற ஒவ்வொன்றுமே அவர்களுடைய மூளைகளின் வழியாக வெளிப்பட வேண்டும் என்ற உண்மையிலிருந்து நாம் தப்பிவிட முடியாது. உண்பதும் குடிப்பதும் கூட இப்படிப்பட்டதே. பசி அல்லது தாக உணர்ச்சி மூளையிலிருந்து அறிவிக்கப்படுவதன் விளைவாக அவை தொடங்குகின்றன; பசி அல்லது தாகம் தீர்க்கப்பட்ட உணர்ச்சி மூளையின் மூலமாக அறிவிக்கப்படுவதன் விளைவாக அவை முடிவடைகின்றன. மனிதன் மீது வெளிப்புற உலகத்தின் தாக்கங்கள் அவனுடைய மூளையில் பதிந்து அங்கே உணர்ச்சிகள், சிந்தனைகள், இயல்புணர்ச்சிகள், விருப்பாற்றல்களாக—சுருக்கமாகக் கூறுவதென்றால், ''கருத்தியலான போக்குகளாக''—பிரதிபலிக்கப்படுகின்றன; இந்த வடிவத்தில் அவை ''கருத்தியலான சக்திகளாக'' மாறுகின்றன. ஒரு நபர் ''கருத்தியலான போக்குகளைப்'' பின்தொடர்வதனால், ''கருத்தியலான சக்திகள்'' தன் மீது செல்வாக்குக் கொண்டிருக்கின்றன என்று ஒத்துக் கொள்வதனால் அவர் கருத்துமுதல்வாதி என்று கருதப்படலாமென்றால் சகஜமான வளர்ச்சியடைந்த ஒவ்வொரு நபரும் பிறவிக் கருத்துமுதல்வாதியே. அப்படியானால் பொருள்முதல்வாதிகள் என்று யார்தான் இருக்க முடியும்?

மூன்றாவதாக, மனிதகுலம்—குறைந்த பட்சம், இந்த வினாடியிலாவது—மொத்தத்தில் முற்போக்குத் திசையில் போய்க்கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கைக்கும், பொருள் முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையே உள்ள எதிர்நிலைக்கும் எவ்விதமான சம்பந்தமும் முற்றிலும் கிடையாது. பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளும் அவர்களுக்குச் சிறிதும் குறையாத அளவில் ஆதிமூல இறைமைக் கோட்பாட்டின்[112] ஆதரவாளர்களான வொல்தேரும் ரூஸோவும் அநேகமாக வெறி என்று கூறும் அளவுக்கு இந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள். அதற்காக மிகவும் அதிகமான தனிப்பட்ட தியாகங்களையும் அடிக்கடி செய்தார்கள். ''உண்மைக்கும் நீதிக்கும் ஆர்வத்துக்காக''—இந்தச் சொற்றொடரை அதன் நல்ல பொருளில் உபயோகிக்கிறோம்—யாராவது தன் முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தார் என்றால், உதாரணமாக டிட்ரோ தான். ஆகவே இவை எல்லாம் கருத்துமுதல்வாதம் என்று ஷ்டார்க்கே கூறினால், பொருள்முதல்வாதம் என்ற சொல்லும் இரு போக்குகளுக்கும் இடையே மொத்த எதிர்நிலையும் அவரிடம் எல்லா அர்த்தத்தையும் இழந்து விட்டன என்பதை மட்டுமே இது நிரூபிக்கிறது.

உண்மை என்னவென்றால், ஷ்டார்க்கே—ஒருவேளை சுய உணர்வு இல்லாமலேயே—பொருள்முதல்வாதம் என்ற சொல்லுக்கு நெடுங்காலமாக மதகுருக்கள் அவப்பெயர் ஏற்படுத்தியிருப்பதன் விளைவான மரபுவழிப்பட்ட அற்பவாதத் தப்பெண்ணத்துக்கு மன்னிக்கவியலாத சலுகையைச் செய்கிறார். பொருள்முதல்வாதம் என்ற சொல்லை அற்பவாதி பெருந்தீனி, மிதமிஞ்சிக் குடித்தல், காமப் பார்வை, காமப் பசி, ஆணவம், சுயநலம், பேராசை, தகா விருப்பம், லாப வேட்டை மற்றும் பங்குச் சந்தை மோசடி—சுருக்கமாகக் கூறுவதென்றால், அவன் இரகசியமாக ஈடுபடுகின்ற மட்டரகமான தீமைகள் அனைத்தையும் குறிக்கிறதென்று புரிந்து கொள்கிறான். கருத்துமுதல்வாதம் என்ற சொல்லை நன்னெறியில் நம்பிக்கை, எல்லோருக்கும் உதவுதல், பொதுவான முறையில் ஒரு ''சிறந்த உலகத்தில்'' நம்பிக்கை—

அதைப் பற்றி அவன் மற்றவர்களுக்கு முன்னால் பீற்றிக் கொண்டாலும், அவன் அதிகமாகக் குடித்துத் தலை வலிக்கும் பொழுது அல்லது அவன் திவாலாகின்ற பொழுது, சுருங்கச் சொன்னால் தன் ''பொருள்முதல்வாத'' அத்துமீறல் களின் பலன்களை அனுபவிக்கின்ற பொழுது மட்டுமே நம்புகிறான் எனலாம்—ஆகியவற்றைக் குறிப்பதாக அவன் புரிந்து கொள்கிறான். அப்பொழுதுதான் அவன் தனக்குப் பிரியமான பாட்டைப் பாடுகிறான்: மனிதன் என்பது என்ன? —பாதி விலங்கு, பாதி தேவதை.

ஜெர்மனியில் இன்று தத்துவஞானிகள் என்று சொல்லப் படுகின்ற வாயாடியான உதவிப் பேராசிரியர்களின் தாக்கு தல்கள் மற்றும் போதனைகளிலிருந்து ஃபாயர்பாகைப் பாதுகாப்பதற்கு ஷ்டார்க்கே மற்றவற்றைப் பொறுத்தமட் டில் அருமுயற்சி செய்கிறார். மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் தரக்குறைவான வாரிசுகளிடம் அக்கறை கொண்டிருப்பவர்களுக்கு இது முக்கியமானது என்பது உண் மையே; ஷ்டார்க்கேக்கு இது அவசியமாகத் தோன்றியிருக்க முடியும். எனினும் நாம் இதிலிருந்து வாசகர்களை மீட்டருள் வோம்.

## III

சமயம், ஒழுக்கநெறி பற்றிய ஃபாயர்பாகின் தத்துவ ஞானத்துக்கு வந்தவுடன் அவருடைய உண்மையான கருத்து முதல்வாதம் வெளிப்பட்டு விடுகிறது. அவர் சமயத்தை ஒழிக்க நிச்சயமாக விரும்பவில்லை; அதை முழுநிறை வாக்கவே விரும்புகிறார். தத்துவஞானமுங்கூட சமயத்தோடு ஒன்றுசேர்க்கப்பட வேண்டும். ''சமயத் துறை மாற்றங்கள் மூலமாக மட்டுமே மனிதகுலத்தின் காலகட்டங்கள் வேறுபடுத்திப் பார்க்கப்படுகின்றன. ஒரு வரலாற்று இயக் கம் மனிதர்களின் இதயத்தில் வேரூன்றியிருக்கிற போதுதான் அது தன் அடித்தளத்தை எட்டுகிறது. இதயம் என்பது சமயத்தின் ஒரு வடிவம் அல்ல; எனவே சமயம் இதயத்திற் குள்ளும் இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடாது; இதயம்

சமயத்தின் சாரமே'' (ஷ்டார்க்கே காட்டும் மேற்கோள், பக்கம் 168).

ஃபாயர்பாக் கருத்துப்படி, சமயம் என்பது உணர்ச்சிகளின் அடிப்படையில் மனிதர்கள் இடையேயுள்ள உறவாகும், இதயத்தை ஆதாரமாகக் கொண்ட உறவாகும். இந்த உறவு இது வரை தன் உண்மையை யதார்த்தத்தின் கற்பனைக் கண்ணாடியில்—மனிதப் பண்புகளின் கற்பனைக் கண்ணாடிப் படிமங்களாகிய ஒன்று அல்லது பல கடவுளர்களின் மூலமாக—தேடிக் கொண்டிருந்தது; இப்போது அது ''நான்'' என்பதற்கும் ''நீ'' என்பதற்கும் இடையேயுள்ள அன்பில் தன் உண்மையை நேரடியாகவும் எந்த இடையீடு இன்றியும் கண்டு கொள்கிறது. ஆக, கடைசியிலே, ஃபாயர்பாகைப் பொறுத்தவரை அவருடைய புதிய சமயத்தின் நடைமுறைக்கு பாலுறவுக் காதல் உச்ச வடிவங்களில் ஒன்றாக ஆகிறது—அது ஒன்றே உச்ச வடிவம் என்று இல்லாவிட்டாலுங்கூட.

உணர்ச்சிகளையும், குறிப்பாக ஆண் பெண் இடையேயுள்ள காதலையும், அடிப்படையாகக் கொண்டு மனிதர்களிடையே நிலவும் உறவுகள் மனிதகுலம் தோன்றிய காலந் தொட்டு இருந்து வருவன ஆகும். பாலுறவுக் காதல் பெரு முக்கியத்துவம் வாய்ந்ததாக சென்ற எண்ணூறு ஆண்டுகளில் சிறப்பிடம் பெற்றுக் கொண்டு அக்காலப் பகுதியில் எல்லாக் கவிதைகளும் சுற்றிச் சுழலும் கட்டாயமான அச்சாணியாக இருந்து வருகிறது. அரசால் ஒழுங்குசெய்யப்படும் பாலுறவுக் காதல் மீது, அதாவது திருமணச் சட்டங்கள் மீது நடப்பிலுள்ள நேருறுதியான சமயங்கள் மேலும் உயர்வான புனித தீட்சை அளிப்பதோடு நின்று கொண்டு விட்டன; பாலுறவுக் காதலின், நட்பின் நடைமுறையைச் சிறிதளவுகூட மாற்றாமல் நாளைக்கே அச்சமயங்கள் அனைத்தும் மறைந்துவிட முடியும். பிரான்சில் இவ்வாறு 1793-98ஆம் ஆண்டுகளில் கிறிஸ்துவச் சமயம் முற்றாக மறைந்து விட்டதால் அதை நெப்போலியன் எதிர்ப்போ, கஷ்டமோ இன்றி மீண்டும் புகுத்த முடியவில்லை. அதுவுங்கூட அந்த இடைக்காலத்தில்

ஃபாயர்பாகின் அர்த்தத்தில் அமைந்த ஒரு மாற்றுச் சமயத்தின் தேவையின்றியே நடந்ததாகும்.

ஃபாயர்பாகின் கருத்துமுதல்வாதம் இங்கே இதிலேதான் உள்ளது: பாலுறவுக் காதல், நட்பு, பரிவு, சுயத்தியாகம் முதலியவற்றை மனிதர்களிடையேயுள்ள மனச்சார்புகளை அடிப்படையாகக் கொண்ட பரஸ்பர உறவுகளைத் தம்மளவிலான நிலையில்—அவர் அபிப்பிராயத்தில் இறந்த காலத்தைச் சேர்ந்ததான எந்தக் குறிப்பிட்ட சமயத்துடனும் அவற்றை இணைக்காமல்—உள்ளபடியே ஏற்கவில்லை. அதற்குப் பதிலாக, சமயத்தின் பெயரால் அவை புனித தீட்சை பெறும் போது மட்டுமே அவை தம் முழு மதிப்பையும் பெறும் என்று அடித்துப் பேசுகிறார். முற்றிலும் மானுடவகைப்பட்ட இந்த உறவுகள் இருப்பது அவருக்கு முக்கியமான விஷயமல்ல; புதிய, உண்மையான சமயமாக அவை கருதப்பட வேண்டும் என்பதே அவருக்கு முக்கியமான விஷயம். ஒரு சமயத்தின் முத்திரையைக் கொண்டு குறியிடப்பட்ட பிறகு மட்டுமே அவை முழு மதிப்பு பெற்றவையாக இருக்கும். சமயம் என்பது religare என்னும் சொல்லிலிருந்து பிறந்ததாகும்; ஒரு பிணைப்பு என்பதே அதன் ஆதி அர்த்தம். எனவே இரண்டு நபர்களிடையே உள்ள ஒவ்வொரு பிணைப்பும் ஒரு சமயமாகும். இப்படிப்பட்ட சொல்லிலக்கணத் தந்திரங்கள் கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்தின் கடைசிப் புகலிடமாகும். ஒரு சொல்லின் நடைமுறையான உபயோகத்தின் வரலாற்று வளர்ச்சிப்படி அமைந்த அர்த்தம் முக்கியமல்ல; அதன் மெய்ச் சொல்லின் படி அதன் அர்த்தம் எப்படி இருக்க வேண்டும் என்பதே முக்கியமாகும். எனவே வெறுமே கருத்துமுதல்வாத நினைவுகளுக்கு மிகவும் பிடித்தமான சமயம் என்னும் சொல் மொழியிலிருந்து மறைந்து போக வேண்டாம் என்பதற்காக காதலும் இரு பாலாரிடையே புணர்ச்சியும் ஒரு ''சமயமாகப்'' போற்றிப் பிரதிஷ்டை செய்யப்படுகிறது. லுயீ பிளான் போக்கைச் சேர்ந்த பாரிஸ் மாநகரத்துச் சீர்திருத்தவாதிகள் 1840க்களில் இதே மாதிரிதான் பேசி வந்தார்கள். சமயமற்ற மனிதனை ஓர் அரக்கப் பிறவி என்றுதான் அவர்களா

லும் கருத முடிந்தது. நம்மைப் பார்த்து “Donc, l'athéisme c'est votre religion!”* என்று அவர்கள் சொன்னதுண்டு. இயற்கையைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின் அடிப்படையில் ஃபாயர்பாக் ஓர் உண்மையான சமயத்தை நிலைநாட்ட விரும்புகிறார் என்றால், அது நவீன இரசாயனவியலை உண்மையான இரசவாதமாகக் கருதுவது போன்றதுதான். சமயம் தனது கடவுள் இன்றி இருக்க முடியும் என்றால், இரசவாதமுங்கூட தனது சித்தர்மணிக் கல் இன்றியே இருக்க முடியும். இடையே ஒன்று சொல்லி வைப்போம்: இரசவாதத்துக்கும் சமயத்துக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு உண்டு. சித்தர்மணிக் கல்லுக்குப் பல தெய்விகப் பண்புகள் உண்டு; நம் சகாப்தத்தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த எகிப்து-கிரேக்க இரசவாதிகள் கிறிஸ்துவப் போதனையை வளர்ப்பதில் பங்கு கொண்டிருந்தனர். கோப், பெர்த்லோ ஆகியோர் கொடுத்துள்ள விஷயாதாரங்கள் இதை நிரூபித்துள்ளன.

''சமயத் துறை மாற்றங்கள் மூலமாக மட்டுமே மனித குலத்தின் காலகட்டங்கள் வேறுபடுத்திப் பார்க்கப் படுகின்றன'' என்று ஃபாயர்பாக் அடித்துச் சொல்வது திண்ணமான பொய்யாகும். இன்று வரை இருந்து வரும் புத்த சமயம், கிறிஸ்துவ சமயம், இஸ்லாமிய சமயம் ஆகிய மூன்று உலகச் சமயங்களைப் பொறுத்தவரை மட்டுமே மகத்தான வரலாற்றுத் திரும்பு முனைகளோடு சமயத் துறை மாற்றங்கள் தொடர்ந்து வந்துள்ளன. பழமையான, தன்னியல்பாகத் தோன்றிய இனக்குழு மற்றும் தேசிய இனச் சமயங்கள் மத மாற்றம் செய்யவில்லை, இனக்குழுவின் அல்லது மக்களினத்தின் சுதந்திரம் போனவுடன் அவை தம் எதிர்ப்புச் சக்தியனைத்தையும் இழந்து விட்டன. நலிந்து வரும் ரோமானிய உலகப் பேரரசுடனும் அதன் பொருளாதார, அரசியல், சித்தாந்த நிலைமைகளோடு பொருந்தியிருந்த, புதிதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கிறிஸ்துவ உலகச் சமயத்துடனும் எளிய தொடர்பு கொண்டதே ஜெர்மானியர்களுக்குப் போது

*—''சரிதான், அப்படியென்றால் நாத்திகம் உங்களுடைய சமயமாக்கும்!''—ப-ர்.

மானதாயிருந்தது. ஏறத்தாழ செயற்கையாகத் தோன்றிய இந்த உலகச் சமயங்களின்—குறிப்பாக, கிறிஸ்துவச் சமயம், இஸ்லாமிய சமயம்—விஷயத்தில்தான் மேலும் பொதுப்படையான வரலாற்று இயக்கங்கள் சமய முத்திரை பெறுவதைப் பார்க்கிறோம். கிறிஸ்துவச் சமயம் சம்பந்தமாகவுங்கூட, உண்மையில் உலகு தழுவிய பொருள் கொண்ட புரட்சிகளில் சமய முத்திரையைப் பதிப்பது முதலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்தின்—பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரை நடந்த—முதல் கட்டங்களோடு நின்று விடுகிறது. ஃபாயர்பாக் நினைப்பது போல், மனிதர்களின் இதயங்களைக் கொண்டும் அவர்களின் சமயத் தேவைகளைக் கொண்டும் இதை விளக்க முடியாது. சமயமும் இறையியலும் தவிர வேறெந்த சித்தாந்த வடிவத்தையும் அறிந்திராத மத்திய காலத்தின் முந்தைய வரலாறு முழுவதையும் கொண்டுதான் இதை விளக்க வேண்டும். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாளி வர்க்கம் அதே போல் தன்னுடைய சொந்த வர்க்கக் கருத்து நிலைக்குப் பொருத்தமான சித்தாந்தத்தைச் சொந்தத்தில் வசமாக்கிக் கொள்கிற அளவுக்கு வலுப்பெற்ற போது தன்னுடைய மகத்தான, முடிவான புரட்சியாகிய பிரெஞ்சுப் புரட்சியைச் செய்து முடித்தது. அந்த முதலாளி வர்க்கம் முற்றிலும் சட்டவியல் மற்றும் அரசியல் கருத்துக்களுக்கு மட்டுமே வேண்டுகோள் விடுத்தது. சமயம் தனது பாதைக்குக் குறுக்கே வந்ததால்தான் அதில் அவ்வர்க்கம் அக்கறை காட்டியது. ஆனால் பழைய சமயத்துக்குப் பதிலாக ஒரு புதிய சமயத்தை வைப்போமே என்று அவ்வர்க்கத்துக்குத் தோன்றவே இல்லை. ரொபெஸ்பியேர் செய்த இத்தகைய முயற்சி தோல்வியடைந்ததை எல்லோரும் அறிவார்கள்.[113]

பிற மனிதர்களோடு நமக்குள்ள உறவுகளில் முற்றிலும் மானுட வகைப்பட்ட உணர்ச்சிகள் இருப்பதற்கான சாத்தியப்பாடு நாம் வாழ்ந்து வர வேண்டியிருக்கிற—வர்க்க எதிர்நிலையையும் வர்க்க ஆதிக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிற—சமுதாயத்தால் இக்காலத்தில் பெருமளவுக்குக் குறுக்கப்பட்டுள்ளது; இவ்வுணர்ச்சிகளை ஒரு சமய

மாக ஏற்றிப் போற்றிக் கொள்வதின் மூலமாக அதை மேலும் குறுக்குவதற்கு நமக்கு நியாயம் எதுவும் இல்லை. அதே போல், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் வர்க்கப் போராட்டங்களைப் புரிந்து கொள்வதை ஏற்கெனவே கொச்சையான வரலாற்றியல் பெருமளவுக்கு, குறிப்பாக ஜெர்மனியில், மறைத்திருக்கிறது. எனவே இப்போராட்டங்களின் வரலாற்றை திருச்சபையைச் சார்ந்த வரலாற்றின் வெறும் பிற்சேர்க்கையாக மாற்றுவதின் மூலமாக அப்படிப் பட்ட அறிவை முற்றிலும் சாத்தியமற்றதாக்கி விடும் தேவை நமக்கு இல்லை. ஃபாயர்பாகைத் தாண்டி எவ்வளவு தூரம் நாம் வந்து விட்டோம் என்பது இங்கே ஏற்கெனவே தெளிவாகிறது. அன்பு வழிப்பட்ட தமது புதிய சமயத்தைப் போற்றிய அவரது ''மிகச் சிறந்த நூற்பகுதிகள்'' இன்று முற்றிலும் படிக்க இயலாதவை ஆகி விட்டன.

செயல்பற்றுடன் ஃபாயர்பாக் ஆராய்கிற சமயம் கிறிஸ்துவ சமயம் ஒன்றுதான்; ஒரே கடவுளை அடிப்படையாகக் கொண்ட அது மேனாட்டு உலகச் சமயம். கிறிஸ்துவக் கடவுள் வெறுமே மனிதக் கற்பனையின் பிரதிபலிப்பே, கண்ணாடிப் படிமமே என்று அவர் நிரூபிக்கிறார். இந்தக் கடவுளோ, நீண்ட காலமாய்ச் சூட்சுமப்படுத்தப்பட்ட ஒரு போக்கின் விளைவுதான்; எண்ணற்ற முந்தைய இனக்குழு, தேசிய இனக் கடவுள்களின் சத்துச்சாறுதான் இது. மனிதனின் பிரதி பிம்பமே கடவுள். இதன்படி மனிதனும் உண்மையான மனிதன் அல்ல; அவனும் அதே போல் எண்ணிறந்த உண்மையான மனிதர்களின் சத்துச்சாறுதான், சூட்சுமப்படுத்தப்பட்ட மனிதன்தான்; எனவே அவனும் ஒரு கருத்து உருவமே. உணர்ச்சியைப் பற்றியும் ஸ்தூலமான, எதார்த்தமான உலகில் ஈடுபாடு பற்றியும் ஒவ்வொரு பக்கத்திலும் பிரசாரம் செய்யும் ஃபாயர்பாக் மனிதர்களிடையே உள்ள வெறும் பாலுறவை மட்டுமின்றி வேறு ஏதாவது மனித உறவுகளைப் பற்றியும் பேசத் தொடங்கியவுடன் எதார்த்தத்தில் முற்றிலும் சூட்சுமமாய்ப் பேசுகிறார்.

இவ்வுறவுகளில் அறநெறி என்னும் ஒரு பக்கத்தை மட்டுமே அவர் பார்க்கிறார். ஹெகலுடன் ஒப்பிடும் போது

ஃபாயர்பாகிடம் உள்ள அறிவு வறட்சி மீண்டும் நம்மை வியப்புக்குள் ஆழ்த்துகிறது. ஹெகலுடைய ஒழுக்கநெறி அல்லது அறவழிப் போதனை ஒரு உரிமை பற்றிய தத்துவ ஞானம் ஆகும். அது 1) சூட்சுமமான உரிமையையும் 2) அறநெறியையும் 3) சமூக ஒழுக்கநெறியையும் தழுவிக் கொண்டிருக்கிறது; சமூக ஒழுக்கநெறி குடும்பத்தையும் குடி மக்கள் சமுதாயத்தையும் அரசையும் கொண்டிருப்பதாகும். இங்கே வடிவம் எப்படி கருத்துமுதல்வாத வழிப்பட்ட தாக உள்ளதோ, அப்படியே உள்ளடக்கம் யதார்த்த வழிப் பட்டதாக உள்ளது. அறநெறியோடு கூட இங்கே சட்டம்; பொருளாதாரம்,அரசியல் ஆகிய யாவையும் அடங்கியுள்ளன. ஃபாயர்பாக் விஷயத்தில் இது அப்படியே தலைகீழாக இருக்கிறது. வடிவத்தில் அவர் யதார்த்த வழிப்பட்டவராக இருக்கிறார்; ஏனெனில் மனிதனிலிருந்து அவர் தொடங்கு கிறார். ஆனால் இந்த மனிதன் வாழ்கிற உலகத்தைப் பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை; எனவே சமயத்துறைத் தத்துவஞானத்தில் நடுநாயகமாக விளங்கிய அதே சூட்சும மனிதனாகவே இந்த மனிதன் எப்போதும் இருந்து விடு கிறான். காரணம், இந்த மனிதன் பெண்ணின் வயிற்றி லிருந்து பிறந்தவனல்ல; அவன் முட்டைப் புழுக்கூட்டை விட்டு வெளிவருவது போல் ஒன்றே கடவுள் என்று சொல் லும் சமயங்கள் போற்றும் கடவுளிடமிருந்து வெளிப்படு கிறான். எனவே வரலாற்றுரீதியிலே அமைந்து வரலாற்று ரீதியிலே தீர்மானிக்கப்பட்டுள்ள ஓர் உண்மையான உலகத் தில் அவன் வாழ்வதில்லை. அவன் பிற மனிதர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறான் என்பது உண்மைதான்; ஆனால் அவனைப் போலவே பிற மனிதர்களில் ஒவ்வொரு வரும் ஒரு சூட்சுமப் பொருளே. சமயத்தைப் பற்றிய அவ ருடைய தத்துவஞானத்தில் இன்னும் ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள் என்று கண்டோம்; ஆனால் அவர்களுடைய ஒழுக்கநெறியில் இந்தக் கடைசி வேறுபாடுங்கூட மறைந்து போகிறது என்பது உண்மைதான். ''அரண்மனையில் உள்ள மனிதன் ஒரு மாதிரி சிந்திக்கிறான், குடிசையில் உள்ள மனி தன் வேறு மாதிரி சிந்திக்கிறான்;'' ''பசி, வறுமை ஆகிய

வற்றின் காரணமாக உன் உடம்பில் சத்து இல்லையானால் உன்னுடைய மண்டையிலோ, மனதிலோ, இதயத்திலோ அறநெறிக்கான சத்தும் அதே போல் இல்லைதான்;'' ''அரசியல் நம்முடைய சமயமாக ஆக வேண்டும்'' என்பன போன்ற கூற்றுகளை நீண்ட இடைவெளிகள் விட்டு ஃபாயர்பாக் சொல்கிறார்.

ஆனால் இந்த மெய்யுரைகளைக் கொண்டு எதையும் சாதிக்கும் திறமை ஃபாயர்பாகுக்கு அறவே கிடையாது; அவை வெறும் சொற்றொடர்களாகவே இருந்து விடுகின்றன; ஃபாயர்பாகுக்கு அரசியல் ஒரு கடக்க முடியாத எல்லையாக இருந்தது என்றும் ''சமுதாயத்தைப் பற்றிய விஞ்ஞானம், அதாவது சமூகவியல் அவருக்கு terra incognita* ஆகவே இருந்தது'' என்றும் ஷ்டார்க்கே கூட ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அதே போல் நன்மை, தீமை ஆகியவற்றின் எதிர்நிலை பற்றிய தமது விளக்கத்தில், ஹெகலுடன் ஒப்புநோக்கும் போது, அவர் ஆழமற்றவராகத் தெரிகிறார். ஹெகல் கூறுகிறார்: ''மனிதன் இயற்கையாகவே நல்லவன் என்று சொல்லி விட்டு ஏதோ மகத்தான விஷயம் ஒன்றைச் சொல்லி விட்டதாக நம்புகிறார்கள் சிலர்; ஆனால் மனிதன் இயற்கையாகவே கெட்டவன் என்னும் வார்த்தைகள் அதை விட எவ்வளவோ ஆழமான விஷயம் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.''

ஹெகல் கருத்துப்படி, தீமையென்பது வரலாற்று வளர்ச்சியின் உந்து சக்தி தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் வடிவமாகும். இதில் இருவகைப்பட்ட அர்த்தம் அடங்கியுள்ளது. ஒரு புறத்தில், ஒவ்வொரு புதிய முன்னேற்றமும் புனிதமடைந்த விஷயங்களை எதிர்த்துச் செய்யும் அபசாரமாகவும் பழையதாகிச் சாகும் தருவாயில் இருந்த போதிலும் வழக்கத்தால் புனிதப்படுத்தப்பட்டுள்ள நிலைமைகளை எதிர்த்து நடக்கும் கலகமாகவும் அவசியமாகவே தென்படுகிறது. மறு புறத்தில், மனிதர்களின் தீய உணர்ச்சிகளான பேராசை

*—தெரியாத உலகம்.—ப-ர்.

யும் அதிகார வேட்டையும்தான் வர்க்கப் பகைமைகள் தோன்றிய காலத்திலிருந்து வரலாற்று வளர்ச்சிக்கு நெம்புகோல்களாகப் பயன்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, இந்த உண்மைக்கு நிலப்பிரபுத்துவ முறையின் வரலாறும் முதலாளித்துவ வர்க்கத்தின் வரலாறும் ஒரே தொடர்ச்சியான சான்றாக அமைந்துள்ளன. எனினும் அறநெறியின் பாற்பட்ட தீமையின் வரலாற்றுப் பாத்திரத்தை ஆராய்வோமே என்று ஃபாயர்பாகுக்குத் தோன்றவில்லை. அவருக்கு வரலாறு என்பது வசதியற்ற, ஆறுதல் தராத ஒரு துறையாக இருக்கிறது. ''மனிதன் ஆதியில் இயற்கையிலிருந்து தோன்றிய நிலையில் அவன் வெறும் இயற்கை படைத்த உயிரினம் ஒன்றாகத்தான் இருந்தான், மனிதனாக அல்ல; மனிதன், பண்பாடு, வரலாறு ஆகியவற்றின் உற்பத்திப்பொருளே ஆவான்'' என்னும் அவருடைய வாக்கு முற்றிலும் மலட்டுத்தனமான கருத்துரையாகவே இருந்து விடுகிறது.

எனவே அறநெறியைப் பற்றி ஃபாயர்பாக் சொல்லக்கூடியது மிகவும் அற்பமாகத்தான் இருக்கிறது. இன்பவேட்கை மனிதனிடம் உள்ளுறையாக இருக்கிறது; எனவே அது எல்லா அறநெறிக்கும் அடிப்படையாக இருக்க வேண்டும். ஆனால் இன்பவேட்கை இரட்டைத் திருத்தங்களுக்கு உட்பட்டதாகும். முதலாவது, நம் செய்கைகளின் இயல்பான பின்விளைவுகளால் திருத்தப்படுகிறது: அதிகமாகக் குடித்தபின் தலைவலி ஏற்படுகிறது; வழக்கமான மட்டுமீறிய இன்ப நுகர்ச்சிக்குப் பின் சுகவீனம் தொடர்கிறது. இரண்டாவது, அதன் சமுதாயப் பின்விளைவுகளால் திருத்தப்படுகிறது: மற்றவர்களின் இதே போன்ற இன்பவேட்கையை நாம் மதிக்காவிட்டால், அவர்கள் எதிர்ப்புக் காட்டி நம் இன்பவேட்கையில் குறுக்கிடுவார்கள். எனவே நம் வேட்கையைத் திருப்திப்படுத்துவதற்கு நம் நடத்தையின் விளைவுகளைச் சரிவர மதிப்பிடும் நிலையில் நாம் இருக்க வேண்டும், அதே போல் மற்றவர்களுக்கும் இன்பம் தேடிக் கொள்வதில் உள்ள சம உரிமையை அனுமதிக்க வேண்டும். நம் விஷயத்தில் அறிவுக்குகந்த தற்கட்டுப்பாடு, மற்றவர்களோடு நமக்குள்ள தொடர்பில் அன்பு—திரும்பத்திரும்ப

அன்பு பற்றியே பேசப்படுகிறது!—என்பவைதாம் ஃபாயர் பாகின் அறநெறி பற்றிய அடிப்படை விதிகள்; அதிலிருந்து மற்றவை அனைத்தும் பெறப்படுகின்றன. ஃபாயர்பாகின் மதிநுட்பமான உரைகளாயினும் சரி, ஷ்டார்க்கேயின் வலு மிக்க புகழுரைகளாயினும் சரி, இந்தச் சில இறுதியுரைகளின் நொய்ம்மையையும் வெறுமையையும் மறைக்க முடியாது.

தன்னுள் ஈடுபட்டவாறு முடங்கிக் கிடக்கிற ஒரு நபர் மித அரிய சந்தர்ப்பங்களிலேதான் தன் இன்பவேட்கையைத் திருப்தி செய்து கொள்ள முடியும்; அதனால் அவனுக்கோ, மற்றவர்களுக்கோ இலாபம் ஏதும் இராது. வெளி உலகத் தோடு தொடர்பு கொண்டிருப்பது, உணவு, மறு பாலாரில் ஒருவர், புத்தகங்கள், உரையாடல், விவாதங்கள், நடவடிக் கைகள், உபயோகப்படுத்தவும் வேலை செய்வதற்குமான பொருள்கள் போன்றவை ஒருவனுக்கு அவசியமாகும். மனிதத் திருப்திக்கான இச்சாதனங்களும் பொருள்களும் ஒவ் வொருவனுக்கும் நிச்சயமாகவே கொடுக்கப்பட்டிருப்பதாக ஃபாயர்பாகின் அறநெறி அனுமானித்துக் கொள்கிறது அல்லது பயனற்ற வெறும் அறிவுரையை மட்டுமே வழங்கு கிறது; எனவே இவ்வசதிகள் இல்லாமல் இருக்கிறவர்களுக்கு இந்த அறநெறியால் ஒரு பயனும் கிடையாது. ஃபாயர்பா குங்கூட இதை வெளிப்படையாகப் பின்வருமாறு கூறு கிறார்: ''அரண்மனையில் உள்ள மனிதன் ஒரு மாதிரி சிந் திக்கிறான், குடிசையில் உள்ள மனிதன் வேறு மாதிரி சிந் திக்கிறான்.'' ''பசி, வறுமை ஆகியவற்றின் காரணமாக உன் உடம்பில் சத்து இல்லையானால் உன்னுடைய மண்டை யிலோ, மனதிலோ, இதயத்திலோ அறநெறிக்கான சத்தும் அதே போல் இல்லைதான்.''

மற்றவர்கள் தங்களுடைய இன்பவேட்கையைத் திருப் திப்படுத்துவதற்கான சமவுரிமை என்னும் விஷயத்தில் விவ காரங்கள் இதை விட மேலாக நடக்கின்றனவா? ஃபாயர்பாக் இந்தச் சமவுரிமையைத் தனிமுதலாக முன்வைத்தார், எல் லாக் காலங்களுக்கும் சூழ்நிலைமைகளுக்கும் இது பொருந்தும் என்று சாதித்தார். இது எப்போதிருந்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது? பண்டைக் காலத்

தில் அடிமைகளுக்கும் ஆண்டைகளுக்கும் இடையிலோ, மத்திய காலத்தில் பண்ணை அடிமைகளுக்கும் பிரபுக்களுக்கும் இடையிலோ என்றைக்காவது இன்பவேட்கைக்குரிய சமவுரிமை பற்றிய பேச்சு இருந்ததுண்டா? ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் இன்பவேட்கை ''சட்டரீதியான உரிமையின்படி'' ஆளும் வர்க்கத்தின் இன்பவேட்கைக்கு ஈவிரக்கமின்றி பலியிடப்படவில்லையா? ஆம், உண்மையிலே அது நெறிகெட்டது தான். ஆனால் தற்காலத்தில் உரிமைகளில் சமநிலை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ முறையை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் முதலாளித்துவ உற்பத்தி வளர்ச்சிக்கு சமூகப் படிநிலைச் சிறப்புரிமைகளை—அதாவது, தனிநபர் சிறப்புரிமைகளை—ஒழித்துவிடும்படியும் முதலில் தனிநபர் சட்டத் துறையிலும் பிறகு படிப்படியாகப் பொது உரிமைச் சட்டத் துறையிலும் எல்லா நபர்களுக்கும் சட்டத்தின் முன்னே சமநிலையைப் புகுத்தும்படியும் கட்டாயப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து கட்டாயப் படுத்தப்பட்ட அளவிற்கு இந்தச் சம உரிமை சொல்லளவிலே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்பவேட்கை இலட்சிய உரிமைகளின் மீது செழித்தோங்குவது அற்பமே. எல்லாவற்றையும் விட பொருளாயதச் சாதனங்களின் மீது தான் மிகப்பெரிய அளவில் அது செழித்தோங்குகிறது. சமவுரிமைகள் உள்ள மிகப் பெரும்பாலோர் வெறும் பிழைப்புக்கு அத்தியாவசியமானவற்றை மட்டும் பெரும்படியாக உறுதிப்படுத்திக் கொள்வதில் முதலாளித்துவ உற்பத்தி கவனம் செலுத்துகிறது. எனவே அடிமை முறையில் அல்லது பண்ணை அடிமை முறையில் இருந்ததை விட முதலாளித்துவ உற்பத்திமுறை பெரும்பான்மையினரின் இன்பவேட்கைக்குரிய சமவுரிமைக்கு அதிகமான மரியாதை (அதாவது, அதிகமாக இருக்க முடியுமானால்தான்) ஒன்றும் கொடுப்பது கிடையாது. மேலும், மனத்துக்கு இன்பம் அளிக்கின்ற சாதனங்கள் விஷயத்தில், அதாவது கல்விச் சாதனங்கள் விஷயத்தில் நிலைமை இதை விட மேலாக உள்ளதா? ''ஸடோவா பள்ளியாசிரியர்''[114] என்பவருங்கூட கற்பனை மனிதர்தானே?

இன்னும், அறநெறிகளைப் பற்றிய ஃபாயர்பாகின் தத்

துவப்படி பார்த்தால், பங்குச் சந்தைதான் நன்னெறி நடத்தைக்குரிய உன்னதமான கோயிலாகும்—ஒருவன் எப்போதும் சரியாக ஊகபேரம் நடத்தி வருவானேயானால். என்னுடைய இன்பவேட்கை என்னைப் பங்குச் சந்தைக்குக் கொண்டுபோய் விட்டால், பாதகமான விளைவுகளின்றி சாதகமான விளைவுகள் மட்டுமே ஏற்படும்படியாக என் செய்கைகளின் பின்விளைவுகளை அங்கே நான் அளந்தறிந்து வருவேனேயானால், அதாவது நான் எப்போதும் வெற்றி பெற்று வருவேனேயானால், அப்போது ஃபாயர்பாகின் நன்னெறிப் போதனையை நிறைவேற்றுகிறவன் ஆகிறேன். மேலும், அவ்வழியே மற்றொருவன் தனது இன்பத்தை நாடிச் செல்வதற்குரிய சமவுரிமையில் நான் குறுக்கிடுவதில்லை; ஏனெனில் அந்த மற்றவன் என்னைப் போலவே சொந்த விருப்பப்படிதான் பங்குச் சந்தைக்குப் போனான்; என்னோடு அவன் ஊகபேரத்தை முடித்ததில் நான் என் இன்பத்தை நாடிச் சென்றது போலவே அவனும் தன் இன்பத்தை நாடிச் சென்றான். அவன் பணத்தை இழக்கிறானென்றால், அவன் செயல் ஒழுக்கம் கெட்டது என்று அதுவே நிரூபிக்கிறதாக ஆகி விடுகிறது; காரணம், அவன் தவறாகக் கணக்குப் போட்டதுதான். மற்றும், அவனுக்குத் தகுந்த தண்டனையை நான் கொடுத்ததனால், நான் ஒரு நவீனகால ராடமந்தஸ்* போல் பெருமைப்பட முடியும். வெறும் உணர்ச்சிவழிப்பட்ட அலங்காரச் சொல்லாக இராத அன்பு என்பதும்கூட பங்குச் சந்தையின் மீது ஆட்சி செலுத்துகிறது; ஏனெனில் ஒருவன் தன்னுடைய சொந்த இன்பவேட்கை நிறைவு பெறுவதைப் பிறரிடத்திலே காண்கிறான். இதைத்தான் அன்பு சாதித்துத் தீர வேண்டும், இப்படித்தான் அன்பு நடைமுறையில் செயலாற்றுகிறது. என் நடவடிக்கைகளின் பின்விளைவுகளைப் பற்றிய சரியான முன்புத்தியுடன் நான் வெற்றிகரமாகச் சூதாடினால், ஃபாயர்பாக் வழிப்பட்ட அறநெறியின் மிகவும் கண்டிப்புள்ள எல்லா கட்டளைகளையும் நான் நிறைவேற்று

---

* கிரேக்கப் புராணத்தில் அறிவுக் கூர்மையும் நேர்மையும் மிக்கவரான ஒரு நீதிபதி.—ப-ர்.

கிறேன்—அத்துடன் நான் பணக்காரனாகவும் ஆகிறேன். வேறுவிதமாகச் சொல்லுவதானால், ஃபாயர்பாகின் விருப்பமும் கருத்தும் எப்படி இருந்தாலும், அவருடைய அறநெறி நவீன முதலாளித்துவ சமூகத்தின் அமைப்புச் சட்டத்துக்கு மிகப் பொருத்தமாக உள்ளது.

ஆனால் அன்பு!—ஆம், ஃபாயர்பாகைப் பொறுத்தவரை, அன்புதான் எங்கும் எப்போதும் அற்புதங்கள் செய்யும் கடவுள், நடைமுறை வாழ்க்கையின் இடர்கள் அனைத்தையும் நீக்கிக் கொள்வதற்கு அதுதான் உதவி புரிய வேண்டும்—நேரெதிரான நலன்களையுடைய வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ள ஒரு சமுதாயத்திலே அன்பாம்! இப்படியாக, அவருடைய தத்துவஞானத்திலிருந்து அதன் புரட்சித்தன்மையின் கடைசி எச்சமும் மறைந்து விடுகிறது; ஒருவரையொருவர் நேசியுங்கள், ஆண் பெண் என்று பாராமல், பட்டம் பதவிகளைக் கருதாமல் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளுங்கள், எங்கும் நிறைந்த சமரசக் குடிவெறியில் திளையுங்கள்!—என்னும் பழைய பாட்டுத்தான் மிஞ்சுகிறது.

சுருங்கச் சொன்னால், அறநெறிகளைப் பற்றிய ஃபாயர்பாகின் தத்துவம் அதற்கு முந்திய தத்துவங்கள் அடைந்த கதியையே அடைகிறது. அது எல்லாக் காலங்களுக்கும் எல்லா மக்களினங்களுக்கும் எல்லா நிலைமைகளுக்கும் பொருந்தும்படி வரையப்பட்டிருக்கிறது, அதனால்தான் இது எங்கும் என்றைக்கும் செயற்படுத்த முடியாததாக உள்ளது. யதார்த்த உலகத்தைப் பொறுத்தவரை, அது காண்ட்டின் ஆணித்தரமான கட்டளையைப் போலவே வலுவின்றி நிற்கிறது. யதார்த்தத்தில் ஒவ்வொரு வர்க்கத்துக்கும், ஒவ்வொரு தொழிலுக்குங்கூட சொந்தத்தில் ஓர் அறநெறி உண்டு; தண்டனைக்கு அகப்படாத வாய்ப்பு கிடைக்கும் போது, அதையுங்கூட அவை மீறுகின்றன. எல்லோரையும் ஒன்றுபடுத்துவதற்கு இருக்கிற அன்பு எனப்பட்டது போர்களிலும் சச்சரவுகளிலும் நீதிமன்ற வழக்குகளிலும் குடும்பச் சண்டைகளிலும் திருமண முறிவுகளிலும் சாத்தியமான அளவிற்கு ஒருவனை ஒருவன் சுரண்டுவதிலும்தான் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

ஆனால் ஃபாயர்பாக் அளித்த வலுமிக்க தூண்டுதல் அவரைப் பொறுத்தவரை இவ்வளவு பயனற்றுப் போனது எப்படிச் சாத்தியமாயிற்று? காரணம் சாதாரணமானது தான்: தாமே கொடிய முறையில் வெறுத்த கருத்தியலான உலகத்திலிருந்து உயிர்த்துடிப்புள்ள யதார்த்த உலகத்துக்கு வந்து சேர அவர் ஒருபோதும் வழி தேடிக் கொள்ளவில்லை. அவர் இயற்கையையும் மனிதனையும் உடும்புப்பிடியாகப் பிடித்துக் கொள்கிறார். என்றாலும் அவருக்கு இயற்கையும் மனிதனும் வெறும் வார்த்தைகளாகவே இருந்து விடுகின் றன. யதார்த்தமான இயற்கையைப் பற்றியோ, யதார்த்த மான மனிதனைப் பற்றியோ எதையும் திட்டவட்டமாகச் சொல்லும் திறனற்று இருக்கிறார். மனிதர்களை வரலாற் றில் பங்கெடுத்துக் கொள்கிறவர்களாகக் கருதும் போது தான் ஃபாயர்பாகின் சூட்சும மனிதனிலிருந்து யதார்த்த மான உயிர்த்துடிப்புள்ள மனிதர்களிடம் வந்து சேருகிறோம். இதைத்தான் ஃபாயர்பாக் எதிர்த்து நிற்கிறார். எனவே அவர் புரிந்து கொள்ளாத 1848ஆம் ஆண்டு யதார்த்த உலகுடன் ஏற்பட்ட இறுதி முறிவாகவும் தனிமையில் ஒதுங்கி ஒய்வு பெற்ற வாழ்க்கையாகவும் மட்டுமே அவருக்கு அர்த்தப்பட்டது. இதற்கான பழி அன்று ஜெர்மனியில் நிலவி வந்த நிலைமைகளின் மீதுதான் மீண்டும் பிரதானமாக விழுகிறது; துன்பகரமான முறையிலே நசிக்கும்படி அந்நிலை மைகள் அவரைத் தண்டித்து விட்டன.

ஆனால் ஃபாயர்பாக் எடுத்து வைக்காத அடியை எடுத்து வைப்பது அவசியமாக இருந்தது. ஃபாயர்பாகின் புதிய சமயத்தின் கருப்பொருளாக அமைந்த சூட்சும மனிதனின் தனிநபர் வழிபாட்டுக்குப் பதிலாக யதார்த்தமான மனிதர் களைப் பற்றிய, அவர்களின் வரலாற்று வளர்ச்சியைப் பற்றிய விஞ்ஞானம் வந்து தீர வேண்டியதாயிற்று. ஃபாயர்பாகின் கருத்துநிலையை ஃபாயர்பாகுக்கும் அப்பால் மேலும் வளர்ப் பதை மார்க்ஸ் 1845இல் புனிதக் குடும்பம் என்னும் நூலில் தொடங்கி வைத்தார்.

## IV

ஷ்டிராவுஸ், பௌவர், ஷ்டிர்னர், ஃபாயர்பாக் ஆகியோர் ஹெகலின் தத்துவஞானத்தின் சந்ததிகளாவர்; அவர்கள் ஹெகலின் தத்துவஞானத்தின் வேரை விட்டு விலகாதவர்களாக இருந்தனர். ஷ்டிராவுஸ் ஏசுவின் வாழ்க்கை, டாக்மாட்டிக்ஸ் ஆகிய நூல்களை எழுதிய பின் தத்துவஞானத் துறையிலும் திருச்சபை பற்றிய வரலாற்றுத் துறையிலும் ரெனான் பாணியில் இலக்கிய நூல்களை மட்டுமே படைத்தார். பௌவர் கிறிஸ்துவச் சமயத்தின் தோற்றம் பற்றிய வரலாற்றுத் துறையில் மட்டுமே ஏதோ கொஞ்சம் உருப்படியாகச் செய்தார். பக்கூனின் ஷ்டிர்னரை புரூதோனுடன் கலந்துவிட்டு அந்தக் கலவையை ''அராஜகவாதம்'' என்று வர்ணித்த பிறகுங்கூட ஷ்டிர்னர் வினோத மனிதராகவே இருந்து விட்டார். ஃபாயர்பாக் ஒருவர்தான் தத்துவஞானி என்னும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்தார். தனிப்பட்ட எல்லா விஞ்ஞானங்களுக்கும் மேலே இருப்பதாக, எல்லா விஞ்ஞானங்களையும் இணைக்கும் விஞ்ஞானமாக இருக்கிறது என்று சொல்லப்படும் தத்துவஞானம் அவருக்குக் கடக்க முடியாத எல்லையாகவும் மீற முடியாத புனித விஷயமாகவும் இருந்தது மட்டுமல்ல, அவர் அதில் பாதி வழியிலேயே நின்று விட்டார், கீழே பொருள்முதல் வாதியாகவும் மேலே கருத்துமுதல்வாதியாகவும் இருந்தார். விமர்சனம் என்னும் ஆயுதத்தைக் கொண்டு ஹெகலோடு கணக்குத் தீர்க்கும் திறன் அவருக்கு இருக்கவில்லை; வெறுமே ஹெகல் பயனற்றவர் என்று சொல்லி அவரைத் தள்ளி விட்டார். ஆனால் அவரைப் பொறுத்தவரை, ஹெகலின் அமைப்புமுறையின் பல்துறை அறிவு வளத்தோடு ஒப்பிடும் பொழுது, அவர் அன்பு பற்றிய வெளிப்பகட்டான சமயத்துக்கும் அற்பமான, செயலாற்றலில்லாத அறநெறிக்கும் மேலாக உறுதியாக எதையும் சாதிக்கவில்லை.

ஆனால் ஹெகலின் மரபு சிதறியதிலிருந்து இன்னும் ஒரு போக்கு வளர்ச்சியடைந்தது; அந்த ஒரு போக்கு மட்டுமே உண்மையான பலன்' தந்திருக்கிறது. இந்தப் போக்கு

அடிப்படையில் மார்க்சின் பெயரோடு இணைந்திருக்கிறது.*

ஹெகலின் தத்துவஞானத்திலிருந்து பிரிந்து நின்றது இங்கும்கூடப் பொருள்முதல்வாதக் கருத்துநிலைக்குத்திரும்பிய தன் விளைவாக இருந்தது. மெய்யான உலகத்தை—இயற்கையையும் வரலாற்றையும்—முன்னரே சிந்திக்கப்பட்ட கருத்துமுதல்வாத முட்டுக்கட்டைகள் எதுவுமில்லாமல் அணுகுகின்ற ஒருவருக்கு அது எப்படிக் காட்சி தருகிறதோ, அப்படியே புரிந்துகொள்ளத் தீர்மானிக்கப்பட்டதென்பது அதன் பொருளாகும். மெய்விவரங்களை அவற்றின் சொந்த இடைத்தொடர்பில்—கற்பனாவாத இடைத்தொடர்பில் அல்ல—

---

* இங்கே சொந்த முறையில் ஒரு விளக்கமளிப்பதற்கு என்னை அனுமதிக்க வேண்டும். சமீப காலத்தில் இந்தத் தத்துவத்தில் என்னுடைய பங்கைப் பற்றி அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. எனவே இந்த விஷயத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நான் இங்கே சில வார்த்தைகளை எழுதாமலிருக்க முடியாது. நாற்பது ஆண்டுகளாக எனக்கும் மார்க்சுக்கும் ஏற்பட்டிருந்த ஒத்துழைப்புக்கு முன்னரும் அதன் போதும் இந்தத் தத்துவஞானத்தின் அடிப்படைகளைத் தயாரிப்பதில்—குறிப்பாக, அதை விரித்துரைப்பதில்—எனக்குச் சற்றுச் சுதந்திரமான பங்கு இருந்தது என்பதை நான் மறுக்க முடியாது. ஆனால் அதன் தலைமையான அடிப்படைக் கருத்துக்களில்—சிறப்பாக பொருளாதார மற்றும் வரலாற்றுத் துறைகளில்—மிகவும் பெரும்பகுதியும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றை முடிவாக, துல்லியமாக வகுத்தளித்ததும் மார்க்சின் பங்காகும். ஒரு சில விசேஷமான துறைகளில் என்னுடைய பணியை விலக்கிப் பார்க்கும் பொழுது என்னுடைய பங்கினை நான் இல்லாமலேயே மார்க்ஸ் செய்திருக்க முடியும். ஆனால் மார்க்ஸ் சாதித்ததை நான் ஒருபோதும் செய்திருக்க முடியாது. எங்கள் எல்லோரையும் காட்டிலும் மார்க்ஸ் உயர்ந்து நின்றார்; நெடுந்தொலைவுக்குப் பார்த்தார்; அகல்விரிவாகவும் வேகமாகவும் கண்டார். மார்க்ஸ் ஒரு மேதை. மற்றவர்களாகிய நாங்கள்—எவ்வளவு உயர்வாக மதிப்பிட்டாலும்—திறமைசாலிகளே. அவர் மட்டும் இல்லையென்றால், இந்தத் தத்துவம் இன்று அடைந்திருக்கும் நிலையைச் சிறிதும் எட்டியிருக்காது. ஆகவே அது அவருடைய பெயரைத் தாங்கியிருப்பது பொருத்தமே. (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

இசைவிக்கப்பட முடியாத கருத்துமுதல்வாத முட்டுக்கட்டை ஒவ்வொன்றையும் ஈவிரக்கமின்றிப் பலியிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. பொருள்முதல்வாதத்துக்கு இதைக் காட்டிலும் கூடுதலான அர்த்தம் ஏதுமில்லை. இங்கே முதல் தடவையாகப் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டம் மெய்யான அக்கறையோடு கருதப்பட்டது; அறிவின் அதற்குரிய எல்லாத் துறைகளுக்கும்—குறைந்தபட்சம், அதன் அடிப்படைக் கூறுகளிலாவது—முரணில்லாமல் எடுத்துச் செல்லப்பட்டது.

ஹெகல் சாதாரணமாக ஒதுக்கி வைக்கப்படவில்லை. அதற்கு மாறாக, மேலே வர்ணிக்கப்பட்ட அவருடைய தத்துவ ஞானத்தின் புரட்சிகரமான பகுதி—இயக்கவியல் முறை—தொடக்க நிலையாக இருந்தது. ஆனால் இந்த முறை—அதன் ஹெகலின் வடிவத்தில்—உபயோகிக்க முடியாதிருந்தது. கருத்தின் சுயவளர்ச்சியே இயக்கவியல் என்பார் ஹெகல். தனிமுதலான கருத்து ஊழிக் காலத்திலிருந்து—எங்கேயிருக்கிறது என்பது தெரியவில்லை—இருந்து வருவது மட்டுமல்ல, அது இருக்கின்ற மொத்த உலகத்தின் மெய்யான வாழும் ஆன்மாவாகவும் இருக்கிறது. தர்க்கவியலில் வர்ணிக்கப்படுகின்ற எல்லாப் பூர்வாங்கக் கட்டங்களின் வழியாகவும்—அவையனைத்தும் அதில் உள்ளடங்கியிருக்கின்றன—அது வளர்ச்சி அடைந்து தானாகிறது; பிறகு அது இயற்கையாக மாறுவதன் மூலம் தன்னை "அந்நியப்படுத்திக் கொள்கிறது"; அங்கே சுய உணர்வு இல்லாமலே இயற்கையின் அவசியம் என்ற போர்வையில் மறைந்து கொண்டு அது ஒரு புதிய வளர்ச்சியை அடைகிறது; கடைசியில் மறுபடியும் மனிதனிடம் சுய உணர்வாக வெளிப்படுகின்றது. இந்த சுய உணர்வு அதன் நயமில்லாத ஆதி வடிவத்திலிருந்து மறுபடியும் வரலாற்றில் தன்னை விரித்துரைத்துக் கொள்கிறது; முடிவில் தனிமுதலான கருத்து ஹெகலின் தத்துவஞானத்தில் முழுமையாகத் தன்மயமாகிறது. ஆகவே இயற்கையிலும் வரலாற்றிலும் காணப்படுகின்ற இயக்கவியல் வளர்ச்சி, அதாவது குறுக்கு நெடுக்கான வளர்ச்சிகள் மற்றும் தற்காலிகமான பின்னடைவுகள் அனைத்திலும் தன்னை வலி

யுறுத்திக் கொண்டு கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு நடைபெறுகின்ற முன்னேற்ற வளர்ச்சியின் காரண காரிய இடைத்தொடர்பு ஊழிக் காலத்திலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் கருத்தின் சுய இயக்கத்தின் ஒரு நகல் மட்டுமே; அது எங்கே போகிறதென்று ஒருவருக்கும் தெரியாது; ஆனால் எல்லா சமயத்திலும் எவ்விதமான சிந்திக்கின்ற மனித மூளையிலிருந்தும் சுயேச்சையானது. இந்தச் சித்தாந்த உருத்திரிபை ஒழிக்க வேண்டியிருந்தது. நாங்கள் கருத்துக்களை மறுபடியும் எங்கள் மூளைகளில் பொருள் முதல்வாதரீதியில்—மெய்யான பொருள்களைத் தனிமுதலான கருத்தின் இந்த அல்லது அந்தக் கட்டத்தின் பிம்பங்கள் என்று கருதாமல் உண்மையான பொருள்களின் பிம்பங்களாக—புரிந்து கொண்டோம். ஆகவே இயக்கவியல் வெளிப்புற உலகம் மற்றும் மனித சிந்தனை ஆகிய இரண்டின் இயக்கம் சம்பந்தமான பொது விதிகளின் விஞ்ஞானமாகத் தன்னைக் குறுக்கிக் கொண்டது. இந்த இரண்டு வகையான விதிகளும் சாராம்சத்தில் ஒரே தன்மையானவை; ஆனால் தமது வெளிப்பாட்டில் வேறுபடுகின்றன; ஏனென்றால் மனித மூளை அவற்றை உணர்வுபூர்வமாகக் கையாள முடியும்; ஆனால் இயற்கையில்—இன்று வரையிலும் மனித வரலாற்றுத் துறையிலும் மிகப் பெரும் பகுதிக்கு—வெளிப்புற அவசியம் என்ற வடிவத்தில் தற்செயலானவை என்று தோன்றுகின்ற முடிவில்லாத தொடர்வரிசையான நிகழ்வுகளின் நடுவே இந்த விதிகள் சுய உணர்வு இல்லாமலேயே தம்மை வலியுறுத்துகின்றன. ஆகவே கருத்துக்களின் இயக்கவியலே மெய்யான உலகத்தின் இயக்கவியல்ரீதியான இயக்கத்தின் வெறும் உணர்வுபூர்வமான பிரதிபலிப்பாயிற்று. அதன் மூலம் ஹெகலின் இயக்கவியல் தலைகீழாக நிறுத்தப்பட்டது, அதாவது தலையை ஊன்றி நின்று கொண்டிருந்ததற்குப் பதிலாகக் காலால் நிற்கும்படிச் செய்யப்பட்டது. பல வருடங்களாக நமது மிகச் சிறந்த உழைப்புக் கருவியாகவும் நமது மிகக் கூர்மையான ஆயுதமாகவும் இருந்து வருகின்ற பொருள்முதல்வாத இயக்கவியல் எங்களால் மட்டுமல்ல—எங்களுக்கும் ஹெகலுக்கும் கூட சுயேச்சையான முறையில்—இயோசிஃப்

டீத்ஸ்கென் என்ற ஜெர்மன் தொழிலாளி ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டது* மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறையில் ஹெகலின் தத்துவஞானத்தில் புரட்சிகர மான பகுதி மறுபடியும் ஏற்படுத்தப்பட்டது; அதே சமயத் தில் அது முரணில்லாத முறையில் நிறைவேற்றப்படுவதைத் தடுத்த ஹெகலின் கருத்துமுதல்வாதச் சோடனைகளிலிருந்து விடுவிக்கப்பட்டது. உலகத்தை முன்னரே தயாரிக்கப்பட் டிருக்கும் பொருள்களின் தொகுதியாக, அல்ல, ஆனால் நிகழ்வுப்போக்குகளின் தொகுதியாகப் புரிந்துகொள்ள வேண் டும் என்ற மாபெரும் ஆதாரக் கருத்து இத்தொகுதியில் நிலையாகத் தோன்றும் பொருள்கள்—நம் மூளைகளில் அவை ஏற்படுத்தும் மன பிம்பங்கள், கருத்துக்களைப் போலவே—உருவாக்கமடைதல், அழிதல் என்ற இடைவிடாத மாற்றத்துக்கு உட்பட்டு, அதில் தற்செயலானது எனத் தோன்றும் அனைத்தையும் மற்றும் தற்காலிகமான பின் னடைவுகள் அனைத்தையும் மீறி முடிவில் முன்னேற்றமான வளர்ச்சி தன்னை வலியுறுத்தும் என்ற மாபெரும் அடிப் படையான கருத்து குறிப்பாக ஹெகலின் காலத்திலிருந்து பொது உணர்வில் முற்றமுழுமையாகக் கலந்திருப்பதால் இந்தப் பொதுமையான வடிவத்தில் இப்பொழுது அது ஒரு போதும் மறுக்கப்படுவதில்லை. ஆனால் இந்த அடிப்படை யான கருத்தைச் சொல்லளவில் ஏற்றுக் கொள்வதும் யதார்த் தத்தில் அதை ஆராய்ச்சியின் ஒவ்வொரு துறைக்கும் கையாள் வதும் இரண்டு வெவ்வேறான விஷயங்களாகும். எனி னும் இந்தக் கருத்துநிலையிலிருந்து எப்பொழுதும் பகுப் பாய்வு நடைபெற்றால், முடிவான தீர்வுகளுக்கும் நிரந்தர மான உண்மைகளுக்குமான கோரிக்கை முடிவாக நின்று விடும்; பெறப்பட்ட அனைத்து அறிவின் அவசியமான வரை யறையை, அது பெறப்பட்ட சந்தர்ப்பங்களால் அது கட்டுப் படுத்தப்படுகிறது என்ற உண்மையை ஒருவர் எப்பொழு துமே உணர்ந்திருக்கிறார். மறு பக்கத்தில், உண்மைக்கும்

---

* *Das Wesen der menschlichen Kopfarbeit, dargestellt von einem Handarbeiter*, Hamburg, Meissner. (எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

பொய்க்கும், நன்மைக்கும் தீமைக்கும், முற்றொருமைக்கும் வெவ்வேறான தன்மைக்கும், அவசியமானவற்றுக்கும் தற்செயலானவற்றுக்கும் இடையே உள்ள எதிர்நிலைகள்—இன்னும் பரவலாக இருக்கும் பழைய இயக்க மறுப்பியலுக்கு அவை சமாளிக்க முடியாதவையாகும்—நம் மீது ஆதிக்கம் செலுத்த நாம் இனியும் அனுமதிப்பதில்லை. இந்த எதிர்நிலைகள் சார்புநிலையான அர்த்தத்தைக் கொண்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியும்: தற்பொழுது உண்மை என்று அங்கீகரிக்கப்படுவது அதன் மறைந்திருக்கும் போலியான பக்கத்தையும் கொண்டிருக்கிறது, அது பின்னர் வெளிப்படும்; அதைப் போல, தற்பொழுது போலி என்று கருதப்படுவது அதன் உண்மையான பக்கத்தையும் கொண்டிருக்கிறது, அதன் காரணமாக அது முன்னர் உண்மையானதென்று கருதப்பட்டிருக்க முடியும்; அவசியமானது என்று கருதப்படுவது வெறும் தற்செயலானவைகளைக் கொண்டிருக்கிறது; தற்செயலானவை என்று சொல்லப்படுவது அவசியமானவை தம்மை மறைத்துக் கொள்கின்ற வடிவம், இதரவை.

பழைய ஆராய்ச்சி மற்றும் சிந்தனை முறை—ஹெகல் இதை ''இயக்க மறுப்பியல்'' என்று கூறினார்—பொருள்களை இருந்தவாறே திடமானவையாக, நிலையானவையாகப் பகுப்பாய்வு செய்ய முனைந்தது; இந்த முறை—அதன் எச்சங்கள் இன்னும் மக்களுடைய மூளைகளில் வன்மையோடு வட்டமிடுகின்றன—அதன் காலத்தில் மாபெரும் வரலாற்று நியாயத்தைக் கொண்டிருந்தது. நிகழ்வுப்போக்குகளை ஆராய்வது சாத்தியமாவதற்கு முன்னரே முதலில் பொருள்களை ஆராய்வது அவசியமாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களை ஒருவர் கவனிப்பதற்கு முன்பே அது எத்தகைய பொருள் என்பதை அறிந்திருக்க வேண்டும். இயற்கை விஞ்ஞானம் இந்த வகையைச் சேர்ந்ததே. பொருள்களை முற்றுப்பெற்ற பொருள்களாகக் கருதிய பழைய இயக்க மறுப்பியல் உயிரற்ற மற்றும் உயிருள்ள இயற்கையின் பொருள்களை முற்றுப்பெற்ற பொருள்கள் என்ற முறையில் பகுப்பாய்வு செய்த

இயற்கை விஞ்ஞானத்திலிருந்து தோன்றியது. இந்த ஆராய்ச்சி வெகு தூரம் வளர்ச்சியடைந்து தீர்மானமான காலடியை முன்னோக்கி வைப்பது, அதாவது இந்தப் பொருள்களுக்கு இயற்கை ஏற்படுத்தும் மாற்றங்களை முறைப்படி ஆராய்வதற்கு மாறுவது சாத்தியமான பொழுது அந்தச் சமயத்தில் பழைய இயக்க மறுப்பியலின் கடைசி மணி தத்துவஞானத் துறையிலும் ஒலித்தது. சென்ற நூற்றாண்டின் கடைசி வரையிலும் இயற்கை விஞ்ஞானம் மிகப் பெரும் அளவுக்குத் தொகுக்கும் விஞ்ஞானமாக, முற்றுப்பெற்ற பொருள்களைப் பற்றிய விஞ்ஞானமாக இருந்ததென்றால் நம் நூற்றாண்டில் அது அடிப்படையாகவே முறைப்படுத்தும் விஞ்ஞானமாக, நிகழ்வுப்போக்குகள், இந்தப் பொருள்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி, இந்த இயற்கை நிகழ்வுப் போக்குகள் அனைத்தையும் ஒரு மாபெரும் மொத்தத்தில் ஒன்றாகச் சேர்க்கின்ற இடைத்தொடர்பு ஆகியவற்றைப் பற்றிய விஞ்ஞானமாக இருக்கிறது. தாவர மற்றும் விலங்கு உயிரினங்களில் ஏற்படும் வளர்ச்சிப்போக்குகளை ஆராய்கின்ற உடலியல், தனிப்பட்ட உயிரினங்கள் கரு நிலையிலிருந்து முதிர்ச்சியை நோக்கி அடைகின்ற வளர்ச்சி பற்றிய கருவியல், பூமியின் மேற்பரப்பு படிப்படியாக எப்படி அமைந்தது என்று ஆராய்கின்ற பூகர்ப்பவியல்—இவை அனைத்தும் இந்த நூற்றாண்டின் படைப்புகள்.

ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கை நிகழ்வுப் போக்குகளின் இடைத்தொடர்பைப் பற்றி நம்முடைய அறிவு விரைந்து முன்னேறுவதற்கு மூன்று மாபெரும் கண்டுபிடிப்புகள் உதவியிருக்கின்றன:

முதலாவதாக, உயிரணு—இந்த அடிப்படை அலகு பெருக்கமடைந்து வேற்றுமைப்படுவதன் மூலமாக மொத்த தாவர மற்றும் பிராணிகளின் உடல் வளர்ச்சியடைகின்றது—கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் எல்லா உயர்நிலை உயிரினங்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஒரு பொது விதிக்கு ஏற்ப நடைபெறுவதை அங்கீகரிப்பதோடு, உயிரணுவுக்கு மாற்றமடைகின்ற தகுதி இருப்பதால் உயிரினங்கள் மாற்றமடையக் கூடிய, அதன் மூலம் தனிப்பட்ட வளர்ச்சியைக்

காட்டிலும் சற்று மேலான வளர்ச்சியடைகின்ற முறை சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டாவதாக, ஆற்றலின் உருமாற்றம், முதன்முதலாக உயிரற்ற இயற்கையில் இயங்குகின்ற சக்திகள் என்று சொல்லப்படுபவை அனைத்தும்—இயந்திர சக்தியும் அதன் துணையான ஒடுக்க நிலை ஆற்றல் என்று சொல்லப்படுவதும், வெப்பம், கதிரியக்கம் (ஒளி அல்லது கதிரியக்க வெப்பம்), மின்சாரம், காந்த சக்தி மற்றும் இரசாயன சக்தி—சர்வாம்ச இயக்கத்தின் வெளிப்பாட்டின் வெவ்வேறு வடிவங்களே, அவை குறிப்பிட்ட அளவு விகிதங்களில் ஒன்று மற்றொன்றாக மாற்றமடைகின்றன, அதனால் குறிப்பிட்ட அளவைக் கொண்ட ஒன்று மறைகின்ற பொழுது மற்றொன்றின் குறிப்பிட்ட அளவு அங்கே தோன்றுகிறது, ஆகவே இய்ற்கையின் மொத்த இயக்கமுமே ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு மாற்றமடைகின்ற இடைவிடாத நிகழ்வுப்போக்காகச் சுருங்கி விடுகிறது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது.

கடைசியாக, இன்று நம்மைச் சுற்றியிருக்கும் உயிரினங்கள்—மனிதன் உட்பட—அனைத்தும் ஆரம்பத்திலிருந்த ஒரு சில ஒற்றை உயிரணுவைக் கொண்ட உயிரிகளிலிருந்து ஏற்பட்ட நீண்ட பரிணாமப் போக்கின் விளைவு, இந்த ஒற்றை உயிரணு உயிரிகளும் இரசாயன முறைகளின் மூலம் தோன்றிய புரோடோபிளாஸம் அல்லது அல்புமினிலிருந்து தோன்றியவை என்பதற்கு முதல் தடவையாக ஒருங்கிணைந்த முறையில் டார்வின் கண்டுபிடித்த நிரூபணம்.

இந்த மூன்று மாபெரும் கண்டுபிடிப்புகள் மற்றும் இயற்கை விஞ்ஞானத்தின் இதர மகத்தான முன்னேற்றங்களின் விளைவாக இயற்கை நிகழ்வுப்போக்குகளின் இடைத்தொடர்பை—இயற்கையின் தனிப்பட்ட துறைகளுக்குள்ளே மட்டுமல்ல, ஆனால் இந்தத் தனிப்பட்ட துறைகளினிடையே இருக்கின்ற இடைத்தொடர்பையும்—மொத்தத்தில் நாம் கண்டுபிடிக்க முடியும். ஆகவே இயற்கை விஞ்ஞானப் பரிசோதனைகளில் கிடைத்திருக்கும் உண்மைகளைக் கொண்டு இயற்கையின் முழுமையைப் பற்றிய பொதுவான

சித்திரத்தை அநேகமாக முறையான வடிவத்தில் நாம் கொடுக்க முடியும். இந்தப் பொதுவான சித்திரத்தைக் கொடுப்பது இயற்கை பற்றிய தத்துவவியல் என்று சொல்லப்படுவதன் கடமையாக முன்பு இருந்தது; மெய்யான, ஆனால் இது வரை நாம் அறிந்திராத இடைத்தொடர்புகளின் இடத்தில் கருத்தியலான மற்றும் கற்பனையானவற்றை வைத்து மெய்விவரங்கள் இல்லாமல் காலியான இடங்களைக் கற்பனை விவரங்களால் பூர்த்தி செய்து உண்மையான இடைவெளிகளுக்கிடையே கற்பனையினால் பாலம் அமைப்பதன் மூலமாக மட்டுமே அது இதை நிறைவேற்ற முடியும். இந்தச் செய்முறையின் போது அது பல மேதாவிலாசமான கருத்துக்களைப் படைத்தது, பிற்காலத்தில் ஏற்பட்ட பல கண்டு பிடிப்புகளை முன்னறிந்து கூறியது; ஆனால் அது கணிசமான அளவுக்கு முட்டாள்தனத்தையும் உண்டாக்கியது. அப்பொழுது அது வேறுவிதமாக இருக்க முடியாது என்பதும் உண்மையே. நம் காலத்துக்குத் தகுதியான ''இயற்கை அமைப்பை'' உருவாக்கிக் கொள்வதற்காக இயற்கையைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவுகளை இயக்கவியல் ரீதியாக, அதாவது அவற்றின் இடைத்தொடர்பு என்ற அர்த்தத்தில் மட்டுமே புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருக்கும் பொழுது, இந்த இடைத்தொடர்பின் இயக்கவியல் தன்மை இயக்க மறுப்பியல்ரீதியில் பயிற்றுவிக்கப்பட்ட இயற்கை விஞ்ஞானிகளின் மூளைகளில் அவர்களுடைய சித்தத்துக்கு விரோதமாகத் தன்னைத் திணித்துக் கொள்கின்ற பொழுது—இன்று இயற்கை பற்றிய தத்துவவியல் முடிவாக ஒதுக்கப்படுகிறது. அதற்குப் புத்துயிர் கொடுக்கச் செய்யப்படுகின்ற ஒவ்வொரு முயற்சியும் மிகையானது மட்டுமல்லாமல் பின்னோக்கிக் காலடி வைப்பதாகவும் இருக்கும்.

ஆனால் இயற்கைக்கு—அதுவும் வளர்ச்சியின் வரலாற்று ரீதியான நிகழ்வுப்போக்கு என்று அங்கீகரிக்கப்படுகிறது—எது உண்மையாக இருக்கிறதோ, அது எல்லாப் பிரிவுகளையும் உள்ளிட்ட சமூக வரலாற்றுக்கும் மானுட (மற்றும் தெய்விக) விஷயங்களில் ஈடுபடுகின்ற அனைத்து விஞ்ஞானங்

களின் கூட்டுமொத்தத்துக்கும் அதைப் போலவே உண்மையானதாகும். இங்கும் கூட வரலாறு, சட்டம், மதம் இதரவைகளின் தத்துவஞானத்தில் சம்பவங்களால் எடுத்துக் காட்டப்படுகின்ற மெய்யான இடைத்தொடர்புக்குப் பதிலாகத் தத்துவஞானியின் மூளையில் உற்பத்தி செய்யப்பட்ட இடைத்தொடர்பு பயன்படுத்தப்பட்டது; வரலாறு என்பது முழுமையாகவும் அதன் தனித்தனிப் பகுதிகளிலும் கருத்துக்கள்—எப்பொழுதுமே அந்தந்தத் தத்துவஞானிக்கு மிகப் பிரியமான கருத்துக்கள் என்பது இயற்கையே—படிப்படியாக ஈடேற்றமடைவதில் அடங்கியிருந்தது. இக்கருத்தின்படி, வரலாறு முன்னரே உருவாக்கப்பட்ட ஒரு இலட்சியக் குறிக்கோளை நோக்கி—உதாரணமாக, ஹெகலிடம் அவருடைய தனிமுதலான கருத்தின் ஈடேற்றத்தை நோக்கி—சுய உணர்வில்லாமல், ஆனால் அவசியமான முறையில் இயங்கியது; அவரது கருத்தின்படி, இந்தத் தனிமுதலான கருத்தை நோக்கிச் செல்கின்ற மாற்றப்பட முடியாத போக்கே வரலாற்று நிகழ்ச்சிகளுக்கிடையே உள் இடைத்தொடர்பாக அமைந்திருந்தது. மெய்யான, இது வரை கண்டுபிடிக்கப்படாத இடைத்தொடர்பின் இடத்தில் ஒரு புதிய, மர்மமான, சுய உணர்வில்லாமல் அல்லது மெதுவாக உணர்வடைந்து கொண்டிருக்கும் பரம் பொருள் வைக்கப்பட்டது. ஆகவே இயற்கை மண்டலத்தைப் போலவே, இங்கும் உண்மையான இடைத்தொடர்புகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் கற்பனையான, செயற்கையான இடைத்தொடர்புகளை ஒழித்துக்கட்ட வேண்டியது அவசியமாக இருந்தது. இந்தக் கடமை, கடைசியாகப் பார்க்கும் பொழுது, மனித சமூக வரலாற்றை ஆட்சி செய்கின்ற பொதுவான இயக்க விதிகளைக் கண்டுபிடிப்பதாகும்.

எனினும் ஒரு விஷயத்தில் சமுதாய வளர்ச்சி பற்றிய வரலாறு இயற்கையின் வரலாற்றிலிருந்து முக்கிய அம்சத்தில் வேறுபட்டிருப்பதைக் காட்டிக் கொள்கிறது. இயற்கையில்—இயற்கை மீது மனிதன் புரியும் எதிர்வினையை நாம் புறக்கணிக்கின்ற அளவுக்கு—ஒன்றின் மீது ஒன்று செயல் புரியும் குருட்டுப் போக்கான, உணர்வற்ற சக்திகள் மட்

டுமே உள்ளன; அவற்றின் பரஸ்பர வினையிலிருந்து பொது விதிகள் செயல்பாட்டுக்கு வருகின்றன. நிகழ்கிறதனைத்திலும்—மேலீடாகத் தெரியும் எண்ணற்ற வெளித்தோற்றமான தற்செயல் நிகழ்ச்சிகளிலும் சரி, இந்தத் தற்செயல் நிகழ்ச்சிகளில் உள்ளார்ந்திருக்கும் ஒழுங்குமுறைமையை உறுதிப்படுத்தும் இறுதி விளைவுகளிலும் சரி—உணர்வுபூர்வமாக விரும்பப்பட்ட ஒரு குறிக்கோளாக எதுவும் நிகழ்வதில்லை. இதற்கு மாறாக, சமூக வரலாற்றில் மனிதர்கள் உணர்வைக் கொண்டும் ஆழ்ந்த சிந்தனைகளுடனும் அல்லது மனவெழுச்சிகளின் செல்வாக்கினால் உந்தப்பட்டும் திட்டவட்டமான குறிக்கோள்களை நோக்கிச் செயலாற்றுகிறார்கள். உணர்வுபூர்வமான ஒரு நோக்கம் இல்லாமல், நினைத்துக் கொண்ட குறிக்கோள் இல்லாமல் இங்கே எதுவும் நிகழ்வது இல்லை. வரலாற்று ஆராய்ச்சிக்கு—குறிப்பாகத் தனித்தனி சகாப்தங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய வரலாற்று ஆராய்ச்சிக்கு—இந்த வேறுபாடு எவ்வளவுதான் முக்கியமாக இருந்தாலும், வரலாற்றின் உள் இயங்கும் பொது விதிகளே வரலாற்றுப் போக்கின் மீது தாக்கம் செலுத்துகின்றன என்னும் உண்மையை இது மாற்றுவதில்லை. இங்கேயுங்கூட, மொத்தத்தில் பார்க்கும் போது, தனிநபர்களின் உணர்வுபூர்வமாக விரும்பப்பட்ட குறிக்கோள்களையும் மீறி நிகழ்ச்சிகளின் மேலோட்டத்தில் தற்செயல் நிகழ்ச்சி ஆட்சி புரிவதாகத் தோன்றுகிறது. சித்தப்படி முடிவு செய்தது அபூர்வமாகத்தான் நடக்கிறது. பெரும்பாலும் விரும்பப்பட்ட எண்ணற்ற குறிக்கோள்கள் ஒன்றையொன்று குறுக்கிட்டு மோதிக் கொள்கின்றன, அல்லது இந்தக் குறிக்கோள்கள் முதலிலிருந்தே சாதிக்கப்பட முடியாதவையாகவோ, அல்லது அவற்றைச் சாதிப்பதற்கான சாதனங்கள் போதாமலோ இருக்கின்றன. ஆக, வரலாற்றுத் துறையில் எண்ணற்ற தனித்தனி சித்தங்களின், தனித்தனி செயல்களின் மோதல்கள் உணர்வற்ற இயற்கைத் துறையில் நிலவுவது போன்ற அதே நிலவரங்களை உண்டாக்கி விடுகின்றன. செயல்களின் குறிக்கோள்கள் முன்கருதப் பெற்றவை, ஆனால் இச்செயல்களிலிருந்து நடைமுறையில் பின்தொடரும் விளைவுகள் முன்

கருதப்பட்டவை அல்ல; அல்லது முதலில் அவை முன் கருதப்பட்ட குறிக்கோளுடன் பொருந்துவதாகத் தோன்றினால், முன்கருதப்பட்ட பின்விளைவுகளுக்கு முற்றிலும் வேறான பின்விளைவுகளை அவை இறுதியில் பெறுகின்றன. ஆக, மொத்தத்தில் தற்செயலானது வரலாற்று நிகழ்ச்சிகளையும் அதே போல் ஆட்சி புரிவதாகத் தோன்றுகிறது. ஆனால் எங்கே மேலோட்டத்தில் தற்செயல் நிகழ்ச்சி ஆட்சி புரிகிறதோ, அங்கே உண்மையில் அந்தத் தற்செயல் நிகழ்ச்சி மீது அதன் மறைவான உள்விதிகள் எப்போதும் ஆட்சி செலுத்துகின்றன. இவ்விதிகளைக் கண்டுபிடிப்பது ஒன்றே இப்போதைய தேவை.

வரலாற்றின் நிகழ்வுப்போக்கு எதுவாக இருப்பினும், மனிதர்கள் வரலாற்றைப் பின்வருமாறு படைக்கின்றனர்: ஒவ்வொருவனும் உணர்வுபூர்வமாக விரும்பப்பட்ட தன் சொந்தக் குறிக்கோளைப் பின்பற்றுகிறான்; வெவ்வேறான திசைகளில் செயல்படும் இந்தப் பல சித்தங்களின் கூட்டு விளைவும் புற உலகின் மீது அவை புரியும் பல்வகையான பாதிப்புகளின் கூட்டு விளைவுகளும் வரலாறாகவே உருவாகின்றன; எனவே அது அந்தப் பல நபர்கள் விரும்புவது என்ன என்னும் பிரச்சினையும் ஆகும். ஆர்வம் அல்லது ஆழ்ந்த சிந்தனை சித்தத்தை நிர்ணயிக்கிறது. ஆனால் ஆர்வத்தையோ, ஆழ்ந்த சிந்தனையையோ உடனடியாக நிர்ணயிக்கும் நெம்புகோல்கள் மிகவும் வேறுபட்ட வகைகளைச் சேர்ந்தவை. அவற்றில் ஒரு பகுதி புறநிலைப் பொருள்களாக இருக்கக் கூடும், ஒரு பகுதி இலட்சிய நோக்கங்களாக இருக்கக் கூடும், அதாவது: பேராவலாகவோ, ''உண்மை மற்றும் நீதியின் பாலுள்ள ஆர்வமாகவோ'', தனிப்பட்ட பகையாகவோ, வெறுமே தனிநபர்களின் எல்லாவிதமான திடீர் எண்ணங்களாகவோகூட இருக்கக் கூடும். ஆனால், ஒருபுறத்தில், வரலாற்றில் செயலாற்றும் பல தனித்தனி சித்தங்கள் பெரும்பாலும் முன்கருதப்பட்ட விளைவுகளிலிருந்து முற்றிலும் வேறான—அடிக்கடி முற்றிலும் எதிரான—விளைவுகளை உண்டாக்குவதை நாம் பார்த்தோம்; எனவே மொத்த விளைவோடு சம்பந்தப்படுத்திப்பார்க்கு ம் போது,

அவற்றின் நோக்கங்கள் அதே போல் இரண்டாம் பட்சமான முக்கியத்துவம் பெற்றிருப்பதையும் நாம் பார்த்தோம். மறு புறத்தில், மேலும் ஒரு பிரச்சினை எழுகிறது: தம் முறைக்கு இந்த நோக்கங்களின் பின் நிற்கும் இயக்கு சக்திகள் யாவை? செயலாற்றுவோரின் மூளைகளில் இந்த நோக்கங்களாகத் தம்மை உருமாற்றிக் கொள்ளும் வரலாற்றுக் காரணங்கள் யாவை?

பழைய பொருள்முதல்வாதம் இக்கேள்வியைத் தன்னிடம் கேட்டுக் கொள்ளவில்லை. எனவே வரலாறு பற்றிய அதன் கருத்தோட்டம்—அப்படி ஒன்று அதற்கு உண்டு என்னும் அளவில்—சாராம்சத்தில் நடைமுறைப் பயன் நோக்கம் கொண்டது. அது எல்லாவற்றையும் செயலின் நோக்கங்களுக்கேற்ப மதிப்பிடுகிறது; வரலாற்றில் செயலாற்றும் மனிதர்களைப் பண்புடையோர், பண்பற்றோர் என்று பிரிக்கிறது; அதன் பிறகு பொதுவாகவே பண்புடையோர் வஞ்சிக்கப்படுவதையும் பண்பற்றோர் வெற்றி பெறுவதையும் காண்கிறது. எனவே வரலாற்றைக் கற்பதால் பயன் ஒன்றும் கிடைக்காது என்று பழைய பொருள்முதல்வாதம் புரிந்து கொள்கிறது. ஆனால் நாம், வரலாற்றுத் துறையில் பழைய பொருள்முதல்வாதம் தன்னையே வஞ்சித்துக் கொள்கிறது என்றும் ஏனென்றால் இலட்சிய வகைப்பட்ட உந்து சக்திகளின் பின்னே இருப்பது என்ன, இந்த உந்து சக்திகளை உந்துவது எது என்று ஆராய்ச்சி செய்வதற்குப் பதிலாக அங்கே (வரலாற்றுத் துறையில்) செயல்படும் இலட்சிய வகைப்பட்ட உந்து சக்திகளையே இறுதிக் காரணங்களாக அது எடுத்துக் கொள்கிறது என்றும் புரிந்து கொள்கிறோம். இலட்சிய வழிப்பட்ட உந்து சக்திகளை அங்கீகரிப்பதில் அல்ல தடுமாற்றம்; இச்சக்திகளின் பின்னே உள்ள இயக்குக் காரணங்களைப் பார்க்கும் அளவுக்கு ஆராய்ச்சியை மேலும் பின்னோக்கிக் கொண்டு போகாததில்தான் அதன் தடுமாற்றம் இருக்கிறது. இதற்கு மாறாக, வரலாற்றில் செயலாற்றும் மனிதர்களின் நோக்கங்கள்—வெளித்தோற்றத்திற்குத் தெரிகின்றவையும் உண்மையிலே செயல்பட்டு வருகின்றவையும்—நிச்சயமாக வரலாற்று நிகழ்ச்சிகளின் இறுதிக் காரணங்

கள் அல்ல என்று வரலாற்றுத் துறைத் தத்துவஞானம்—குறிப்பாக, ஹெகல் பிரதிநிதித்துவப்படுத்தும் வரலாற்றுத் துறைத் தத்துவஞானம்—அங்கீகரிக்கிறது; இந்த நோக்கங்களுக்குப் பின்னே வேறு இயக்குச் சக்திகள் உள்ளன, அவற்றைப் பயில வேண்டும் என்றும் அது சொல்கிறது. ஆனால் அது இச்சக்திகளை வரலாற்றுக்குள்ளேயே தேடுவதில்லை, சொல்லப் போனால் வெளியிலிருந்து அவற்றை இறக்குமதி செய்கிறது, தத்துவஞானச் சித்தாந்தத்திலிருந்து வரலாற்றினுள் இறக்குமதி செய்கிறது வரலாற்றுத் துறைத் தத்துவஞானம். எடுத்துக்காட்டாக, ஹெகல் பண்டைக்கால கிரேக்க வரலாற்றை அதன் சொந்த உள்தொடர்புகளின் மூலம் விளக்குவதற்குப் பதிலாக அது ''தனித்தன்மையின் அழகான வடிவங்களைச்'' செயலாக்குவதும், தன்னளவிலான ''கலைப் படைப்பை'' நடைமுறையில் கொண்டுவருவதும் தவிர வேறொன்றுமல்ல கிரேக்க வரலாறு என்று வெறுமே சாதிக்கிறார். இது குறித்துப் பேசும் போது பண்டைக்கால கிரேக்கர்களைப் பற்றி நேர்த்தியாகவும் ஆழமாகவும் நிறைய சொல்கிறார். ஆனால் வெறும் வார்த்தைகளால் நிரம்பிய இத்தகைய விளக்கத்தை நாம் ஏற்றுக்கொள்ள மறுப்பதை இது தற்பொழுது தடுக்க முடியாது.

ஆகவே வரலாற்றில் செயலாற்றும் மனிதர்களுடைய நோக்கங்களின் பின்னே—உணர்வுபூர்வமாக அல்லது உணர்வின்றி, உண்மையில் மிக அடிக்கடி உணர்வின்றி—இருக்கும் இயக்கு சக்திகளை, இறுதியில் வரலாற்றின் யதார்த்தமான இயக்கு சக்திகளாக இருப்பவற்றை ஆராய்ச்சி செய்வது தான் பிரச்சினையாக இருக்கும் போது, தனிநபர்களின்—அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—நோக்கங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்பது பிரச்சினை அல்ல; ஆனால் மாபெரும் மக்கள் திரள்களை, முழுமையான மக்களினங்களை, ஒவ்வொரு மக்களினத்தைச் சேர்ந்த முழுமையான வர்க்கங்களை இயங்கச் செய்யும் நோக்கங்களைப் பற்றியும், அதுவும், சுடர் விட்டெரிந்து விரைவிலே அணைந்து போகும் வைக்கோல் தீ போல் ஏதோ ஒரு வினாடி இயக்கம் போலன்றி, ஒரு மகத்தான வரலாற்று

மாற்றத்தில் முடிகிற, நெடிய பயனுள்ள செயலில் ஈடுபடுத்தி விடுகிற நோக்கங்களைப் பற்றியும் கூறும் பிரச்சினையாகத்தான் இது உள்ளது. இங்கே செயல்புரியும் மக்கள் திரளின் மனத்திலும் அவர்களுடைய தலைவர்களின்—உயர்ந்த மனிதர்கள் என்று சொல்லப்படுகிறவர்களின்—மனத்திலும் தெளிவாகவோ, தெளிவின்றியோ, நேரடியாகவோ அல்லது ஒரு சித்தாந்த, கற்பனையான வடிவத்தில் கூட உணர்வுபூர்வமான நோக்கங்களாகப் பிரதிபலிக்கப்பட்டிருக்கும் இயக்குக் காரணங்களைக் கண்டறிகின்ற பாதை ஒன்றுதான் வரலாறு முழுவதிலும், அதன் குறிப்பிட்ட காலப்பகுதிகளிலும், குறிப்பிட்ட நாடுகளிலும் ஆட்சி செலுத்தும் விதிகளைக் கண்டுபிடிக்க உதவி செய்யும். மனிதர்களை இயங்கச் செய்யும் ஒவ்வொன்றும் அவர்களுடைய மனத்தினூடே சென்று தீர வேண்டும். ஆனால் அது மனத்தில் என்ன வடிவம் எடுத்துக் கொள்ளும் என்பது பெரிதும் சூழ்நிலைமைகளையே பொருத்திருக்கும். இன்னும் 1848இல் ரைன் மாநிலத்தில் தொழிலாளிகள் செய்ததைப் போல் இப்போது வெறுமே இயந்திரங்களை உடைத்துப் போடாவிட்டாலும், அவர்கள் நிச்சயமாக முதலாளித்துவ இயந்திரத் தொழிலுடன் சமரசப்பட்டுப் போகவில்லை.

ஆனால் இதற்கு முந்திய காலப்பகுதிகளில் வரலாற்றின் இந்த இயக்குக் காரணங்களை ஆய்வு செய்வது—அவற்றிற்கும் அவற்றின் விளைவுகளுக்கும் இடையேயுள்ள சிக்கலான, மறைவான பரஸ்பரத் தொடர்புகளின் காரணத்தால்—அனேகமாகச் சாத்தியமற்றிருந்தது. நம்முடைய இன்றையக் காலப்பகுதி இந்தப் பரஸ்பரத் தொடர்புகளை எளிதாக்கி விட்டிருப்பதால் புதிரை விடுவிக்க முடிகிறது. பெருமளவான தொழில்துறை நிலைநாட்டப்பட்ட காலத்திலிருந்து, அதாவது குறைந்தபட்சம் 1815இல் ஐரோப்பாவில் அமைதி ஏற்பட்ட காலத்திலிருந்து[115] நிலம் படைத்த பிரபுவம்சத்தினர் (landed aristocracy), முதலாளி வர்க்கம் (middle class) என்னும் இரண்டு வர்க்கங்களின் மேலாட்சிக்கான கோரிக்கைகளை அச்சாணியாகக் கொண்டிருந்தது இங்கிலாந்தின் அரசியல் போராட்டம் என்பது அங்கு எப்பொழுதும் எவருக்

கும் இரகசியமாக இருக்கவில்லை. பிரான்சில் பூர்போன் அரசவம்சத்தினர் மீண்டும் ஆட்சிக்கு வந்ததையொட்டி இந்த உண்மை புலப்பட்டது. தியேரீ முதல் கிஸோ வரை, மின்யே முதல் தியேர் வரை முடியரசு மீட்சிக் காலத்தைச்[116] சேர்ந்த வரலாற்றாசிரியர்கள் மத்திய காலத்திலிருந்து தொடர்ந்து பிரெஞ்சு வரலாறு முழுவதையும் புரிந்து கொள்வதற்கு அதுவே திறவுகோல் என்று அதைப் பற்றி எங்கும் பேசுகிறார்கள். 1830 முதல் இவ்விரு நாடுகளிலும் தொழிலாளி வர்க்கத்தை, பாட்டாளி வர்க்கத்தை ஆட்சியதிகாரத்திற்குப் போட்டியிடும் மூன்றாம் போட்டியாளனாக அங்கீகரித்துள்ளனர். இந்த மூன்று மாபெரும் வர்க்கங்களின் போராட்டத்திலும் அவர்களுடைய நலன்களின் மோதலிலும் நவீன கால வரலாற்றின்—குறைந்தபட்சம், மிகவும் முன்னேறிய இவ்விரு நாடுகளிலும்—இயக்கு சக்தியைப் பார்க்காமலிருப்பதற்கு ஒருவன் வேண்டுமென்றே கண்ணை மூடிக் கொள்ள வேண்டியிருக்கும் அளவுக்கு நிலைமைகள் எளிதாகியுள்ளன.

ஆனால் இந்த வர்க்கங்கள் எப்படித் தோன்றின? முன்னாளில் நிலப்பிரபுத்துவ மாபெரும் நிலச்சொத்தின் தோற்றத்துக்கு—குறைந்தபட்சம், முதல் காரணமாயினும்—முதல் பார்வையில் அரசியல் காரணங்களை, பலவந்தமாகக் கைவசப்படுத்திக் கொள்வதை கற்பிப்பது சாத்தியமாயிருந்தது என்றால், முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் இவற்றின் விஷயத்தில் இவ்வாறு நடைபெறவில்லை. இங்கே இவ்விரண்டு மாபெரும் வர்க்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் முற்றிலும் பொருளாதார வகைப்பட்ட காரணங்களிலே உள்ளதை முழுத்தெளிவுடன் காணலாம். பெரிய நிலக் கிழார்களுக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயுள்ள போராட்டத்திலும் அதே போல் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையேயுள்ள போராட்டத்திலும் முதலாவதாக இருப்பது பொருளாதார நலன்களைப் பற்றிய பிரச்சினையே என்று அதே போலத் தெளிவாகத் தெரிந்தது. அந்தப் பொருளாதார நலன்களை அடைவதற்கு வெறும் சாதனமாகப் பயன்படுத்துவதே அரசியல் அதிகாரத்

தின் நோக்கம் ஆகும். முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் ஆகிய இரண்டும் பொருளாதார நிலைமைகள்—இன்னும் சரியாகச் சொன்னால், உற்பத்தி முறை—மாறியதின் பின்விளைவாகவே உதித்தன. முதலில் கைவினைஞர் கைத்தொழிலிலிருந்து பட்டறைத் தொழிலுக்கும் அதன் பிறகு பட்டறைத் தொழிலிலிருந்து நீராவி மற்றும் இயந்திரச் சக்தியைக் கொண்டு நடக்கிற பெருமளவான தொழிலுக்கும் உற்பத்தி முறை மாற்றம் பெற்றது இவ்விரு வர்க்கங்களின் வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. முதலாளி வர்க்கம் இயக்கி விட்ட புதிய உற்பத்திச் சக்திகள்—முதலில் உழைப்புப் பிரிவினையும் ஒரே எளிய வேலைக் கூறை செய்து வரும்படியான தொழிலாளிகளை ஒரு பொதுவான பட்டறைத் தொழிலில் சேர்த்து இணைப்பதும்—இந்த உற்பத்திச் சக்திகளால் வளர்க்கப்பட்ட பரிமாற்றத்தின் நிலைமைகள், தேவைகள் ஆகியவை வரலாற்றின் வழியே வந்து சட்டத்தால் புனிதப்படுத்தப்பட்ட நடப்பிலுள்ள உற்பத்தி முறையோடு ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பொருந்தாததாகி விட்டன; அதாவது, அவை கைவினைஞர் சங்கத்தின் சிறப்புரிமைகளோடும் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறையின் எண்ணற்ற பிற தனிப்பட்ட மற்றும் உள்ளூர் சிறப்புரிமைகளோடும் (சமூகத்தின் உரிமையற்ற படிநிலைகளைச் சேர்ந்த மக்களுக்கு இவை அனைத்தும் கைவிலங்குகளாகவே இருந்தன) பொருந்தாததாகி விட்டன. முதலாளி வர்க்கம் பிரதிநிதித்துவப்படுத்தும் உற்பத்திச் சக்திகள் நிலப்பிரபுக்களும் கைவினைஞர் சங்க எசமானர்களும் பிரதிநிதித்துவப்படுத்தும் உற்பத்தி முறையை எதிர்த்துக் கலகம் செய்தன. அதன் விளைவு தெரிந்ததே. நிலப்பிரபுத்துவக் கைவிலங்குகள் இங்கிலாந்தில் படிப்படியாகவும் பிரான்சில் ஒரேயடியிலும் உடைத்தெறியப்பட்டன; ஜெர்மனியில் இந்நிகழ்வுப்போக்கு இன்னும் முடியவில்லை. எனினும் பட்டறைத் தொழில் முறை அதன் வளர்ச்சியின் ஒரு திட்டவட்டமான கட்டத்திலே நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையோடு மோதிக் கொண்டது போலவே, இப்போது பெருமளவான தொழில்துறை நிலப்பிரபுத்துவ உற்பத்தி

முறைக்குப் பதிலாக ஏற்பட்டுள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையோடு ஏற்கெனவே மோதிக் கொண்டிருக்கிறது. இந்த உற்பத்தி முறையாலும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் குறுகிய வரம்புகளாலும் கட்டிப் போடப்பட்டுள்ள பெருமளவான தொழில்துறை ஒரு புறத்தில் பெருந்திரளான மக்கள் மேன்மேலும் அதிகமாகப் பாட்டாளி வர்க்கமயமாதலையும் மறு புறத்தில் விற்பனை செய்ய முடியாத பொருள்களின் மேன்மேலும் அதிகமான தொகையையும் உண்டாக்குகிறது. மிகை உற்பத்தியும் திரளான மக்களின் வறுமையும் ஒன்றுக்கொன்று காரணமாக அமைகின்றன; இந்த அபத்தமான முரண்பாடுதான் பெரும் தொழில்துறையின் விளைவு; உற்பத்தி முறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமாக உற்பத்திச் சக்திகளை விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்று இம்முரண்பாடு அறைகூவி அழைக்கிறது.

ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஓர் அரசியல் போராட்டமாகும்; விடுதலைக்காக நடக்கும் எல்லா வர்க்கப் போராட்டங்களும் அவசியமாகவே அரசியல் வடிவம் பெற்றிருந்த போதிலும்—ஏனெனில் அவை அரசியல் போராட்டங்களே—இறுதியில் இப்போராட்டங்களெல்லாம் பொருளாதார விடுதலையையே நோக்கமாகக் கொண்டவை என்று குறைந்தபட்சம் நவீன கால வரலாற்றைப் பொறுத்தவரை சரியானது என்று நிரூபிக்கிறது. எனவே குறைந்தபட்சம் இங்கேயாயினும், அரசு, அரசியல் ஆட்சி முறை கீழ்ப்பட்ட அம்சமாக, சிவில் சமூகம், அதாவது பொருளாதார உறவுகளின் துறை நிர்ணயமான அம்சமாக உள்ளது. ஹெகலுங் கூட தலைவணங்கிய மரபு வழிப்பட்ட கருத்தோட்டம் அரசை நிர்ணயமான அம்சமாகக் கண்டது, குடிமக்கள் சமூகத்தை அரசால் நிர்ணயிக்கப்படும் அம்சமாகக் கண்டது. வெளித்தோற்றங்களும் இத்துடன் பொருந்துகின்றன. ஒவ்வொரு தனி மனிதனுடைய செயல்களின் உந்து சக்திகள் அனைத்தும் அவனுடைய மூளையினூடே சென்று அவனைச் செயலில் இறங்கச் செய்வதற்கு அவன் சித்தத்தின் நோக்கங்களாகத் தம்மை உருமாற்றிக் கொள்ள வேண்டியிருப்பது போலவே, சிவில் சமூகத்தின் தேவைகள் அனைத்

தும்—ஆளும் வர்க்கமாக எந்த வர்க்கம் இருக்க நேர்ந்தாலும் சரி—சட்டங்களின் வடிவத்தின் பொதுவான பலம் பெறுவதற்கு அரசின் சித்தத்தினூடே சென்று தீர வேண்டும். விவகாரத்தின் முறைப்படியான அம்சம் இதுதான் என்பது தானாகவே புலப்படும். எனினும் வெறும் சம்பிரதாயமான இவ்விருப்பத்தின்—தனிநபரின் விருப்பமும் சரி, அரசின் விருப்பமும் சரி—உள்ளடக்கம் என்ன, இவ்வுள்ளடக்கம் எங்கிருந்து பெறப்படுகிறது, இதைப் பற்றி மட்டும் விருப்பம் எழுவானேன், வேறெதைப் பற்றியாவது விருப்பம் எழக் கூடாதா என்னும் கேள்வி எழுகிறது. இதை நாம் ஆய்ந்து பார்த்தால், நவீன கால வரலாற்றில் சிவில் சமூகத்தின் மாறி வரும் தேவைகளும் ஏதாவதொரு வர்க்கத்தின் மேலாட்சியும் கடைசியாக உற்பத்திச் சக்திகள் மற்றும் பரிமாற்ற உறவுகளின் வளர்ச்சியும் மொத்தத்தில் அரசின் விருப்பத்தை நிர்ணயிக்கின்றன என்று காண்கிறோம்.

ஆனால் பிரம்மாண்டமான உற்பத்தி மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் உள்ள நம் நவீன சகாப்தத்திலுங்கூட அரசு சுதந்திரமான வளர்ச்சியோடு கூடிய சுதந்திரமான செயற்களமாக இல்லாமல் அதன் வாழ்நிலையும் வளர்ச்சியும் முடிவில் சமூகத்தின் பொருளாதார வாழ்க்கை நிலைமைகளைச் சார்ந்திருந்ததென்றால் இத்தகைய பல்விதமான ஏராளமான துணைச் சாதனங்களோடு மனிதனின் பொருளாயத வாழ்க்கை நடத்தப்படாத—ஆகவே இப்படிப்பட்ட உற்பத்தியின் அவசியம் மனிதர்கள் மீது மேலும் பெரிதான ஆதிக்கம் செலுத்தி வந்திருக்க வேண்டிய—முந்திய காலங்கள் அனைத்திற்கும் இது மேலும் உண்மையாக இருந்தாக வேண்டும். இன்றுங்கூட பெரும் தொழில்துறை, ரயில்வேக்கள் ஆகியவை உள்ள சகாப்தத்தில் மொத்தத்தில் அரசு என்பது உற்பத்தியில் மேலாட்சி செலுத்தி வரும் வர்க்கத்தினுடைய பொருளாதாரத் தேவைகளின் சாரத் திரட்டு வடிவத்திலுள்ள வெறும் பிரதிபலிப்பேயானால், அன்று ஒவ்வொரு மனிதத் தலைமுறையும் பொருளாயதத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்கு அதன் மொத்த வாழ்நாளில் மேலும் பெரிதான பகுதியைச் செலவழிக்க வேண்டி

கட்டாயப்படுத்தப்பட்டு அதன் காரணமாக அரசு நம்மை விட மேலும் அதிகமாக அந்தத் தேவைகளைச் சார்ந்திருந்த ஒரு சகாப்தத்தில் அதன் இத்தகைய பாத்திரம் மேலும் தவிர்க்க முடியாததாக இருந்திருக்க வேண்டும். முந்திய காலத்திய வரலாற்றைப் பற்றிய பரிசீலனை—இக்கோணத்திலிருந்து காரியப் பற்றுடன் மேற்கொள்ளப்பட்டவுடன்—இதை முழு நிறைவாக உறுதிப்படுத்துகிறது. ஆனால் இதை நாம் இங்கே ஆராய முடியாது என்பது உண்மையே.

பொருளாதார உறவுகள் அரசையும் அரசாங்கச் சட்டங்களையும் நிர்ணயிக்கின்றன என்றால், அதே போல் தனிநபர் பற்றிய சட்டத்தையும் அவை நிர்ணயிக்கின்றன. சாராம்சத்தில் இச்சட்டம் தனிநபர்களிடையே நிலவும் அந்தந்தச் சூழ்நிலைமைகளுக்கு ஏற்ற சகஜமான பொருளாதார உறவுகளுக்கு அனுமதி அளிக்கிறது. ஆனால் இதனுடைய நடைமுறை வடிவம் கணிசமாக வேறுபடுகிறது. இங்கிலாந்தில் நடந்தது போல், தேசிய வளர்ச்சிக்கு இசைவான வகையில் பழைய நிலப்பிரபுத்துவச் சட்டமுறையின் வடிவங்களை மாற்றாமல் அவற்றுக்கு முதலாளித்துவ உள்ளடக்கம் கொடுத்தபடியே பிரதானமாக அவற்றை வைத்திருப்பது சாத்தியமே; உண்மையில், நிலப்பிரபுத்துவப் பெயரில் ஒரு முதலாளித்துவ அர்த்தத்தை அவற்றில் கண்டு கொள்ளலாம். ஆனால் இதே போல், மேற்கு ஐரோப்பாக் கண்டத்தில் நடந்தது போல், சாதாரணமான பண்ட உடைமையாளர்களின் (வாங்குபவர்களும் விற்பனையாளர்களும், கடன் வாங்கியவர்களும் கடன் கொடுத்தவர்களும், காண்டிராக்ட் ஒப்பந்தங்கள், கடமைப் பொறுப்புகள், முதலியவற்றின்) எல்லா முக்கியமான சட்ட உறவுகளைப் பற்றிய நேர்நிகரற்ற, நேர்த்தியுள்ள, விரிவான விளக்கத்தோடு கூடிய ரோமானியச் சட்டத்தை (பண்ட உற்பத்தி செய்யும் சமூகத்தின் முதன்முதலான உலகச் சட்டம் அது) அடித்தளமாக எடுத்துக் கொள்ள முடியும். அப்படியானால், இன்னமும் சிறுமுதலாளித்துவத் தன்மை உள்ளதாகவும் அரைநிலப்பிரபுத்துவத் தன்மையுள்ளதாகவும் இருக்கும் சமூகத்தின் நன்மைக்காக, வெறுமே சட்ட நடைமுறை (பொதுச்

சட்டம்) மூலமாக அதை அப்படிப்பட்ட ஒரு சமூகத்தின் தரத்துக்குத் தாழ்த்த முடியும்; அல்லது அறிவொளி மிக்கவர்கள் என்று சொல்லப்படும், நீதிநெறிகளைப் பற்றிப் பேசும் சட்டவல்லுனர்களின் உதவியைக் கொண்டு அப்படிப்பட்ட சமூகத் தரத்துக்குப் பொருத்தமாக அதை ஒரு தனிச் சட்டத் தொகுதியில் இணைத்துவிட முடியும்; இந்நிலைமைகளில் சட்டப் பார்வை நிலையிலிருந்துங்கூட அது ஒரு தவறான சட்டத் தொகுதியாகவே இருக்கும் (எடுத்துக்காட்டாக, பிரஷ்யாவின் சட்டம்). ஆனால் ஒரு மகத்தான முதலாளித்துவப் புரட்சிக்குப் பின் பிரெஞ்சு Code Civil* போன்ற முதலாளித்துவ சமூகத்தின் மூலச்சிறப்பான சட்டத் தொகுப்பையுங்கூட இதே ரோமானிய சட்டத்தின் அடிப்படையில் வகுப்பது சாத்தியமே. ஆகவே சிவில் சட்ட விதிகள் வெறுமே சட்டத்தின் வடிவத்தில் சமூகத்தின் பொருளாதார வாழ்க்கை நிலைமைகளை வெளியிடுகின்றன என்றால், அப்போது இவை நிலைமைகளுக்கு ஏற்றவாறு நன்றாகவோ, மோசமாகவோ அவற்றை வெளியிட முடியும்.

மனிதன் மேலிருக்கும் முதன்முதலான சித்தாந்தச் சக்தியாக அரசு நம் முன்னே காட்டிக் கொள்கிறது. வெளிநாட்டு, உள்நாட்டுத் தாக்குதல்களிலிருந்து தன்னுடைய பொதுவான நலன்களைப் பாதுகாப்பதற்கான ஓர் உறுப்பை சமூகம் தனக்கென்று படைத்துக் கொள்கிறது. இந்த உறுப்புதான் அரசின் ஆட்சியதிகாரம். இந்த உறுப்பு தோன்றிய உடனே, அது சமூகத்துக்கு எதிரே தன்னைச் சுதந்திரமானதாக ஆக்கிக் கொள்கிறது; எவ்வளவுக்கெவ்வளவு அது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பாக ஆகிறதோ, எவ்வளவுக்கெவ்வளவு அந்த வர்க்கத்தின் மேலாட்சியை அது நேரடியாக வலிந்து செயற்படுத்துகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அது தன்னைச் சுதந்திரமானதாக ஆக்கிக் கொள்கிறது. ஆளும் வர்க்கத்தை எதிர்த்து ஒடுக்கப்பட்ட வர்க்கம் நடத்தும் போராட்டம் அவசியமாகவே ஓர் அரசியல் போராட்டமாக, முதன்முதலில் இவ்வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தை

* —சிவில் சட்டத் தொகுப்பு.—ப-ர்.

எதிர்த்து நடத்தும் போராட்டமாக ஆகிறது. இந்த அரசியல் போராட்டத்துக்கும் அதன் பொருளாதார அடிப் படைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய உணர்வு மங்கி விடுகிறது, இது முற்றாக மறைந்துவிடவும் முடியும். இப்போராட்டத்தில் பங்கெடுக்கிறவர்களின் விஷயத்தில் முற்றாக இப்படி நடப்பதில்லை என்றாலும் வரலாற்று ஆசிரியர்கள் விஷயத்தில் அப்படித்தான் அனேகமாக எப் போதும் நடக்கிறது. ரோமானியக் குடியரசுக்குள் நடந்த போராட்டங்கள் பற்றிய பண்டைக்கால வரலாற்றாசிரியர் களில் அப்பியன் ஒருவர்தான் அந்தப் போராட்டங்களுக்குரிய காரணம் நிலவுடைமை என்று தெளிவாகவும் துல்லியமாக வும் நமக்குக் கூறுகிறார்.

சமூகத்தின் எதிரே அரசு ஒரு சுதந்திரமான சக்தியாக ஆனதும் அது உடனே ஒரு புதிய சித்தாந்தத்தை உருவாக்கு கிறது. முழுநேர அரசியல்வாதிகள், பொதுச் சட்டத் தத் துவாசிரியர்கள், தனிநபர் பற்றிய சட்டவல்லுநர்கள் ஆகி யோரிடையேதான் பொருளாதார உண்மைகளோடு உள்ள தொடர்புகள் முற்றாகத் தப்பி விடுகின்றன. ஒவ்வொரு குறிப்பிட்ட வழக்கிலும் சட்ட அதிகாரம் பெறுவதற்காக பொருளாதார உண்மைகள் சட்டவியல் நோக்கங்கள் என்னும் வடிவத்தை எடுத்துக் கொள்ள வேண்டி இருப்பதாலும், அப் படிச் செய்கையில் ஏற்கெனவே செயற்பாட்டிலுள்ள சட்ட அமைப்புமுறை முழுவதையும் கவனிக்க வேண்டி இருப்பதா லும், அதன் பின்விளைவாக சட்டவியல் வடிவமே எல்லா மாகவும் பொருளாதார உள்ளடக்கம் ஒன்றுமில்லாமலும் ஆக்கப்பட்டு விடுகிறது. பொதுச் சட்டம், தனிநபர் பற்றிய சட்டம் இரண்டும், இவற்றிற்குரிய சொந்த சுதந்திரமான வரலாற்று வளர்ச்சி வாய்ந்த, இவற்றிற்குரிய முறைப்படுத் தலுக்கு உட்பட்ட, எல்லா உள்முரண்பாடுகளையும் உறுதியாக ஒழிப்பதின் மூலம் இத்தகைய முறைப்படுத்தல் தேவை என்று கோரும் சுதந்திரமான துறைகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

அதை விட மேலான சித்தாந்தங்கள்—அதாவது, பொருளாயத பொருளாதார அடிப்படையிலிருந்து மேலும்

தொலைவாக விலக்கப்பட்டுள்ள சித்தாந்தங்கள்—தத்துவ ஞானம், சமயம் என்னும் வடிவத்தை எடுத்துக் கொள்கின்றன. இங்கே கருத்தோட்டங்களுக்கும் அவற்றின் பொருளாயத வாழ்நிலைமைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு மேன்மேலும் சிக்கலாகி விடுகிறது, இடைநிலைக் கண்ணிகள் மூலமாக மேன்மேலும் அது மறைக்கப்படுகிறது. ஆனால் அந்தத் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தொடங்கிய மறுமலர்ச்சிக் காலம் (Renaissance) முழுவதும் நகரங்களின், அதாவது நகரத்தார்களின் வளர்ச்சியின் விளைவாக இருந்தது போல், பின்னால் புதிய விழிப்புப் பெற்ற தத்துவஞானமும் இந்த வளர்ச்சியின் விளைவாகவே தோன்றிற்று. சாராம்சத்தில், இத்தத்துவஞானத்தின் உள்ளடக்கம் சிறிய, மத்தியதர நகரத்தார்கள் பெரும் முதலாளி வர்க்கமாக மாறிய வளர்ச்சிக்குப் பொருத்தமான கருத்துக்களின் வெளியீடாகவே இருந்தது. அரசியல் பொருளாதாரவாதிகளாக மட்டுமின்றி, தத்துவ ஞானிகளாகவும் இருந்த சென்ற நூற்றாண்டின் ஆங்கிலேயர்களிடையேயும் பிரெஞ்சுக்காரர்களிடையேயும் இது தெளிவாகப் புலப்படுகிறது. ஹெகலியவாதக் கருத்துப் பிரிவினர் விஷயத்தில் அதை நாம் மேலே நிரூபித்திருக்கிறோம்.

இப்போது நாம் சமயத்தைச் சுருக்கமாகக் கவனிப்போம்; அது பொருளாயத வாழ்க்கையிலிருந்து மேலும் விலகி நிற்கிறது, அதற்கு மிகவும் அயலானதாகத் தோன்றுகிறது. மனிதர்கள் தங்களுடைய சொந்த இயல்பு பற்றியும் தங்களைச் சூழ்ந்து நிற்கும் புறநிலையிலுள்ள இயற்கை பற்றியும் கொண்டிருந்த அறிவீனமான, தவறான, பழைய கருத்துக்களிலிருந்து மிகவும் ஆதியான காலங்களில் சமயம் தோன்றியது. ஆனால் ஒவ்வொரு சித்தாந்தமும் தோன்றிய உடனே, நிலவும் கருத்தோட்டங்களுக்கு ஏற்ப, அந்தக் கருத்தோட்டங்களைத் திரும்பத் திரும்ப மறுபரிசீலனை செய்தபடி வளர்கிறது, அந்தக் கருத்தோட்டங்களை மேலும் வளர்க்கிறது. அப்படிச் செய்யாவிட்டால், அது ஒரு சித்தாந்தமாக இராது; அதாவது, சுதந்திரமான வளர்ச்சிக்கும் அவ்வளர்ச்சிக்கு உரிய விதிகளுக்கும் மட்டுமே உட்பட்டிருக்கும்

சுதந்திரமான சிந்தனைகளுடன் எந்தத் தொடர்பும் கொண்டதாக இராது. கடைசிப் பரிசீலனையில் பார்க்கும் பொழுது, எந்த மனிதர்களின் தலைகளுக்குள்ளே இந்தச் சிந்தனை நிகழ்வுப்போக்கு நடந்து கொண்டிருக்கிறதோ, அந்த மனிதர்களின் பொருளாயத வாழ்க்கை நிலைமைகளே அந்நிகழ்வுப் போக்கின் ஓட்டத்தை நிர்ணயிப்பது தவிர்க்க இயலாதவாறு இந்த மனிதர்களுக்குத் தெரியாமலே இருந்து விடுகிறது; அப்படி இல்லாவிட்டால், சித்தாந்தம் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்து விடும். எனவே குல உறவுள்ள மக்களினங்களின் ஒவ்வொரு குழுவுக்கும் பொதுவாக இருக்கும் ஆதிமுதல் சமய எண்ணப் போக்குகள் அந்தக் குழு பிரிந்தபின் ஒவ்வொரு மக்களினத்துக்கும் தனி வகையில், அதற்கு வாய்க்கும் வாழ்க்கை நிலைமைகளுக்கேற்ப வளர்கின்றன. மக்களினங்களின் பல குழுக்களின், குறிப்பாக ஆரியர்களின் (இந்தோ-ஐரோப்பியர்கள் என்று சொல்லப்படுபவர்கள்) விஷயத்தில் ஒப்புநோக்கும் புராணவியல் (mythology) இந்த நிகழ்வுப்போக்கை விவரமாகக் காட்டியுள்ளது. ஒவ்வொரு மக்களினத்துக்குள்ளும் இவ்வாறு உருவாக்கப்பட்ட கடவுளர்கள் தேசியக் கடவுளர்களாக இருந்தனர், அவற்றின் ஆட்சிப் பிரதேசம் அவை காத்தருள வேண்டியிருக்கும் தேசிய நிலப்பரப்புக்கு அப்பால் போகவில்லை; அதன் எல்லைகளுக்கு அப்பால் வேறு கடவுளர்கள் முழு ஆட்சி செலுத்தி வந்தனர். தேசிய இனம் இருந்து வந்த வரைதான் கற்பனையில் அக்கடவுளர்கள் தொடர்ந்து இருந்து வர முடிந்தது; தேசிய இனத்தின் வீழ்ச்சியுடன் அவையும் வீழ்ந்தன. ரோமானிய உலகப் பேரரசு—அதன் தோற்றத்துக்கு உரிய பொருளாதார நிலைமைகளைப் பற்றி இங்கே நாம் பரிசீலிக்கத் தேவையில்லை—பழைய தேசிய இனங்களின் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. பழைய தேசியக் கடவுளர்கள் நலிந்தனர்; ரோம் நகரத்தின் குறுகிய மாதிரிகளுக்குப் பொருந்தியதாக உருவாக்கப்பட்ட ரோமானியர்களின் கடவுளர்கள்கூட நலிந்து விட்டனர். சிறிதே மதிக்கத்தக்க எல்லா வெளிநாட்டுக் கடவுளர்களையும் அங்கீகரிக்கவும் ரோம் நகரத்துக் கடவுளர்களுக்குப் பக்கத்தில் அவை

களுக்குப் பூஜாபீடங்கள் ஏற்படுத்தவும் எடுத்துக் கொண்ட முயற்சிகளிலே உலகச் சமயம் ஒன்றின் மூலமாக உலகப் பேரரசை நிரப்பி முழுமையாக்க வேண்டியதன் தேவை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் ஒரு புதிய உலகச் சமயத்தை இப்பாணியில், பேரரசுக் கட்டளை மூலமாக உண்டாக்க முடியாது. புதிய உலகச் சமயமாகிய கிறிஸ்துவச் சமயம் ஏற்கெனவே ஓசையின்றித் தோன்றியிருந்தது; பொதுமைப் படுத்தப்பட்ட கீழ்த்திசை, குறிப்பாக யூதர்களின் இறையியலையும் கொச்சைப்படுத்தப்பட்ட கிரேக்க, குறிப்பாக ஸ்டோயிக் தத்துவஞானத்தையும் கலந்த ஒரு கலவையிலிருந்து இது தோன்றியிருந்தது. ஆதியில் கிறிஸ்துவச் சமயம் எப்படியிருந்தது என்பதை முதலில் சிரமப்பட்டுக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் நமக்குப் பரம்பரையாக வந்துள்ள அதன் அதிகாரபூர்வமான வடிவம் அரசாங்கச் சமயம் என்ற வகையில் நிஸேயா பேரவை[117] அமைத்துத் தந்துள்ள வடிவத்திலே இருந்தது. ஏற்கெனவே 250 ஆண்டுகளுக்குப் பின் அது அரசாங்கச் சமயமாகிவிட்ட உண்மை, அக்காலத்திய நிலைமைகளுக்குப் பொருத்தமாயிருந்த சமயம் அது என்று காட்டுவதற்குப் போதுமானது. மத்திய காலத்தில் நிலப்பிரபுத்துவ முறை வளர்ந்த அதே அளவில் அதற்குரிய சமய வடிவமாக அந்நிலப்பிரபுத்துவ முறைக்குப் பொருத்தமான படிநிலை அமைப்புடன் கிறிஸ்துவச் சமயம் வளர்ந்தது. நகரத்தார்கள் செழிக்கத் தொடங்கிய போது, நிலப்பிரபுத்துவக் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக புரோட்டஸ்டென்டு முரண்வாதம் வளர்ந்தது; இது தெற்கு பிரான்சில் அல்பிகென்கள்[118] இடையே அங்கிருந்த நகரங்கள் உயர்வான மலர்ச்சி அடைந்திருந்த காலத்தில் வளர்ந்தது. மத்திய காலம் இறையியலுடன் மற்றெல்லாச் சித்தாந்த வடிவங்களையும்—தத்துவஞானம், அரசியல், சட்டவியல் ஆகியவற்றை—ஒட்ட வைத்து அவற்றை இறையியலின் துணைப்பிரிவுகளாக ஆக்கி விட்டது. அதன் மூலமாக ஒவ்வொரு சமுதாய இயக்கமும் அரசியல் இயக்கமும் இறையியல் வடிவம் எடுத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்தப்படுத்தப் பட்டன. மக்களின் உணர்ச்சிகள் சமயத் தீனியால் மட்டுமே

ஊட்டப் பெற்றன; ஆகவே ஒரு மாபெரும் புயலை உண்டாக்குவதற்கு அவர்கள் தங்களுடைய நலன்களை சமயத்தின் மாறுவேடத்தில் முன்வைக்க வேண்டியது அவசியமாயிற்று. சொத்தில்லாத நகரத்துக் கீழ்த்தட்டு மக்களையும் தினக் கூலிக்காரர்களையும் எல்லாவிதமான வேலைக்காரர்களையும் கொண்ட (அங்கீகரிக்கப்பட்ட சமுதாயப் படிநிலை எதையும் சேராதவர்களான இவர்கள் பின்னால் தோன்றிய பாட்டாளி வர்க்கத்தின் முன்னோடிகளாவர்) ஒரு தொங்குசதையைத் தொடக்கத்திலிருந்தே இந்த நகரத்தார்கள் உண்டாக்கி விட்டதைப் போலவே, சமய முரண்வாதம் விரைவில் நகரத்தார்களின் மிதவாத முரண்வாதமாகவும் கீழ்த்தட்டு மக்களின் புரட்சிப் போக்குள்ள முரண்வாதமாகவும் பிரிந்துவிட்டது; பின் சொன்ன முரண்வாதம் நகரத்தாரைச் சேர்ந்த முரண்வாதிகளின் வெறுப்பிற்குரியதாக இருந்தது.

எழுச்சி பெற்று வரும் நகரத்தார்களை எப்படித் தோற்கடிக்க முடியாமல் இருந்ததோ, அதே போல் புரோட்டஸ்டென்டு முரண்வாதமும் ஒழிக்க முடியாத தன்மை பெற்றிருந்தது. இந்த நகரத்தார்கள் போதுமான பலம் பெற்றவுடனே, நிலப்பிரபுத்துவ பெருங்குடி வம்சத்தினரை எதிர்த்து அவர்கள் நடத்தி வந்த போராட்டம் அது வரை மிகப் பெரும்பாலும் வெறும் ஸ்தலப் போராட்டமாக இருந்தது போய் தேசம் தழுவிய போராட்டமாக வளரத் தொடங்கியது. முதன்முதலான மாபெரும் நடவடிக்கை ஜெர்மனியில் நிகழ்ந்தது; இது மதச்சீர்திருத்தப் போக்கு என்று சொல்லப்படுவதாகும். நகரங்களைச் சேர்ந்த கீழ்த்தட்டு மக்கள், கீழ்ப்படியிலுள்ள பிரபுவம்சத்தினர், நிலத்தில் வேலை செய்யும் விவசாயிகள் ஆகியோரான கலகப் போக்கு கொண்ட மற்ற சமூகப் படிநிலையினரை தங்கள் கொடியின் கீழ் ஒன்றுபடுத்துவதற்குத் தேவையான பலமோ, வளர்ச்சியோ நகரத்தார்களிடம் இருக்கவில்லை. துவக்கத்தில் பிரபுவம்சத்தினர் தோற்கடிக்கப்பட்டனர். விவசாயிகள் கலகம் செய்தனர்; அதுவே புரட்சிகரமான போராட்டம் முழுவதற்கும் உச்சியாக விளங்கியது. ஆனால் நகரங்கள் அவர்களை நட்டாற்றில் விட்டன. எனவே நிலப்பிரபுத்துவ இளவரசர்கள் படை

களின் முன் புரட்சி அடிபணிந்தது. அதன் பயன் முழுவதையும் அந்த இளவரசர்கள் அறுவடை செய்தனர். அதன் பிறகு முன்னூறு ஆண்டுக் காலத்துக்கு வரலாற்றில் சுதந்திரமான, செயலாற்றலுள்ள பாத்திரம் வகிக்கும் நாடுகளின் அணிகளிலிருந்து ஜெர்மனி மறைந்து விடுகிறது. ஆனால் ஜெர்மானியர் லூதருடன் கால்வின் என்னும் பிரெஞ்சுக்காரர் தோன்றினார். உண்மையான பிரெஞ்சு மதிநுட்பத்துடன் அவர் மதச்சீர்திருத்தப் போக்கின் முதலாளித்துவத் தன்மையை முன்னணியில் நிறுத்தினார், திருச்சபையை குடியரசுமயமாக்கினார், ஜனநாயகப்படுத்தினார். ஜெர்மனியில் லூதரின் மதச்சீர்திருத்தப் போக்கு சிதைவுற்று நாட்டைப் படுநாசப்படுத்திய காலத்தில் கால்வினுடைய மதச்சீர் திருத்தப் போக்கு ஜெனீவாவிலும் ஹாலந்திலும் ஸ்காட்லாந்திலும் குடியரசுவாதிகளுக்கு ஒரு பதாகையாகப் பயன்பட்டது; ஸ்பெயினிடமிருந்தும் ஜெர்மன் பேரரசிடமிருந்தும் ஹாலந்தை அது விடுவித்தது; இங்கிலாந்தில் நடந்து வந்த முதலாளித்துவப் புரட்சி நாடகத்தின் இரண்டாம் காட்சிக்கு வேண்டிய சித்தாந்த ஆடைகளை அது வழங்கியது. இங்கே கால்வினிசம் அக்காலத்திய முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்குரிய உண்மையான சமய மாறுவேடமாகத் தன்னை நியாயப்படுத்திக் கொண்டது; எனவே 1689ல் பிரபுவம்சத்தினரின் ஒரு பகுதிக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே ஏற்பட்ட சமரசத்தில் புரட்சி முடிந்த போது[119] அது முழு அங்கீகாரம் பெறவில்லை. ஆங்கில அரசின் திருச்சபை மீண்டும் நிலைநாட்டப்பட்டது; ஆனால் அரசனைத் தனது போப்பாண்டவராகக் கொண்டிருந்த முந்தைய கத்தோலிக்க வடிவத்தில் அல்ல—மாறாக, அது பலமாக கால்வினிச மயமாக்கப்பட்டிருந்தது. பழைய அரசுத் திருச்சபை மகிழ்ச்சிகரமான கத்தோலிக்க ஞாயிற்றுக்கிழமையைக் கொண்டாடி வந்தது; சுவையற்ற கால்வின் வழிப்பட்ட ஞாயிற்றுக்கிழமையை எதிர்த்துப் போராடி வந்தது. புதிய, முதலாளி வர்க்க மயமாக்கப்பட்ட திருச்சபை பின்சொன்னதைப் புகுத்தியது; அது இன்றைக்கும் இங்கிலாந்தை அணி செய்து வருகிறது.

பிரான்சில் 1685ல் கால்வின் வழிப்பட்ட சிறுபான்மை யினர் நசுக்கப்பட்டு கத்தோலிக்க மயமாக்கப்பட்டனர் அல்லது நாட்டிலிருந்து விரட்டப்பட்டனர்.[120] ஆனால்அதனால் ஏற்பட்ட நன்மை என்ன? ஏற்கெனவே அக்காலத்தில் பியேர் பெயில் என்னும் சுதந்திரச் சிந்தனையாளர் உச்ச நிலையில் செயலாற்றி வந்தார்; 1694ல் வொல்தேர் பிறந்தார். வளர்ச்சி பெற்ற முதலாளி வர்க்கத்துக்குப் பொருத்தமான, சமயத் தன்மையில்லாத முற்றிலும் அரசியல் வடிவத்தில் மட்டுமே தன் புரட்சியை பிரெஞ்சு முதலாளி வர்க்கம் நடத்தி முடிப்பதற்கு பதினான்காவது லுயீ மன்னனின் பல வந்தமான நடவடிக்கைகள் மேலும் வசதி செய்து கொடுத் தன. புரோட்டஸ்டென்டுகளுக்குப் பதிலாக சுதந்திரச் சிந் தனையாளர்கள் தேசிய சட்டமன்றங்களில் அமர்ந்தனர். அதன் வழியாகக் கிறிஸ்துவ சமயம் தனது இறுதிக் கட்டத் தில் நுழைந்தது. எந்த முற்போக்கான வர்க்கத்துக்கும் அதன் ஆவலுக்குரிய சித்தாந்த வேடம் புனைந்து சேவை புரிவதற் கும் கிறிஸ்துவ சமயம் திறனற்றுப் போய் மேன்மேலும் ஆளும் வர்க்கங்களின் தனி உடைமையாகி விட்டது. கீழ் நிலை வர்க்கங்களைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக அவை அதை வெறுமே ஓர் அரசாங்கச் சாதனமாகச் செயல் படுத்தலாயின. மேலும் வெவ்வேறு வர்க்கங்களில் ஒவ்வொன் றும் தனக்குச் சொந்தமான சமயத்தைப் பயன்படுத்து கிறது: நிலம் படைத்த பிரபுவம்சத்தினருக்கு கத்தோலிக்க ஏசுயிட்வாதம் அல்லது சுத்தமான புரோட்டஸ்டென்டிசம்; மிதவாத, தீவிரவாத முதலாளி வர்க்கத்துக்கு பகுத்தறிவு வாதம். இந்தக் கனவான்கள் தத்தம் சமயங்களை நம்பு கிறார்களா, இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல.

எனவே எல்லாச் சித்தாந்தத் துறைகளிலும் மரபு ஒரு மாபெரும் பழைமைச் சக்தியாக இருப்பதைப் போல், சம யம் உருவாகியவுடனே எப்போதும் மரபு வழிப்பட்ட கருத் துக்களையே கொண்டிருக்கிறது. ஆனால் இந்தக் கருத்துக் களில் நடைபெறும் உருமாற்றங்கள் வர்க்க உறவுகளிலிருந்து, அதாவது இவ்வுருமாற்றங்களை நிறைவேற்றி வைக் கும் மக்களின் பொருளாதார உறவுகளிலிருந்து தோன்று

கின்றன என்று நமக்குத் தெரிகிறது. இங்கே இது போதும்.

வரலாற்றைப் பற்றிய மார்க்சின் கருத்தோட்டத்தை, அதிகபட்சமாக ஒரு சில உதாரணங்களோடு சேர்த்து ஒரு பொதுவான சுருக்கவுரையாகக் கொடுப்பதே மேலே நமது பிரச்சினையாக இருந்தது. இந்தக் கருத்தோட்டம் சரியானது என்பதற்கு வரலாற்றிடமிருந்தே சான்று பெற வேண்டும். வேறு நூல்களில் இது போதுமான அளவுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது என்று நான் கூற முடியும். எனினும் இயற்கை பற்றிய இயக்கவியல் கருத்தோட்டம் இயற்கை பற்றிய தத்துவவியல் அனைத்தையும் ஒருங்கே அவசியமற்றதாகவும் சாத்தியமற்றதாகவும் செய்வது போல், இக்கருத்தோட்ட மும் வரலாற்றுத் துறைத் தத்துவஞானத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. எந்தத் துறையிலும் அதிலுள்ள தொடர்பு களை மூளைக்குள் கற்பனை செய்து புனைவது என்பதல்ல இனிமேல் பிரச்சினை; அவற்றை உண்மைகளிலே கண்டு பிடிப்பதே பிரச்சினை. இயற்கையிலிருந்தும் வரலாற்றிலிருந் தும் வெளியேற்றப்பட்டுள்ள தத்துவஞானத்துக்கு கலப் பற்ற சிந்தனைத் துறை—அது விட்டு வைக்கப்பட்டுள்ள அளவுக்கு —மட்டுமே எஞ்சுகிறது; அதாவது, சிந்தனையின் நிகழ்வுப்போக்கின் விதிகள் பற்றிய போதனை, தர்க்கவியல் மற்றும் இயக்கவியல்.

* * *

1848ம் ஆண்டுப் புரட்சியுடன் ''கல்வியறிவுடைய'' ஜெர்மனி தத்துவத்துக்கு முழுக்குப் போட்டு விட்டு நடை முறைத் துறைக்குச் சென்று விட்டது. உடலுழைப்பை அடிப் படையாகக் கொண்ட சிறு உற்பத்தியையும் பட்டறைத் தொழிலையும் விலக்கி உண்மையில் பெருமளவான தொழில் அவ்விடத்துக்கு வந்தது. ஜெர்மனி மீண்டும் உலகச் சந்தை யில் தோன்றியது. புதிய சிறிய ஜெர்மன் பேரரசு[121] குறைந்த பட்சம் வளர்ச்சிக்குத் தடையாயிருந்த கேடுகளான பல சிறிய அரசுகள், நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்கள், அதிகார வர்க்க நிர்வாகம் ஆகிய மிக மோசமான அம்சங்களைக் கொண்ட அமைப்பை ஒழித்து விட்டது. ஆனால் ஊகச் சிந்

தனை பங்குச் சந்தைகளில் தனக்கு ஆலயத்தை நிர்மாணித்துக் கொள்வதற்காக ஆராய்ச்சி அறையை விட்டு வெளியேறிய அதே அளவுக்கு கல்வியறிவுடைய ஜெர்மனி அரசியல் துறையில் மிகவும் ஆழமாகக் கீழ்மைப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் ஜெர்மனிக்குப் புகழீட்டிய பேரளவான தத்துவ அக்கறையை, அதனால் பயன் உண்டா அல்லது இல்லையா, அது போலீஸ் அதிகாரிகளுக்கு ஆத்திரமூட்டுமா அல்லது இல்லையா என்று கருதாமல் நடைபெற்ற முற்றிலும் விஞ்ஞான ஆராய்ச்சியில் அக்கறையை இழந்தது. அதிகாரபூர்வமான ஜெர்மன் இயற்கை விஞ்ஞானம், குறிப்பாகச் சிலதனித் துறைகளில் நடைபெற்ற ஆராய்ச்சிகளில் முதல் வரிசையில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருந்தது என்பது உண்மையே. ஆனால் தனித்தனி உண்மைகளுக்கு இடையே உள்ள தொடர்புகளைப் பற்றிய ஆராய்ச்சியிலும் அந்தத் தொடர்புகளைப் பொதுமைப்படுத்தி விதிகள் ஆக்குவதிலும் இப்பொழுது இங்கிலாந்தில்தான் அதிகமான வெற்றிகள் ஈட்டப்பட்டு வருகின்றன என்றும் முன்பு போல் ஜெர்மனியில் அல்ல என்றும் Science என்னும் அமெரிக்க சஞ்சிகை சரியாகவே குறிப்பிடுகிறது. தத்துவஞானம் உட்பட வரலாற்று விஞ்ஞானத் துறைகளில் தத்துவத்தின் பால் இருந்த பழைய, பயமற்ற பேரார்வம் மூலச்சிறப்பான தத்துவஞானத்தோடு சேர்ந்து இப்போது முற்றாக மறைந்து போய்விட்டது. வெறுமையான கதம்பவாதமும் அந்தஸ்து, வருமானம் ஆகியவற்றிலே கவலை மிக்க அக்கறையும் இதற்காக எவ்வளவு கொச்சையான பதவி வேட்டையில் இறங்குவதும் அதனிடத்தைப் பெற்றுள்ளன. இவ்விஞ்ஞானங்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் முதலாளி வர்க்கத்தின், நிலவுகின்ற அரசின் ஒளிவுமறைவற்ற சித்தாந்தவாதிகளாக ஆகியுள்ளனர், அவ்விரண்டுமே பகிரங்கமாகத் தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் காலத்திலே.

தத்துவத்தின் மீது ஜெர்மன் நாட்டம் தொழிலாளி வர்க்கத்திடையேதான் கெடாமல் இருந்து வருகிறது. இங்கே இதை ஒழிக்க முடியாது. இவர்கள் பதவி வேட்டையிலும் வருமானத்திலும் மேலிருப்போரது அருள் மிக்க ஆதரவைப்

பெறுவதிலும் அக்கறை ஏதுமில்லாதவர்கள். மாறாக, விஞ்ஞானம் எவ்வளவு உறுதியுடனும் தன்னலச் சார்பற்ற முறையிலும் இருக்கிறதோ, அவ்வளவு அது தொழிலாளிகளின் நலன்களுக்கும் விருப்பார்வங்களுக்கும் இசைவாக இருக்கிறது. சமூகத்தின் வரலாறு முழுவதையும் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் உழைப்பின் வளர்ச்சி பற்றிய வரலாற்றிலே உள்ளது என்று கண்டு கொண்ட புதிய போக்கு துவக்கத்திலிருந்தே பெரும்பாலும் தொழிலாளி வர்க்கத்தின் மீதுதான் கவனம் செலுத்தியது; அதிகாரபூர்வமான விஞ்ஞானத்திடம் காண முடியாத, எதிர்பார்க்க முடியாத ஆதரவை அது இங்கே கண்டது. ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கம் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் வாரிசு ஆகும்.

*1886ஆம் ஆண்டின் தொடக்கத்தில்*
*எழுதப்பட்டது*

*Die Neue Zeit சஞ்சிகை,*
*எண்கள் 4 மற்றும் 5, 1886*
*என்ற இதழிலும்*
*ஷ்டுட்கார்ட், 1888ல்*
*தனிப் பிரசுரத்திலும்*
*வெளியிடப்பட்டது*

*1888ஆம் ஆண்டு பதிப்பின்*
*படி அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன்*
*மொழியில்*
*எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# நியூயார்க்கிலிருந்த பிலொரென்ஸ் கெல்லி-விஷ்னெவேட்ஸ்கயாவுக்கு எழுதிய கடிதம்

*லண்டன், டிசம்பர் 28, 1886*

...என் முன்னுரை* முற்றிலும் கடந்த பத்து மாதங்களில் அமெரிக்காவின் தொழிலாளர்களுடைய மாபெரும் முன்னேற்றத்தைப் பற்றியதாக இருக்கும்; அது ஹென்ரி ஜார்ஜ் மற்றும் அவருடைய நிலத் திட்டத்தைப் பற்றியும் தொட்டுச் செல்லும் என்பது இயற்கையே. ஆனால் அதைப் பற்றி விரிவான முறையில் விவாதிப்பதாகப் பாசாங்கு செய்யாது; அதற்குரிய நேரம் வந்து விட்டதாகவும் நான் கருதவில்லை. இயக்கம் ஆரம்பத்திலிருந்தே தத்துவரீதியில் முற்றிலும் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்பதைக் காட்டிலும் அது பரவ வேண்டும், ஒரே சீராக முன்னேற வேண்டும், வேரூன்ற வேண்டும், இயன்ற அளவுக்கு அமெரிக்காவின் மொத்தப் பாட்டாளி வர்க்கத்தையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பது அதிகமான அளவுக்கு முக்கியமாகும். தத்துவரீதியில் தெளிவு ஏற்படுவதற்கு சொந்தத் தவறுகளிலிருந்து படிப்பினை பெறுவதை, கசப்பான அனுபவத்திலிருந்து படிப்பினை பெறுவதைக் காட்டிலும் சிறந்த வழி வேறு கிடையாது. ஒரு மொத்தப் பெரிய வர்க்கத்துக்

---

* பி. எங்கெல்ஸ், அமெரிக்காவில் தொழிலாளி வர்க்க இயக்கம். ''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' என்னும் புத்தகத்தின் அமெரிக்கப் பதிப்புக்கு எழுதப்பட்ட முன்னுரை.—ப-ர்.

கும், குறிப்பாக அமெரிக்கர்களைப் போன்று மேம்பட்ட செய்முறைப் பண்பும் தத்துவத்தைப் பற்றி அதிகமான இகழ்ச்சியும் கொண்ட ஒரு நாட்டினத்துக்கு வேறு வழி கிடையாது. முக்கியமான விஷயம் என்னவென்றால், தொழிலாளி வர்க்கத்தை வர்க்கம் என்ற முறையில் முன்னேறும்படிச் செய்வதே. அது ஆரம்பமாகிவிட்டால், அது சீக்கிரத்தில் சரியான பாதையைக் கண்டு கொள்ளும்; தொழிலாளி வர்க்கத்தை எதிர்க்கின்ற எல்லோருமே ஹென்ரி ஜார்ஜ் அல்லது பவுடர்லி அவரவருடைய ஆதரவாளர்களைக் கொண்ட சிறு குழுக்களுடன் ஒதுங்கிவிட வேண்டியிருக்கும். ஆகவே ''உழைப்பு வீரப்பெருந்தகையினர் கழகம்'' (Knights of Labour)[122] இயக்கத்தில் மிகவும் முக்கியமான காரணி, அதை வெளியிலிருந்து ஏளனம் செய்யாமல் உள்ளே சென்று புரட்சிமயமாக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அங்கேயிருந்த ஜெர்மானியர்கள் பலர் தாங்கள் உருவாக்காத, சக்திவாய்ந்த மற்றும் வீறுமிக்க இயக்கத்தை எதிரிட்ட பொழுது தங்களது இறக்குமதி செய்யப்பட்ட, எப்பொழுதுமே சரியாகப் புரிந்து கொண்டிருப்பதாகக் கூற முடியாத தத்துவத்தை ஒரு வகையான காப்பாற்றும் வறட்டுச் சூத்திரமாகச் செய்து தங்களுடைய வறட்டுக் கோட்பாட்டு வாதத்தை ஏற்றுக் கொள்ளாத எந்த இயக்கத்திலிருந்தும் ஒதுங்கியிருக்க முயன்ற பொழுது அவர்கள் மிகவும் ஆபத்தான தவறைச் செய்தார்கள் என்று நான் கருதுகிறேன். நம்முடைய தத்துவம் வறட்டுச் சூத்திரமல்ல, அது பரிணாம வளர்ச்சியின் நிகழ்வுப்போக்கின் விளக்கம்; அந்த நிகழ்வுப் போக்கில் தொடர்ச்சியான கட்டங்கள் இருக்கின்றன. காலத்தால் மூத்த தொழில்துறை நாடுகளில் உருவாக்கப்பட்ட தத்துவத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு அமெரிக்கர்கள் இயக்கத்தைத் தொடங்குவார்கள் என்று எதிர்பார்ப்பது நடக்க முடியாதது நடக்க முடியும் என்று நம்புவதற்கொப்பாகும். ஜெர்மானியர்கள் என்ன செய்திருக்க வேண்டுமென்றால், தம்முடைய தத்துவத்தின்படி—அதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தால், நாங்கள் 1845—1848இல் செய்ததைப் போல—செயலாற்றியிருக்க வேண்டும், மெய்யான

பொதுத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பங்கெடுக்க வேண்டும், அதன் மெய்யான தொடக்க நிலையை அப்படியே ஏற்றுக் கொண்டு, மூலச் செயல்திட்டத்திலுள்ள தவறான தத்துவக் கருத்துக்களின் அவசியமான விளைவாகவே ஒவ்வொரு தவறும் ஒவ்வொரு தோல்வியும் ஏற்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டி தத்துவார்த்த நிலைக்குப் படிப்படியாகக் கொண்டு போக வேண்டும். அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் எழுதப்பட்டிருப்பதைப் போல தற்காலத்திய இயக்கத்தில் இந்த இயக்கத்தின் எதிர்காலத்தைப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.* ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக இயக்கம் தன்னை வலுப்படுத்திக் கொள்வதற்கு அவகாசம் கொடுங்கள்; முதல் முயற்சி ஆரம்பமாகின்ற பொழுது குழப்பம் தவிர்க்க முடியாதபடி ஏற்படும்; ஆனால் தற்பொழுது மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத—ஆனால் அவர்கள் அவற்றை விரைவில் கற்றுக் கொள்வார்கள்—விஷயங்களை பலவந்தமாக அவர்களிடம் திணித்து அக்குழப்பத்தை அதிகப்படுத்தக் கூடாது. மெய்யான தொழிலாளி வர்க்கக் கட்சி அடுத்த நவம்பரில் ஒன்று அல்லது இரண்டு மில்லியன் தொழிலாளி வாக்குகளைப் பெறுவது தத்துவார்த்தரீதியில் சரியான கொள்கைக்கு ஒரு லட்சம் வாக்குகளைப் பெறுவதைக் காட்டிலும் தற்பொழுது அளவற்ற மதிப்புடையதாகும். பெருந்திரளான மக்களை தேசிய அடிப்படையில் வலுப்படுத்துவதற்குச் செய்யப்படுகின்ற முதல் முயற்சி—இயக்கம் முன்னேறுகின்ற பொழுது அது விரைவில் மேற்கொள்ளப்படும்—அவர்கள் எல்லோரையும்: ஜார்ஜ் பக்தர்கள், ''உழைப்பு வீரப்பெருந்தகையினர் கழகம்'', தொழிற்சங்கவாதிகள் மற்றும் எல்லோரையும் நேருக்கு நேராகக் கொண்டுவரும். நம்முடைய ஜெர்மன் நண்பர்கள் விவாதம் செய்யப் போதுமான அளவுக்கு நாட்டு மொழியை அதற்குள் கற்றுக் கொண்டிருந்தால், அவர்கள் மற்றவர்களுடைய கருத்துக்களை விமர்சனம் செய்வதற்கு, பல்வேறு நோக்குகளின் முரண்பாடுகளை எடுத்துக் காட்டு

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கம் 247 பார்க்க.—ப-ர்.

வதன் மூலம் தொழிலாளர்கள் தம்முடைய மெய்யான நிலையை—மூலதனத்துக்கும் கூலியுழைப்புக்கும் இடையே தகவுப் பொருத்தம் அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்ற நிலையை—படிப்படியாகப் புரிந்து கொள்ள வைப்பதற்கு அதுதான் தக்க சமயமாக இருக்கும். தொழிலாளிகளின் கட்சி நாடு தழுவிய அளவில் வலுப்படுவதைத் தாமதப் படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற எதுவும்—அது எந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும்—ஒரு மாபெரும் தவறு என்று நான் கருதுவேன். ஆகவே ஹென்ரி ஜார்ஜைப் பற்றியோ, ''உழைப்பு வீரப்பெருந்தகையினர் கழகத்தைப்'' பற்றியோ முழுமையாகவும் அகல்விரிவாகவும் பேசுவதற்குரிய நேரம் வந்து விட்டதாக நான் நினைக்க வில்லை....

முதல் தடவையாக
சுருங்கிய வடிவத்தில்
ஆங்கில மொழியில்
*Briefe und Auszüge aus Briefen von Joh. Phil. Becker, Jos. Dietzgen, Friedrich Engels, Karl Marx und F. A. Sorge und A. an Andere, Stuttgart,* 1906
என்ற புத்தகத்திலும்
முழுமையாக
ருஷ்ய மொழியில்
கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்,
நூல் திரட்டு, முதல் பதிப்பு,
தொகுதி XXVII, 1935லும்
வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்
படி அச்சிடப்பட்டது

மூலம் ஆங்கில
மொழியில்
எழுதப்பட்டது

## பதிப்பாளர் குறிப்புகள்

1 கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும் நூல் ''டூரிங்குக்கு மறுப்பு'' என்னும் நூலின் மூன்று அத்தியாயங்களைக் கொண்டதாகும்; தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த உலகக் கண்ணோட்டம் என்ற முறையில் மார்க்சிய போதனையை எளிமையான முறையில் விளக்கி எழுத வேண்டுமென்பதற்காக பி. எங்கெல்ஸ் இந்த அத்தியாயங்களைத் திருத்தி எழுதினார். அவர் மார்க்சியத்தின் மூன்று உட்பகுதிகளை இந்நூலில் விளக்குகிறார். இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எப்படித் தோன்றியது என்பதை விளக்குவதுடன் மார்க்சினுடைய இரண்டு மாபெரும் கண்டுபிடிப்புகள் — வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை விரித்துரைத்தல் மற்றும் உபரி மதிப்புத் தத்துவத்தைக் கண்டுபிடித்தது—சோஷலிசத்துக்கு விஞ்ஞான அடிப்படையைக் கொடுத்தன என்று எடுத்துக் காட்டுகிறார்.

விஞ்ஞான சோஷலிசத்துக்கும் கற்பனாவாத சோஷலிசத்துக்கும் இடையிலுள்ள அடிப்படையான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி வரலாற்றில் கற்பனாவாத சோஷலிசத்தின் பாத்திரத்தையும் குறைகளையும் விளக்கிய பிறகு எங்கெல்ஸ் விஞ்ஞான சோஷலிசத்தின் தோற்றுவாய்களை சுட்டிக்காட்டுகிறார்.

முதலாளித்துவத்தின் பிரதான முரண்பாடு உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் தனியார் சுவீகரிப்பு முறைக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஆகும்; பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலமே அதை ஒழிக்க இயலும் என்பதை பி. எங்கெல்ஸ் தன் நூலின் கடைசி அத்தியாயத்தில் நிரூபிக்கிறார்.—7.

2 எய்ஸெனாஹர்களும் லஸ்ஸாலைப் பின்பற்றியவர்களும்— 19ஆம் நூற்றாண்டில் அறுபதாம் ஆண்டுகளிலும் எழுபதாம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இருந்த இரு கட்சிகள்.

எய்ஸெனாஹர்கள் — ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் உறுப்பினர்கள்; இக்கட்சி 1869இல் எய்ஸெனாஹ் என்னும் நகரில் நடைபெற்ற ஸ்தாபக காங்கிரசில் நிறுவப்பட்டது.

லஸ்ஸாலைப் பின்பற்றியவர்கள்—ஜெர்மன் குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்ட் ஃபெர்டினாண்டு லஸ்ஸாலின் ஆதரவாளர்கள்; 1863ல் நிறுவப்பட்ட ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் உறுப்பினர்கள். இந்தச் சங்கம் சந்தர்ப்பவாதக் கொள்கையைப் பின்பற்றி பொதுத் தேர்தல் உரிமை மற்றும் அமைதியான நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான போராட்டம் மட்டுமே நடக்க வேண்டும் என்று தன் நோக்கங்களை வரையறுத்தது.

1875ல் மே 22—27 தேதியன்று கோத்தா என்னும் நகரில் நடைபெற்ற காங்கிரசில் இவ்விரு கட்சிகளும் இணைந்து ஜெர்மன் சோஷலிஸ்டுத் தொழிலாளர்கள் கட்சி அமைக்கப்பட்டது.—7.

3 உலோக நாணய முறை—தங்கம், வெள்ளி என்னும் இரண்டு உலோகங்கள் நியமன மதிப்பாக உபயோகிக்கப்படும் நாணயச் செலாவணி முறை.—9.

4 *Vorwärts* (''முன்னேறு'')—ஜெர்மன் சோஷலிஸ்டுத் தொழிலாளர்கள் கட்சியின் மத்திய இதழ்; 1876—1878ஆம் ஆண்டுகளில் லைப்சிக் என்னும் நகரில் வெளியிடப்பட்டது.—9.

5 மார்க்—பண்டைய ஜெர்மன் கிராம சமுதாயம். முதலாவது ஜெர்மன் பதிப்பாகிய ''கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்'' என்பதற்கு எங்கெல்ஸ் இத்தலைப்பில் எழுதிய பிற்சேர்க்கைக் கட்டுரையில் பண்டைக் காலத்திலிருந்து தொடங்கி ஜெர்மன் விவசாயிகளுடைய வரலாற்றைச் சுருக்கமான வடிவில் தந்திருந்தார்.—10.

6 அறியொணாவாதம்—உலகம் அறியவொண்ணாதது, மனித அறிவு மனிதனின் புலனுணர்ச்சிகளுக்கு அப்பால் சென்றுவிட முடியாது என்பதாகக் கூறும் ஒரு கருத்துமுதல்வாதப் போதனை.—12.

7 சமய சித்தாந்தம்—மத்திய காலத்தில் வெகுவாகப் பரவியிருந்த சமய-கருத்துமுதல்வாத தத்துவஞானத்தின் முக்கிய போக்குகளின் பொதுப் பெயர். சமய சித்தாந்தத்தின் விரிவுரையாளர்கள் இயற்கையையும் எதார்த்

தத்தையும் ஆராய்ச்சி செய்யாமல் கிறிஸ்துவ திருச்சபையின் ஐதீகங்களை ஆதரவாகக் கொண்டு அவற்றின் பொதுக் கொள்கைகளைக் கையாண்டு ஸ்தூலமான முடிவுகளைச் செய்யவும் மனிதர்களின் நடத்தையை நிர்ணயிக்கவும் முயன்றார்கள்.—13.

8 **இறையியல்**—சமய ஒழுக்கங்களையும் ஐதீகங்களையும் சடங்குகளையும் முறைப்படுத்தவும் ''விஞ்ஞான வழியில்'' மெய்ப்பிக்கவும் முயலும் சமய போதனை.—13.

9 **பெயர்ப் போலிமைவாதிகள்**—மத்திய காலத் தத்துவஞானத்தில் இருந்து வந்த ஒரு போக்கின் பிரதிநிதிகள்; அவர்கள் மனித சிந்தனை மற்றும் பேச்சால் படைக்கப்பட்ட சர்வப்பொது கருத்தினங்கள் மெய்யாகவே நிலவும் தனிப்பட்ட பொருள்களைக் குறிக்கும் பெயர்களே அன்றி வேறல்ல என்பதாகக் கருதினர். மத்திய கால எதார்த்தவாதிகளைப் போலல்லாது, பெயர்ப் போலிமைவாதிகள் கருத்தினங்கள் பொருள்களின் முன்மாதிரி இனங்களாகவும் மூலாதாரங்களாகவும் நிலவவில்லை என்று கூறினர். ஆகவே அவர்கள் பொருள்கள்தான் முதன்மையானவை, கருத்தினங்கள் இரண்டாமவையே என்றனர். இந்த அர்த்தத்தில் பெயர்ப் போலிமைவாதம் மத்திய காலத்தில் பொருள்முதல்வாதத்தின் முதலாவது வெளியீடாக விளங்கிற்று.—13.

10 **ஹோமியோமெரியாக்கள்**—இவை மிகவும் நுண்ணிய, பண்பு வழியில் திட்டவட்டமான பொருள் துகள்கள், முடிவில்லாமல் பிரிக்கப்படத்தக்கவை; இந்த ஹோமியோமெரியாக்கள் இவ்வுலகில் நிலவுகின்ற அனைத்துக்குமான ஆதார அடிப்படை என்றும் இத்துகள்களின் இணைவுகளே பல்வேறுபட்ட பொருள்களாயின என்றும் அனக்சகோர் கூறினார்.—13.

11 **ஆத்திகம்**—உலகைப் படைத்தவரும் இயற்கைக்கு அப்பாற்பட்டவரும் அறிவுமயமானவருமான கடவுளின் நிலையில் இருப்பதாகக் கொள்ளும் சமயத்-தத்துவஞான போதனை. இயற்கை மற்றும் சமூகத்தின் வாழ்வில் கடவுள் நேரடியாகத் தலையிடுவதாக இது கொள்கிறது.—16.

12 **புலனுணர்வுவாதம்**—புலன்களின் மூலம் உணர்தலே அறிவின் தலைமையான முறை என்று கருதுகின்ற அறிவுத் தத்துவப் போக்கு.—16.

13 ஆதிமூல இறைமைக் கோட்பாடு—தெய்வத்தை சூக்குமமான நிலையல்லாத பண்பியலாக, பிரபஞ்சத்தின் அறிவுமயமான முதற்காரணமாக ஏற்றுக் கொண்டு அதே பொழுது இயற்கையின், சமூகத்தின் வாழ்வில் தெய்வத்தின் தலையீட்டை மறுக்கும் சமயத்-தத்துவஞான போதனை.—16.

14 இங்கே குறிக்கப்படுவது 1851ல் மே முதல் அக்டோபர் வரையில் லண்டனில் நடைபெற்ற முதலாவது உலக வாணிப, தொழில்துறைக் கண்காட்சி.—18.

15 16ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் அரசர்கள் ரோமானிய போப்பாண்டவரை எதிர்த்துப் போராடியபொழுது இங்கிலாந்து சமயச் சபை அல்லது ஆங்கில சமயச் சபை உருவாயிற்று.

இச்சமயச் சபையின் தலைவர் அரசர்தான் என்று கருதப்பட்டது. 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இங்கிலாந்தின் அரசியலில் பழமைவாதப் போக்குகளை நிரந்தரமாக ஆதரித்தது.—18.

16 பாப்டிசம்—புரோட்டஸ்டென்டு இயக்கத்தில் ஒரு வடிவம்; 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றியது; பாப்டிஸ்டுகள் திருச்சபை மரபுகளை எளிமைப்படுத்தினார்கள்; குழந்தைப்பருவத்தைக் கடந்தவர்களுக்கு ஞானஸ்நானம் செய்திருக்கிறார்கள்.—18.

17 இரட்சணியச் சேனை—சமயப் பணிக்கும் தருமச் சேவைக்குமான பிற்போக்குவாத நிறுவனம்; இது இங்கிலாந்தில் 1865ல் துவக்கப்பட்டது; இராணுவப் படை முறையில் திருத்தியமைக்கப்பட்ட பின் 1880ல் இது இரட்சணியச் சேனை என்பதாக அழைக்கப்படலாயிற்று; பெருமளவில் முதலாளித்துவ வர்க்கத்தால் ஆதரிக்கப்பட்டு பல நாடுகளில் தருமச் சேவைக்கான பல நிலையங்களையும் நிறுவிற்று; உழைப்பாளி மக்களைச் சுரண்டல்காரர்களுக்கு எதிரான போராட்டத்திலிருந்து திசை திருப்பி விடுவதே இதன் பணிகளின் நோக்கமாக இருந்தது.—18.

18 ஆன்மீகவாதம்—உலகத்தின் ஆன்மீக அடிப்படையைப் பற்றிய கருத்துமுதல்வாதப் போதனை; ஆன்மா நித்தியமானது, உடல் அழிந்த பிறகும் இருப்பது என்று ஆன்மீகவாதிகள் கூறுகிறார்கள்.—23.

19 மதச்சீர்திருத்தப் போக்கு—16ஆம் நூற்றாண்டில் ஜெர்

மனி, ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் இதர நாடுகளில் விரிவாகப் பரவிய கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான சமூக இயக்கம். இந்த இயக்கம் வெற்றியடைந்த நாடுகளில் (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, நெதர்லாந்து, ஜெர்மனியின் ஒரு பகுதி மற்றும் ஸ்காண்டிநேவிய நாடுகள்) புதிய புரோட்டஸ்டெண்டு திருச்சபைகள் அமைக்கப்பட்டன.—27.

20 புகழ் படைத்த புரட்சி—1688ல் நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஆங்கில வரலாற்றியலில் சூட்டப் பெற்றுள்ள பெயர் இது; இந்த ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் ஸ்டுவர்ட் வம்சத்தினர் நீக்கப்பட்டு வில்லியம் ஆரஞ்சை முடிமன்னராகக் கொண்ட அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட முடியரசு நிறுவப்பட்டது (1689); நிலமுடைய பிரபுக்குலத்தோருக்கும் பெரு முதலாளிகளுக்கும் இடையிலான சமரசத்தின் அடிப்படையில் இந்த முடியரசு நிறுவப்பட்டது.—30.

21 ரோஜாப் போர் (1455—1485)—இரண்டு ஆங்கில நிலப்பிரபுத்துவ அரச வம்சங்களிடையே அரியாசனத்துக்காக நடைபெற்ற போர்; வெள்ளை ரோஜாவைத் தம் சின்னமாகக் கொண்ட யார்க் வம்சத்தினருக்கும் சிவப்பு ரோஜாவைத் தம் சின்னமாகக் கொண்ட லங்காஸ்டர் வம்சத்தினருக்கும் இடையே இந்தப் போர் நடைபெற்றது. யார்க் வம்சத்தார் நாட்டில் அதிகப் பொருளாதார வளர்ச்சி பெற்றிருந்த தென் பகுதியின் பெரிய நிலப்பிரபுக்களில் சிலரையும் மற்றும் பிரபுக்குலப் படைத்துறையினரையும் நகர மக்களையும் தமக்கு ஆதரவாகத் திரட்டிக் கொண்டார்கள்; லங்காஸ்டர் வம்சத்தார் வட திசை வட்டாரங்களைச் சேர்ந்த நிலப்பிரபுத்துவ மேன்மக்களைத் தமது ஆதரவாளர்களாகக் கொண்டிருந்தனர். இந்தப் போரின் விளைவாக இங்கிலாந்தின் பழைய பிரபுத்துவக் குடும்பங்கள் அனேகமாக அடியோடு அழிந்து போயின; முடிவில் புதிய டியூடர் வம்சத்தார் அரசுரிமை பெற்று இங்கிலாந்தில் எதேச்சாதிகார முடியரசை நிறுவினர்.—30.

22 கார்ட்டிசியனிசம்—17ஆவது நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சு தத்துவஞானி டெக்கார்ட்டைப் பின்பற்றியவர்களின் போதனை; அவர்கள் டெக்கார்ட்டினுடைய தத்துவஞானத்திலிருந்து பொருள்முதல்வாத முடிவுகளுக்கு வந்தார்கள்; டெக்கார்ட்டினுடைய பெயரின்

லத்தீன் வடிவமாகிய ''கார்ட்டிசியஸ்'' என்பதிலிருந்து வந்த பெயராகும் இது.—33.

23 1789ல் அரசியல் நிர்ணய சபையால் ஏற்கப்பட்ட மனித உரிமைப் பிரகடனம் புதிய முதலாளித்துவ அமைப்பின் அரசியல் கோட்பாடுகளை எடுத்துரைத்தது. 1791ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசியலமைப்புச் சட்டத்தில் இந்தப் பிரகடனம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இப்பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு ஜாக்கொபின்வாதிகள் 1793இல் ''மனித உரிமைப் பிரகடனத்தைத்'' தயாரித்தார்கள். தேசிய கன்வென்ட் இப்பிரகடனத்தை முதல் பிரெஞ்சுக் குடியரசுவாத அரசியலமைப்புச் சட்டத்தின் (1793) முன்னுரையாகச் சேர்த்துக் கொண்டது.—34.

24 நெப்போலியன் *Code Civil* சட்டத் தொகுப்பைப் பற்றி இங்கும் தொடர்ந்து வருகின்ற குறிப்புகளிலும் எங்கெல்ஸ் 1804—1810 காலக்கட்டத்தில் முதலாவது நெப்போலியன் பிரகடனம் செய்த ஐந்து (சிவில், சிவில் நடைமுறை, வர்த்தக, கிரிமினல் மற்றும் கிரிமினல் நடைமுறை) சட்டத் தொகுப்புகளைக் குறிப்பிடுகிறார்; அவை முதலாளித்துவ சட்டத்தின் மொத்த அமைப்பையும் கொண்டிருக்கின்றன. நெப்போலியனுடைய பிரான்ஸ் கைப்பற்றிய ஜெர்மனியின் மேற்கு மற்றும் தென் மேற்குப் பிரதேசங்களில் இச்சட்டத் தொகுப்புகள் அமுலாக்கப்பட்டன; 1815இல் ரைன் மாநிலம் பிரஷ்யாவுக்குத் தரப்பட்ட பிறகும் இவை அங்கே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டன.—35.

25 இங்கு குறிப்பிடப்படுவது வாக்குரிமை சீர்திருத்தம்; வாக்குரிமையில் சீர்திருத்தம் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா 1831இல் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையால் நிறைவேற்றப்பட்டது; 1832 ஜூனில் முடிவாகப் பிரபுக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தம் தொழில்துறை முதலாளி வர்க்கத்தாரின் பிரதிநிதிகளுக்கு நாடாளுமன்றத்தின் கதவுகளைத் திறந்து விட்டது. பாட்டாளிகளும் குட்டிமுதலாளிகளும் இந்தச் சீர்திருத்தத்துக்காக நடைபெற்ற போராட்டத்தின் பிரதான சக்தியாக இருந்தனர் என்றாலும் மிதவாத முதலாளி வர்க்கத்தால் ஏமாற்றப்பட்டு விட்டனர், இவர்களுக்கு வாக்குரிமை கிடைக்கவில்லை.—38.

26 பிரிட்டிஷ் நாடாளுமன்றம் 1846 ஜூனில் தானியச் சட்டங்களை ரத்துச் செய்து நிறைவேற்றிய சட்டம் இங்கே

குறிப்பிடப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து தானிய இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதை அல்லது தடைசெய்வதை நோக்கமாகக் கொண்டதாகச் சொல்லப்படுகின்ற தானியச் சட்டங்கள் இங்கிலாந்தின் பெரிய நிலவுடைமையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்குக் கொண்டுவரப்பட்டன. தொழில்துறை முதலாளி வர்க்கம் வர்த்தக சுதந்திரம் என்னும் பதாகையின் கீழ் தானியச் சட்டங்களை எதிர்த்துப் போராடியது; 1846இல் தானியச் சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டது அதன் வெற்றியைக் குறித்தது.—38.

27 1824இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தொழிலாளர்களின் வெகுஜன இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாகத் தொழிற் சங்கங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை ரத்து செய்யும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டியதாயிற்று.—39.

28 சார்ட்டிஸ்டுகளின் கோரிக்கைகளைக் கொண்ட மக்கள் உரிமைச் சாசனம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் மசோதாவாக 1838 மே 8ல் வெளியிடப்பட்டது; இதில் அடங்கிய ஆறு கூறுகள் பின்வருமாறு: 21 வயது வந்த ஆடவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை, நாடாளுமன்றத்துக்கு வருடாந்தரத் தேர்தல்கள், இரகசிய வாக்குப் பதிவு, சமத்துவத் தேர்தல் தொகுதிகள், நாடாளுமன்ற வேட்பாளர்களுக்குச் சொத்துடைமைத் தகுதிகள் அகற்றப்படுதல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் படியுதவி. ''மக்கள் உரிமைச் சாசனம்'' ஏற்கப்பட வேண்டுமென்று கோரி சார்ட்டிஸ்டுகள் சமர்ப்பித்த மூன்று விண்ணப்பங்களும் முறையே 1839, 1842, 1849ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன.—39.

29 தானியச் சட்ட எதிர்ப்புக் கட்சி—இங்கிலாந்தின் தொழில்துறை முதலாளி வர்க்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஸ்தாபனம்; 1838இல் மாஞ்செஸ்டர் நகரத்தைச் சேர்ந்த பாக்டரி முதலாளிகளான காப்டேன் மற்றும் பிரைட் இதை நிறுவினார்கள். இக்கட்சி கட்டுப்பாடில்லாத வர்த்தக சுதந்திரத்தைக் கோரியது; தானியச் சட்டங்களை ரத்துச் செய்வதன் மூலம் தொழிலாளர்களுடைய கூலிகளைக் குறைப்பதற்கும் நிலப்பிரபுக்களின் பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளை பலவீனப்படுத்துவதற்கும் போராடியது. தானியச் சட்

டங்கள் 1846இல் ரத்துச் செய்யப்பட்ட பிறகு இக்கட்சி இயங்கவில்லை.—39.

30 நாடாளுமன்றம் "மக்கள் உரிமைச் சாசனத்தை" நிறைவேற்ற வேண்டும் என்று கோரி 1848 ஏப்ரல் 10ந் தேதியன்று இங்கிலாந்தின் சார்ட்டிஸ்டுகளால் திட்டமிடப்பட்டிருந்த வெகுஜன ஆர்ப்பாட்டம் (லண்டனில்) அதன் அமைப்பாளர்களுடைய தயக்கம் மற்றும் ஊசலாட்டத்தின் காரணமாகத் தோல்வியில் முடிவடைந்தது. பிற்போக்குச் சக்திகள் தொழிலாளர்களைத் தாக்குவதற்கும் சார்ட்டிஸ்டுகளைத் துன்புறுத்துவதற்கும் அதன் தோல்வியைப் பயன்படுத்தின.—39.

31 லுயீ போனப்பார்ட் 1851 டிசம்பர் 2ந் தேதியில் நடத்திய திடீர்ப்புரட்சி இங்கே குறிப்பிடப்படுகிறது; போனப்பார்ட்டிச இரண்டாவது பேரரசு அதிலிருந்து தொடங்கியது.—39.

32 **சோதரர் ஜானாத்தன்**—இங்கிலாந்தின் வட அமெரிக்கக் காலனிகள் சுதந்திரத்துக்காகப் போர் புரிந்த போது (1775—1783) ஆங்கிலேயர்கள் வட அமெரிக்கர்களுக்கு அளித்த கேலிப் புனைப்பெயர்.—40.

33 **சமயப் புத்தெழுச்சி** (revivalism)—18ஆம் நூற்றாண்டின் முதற்பாதியில் இங்கிலாந்தில் புரோட்டஸ்டென்டு மதத்தில் தோன்றிய போக்கு; இது வட அமெரிக்காவில் வெகுவாகப் பரவியது. சமயப் பிரசாரத்தின் மூலமும் தெய்வ பக்தியுள்ளவர்களின் புதிய கிளைகளை அமைப்பதன் மூலமும் இப்போக்கைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவ சமயத்தின் செல்வாக்கை உயர்த்தவும் பரப்பவும் முயன்றார்கள்.—40.

34 வெகுஜன தொழிலாளர் இயக்கத்தின் விளைவாக இங்கிலாந்தில் **இரண்டாவது நாடாளுமன்ற சீர்திருத்தச் சட்டம்** 1867இல் நிறைவேற்றப்பட்டது. இச்சீர்திருத்தத்துக்கான இயக்கத்தில் முதலாவது அகிலத்தின் பொதுக்குழு தீவிரமாகப் பங்கெடுத்தது. இச்சீர்திருத்தத்தின் விளைவாக இங்கிலாந்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கு அதிகமாயிற்று, தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் ஒரு பகுதி வாக்குரிமையைப் பெற்றிருந்தது.—43.

35 **விக்குகளும் டோரிகளும்**—இங்கிலாந்தில் 1670—1680ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்ட அரசியல் கட்சிகள். விக்

கட்சி நிதித்துறை மற்றும் வாணிப முதலாளிகளின், முதலாளி ஆக்கப்பட்ட பிரபுக்குலத்தோரின் ஒரு பகுதியின் நலன்களை வெளியிட்டது. விக்குகள் மிதவாதக் கட்சியின் தோற்றுவாயாக இருந்தனர். டோரிக் கட்சி பெரிய நிலக்கிழார்கள், ஆங்கில சமயச் சபையின் உயர் குருமார்கள் ஆகியோரது கட்சியாக விளங்கிற்று. பிற்பாடு இது கன்சர்வேட்டிவ் கட்சி ஆயிற்று.—44.

36 இரகசிய வாக்கெடுப்பு முறை 1872ல் கொண்டுவரப்பட்டது.—44.

37 கத்தேடெர்-சோஷலிஸ்டுகள்—1870—1890க்களில் முதலாளி வர்க்கச் சிந்தாந்தத்தில் தோன்றிய ஒரு போக்கு. அதன் பிரதிநிதிகள்—பிரதானமாக, ஜெர்மன் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்—சோஷலிசம் என்ற பெயரில் முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்தைப் பிரசங்க மேடைகளிலிருந்து (Katheder) பிரசாரம் செய்தார்கள். அரசு என்பது வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட நிறுவனம் என்றும் அது பகைமையான வர்க்கங்களைச் சமரசப்படுத்தி முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பாதிக்காத முறையில் படிப்படியாக ''சோஷலிசத்தைக்'' கொண்டுவரக் கூடியது என்றும் அவர்கள் கூறினார்கள். தொழிலாளர்களுக்கு நோய் மற்றும் விபத்து ஏற்படுகின்ற பொழுது உதவிப் பணம் கிடைக்கின்ற இன்ஷூரன்ஸ் முறை மற்றும் பாக்டரி சட்டத் துறையில் சில நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் ஆகியவை அவர்களுடைய செயல்திட்டம். நன்றாக ஒழுங்கமைந்த தொழிற் சங்கங்கள் அரசியல் போராட்டத்தையும் தொழிலாளி வர்க்க அரசியல் கட்சியையும் தேவையில்லாதவையாகச் செய்திருக்கின்றன என்று கத்தேடெர்-சோஷலிஸ்டுகள் கருதினார்கள். இப்போக்கு சித்தாந்தரீதியில் திருத்தல்வாதத்துக்கு முன்னோடியாக இருந்தது.—45.

38 சமயச் சடங்குமுறை (ritualism)—1830க்களில் ஆங்கில சமயச் சபையில் தோன்றிய போக்கு; இப்போக்கின் ஆதரவாளர்கள் கத்தோலிக்கச் சடங்குகளையும் (இதிலிருந்து அதன் பெயர் வந்தது) கத்தோலிக்க ஐதீகங்களில் சிலவற்றையும் ஆங்கில சமயச் சபை வழக்கில் மீண்டும் புகுத்த வேண்டுமெனக் கூறினர்.—46.

39 ஈஸ்ட் என்ட்—லண்டனில் கிழக்குப் பகுதி; இங்கே தொழிலாளர்கள் வசிக்கிறார்கள்.—49.

40 வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒரே சமயத்தில் வெற்றியடைகின்ற சாத்தியத்தைப் பற்றி, ஆகவே பாட்டாளி வர்க்கப் புரட்சி தனியொரு நாட்டில் மட்டும் வெற்றியடைய முடியாது என்பதைப் பற்றிய இந்த முடிவு எங்கெல்ஸ் எழுதிய ''கம்யூனிசத்தின் கோட்பாடுகள்'' என்னும் நூலில் 1847இல் மிகவும் திட்டவட்டமாக வகுத்தளிக்கப் பட்டது (இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 139—169 பார்க்க); இது ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித் துவக் காலகட்டத்துக்கு பொருத்தமாகும். புதிய வரலாற்று நிலைமைகளில், அதாவது ஏகபோக முதலாளித் துவ நிலைமைகளில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தின் பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் சமமற்ற தன்மையைப் பற்றிய விதியை உருவாக்கிய வி. இ. லெனின் ஒரு புதிய முடிவுக்கு வந்தார்; சோஷலிஸ்டுப் புரட்சி சில நாடுகளில் அல்லது தனியொரு நாட்டில்கூட முதலில் வெற்றி பெற முடியும், எல்லா நாடுகளிலும் அல்லது பெரும்பான்மையான நாடுகளில் சோஷலிஸ்டுப் புரட்சி ஒரே சமயத்தில் வெற்றியடைய முடியாது என்பது அப்புதிய முடிவாகும். லெனின் அப்புதிய முடிவை ''ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் வேண்டும் எனும் முழக்கத்தைப் பற்றி'' (1915) என்னும் கட்டுரையில் முதலில் வகுத்தளித்தார்.—49.

41 **சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம்** 1878 அக்டோபர் 21இல் ஜெர்மனியில் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின் பெயரால் சமூக-ஜனநாயகக் கட்சியின் எல்லா நிறுவனங்களும் வெகுஜன தொழிலாளர் ஸ்தாபனங்களும் தொழிலாளர் பத்திரிகைகளும் தடை செய்யப்பட்டன; சோஷலிச நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன; சமூக-ஜனநாயகவாதிகள் துன்புறுத்தப்பட்டனர். 1890 அக்டோபர் 1இல் தொழிலாளி வர்க்க இயக்க வளர்ச்சியின் நிர்ப்பந்தத்தால் இச்சட்டம் ரத்து செய்யப்பட்டது.—52.

42 **ரூஸோவினுடைய** தத்துவத்தின்படி ஆதியில் மக்கள் இயற்கை நிலையில் வாழ்ந்தனர், யாவரும் சரிசமத்துவமாக இருந்தனர்; தனியார் சொத்துரிமை தோன்றி சொத்துடைமை ஏற்றத்தாழ்வு வளர்ந்ததும் இயற்கை நிலையிலிருந்து குடிமை நிலைக்கு, அதாவது சமுதாய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரசுக்கு மாறினர். இதன் பின் அரசியல் ஏற்றத்தாழ்வு வளரவே சமுதாய ஒப்பந்

தம் மீறப்பட்டு புது வகைப்பட்ட உரிமையற்ற நிலை தலைதூக்கி விட்டது. ஒரு புதிய சமுதாய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிந்தனையின் ஆட்சிக்கு உகந்த ஓர் அரசை அமைப்பதே இந்த நிலைமைக்குரிய பரிகார மாகும்.—53.

43 **அனாபாப்டிஸ்டுகள்**—குழந்தைப்பருவத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அறிவு வளர்ச்சி பெற்ற பிறகு மறு படியும் ஞானஸ்நானம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறிய சமயப் பிரிவின் உறுப்பினர்கள்.—54.

44 **''மெய்யான சமனவாதிகள்''** அல்லது ''தோண்டுவோர்'' (Diggers) என்போரை எங்கெல்ஸ் இங்கு குறிப்பிடுகிறார். இவர்கள் 17ஆம் நூற்றாண்டின் ஆங்கில முதலாளித் துவப் புரட்சியின் போது தீவிர இடதுசாரிப் போக்கின் பிரதிநிதிகளாவர்; நகர, கிராமப்புற மக்களின் ஏழைப் பகுதியினர் நலன்களை இவர்கள் வெளியிட்டனர்; தனி யார் நிலவுடைமை ஒழிக்கப்பட வேண்டும் என்றனர்; புராதனச் சமனவாதக் கம்யூனிசக் கருத்துக்களைப் பிர சாரம் செய்தனர்; பொது நிலங்களைக் கூட்டாக உழுது பயிரிடுவதன் மூலம் நடைமுறையில் இக்கருத்துக்களைச் செயல்படுத்த முயன்றனர்.—54.

45 எங்கெல்ஸ் இங்கு குறிப்பிடுவது கற்பனாவாதக் கம்யூ னிசத்தை எடுத்துரைத்தவர்களின் நூல்களாகும்—தாமஸ் மோரின் ''உத்தோப்பியா'', தா. கம்பனேல்லாவின் ''சூரிய நகர்''.—54.

46 **தத்துவவியலாளர்கள்**—18ஆம் நூற்றாண்டில் பிரான் சில் தோன்றிய சமூக-அரசியல் போக்கின் பிரதிநிதிகள்; அன்பு, நீதி, விஞ்ஞான அறிவு ஆகிய கருத்துக்களைப் பரப்புவதன் மூலம் சமூகத்தில் நிலவுகின்ற குறைகளைப் போக்க முடியும், அதன் அறவியல், அரசியல் மற்றும் வாழ்க்கை முறையை மாற்ற முடியும் என்று கருதினார் கள்; வொல்தேர், ரூஸோ, மொன்டெஸ்க்யூ ஆகிய தத்துவ வியலாளர்களின் செயற்பணிகள் நிலப்பிரபுத்துவ-திருச்சபையின் சித்தாந்தத்தின் ஆதிக்கத்தைக் குறைப் பதற்கு அதிகமாக உதவின; அவர்கள் திருச்சபையை மட்டுமன்றி, திருச்சபையின் வறட்டுக் கோட்பாட்டு வாதத்தையும் ஏட்டறிவுச் சிந்தனை முறையையும் எதிர்த்துப் போராடினார்கள்.—55.

47 **பயங்கர ஆட்சி**—ஜாக்கொபின்வாதிகளது புரட்சிகர-ஜனநாயகச் சர்வாதிகாரம் நடைபெற்ற காலம் (1793

ஜூனிலிருந்து 1794 ஜூலை வரை) (குறிப்பு 74ஐப் பார்க்க); அப்பொழுது ஜிரோண்டிஸ்டுகளும் முடியாட்சி வாதிகளும் தொடுத்த எதிர்ப்புரட்சிப் பயங்கரத்துக்கு ஜாக்கொபின்வாதிகள் புரட்சிகர பயங்கரத்தின் மூலம் எதிரடி கொடுத்தனர்.—57.

48 நெறியாளர் குழு—நெறியாளர் ஐவர் அடங்கிய குழு, ஆண்டுக்கு ஒருவர் வீதம் இவர்கள் மறுதேர்வு செய்யப் பட்டனர்; • 1795—1799ஆம் ஆண்டுகளில் பிரான்சில் இக்குழு நிர்வாக அதிகாரம் வகித்தது; ஜனநாயக சக்தி களுக்கு எதிரான பயங்கர ஆட்சியை ஆதரித்து பெரிய முதலாளிகளின் நலன்களுக்காகச் செயல்பட்டது.—57.

49 இங்கு குறிப்பிடப்படுவது 18ஆம் நூற்றாண்டின் இறுதி யில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் முழக்கமான ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்து வம்.''—58.

50 நியூலானார்க்—ஸ்காட்லாந்து நகராகிய லானார்க்குக்கு அருகே 1784இல் நிறுவப்பட்ட பருத்தி ஆலையும் கிராமமும்.—58.

51 பிரான்சுக்கு எதிரான ஆறாவது நேசக்கூட்டைச் சேர்ந்த நாடுகளது (ருஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து, பிரஷ்யா, முதலியவை) சேனைகள் 1814 மார்ச் 31ல் பாரிஸ் நகருக் குள் புகுந்தன. முதலாவது நெப்போலியனுடைய பேரரசு வீழ்ந்தது; நெப்போலியன் முடிதுறந்தார்; எல்பாத் தீவுக்குக் கடத்தப்பட்டார். பிரான்சில் பூர்போன் முடி யரசு மீண்டும் ஏற்பட்டது.

நூறு நாள் போர்—எல்பாத் தீவுக்குக் கடத்தப் பட்ட முதலாவது நெப்போலியன் 1815 மார்ச் 20இல் பாரிசுக்குத் திரும்பியதைத் தொடர்ந்து அவருடைய பேரரசு மீண்டும் உயிர் பெற்றது முதல் 1815 ஜூன் 22இல் இரண்டாவது தடவை அவர் முடிதுறந்தது வரை யிலான நூறு நாட்கள்.—64.

52 வாட்டர்லோவில் (பெல்ஜியம்) 1815 ஜூன் 18இல் முதலாவது நெப்போலியனுடைய சேனை வெல்லிங்ட னின் தலைமையிலிருந்த கூட்டு ஆங்கில-டச்சுப் படை களாலும் புளூஹர் தலைமை தாங்கிய பிரஷ்யச் சேனை யாலும் தோற்கடிக்கப்பட்டது. இந்தச் சண்டை 1815ஆம் ஆண்டுப் போர் நிகழ்ச்சிகளில் தீர்மானகர மான பங்காற்றியது; அது பிரான்சுக்கு எதிரான ஏழா வது கூட்டணியின் (இங்கிலாந்து, ருஷ்யா, ஆஸ்திரியா,

பிரஷ்யா, ஸ்வீடன், ஸ்பெயின், இதரவற்றின்) முழு வெற்றியையும் முதலாவது நெப்போலியனுடைய பேரரசின் தகர்வையும் தீர்மானித்தது.—*64*.

53 ஓவன் தலைமை வகிக்க, *1833* அக்டோபரில் லண்டனில் நடைபெற்ற கூட்டுறவுக் கழகங்கள் மற்றும் தொழிற் சங்கங்களது காங்கிரசில் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து ஒருமித்த மாபெரும் தொழிற் சங்க இணைப்பு நிறுவனம் நிறுவப்பட்டது. முதலாளித்துவ சமூகம் மற்றும் அரசின் கடுமையான எதிர்ப்பின் விளைவாக *1834* ஆகஸ்டில் இந்த நிறுவனம் சிதைந்து விட்டது.—*72*.

54 இங்கிலாந்தின் பல நகரங்களில் ஓவன்வாதத் தொழிலாளர்களின் கூட்டுறவுக் கழகங்களால் ஏற்படுத்தப்பட்ட நியாயமான பரிவர்த்தனைச் சந்தைகளை இங்கே எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்; ஒரு மணி நேர வேலையை மதிப்பின் அலகாகக் கொண்ட உழைப்பு-நோட்டுகளை ஊடகமாகக் கொண்டு இச்சந்தைகளில் உழைப்புப் பொருள்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டன. முதலாளித்துவப் பண்டப் பொருளாதாரச் சூழ்நிலையில் பணம் இல்லாமல் பரிவர்த்தனையை அமைப்பதற்குச் செய்யப்பட்ட இம்முயற்சி வெகு சீக்கிரத்தில் தோல்வியடைந்தது.—*72*.

55 *1848—1849*ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சியின் போது புரூதோன் பரிவர்த்தனை வங்கியை அமைக்க முயன்றார். அவருடைய Banque du Peuple (மக்கள் வங்கி) *1849* ஜனவரி *31*இல் பாரிசில் துவக்கப்பட்டு சுமார் இரண்டு மாதங்களுக்கு நீடித்தது. முறையாக செயல்படத் தொடங்கும் முன்னரே அது தோல்வி அடைந்து ஏப்ரல் துவக்கத்தில் மூடப்பட்டு விட்டது.—*72*.

56 கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டம் இங்கே குறிப்பிடப்படுகிறது; எகிப்திய நகரமான அலெக்சாந்திரியாவிலிருந்து அது இப்பெயரைப் பெற்றது. மத்திய தரைக் கடலோரத்தில் இருக்கிற அலெக்சாந்திரியா அக்காலத்தில் சர்வதேசப் பொருளாதாரத் தொடர்புகளைக் கொண்ட முக்கிய மையங்களில் ஒன்றாக விளங்கிற்று. அலெக்சாந்திரியக் காலத்தில் கணிதமும் இயந்திரவியலும் (யூக்லிட், அர்க்கிமீடிஸ்), பூகோளவியல், வானியல், உடற்கூறுவியல், உடலியல் போன்ற பல விஞ்ஞானங்கள் அதிகமான வளர்ச்சியைப் பெற்றன.—*76*.

57 *1492இல் கிரிஸ்தஃபோர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததும் 1498இல் வாஸ்கோ டா காமா இந்தியாவுக்குக் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்ததும் இவற்றில் மிகவும் முக்கியமானவை.—101.*

58 *இந்தியாவுடனும் அமெரிக்காவுடனுமான வாணிபத்தில் ஆதிக்கம் பெறுவதற்காகவும் காலனிச் சந்தைகளைப் பிடிப்பதற்காகவும் பிரதான ஐரோப்பிய அரசுகளிடையே 17ஆவது, 18ஆவது நூற்றாண்டுகளில் நடைபெற்ற யுத்தங்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. ஆரம்பத்தில் பிரிட்டனும் ஹாலந்தும் பிரதான போட்டி நாடுகளாக இருந்தன (1652-54, 1664-67, 1672-74ஆம் ஆண்டுகளில் இவற்றிலிடையே முக்கிய வாணிப யுத்தங்கள் நடைபெற்றன). பிறகு பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே கடும் போராட்டம் நடைபெற்றது. பிரிட்டன் இந்த யுத்தங்கள் யாவற்றிலும் வெற்றி பெற்று 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் உலகின் வாணிபம் அநேகமாக அனைத்தையும் தன் பிடிக்குள் கொண்டுவந்துவிட்டது.—101.*

59 மன்னரது கடற்கப்பல் கம்பெனி*—1772இல் பிரஷ்யாவில் நிறுவப்பட்ட வர்த்தக மற்றும் கடன் கழகம்; அரசாங்கத்திடமிருந்து அதிகமான சலுகைகளைப் பெற்றது; பிரஷ்ய அரசாங்கத்துக்கு அதிகமான கடன்களைக் கொடுத்தது.—112.*

60 வே.இ. ஸசூலிச் *1881 பிப்ரவரி 16இல் எழுதிய கடிதத்துக்கு மார்க்ஸ் எழுதிய பதிலின் முதல் நகல் இது. ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் எதிர்காலத்தைப் பற்றி ருஷ்ய சோஷலிஸ்டுகள் மத்தியில் நடைபெற்ற விவாதங்களில் ''மூலதனம்'' வகித்த பாத்திரத்தைப் பற்றி வேரா ஸசூலிச் மார்க்சுக்கு எழுதியிருந்தாள். இப்பிரச்சினை மீது, குறிப்பாக கம்யூனைப் பற்றி மார்க்ஸ் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று ஸசூலிச் தன்னுடைய கூட்டாளிகளான ''புரட்சிகர சோஷலிஸ்டுகளின்'' சார்பில் கேட்டுக் கொண்டார். மார்க்ஸ் ''மூலதனத்தின்'' 3ம் தொகுதியை எழுதிய பொழுது ருஷ்யாவின் சமூக-பொருளாதார உறவுகளையும் ருஷ்யாவில் விவசாய கம்யூனுடைய நிலைமையும் ஆராய்ந்தார். இக்கடிதத்துக்குப் பிறகு மார்க்ஸ் இன்னும் அதிகமாக ஆராய்ச்சி செய்தார்; தான் ஆராய்ந்த நூல்களிலிருந்து பெற்ற விவரங்களைத் தொகுத்துக் கூறினார். மேற்கு ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உதவி*

யுடன் ருஷ்யாவில் மக்கள் புரட்சி நடைபெற்றால் மட்டுமே எல்லாப் பக்கங்களிலிருந்தும் ருஷ்ய கம்யூனை எதிரிடு கின்ற ''ஆபத்தான தாக்கங்களை'' அகற்ற முடியும் என்று மார்க்ஸ் முடிவு செய்தார். ருஷ்யப் புரட்சி மேற்கு ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்குச் சாதகமான நிலைமைகளைப் படைக்கும், இந்தப் பாட்டாளி வர்க்கம் ருஷ்யா முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையைத் தவிர்ப்பதற்கு உதவி புரியும். ருஷ்யாவில் பெருந் தொழில்துறை வளர்ச்சி இல்லாமலேயே கம்யூன் மூலமாக சோஷலிஸ்டு சமூக அமைப்புக்குள் குதிக்க முடியும் என்னும் ருஷ்ய சோஷலிஸ்டுகளின் கற்பனைக்கும் மார்க்சினுடைய இக்கருத்துக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை.—*127*.

61 ருஷ்யாவில் பண்ணையடிமை முறை *1861*இல் ஒழிக்கப்பட்டது.—*129*.

62 கி.மு. *321*இல் ஸாம்னைட்டுகள் (மத்திய அப்பெனின்ஸ் மலைப் பிரதேசங்களில் வசித்த இனக்குழுக்கள்) பண்டைய ரோமானிய நகரமான காடையின் அருகிலுள்ள காடைன் பிளவில் ரோமானியப் படைகளை முறியடித்து அவைகளை ''நுகத்தின்'' கீழ் செலுத்தினர். அது தோல்வியடைந்த படைகளுக்கு அளிக்கப்படுகின்ற மிகவும் அதிகமான அவமதிப்பாகும். ஆகவே ''காடைன் பிளவின் வழியாக வருதல்'' என்னும் சொற்றொடர் தோன்றியது.—*136*.

63 *Rheinische Zeitung für Politik, Handel und Gewerbe* (''அரசியல், வர்த்தகம் மற்றும் தொழில்துறைப் பிரச்சினைகளைப் பற்றிய ரைன் பத்திரிகை'')—கொலோனிலிருந்து *1842* ஜனவரி *1* முதல் *1843* மார்ச் *30* வரை வெளியிடப்பட்ட தினசரிப் பத்திரிகை. மார்க்ஸ் *1842* ஏப்ரல் முதல் இப்பத்திரிகையில் கட்டுரைகளை எழுதினார்; *1842* அக்டோபரில் அதன் ஆசிரியர்களில் ஒருவரானார். இப்பத்திரிகையில் எங்கெல்சும் கட்டுரைகளை எழுதினார்.—*147*.

64 *Vorwärts* (''முன்னேற்றம்'')—பாரிசிலிருந்து வெளியிடப்பட்ட ஜெர்மன் பத்திரிகை; *1844* ஜனவரி முதல் டிசம்பர் வரை வாரமிருமுறை இதழாக வெளிவந்தது. மார்க்சும் எங்கெல்சும் அதில் கட்டுரைகளை எழுதினார்கள். —*147*.

65 *Deutche-Brüsseler-Zeitung* (''ஜெர்மன் பிரஸ்ஸல்ஸ் பத்திரிகை'')—பிரஸ்ஸல்சிலிருந்த ஜெர்மன் அரசியல் அகதிகள் நிறுவிய பத்திரிகை; 1847 ஜனவரி முதல் 1848 பிப்ரவரி வரை வெளியிடப்பட்டது. 1847 செப்டெம்பர் முதல் மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதியதுடன் அதன் அரசியல் நிலையின் மீதும் வலிமையான தாக்கத்தைச் செலுத்தினார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலின் விளைவாக அது கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் பத்திரிகையாயிற்று.—147.

66 *New-York Daily Tribune* (''நியூயார்க் தினசரி டிரிப்யூன்'')—முற்போக்கான முதலாளி வர்க்கப் பத்திரிகை; 1841 முதல் 1924 வரை வெளியிடப்பட்டது. மார்க்சும் எங்கெல்சும் எழுதிய கட்டுரைகள் 1851 ஆகஸ்ட் முதல் 1862 மார்ச் வரை அதில் வெளிவந்தன.—147.

67 மார்க்ஸ் மரணமடைந்து ஓர் ஆண்டு முடிவடைந்ததைக் குறிப்பதற்கு இக்கட்டுரை எழுதப்பட்டது. 1848—1849 ஆண்டுகளில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர செயல்தந்திரத்தின் கூறுகளை எங்கெல்ஸ் இக்கட்டுரையில் விவரிக்கிறார். அவர் பெருந்திரளான மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும் அவர்கள் நடவடிக்கைக்குச் செயல்தந்திர முறையில் சரியானபடி வழிகாட்டுவதையும் வற்புறுத்துகிறார். பாட்டாளி வர்க்கக் கட்சி பொதுவான ஜனநாயகக் கடமைகளை பாட்டாளி வர்க்கக் கடமைகளுடன் சரியாக ஒன்றுசேர்க்க வேண்டும் என்கிறார். 1848-49 காலகட்டத்தில் மார்க்சின் செயல்தந்திரத்தை உதாரணமாகக் காட்டி ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் பொதுவான ஜனநாயக இயக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையான பாத்திரத்துக்குப் போராட வேண்டும், பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களை உயர்த்திப் பிடிக்க வேண்டும், குட்டிமுதலாளி வர்க்கக் கற்பனைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது, போலியான வாக்குறுதிகளைத் தந்து பாட்டாளி வர்க்கத்தை மோசடி செய்கின்ற ஆளும் வர்க்கத்தின் முயற்சிகளை உறுதியாக அம்பலப்படுத்த வேண்டும் என்று எங்கெல்ஸ் கற்பிக்கிறார்.—149.

68 1848 பிப்ரவரியில் பிரான்சில் நடைபெற்ற புரட்சி லுயீ ஃபிலீப்பின் முடியாட்சியை ஒழித்தது.—149.

69 *Kreuz-Zeitung* (''சிலுவைப் பத்திரிகை'') — *Neue Preußische Zeitung* (''புதிய பிரஷ்ய பத்திரிகை'') என்னும் ஜெர்மன் தினசரிப் பத்திரிகைக்குத் தரப்பட்ட பெயர்; அதன் தலைப்பில் Landuehrஇன் சின்னமாகிய சிலுவையை வெளியிட்டதனால் இப்பெயர் ஏற்பட்டது. பெர்லினிலிருந்து 1848 ஜூன் முதல் 1939 வரை வெளியிடப்பட்ட இப்பத்திரிகை எதிர்ப்புரட்சி அரண்மனை கோஷ்டி மற்றும் பிரஷ்ய ஐங்கர்களின் வெளியீடாக இருந்தது.—157.

70 1848 மார்ச் புரட்சிக்குப் பிறகு ஏற்பட்ட பிரஷ்ய அரசாங்கத்தின் அமைச்சர்களான ஹான்ஸெமான், காம்ப்ஹாவுஸன், இதரர்கள் இங்கே குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் மிதவாத முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். பிற்போக்காளர்களுடன் உடன்படிக்கை செய்ய வேண்டும் என்ற துரோகமான கொள்கையைப் பின்பற்றினார்கள்.—157.

71 மார்ச் புரட்சிக்குப் பிறகு அமைக்கப்பட்டு மைன் கரையிலுள்ள பிராங்க்பர்ட்டில் 1848 மே 18இல் கூடிய **பிராங்க்பர்ட் அசெம்பிளி** என்னும் ஜெர்மன் தேசிய அசெம்பிளி இங்கே குறிப்பிடப்படுகிறது. ஜெர்மனி அரசியல் ரீதியில் சிதறிப்போவதைத் தடுத்து ஜெர்மனி முழுவதற்கும் அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பது அதன் முக்கியமான கடமையாக இருந்தது. அதன் மிதவாதம் பெரும்பான்மையோரின் கோழைத்தனம், ஊசலாட்டங்கள் மற்றும் அதன் இடதுசாரிப் பகுதியின் தீர்மானமின்மை, முரண்பாடுகளின் விளைவாக அசெம்பிளி நாட்டில் தலைமையான அதிகாரத்தைக் கைப்பற்றத் தயங்கியது; ஜெர்மனியின் 1848-49 புரட்சியின் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி தீர்மானகரமான நிலையெடுக்கத் தவறியது. அசெம்பிளி 1849 மே 30இல் ஷ்டுட்கார்ட்டுக்கு மாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. துருப்புகள் 1849 ஜூன் 18இல் அசெம்பிளியைக் கலைத்தன.

**பெர்லின் அசெம்பிளி** ''அரசருடன் உடன்பாடான முறையில்'' அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பதற்கு 1848 மே மாதத்தில் கூட்டப்பட்டது; மேற்கண்ட சூத்திரத்தைத் தன்னுடைய நடவடிக்கைக்கு அடிப்படையாகக் கொண்ட அசெம்பிளி மக்கள் அரசுரிமைக் கோட்பாட்டைக் கைவிட்டது; அரசர் ஆணையின்படி நவம்பரில் பிரான்டென்பர்குக்கு மாற்றப்பட்

டது; 1848 டிசம்பரில் பிரஷ்யாவில் நடைபெற்ற திடீர்ப் புரட்சியின் போது கலைக்கப்பட்டது.—157.

72 புஷார் எழுதிய *Marat, l'Ami du Peuple* (''மக்கள் நண்பர் மராத்'') என்னும் நூல் 1865இல் பாரிசில் வெளியிடப்பட்டது.

*L'Ami du Peuple* (''மக்கள் நண்பன்'') என்னும் பத்திரிகையை மராத் 1789 செப்டெம்பர் 12 முதல் 1793 ஜூலை 14 வரை வெளியிட்டார். அது இப்பெயரில் 1789 செப்டெம்பர் 16 முதல் 1792 செப்டெம்பர் 21 வரை வெளியாயிற்று. இப்பத்திரிகை Marat, l'Ami du Peuple என்னும் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டது.—160.

73 1848 பிப்ரவரி 24ந் தேதி—பிரான்சில் லுயீ ஃபிலீப்பின் ஆட்சியை ஒழித்து பிப்ரவரிப் புரட்சி வெற்றி பெற்ற நாள். இச்செய்தியைக் கேட்ட ருஷ்ய சக்கரவர்த்தி முதலாவது நிக்கலாய் ஐரோப்பாவில் புரட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு இராணுவத்தின் ஒரு பகுதியைத் தயாரிக்கும்படியாக யுத்த அமைச்சருக்கு உத்தரவிட்டார்.—161.

74 ஜாக்கொபின்வாதிகள்—18ஆம் நூற்றாண்டின் கடைசியின் போது (பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் போது) தோன்றிய முதலாளி வர்க்க அரசியல் குழு; அதன் பிரதிநிதிகள் பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தின் இடதுசாரி அணியைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் எதேச்சாதிகாரத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் ஒழிப்பது அவசியம் என்று உறுதியாகவும் முரணில்லாமலும் வலியுறுத்தினார்கள்.—163.

75 *Kölnische Zeitung* (''கொலோன் பத்திரிகை'')—கொலோனில் 1802 முதல் வெளியிடப்பட்ட ஜெர்மன் தினசரிப் பத்திரிகை; இப்பத்திரிகை 1848-49 புரட்சியின் போதும் அதற்குப் பின்னர் வந்த பிற்போக்குவாதக் காலகட்டத்தின் போதும் பிரஷ்ய மிதவாத முதலாளி வர்க்கத்தின் கோழைத்தனமான, துரோகக் கொள்கையைப் பிரதிபலித்தது; 19ஆம் நூற்றாண்டின் கடைசியில் தேசிய-மிதவாதக் கட்சியுடன் தொடர்பு வைத்திருந்தது.—164.

76 பிரெஞ்சுத் துருப்புகளைப் புரட்சியை நசுக்குவதற்காக இத்தாலிக்கு அனுப்பியதை ஆட்சேபித்து பிரான்சின் குட்டிமுதலாளி வர்க்க மலைக் கட்சி 1849 ஜூன் 13இல்

பாரிசில் சமாதானபூர்வமான ஆர்ப்பாட்டம் செய்தது. துருப்புகள் ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தன. மலைக் கட்சியின் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள், நாடு கடத்தப்பட்டார்கள் அல்லது பிரான்சிலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.—164.

77 எங்கெல்ஸ் 1849இல் வில்லிஹின் தொண்டர் படையுடன் பாடேன்-ப்ஃபால்ட்ஸ் எழுச்சியில் பங்கெடுத்தார்.—165.

78 எங்கெல்ஸ் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் வரலாறு குறித்து என்னும் இக்கட்டுரையை மார்க்ஸ் எழுதிய ''கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின் உண்மை உருவம்'' (*Revelations about the Cologne Communist Trail*) என்னும் பிரசுரத்தின் ஜெர்மன் பதிப்புக்கு (1885) முன்னுரையாக எழுதினார். சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் அமுலிலிருந்த காலத்தில், 1849-52 காலகட்டத்தில் பிற்போக்குவாதத்தின் தாக்குதலுக்கு எதிராகப் பெற்ற புரட்சிகர அனுபவத்தை ஜெர்மன் தொழிலாளி வர்க்கம் அறிந்து கொள்வது அவசியமாக இருந்தது. ஆகவே மார்க்சின் இப்பிரசுரத்தை மறுபதிப்புச் செய்வது அவசியமென்று எங்கெல்ஸ் கருதினார்.

வரலாற்றில் முதல் தடவையாக விஞ்ஞான கம்யூனிசம் தன்னுடைய சித்தாந்தம் என்று பிரகடனம் செய்த முதல் சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் வகித்த வரலாற்றுப் பாத்திரத்தையும் இடத்தையும் எங்கெல்ஸ் இக்கட்டுரையில் விளக்குகிறார். பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்குகின்ற போராட்டத்தில் முக்கியமான கட்டத்தைக் குறித்த கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உதாரணத்தை ஆதாரமாகக் கொண்டு, மார்க்சியம் ஆரம்பத்திலிருந்தே பாட்டாளி வர்க்கத்தின் நடைமுறை புரட்சிகரப் போராட்டத்தின் எல்லாத் தேவைகளையும் பிரதிபலிக்கின்ற திறமையைக் கொண்டிருந்ததனால் மற்றும் அத்தத்துவம் புரட்சிகரப் போராட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாக இருந்ததனால் பல்விதமான குறுங்குழுப் போக்குகளையும் முறியடித்தது என்பதை எங்கெல்ஸ் விளக்குகிறார்.—166.

79 கொலோன் வழக்கு (1852 அக்டோபர் 4—1852 நவம்பர் 12) கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் 11 உறுப்பினர்கள் மீது பிரஷ்ய அரசாங்கம் தொடுத்த பொய்வழக்கு; அவர்கள் மீது நாட்டுத் துரோகக் குற்றம் சாட்ட பொய்யான ஆவணங்களும் சாட்சியங்களும் பயன்படுத்தப்

பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஏழு நபர்கள் 3—6 ஆண்டுகள் தண்டிக்கப்பட்டு ஒரு கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்கள்.—*166.*

80 **பாபுயிசம்**—கற்பனாவாத, சமனவாதக் கம்யூனிசத்தில் ஒரு போக்கு; 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சுப் புரட்சிக்காரர் கிராக்கஸ் பாபெஃப் மற்றும் அவருடைய சீடர்களால் உருவாக்கப்பட்டது.—*167.*

81 **பருவக்காலங்களது சங்கம்** (Société des Saisons) — 1837 முதல் 1839 வரை பாரிசில் பிளான்கி மற்றும் பார்பேஸ் தலைமையில் சுறுசுறுப்பாக இயங்கிய குடியரசுவாத-சோஷலிச, சதிக் கூட்ட ஸ்தாபனம்.

இச்சங்கம் பாரிசில் 1839 மே 12இல் புரட்சிகரமான தொழிலாளர்கள் முக்கிய பங்கெடுத்த புரட்சிகர எழுச்சியை நடத்தியது. எனினும் பெருந்திரளான மக்கள் அதை ஆதரிக்கவில்லை. அரசாங்கத் துருப்புகளும் தேசியக் காவலர் படையும் அதை முறியடித்தன.—*168.*

82 பிற்போக்குவாதத்தை எதிர்த்து ஜெர்மன் ஜனநாயகவாதிகள் நடத்திய போராட்டத்தில் ஒரு சம்பவம் இங்கே குறிப்பிடப்படுகிறது. 1833 ஏப்ரல் 3இல் தீவிரவாதிகளின் குழு நாட்டில் திடீர்ப்புரட்சியை நடத்த முயன்றது; ஜெர்மன் குடியரசைப் பிரகடனம் செய்கின்ற முயற்சியில் மைன் கரையிலுள்ள பிராங்க்பர்ட்டில் பெடெரல் அசெம்பிளியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தது. சரியான தயாரிப்புகள் இல்லாமல் நடைபெற்ற இந்தத் திடீர்ப்புரட்சியைத் துருப்புகள் நசுக்கின.—*168.*

83 இத்தாலிய முதலாளி வர்க்க ஜனநாயகவாதியான மாஜீனி 1831இல் தான் நிறுவிய ''இளம் இத்தாலி'' அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் புரட்சிகர அகதிகள் ஸ்விட்சர்லாந்திலிருந்து சவோய்யாவுக்குச் செல்கின்ற அணிவகுப்பை 1834 பிப்ரவரியில் நடத்தினார். இத்தாலிய ஒற்றுமையின் பெயரால் பொது மக்கள் கிளர்ச்சியைத் தூண்டுவதும் சுதந்திரமான முதலாளித்துவ இத்தாலிய குடியரசைப் பிரகடனம் செய்வதும் அவர்களுடைய நோக்கமாகும். சவோய்யாவுக்குள் நுழைந்ததும் பியேமொன்டு துருப்புகள் இந்த அணிவகுப்பை ஒடுக்கின.—*168.*

84 **உணர்ச்சிப் பேச்சாளிகள்**—ஜெர்மன் அறிவுஜீவிகளிடையே

1847 அக்டோபருக்கும் 1848 ஜனவரிக்கும் இடையில் இதில் வெளியிடப்பட்டன.—178.

91 *Der Volks-Tribune* (''மக்கள் டிரிப்யூன்'')—ஜெர்மன் ''மெய்யான சோஷலிஸ்டுகளால்'' நிறுவப்பட்ட நியூயார்க் வார இதழ்; 1846 ஜனவரி 5க்கும் டிசம்பர் 31க்கும் இடையில் வெளியிடப்பட்டது.—179.

92 ஜெர்மனியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் கோரிக்கைகள் என்னும் பிரசுரத்தை மார்க்சும் எங்கெல்சும் பாரிசில் 1848 மார்ச் 21—29 தேதிகளுக்கு இடையில் எழுதினார்கள். ஜெர்மனியில் வெடித்த புரட்சியில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் அரசியல் கொள்கையை அது அறிவித்தது. சொந்த நாட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சங்கத்தின் உறுப்பினர்கள் மத்தியில் இக்கொள்கை ஆவணம் வினியோகிக்கப்பட்டது. புரட்சியின் போது மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்கள் இந்த ஆவணத்தை மக்கள் மத்தியில் பரப்பினார்கள்.—185.

93 கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் முன்முயற்சியினால் பாரிசில் 1848 மார்ச் 8—9 தேதிகளில் ஆரம்பிக்கப்பட்ட ஜெர்மன் தொழிலாளர் மன்றம் இங்கே குறிப்பிடப்படுகிறது. இந்த அமைப்பில் மார்க்ஸ் முக்கியமான பாத்திரத்தை வகித்தார். பாரிசில் குடியேறியிருந்த ஜெர்மன் தொழிலாளர்களை ஒன்றுசேர்ப்பதும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய சரியான செயல்தந்திரத்தை அவர்களுக்கு விளக்குவதும் அதன் நோக்கங்களாகும்.—187.

94 பிராங்க்பர்ட் தேசிய அசெம்பிளி 1849 மார்ச் 28இல் பேரரசு அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது; ஆனால் சில ஜெர்மன் அரசுகள் அதை நிராகரித்தன. பேரரசு அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து டிரெஸ்டனில் 1849 மே 3—8 தேதிகளிலும் தெற்கு மற்றும் மேற்கு ஜெர்மனியில் 1849 மே—ஜூலை மாதங்களிலும் நடைபெற்ற ஆயுதம் தாங்கிய எழுச்சி இங்கே குறிப்பிடப்படுகிறது. இந்த எழுச்சிகள் தன்னியல்பான, தனித்தனியான முறையில் தோன்றின; எனவே அவை 1849 ஜூலை மாதத்தின் மத்தியில் நசுக்கப்பட்டன.—190.

95 *Neue Rheinische Zeitung. Politisch-ökonomische Revue* (''புதிய

ரைன் பத்திரிகை. அரசியல்-பொருளாதார சஞ்சிகை'') —மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் ஸ்தாபித்த சஞ்சிகை; கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் தத்துவார்த்த இதழ்; 1849 டிசம்பர் முதல் 1850 நவம்பர் வரை வெளியிடப்பட்டது; மொத்தம் ஆறு இதழ்கள் வெளியிடப்பட்டன.—194.

96 அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861—1865)—வட அமெரிக்க தொழில்துறை மாநிலங்களுக்கும் கலகம் செய்த தென் அமெரிக்க அடிமை உடைமை மாநிலங்களுக்கும்—அவை 1861இல் பிரிந்து விடுவதற்கு முடிவு செய்தன—இடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்; அந்தப் போர் அடிமை முறை, கூலியுழைப்பு என்னும் இரண்டு சமூக அமைப்புகளுக்கு இடையில் நடைபெற்ற போராட்டமாகும்.—195.

97 தனிக்கழகம்—கம்யூனிஸ்டுகள் சங்கத்தில் 1850 செப்டெம்பர் 15இல் பிளவு ஏற்பட்டு வில்லிஹ்-ஷாப்பர் என்னும் குறுங்குழுவாத, துர்ச்சாகசவாதியின் கோஷ்டி சொந்த மத்திய கமிட்டியைக் கொண்ட தனி அமைப்பை உருவாக்கியது. மார்க்சும் எங்கெல்சும் 1840க்களில் ஸ்விட்சர்லாந்தின் பிற்போக்கான கத்தோலிக்க காண்டன்கள் தனிச்சங்கத்தை அமைத்த உதாரணத்தைப் பின்பற்றி கிண்டலான முறையில் அந்த அமைப்புக்கு இப்பெயரிட்டார்கள். அக்கோஷ்டியின் நடவடிக்கைகளின் விளைவாக ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் ரகசியக் கிளைகளைப் பற்றிய தகவல் பிரஷ்யப் போலீசுக்குக் கிடைத்தது; கொலோனில் 1852இல் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் பிரதான செயலாளர்களை எதிர்த்த சதிவழக்குத் தொடரப்பட்டது (குறிப்பு 79ஐப் பார்க்க). —197.

98 எங்கெல்ஸ் லூத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் என்னும் நூலில் மார்க்சிய உலகக் கண்ணோட்டம் எப்படி வளர்ச்சியடைந்தது, அதன் முக்கியமான கூறுகள் என்ன என்பதை விளக்குகிறார். அந்த நூல் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் அடிப்படைகளை முறைப்படியாக விளக்குவதுடன் மார்க்சியத்துக்கும் மூலச்சிறப்புடைய ஜெர்மன் தத்துவஞானத்தின் முக்கியமான பிரதிநிதிகளான ஹெகலும் ஃபாயர்பாகும் பிரதிநிதித்துவம் செய்த முந்திய மரபுக்கும் இடையிலான உறவையும் வெளிப்படுத்துகிறது.

தத்துவஞானத்தின் வரலாறு முழுவதும் இரண்டு முகாம்களுக்கு—பொருள்முதல்வாதம் மற்றும் கருத்து முதல்வாதம்—இடையில் நடைபெற்ற போராட்டம் மிகவும் முக்கியமான அம்சமாக இருப்பதை எங்கெல்ஸ் விளக்குகிறார். சிந்தனைக்கும் இருத்தலுக்கும், ஆன்மாவுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு தத்துவஞானத்தின் அடிப்படையான பிரச்சினை ஆகும்; எங்கெல்ஸ் வரலாற்றில் முதல் தடவையாக அப்பிரச்சினையை மூலச்சிறப்பான முறையில் வரையறுக்கிறார். தத்துவஞானத்தின் அடிப்படையான பிரச்சினையை ஒரு தத்துவஞானி எப்படி அணுகுகிறார் என்பதைக் கொண்டு இரு முகாம்களில் அவர் எதை ஆதரிக்கிறார் என்பதை நிர்ணயிக்க முடியும்.

ஓர் இடைநிலைத் தத்துவஞானத்தை (இருமைவாதம் அல்லது அறியொணாவாதம்) உருவாக்குவதன் மூலம் பொருள்முதல்வாதத்தையும் கருத்துமுதல்வாதத்தையும் சமரசப்படுத்துவதற்கு முயல்வது பயனற்றதாகும் என்று வலியுறுத்துகின்ற பொழுது எங்கெல்ஸ் அறியொணாவாதத்தை அதன் எல்லா வெளிப்பாடுகளிலும் மறுக்கிறார்; ''மற்ற தத்துவஞான முட்டுக்கட்டைகள் அனைத்தையும் போல, இதையும் மறுப்பதற்கு மிகச் சிறந்த வழி செய்முறையே, அதாவது பரிசோதனை மற்றும் தொழில்துறையே'' என்று அவர் சுட்டிக்காட்டுகிறார் (இத்தொகுதி, பக்கம் 223 பார்க்க).

மார்க்ஸ் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை வகுத்தளித்துத் தத்துவஞானத்தில் நிறைவேற்றிய புரட்சியின் சாராம்சத்தை எங்கெல்ஸ் வெளிப்படுத்துகிறார். மனித சமூகத்தில் செயல்படுகின்ற வளர்ச்சியின் பொது விதிகளை வரையறுக்கின்ற வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை அவர் முற்றாகப் பகுப்பாய்வு செய்கிறார். பொருளாதார உறவுகள் வரலாற்று நிகழ்வுப்போக்கின் அடிப்படையில் இருக்கின்றன என்பதையும் அவை அரசியல் அமைப்பின் இயல்பு மற்றும் சமயம், தத்துஞானம் உட்பட சமூக உணர்வின் எல்லா வடிவங்களையும் ரகங்களையும் நிர்ணயிக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டுகின்ற அதே நேரத்தில் எங்கெல்ஸ் சித்தாந்த மேற்கட்டுமானங்கள் வகிக்கின்ற செயலூக்கமான பாத்திரத்தையும் சுயேச்சையாக வளர்ச்சியடைவதற்கும் பொருளாதார அடிப்படையின் மீது தாக்கம் செலுத்துவதற்கும் அவற்றின் திறமையையும் வலியுறுத்துகிறார்.

வர்க்கங்கள் மற்றும் கட்சிகளின் போராட்டத்தைப்

பிரதிபலிக்கின்ற தத்துவஞானப் போக்குகளுக்கு இடையிலான போராட்டத்தின் வரலாற்றுப் பின்னணியில் தத்துவஞானம் சார்புநிலையானது என்னும் கோட்பாட்டை நிறுவியதற்கு எங்கெல்சை மிகவும் பாராட்ட வேண்டும். —*200*.

99 புயலும் தாக்குதலும்—*1770—1780*ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் நகரத்தார்களின் இலக்கிய-சமுதாய இயக்கம். நிலப்பிரபுத்துவ-எதேச்சாதிகார முடியரசை எதிர்த்த ஜெர்மன் இளம் எழுத்தாளர்களின் ஒருவகை இலக்கியக் கலகமாக இது விளங்கியது.—*201*.

100 *Die Neue Zeit* (''புதிய காலம்'')—*1833* முதல் *1923* வரை ஷ்டுட்கார்ட்டிலிருந்து வெளிவந்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தத்துவார்த்த சஞ்சிகை. *1885—1894*ஆம் ஆண்டுகளில் அச்சஞ்சிகையில் எங்கெல்ஸ் எழுதிய பல கட்டுரைகள் வெளியாயின.—*202*.

101 ''ரொமான்டிக் மரபு'', ''ஜெர்மனியில் மதம் மற்றும் தத்துவஞானத்தின் வரலாற்றைப் பற்றி'' என்னும் ஹெய்னே *1833—1834* ஆண்டுகளில் எழுதிய நூல்களில் அவர் ஜெர்மன் தத்துவஞானப் புரட்சியைப் பற்றிய கருத்துக்களை உறுதிப்படுத்தினார். ஹெகலின் தத்துவஞானத்தை இறுதிக் கட்டமாகக் கொண்ட இந்தத் தத்துவஞானப் புரட்சி ஜெர்மனியில் வரப்போகும் ஜனநாயகப் புரட்சிக்கு முன்னுரையாக இருக்கிறது என்று ஹெய்னே இந்த நூல்களில் குறிப்பிடுகிறார்.—*205*.

102 இளம் ஹெகலியவாதிகள்—*1830—1840*க்களில் ஜெர்மன் தத்துவஞானத்தில் தோன்றிய கருத்துமுதல்வாதப் போக்கின் பிரதிநிதிகள்; ஹெகலின் சீடர்கள்.—*215*.

103 மதவாதம்—*17*ம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு ஐரோப்பாவில் தோன்றிய புரோட்டஸ்டென்டுகளிடையிலான (லூதரனிஸ்டுகள், கால்வினிஸ்டுகள்) சமய-மாயாவாதப் போக்கு.—*215*.

104 *Deutsche Jahrbücher für Wissenschaft und Kunst* (''விஞ்ஞானம், கலை பற்றிய ஜெர்மன் ஆண்டு மலர்'')—இளம் ஹெகலியவாதிகளின் இலக்கிய-தத்துவஞானச் சஞ்சிகை; இப்பெயரில் *1841* ஜூலை முதல் *1843* ஜனவரி வரை லைப்சிக்கில் வெளியிடப்பட்டது.—*215*.

105 மாக்ஸ் ஷ்டிர்னர் ''சுய அகந்தையும் சுயமும்'' என்னும் நூலை எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்; இது *1845*இல் லைப்சிக்கில் வெளிவந்தது.—*216*.

திரியா நீங்கலான) ஜெர்மன் பேரரசை இச்சொல் குறிக்கிறது.—277.

**உழைப்பு வீரப்பெருந்தகையினர் கழகம்**—ஃபிலடெல்ஃபியாவைச் சேர்ந்த அமெரிக்கத் தொழிலாளர்கள் 1869இல் நிறுவிய ரகசியக் கழகம்; இது 1878 வரை நீடித்தது. இக்கழகத்தில் பெரும்பாலும் நுட்பத்திறன் இல்லாத தொழிலாளர்களே இருந்தார்கள்; கூட்டுறவு மற்றும் பரஸ்பர உதவிச் சங்கங்கள் அமைப்பது அதன் நோக்கம். ஆனால் இக்கழகத்தின் தலைமை தொழிலாளர்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபடுவதை எதிர்த்து வர்க்க சமரசக் கொள்கையை வலியுறுத்தியது. 1886இல் இது நாடு முழுவதிலும் நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை எதிர்த்தது, கழகத்தின் உறுப்பினர்கள் அதில் பங்கெடுப்பதைத் தடை செய்தது. ஆனால் சாதாரணத் தொழிலாளர்கள் இத்தடையை மீறி வேலைநிறுத்தத்தில் பங்கெடுத்தார்கள். பின்னர் இக்கழகத்தின் செல்வாக்கு குறைந்து 1890க்களின் கடைசியில் சிதறிச் சீர்குலைந்தது.—281.

## பெயர்க் குறிப்பகராதி


அப்பியன் *(1ஆம் நூற்றாண்டின் கடைசி—2ஆம் நூற்றாண்டின் எழுபதுக்கள்)—பண்டைக் கிரேக்க வரலாற்றாசிரியர்.—270.*

அரிஸ்டாட்டில் *(384—322 கி.மு.)—பண்டைக் காலத்திய மாபெரும் சிந்தனையாளர்; அவருடைய தத்துவஞானம் பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல்வாதத்துக்கும் இடையே ஊசலாடுகிறது.—74.*

அலெக்சாந்தர் இரண்டாவது *(1818—1881)—ருஷ்யாவின் பேரரசர் (1855—1881)—142.*

அல்பிரேஹ்ட் [Albrecht], கார்ல் *(1788—1844)—ஜெர்மன் வர்த்தகர்; வைட்லிங்கின் கற்பனாவாத கம்யூனிசத்தை ஒத்த கருத்துக்களைப் போதித்தார்; அக்கருத்துக்களை சமய-மாயாவாத வடிவத்தில் வழங்கினார்.—180.*

அனக்சகோரஸ் [Anaxagoras], *கிளாஸொமென்வாசி (சுமார் 500—428 கி.மு.)—பண்டைக் கிரேக்கப் பொருள்முதல்வாதத் தத்துவவியலாளர்.—13, 52.*

ஆர்க்ரைட் [Arkwright], ரீச்சார்ட் *(1732—1792)—பிரிட்டிஷ் தொழிலதிபர்.—37.*

இம் துர்ன் [im Thurn], எவிரார்டு ஃபெர்டினாண்டு *(1852—1932)—பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரி, மனித இயல் ஆராய்ச்சியாளர், சுற்றுப்பிரயாணங்கள் செய்தவர்.—219.*

எக்காரியுஸ் [Eccarius], யோஹன் கியோர்கு *(1818—1889)—ஜெர்மன் தையற்காரர், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கியமான பிரமுகர், நியாயவாதிகள் கழகத்தின் உறுப்பினர், பின்னர் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், முதலாவது அகிலத்தின் பொதுக் குழுவின் உறுப்பினர்.—181.*

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)—181, 182, 186, 192, 194. 250.*

எர்ஹார்ட் [Erhardt], யோஹன் லூத்விக் *(பிறப்பு: சுமார் 1820)—ஜெர்மன் வர்த்தக ஊழியர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.—196.*

எவெர்பெக் [Ewerbeck], ஒளகுஸ்ட் ஹெர்மன் *(1816—1860)—ஜெர்மன் மருத்துவர் மற்றும் எழுத்தாளர், நியாயவாதிகள் கழகத்தின் பாரிஸ் கிளைகளின் தலைவர், பின்னர் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1850க்குப் பிறகு சங்கத்திலிருந்து விலகி விட்டார்.—179, 195.*

ஏல்ஸெனர் [Elsner], கார்ல் பிரெடெரிக் மோரிட்ஸ் *(1809—1894)—1848இல் பிரஷ்யாவின் தேசிய அசெம்பிளியின் உறுப்பினர், அதன் இடதுசாரியைச் சேர்ந்தவர்.—158.*

ஓட்டோ [Otto], கார்ல் *(பிறப்பு: சுமார் 1809)—ஜெர்மன் இரசாயன நிபுணர், 1848—1849ல் கொலோன் தொழிலாளர் கழகம் மற்றும் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின் போது குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.—196.*

ஓவன் [Owen], ராபர்ட் *(1771—1858)—பிரிட்டிஷ் கற்பனாவாத சோஷலிஸ்ட்.—17, 55, 58, 67,68, 69.*

ஃபாயர்பாக் [Feuerbach], லூத்விக் *(1804—1872)—ஜெர்மன் பொருள்முதல்வாதத் தத்துவஞானி. —200, 202, 204, 217, 218, 222, 224, 226, 231, 232, 235, 237, 238, 239, 240, 243, 244, 246, 248.*

ஃபிலொக்கோன் [Flocon], ஃபெர்டினாண்டு *(1800—1866)—பிரெஞ்சு அரசியல்வாதி, கட்டுரையாளர், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, 1848இல் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர்.—188.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)—பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்ட்.—55, 58, 64, 65, 102, 107.*

ஃபோக்ட் [Vogt], கார்ல் *(1817—1895)—ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி, கொச்சையான பொருள்முதல்வாதி, குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி; ஜெர்மனியில் 1848—1849இன் புரட்சியில் பங்கெடுத்தவர்; 1850க்கள்—1860க்களில் நாடு துறந்தவராக இருந்த பொழுது லுயீ போனப்பார்ட்டின் இரகசியக் கைக்கூலியாக இருந்தவர்.—226.*

ஃபோர்ஸ்டர் [Forster], வில்லியம் எடுவார்டு *(1818—1886)—பிரிட்டிஷ் தொழிற்சாலை முதலாளி மற்றும் அரசியல்வாதி, மிதவாதக் கட்சியினர், நாடாளுமன்றத்தின் உறுப்பினர்.—41, 43.*

கவலேவ்ஸ்கி, மக்சீம் மக்சீமவிச் *(1851—1916)—ருஷ்ய விஞ்ஞானி, அரசியல்வாதி, பூர்விக சமூகத்தின் அமைப்பின் வரலாற்றைப் பற்றிய புத்தகங்களின் ஆசிரியர்.—10.*

காப்டேன் [Cobden], ரீச்சார்ட் *(1804—1865)—ஆங்கில ஆலை முதலாளி, அரசியல்வாதி, தானியச் சட்ட எதிர்ப்புக் கட்சியை நிறுவியோரில் ஒருவர், நாடாளுமன்றத்தின் பிரதிநிதி.—43.*

காப்பேர்னிக்கஸ் [Kopernik], நிக்கலாய் *(1473—1543)—போலிஷ் வானியல் விஞ்ஞானி, பிரபஞ்சத்தின் சூரிய மையத் தத்துவத்தின் ஸ்தாபகர்.—223.*

கார்ட்ரைட் [Cartwright], ஏட்முண்ட் *(1743—1823)—பிரிட்டிஷ் கண்டுபிடிப்பாளர்.—37.*

கார்லைல் [Carlyle], தாமஸ் *(1795—1881)—ஆங்கில எழுத்தாளர், வரலாற்றியலாளர், கருத்துமுதல்வாதத் தத்துவவியலாளர்.—57.*

காலின்ஸ் [Collins], ஆன்டனி *(1676—1729)—பிரிட்டிஷ் பொருள்முதல்வாதத் தத்துவஞானி.—16.*

கால்லே [Galle], யோஹன் கோத்ஃபிரிட் *(1812—1910)—ஜெர்மன் வானியல் விஞ்ஞானி, 1846இல் லெவெரியேயின் கணக்குகளின் அடிப்படையில் நெப்டியூன் கிரகத்தைக் கண்டுபிடித்தவர்.—223.*

கால்வின் [Calvin], ழான் *(1509—1564)—மதச்சீர்திருத்தப் போக்கின் தலைவர்களில் ஒருவர், புரோட்டஸ்டென்டிசத்தின் ஒரு பிரிவாகிய கால்வினிசத்தின் ஸ்தாபகர், அது மூலதனத்தின் ஆதித்திரட்சிச் சகாப்தத்தில் முதலாளி வர்க்கத்தின் நலன்களை வெளியிட்டது.—28, 275.*

காண்ட் [Kant], இம்மனுயேல் *(1724—1804)*—ஜெர்மன் மூலச் சிறப்பான தத்துவஞான மரபின் ஸ்தாபகர், கருத்து முதல்வாதி.—*22, 66, 207, 222, 224, 232, 247.*

கிங்கெல் [Kinkel], கோத்ஃபிரிட் *(1815—1882)*—ஜெர்மன் கவிஞர் மற்றும் கட்டுரையாளர், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, *1849*இல் பாடேன்-ப்ஃபால்ட்ஸ் புரட்சிகர எழுச்சியில் பங்கெடுத்தவர், பிற்காலத்தில் நாடுபெயர்ந்து லண்டனில் குடியேறிய குட்டி முதலாளி வர்க்க அகதிகளின் தலைவர்களில் ஒருவர், மார்க்சையும் எங்கெல்சையும் எதிர்த்துப் போராடினார்.—*194.*

கிஸோ [Guizot], பிரான்சுவா பியேர் கிய்யோம் *(1787—1874)*—பிரெஞ்சு வரலாற்றாசிரியர், அரசியல் பிரமுகர், *1840* முதல் *1848* வரை பிரெஞ்சு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கையை உண்மையில் இயக்கியவர்.—*264.*

கிரிகெ [Kriege], ஹெர்மன் *(1820—1850)*—ஜெர்மன் பத்திரிகையாளர், ''மெய்யான சோஷலிசத்தின்'' ஆதரவாளர், *1840*க்களின் கடைசியில் நியூயார்க்கில் ஜெர்மன் ''மெய்யான சோஷலிஸ்டுகளின்'' குழுவுக்குத் தலைமை தாங்கினார்.—*179—180.*

கிளின் [Klein], யோஹன் யாக்கப் *(1817—1896)*—ஜெர்மன் மருத்துவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், *1852*இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.—*196.*

குரூன் [Grün], கார்ல் *(1817—1887)*—ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்கக் கட்டுரையாளர், *1840*க்களின் நடுப் பகுதியில் ''மெய்யான சோஷலிசத்தின்'' முக்கியமான பிரதிநிதிகளில் ஒருவர்.—*218.*

குரோம்வெல் [Cromwell], ஓலிவெர் *(1599—1658)*—*17*ஆம் நூற்றாண்டு ஆங்கில முதலாளித்துவப் புரட்சியின் போது முதலாளி வர்க்கம் மற்றும் முதலாளித்துவமயமாகிய பிரபுக்குலத்தோரின் தலைவர்; *1653* முதல் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் காப்பாளர் (Lord Protector) ஆனார்.—*29.*

கூல்மன் [Kuhlmann], கியோர்கு —ஆஸ்திரிய அரசாங்கத்தின் இரகசிய கைக்கூலி, ''தீர்க்கதரிசி'' என்று தன்னைச் சொல்லிக் கொண்டவர், *1840*க்களில் ஸ்விட்சர்லாந்

*தில் வைட்லிங்கைப் பின்பற்றிய ஜெர்மன் கைவினைஞர்கள் மத்தியில் சமயச் சொற்றொடர்களை உபயோகித்து ''மெய்யான சோஷலிசத்தைப்'' போதித்தார்.—180.*

**கெல்லி-விஷ்னெவேட்ஸ்கயா** [Kelley-Wischnewetzky], **ஃபிலொரென்ஸ்** *(1859 — 1932) — அமெரிக்க மொழிபெயர்ப்பாளர், ஆரம்பத்தில் சோஷலிசத்தை ஆதரித்தார், பிற்காலத்தில் முதலாளித்துவச் சீர்திருத்தவாதக் கருத்துக்களை மேற்கொண்டார்.—280.*

**கேதே** [Goethe], **யோஹன் போல்ஃப்கான்க்** *(1749—1832)—ஜெர்மன் கவிஞர், சிந்தனையாளர்.—20, 90, 207, 211, 229.*

**கொவர்டு** [Coward], **வில்லியம்** *(சுமார் 1656—1725)—ஆங்கில மருத்துவர், பொருள்முதல்வாதத் தத்துவவியலாளர்.—16.*

**கோக்** [Gögg], **அமான்ட்** *(1820—1897)—ஜெர்மன் பத்திரிகையாளர், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, 1849இல் பாடேன் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர், ஜெர்மனியில் புரட்சி தோல்வியடைந்த பிறகு வெளிநாட்டுக்குச் சென்றார், பிறகு சமூக-ஜனநாயகவாதி.—194.*

**கோஷூட்** [Kossuth], **லயோஷ் (லூத்விக்)** *(1802—1894)—ஹங்கேரிய தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர், 1848—1849 புரட்சியில் முதலாளித்துவ-ஜனநாயகச் சக்திகளுக்குத் தலைமை தாங்கினார், ஹங்கேரியப் புரட்சிகர அரசாங்கத்துக்குத் தலைமை வகித்தார், புரட்சி முறியடிக்கப்பட்ட பிறகு வெளிநாட்டுக்குச் சென்றார்.—194.*

**கோப்** [Kopp], **ஹெர்மன்** *(1817—1892)—ஜெர்மன் இரசாயன விஞ்ஞானி.—238.*

**சாங்கி** [Sankey], **ஐரா டேவிட்** *(1840—1908)—அமெரிக்கப் புரோட்டஸ்டென்டு சமயப் பிரசாரகர்.—40.*

**சார்லஸ் முதலாவது** *(1600—1649)—இங்கிலாந்தின் அரசர் (1625—1649), பதினேழாம் நூற்றாண்டு ஆங்கில முதலாளித்துவப் புரட்சியின் போது சிரச்சேதம் செய்யப்பட்டார்.—29.*

சான்-சிமோன் [Saint-Simon], அன்ரி *(1760—1825)—பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்ட்.—55, 58, 60, 61, 64, 82.*

சீஸர், கேயஸ் யூலியஸ் *(சுமார் 100—44 கி.மு.)—ரோமானியத் தளபதி, அரசுப் பிரமுகர்.—132.*

ஜார்ஜ் [George], ஹென்ரி *(1839—1897)—அமெரிக்கக் கட்டுரையாளர் மற்றும் பொருளியலாளர், முதலாளித்துவத்தின் கீழ் எல்லா சமூக முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கு நிலத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர், அமெரிக்கத் தொழிலாளர் இயக்கத்தை முதலாளித்துவச் சீர்திருத்தவாதப் பாதையில் செலுத்துவதற்கு முயன்றவர்.—280, 283.*

ஷாஃப்ட்ஸ்பரி [Shaftesbury], ஆன்டனி, *கவுன்ட் (1671—1713)—ஆங்கிலத் தத்துவஞானி-ஒழுக்க நெறியாளர், ஆதிமூல இறைமைவாதி, அரசியல்வாதி, விக் கட்சியில் சேர்ந்தவர்.—33.*

ஷாப்பர் [Schapper], கார்ல் *(1812—1870)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர், நியாயவாதிகள் கழகத்தின் தலைவர்களில் ஒருவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர், ஜெர்மனியில் 1848—1849இல் நடைபெற்ற புரட்சியில் பங்கெடுத்தார், 1850இல் கம்யூனிஸ்டுகள் சங்கத்தில் பிளவு ஏற்பட்ட பொழுது குறுங்குழுவாத-துர்ச்சாகசக் கோஷ்டியின் தலைவர்களில் ஒருவர், 1856இல் மறுபடியும் மார்க்சுடன் சேர்ந்தார், முதலாவது அகிலத்தின் பொதுக் குழுவின் உறுப்பினர்.—168, —169, 178, 186, 191, 194, 195.*

ஷீல்லர் [Schiller], பிரெடெரிக் *(1759—1805)—ஜெர்மன் எழுத்தாளர்.—233.*

ஷுர்ட்ஸ் [Schurz], கார்ல் *(1829—1906)—ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, 1849இல் பாடேன்-ப்ஃபால்ட்ஸ் புரட்சிகர எழுச்சியில் பங்கெடுத்தார், பிறகு நாட்டைத் துறந்து ஸ்விட்சர்லாந்தில் குடியேறினார், பிற்காலத்தில் அமெரிக்காவில் ராஜியவாதியானார்.—193.*

ஷூல்ட்ஸெ-டெலிட்ச் [Schulze-Delitzsch], ஹெர்மன் *(1808—1883)—ஜெர்மன் அரசியல்வாதி, பொருளியலாளர், 1848இல் பிரஷ்ய தேசிய அசெம்பிளியின் உறுப்பினர்,*

*1860க்களில் முற்போக்குவாதிகளின் கட்சியின் தலைவர்களில் ஒருவர், கூட்டுறவு சங்கங்களை அமைப்பதன் மூலம் தொழிலாளர்களைப் புரட்சிகரப் போராட்டத்திலிருந்து திருப்பி வைக்க முயன்றார்.—158.*

ஷ்டார்க்கே [Starcke], கார்ல் நிக்கலாய் *(1858—1926)—டேனிஷ் தத்துவஞானி மற்றும் சமூகவியலாளர்.—202, 224, 232, 234, 242, 244.*

ஷ்டிராவுஸ் [Strauß], டேவிட் பிரெடெரிக் *(1808—1874)—ஜெர்மன் தத்துவஞானி, கட்டுரையாளர், இளம் ஹெகலியவாத இயக்கத்தைச் சேர்ந்தவர், 1866க்குப் பிறகு தேசிய-மிதவாதி.—215, 218, 249.*

ஷ்டிர்னர் [Stirner], மாக்ஸ் (கஸ்பார் ஷ்மிட்டின் இலக்கியப் *புனைபெயர்) (1806—1856)—ஜெர்மன் தத்துவஞானி, இளம் ஹெகலியவாத இயக்கத்தைச் சேர்ந்தவர், முதலாளித்துவத் தனிமனிதவாதம் மற்றும் அராஜகவாதத்தின் சித்தாந்திகளில் ஒருவர்.—216, 249.*

ஷ்டீபெர் [Stieber], வில்ஹெல்ம் *(1818—1882)—பிரஷ்யாவின் அரசியல் போலீஸ் துறையின் தலைவர் (1850—1860), 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கைத் தயாரித்தவர்களில் ஒருவர், அதில் முக்கியமான சாட்சி.—166, 183.*

ஷ்டைன் [Stein], யூலியஸ் *(1813—1889)—ஜெர்மன் ஆசிரியர், கட்டுரையாளர், 1848இல் பிரஷ்யாவின் தேசிய அசெம்பிளியில் இடதுசாரி அணியின் பிரதிநிதி.—158.*

ஷ்லோஃபெல் [Schlöffel], குஸ்தவ் அடோல்ப் *(1828—1849)—ஜெர்மன் மாணவர், பத்திரிகையாளர், புரட்சிக்காரர், ஜெர்மனியிலும் ஹங்கேரியாவிலும் 1848—1849 புரட்சிகளின் போது தீவிரமாகப் பங்கெடுத்தவர், சண்டையில் மரணமடைந்தார்.—155.*

ஸசூலிச், வேரா இவானவ்னா *(1851 — 1919) — ருஷ்யப் புரட்சிப் பெண், நரோதியவாத இயக்கத்திலும் பிற்காலத்தில் சமூக-ஜனநாயக இயக்கத்திலும் முக்கியப் பிரமுகர்.—127.*

ஸிக்கின்கென் [Sickingen], பிரான்ஸ் வான் *(1481—1523)—ஜெர்மன் மதச்சீர்திருத்தப் போக்கில் கலந்து கொண்ட வீரப்பெருந்தகை, 1522—1523இல் நடைபெற்ற வீரப் பெருந்தகையினருடைய எழுச்சியின் தலைவர்.—27.*

ஸ்டுவர்ட்டுகள்—*1371விருந்து ஸ்காட்லாந்திலும், 1603—1649லும் 1660—1714லும் இங்கிலாந்திலும் ஆட்சி புரிந்த அரசவம்சத்தினர்.—33.*

ஸ்பினோஸா [Spinoza], பாருஹ் (பெனெடிக்ட்) *(1632—1677)—ஹாலந்தின் பொருள்முதல்வாதச் சிந்தனையாளர், நாத்திகவாதி.—74.*

ஹவுப்ட் [Haupt], ஹெர்மன் வில்ஹெல்ம் *(பிறப்பு: சுமார் 1831)—ஜெர்மன் வர்த்தக அலுவலர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கு விசாரணையின் போது போலீசுக்குச் சாதகமாக சாட்சியமளித்தார், விசாரணை முடிவதற்கு முன்னரே போலீசால் விடுதலை செய்யப்பட்டு பிரேசிலுக்கு ஓடிப் போனார்.—195.*

ஹாப்ஸ் [Hobbes], தாமஸ் *(1588—1679)—ஆங்கில தத்துவவியலாளர், இயந்திரவியல் பொருள்முதல்வாதி.—14, 15, 33, 224.*

ஹாப்ஸ்பர்க்குகள்—*1273 முதல் 1806 வரை—சில இடைநிறுத்தங்களுடன்—ஆட்சி செய்த, புனித ரோமானியப் பேரரசு என்று சொல்லப்பட்ட பேரரசின் சக்கரவர்த்தி மரபு, ஆஸ்திரியாவின் சக்கரவர்த்தி மரபு(1804 முதல்), ஆஸ்திரிய-ஹங்கேரியாவின் சக்கரவர்த்தி மரபு (1867—1918).—162.*

ஹாரிங் [Harring], ஹாரோ *(1798—1870)—ஜெர்மன் எழுத்தாளர், குட்டி முதலாளி வர்க்கத் தீவிரவாதி, 1828 முதல் நாட்டிலிருந்து வெளியேறிய அகதி.—179.*

ஹார்ட்லி [Hartley], டேவிட் *(1705—1757)—பிரிட்டிஷ் மருத்துவர், பொருள்முதல்வாதத் தத்துவஞானி. —16.*

ஹார்னி [Harney], ஜார்ஜ் ஜூலியன் *(1817—1897)—இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகர், சார்ட்டிஸ்டுகளின் இடதுசாரி அணியின் தலைவர்களில் ஒருவர், மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுடன் தொடர்புடையவர்.—178.*

ஹியூம் [Hume], டேவிட் *(1711—1776)—ஆங்கிலத் தத்துவஞானி, அகநிலைக் கருத்துமுதல்வாதி, அறியொணாவாதி, வரலாற்றாசிரியர் மற்றும் பொருளியலாளர்.—222.*

ஹெகல் [Hegel], கியோர்கு வில்ஹெல்ம் பிரெடெரிக் *(1770—1831)—மூலச்சிறப்புடைய ஜெர்மன் தத்துவஞானத்தின் மிகப்பெரும் பிரதிநிதி, புறவயவாதக் கருத்துமுதல் வாதி.—22, 52, 66, 74, 81, 82, 83, 84, 200, 201, 205, 206, 207, 208, 209, 214, 215-218, 219, 233, 240, 249, 253, 254, 258, 262, 266, 271.*

ஹெரக்லீடஸ் *(சுமார் 540—சுமார் 480 கி.மு.)—பழங்கால கிரேக்கத் தத்துவவியலாளர், இயக்கவியலின் மூலவர்களில் ஒருவர், தன்னியல்பான வழியில் பொருள்முதல் வாதியாக இருந்தவர்.—75.*

ஹெர்வெக் [Herwegh], கியோர்கு *(1817—1875)—ஜெர்மன் கவிஞர், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி.—187.*

ஹென்ரி ஏழாவது *(1457—1509)—பிரிட்டிஷ் அரசர் (1485—1509).—31.*

ஹென்ரி எட்டாவது *(1491—1547)—பிரிட்டிஷ் அரசர் (1509—1547).—30.*

ஹேய்னெ [Heine], ஹென்ரிஹ் *(1797—1856)—ஜெர்மன் கவிஞர்.—205.*

ஹோஹென்ஸோலர்ன்கள்*—பிரான்டென்பர்க் குர்புர்ஸ்துகள் (1415—1701), பிரஷ்யாவின் அரசர்கள் (1701—1918) மற்றும் ஜெர்மன் சக்கரவர்த்திகளின் (1871—1918) மரபு.—162.*

டன்ஸ் ஸ்காட்டஸ் [Duns Scotus], யோஹன் *(சுமார் 1265—1308)—மத்தியகாலத் தத்துவஞானி, சமய சித்தாந்தி, மத்தியகாலத்தில் பொருள்முதல்வாதத்தின் முதலாவது வெளியீடாக அமைந்த பெயர்ப் போலிமைவாதத்தின் ஆதரவாளர்.—13.*

டாசிட்டஸ், பப்ளியஸ் கர்னீலியஸ் *(சுமார் 55—சுமார் 120)—ரோமானிய வரலாற்றாசிரியர்.—132.*

டாட்வெல் [Dodwell], ஹென்ரி *(மரணம்: 1784)—பிரிட்டிஷ் பொருள்முதல்வாதத் தத்துவஞானி.—16.*

டார்வின் [Darwin], சார்ல்ஸ் ராபர்ட் *(1809—1882)—இங்கிலாந்தைச் சேர்ந்த மாபெரும் இயற்கை விஞ்ஞானி, பரிணாம வளர்ச்சி என்னும் விஞ்ஞானத் தத்துவத்தை நிறுவியவர்.—9, 80, 102, 145, 230, 256.*

டிஸ்ரேலி [Disraeli], பென்ஜமென், பெக்கன்ஸ்பீல்டு பிரபு *(1804—1881)—ஆங்கில அரசுப் பிரமுகர், எழுத்தாளர், டோரி, கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர், இங்கிலாந்தின் பிரதமர் (1868 மற்றும் 1874—1880).—44.*

டிட்ரோ [Diderot], டெனி *(1713—1784)—பிரான்சின் தத்துவஞானி, இயந்திரவியல் பொருள்முதல்வாதி, நாத்திகர், பிரெஞ்சு புரட்சிகர முதலாளி வர்க்கத்தின் சித்தாந்திகளில் ஒருவர், கலைக்களஞ்சியத்தார்களில் முக்கியமானவர்.—75, 234.*

டீத்ஸ்கென் [Dietzgen], இயோசிஃப் *(1828—1888)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, தானாகவே படித்த தத்துவஞானி, சுயேச்சையான முறையில் இயக்கவியல் பொருள்முதல்வாதக் கோட்பாடுகளைக் கண்டவர், தோல் பதனிடும் தொழிலாளி.—253.*

டூரிங் [Dühring], ஒய்கேன் *(1833—1921)—ஜெர்மன் கதம்பவாதத் தத்துவஞானி மற்றும் கொச்சையான பொருளியலாளர், பிற்போக்குத்தனமான குட்டி முதலாளி வர்க்க சோஷலிசத்தின் பிரதிநிதி; கருத்துமுதல்வாதம், கொச்சையான பொருள்முதல்வாதம், நேர்க்காட்சிவாதம் ஆகியவற்றைக் கலந்து உபயோகித்த இயக்க மறுப்பியல் தத்துவஞானி.—7, 8.*

டெக்கார்ட் [Descartes], ரெனே *(1596—1650)—பிரெஞ்சு இருமைவாதத் தத்துவஞானி, கணித அறிஞர் மற்றும் இயற்கை விஞ்ஞானி.—74, 224, 227.*

டெப்ரே [Deprez], மார்செல் *(1843—1918)—பிரெஞ்சு பௌதிக விஞ்ஞானி, மின்சார எஞ்சினீயர், நெடுந்தொலைவுகளுக்கு மின்சக்தியை அனுப்புகின்ற பிரச்சினையைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்தவர்.—147.*

டெமாக்கிரீடஸ் *(சுமார் 460—சுமார் 370 கி.மு.)—பண்டைக் கால கிரேக்க நாட்டின் பொருள்முதல்வாதத் தத்துவஞானி, அணுத் தத்துவத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—13.*

டேனியல்ஸ் [Daniels], ரோலன்ட் *(1819-1855)—ஜெர்மன் மருத்துவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1852ல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.—196.*

தியேரீ [Thierry], ஒகுஸ்டேன் *(1795—1856)*—*பிரெஞ்சு வரலாற்றாசிரியர்.—264.*

தியேர் [Thiers], அடோல்ப் *(1797—1877)*—*பிரெஞ்சு முதலாளி வர்க்க வரலாற்றாசிரியர், அரசுப் பிரமுகர், ஆர்லியான்வாதி, அமைச்சரவையின் தலைவர் (1871), குடியரசின் தலைவர் (1871—1873), பாரிஸ் கம்யூன் கொலையாளி.—264.*

நியூட்டன் [Neuton], ஐசக் *(1642—1727)*—*இங்கிலாந்தின் மாபெரும் பௌதிக விஞ்ஞானி, வானியல் மற்றும் கணித விஞ்ஞானி, மூலச்சிறப்பான இயந்திரவியலை நிறுவியவர்.—81, 84.*

நெப்போலியன் முதலாவது (போனப்பார்ட்) *(1769—1821)*—*பிரெஞ்சுப் பேரரசர் (1804—1814 மற்றும் 1815).—19, 57, 61, 70, 111, 154, 236.*

நெப்போலியன் மூன்றாவது (லுயீ-நெப்போலியன் போனப்பார்ட்) *(1808—1873)*—*முதலாவது நெப்போலியனின் மருமகன், இரண்டாவது குடியரசின் ஜனாதிபதி (1848—1851), பிரெஞ்சுப் பேரரசர் (1852—1870).—39.*

நோட்யுங் [Nothjung], பீட்டர் *(1821—1866)*—*ஜெர்மன் தையற்காரர், கொலோன் தொழிலாளர் கழகம் மற்றும் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின் போது குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.—195, 196.*

பக்கூனின், மிஹயீல் அலெக்சாந்திரவிச் *(1814—1876)*—*ருஷ்யப் புரட்சி வீரர், கட்டுரையாளர், ஜெர்மனியில் 1848—1849ம் ஆண்டுகளில் நடைபெற்ற புரட்சியில் பங்கேற்றவர், அராஜகவாதச் சித்தாந்தவாதிகளில் ஒருவர், முதலாவது அகிலத்தில் மார்க்சிய விரோதியாகச் செயல்பட்டார், பிளவு நடவடிக்கைக்காக 1872ஆம் ஆண்டு ஹேக் காங்கிரசில் முதலாவது அகிலத்திலிருந்து நீக்கப்பட்டார்.—216, 249.*

பக்லண்ட் [Buckland], வில்லியம் *(1784—1856)*—*ஆங்கில பூகர்ப்பவியலாளர், பாதிரியார், பூகர்ப்பவியலின் விஞ்ஞான முடிவுகளை ''விவிலியக்'' கதைகளுக்கு ஒத்திசைவாகச் செய்ய முயன்றவர்.—17.*

பவுடர்லி [Powderly], டெரென்ஸ் வின்சென்ட் *(1849—1924)*—*1870—1890க்களில் அமெரிக்கத் தொழிலாளர் இயக்*

*கத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர், ‘‘உழைப்பு வீரப்பெருந்தகையினர் கழகத்தின்’’ தலைவர், பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்துக்கு எதிராகவும் முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைப்புக்கு ஆதரவாகவும் பேசினார்.—281.*

பாபெஃப் [Babeuf], கிராக்கஸ் *(உண்மைப் பெயர் பிரான்சுவா நோயேல்) (1760—1797)—பிரெஞ்சுப் புரட்சிக்காரர், கற்பனாவாத சமனவாதக் கம்யூனிசத்தின் பிரதிநிதி.—54.*

பாயீ [Bailly], ழான் சில்வேன் *(1736—1793)—18ஆம் நூற்றாண்டின் கடைசியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் பிரமுகர், மிதவாத அரசியலமைப்புச் சட்ட முதலாளி வர்க்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—160.*

பார்பேஸ் [Barbès], அர்மான் *(1809—1870)—பிரெஞ்சுப் புரட்சிக்காரர், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, 1848இன் புரட்சியின் முக்கியமான பிரமுகர், 1848 மே 15 சம்பவங்களில் பங்கெடுத்ததற்காக ஆயுள் தண்டனை பெற்றவர், 1854இல் மன்னிப்பளிக்கப்பட்டார்.—168.*

பிஸ்மார்க் [Bismarck], ஓட்டோ *(1815—1898)—பிரஷ்ய மற்றும் ஜெர்மன் ராஜதந்திரி, அரசுப் பிரமுகர், பிரஷ்ய ஜங்கர்களின் பிரதிநிதி, பிரஷ்யாவின் மந்திரி-ஜனாதிபதி (1862—1871), ஜெர்மன் பேரரசின் சான்சலர் (1871—1890).—111, 198.*

பியூஹ்னர் [Büchner], கியோர்கு *(1813—1837)—ஜெர்மன் எழுத்தாளர், புரட்சிகர ஜனநாயகவாதி, ‘‘மனிதர்கள் உரிமைக் கழகம்’’ என்னும் இரகசிய புரட்சிகர அமைப்பை (1834) கிஸெனில் அமைத்தவர்களில் ஒருவர்.—168.*

பியூஹ்னர் [Büchner], லூத்விக் *(1824—1899)—ஜெர்மன் உடலியல் நிபுணர், விஞ்ஞானி, கொச்சையான பொருள் முதல்வாதத் தத்துவஞானி.—226.*

பியூர்கெர்ஸ் [Bürgers], ஹென்ரிஹ் *(1820—1878)—ஜெர்மன் தீவிரவாதக் கட்டுரையாளர், Neue Rheinische Zeitung என்னும் இதழின் ஆசிரியர்களில் ஒருவர், 1850 முதல் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில்*

நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒரு வர்; பிற்காலத்தில் முற்போக்குவாதி.—*154, 196,*

**பியோர்ன்ஷ்டைன்** [Börnstein], **அர்னோல்டு** *(1808—1849)*—ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, பாரிசில் அமைக்கப்பட்ட ஜெர்மன் தொண்டர் படையின் தலைவர்களில் ஒருவர், அப்படை 1848 ஏப்ரலில் பாடேன் புரட்சிகர எழுச்சியில் பங்கெடுத்தது.—*187.*

**பிரிஸ்ட்லி** [Priestley], **ஜோசப்** *(1733—1804)*—ஆங்கில இரசாயன விஞ்ஞானி, பொருள்முதல்வாதத் தத்துவஞானி, முற்போக்கான சமூக ஊழியர்.—*16.*

**பிரிலிகிராத்** [Freiligrath], **ஃபெர்டினாண்டு** *(1810—1876)*—ஜெர்மன் புரட்சிகரக் கவிஞர், 1848—1849இல் *Neue Rheinische Zeitung* இதழின் ஆசிரியர்களில் ஒருவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1850க்களில் புரட்சிகரப் போராட்டத்திலிருந்து விலகினார். —*196.*

**பிரெடெரிக்-வில்ஹெல்ம் மூன்றாவது** *(1770—1840)*—பிரஷ்ய அரசர் *(1797—1840).*—*112, 205, 211.*

**பிரெடெரிக்-வில்ஹெல்ம் நான்காவது** *(1795—1861)*—பிரஷ்ய அரசர் *(1840—1861).*—*215.*

**பிரென்டானோ** [Brentano], **லூயோ** *(1844—1931)*—ஜெர்மன் கொச்சையான முதலாளி வர்க்கப் பொருளியலாளர், கத்தேடெர்-சோஷலிசத்தின் முக்கியமான பிரதிநிதிகளில் ஒருவர்.—*48.*

**பிரைட்** [Bright], **ஜான்** *(1811—1889)*—இங்கிலாந்தைச் சேர்ந்த தொழில் ஆலை முதலாளி, தானியச் சட்ட எதிர்ப்புக் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர், 1860க்களின் கடைசியிலிருந்து மிதவாதக் கட்சியின் தலைவர்களில் ஒருவர், சில மிதவாத அமைச்சரவைகளில் அமைச்சராக இருந்தவர்.—*43.*

**பிளான்** [Blanc], **லூயி** *(1811—1882)*—பிரெஞ்சுக் குட்டி முதலாளி வர்க்க சோஷலிஸ்ட், வரலாற்றாசிரியர், 1848இல் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர், 1848 ஆகஸ்டுக்குப் பிறகு லண்டனில் குடியேற்றியிருந்த குட்டி முதலாளி வர்க்க அகதிகளின் தலைவர்களில் ஒருவர். —*190, 194, 237.*

பிளான்கி [Blanqui], லூயி ஒகுஸ்ட் *(1805—1881)*—*பிரெஞ்சுப் புரட்சிக்காரர், கற்பனாவாதக் கம்யூனிஸ்ட், பிரான்சில் 1848 புரட்சியின் போது ஜனநாயக மற்றும் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அதிதீவிர இடது அணியைச் சேர்ந்தவர், பன்முறை சிறைத் தண்டனை பெற்றவர்.—168.*

புஷார் [Bougeart], அல்பிரேட் *(1815—1882)*—*பிரெஞ்சுக் கட்டுரையாளர், 18ஆம் நூற்றாண்டின் கடைசியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் வரலாற்றைப் பற்றிப் புத்தகங்களை எழுதியவர்.—160.*

புருதோன் [Proudhon], பியேர் ஜோசப் *(1809—1865)*—*பிரெஞ்சுக் கட்டுரையாளர், பொருளியலாளர், சமூகவியலாளர், குட்டி முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தி, அராஜகவாதத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—189, 249.*

பூர்போன்கள் — *பிரான்சின் அரச மரபு (1589—1792, 1814—1815 மற்றும் 1815—1830).—264.*

பெக்கெர் [Becker], ஔகுஸ்ட் *(1814—1871)*—*ஜெர்மன் கட்டுரையாளர், ஸ்விட்சர்லாந்தில் நியாயவாதிகள் கழகத்தின் உறுப்பினர், வைட்லிங்கின் ஆதரவாளர், ஜெர்மனியில் 1848—1849இல் நடைபெற்ற புரட்சியில் பங்கெடுத்தார், 1850க்களின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் குடியேறி அங்கே ஜனநாயகப் பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதினார்.—171.*

பெக்கெர் [Becker], ஹெர்மன் ஹென்ரிஹ் *(1820—1885)*—*ஜெர்மன் வழக்குரைஞர் மற்றும் கட்டுரையாளர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர், பின்னர் தேசிய-மிதவாதி.—196.*

பெயில் [Bayle], பியேர் *(1647—1706)*—*பிரெஞ்சு சந்தேகவாதத் தத்துவஞானி.—276.*

பெரென்டஸ் [Berends], யூலியஸ் *(பிறப்பு: 1817)*—*பெர்லினில் அச்சகத்தின் உடைமையாளர், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, 1848இல் பிரஷ்ய தேசிய அசெம்பிளியின் இடதுசாரி உறுப்பினர்.—158.*

பெர்த்லோ ]Berthelot], பியேர் *(1827—1907)*—*பிரெஞ்சு இர*

சாயன விஞ்ஞானி, முதலாளி வர்க்க அரசியல்வாதி. —238.

பேக் [Beck], அலெக்சாந்தர்—ஜெர்மன் தையற்காரர், நியாயவாதிகள் கழகத்தின் உறுப்பினர், இக்கழகத்துடன் தொடர்புகளுக்காக 1846 கடைசியில் கைது செய்யப்பட்டவர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் சாட்சியாக இருந்தவர்.—172.

பேக்கன் [Bacon], பிரென்சிஸ், வெருலம் பிரபு (1561—1626)—இங்கிலாந்தின் தத்துவஞானி, ஆங்கில பொருள்முதல் வாதத்தை நிறுவியவர்.—13, 14, 15, 77.

பொமே [Böhme], யாக்கப் (1575—1624)—ஜெர்மன் கைவினைஞர், மாயாவாதத் தத்துவவியலாளர்.—13, 14.

பொலிங்பிராக் [Bolingbroke], ஹென்ரி (1678—1751)—ஆங்கில ஆதிமூல இறைமைத் தத்துவவியலாளர், அரசியல்வாதி, டோரிக் கட்சித் தலைவர்களில் ஒருவர்.—33.

போர்ன் [Born], ஸ்டீபன் (உண்மைப் பெயர் சிமோன் பட்டர்மில்ஹ்) (1824—1898)—ஜெர்மன் தொழிலாளி, கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், ஜெர்மனியில் 1848—1849இன் புரட்சியின் போது ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் சீர்திருத்தவாதத்தின் முதல் பிரதிநிதிகளில் ஒருவர்.—189.

போர்ன்ஸ்டெட் [Bornstedt], அடால்பெர்ட் (1808—1851)—ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1848 மார்ச்சில் இச்சங்கத்திலிருந்து நீக்கப்பட்டார், பாரிசிலிருந்த ஜெர்மன் அகதிகளைக் கொண்ட தொண்டர் படையை அமைத்தவர்களில் ஒருவர், அப்படை 1848 ஏப்ரலில் பாடேன் புரட்சிகர எழுச்சியில் பங்கெடுத்தது.—187.

பௌவர் [Bauer], ஹென்ரிஹ்—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர், நியாயவாதிகள் கழகத்தின் தலைவர்களில் ஒருவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர், 1851இல் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார்.—168, 186, 192, 195.

பௌவர் [Bauer], புருனோ (1809—1882)—ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி, பிரபலமான இளம் ஹெகலியவாதி, தீவிரவாதி.—215, 218, 249.

ப்ஃபென்டர் [Pfänder], கார்ல் (1818—1876)—ஜெர்மன்

மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கியமான பிரமுகர், ஓவியர், *1845*இல் லண்டனில் குடியேறினார், லண்டனிலிருந்த ஜெர்மன் தொழிலாளர் கல்விச் சங்கம் மற்றும் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர், முதலாவது அகிலத்தின் பொதுக் குழுவின் உறுப்பினர் *(1864—1867* மற்றும் *1870—1872)*, மார்க்ஸ், எங்கெல்சின் நண்பராகவும் சகாவாகவும் இருந்தார்.—*181*.

**மராத்** [Marat], ழான் போல் *(1743—1793)*—பிரெஞ்சுக் கட்டுரையாளர், *18*ஆம் நூற்றாண்டின் கடைசியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியில் தலைசிறந்த பங்காளர், ஜாக்கொபின்வாதிகளின் தலைவர்களில் ஒருவர்.—*160*.

**மாஜினி** [Mazzini], ஜூஸெப்பெ *(1805—1872)*—இத்தாலியப் புரட்சிக்காரர், முதலாளித்துவ ஜனநாயகவாதி, இத்தாலியில் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர், *1849*இல் ரோமானியக் குடியரசின் தற்காலிக அரசாங்கத்தின் தலைவர், *1850*இல் லண்டனில் ஐரோப்பிய ஜனநாயகத்தின் மத்தியக் கமிட்டியின் அமைப்பாளர், முதலாவது அகிலம் நிறுவப்பட்டபொழுது அதைத் தன்னுடைய செல்வாக்கின் கீழ் கொண்டுவருவதற்கு முயற்சி செய்தார், இத்தாலியில் சுயேச்சையான தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியைத் தடுத்தார்.—*168, 173, 194*.

**மாப்லீ** [Mably], காப்ரியேல் *(1709—1785)*—பிரெஞ்சு சமூகவியலாளர், கற்பனாவாத சமனவாதக் கம்யூனிசத்தின் ஆதரவாளர்.—*54*.

**மார்கன்** [Morgan], லூயிஸ் ஹென்ரி *(1818—1881)*—அமெரிக்க விஞ்ஞானி, பூர்விக சமூகத்தின் வரலாற்றாசிரியர், தன்னியல்பான பொருள்முதல்வாதி.—*130*.

**மார்க்ஸ்** [Marx], கார்ல் *(1818—1883)*—*7, 8, 10, 16, 35, 89, 90, 92, 145—148, 149, 154, 159, 162, 164, 167, 171, 176, 177, 180, 181, 182, 184, 186, 192, 194, 198, 199, 200, 202, 217, 248, 250, 277*.

**மார்க்ஸ்** [Marx], ஜென்னி (திருமணத்திற்கு முன்பு வான் வெஸ்ட்ஃபாலன்) *(1814—1881)*—கார்ல் மார்க்சின் மனைவி,

*அவருடைய விசுவாசமான நண்பராகவும் சகாவாகவும் இருந்தார்.—180.*

மானர்ஸ் [Manners], ஜான் *(1818—1906)—ஆங்கில அரசுப் பிரமுகர், டோரி, பின்னர் நாடாளுமன்றத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியின் உறுப்பினர், கன்சர்வேட்டிவ் கட்சியின் அரசாங்கங்களில் பன்முறை அமைச்சர் பதவிகளை வகித்தவர்.—45.*

மான்டல் [Mantell], கிடியன் ஆல்ஜெர்னன் *(1790—1852)—ஆங்கில பூகர்ப்பவியலாளர், தொல்லுயிர் ஆய்வாளர், தன்னுடைய நூல்களில் விஞ்ஞான விவரங்களை ''விவிலியக்'' கதைகளுடன் சமரசப்படுத்த முயன்றார்.—17.*

மின்யே [Mignet], பிரான்சுவா ஒகுஸ்ட் *(1796—1884)—பிரெஞ்சு வரலாற்றாசிரியர், முதலாளித்துவ சமூக உருவாக்கத்தின் வரலாற்றில் வர்க்கப் போராட்டத்தின் பாத்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் நெருங்கி வந்தவர்.—264.*

முன்சேர் [Münzer], தாமஸ் *(சுமார் 1490—1525)—ஜெர்மன் புரட்சிக்காரர், மதச்சீர்திருத்தப் போக்கின் காலத்திலும் 1525ஆம் ஆண்டு விவசாயப் போரிலும் பிளெபிய விவசாயிகளது முகாமின் தலைவரும் சித்தாந்தவாதியும், கற்பனாவாத சமனவாதக் கம்யூனிசக் கருத்துக்களைப் பிரசாரம் செய்தார்.—54.*

மூடி [Moody], டுவைட் லீமன் *(1837—1899)—அமெரிக்கப் புரோட்டஸ்டென்டு சமயச் சபையைச் சேர்ந்த பிரமுகர், சமய உபதேசியார்.—40.*

மெட்டர்னிக் [Metternich], கிளேமென்ஸ், *இளவரசர் (1773—1859)—ஆஸ்திரியாவின் பிற்போக்குவாத அரசுப் பிரமுகர், வெளிநாட்டு அமைச்சர் (1809—1821) மற்றும் சான்சலர் (1821—1848), புனிதக் கூட்டணியை அமைத்தவர்களில் ஒருவர்.—111.*

மெயின் [Maine], ஹென்ரி ஸம்னெர் *(1822—1888)—ஆங்கில வழக்குரைஞர், எழுத்தாளர், ''பழங்காலத்திய சட்டம்'' என்னும் நூலின் ஆசிரியர்.—131.*

மென்தெல் [Mentel], கிரிஸ்தியன் பிரெடெரிக் *(பிறப்பு: 1812)—ஜெர்மன் தையற்காரர், நியாயவாதிகள் கழகத்தின் உறுப்பினர், 1846—1847இல் கழகத்துக்கு எதிரான வழக்கின் போது சிறை வைக்கப்பட்டவர்.—172.*

மொரெல்லி [Morelly] *(18ஆம் நூற்றாண்டு)—பிரான்சில் கற்பனாவாத சமனவாதக் கம்யூனிசத்தின் பிரதிநிதி.—54.*

மொலிஷோட் [Moleschott], யாக்கப் *(1822—1893)—தத்துவ ஞானி, உடலியல் விஞ்ஞானி, கொச்சையான பொருள் முதல்வாதத்தின் பிரதிநிதி; ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.—226.*

மோள் [Moll], இயோசிஃப் *(1813—1849)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பிரமுகர், நியாயவாதிகள் கழகத்தின் தலைவர்களில் ஒருவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர், 1849இல் பாடேன்-ப்ஃபால்ட்ஸ் புரட்சிகர எழுச்சியில் பங்கெடுத்தவர், சண்டையின் போது மரணமடைந்தார்.—169, 182, 186, 191.*

மௌரர் [Maurer], இயோர்கு லூத்விக் *(1790—1872)—ஜெர்மன் வரலாற்றாசிரியர், புராதன மற்றும் மத்திய கால ஜெர்மனியின் சமூக அமைப்பைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்.—132.*

யாக்கோபி [Jacobi], ஆப்ரஹாம் *(1830—1919)—ஜெர்மன் மருத்துவர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் விசாரிக்கப்பட்டார், 1853இல் இங்கிலாந்துக்குச் சென்று பின்னர் அமெரிக்காவில் குடியேறினார், அங்கே பத்திரிகைகளில் மார்க்சியப் பிரசாரம் செய்தார், அமெரிக்க உள்நாட்டுப் போரில் வடக்கு மாகாணங்களின் சார்பில் பங்கெடுத்தார்.—196.*

ரூகே [Ruge], அர்னோல்டு *(1802—1880)—ஜெர்மன் கட்டுரையாளர், இளம் ஹெகலியவாதி, முதலாளி வர்க்கத் தீவிரவாதி, 1848இல் பிராங்க்பர்ட் தேசிய அசெம்பிளியில் இடதுசாரி அணியைச் சேர்ந்த பிரதிநிதி, 1850க்களில் இங்கிலாந்தில் ஜெர்மனியிலிருந்து நாடு துறந்து வந்த குட்டி முதலாளி வர்க்க அகதிகளின் தலைவர்களில் ஒருவர்.—194.*

ரூஸோ [Rousseau], ழான் ழாக் *(1712—1778)—பிரெஞ்சு அறிவியக்கவாதி, ஜனநாயகவாதி, குட்டி முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தி, ஆதிமூல இறைமைவாதத் தத்துவஞானி.—53, 56, 75, 234.*

ரெனான் [Renan], எர்னெஸ்ட் *(1823—1892)—பிரெஞ்சு*

*மொழியியல் அறிஞர், கிறிஸ்துவ சமய வரலாற்றாசிரியர், கருத்துமுதல்வாதத் தத்துவஞானி.—190, 249.*

**ரேய்ஃப்** [Reiff], **வில்ஹெல்ம் ஜோசப்** *(பிறப்பு: 1824)—கொலோன் தொழிலாளர் கழகம் மற்றும் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1850இல் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.—196.*

**ரொபெஸ்பியேர்** [Robespierre], **மக்சிமிலியன்** *(1758—1794)—18ஆம் நூற்றாண்டின் கடைசியில் ஏற்பட்ட பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் சிறப்புமிக்க தலைவர், ஜாக்கொபின்வாதிகளின் தலைவர், புரட்சிகர அரசாங்கத்தின் தலைவர் (1793—1794).—239.*

**ரோஸெர்** [Röser], **பீட்டர் கெர்ஹார்டு** *(1814—1865)—ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பங்கெடுத்தவர், கொலோன் தொழிலாளர் கழகத்தின் துணைத்தலைவர் (1848—1849), கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.—196.*

**லஃபாயெட்** [Lafayette], **மரீ ஜோசப் போல்** *(1757—1834)—பிரெஞ்சு ஜெனரல், 18ஆம் நூற்றாண்டின் கடைசியில் ஏற்பட்ட பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் போது பெரிய முதலாளி வர்க்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—160.*

**லஃபார்க்** [Lafarque], **போல்** *(1842—1911)—சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், அகிலத்தின் பொதுக் குழுவின் உறுப்பினர், பிரான்சில் தொழிலாளர் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர், மார்க்ஸ், எங்கெல்சின் சீடராகவும் சகாவாகவும் இருந்தார்.—9.*

**லமார்ட்டீன்** [Lamartine],**அல்போன்ஸ்** *(1790—1869)—பிரெஞ்சுக் கவிஞர், வரலாற்றாசிரியர் மற்றும் அரசியல்வாதி; 1848இல் வெளிநாட்டு அமைச்சர், உண்மையில் தற்காலிக அரசாங்கத்தின் தலைவராக இருந்தார்.—187.*

**லாப்லாஸ்** [Laplace], **பியேர் சிமோன்** *(1749—1827)—*

*பிரெஞ்சு வானியல் விஞ்ஞானி, கணித அறிஞர், பௌதிக விஞ்ஞானி, காண்ட்டிடமிருந்து சுயேச்சையான முறையில் ஒளிமுகிற் படலத்திலிருந்து சூரிய மண்டலம் தோன்றியது என்ற கருதுகோளை முன்வைத்து அதைக் கணித முறைப்படி நிரூபித்தவர்.—19, 81.*

லாமார்க் [Lamarck], ழான் படீஸ்ட் *(1744—1829)—பிரெஞ்சு இயற்கை விஞ்ஞானி, உயிரியலில் ஒருங்கிணைந்த பரிணாமத் தத்துவத்தை முதலில் வெளியிட்டவர், டார்வினுக்கு முன்னோடி.—229.*

லின்னேயஸ் [Linné], கார்ல் *(1707—1778)—ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த இயற்கை விஞ்ஞானி; தாவரங்கள், பிராணிகளை வகைப்படுத்துகின்ற முறையின் ஸ்தாபகர்.—84.*

லூயீ ஃபிலிப் *(1773—1850)*—ஆர்லியான் *கோமகன், பிரெஞ்சு அரசர் (1830—1848).—30, 40, 168.*

லூயீ பதினான்காவது *(1638—1715)—பிரெஞ்சு அரசர் (1643—1715).—276.*

லூயீ போனப்பார்ட்—*நெப்போலியன் மூன்றாவது பார்க்க.*

லூதர் [Luther], மார்ட்டின் *(1483—1546)—மதச்சீர்திருத்தப் போக்கின் முக்கியமான தலைவர், ஜெர்மனியில் புரோட்டஸ்டென்டிசத்தை (லூதரனிசத்தை) நிறுவியவர், ஜெர்மன் நகரத்தாரின் சித்தாந்தி.—27, 28, 275.*

லெஸ்னர் [Lessner], பிரெடெரிக் *(1825—1910)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கியமான பிரமுகர், கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், 1848—1849இன் புரட்சியில் பங்கெடுத்தவர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர், 1856இல் நாட்டைத் துறந்து லண்டனில் குடியேறினார், லண்டனிலிருந்த ஜெர்மன் தொழிலாளர்கள் கம்யூனிஸ்டுச் சங்கம் மற்றும் முதலாவது அகிலத்தின் பொதுக் குழுவின் உறுப்பினர், பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிலாளர் கட்சியை நிறுவுவதற்கு உதவி செய்தார், மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் நண்பராகவும் சகாவாகவும் இருந்தார்.—181, 196.*

லெத்ரூ-ரோலென் [Ledru-Rollin], அலெக்சாந்தர் ஓகுஸ்ட் *(1807—1874)—பிரெஞ்சுக் கட்டுரையாளர், குட்டி*

முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளின் தலைவர்களில் ஒருவர்.—194.

லோக் [Locke], ஜான் (1632—1704)—இங்கிலாந்தைச் சேர்ந்த தத்துவஞானி, புலனுணர்ச்சிவாதி.—16, 77.

லோஹ்னர் [Lochner], கியோர்கு (பிறப்பு: சுமார் 1824)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியமான பிரமுகர், கம்யூனிஸ்டுகள் சங்கம் மற்றும் முதலாவது அகிலத்தின் பொதுக் குழுவின் உறுப்பினர், மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் நண்பராகவும் சகாவாகவும் இருந்தார்.—181.

வாட் [Watt], ஜேம்ஸ் (1736—1819)—இங்கிலாந்தைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர், நீராவி எஞ்சினைக் கண்டு பிடித்தவர்.—37.

விக்டோரியா (1819—1901)—பிரிட்டிஷ் அரசி (1837—1901).—70.

வில்லிஹ் [Willich], ஒளகுஸ்ட் (1810—1878)—பிரஷ்ய இராணுவ அதிகாரி கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், பாடேன்-ப்ஃபால்ட்ஸ் புரட்சிகர எழுச்சியில் பங்கெடுத்தவர், 1850இல் கம்யூனிஸ்டுகள் சங்கத்திலிருந்து பிரிந்து சென்ற குறுங்குழுவாத-துர்ச்சாகசப் பிரிவின் தலைவர்களில் ஒருவர், 1850இல் நாட்டைத் துறந்து அமெரிக்காவுக்குச் சென்றவர், அமெரிக்க உள்நாட்டுப் போரில் வடக்கு மாகாணங்களின் சார்பில் போர் செய்தார்.—165, 191, 194, 197.

வெர்மத் [Wermuth]—ஹன்னோவரில் போலீஸ் துறையின் தலைவர், 1852இல் கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கில் அரசுத் தரப்புச் சாட்சி, ஷ்டீபெருடன் சேர்ந்து ''பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்யூனிஸ்டு சதிகள்'' என்னும் நூலை எழுதினார்.—166, 183.

வெனிடேய் [Venedey], யாக்கப் (1805—1871)—ஜெர்மன் தீவிரவாதக் கட்டுரையாளர், 1848—1849இல் பிராங்பர்ட் தேசிய அசெம்பிளியின் இடதுசாரிப் பிரதிநிதி, பிற்காலத்தில் மிதவாதி.—167.

வைட்லிங் [Weitling], வில்ஹெல்ம் (1808—1871)—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் உதய காலத்தில் அதன் பிரமுகர், கற்பனாவாத சமனவாதக் கம்யூனிசத்தின் தத்துவவாதி.—73, 171, 172, 174, 176, 179, 192, 195.

**வொல்தேர்** [Voltaire], **பிரான்சுவா மரீ** *(உண்மைப் பெயர் அருவே) (1694—1778)—பிரான்சின் மாபெரும் அறிவியக்கவாதி, ஆதிமூல இறைமைவாதத் தத்துவஞானி, விகடக்கவிஞர், வரலாற்றாசிரியர்.—234, 276.*

**வோல்ஃப்** [Wolff], **வில்ஹெல்ம்** *(1809—1864)—ஜெர்மன் புரட்சிக்காரர், 1848 மார்ச் முதல் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர், Neue Rheinische Zeitung என்னும் இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினர் (1848—1849), பிராங்பர்ட் தேசிய அசெம்பிளியின் உறுப்பினர், பிற்காலத்தில் நாட்டைத் துறந்து இங்கிலாந்தில் குடியேறினார்; மார்க்ஸ், எங்கெல்சின் நண்பராகவும் சகாவாகவும் இருந்தார்.—162, 164, 183, 186, 189.*

ISBN 5-01-001458-0